அரும்பொருட்டிரட்டு.

மூன்றும் பாகம்.

இதன் விலை ரூபாய் 1—4—0

ம. கோபாலகிருஷ்ணையர்.

உ

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

உரிமையுரை.

மன்புவியோர் வழுத்திடப்பன் மதிதாங்கி
வண்டமிழ்மா மகளை ஆக்கி
அன்புடனே தனம்உதவி அருமைமிகு
சங்கத்தண் அமுதம் ஊட்டித்
தன்பெருநன் மனநேயத் தாலேமெய்
தனைவளர்க்கும் தன்மை யாலே
இன்பமிகு "பெத்தாச்சி" என்னுமியற்
பேர்உற்றாய்! இனிது வாழி. (க)

மறைபுகழும் இறையவனும் மதுரநறுந்
தமிழ்வளர்த்த மதுரைக் குள்ள
குறைஒழிய வருகழகங் களில்முதலில்
நிறுவியதாய்க் குலவி, நாளும்
நறைகமழ்மெய்ப் புகழ்"நச்சி ஞார்க்கினியர்
ஞாபகச்சின் னம்"கொண் டென்றன்
இறைமையுறு "மாணவர்சேந் தமிழ்ச்சங்கம்"
பாலிக்கும் இசைமிக்கோனே! (உ)

வேண்டிற்றிங் குரைத்தெவரும் மேவப்பல்
பொருள்ஈயும் மேன்மை வாய்ந்த
ஆண்டிப்பட் டிக்கிறையே! ஆண்டுநவிற்
சிறியை!அறி வாற்றல் சான்றோய்!

ஈண்டுக்கல் வியிற்பெரியோர் எய்தரிய
உயர்"எம். ஆர். ஏ. எஸ்." பட்டம்
பூண்டக்க ஆண்டகையே! பெத்நாச்சித்
திருநாமம் பொருந்து கோவே! (௩)

மனதுமொழி மெய்பொருளால் மன்பதைகட்
குதவிபுரி மாட்சி சான்ற
தனதனெனத் தகுபாண்டித் துரைநாட்டி
வளர்த்த "தமிழ்ச் சங்கம்" என்னும்
இனியபயிர் 'செல்வம்'எனும் பருவமழை
எதிர்பார்க்கும் இயல்பை நோக்கிப்
புனிதமிகு கருணையுடன் அதுதழையக்
கனகமழை பொழிகொண் மூவே! (௪)

கொலைஞருக்கும் கோளருக்கும் வாதினுக்கும்
சூதினுக்கும் குடிப்போர்க் குங்கள்
விலைஞருக்கும் வெறுந்தடியர் குறுந்தடிக்கும்
கோழிகடா விளைக்கும் போர்க்கும்
புலைஞருக்கும் வஞ்சகக்கண் வலைஞருக்கும்
பொருள்ஈயும் புல்லர் காண
உலைஞருக்கும் கிளைஞருக்கும் அறிஞருக்கும்
வறிஞருக்கும் உதவும் மேலோய்! (௫)

வாகைமிகு மாகதிரோன் மாண்பறியாக்
கூகையினை மானுவோரே
ஈகைஅருள் கல்விபொருள் இலகிடுநின்
பெருமையினை இனிது காணார்

மூகையரோ நினதுபுகழ் கொடையாதி
நலம்பலவும் மொழிய கில்லார்
ஓகைதரு கேள்வியுறு காதிலரோ
நின்னியல்கேட் டுவந்தி டாதார். (சு)

கற்றவர்க்கும் பத்திரிகை கட்குமுயர்
நூல்நிலையங் கட்கும் நின்நட்
புற்றவர்க்கும் கல்விபயில் வுற்றவர்க்கும்
நற்றளிக்கும் உரவோர் கட்கும்
நற்றகைய முத்தமிழ்தி ருத்தமொழி
கட்கும்நவ நாக ரீகம்
பெற்றசபை கட்கும்நிதி நித்தியம்
அளித்துமகிழ் பெற்றி யோனே! (எ)

உன்னதரும், பொருட்டிரட்ட உபகரிக்கும்
உன்னிடம்யான் உற்று, "வள்ளால்!
என்னதரும் பொருட்டிரட்டை நினக்குரிமை
ஆக்குவல்யான்" என்னும் முன்னம்,
"என்னதரும் பொருட்டிரட்டை நினக்குரிமை
ஆக்குவல்யான்" என்றீந் தாய்; யான்
என்னதரும் பொருட்டிரட்டைக் கையாலும்
எனக்களித்தாய்? ஈகை யோனே! (அ)

கொன்றூற்றும் கொடைப்பாரி குமணன்னனக்
குலவுபுகழ்க் கோவே! நின்செம்
பொன்னூற்றும் பேருதவிக் கென்னூற்ற
வல்லேன்? மெய்ப் புகழின் வாழ்வே!

மன்னாற்றுங் கைம்மாறு வேண்டாவே
கடப்பாடு மாரி யாட்டிக்
கென்னாற்றுங் கொல்லோ இவ் வுலகு?புகல்.
பெத்தாச்சி எழிற்பே ரோனே! (௯)

என்னைநிகர் எழிற்புலவர் எண்ணிறந்தோர்
நினக்குள்ளார் எனினும், ஈன்ற
அன்னைநிகர் அன்புடையாய்! மன்னுதமிழ்க்
கவிஅருமை அறியார் கண்முன்
மின்னைநிகர் முகம்வாடி அகம்வாடி
நில்லாதே வேண்டிற் றீந்த
நின்னைநிகர் நிதிபடைத்தோர் நின்னையலால்
எனக்குளரோ? நிருபர் ஏறே! (௰)

இட்டம்,எழில் மாமணிக்கும்; தீஞ்சுவை,தே
னுக்கும்;ஒளி, தினக ரற்கும்;
தட்பமணம், அந்தணர்க்கும்; தக்கமணம்,
மலர்க்குமுறுந் தன்மை போல
நட்புதயை கொடைபிறவிக் குணமாகக்
கொண்டுள்ள நல்லோய்! நிற்கே
ஒட்பமிக இந்நூலின் உரிமையினை
ஈந்தனன்,ஈ துவந்தேற் பாயே! (௰௧)

எத்திசையும் ஏத்திசைகொள் முத்தமிழ்மன்
னவர்நாட்டின் எல்லைச் சார்பில்
நித்தம்ஒளிர் நாடுடையாய்! பெத்தாச்சி
நாமமுளாய்! நிலவும் தேச
பத்திஇறை பத்திசிவ பத்திஅடி
யார்பத்திப் பண்பு மிக்க
உத்தம!நின் நற்றகையும் சுகநெடுவாழ்
வாதியவும் ஓங்கி வாழி! (௰௨)

AUTHOR'S FOREWORD.

—o(-)o—

THIS book should have been before the public, at least a half year before this day, if some of the eminent men of whom in turn I begged for an introduction had not flatteringly informed me of their diffidence to do so. They contented themselves with the expression of their opinion after reading it through fully. This book should *not* have been before the public, if some of my more eminent friends had not expressed their inability to find time to go through the whole. These were frank enough to say that it was excellent as found from the pages they had read *here and there.* If they found it excellent, merely from reading here and there (*not* that it is excellent here and there) I thought it must be at least readable and well worth reading for common folk.

2. I do not apologise to the public for intruding on them with my book, as it has been before them without their being aware of it. I have always been of opinion that he who produces anything for the public has no business to do so, when he himself is conscious of its shortcomings. I do not possess the courage to say that my production is absolutely flawless; but I do admit that my

friends have so expressed themselves that I am not conscious of my shortcomings.

3. I must make a confession here lest some of the public–I mean readers of Tamil Newspapers and Magazines —should think I am passing on them an antideluvian production afresh. Almost all the pieces that are found printed in this book have appeared in as many Vernacular periodical publications from 1896 up to date. At the time I turned them out, piece after piece, I had no idea that they would get printed in book form. Not one piece was paid for by any of them, nor payment was stipulated for and I flattered myself for having got my productions in print for the public to read.

4. What tickled my vanity most was, that such an eminent English literary monthly as the Christian College Magazine thought it fit to find a place for my rendering in Tamil, Shelley's "Sky-lark". The late lamented G. U. Pope wrote to say that if he had not read Sir Walter Scott, he should have pronounced my piece "Patriotism" the original and Sir Walter Scott's, the translation. And this comes from a Tamil erudite personally not known to me and therefore he had no motive to flatter me. This epistle was the first to make me believe that I had reasons to be moderately proud of my work.

5. I have received various kinds of criticisms. I am happy to say they are all friendly. Each one represents I hope, a class of the public. One says "We have enough poetic pieces; what is wanted is more prose productions of the kind you have written." Another says "Your Tamil rendering of English verse is simply excellent; we want as much of that more as you possibly can produce." And a third says, "Elegiac and personal portions of the book may not interest the ordinary public" but in the same breath adds that "they are sublime both in thought and diction and if the personal element is excluded it is as good as any similar productions in any other language."

6. Yet another mildly rebukes me for imitating, as they style it, "the Pandit", (which by the way is a term of ridicule made more classical by the Hon'ble Sir Sankaran Nair by his use of that word in his evidence before the Royal Commission on Public service) inasmuch as I have indulged in oriental exaggerations especially for finding justifications for such and such persons being so named after heroes or Gods. While on the other hand such pieces have delighted the hearts of the Pandits who think kindly of me on account of this—that I am not so far removed from them.

7. Yet others compliment me for my making the diction as to be understood even by our woman-folk with-

out the help of a dictionary or annotation, avoiding at the same time, vulgarity and solecism. I owe my debt of gratitude to the ladies of my family among whom I may take the liberty of mentioning my beloved sisters who by their patient audience and encouraging appreciation taught me to stick to my natural style. I should unhesitatingly admit, that most of my works were first produced for their appreciation.

8. I have thus been fortunate in having pleased as many as I could without incurriug the hostility of any. A father values the esteem of his children, and a teacher of his pupils; and no pupil of mine had to go through the pieces as a text book in the class. I mention proudly that a thousand of them at least have passed through my hands and at least ninety per cent of them could repeat verbatim all the pieces here. According to my estimate, this is the highest compliment paid to me barring perhaps that paid by the ladies of my family. It is their incessant dinning to see them printed in book form that compelled me to get the stray publications gathered.

9. I must express my indebtedness in a curious way to my brother A. M. Doraisami Iyer B. A. He first laughed at me as a "Pandit", then assumed the role of the most uncompromising critic, cynical and destructive, losing no

opportunity to provoke a controversy, occasionally ending in a quarrel, in his attempt to induce me to eschew my labour in the field of Tamil literature. But when he found that he could not kill my love for Tamil literature he came to play the role of constructive critic helping me with his suggestions. Finally I am proud to say that he has been after all pleased to concede that the collections are good enough to go before the public. If Rao Sahib T. Ramakrishna Pillai Avergal was my friend from the beginning, my—brother—my—enemy became my admirer. Having had the encouragement of the one and won the goodwill of the other, I have no right to delay the book from going before the public any longer.

10. In all undertakings, more particularly literary, money is the main thing. The Pandit or the Scholar is proverbially poor. I was hard hit when I felt I had not enough of the sinews of war to get my work in print—to flatter my vanity as some would say; or to see that a larger circle of the public enjoy and profit by my work, as my pupils and friends sincerely protest. The initial help came from my beloved brother-in-law M. R. Ry M. S. Ramachandra Aiyar Avl., while Sriman Pethachi Chettiar Avergal of Kanadukathan, who will not be offended when he is called a "Pandit Merchant Prince" with his wonted

generosity and profound love for Tamil literature banished all financial difficulties. My poor but heart-felt acknowledgment of this help could be made only by dedicating the book to that illustrious friend.

11. In my anxiety to reach as wide a public as possible, I have priced the book to cover bare printing expenses. To please readers with different predelictions and those who may not buy the entire collection, I have divided the book in parts and issued them separately.

12. Lastly I tender my heart-felt thanks to the Editors who have reviewed my publications and to the illustrious and sympathetic friends who have spared their valuable time to go through my book and send an expression of their opinion.

MADURA
17-10-15

M. Gopalakrishnan.

INTRODUCTION.

IT gives me much pleasure to write a few lines by way of introducing Pandit M. Gopalakrishna Iyer's "அரும்பொருள்திரட்டு". It has been observed by many eminent writers that Indian literature especially 'Tamil' does not require any additions in poetry as the poetical masterpieces existing in the language are sufficiently extensive. The observation is true so far as it goes. We do not require poetry of the type, we have already in our literature containing sentiments which have been given expression to by classical authors in matchless poetry. The ideals of the western poets and the sentiments which stirred them to pour forth in poetical compositions, can and should be translated in Tamil either in prose or verse, so that western models and ideals may be made known to the Tamilian. An impact of two ideas or two different modes of viewing the same subject, is often necessary to save the literature from becoming artificial and to lay the founda-

tions of a newer type of literature combining all that is best in east and west.

I believe a perusal of the book under reference will convince any one that Pandit M. Goplakrishna Iyer, has been actuated by a desire to assimilate successfully the western modes of thought in Tamil compositions prose and verse. Competent critics and scholars have, testified to the success that has attended the Pandit's efforts in that direction.

The work as the name itself suggests, is a collection of the author's poetical and prose compositions embracing a wide variety of matter. The book contains much that is interesting, instructive and useful.

I hope the author will strive in the same direction and give to the public, the benefit of rendering into homely and eloquent tamil, more models of western compositions.

15–6–'15 }
MADURA. } T. C. SRINIVASAN B.A. B.L.,

கணபதிதுணை.

முகவுரை.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்து அக்கிராசனாதிபதியும், மதுரைக் காலேஜ் தமிழ்ப்பண்டிதரும் ஆகிய ப்ரஹ்மஸ்ரீ-ம. கோபாலகிருஷ்ணையரவர்கள், தம்மால் அவ்வவ்வமயங்களிற் பாடப்பட்டனவும், மொழிபெயர்க்கப்பட்டனவும், உபந்யாஸஞ் செய்யப்பட்டனவு மாகிய பல செய்யுட்களையும், வியாசங்களையுந் தொகுத்து "அரும்பொருட்டிரட்டு" என்னும் பெயரால் நிலவுற அச்சிட்டு வெளிப்படுத்திய இத்தொகைநூலை முழுதும் படித்துப் பார்த்தேன். இது கடவுள் வாழ்த்தையும், அரசவாழ்த்தையும் தொடக்கத்தில்வைத்துத் திரட்டப் பட்டிருப்பது யாவர்க்கும் மகிழ்ச்சி தருவதொன்றாம்.

இந்நூலின்கணுள்ள விஷயங்களைப்படிக்குங்கால், இக்காலத்து ஆங்கிலப் புலமை மிக்கார், அப்பாஷை யிலெழுதப் படும் நூல்களைப்போல் தமிழில் இல்லையென்று கூறுங் குறையை இது பரிகரித்துவிடுமென்னுந் துணிவு தோன்றுகின்றது. இதன்கணுள்ள கையறுநிலைச் செய்யுட்களெல்லாம், இந்நூலாசிரியர் பாடப்பட்டோர்பால் வைத்திருக்கும் அன்பு பொங்கி யொழுகுதல்போலப் படிப்போர் உள்ளத்தை யுருக்குகின்றன. இம்முறை, பழையகாலத்துப் புலவர்களானு மேற்கொள்ளப்பட்டமை பழநூல்களாற் றெரியலாம். இவ்வாசிரியராற் கையறுநிலைச் செய்யுட் பாடப்பட்டோர், இவர்கள் சுற்றத்தாரும், தேசாபிமான பாஷாபிமானமிக்கபிறருமாவர். அவ்வச் செய்யுட்களால் அவரவர்பெருமையும், தாம் பாடுதற்கேற்ற வுரிமையுந் தோன்றுகின்றன. இதிற் காணப்படும் வாழ்த்துப்பாக்கள் பொதுநலங்கருதி மேற்கொண்டுவரும் சில நண்பர்களைப் பற்றியும், சபைகளைப்

பற்றியும், சில மணமக்களைப் பற்றியுமுள்ளன. இந்நூலாசிரியர், அந்தணரும் புலவருமாகவிருத்தலின், வாழ்த்தப்பட்டோர்களின் நன்மை வளர்ச்சிக்கு இவ்வாழ்த்து சிறந்த ஏதுவாகும்.

இவ்வாசிரியர் சமயோசிதமாகப் பாடிய சில தனிப் பாடல்கள் படிப்பார்க்கு மனக்களிப்பையுண்டாக்கி விநோதமாக அமைந்திருக்கின்றன. நிற்க,

ஆங்கில மொழிபெயர்ப்புக்களாகிய ஸந்யாஸிகீதம், பாரதஜாதியகீதம், முதலியவைகளைத் தனித்தமிழரொருவர் படித்தால் அவை மொழிபெயர்ப்பு நூல்களென்று தோன்ற. தனித்தமிழ்நூல்கள் போலவே யமைந்திருக்கின்றன. ஒரு பாஷையிலிருந்து மற்றொரு பாஷையில் மொழிபெயர்ப்போர் முதனூலிலுள்ள விஷயங்களை நன்றாக மனத்துட்கொண்டு மொழிபெயர்க்கப்படும் பாஷை நடைக்கு ஏற்றவாறு சொற்களைத் தொடுத்துச் செய்தல்வேண்டும். இங்ஙனமின்றி முதனூற் சொற்கிடக்கையே பிரதானமாக் கொண்டு அதற்கேற்றவாறு மொழி பெயர்ப்புச் செய்யின், அம்மொழிபெயர்ப்பு, முதனூற் கருத்துக்களைச் செவ்வனே விளக்காது, பெயர்க்கப்படும் பாஷையின் இயற்கை வளமொழிந்து, சொல்லானும், பொருளானும் அழகு குன்றுமென்பது மொழிபெயர்ப்பிற் சிறந்த பழக்கமுடையார் யாவரும் அங்கீகரிப்பர். இவ்வாசிரியராகிய ஸ்ரீமத்-ஐயரவர்கள் இவ்வுண்மையை நன்குணர்ந்தவரென்பதை இவர்கள் மொழிபெயர்ப்புக்களே சான்றுகூறி வலியுறுத்துவனவாம். ஆங்கிலத்திற் சிறந்த சில பண்டிதர்களிடம் இவர்கள்தம் மொழிபெயர்ப்பைப் படித்துக்காட்டுங்கால் அன்னார்கூறிய நல்லபிப்பிராயங்களை நேரிற் கேட்டிருக்கின்றேனாதலின், முதனூற் கருத்துக்களின் எதிரொலிபோலவே தமிழிற் பொருளமைந்துகிடத்தலை யுணர்ந்துளேன் யான் இவர்கள் மொழிபெயர்ப்புச் செய்யுட்களைப் படிக்குங்கால் தனித் தமிழ்ப் பாட்டுப்போல் இருத்தலையுணர்ந்து, முதனூற் பொருளைச் சிதைத்துத் தமக்கேற்றவாறு கூறியிருக்கின் றனரோ வென்றையுற்று ஆங்கிலமுந்தமிழும் வல்ல என்

நண்பர்களைக் கேட்டபொழுது அன்னார், "மிகச்செவ்வையாக நிறுத்தசொல்லும் குறித்த மொழியும் கொண்டு, மொழி பெயர்க்கப்பட்டுள்ளன"வென்று கூறியவாற்றால் அவ்வையம் ஒருவி மகிழ்ந்தேன்.

வானம்பாடி, பச்சோந்தி, வான்கோழியும் எறும்பும், ரோஜா முதலியவைகளைப்பற்றிய செய்யுட்கள் அவ்வச்சாதிகளின் இயற்கைகளையும், அவற்றாற் றெரிந்துகொள்ள வேண்டிய நீதிகளையும், உண்மையாகவுஞ் சாதுரியமாகவும் எடுத்துக்கூறுகின்றன. இன்னோரன்ன பொருள்களைக் கொண்டு நம் பண்டையோர்களும், தாங்கள் வேதமுதலிய கலைகள்மூலம் உணர்ந்த அரிய நீதிகளையும் ஆசாரங்களையும் எடுத்துக்காட்டி இன்புறுத்தியுள்ளார்கள். உதாரணமாக, "நங்தெறும்பு தூக்கணம்புட் காக்கையென்றிவைபோற், றங் கருமநல்லகடைப்பிடித்து" என்னும் ஆசாரக்கோவை நூலாசிரியர் கருத்துஞ் சிந்திக்கற்பாலது. தாயுமானசுவாமிகள் "காகமுறவுகலந்துண்ணக்கண்டீர்" என்றார். இவற்றாற் பறவைகளின் இயற்கைகளைப் பண்டைக்காலத்தே யுணர்ந்து நம்முன்னோர்கள் அவற்றாற் றெளிந்த சிலவிஷயங்களை வெளியிட்டிருக்கின்றார்களென்று தெரிகின்றோம். ஔவைப்பிராட்டியாரும் "சாந்தனையுந் தீயனவேசெய்திடினுந் தாமவரை, யாந்தனையுங்காப்பதறிவுடைமை—மாந்தர், குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து, மறைக்குமாங் கண்டீர் மரம்" என்னு மூதுரையால், நிழல்தருமரத்தின், மிக்க பொறுமையுடன் கூடிய உபகாரச்செயலை நம்மனோர் உள்ளத்திற் பதித்தனர். இன்னுமிவ்வாறே யாராயின், நம்பண்டைத்தமிழ் நூல்களில், பல காணலாம். இங்ஙனம் மரஞ்செடி முதலிய ஓஷதி வர்க்கங்களின் றன்மைகளையு மற்றைப் பிராணிவர்க்கங்களின் றன்மைகளையும் நுனித்துணர்ந்து கூறுமாற்றல், பெரிய கவிகளுக்கேயன்றிச் சாமானிய கவிகளுக்கு அமையாதாம். இவ்வாறுரைத்தலாலுண்டாம் பயன்பெரிதாம். நீதிகளை விதிவிலக்கு முகமாக வுணர்தலினும், இத்தகைய அநுபவப் பொருள்களால் விளக்கி நிலைபுறுத்தல், யாவரும் எளிதிற்பற்றிப் பொருளுணர்ந் தொழுகுதற்கு ஏற்ற சாதகமாகும். இது கருதியே

வியாசர் முதலிய மகரிஷிகள், சுருதிஸ்மிருதிகளில் விதிவிலக்கு ரூபமாகக்கூறிய கருமங்களுக் கெல்லாம் எடுத்துக்காட்டாக அக்காலத்துக் கேற்றவாறு தக்க கதைகளை விரித்துக்கூறிப் புராணமாக்கினூர்கள். கதாரூபமாகக் கூறுதலினும், நாம் பிரதிதினமும் பழகிக்கொண்டு வரும் பக்ஷிகள்முதலிய பிராணிகளின் இயற்கைகளாலும், மரமுதலியவோஷதிகளினியற்கைகளாலும் எடுத்துக்காட்டுதல் விசேடமாக மனிதர்களினுள்ளத்திற்பதிந்து இன்புறுத்துமென்பதை யுள்ளவாறுணர்ந்த மேலைத்தேயத்துப் பண்டிதர்கள், அத்தொழிலைச் சாலவு மேற்கொள்வாராயினர். அத்தகைய சோதனையாற் றெளியும் விஷயங்கள் இக்காலத்துத் தமிழர்களுமுணர்ந்து கோடற்குக் கூடாதிருத்தலை உணர்ந்து, அக்குறையை ஒழித்தலையே இவ் அரும்பொருட்டிரட்டு நூல் முக்கியநோக்கமாகக்கொண்டு வெளிவந்திருக்கின்றதென்பது முழுதும் படிப்பார்க்கு இனிதுபுலனாம்.

இனி, இந்நூலிலுள்ள வசன வடிவமான விஷயங்களை நோக்குவோமானால், இக்காலத்துக்கு எற்றவாறு மிகத் தெளிவான சொற்குழுவாலாக்கப்பட்டு எளிதுணர்பொருளனவாய் ஒளிர்கின்றன வென்பதில் ஐயமின்று. இக்காலத்தில் ஆங்கில நோக்கமேகொண்டு தமிழ்ச்சுவையைச் செவ்வனே யறியாதார் எழுதும் வசனநடை, இலக்கணவழுஉப் பல்கித் தமிழறிஞர்க்கு அருவருப்பைத்தந்து விஷயத்தின் ருசியைத் தெரிந்துகோடற்குத் தடையாகின்றது. தனித்தமிழர்களுட் பெருநூலாராய்ச்சி செய்து அந்நூலுரை நடையையொத்து எழுதும் புலவர்களின் வசனநடை, முதிர்ந்த தமிழறிஞர் சிலர்க்கன்றித் தமிழிலார்வமுள்ள இளைஞர்களுக்குப் பயன் செய்யாது. இவ்வாசிரியர் வசனநடை, அவ் விருதிறத்தையுஞ் சாராது, தமிழார்வமுள்ள இளைஞர்கள் படித்துச் சொற்பொருளுணர்ச்சி பெற்றின்புறுதற்கும், தமிழ்ப்புலவர்கள் முதலூற் கருத்துக்களையுணர்ந்து மகிழ்தற்கும் எற்ற வண்ணம் வழூஉச் சொற்புணர்த்தலின்றி எளிதுணர்பொருளனவாய், கருதிய அரும்பொருள்களெல்லாம் இலகுவிலு

ணர்ந்து கொள்ளுமாறு அமைந்துகிடக்கின்றது. இந்நூலில், தமிழ்மொழி யென்னும் வியாசத்தில் "தொல்லாசிரியரதுபோன்ற கடினநடையால் கற்றோரே களிப்பெய்துவாராதலின், மற்றோரு மகிழ்வெய்த அப்புத்தகங்கள் "தண்டமிழ்மொழியிற் பெண்டிருமுணரத்தகும் விதம் எழுதடப்படவேண்டும்" என்று இவ்வாசிரியரெழுதியதற்கு, இவர்கள் செயலே இலக்காமென்பது விளக்கமாம். இத்தகைய வசனநடைகளே இக்காலத்து ஆங்கிலவுணர்ச்சிமிக்க தமிழ்மக்களுக்கு இனிமை செய்வனவாம். இந்நூலில், உள்ள "நற்பவளம்," "கறையான்" "முத்து" "தேனுந்தேனீயும்" முதலிய சில விஷயங்களை இவ்வாசிரியராகிய ஸ்ரீமத் ஐயரவர்கள், எம் நாட்டுக்கோட்டைவைசியர்களாற் றூபிக்கப்பெற்ற சில சபைகளில் உபந்யாஸஞ்செய்யும் பொழுதுங் கேட்டிருக்கிறேன். அக்காலைக்கூடிய அறிவுடையார் பலரும் இப்புதுவிஷயங்களைக் கேட்டு என்னைப்போலவே வியந்து மகிழ்ந்தின்புற்றனர். பலதேனீக்கள், மிக்க முயற்சி மேற்கொண்டு பன்னாட்டேடி அரிதினீட்டித் தொகுத்த தேனிறாலை, யொரேகாலத்தே தாமும்உண்டு பிறரையுமூட்டி மகிழ்வுறுத்துவார்போல, இவ்வாசிரியரும் பல ஆங்கிலப்புலவர்கள், கருவிகளைக்கொண்டும், மனோமுயற்சியையுஞ் சரீரசிரமத்தையு மிக வுபயோகப்படுத்தியும் பன்னாளாராய்ந்து கண்டுபிடித்த இவ்விஷயத்துளிகளை ஒரேகாலத்திற் றிரட்டித் தாமும் அறிந்தின்புற்றுத் தனித் தமிழர்களாகிய நம்மனோர்க்கும் உதவியிருக்கின்றனர். நற்பவளம், கறையான் இவற்றின் அற்புதவரலாறும், தேனீக்களின் செயல்களும், முத்துக்களின் றன்மையும் படிக்குங்கால் அளவிகந்த இன்பத்தையும் மகிழ்ச்சியையும் விளைக்கின்றன. "கார்க்" முதலிய சிலவிஷயங்கள் தற்காலம் இந்திய மக்களால் அற்பமாக மதிக்கப்பட்டுவரும் சிலபொருள்கள் மேனாட்டாராலெவ்வளவு பொருள் வருவாய்க்குரியனவாகக்கண்டுபிடித்து உபயோகப்படுகின்றன வென்பதை யறிவுறுத்துகின்றன.

தேகப்பயிற்சி, மரக்கறியுணவு, அதிகாலையெழுதல் முதலிய விஷயங்கள் வைத்தியசாஸ்திரங்களுக் கேற்றவாறு

பழைய வழக்கங்களைத் தழுவி நவீனர்கள் மனதிற் பதியும் வண்ணம் எழுதப்பட்டுள்ளன. இன்னோரன்ன விஷயங்கள் இக்காலத்துக்கு மிக வேண்டியவை களென்பதில் ஐயமின்று. தமிழ்மொழியின் மாட்சியும், அதனைவளர்க்கும் முறைமையும் இந்நூலில் இரண்டு மூன்றுவியாஸங்களால் விளக்கப்பட்டிருக்கின்றன. அந்நியபாஷைகளைப்பயின்று அவற்றிற் பதிந்திருக்கும் விசேட அபிமானத்தாலும், சுதேசபாஷையை அவ்வளவுகால நீட்டிப்பிற் பயிலாமையாலும் தமிழ் மொழியைக்குறைகூறுஞ் சிலர்க்கு நம் ஐயரவர்களைப்போன்ற இருமொழியையுங் கற்ற பண்டிதர்கள் கூறுஞ்சொற்களே யங்கீகரிக்கப் படுவனவாம். தனித்தமிழர் இவ்வபிப்பிராயத்தை வெளியிடின் அதனையேற்பாரும் அவரைப்போன்ற தமிழரேயன்றிப் பரந்துகிடக்கும் ஆங்கிலம் பயில்வாராகார். தனித்தமிழரும் பிறபாஷைகளுக்கு இஃது எவ்வளவுந் தாழ்ந்ததாகா தென்றுணர்தற்கு அவ்வியாஸங்கள் ஏற்ற சாதனமாகும். ஆகவே யிவ்வாசிரியர்கூறிய அபிப்பிராயங்கள் இக்காலத்தில் நம் தாய்மொழியைக் கனப்படுத்துதற்கு எவ்வாற்றானும் ஏற்றவையென்பது சொல்லாமலே யமையும்.

இதன்கண் கூறப்படும் "மதனலீலையார்" "அக்பரின் காலக்ஷேபம்", முதலிய சரித்திரங்கள் படிப்பவர்களுக்குப் பூர்வகாலத்துப்புலவர்கள் அரசர்கள் இவர்களின் மனப்பான்மையைத்தெற்றெனப் புலப்படுத்துவனவாம். தமிழ்மக்களாலறியப்படாத அந்நிய தேசத்துப்பிராணிகளின் அதியற்புதமான தோற்றஞ்செயல்களும், புலாலுண்ணுஞ்செடி முதலிய ஓஷதிகளின் வளர்ச்சி செயல்களும், இதன்கண் விளக்கப்பட்டிருக்கின்றன. இத்தகையவிஷயங்கள் தமிழ்நாட்டார்க்கு அவசியம் வேண்டியவைகளே. இவ்வுண்மைகளைக் கண்டுபிடிக்க மேனாட்டார் மேற்கொள்ளும் அரிய முயற்சிகளும், அவற்றாலாம் பயன்களும் அளவில்லனவாம். பல்லாயிரக் கணக்கான பொருள்களையும் பலவாண்டுகளையும், அரிதிற்றேடிய அறிவு வன்மையையும், செலவிட்டே இப்பெரும் விஷயங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. இவ்வரிய விஷயங்

களைத் தமிழ்நாட்டாருமுணர்ந்து மகிழும் வண்ணம் மொழி பெயர்ப்போர் ஆங்கிலம்படித்த தமிழருள், நம் ஐயரவர்களைப் போன்றார் மிகச்சிலரே. இத்தகைய மொழிபெயர்ப்பாற் றமிழ்நாட்டுக்கு உபகரித்து அதனால் வரும் புகழுக்கு நம் ஐயரவர்களே பெரும்பாலும் பாத்திரமாவார்கள்.

இனி, இதன் கர்த்தராகிய ஸ்ரீ கோபால கிருஷ்ணையரவர்களைப்பற்றியுஞ் சிலகூறுவேன். இவர்களை யான் பலவாண்டுகளுக்கு முன்னரே யறிந்துளேன். எந்நாட்டிலுள்ள பல சபைகளில் அடிக்கடி பிரஸங்கஞ் செய்திருக்கின்றனர். இவர்கள் உபந்யாசங்களெல்லாம் கேட்போருள்ளத்தைக் குதூகுலப்படுத்தி மகிழ்விக்கும் வன்மையுள்ளனவாம். சபையிற் பேசுங்கால் அலங்காரமாகப்பேசுதலைப் பயனெனக்கருதாமல் உண்மைகளையெடுத்து நடுநிலையோடு பேசுவதில் மிக்க தைரியம் வாய்ந்தவர்கள். யான் பழகியமட்டில் இவர்கள் ஒழுக்கம், பேசுதலைப்போலவே மிகச்செவ்வையாக வுள்ளதென்பதறிவேன். எப்பொழுதும் பொதுநலங்கருதியே உழைக்கும் விருப்பமுள்ளவர்கள். அவ்வாறே செய்தும் வருகின்றனர். இவர்கள் அரிய முயற்சியே மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கமும், இன்னுஞ்சில சபைகளும் நிலைபெற்று நன்குநடைபெறுதற்கு ஏதுவாகும். மதுரையிலும் பக்கத்துள்ள நகரங்களிலுமுள்ள கலாசாலைகளில் ஆங்கிலங் கற்கும் மாணாக்கர்களெல்லாம் இவர்களிடத்து மிக்க அன்புடையராயிருப்பது கண்கூடாக வுணர்ந்துளேன். இவர்களுக்குக் கவித்துவசக்தி நன்றாக வமைந்திருக்கின்றது. சில சபைகளிற் பிரசங்கங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்பொழுதே விரைந்து பல செய்யுட்களைப் பாடுவதைப்பார்த்திருக்கின்றேன். செய்யுட்கள் சமயோசிதமாகப் பொருள்களைக்காட்டி மகிழ்வுறுத்துவனவாகவமையும். ஒருவருடைய உத்தியோகம் பிறபட்டம் முதலியவைகளைப்பற்றி அவை ஆங்கிலமாயினும், வேறு மொழியாயினும் உள்ளவாறே செய்யுட்களிலமைத்துப்பாடுவதில் இவர்கள் அதிக சமர்த்தரென்னலாம். இதற்கு உதாரணமாக "ஆனரபிள் டாக்டர்ஸர்எஸ் சுப்பிரமண் யம்கேஸிஐஈ

யென்னும், மானவன்'' என்னும் இவர்கள்பாடிய ஒருபாட்டின் முதலடியே நினைக்கத்தக்கது. இதுபோற் பலவுள. இந்நூலிலுள்ள வெண்பா, விருத்தம், அகவற்பா இவைகளால் இவர்கள் மிகவிரைவிற் செம்பாகமாகப் பொருள்விளங்கப் பாடும் வன்மையுடையாரென்பது விளங்கும். இவ்விதமே வசனமெழுதுவதிலுந் தக்க திறனுடையாரென்பது இந்நூல் வசனங்களாலறியலாம். இங்ஙனம் இக்காலத்துக்கு ஏற்றவாறு பிரஸங்கஞ்செய்தல், கவிபாடுதல், வசனமெழுதல் முதலிய வெல்லாக் கல்வித்துறையினுஞ் சிறந்துவிளங்கும் ஸ்ரீமத் ஐயாவர்களின்பெருமை தமிழ்மக்களாற் பாராட்டற்பாலதே.

இவர்கள் இயற்றித்தொகுத்த அரும்பொருட்டிரட்டு என்னுமிந்நூல் தமிழ்மக்கள் ஒவ்வொருவர் கையினும் இருத்தல் மிகநலமாகும். மாணக்கர்களுக்கு விசேட நலம் பயப்பதாகுமாதலின் அவர்களெல்லோரும் இதனைப் பெற்றுப் படித்து இன்புறுவார்களென்று நம்புகின்றேன். முடிவாகக் கூறுமிடத்து இத்திரட்டுநூல் சில அறப்பகுதிகளையும், பொருட்பகுதிகளையும் பிராசினக் கொள்கைக்கு மாறுபடாமல் நவீனர்களின் மனப்போக்குக் கேற்றவாறு விளக்கிச் செல்லுமியல்பினதாதலின், இக்காலத்துத் தமிழ்மக்களுக்கு இன்புறுத்தும் ஒரு நல்லபுத்தகமென்பதே பொருத்தமாம்.

இதனாசிரியராகிய ஸ்ரீமத் ஐயாவர்கள் இதுபோலவே மேனாட்டுப்புலவர்களின் அரியவாராய்ச்சியிற்கண்ட நன்பொருள்களைத் தமிழ்மக்களும் உணர்ந்து மகிழ இன்னும்பல செய்யுள் வசனங்களை யெழுதித்திரட்டித் தந்து புகழும் புண்ணியமும் பெற்று நீண்டகாலம்வாழ்ந்து இன்புறும்வண்ணம் சிவபெருமான் அருள் பாலிப்பாராகவென அவ்விறைவன் திருவடிகளை வேண்டுகின்றேன்.

மகிபாலன்பட்டி
20—6—1915.

இங்ஙனம்,
மு. கதிரேசச்செட்டி.

SOME SELECT OPINIONS.

M. R. Ry Rao Sahib **T. Ramakrishna Pillai** *Avergal B. A., Chairman, Dravidian Board of Literature:—*

I have gone through the "Poems and Essays" in Tamil entitled "*Arumporultirattu*" by Pandit **M. Gopalakrishnier** thoroughly and have no hesitation in saying that it is *Excellent*. It deserves to be widely read.

M. R. Ry **T. Chelvakesavaroya Mudaliar** *Avergal M. A., Lecturer in Tamil, Pachaiappa's College, a chief Examiner in Tamil to the University & Member of the Dravidian Board of Literature:—*

I glanced through your Tamil Miscellany—அரும்பொருட்டிரட்டு.

Your Essays in Prose (Part III) containing useful information on various subjects are written in simple style without being affected and stilted. You are no traitor as a Translator.

Your translations (Part II) of so many popular English Minor poems echo the original accurately and seem also to run smoothly.

Your Odes and Elegies (Part I) run more smoothly than the translations and are decidedly superior to them with fine touches. They seem to be so elegant that I am tempted to believe that they may in time stimulate the production of indigenous minor poems (ventilating our sentiments

of loyalty, duty, honour, valour and nobtlity) of which there is a general dearth in later day Tamil literature. These Odes and Elegies may be enjoyed, I am sure by our School-boys and girls to whom for reasons well-known, our poetical literature is a bug-bear in general. I much appreciate this miscellany and hope that you will continue your useful work (especially in *prose*) without minding the poor emoluments thereof.

M. R. Ry K V. Subbiar *Avergal M A., L. T., University Reader, Dravidian Philology & Member of the Dravidian Board of Literature:—*

I have very great pleasure in acknowledging the receipt of a copy of your 'அரும்பொருட்டிரட்டு' and in sending you in exchange, a literary appreciation of the same by me.

I am afraid that I gain more than you do by this transaction. The perusal of the contents of the book had given me immense pleasure; and I have been reading some of your translations, especially 'பக்ஷிசாந்தி' 'சுதேசாபிமானம்' 'வானம்பாடிக்கும்மி' again and again, and every time, I must confess, my pleasure has been exhanced, and my respect for the author increased. I cannot but admire your complete command over the popular Vocabulary of the Tamil language and your felicitous facility in translating even difficult verses from English into Tamil.

May the Muse of Poetry continue to shower her graces on you and may your lyre produce to the

benefit of the country, tunes of higher pitch and greater volume!

We have received from Pandit. M. Gopalakrishnier of Madura College, President of a Tamil Sangam and Editor of "*Vidya Bhanu*" (A Tamil Monthly) a Tamil Anthology of Prose and Poetical pieces of which he is the author. Besides being a talented Pandit, and scholar of Tamil trained in the traditional method, the author has a good knowledge of English, and his interesting work shows the influence of Western culture in eastern thought. He has put into Tamil garb many well known pieces of English Poetry, the Tamil renderings being as beautiful and spirited as the originals. His Essays and fragments of Indian History in Tamil are models of their kind. There are few pandits of the type of Mr. Gopalakrishnier, and his literary productious deserve to be widely read both by the Tamil public and children in schools, as they are instructive and inspiring. The volume is entitled *Arumporultiratu.*

Madras Mail 19th January 1915.

அபிப்பிராயங்கள்.

மதுரைக்காலேஜ் தமிழ்ப்பண்டிதரும், உச்சிமேற்புலவர் கொள் நச்சினார்க்கினியருடைய ஞாபகச்சின்னத்தை மதுரையில் ஸ்தாபித்துச் சிலவருஷங்களாக நடத்திவருபவருமாகிய மகா-ா-ா-ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையர் அவர்கள் வெளியிட்டிருக்கும் "அரும்பொருட்டிரட்டு" என்னும் புஸ்தகத்திற் சிற்சில பகுதிகளைப் படித்துப்பார்த்தேன்.

பற்பல சமயங்களில் இவர் இயற்றிய தனிச்செய்யுட்களும், ஆங்கிலபாஷையில் உள்ள பல அபிப்பிராயங்களையும் விஷயங்களையும், ஏற்றபடி தமிழில் மொழிபெயர்த்திருக்கும் செய்யுட்களும், இயற்கைப்பொருள்கள், சரித்திரம், நீதிகள் முதலியவற்றைப்பற்றி வசனரூபமாக எழுதியுள்ள பகுதிகளும் இந்நூலில் அடங்கியுள்ளன.

இவருடைய நன்முயற்சியும், தமிழ்ப்பாஷையினிடம் இவருக்குள்ள அபிமானமும் இதனால் நன்கு வெளியாகின்றன.

வியாஸங்கள் எழுத விரும்புவோர்க்கு இந்நூல் மிக்க துணைசெய்யுமென்று நம்புகிறேன்.

இங்ஙனம்,

வே. சாமிநாதையன்,

பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதர், சென்னை.

எனது நண்பர் மதுரைக் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் பிரும்மஸ்ரீ-ம. கோபாலகிருஷ்ண ஐயரவர்கள் இயற்றின "அரும்பொருட்டிரட்டு" என்னும் நூற்கோவையை வாசித்துப் பார்த்தேன். முற்பாகத்திற் செய்யுள்களும், பின்னர் வியாசங்களும் உள. ஐயரவர்கள் தமிழொடு ஆங்கிலமுங் கற்ற ஆசிரியராதலின், அவர் பாட்டும் வசனமும் இக்காலத்துக்கு இயைந்தவாறு ஆங்கிலத்திலும் தமிழிலும் உள்ள அரிய விஷயங்களை எடுத்துக்கூறுகின்றன. ஆங்கிலகவிகள் செய்

துள்ள அரிய பாடல்களை அவைதம் பொருள் ஒருசிறிதுங் குன்றுதவாறு விஷயத்துக்கேற்ற தமிழ்ப்பாவினத்தில் அமைத்துள்ள திறம் மிக வியக்கத்தக்கதாயிருக்கின்றது. செய்யுள்நடை ஓரிடத்தும் இழுக்காது,தெளிவுஞ்செம்மையுங் கொண்டதாய், "சான்றோர் கவி"யின் நடைபோற் சிறக்கின்றது. வசனரூபமாய் எழுதியுள்ள விஷயங்கள் மிகப்பல. அவை ரோஜா, வானம்பாடி முதலியவைகளைக்குறித்தும், சுத்தமுடைமை, விடாமுயற்சி முதலிய மாநுடர்க்கு இன்றியமையாத ஒழுக்கங்களைப்பற்றியும் இன்னும் இவைபோன்ற பல்வகைப்பட்ட அரிய விஷயங்களைக் கூறுவனவாய்த் தெள்ளியநடையில் எல்லா இலக்கணங்களும்பொருந்த எழுதப்பட்டுள. நடைச்சிறப்பாலும், பொருட்சிறப்பாலும் காலத்துக்கு ஒத்துள்ளதாலும், கலாசாலை மாணவர்களுக்கு இந்நூல் புதையலெடுத்த தனம்போலாகும். பண்டிதர்களுக்கு விருந்தெனச்சுவைக்கும். இந்நூலைப் படிப்போருக்கு அதன் சிறப்பு ஒருவர் சொல்லாமலே விளங்குமாதலின் அச்சிறப்பை ஈண்டெடுத்துக் கூறுவது:—

"முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரே
அழகுக் கழகு செய் வார்?"

என்னுஞ் செய்யுளடியை நினைவூட்டுகின்றது.

அந்நாள்பாற் கடல்கடைந்து புதியஅரும் பொருட்டிரட்டை
யளித்தான் எங்கள்
பொன்னனுங் கோபால கிருட்டிணனும் மாதேவன்
புதுமை யல்ல
இந்நாளுந் தமிழ்க்கடலி னின்றமரும் பொருட்டிரட்டை
யீந்தான் எங்கள்
நன்னவன் கோபால கிருட்டிணனும் பூதேவன்
நயந்து மாதோ.

சென்னை,
31—5—15. } வ. சு. செங்கல்வராயபிள்ளை எம். ஏ.

அன்புசால் நண்பரே!

தாங்கள் அன்புடன் அனுப்பிய "அரும்பொருட்டிரட்டு" முழுமையும் படித்துப் பார்த்தேன். அதில் அடங்கியுள்ள செய்யுட்களில் பல தற்காலத்திற்குந் தக்கனவாகவும் நம்மை ஆட்சிபுரியும் மாட்சியுடைய மேனாட்டாரது காவியநூல்களின் கருத்தமைதியை விளக்குவனவாகவும் உள்ளமை கண்டு வியந்து மகிழ்ந்தேன். ஆங்கில பாஷையிலுள்ள அருங் கருத்துக்கள் லௌகிக வாழ்க்கைக்கு இன்றியமையாதன வென்று கூறும் நம்மவர்களிற்பலர் அவற்றைத் தமிழ்ப்படுத் தற்குப்போதிய சொல்லாற்றல் தமிழ்க்கில்லை என்று துணிந்து கூறுவதை நாம் நன்கறிவோமன்றோ? தாங்கள் இப்போது தங்களுடைய பாக்களால் அவர்கள் கூற்றைப் பொய்ப்படுத்தி "சேலிற் பறக்கின்ற செந்தமிழ்க் குதிரைமுன் திட்டேது தட்டேது காண்" என்ற புலவர் மொழியைப் புதுவழியில் மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறீர்கள். மற்றும் தங்களுடைய செய்யுட்கள் செஞ்சொற்களாகிய வெண்சொற்களும் சில விடங்களில் திசைச்சொற்களும் பெற்று ஸுலபமான முடிவுடையனவாதலோடு குறியீட்டிலக்கணமும் கொண்டிருத்த தலின், அவை படிப்போர்க்குத்தெள்ளிதிற் பொருள் பயக்கு மென்பதுநிச்சயம். மேலும் இந்நூலின்கணுள்ள வியாசங்கள் விஷய முறைமையும் விளக்கமான நடையுங்கொண்டு விரிந்த பொருளுடன்விளங்குகின்றன. அவற்றில் "தமிழின்நிலைமை", "அந்தணரும் செந்தமிழும்", "உபாத்திம-மாணவர்கட்கோர் உபதேசம்" முதலியன தங்கள் பெருந்தமிழபிமானத்தை நன்கு புலப்படுத்தலோடு, வாசிப்போர் பலரைத் தமிழபி மானிகளாக்காமற்போகா. தங்கள் நூல் ஒரு அரும்பொருள் திரட்டு எனப்பாராட்டப்பெறுவதற்குப் பெரிதும் தகுதி யுடைத்தென்பதில் எனக்கு ஐயமேயில்லை.

இங்ஙனம்,

வே. முத்துஸாமி ஐயன், எம்.ஏ., எல்.டி.,

பாடசாலைகளின் உதவிப்பரிசோதகன், அறப்புக்கோட்டை.

அரும்பொருட்டிர' டென்னும் புத்தகமொன்று வரப் பெற்றோம். இதனை இயற்றியவர் மதுரைக் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் ம. கோபாலக்ருஷ்ணையரவர்கள். இப்புத்தகம் மூன்று பாகங்கள் கொண்டது. முதற்பாகத்தில் ஸ்ரீமான் பெத்தாச்சி செட்டியார் மஹா மஹோ உபாத்தியாயர் உ. வே. சாமிநாதையர் முதலியோரைப்பற்றிய வாழ்த்துப் பாக்களும், காலஞ்சென்ற பாண்டித்துரைத்தேவர், வி. கிருஷ் ணசாமி ஐயர் முதலியோரைப்பற்றிய இரங்கற்பாக்களுமே பெரும்பாலும் காணப்படுகின்றன. அப்பாக்கள் சொற்சுவை யும் பொருட்சுவையும் பொலிந்து விளங்குகின்றன.

இரண்டாம்பாகத்தில் சுவாமி விவேகாநந்தரின் சந்நி யாசிகீதம், பாரதஜாதீயகீதம், லார்ட் அல்லின் மகள், தேசாபி மானம், நெப்போலியனும் பிரிடிஷ்மாலுமியும், இவைமுதலிய பலசிரேஷ்டமான ஆங்கிலகவிகள் தமிழ்ப்பாவில் மொழிபெயர் க்கப்பட்டிருப்பதைப் படிக்கும்பொழுது இனிமையும் சுவை யும் கொண்டு ததும்புவதாய்க் காணப்படுகின்றனவென்று திட்டமாய்க் கூறலாம். மேலும் அப்பாக்களைக் கவனித்து நோக்குமிடத்து ஆசிரியரின் கவித்திறமை நன்குபுலப்படும்.

மூன்றாவது பாகத்தில் அரிய பெரிய வியாசங்கள் பல எழுதப்பட்டுள்ளன. அவ்வியாசங்களில், தேசாபிமானம், தேகப்பயிற்சி, அக்பரின் காலக்ஷேபம், அந்தணரும் செந்தமி ழும், தமிழ்மொழி, முதலிய விஷயங்கள், பாடசாலை மாணவர் களுக்குமிக்க பயன் தரக்கூடியவையாகும். அன்றியும்,

மூன்றுட்பாகத்திலுள்ள விஷயதானங்களை நன்கு கவ னிக்குமிடத்து அரும் பொருள் திரட்டு என்னும் பெயர் தகும்

என்று சொல்ல இடமுண்டு. வசனநடை கடினமின்றி இல குவாயும் செந்தமிழாயும் இருப்பது நன்கு கவனிக்கத்தக்கது. பெரும்பாலும் வாழ்த்துப்பாக்களும் இரங்கற்பாக்களும் காணப்படும் முதற்பாகத்தைத் தவிர்த்து, இரண்டாவது மூன்றாவது பாகங்களில் காணப்படும்விஷயங்கள் பாடசாலை மாணவர்களுக்கு வியாசபாடமாக உபயோகமாகக் கூடுமென்பதை வித்யா இலாகா அதிகாரிகள்கவனித்து இப்புத்தகத்தைஅங்கீகரிக்கலாமென நாம் சிபார்சுசெய்கிறோம். இனிப்பெற்றோர்களும் பிள்ளைகளும் இந்நூலை வாங்கிப்படித்து பயன் அடையலாமென்பது நிச்சயம். அவ்வாறுசெய்யின் ஆசிரியர் மேன்மேலும் இன்னும் சிறந்த நல்ல புத்தகங்களை இயற்ற உற்சாகங்கொள்வர்.

—சுதேசமித்திரன், 18—6—15.

"அரும்பொருட்டிரட்டு"

இத்தலைப்பெயர் கொண்ட அரிய புத்தகம் மதுரைக் கலாசாலைத் தமிழ்ப்பண்டிதராகிய பிரம்மஸ்ரீ ம. கோபால கிருஷ்ணையரவர்களால் இயற்றப்பெற்றது. அதனது இயற் பேருக்கேற்ப, சுதேசாபிமானம், புறநாட்டுப் பிரயாணத்தினால் விளையக்கூடிய பயன், தமிழ்ப்பாஷையின் மேன்மை, தமிழ்க்கும் அந்தணருக்குமுள்ளவுரிமை, விடாமுயற்சியினால் விளையக்கூடிய நன்மை, ஒழுக்கமுடைமை, தேகப்பயிற்சியின்மையினாலுண்டாகுந் தீமை, மதனலீலையாரின் மாண்புறுதன்மை, உயிர்செகுத்து உண்ணுவோரடையும் புன்மை, முதலிய அரியவிஷயங்களும்,ரோஜா,முத்து,நற்பவளம், கறையான், எறும்பு "தேனும் தேனீயும்" முதலியவைகளைப்பற்றிய

வியாசங்களும் வெகு தெளிவாய் வாசிப்போர் இன்புறும் வண்ணம் செந்தமிழ் நடையில் வரையப் பெற்றுத் தன்னகத்தின்கண் கொண்டு விளங்குகின்றது.

இன்னும் குடதிசை நாட்டிலிருந்த புலவர்பெருமான்கள் ஆங்கிலபாஷையில் இயற்றியுள்ள கற்பனைக் கதைகளையும் காவியங்களையும், நம் தாய் நாட்டுப் பாஷையாகிய தமிழிலேயே பொருள் சிறிதுஞ் சிதைவுறுவண்ணம் செய்யுள் நடையில் மொழிபெயர்த்திருப்பதும் மிகவும் வியக்கத்தக்கது.

தவிர, தெய்வ வணக்கமும் பாரதஜாதிய கீதமும், சந்நியாசிகீதமும் மாட்சிமைதங்கிய மன்னராகிய ஜியார்ஜ் சக்கரவர்த்தியின் பேரில் வாழ்த்துப்பாக்களும், ஸ்ரீமான் பாண்டித்துரைத்தேவர் 'பரிதிமாற்கலைஞன்' முதலிய செந்தமிழ் அபிமானிகளின் பேரில் இரங்கற் பாக்களும், மணவாழ்த்துக்களும் பொதியப் பெற்று விளங்குகின்றன. ஆசிரியர் ஆங்கிலத்திலும், தமிழ்க்கலையிலும் பாவியற்றுந் திறத்திலும் மிக்க பயிற்சிபெற்றவரென்பது இதனை வாசிப்போர்க்குத் தெற்றென விளங்காமற் போகாது. இத்தகைய நூல் பண்டிதர்களும் பாமரர்களும், வாங்கி வாசிப்பதற்கேற்ற தென்றும், சபைகூடி இந்நூலை யுசாவின் நல்லறிவுண்டாகும் என்றும் உறுதியாய்க் கூறுவோம்.

—இந்துநேசன், சென்னை.

"அரும்பொருட்டிரட்டு"

இப்பெயர்கொண்ட அரிய புஸ்தகமொன்று நமது பார்வைக்குவந்து பல நாளாகிறது. அதைப்பார்வையிட்டு விஸ்தாரமாயெழுதவும் அதன் பெருமையைக் கூறவும் அவகாசமின்றித் தாமதிக்கலானதற்காக விசனிக்கிறோம். சுருங்சச்சொல்லின், அப்புஸ்தகம் தமிழ்மொழிப் பயிற்சிக்கு இன்றியமையாத சாதனமாகிறது. ஆங்கிலத்தில்கண்ட உயர் பாவங்களைத் தமிழில் மொழிபெயர்த்தல் கஷ்டமென்பது பொருந்தாத வசனம். தமிழ் என்றாலே இனிய மொழியென்று அர்த்தம். அதைக்கொடுமைப்படுத்திப் பொருள் விளங்காது ஆங்கிலபாஷையின் இலக்கணங்களையமைத்து இலக்கியம் பொருந்தாது பின்னப்படுத்துகிறவர்கள் தங்கள் அறியாமையை அவர்கள் தாய் பாஷையின் தலையிலேற்றி "பெற்றதாயை விற்றடிமை கொள்ளுகின்ற பேதைகளாய்" விளங்குகிறார்களென்பது இதை நன்றாக ஆராய்ந்து பார்ப்பாருக்குத் தானே விளங்கும். இதை இயற்றியவர் மதுரைக் காலேஜ் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ. ம. கோபாலகிருஷ்ணையர் அவர்கள். அவர்களுக்குத் தமிழுணரும் மாணவரெல்லோரும் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

—விவேகசிந்தாமணி, மார்ச்சுமீ 1915.

ஐயா,

தாங்கள் எனது அபிப்பிராயம்கருதி அனுப்பிய தங்களது "அரும்பொருட்டிரட்டு" என்ற புஸ்தகம் கிடைக்கப் பெற்றேன். சாவகாசமின்மையால் முழுவதும்பார்க்க இயலவில்லை. ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் கவிகள் நன்றாகவே யிருக்கின்றன. இத்தகைய முயற்சி மிகவும் பாராட்டத்தக்கதே. இன்னும் இதர பாஷைகளிலுள்ள உயர்ந்த நூலுட்கருத்துக்களை இவ்வாறே தமிழுலகுக்கு மொழிபெயர்த்து உதவினால் அது பெரும்பயனை விளைக்கும்.

தங்கள்,

18—3—1915,
இராமநாதபுரம். } B. இராஜராஜேசுவர சேதுபதி.

மதுரையம் பதியான் உயர்குலம் போல
மாண்புறு முயர்குண நிதியான்
கதிர்முக மதியான் கயவரை மதியான்
கற்றவர்க் கையனற் றுதியான்
விதிமுறை வழுவான் விற்பனர் குழுவான்
வியன்றமிழ் மழைபொழிந் தெழுவான்
பதிதொறுஞ் சபைதா பித்திட முயலும்
பண்பினன் நண்பினன் எமக்கே. (1)

மாணவர்க் குரிய செந்தமிழ்ச் சங்கம்
வகுத்ததிற் றலைமைதான் வகித்து
நீணிலம் வியக்க நடத்துவோன் பண்டை
நெடுந்தமிழ்ப் புலவர்தம் முடிக்கொள்
பூணென விளங்கும் "நச்சினார்க் கினியர்
புத்தக சாலை"யொன் றமைத்தோன்
கோணுறுக் கோல்போல் நடுநிலை தவறுக்
கொள்கையான் குளிர்நய மொழியான். (2)

கிளர்புகழ் மேவு மெமதுகோ பால
கிருட்டிண வேதிய னின்பம்
வளர்தமிழ்ப் புலவன் ஆங்கில பாஷை
வல்லவர் வழுத்துநுண் கருத்தை
யுளமுறத் தமிழிற் பெயர்த்தபல் பாவும்
ஒங்குதன் மதிநுணுக் கத்தாற்
பளகறப் பகர்ந்த பாவினம் பலவும்
பலபொருட் பெற்றியை யாய்ந்தே (3)

கற்றவ ரிவைபோற் கண்டில மென்று
கருத்ததி சயித்திட வரைந்த
கற்றமிழ் வியாசம் பலவுமொன் றாக்கி
காமமும் அரும்பொருட் டிரட்டா
மற்றதற் கமைத்து நகரவை சியர்க்குள்
வள்ளலிவ் வொருவனே யென்னப்
பெற்றபேத் தாச்சி மால்கொள வுரிமைப்
பேர்கொடுத் தச்சிலிட் டனனே. (4)

தனித்தமிழ்க் கவியோ மொழிபெயர்ப் பினமோ
தக்கநல் வசனமோ எல்லாம்
இனித்திட வாக்க வல்லவ னிவனே
யென்பதை யிவணுறு பழகி
நுனித்துண ரெமைப்போ லெவருமே காண
நுவலுமிவ் வரும்பொருட் டிரட்டை
மனித்தருக் கமுத மென்பதல் லாது
மற்றுரை காண்கில மாதோ. (5)

மு. ரா. கந்தசாமிக்கவிராயர்.

மூன்றும் பாகம்.

விஷய அட்டவணை.

I. சுதேசாபிமானம்.

"இல்லா னுக் கன்பிங் கிடம்பொருள் ஏவல்மற்
றெல்லாம் இருந்தும் அவற் கென் செய்யும்?.— நல்லாய்!
மொழி இலார்க்கு ஏது முதுநூல்?. தெரியும்
விழி இலார்க்கு ஏது விளக்கு?"—நன்னெறி.

"சுதேசாபிமானம்" என்னும் தொடர் மொழிக்குச் "சொந்த நாட்டின்மேல் அன்புகொண் டிருத்தல்" என்பது பொருளாகும். ஒருவருக்குச் சொந்த நாடு, அவரது பிறப்பிடமாகத்தான் இருக்கவேண்டும் என்பதில்லை. அவரது உற்பத்திக்குக் காரணராகிய அவரது தாதை மூதாதையர்கள் பிறந்து வளர்ந்த தேசமும் ஆகும். இதனைப் பின்வரும் விஷயத்தால் அறியலாகும்: இந்தியாவிற் பிறந்த இங்கிலீஷ்காரரும், இங்கிலாந்தில் பிறந்த இந்தியரும், முறையே இந்தியாவையும், இங்கிலாந்தையும், தமது சுதேசமாகக் கருதிப் பாராட்டுவதில்லை. நிற்க.

சொந்த நாட்டின்மேல் அபிமானங் கொண்டிருத்தலாவது, அத்தேசத்திலுள்ள இயற்கைப் பொருள்களிடத்தும், தேசத்தாரிடத்தும், அது சம்பந்தமான பிறவற்றினிடத்தும் அபிமானங் கொள்ளலாகும். சுதேசாபிமானிக்குத் தன் ஊர்

*

எவ்வளவு கேவலமானதாயினும், குறைகள் கொண்டிருப்பினும், அதுவே பூலோக கைலாசமாகத் தோன்றும். வேற்று மனிதர்களுக்கு வெறுப்பையே விளைவிக்கக் கூடிய விஷயங்கள் அவனுக்கு மிக்க விருப்பையே விளைக்கும். இதற்குப் பின்வரும் விஷயமே சான்றாகும்:—உலாந்து என்ற தேசம் கடல் மட்டத்திற்கு எவ்வளவோ தாழ்ந்து அதி அபாயகரமான நிலையில் நாளும் இருப்பினும், "காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பது போல, அந்நாட்டினும் சிறந்த நாடு ஒன்று உண்டென்று கருதவாவது, தன் நாட்டாரினும் சிறந்த ஜனங்கள் எங்கேனும் இருக்கிறார்கள் என்று எண்ணவாவது, ஓர் டச்சுக்காரனால் முடியாது. பிரதி தினமும், பூகம்பத்திற் குள்ளாகிக் கிடக்கும் ஜப்பானியனுடைய அபிமானத்தையும் பாருங்கள்! அதிகமாகச் சொல்வானேன்?

*"ஆடை யின்றி வாடையில் மெலிந்து
கையது கொண்டு மெய்யது பொத்திக்
காலது கொண்டு மேலே தழீஇப்
பேழையுள் இருக்கும் பாம்பென உயிர்"த்துக்
† குளிரால் நடுங்கிக் கொண்டே யிருக்கும்
சீதள பூமியிற் சேர்ந்துறை வோனும்,
இவ்வுல கத்துள இடங்களி லெல்லாம்
'தன்உறை விடமே தான்சுக பூமி' யென்று
இம்மியும் கூசாது எடுத்துரைக் கின்றான்:
கொந்தளிப் புடனே கூடிய தாகிய

---

* சத்தி முத்தப் புலவர்.

† The shuddering tenant.........revelry and ease

தன்கடல் கொண்டுள மன்பெரு நிதியையும்,
கன்னாட் டயாவும் ‡கவல்களை நீக்கவும்
தனக்குள நீண்ட தனிஇராப் பேற்றையும்
குறித்துப் பெரிதும் கொண்டா டுகிறான்.
§ புன்னையுடை நீக்கிப் பூமத் தியரே
கைக்கரு காண்மையில் கடுவெயில் பொருது
நெடுமூச் சுடுடனுறை நீகிரோ வனும்தன்
எழில்பொன் மணலையும் எச்சங் கள்ளையும்
பற்றிப் பெருமை பாராட் டுகிறான்:
காந்தும் வெயிலிற் காய்ந்தும், வெய்ய
திரையொடு பொருது திளைத்தும், தனக்கு
நல்கிய எல்லா நலநிமித் தமும் தன்
வழிபடு கடவுளை வாழ்த்துகின் றனனால்,
எங்கெங் கேநாம் எய்திக் காணினும்,
தேசாபி மானம் திகழ்பவர் புகழுரை
இத்தகைத் தாகவே இருக்கும். இன்னவர்க்கு
ஒருமுதல் நாடும் உத்தம பூமியும்
தாயக மாகும் தமதுறை விடமே."

இத்தகைய அபிமானம் எவராலும் ஆக்கப்படுவதின்று. இயல்பாகவே எழும் ஒருவித மனக்கிளர்ச்சியே இது. தமது பிறப்பு, விளையாட்டு, வாழ்க்கை, சுகம், துக்கம் முதலியன நிகழ்ந்ததும், தாம் இளமைமுதல் நண்பர்களுடனும் உற்றார் உறவினருடனும் கூடிக்குதூகுலமாக் கழித்ததுமான இடமே

---

‡ கவல் - கவலை. களை - களைப்பு.

§ The naked negro............is ever at home
—*Gold smith's Traveller.*

ஒப்புயர்வில்லா உத்தமபூமியென்று எவர்க்கும் படுவது இயல்புதானே? இதில் என்ன ஆச்சரியம்?

நம் நாட்டில் உள்ள சாமானியப் பொருள்களாகிய இளமரக்காவும், பயிர் பச்சைகளும், பர்வதங்களும், குளம், குட்டைகளும், அந்தாக் காட்சியும், வான ஜோதிகளும், இன்னோன்ன பிறவும் கூட, தேசாபிமானிகளுக்கு இன்பத்தையும் உற்சாகத்தையும் உண்டாக்குவன ஆகும்: எலிஸாகூக் என்ற ஆங்கிலமாது பாடிய "எனது ஜன்ம பூமி" என்பதையும் ஸர் வால்டர் ஸ்காட் என்ற ஸ்காட்லண்ட் நாட்டுக் கவிஞர் பாடிய "காலிடோனியா"ப் புகழ்ச்சியையும் படித்தோர்க்கு இது தெரியாமற் போகாது.

இதுகாறும் சொல்லியவற்றால் சுதேசாபிமானம் இன்னதென்பதுவும், ஜன்ம பூமியினிடத்தில் அபிமானமுண்டாயிருத்தல் மனிதர்க்குண்டான இயல்பான ஆசைகளில் ஒன்று என்பதும், ஒரு தேசத்தார் எவ்வளவு நாகரிக மற்றவர்களாயினும், தேசமே பிறர் எதிர்பார்க்கும் பயனைத் தராததாக இருப்பினும், அவரவர் தேசமே அவரவர்க்குச் சிறந்ததாக இருக்கும் என்பதும் நன்கு தெரியவரும்.

ஓர் அபிமானி தன் நாட்டைப் பாராட்டிப் புகழ்வதற்குக் காரணம், அது "தன் நாடு" என்று அவன் கொண்ட எண்ணமே ஆகும். இதனினும் சிறந்த காரணம் யாதொன்றுமில்லை. வேறு இருக்கவும் முடியாது. உள்ளபடியே, தேசபக்தி தன்னயங் கருதாமல் எழுவதாகும்.

"கண்டார் இகழத்தன் காதலன்தான் வைகினும், அக்
கொண்டானை அல்லால் குறியாக் குலமகள்போல்"

எவன் இருக்கின்றானோ அவனே தேசாபிமானியாவன்.

என்று வளர்த்த தாய் தந்தையிடத் தபிமானம் இல்லா திருந்தாலும் இருக்கலாம். சுதேசத்தினிடம் அபிமானம் இல்லாமலிருக்க எவனாலும் முடியாது. அப்படி ஒருவன் இருக்க நேரிடின் அவனினும் பெரும் பாதகன் இல்லையென்றே துணிந்து சத்தியம் செய்துவிடலாம். ஏனெனில் இயற்கைக் குணத்தையே துறந்த இவன், அடாத முறை கேடான தீச்செயல் ஏதும் செய்யப் பின்வாங்காதவனே. நிற்க.

"பாலையாம் பருவத்தேயும் பாலராம் பருவத்தேயும்
காளையாம் பருவத்தேயும் காமுறும் இளமைக் கண்ணும்
மீளவில் மூப்பிலேயும் மேதகு சுற்றத் தோடு
நாளுமே தாம்வாழ் சொந்த நாட்டினை விரும்பார்யாரே?"

எனவும், அவ்வாறு விரும்பாதவனைப் பெரும் பாதகன் எனவே கருதவேண்டு மெனவும், இதுகாறும் கூறினோம்.

உத்தம தேசாபிமானிகளாய் உள்ளவர்கள் 'தமக்கென வாழாப் பிறர்க்குரியாள'ராவர். இன்னோர் சமயம் நேர்ந்துழி, தமது

பூமியி னருமையும் பொன்னினத ருமையும்
மனைவியின் அருமையும் மக்களின் அருமையும்
உடற்குறு இடுக்கணும் உறுதந் நலமும்
காலத் தருமையும் கருதா ராகி
"எல்லாம் வல்ல இறைவனே போன்று
துன்புறுவோர்க்குத் துணை நின்று உதவித்
தன்னுயிர் போல மன்னுயிர் புரக்கும்
மன்னவன்" பொருட்டும், மனமகிழ் வுடனே
பொதுநலத் திற்கும், புகழத் தகும்விதம்
உயிரையே கொடுத்தும் ஊழியம் செய்வர்.

இதைப் படிக்கும் போதே சரித்திர ஆராய்ச்சி யுள்ளோர்க்கு உரோமாபுரியின் ஆதிநிலைமை ஞாபகத்திற்கு வராமற்போகாது. "முன்காலை அம் மூதூர்புரி முழுமாதவ முளையாய்"த் தோன்றிய புரூட்டஸ், ஹொரேஷியஸ், லார்ஷியஸ், ஹெர்மினியஸ், மியூஷியஸ் முதலியோரை நினையாமல் இருக்க எவராலும் முடியாது. அன்றியும், ஸ்பார்ட்ட ஸிம்ஹமாகிய லியோனிடாஸ், ஸ்காட்லண்டின் மீட்சி தேடிய உவில்லியம் வாலேஸ், இட்டலிக்கு விமோசனமளித்த காரிபால்டி, மாஜினி, அமெரிக்காவிலுள்ள ஐக்கியமாகாணங்களின் சுயாதீனத்தை நிலைநாட்டிய ஜார்ஜ் வாஷிங்டன், ஸ்விட்ஸர்லண்ட் ஸ்வாதந்திரிய முறைப்புரிந்த உவில்லியம் டெல், ஆஸ்திரிய வீரகேசரியாகிய கோஸூத் முதலியோர்களையும் அவர்கள் மறக்க முடியாது. பெருங்குணம் படைத்த இவர்களின் செயற்கரிய செய்கை இவர்கள்போன்ற தேசபக்த சிகாமணிகளுக்கு ஓர் பிரமாத விஷயமன்று. ஏனெனில், அவர்கள்

"இவ்வுலகத்துள ஒவ்வொரு மனிதனும்
இன்றோ பின்றோ இறப்பது திண்ணம்.
அவ்வாறு இருக்கவும், எவ்வாறு ஒருவன்
தன் முன்னோர்களின் தகைமையின் பொருட்டும்,
அன்றியும் தன்தேவாலய நிமித்தமும்,
அணைத்துத் தனைச்சீராட்டி யமர்த்திய
அன்பு சான்ற தன் அன்னையின் பொருட்டும்,
பரிவுடனேமுலைப் பாலூட்டித்தன்
மதலையைப் பேணுநன் மனைவியின் பொருட்டும்,
(உற்றவர் பொருட்டும்) உயிர்விடுவதினும்
உத்தம மரணம் உறுவது கூடும்?"

என்பதையே கடைப்பிடித்து நடப்பவர்கள்.

நம் தேசத்திலும், அபிமானத்தில் இவர்களினும் சிறிதும் தாழாத உத்தம வீரர்கள் விளங்கினர். ஆயினும் நமக்கு இவர்கள் இன்னார் என அறியக்கூடாமைக்கு அதி முக்கிய காரணங்கள் இரண்டுள. சரித்திரமில்லாப் பெருங்குறைவே முதற் காரணம் என்க. இரண்டாவது காரணம், பெரும்பாலும்,

"பகுத்துள முறையினிற் பற்றுவைத் துத்தன்
ஆணையின் வரம்பினை அறமதித்து அதனுளே
திருப்திகொள் மனத்தனுச் செங்கோல் செலுத்திடும்"

"மறுமனத்தான் அல்லாத மாநலத்த வேந்தன் உறுமனத்தான் ஆகி ஒழுகி" யதால், தேசபக்தியே ராஜபக்தியாகியோ, அல்லது அதனோடு இரண்டறக் கலந்தோ, இலகிய தென்பதே. நிற்க.

அந்தோ! கேவலம் தன்னலம் கருதிச்செய்து தீரவேண்டியே, இவர்போன்ற காரியங்களைச் செய்யாதானு பிறர் நலம் கருதி எதும் செய்து விடப் போகிறான்?

"ஏன் பிறந்தான் புவிச் சுமையாய் இருக்கும் இன்னோன்?" என்று அறிஞர்கள் பரிதபித்துக்கூறும் தேசபக்தி இல்லானையும், அவன் இம்மையிலேயே எய்தும் கதியையும் குறித்து ஸர் வால்டர் ஸ்காட் பின் வருமாறு கூறுகிறார்:—

*" 'ஈதென் சொந்த ஊர்: ஈதென் பிறப்பிடம்'
எனத்தன் னுள்ளே எப்போ தாயினும்
உன்னுதற் கொண்ணுத் தன்உணர் வில்லா
ஒருவ னேனும் உயிருடன் உளனே?
அந்நிய நாட்டினில் அலைந்துபின் தன்னூர்
நோக்கிக் காலடி போக்கிய காலையில்

---

* "Breathes there the man with soul so dead.........&c."
—*Lay of the Last Minstrel.*

உள்ளம் குளிரா ஒருவனும் உளனோ ?
இத்தகை ஒருவன் இருப்பனே ஆயின்,
சென்று 'அவன் யாவன் ?' என்று நன்றுஅறிதி.
உயரிய பட்டம் உடையோ னாயினும்,
பெயரால் அவன்மிகப் பெரியவ னாயினும்,
ஆசையே விரும்பும் அளவிலா நிதியம்
படைத்தவ னாயினும், பரவசத் துடன்எப்
பாணரும் அவன்புகழ் பாடுதல் ஒழிவர்.
தன்னையே யாவுமாய் உன்னும்இப் புன்மையோன்
இடம்பொருள் ஏவல் இவை இருந் தும், தான்
இருக்கையி லேநல் இசையெலாம் இழப்பன்.
இவ்வாறு இருமுறை இறந்து இப் பதடி
புலம்புவா ரற்றும், பூஜயதை யற்றும்,
பாடல் பெறாதும், பண்டுதான் தோன்றிய
இழியபுன் புழுதிக்கு இழிந்துசெல் குவனே."

ஆ! ஆ!! இவ்வாறு கூறிய நாற்றிசையும் புகழ் மேற்றிசைக் கவிஞர், பலர் நினைக்கிறபடி ஓர் தீங்கவிப்புலவர் மட்டுமே யல்லர். தீர்க்கதரிசியும்தான் என்றே துணிந்து உரைப்போம்.

இவ்வபிமானம் மிதமாக இருக்கும் மட்டும் தான், தேசத்திற்கும் தேசத்தார்க்கும் க்ஷேமம். அஃதளவுக்கு மிஞ்சிப் போய்விடுமாயின் போலி அபிமானமாகவே முடியும். அதனால் விளையும் அநர்த்தங்கள் அநந்தமாகும்: மிதமிஞ்சிய அபிமானமானது ஒரு தேசத்தாரைத் தம்மிடத்துள்ள குற்றங்குறைகளைக கண்டறிந்து கொள்ளும் ஆற்றல்

இல்லாராக்கி, உத்தம நெறியிலோ, யோக்கியதையிலோ தமக்கு மிஞ்சினவர் எவருமிலை யெனவும், தாம் செய்யும் எந்தக் காரியமும் சரியானது எனவும், கருதச்செய்யும். அன்றியும் அது அந்நிய நாட்டாரை அதி அக்கிரமக்காரர்கள் என்று அகாரணமாய் அருவருத்து இகழ்வதற்கும், தன்னயமே கருதி, ஆதரவற்ற அந்நிய நாடுகளை அநாவசியமாகவும் அநீதமாகவும் வருத்தவும் "நினைப்பின்றித் தாமிருந்த கோடு குறைத்து விடல்" போல தமக்கே ஓர் பெருந்துணை நின்று துணைசெய்யும் பேரரசுகளை, அவை கவலையீனமாய் இருக்கும் காலம் பார்த்துக் கவிழ்க்க எத்தனிக்கவும் காரணமாகும். யுத்தமென்பது ஓர் பிரமாதக் கேடு என்பதையும் மறக்கச் செய்து அந்நிய நாடுகளுடன் அமர் புரியவும் இது தூண்டும். "நாடெங்கும் வாழக் கேடொன்றுமில்லை" என்று எண்ணி, தன்னலம்போல் பிறர்நலம் கருதுவதே உண்மைத் தேசாபிமானமாகும்.

இத்தகைய மெய்யபிமானம் இருக்கும் வரையே ஒரு நாடு ஓங்கிச் செழிக்கும் என்பதற்கும், துவேஷ புத்தியும் பொறாமையும் கூடிய போலியபிமானம் கொண்ட மாத்திரத்திலேயே அதற்கு அழிவுகாலம் சமீபிக்கும் என்பதற்கும், ஆதென்ஸ் நகரையே உதாரணமாகக் காட்டுவோம்.

அசகாய சூரனாகிய தெமிஸ்டாகிளிஸ் என்பவன் ஆதென்ஸ் நகரச் சேனைகட்கெல்லாம் அதிபனாக இருந்தான். அவன் ஓர் சிறந்த போர்வீரனாயினும் நீதியில்லாத நிபுணனே. ஒருநாள் அவன் ஓர் மகாஜன சபை கூட்டி, ஆதென்ஸை அதி உன்னத பதவிக்குக் கொண்டுவரக் கூடிய சூழ்ச்சி ஒன்றைத் தான் கண்டுபிடித்திருக்கிறதாகவும், அது அதி

ரகசியமாய் நிறைவேற வேண்டியிருப்பதால், அதன் விவரம் யாவருக்கும் அறிவிக்கக் கூடாமலிருக்கிறதென்றும், நம்பிக்கையுள்ள ஒருவனைத் தம் பிரதிநிதியாக அவர்கள் அனுப்பினால், அவனிடம் அதனை அறிவித்து அவனது ஆலோசனைக்கிணங்கித் தான் நடந்துகொள்வதாகவும் தெரிவித்துக்கொண்டான். இவன் கோரிக்கைப் பிரகாரமே ஆதேன்ஸ் முழுதும், தருமசீலனும் ஸத்திய ஸந்தனுமான அரிஸ்டைடிஸ் என்பவனையே தம் பிரதிநிதியாக ஏகோபித்துத் தெரிந்தெடுத்தது. தெமிஸ்டாகிளிஸ், அரிஸ்டைடிஸை ஓர் தனி இடத்திற்கு அழைத்துச்சென்று, ஆதென்ஸுக்கு அயலில் உள்ளதும், அதனினும் ஒரு சிறிதும் பெருமையிலும் அதிகாரத்திலும் தாழாததுமான, லாக்கிடிமோனியா (ஸ்பார்டா)வுக்கும் இதர நாடுகளுக்கும் சொந்தமான சண்டைக் கப்பல்கள் பாதுகாப்பு ஏதுமின்றி அச்சமயம் இருப்பதாகவும், அதனைத் திடீரென்று தாக்கித் தீவைத்துக் கொளுத்திவிட்டால் ஆதேன்ஸினும் வல்லரசு ஏதும் இராமலே போய்விடும் என்றும் கூறினான். இதனைச் செவியுற்ற அரிஸ்டைடிஸ் உடனே மகாஜன சபைக்கு வந்து "தெமிஸ்டாகிளிஸ் சொல்வதைக் காட்டிலும் லாபகரமானது பிறிதொன்றுமில்லை. ஆயினும் 'அதனினும் அதி அக்கிரமமானதும் இல்லை." என்று இவ்வளவே சொன்னான். உடனே வேறுவார்த்தை ஏதும் பேசாமல், விஷயம் இன்னது என்று கூட அறிந்துகொள்ள ஆவல் கொள்ளாதவராய், மகாஜன சபையோர், ஒருவரைப்போல யாவரும், தெமிஸ்டாகிளிஸை "ஏதும் செய்யவேண்டாம்" என்று தடுத்தே விட்டார்கள். அபிப்பிராய பேதம் ஏதுமன்றி ஒருவர்க்குத் தோன்றியபடியே யாவர்க்கும் தோன்றியது எவ்வளவு பாராட்டத் தக்கது! முற்றத் துறந்த முனிவர்களைத்

தவிர யாரே இவ்வாறு செய்ய உடன்படுவர்? ஒரு தேசத்தில் கோடியில் ஒருவர் ஞானியாயிருத்தல் காண்பதரிது. தேசத்தார் யாவருமே ஞானிகளா யிருந்தது என்ன ஆச்சரியம் பாருங்கள் !

ஆ ! ஆ !! இத்தகைய நியாய புத்தி இருந்ததால் அன்றோ உலகை யெலாம் ஜயித்துக் கீழ்ப்படுத்தியதும், அநியாயப் போர் புரிந்ததுமான, பாரஸீக (Persia) மும் அதை ஜயிக்க முடியாமற் பன்முறை தோற்று முடிவில் பயந்து ஓடியே விட்டது ?

"கோதிலா மனத்தின் மேலதா வலிமை
கொண்டமார்க் கவசம் யாதுளது ?
நீதியாற் சண்டை புரிபவன் எவனும் நிறுவுமுக்
கவச மொய்ம் பினனும்.
தீதுலாம் அநீத நெறியெனும் களங்கம்
தீண்டிய மனக்கரி யுளான்,தன்
மீதிலே உருக்குக் கவசமே போர்த்தும்
வெற்றுடம் புடையனு குவனே."

என்ற புலவர் வாக்குப் பொய்யின்றே ? நிற்க.

தம்முடைய தேசத்துக் கைத்தொழிற் சாலைகளும் வியாபாரமும் விருத்தி அடைவது, அந்நியநாட்டுக் கைத்தொழிற் சாலைகளையும் வியாபாரத்தையும் அழிப்பதனுல் என்று தப்பெண்ணம் கொள்வோர்க்கும் இது சிறந்த புத்தி புகட்டும் என்பதற் கையமில்லை. நிற்க.

"வண்மையால், கல்வியால், மாபலத்தால், ஆள்வினையால், உண்மையால், பாராளு முரிமையால், திண்மையால்"

சிறந்து, கிரீஸ் தேச முழுமையுமே காக்குந் தொழில் பூண்ட இதே ஆதென்ஸ், பெரிக்கிளிஸ் என்பவன் ஆட்சிக்குப் பின்னர் எய்திய கேட்டை என்னென்பேம்! இலங்காபுரியை இலங்கா புரிஆக்கவும் அத்திப்புரியை அத்தி புரியவும் தோன்றிய மகோதரனையும், சகுனியையும் போல, அல்கிபியாடிஸ் முதலிய துன்மந்திரிகளைப் பெறும்படியான துர்ப்பாக்கியம் ஆதென்ஸுக்கு கி. மு 514-ல் லபித்தது: ஆதென்ஸுக்குச் சமீபத்தில் மீலாஸ் என்ற ஒரு சிறு தீவு சகல சுதந்தரங்களுடனும் தான் தோன்றிய காலமுதல் இருந்து வந்தது. இது ஆதென்ஸுக்கு எந்த விதத்திலும் கட்டுப்பட்டதன்று. அதற்குக் கனவிலும் தீங்கு நினைத்ததும் அன்று. அவ்வாறு வெகுகாலமாக இருந்து வந்தும், அது மட்டும் கிரீஸ் தேசத்தில் சகல சுதந்தரங்களுடனும் கூடிய ஓர் சுயாதீனமுள்ள நாடாக வாழ்வதைக் காண ஆதென்ஸுக்குச் சகிக்கவில்லை. "ஓநாயும் ஆட்டுக்குட்டியும்" என்ற கதையில், ஓநாய் ஓர் முற்றும் பொருந்தாக் காரணத்தைக் கூறியாவது ஆதாவற்ற ஆட்டுக்குட்டியைக் கொன்று தின்றது. ஆதென்ஸோ, அப்பேர்ப்பட்ட காரணங்கூட ஏதும் கூற முடியாமல், திடீரென்று ஒரு பெருஞ் சேனையை அனுப்பி, மீலாஸ் என்ற அச்சிறு தீவை வளைந்துகொண்டு அதில் உள்ளவர் யாவரையும் தமக்குக் கீழ்ப்படியுமாறு வற்புறுத்தினது. மீலாஸில் உள்ளவர்கள், ஆதென்ஸ் நகரத்தார்க்கு எவ்வளவோ நீதிகளெடுத்துரைத்து அவர்கள் செய்வது, அதி அக்கிரமம் என்று நன்கு விளக்கினர்கள். ஆயினும் ஆதென்ஸ் அவைகளை எல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கொலிபோலாக்கி, "நீதி என்பது கையாலாகாதவன் தன்னைத் தப்பித்துக்கொள்ளும் பொருட்டுப் பேசுகிற பேச்சு" என்றும், "ஆற்றுவரேல் தோள்வலி

யாற் கொள்ளுவதும், ஆற்றுரேல் தோற்பதுவும் வேந்தர்க்குச் சொல்லியதே" என்றும், இன்னணம் பலகூறி, "பராக்கிரமம் மிகுத்த தன் சொல்லுக்கு உடனே கீழ்ப்படியாது போனதே மீலாஸ் செய்த பெருங் குற்றம்" என்று கண்டித்து அவ்வூரில் உள்ள ஆடவர்களனைவரையும் ஒருவர் கூட இல்லாமல் கொன்றதுடன், அவர்களுடைய பெண்டு பிள்ளைகளையும் அடிமைகளாக விற்றுவிட்டாது. ஐயோ! "எளியாரை வலியார் அடித்தால் வலியாரைத் தெய்வம் அடிக்கும்" என்பது பொய்யோ? எல்லா வல்லமையும் இருந்தும், இது தற்பொழிவும், ஈனமும் நியாய விரோதமுமாய் நடந்துகொண்ட இச்செய்கையினுலேயே, இதுநடந்த பின்னுட்களுக்கெல்லாம், நயவஞ்சக மிகுந்த ஸ்பார்ட்டா கையில் அகப்பட்டு, நாயும் படாத பாடுபட்டுச் சீர்குலைந்து க்ஷீணித்துவிட்டது. நிற்க.

இனி நமது தாய் நாடாகிய இந்தியா சம்பந்தப்பட்டமட்டில் தேசாபிமான விஷயமாய்ச் சில கூறி, இவ்வியாசத்தை நிறுத்துவோம்.

நமது பரத கண்டத்தில் வசிக்கும் இந்தியனுகட்டும், மகமதியனுகட்டும், பார்ஸியாகட்டும், வேறு எந்த ஜாதியான் தானுகட்டும் தேசாபிமானியாக இருக்கமுடியாதென்றும், இந்தியா ஆங்கிலர் வசமாகி விட்டபடியால் அதில் வசிக்கும் "இந்தியர்களுக்கு" என்று சொந்த தேசம் ஏதும் கிடையாதென்றும் எண்ணுகிறுர்கள் சிலர். வேறுசிலரோ, தம் உற்பத்திக்குக் காரணமாகிய தாய்நாட்டிற்குத் தொண்டுசெய்வதை ஒழித்துத் தம்மை ஆளும் நாட்டிற்குத் தொண்டு பூண்டொழுகி அதன் பால் அபிமானம் பாராட்டவேண்டும் என்கின்றனர். இவ்விருதிறத்தாரது அபிப்பிராயமும் ஒப்பத்தக்கன

வல்ல. ஏனெனில், ஆள்வார் யாராயிருந்தாலும் 'ஸ்வ' தேசம் 'பர' தேசம் ஆகிவிடுமா? மாதா வயிறெரிய மகேசுவர பூஜை செய்வதுந்தான் சரியா? சுவாதந்தரிய நாடுகளுக்கெல்லாம் தாய்நாடு எனத்தகும் தன்மை வாய்ந்ததும் அடிமைத்தனத்தை அறவே ஒழித்து வருவதுமான இங்கிலாந்து, இவ்விரு திறத்தாரது அபிப்பிராயத்தையும் "சரியானவை" என்று ஒரு காலும் ஏற்றுக்கொள்ளமாட்டாது. பல கூறுவானேன்? இந்தியன் சுதேசாபிமானியாக இருத்தல் கூடும்:

"காலமறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
மூலமறிந்து விளைவறிந்து—மேலுந்தான்
சூழ்வன சூழ்ந்து துணைமை வலிதெரிந்து
ஆள்வினை யாளப்படும்."

என்பதைக் கடைப்பிடித்து, எவ்வாறு நடந்துகொண்டால் உண்மையில் தேச நலத்தை யடையலாகுமோ, அவ்வாறு நடந்து, புரவலர்க்கும் பொதுஜனர்க்கும் நன்மை புரிபவனே உண்மைத் தேசாபிமானி யாவன்.

இத்தகைய தேசாபிமானிகள் நம் நாட்டில் இன்றைக்கும் இல்லாமற் போய்விட வில்லை. இவ்வபிமானிகள் நாள் தோறும் தேச க்ஷேமத்திற்காகப் போராடிய வண்ணமாகவே இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் போடும் சண்டை வாட்படை கொண்டு அன்று. வாளினும் வலியதாகிய வாக்கும் எழுதுகோலுமே அவர்கள் பிடித்துள்ள ஆயுதங்கள். இந்தியாவின் "மாப்பெருங் கிழவன்" என்று பல்லோரும் புகழும், தாதாவாய் நின்றிலகும் ஸ்ரீமான்களாகிய தாதாபாய்நௌரோஜி, கோபாலகிருஷ்ணகோகலே, ஆநந்தமோகன்போஸ்,

ராஜா ராம்மோகன்ராய், சுரேந்திரநாத்பானர்ஜி முதலியோர், தமதுகாலம், பொருள், சுகம் முதலியன கருதாது போடும் சண்டை முற்காலத்திய தேசாபிமான மிகுந்த போர்வீரர் போடும் சண்டைக்கு நிகராகவே கூறலாம். ஆனால் இவ்விரு திறத்தாருடைய சண்டைக்கும் வித்தியாசம் உண்டு. எங்ஙனமெனில், போர்வீரன் தனது ஜன்ம சத்துருவுடன் சண்டை போடுகிறான். இந்தியா தேசாபிமானிகளோ தமக்கு மனப்பூர்வமாக நன்மையே புரிய விரும்பும் ஆங்கில துரைத் தனத்தாரோடு சிநேகச் சண்டைபோடுகின்றனர். நிற்க.

> "அஞ்சுவ தஞ்சாமை பேதைமை; அஞ்சுவது
> அஞ்சல், அறிவார் தொழில்."

என்பதை மறந்து சிலர் அரசாங்க முறையைக் கண்ட படி தூஷிப்பவனே உண்மைத் தேசாபிமானி யென்று தவறாகக் கருதுகின்றனர். ஈதென்ன மௌடீகம்! அறியாமையினாலோ, போலிப்புகழ்ச்சி விரும்பியோ, அநியாயமாய் அரசாங்கத்தாரைப் பகைத்துச், சமாதானமுற்று வாழுங் குடிகளின் மனத்தைத் தன்னால் இயன்றவாறெல்லாம் குலைத்து, அவர்களைத் தன்னோடு சேர்த்துக்கொண்டு சதிஆலோசனை புரிந்து ராஜாங்கத்தைக் கவிழ்க்க முயற்சிப்பவன் உண்மைத் தேசாபிமானியாகான். இவனுக்கும் கண்மூடித் தனமாகத் தான் சாக உபாயம் தேடுவோனுக்கும் வித்தியாசமேயில்லை. இவன் தான் கெடுவதுமன்றிப் பிறரையும் அரசாங்கத்தினரது தண்டனைக்கும், "தீயோர்" என்று அவர்களாற் கருதப்பட்டு அவர்களின் தீராச் சந்தேகத்திற்கும் உட்படுத்தக் காரணனாகின்றான். இத்தகைய சமுசயங்களால் நிரபராதிகளான எத்தனை ஏழை ஜனங்களும், செல்வமும் செல்வாக்கும்

படைத்த பிமான்களும் அநியாயமாய் அரசதண்டனைக்கு ஆளாகியும், அரும்பொருள் இழந்தும், அவமானத்திற் குள்ளாகியும் அவஸ்தைப்பட்டிருக்கின்றனர்! இக்காரணங்களைப் பற்றி, அரசாங்கத்தாரை அக்கிரமவழியிற் பகைப்பவனைத் தேசத்திற்குத் "தீங்குபுரிபவன்" என்று கருதவேண்டுமேயன்றி "அபிமானி" என ஒருக்காலும் கருதக்கூடாது.

அரசாங்கத்தார் செய்கையில் தவறுதல்கள் உண்டாவது சகஜமே. அதற்காக அவர்களைக் கண்டித்தலும் நியாயமே. ஆயினும் அக்கண்டனை ஒழுங்குக்கு விரோதமின்றி இருத்தல் அவசியம். நியாயத்திற்கு விரோதமாகக் குடிகளின் மீது இங்கிலாந்து தேசத்தரசனை முதலாவது சார்லஸ் "கப்பல் வரி" (Ship Money) யைச் சுமத்திய காலத்தில் பார்லிமெண்டோடு தைரியமாய் எதிர்த்துப்போராடிச்சிறையில் அடைபட்ட ஜான் ஹாம்டனை, "ராஜதுரோகி" என்று எவரும் சொல்லாமல் "உத்தம தேசாபிமானி" யென ஆங்கிலேயராதியோர் இன்னும் புகழ்கின்றனர். இதற்குக் காரணம் அரசனோடாயினும் அவன் நியாயவழியில் போட்ட சண்டையே.

இதுகாறும் கூறியவற்றால் தன்தேசத்தின் பொருட்டு யுத்தத்தில் பிராணனை விடுக்கும் சுத்தவீரரும், பொது நன்மையை நாடி அரசாங்கத்தினரை நேரிய வழியில் எதிர்க்கும் நாவன்மை படைத்தோனுமே தேசாபிமானிகள் என்று எவரும் எண்ணற்க. கோமானோ குடியானவனோ, ஏழையோ, பணக்காரனோ, பண்டிதனோ பாமரனோ, இளையனோ முதியனோ, ஸ்திரீயோ புருஷனோ, ஆஸ்திகனோ நாஸ்திகனோ, யாராக இருந்தாலும் சரி—தன்தன் நிலைக்கும் குடிமைக்கும்

தப்பாமே, ஒத்த கடப்பாட்டிற் றூனன்றி, எய்த்தும், அறங் கடையிற் செல்லானாகியும், பிறன் பொருள் வெஃகானாகியும், தன் பொருள், மனம், மொழி மெய் யாதியவற்றால் ஜனசமுக வாழ்க்கைக்கின்றி யமையாத லோகோபகாரச் செயல்களை அறிந்து புரிந்து, உத்தம தேசாபிமானிகள் ஆவதில் தடை யேதும் இல்லை. இத்தகைய உண்மைத் தேசாபிமானிகள் நம் நாட்டில் மேன்மேலும் பல்குமாறு எல்லாம் வல்ல முழு முதற் கடவுளையும் பாரத மாதாவையும் பக்திபூர்வமாக வேண்டுகின்றேன்.

வாழிய! பண்டைப்பெயரே வாய்ந்திடுமா
வளநாடே! மாசில் தூய்மை
சூழிசை சேர் பாரதமே! தாயகமே!
தூயவெலாம் தோன்றும் பூவே!
பாழிய நின் பெருந்தகைமைப் பான்மையை யாம்
பயில அருள் பாலிப் பாய் நீ
ஆழிபுனை எப்புவிக்கும் ஆருயிரே!
நினதுரிமை ஆம் எம் உள்ளம்.

எக்காலும் ஞானியர்கள் இருந்தியங்கும்
இயல்புடைய எங்கள் நாடே!
முக்காலங் களுமுணர்வோர் முனிவரர்கள்
முது மறைகள் மொழியும் நாடே!
அக்காலத் தியநினது மகிமை யெலாம்
அன்றே போல் அணிபெறற் றோங்க
இக்காலம் ஐந்தாம்ஜார்ஜ் இறையவனர் அரசாட்சி
இனிதாய் வாழ்க!

ரோஜா.

"பூவெனப்படுவது *பொறி வாழ் பூவே" என்று தாமரையையும், "புஷ்பேஷு ஜாதி" என்று ஜாதி புஷ்பத்தையுமே, பரத கண்டத்துப் புலவர் பெருமக்கள், மலர்களிற் சிறந்தனவாக மகிழ்ந்து உரைப்பர். ஜாதி புஷ்பம் மணத்திலும், தாமரைமலர் அழகிலும், சிறந்து விளங்குவதால் அவ்விரு மலர்களுமே நம் ஆன்றோர்களால் அருமை பெருமையாக மதிக்கப்பட்டன போலும். ஆயினும் சிறந்த அழகும் திவ்ய பரிமளமும் ஒருங்கே அமைந்துள்ள ஓர் மலர் உண்டு. அஃது இவ்விரு குணங்களும் நிரம்பி இலங்குவதால் அதனை இக்காலத்தார் "புஷ்பராணி" எனப் புகழ்ந்து கூறுவர். இவ் அழகிய நறுமலர் யாவராலும் விரும்பப்பட்ட "ரோஜா" வேயாம். இஃது ஆதியில் இந்தியாவில் இல்லாதிருந்த காரணம்பற்றியே இது நம்முன்னோர்களால் நம் நாட்டுப் பழைய நூல்களிலும், காவியங்களிலும் பிரஸ்தாபிக்கப்படவில்லை. நம்மவர்கள் தாமரையை எவ்வளவு மேன்மையாக சிறப்பித்துக் கூறி யிருக்கிறார்களோ அவ்வளவு மேன்மையாகச் ரோஜாவை மேலைத் திசையோர் வர்ணித்திருக்கின்றனர். மில்டன், ஷெல்லி, டெனிஸன், ஷேக்ஸ்பியராதியோரது நூலை வாசித்தோர்க்கு அப்புலவர்கள் இம் மலரில் வைத்துள்ள மதிப்பு நன்கு விளங்கும். நிற்க.

---

* பொறி - இலக்குமி.

உற்பத்தி:—உலகத்தில் பல இடங்களில் காடுகளில் மானுஷக் கிருஷியின்றியே ரோஜாச்செடி பயிராகின்றனவாயினும், அவற்றில் புஷ்பிக்கும் மலர்கள், நாடுகளில், தோட்டங்களில் வைத்துப் பயிராக்கப்படும் செடிகளில் உண்டாகும் மலர்களைக் காட்டிலும், பருமன், அழகு, மணம் முதலியவற்றிற் குறைந்தனவாகவே இருக்கும். ரோஜாச்செடியில் 250 வகையுண்டு.

ரோஜா, ஆசியா கண்டத்தில் இந்தியா பாரசிகம், துருக்கி, சீன முதலிய இடங்களிலும், ஆப்பிரிக்காவில் ஈஜிப்ட் முதலிய இடங்களிலும், ஐரோப்பாவில் பிரான்ஸ், இங்கிலாந்து முதலிய இடங்களிலும், அமெரிக்காவில் சில பாகங்களிலும், தோட்டங்களில் மிகுதியாகப் பயிராக்கப்படுகிறது. சீமையில் ரோஜா இல்லாத தோட்டமே கிடையாது. இந்தியாவில் உள்ள பாடலிபுரம் (பாட்ன) லவபுரம் (லாகூர்) காஸிபுரம் (காஸிப்பூர்,) முதலிய பட்டினங்களும், குலிஸ்தான் என்னும் நாடும் பாரசீகத்திலுள்ள ஷிராஸ் என்ற நகரமுமே ரோஜாவிற்குப் பேர்பெற்றவை. குலிஸ்தான் என்னும் நாடு பங்காளத்தில் உள்ளது. குலிஸ்தான் என்பதற்கே "ரோஜாத்தோட்டம்" என்பது பொருள். அந்நாடு முழுவதிலுமே ரோஜாச்செடி பயிராவதால் அதற்கு இப்பெயர் கிடைத்தது. அந்நாட்டிற்கு அருகில் உள்ள ஓர் உன்னதமான இடத்தில் நின்று இதனைக் காணும் காட்சி அதி அற்புத காட்சியாகும். நாற்புறமும் நறுமணம் வீசி நேத்திரானந்தத்தை விளைக்கும் இப்பூங்காவனம் அங்கிருந்து பார்ப்பவர் கண்ணுக்குப் பூமி முழுதும் புஷ்பங்களாலேயே மூடப்பட்டதுபோற் புலப்படும்.

இயற்கை விசேஷங்கள்:—ரோஜா மரமன்று. அது செடியாகவும் புதராகவுமே வளரும். நன்றாய்வளர்க்கப்படின், அது எட்டு அடிவரை உயரும். இச்செடிகளுக்குக் கூரிய முட்களுண்டு. எவ்வளவுக் கெவ்வளவு ரோஜாமலர் அதிக நேர்த்தியும், வனப்பும் வாய்ந்துள்ளதோ அவ்வளவுக் கவ்வளவு முள்ளும் கூர்மையாக இருக்கும். மற்றச் செடிகளாலும், கொள்ளைக்காரர்களாலும் அதிகமாகத் தீங்கு நேரிடாவண்ணம் அது தன்னைக் கூடியவரை தற்காத்துக்கொள்ளும் பொருட்டே, சர்வக்ஞராகிய கடவுள், அதற்கு முள்ளை ஓர் 'தடுபடையாக'க் கொடுத்திருக்கின்றார். மலர்க் காம்பிலும், அதற்கருகிலும் பிசுபிசுப்புள்ள ஒரு வகை மயிருண்டு. இம்மயிர்கள் இச்செடிக்குப் பிடித்தமில்லாத ஜந்துக்களை அணுகவொட்டாமல் அப்புறப்படுத்தவே சிருஷ்டிக்கப்பட்டவை. ஆயினும் இச் செடிக்கிசைந்த பிராணிகளை அது தன் வசப்படுத்திக்கொள்ளுமாறு அதன் மலர்க்கு நிறமும், மணமும் நேர்த்தியும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ரோஜாச் செடி அதன் மலரினின்றும் எடுபடும் பரிமள அத்தர்க்காகவும், பனிநீரின் பொருட்டுமே, பெரும்பாலும் பயிரிடப் படுகிறது. இம்மலர்கள், சித்திரை வைகாசி மாதங்களிற்றான் மிகுதி. அவற்றின் நிறம் சிவப்பு, வெள்ளை, மஞ்சள் எனப் பலவகைப்படும். உஷ்ண தேசங்களில் உண்டாக்கப்படும் ரோஜா, சீதளநாட்டு மலர்களைக்காட்டிலும் சகலவிதத்திலும் உயர்ந்தனவாகவே இருக்கும்.

பனிநீர் செய்யும் விதம்:—ஓர் நீளச் சிறுகுழாய் பதிப்பிக்கப்பெற்றதும் வாய் குறுகியதுமான ஓர் பாத்திரத்தில் தண்ணீர் பெய்து ரோஜா மலர்களை அவை புது நறுமணத்துடன்

இருக்கும் பொழுதே கொய்து அதிற்போட்டு மூடி, அக்குழாயின் மறுநுனியை ஏற்கனவே நன்கு குளிரவைத்துள்ள ஓர் பாத்திரத்திற் செருகி, மலரும் நீருமுள்ள பாத்திரத்தைக் காய்ச்சினுல் அப்பொழுது எழும் நீராவி, குழாயின் வழியாய், குளிர்ச்சியுறச் செய்துள்ள பாத்திரம் போய்ச் சேர்ந்து, வாயு உரு நீங்கி, திரவ ரூபம் அடையும். இத்திரவமே பனிநீர். 1000 நறும்புது மலர்களிலிருந்து 'அசல்' பனிநீராக 3 வீசம் படியே எடுக்கலாகும்.

அத்தர் செய்யும் விதம்:—முற்கூறியவாறு சுத்தமாய்க் காய்ச்சி வடிகட்டி இறக்கிய பனிநீரை வாய் அகன்ற தொட்டிகளில் வார்த்து அத்தொட்டிகளைத் திறந்தவெளியில் சில நாள் வைத்திருந்தால் இராக்காலங்களில் அப்பனிநீர்ப் பரப்பில் சிறுசிறு துளிகளாக ஒருவகைத் தைலம் மிதக்கவும் தொட்டியோரத்திற் படியவுங் காண்போம். இத் தைலமே விலையேறப்பெற்ற அத்தர்.

இத்தைலத்தை யாதானும் ஓர் சுத்தமான இறகு கொண்டு அதி ஜாக்கிரதையாய் ஒற்றி எடுக்கவேண்டும். ஒரு ரூபாய் நிறையுள்ள தனி அத்தர் அது எடுக்கப்படும் இடத்திலேயே 100 ரூ முதல் 150 ரூபாவரை விலைபோகிறதாம். 200,000 புஷ்பங்கள் இருந்தால்தான் ஒரு ரூபா எடையுள்ள சுய அத்தர் கிடைக்கும். 2,000 செடிகளாவது இருந்தால் தான் 2 லட்சம் புஷ்பங்கள் பெறலாம். ஆகையால், ஆராயின், அதற்காகக் கொடுபடும் 100 ரூபாய் ஓர் அதிகத் தொகை யாக மாட்டாது.

இவ் ரோஜா அத்தரை "ஜிகாங்கீர் அத்தர்" என்றும் சொல்வதுண்டு. இதற்குக் காரணம் பின்வருமாறு சொல்லிக்

கொள்ளப்படுகிறது:—இந்தியாவில் மொகலாய சக்கிரவர்த்தியாய் இருந்த ஜிஹாங்கிர்க்கும் நூர்ஜிஹானுக்கும் விவாக மஹோத்ஸவம் நடந்தேறிய காலத்தில், பனிநீர் நிரப்பப்பட்டிருந்த ஓர் தொட்டியில் மிதந்த இத்தைலத்தை நூர்ஜிஹான் கண்டு தன் கைக்குட்டையால் ஒற்றி எடுத்து முகந்து, அதன் மணத்திற்கு மெச்சி, தனது நாயகனது ஞாபகார்த்தமாக, அதனை "ஜிஹாங்கீர் அத்தர்" என்ன, அதுமுதல் அப்பெயரே அதற்கு வழங்கலாயிற்றும். நிற்க,

உபயோகங்கள்:—அத்தரையும் பனிநீரையும் தவிர ரோஜாச் செடியினால் வேறு உபயோகங்களும் உண்டு. உரோமாபுரியைப்பற்றிய சரித்திரம் வாசித்துள்ளவர்கள், பூர்வீக ரோமர்களுக்கு அம்மலர்மீது உள்ள பிரீதியை நன்கறிந்திருப்பர். அவ்வூரார்க்கு, தம்மைச் சுற்றிலும் நறுமணங் கமழ்ந்து வீச, உணவு அருந்துவதில் மிகப்பிரியம். ஆதலின் அவர்கள் ரோஜா இலைகளையும் மலர்களையும் பரப்பி அவைகளின்மேல் உண்கலம் வைத்து ஆகாராதிகளைப் பரிமாறிப்பின்பு உண்பார்களாம். விருந்து காலத்தில் அவர்கள் வருஷிப்பது இம் மலர் மாரியே. உரோமாபுரியில் அரசுசெலுத்திய ஒருவன் ஓர் சுபநாளில் நடத்திய பிரபல விருந்தொன்றில், ஓயாது இப் புஷ்பமாரி வருஷிக்கப்பட்டதால், சிலர் இடம் பெயர்ந்து செல்லவும் இயலாமல் இறக்க நேர்ந்தாம். ஏறக்குறைய 2,000-வருஷங்களுக்குமுன் எகிப்தை ஆண்ட கிளியோபாட்ரா என்னும் இராணி, உரோமைப்பிரதம தளகர்த்தனாகிய அந்தோனியா என்பவனுக்கு விருந்து செய்தபோது 2 முழ உயரத்திற்கு ரோஜா மலர்களைத் தரையிற் பரப்பி அவனை அதன் மீதிருத்தி உணவளித்தனளாம். ஐரோப்பாவில்

தென்பாகத்தில் உள்ளவர்கள் பஞ்சுக்குப் பதிலாக ரோஜா இதழ்களைத் திணித்துத் தலையணை முதலியன செய்துகொண்டார்களெனத் தெரிகிறது.

(2) நம்மவர்களால் பனிநீர் விசேஷ காலங்களில் யாவர்மேலும் மரியாதைக்காகத் தெளிக்கப்படுகிறது. அக்காலங்களில் வாசனையாக அத்தரைச் சேர்ப்பதும், விருந்தினர் மேல் பூசுவதுமுண்டு.

(3) ரோஜா மொட்டோடு பிஞ்சுக் கடுக்காய் கொட்டைப்பாக்கு முதலியன சேர்த்து கஷாயம் இறக்கி பேதி மருந்தாக உட்கொள்ளுவார்கள்.

(4) குல்குந்து என்ற ஒருவகை இனிய லேகியத்தில் பெரும்பான்மையும் சேர்ந்திருப்பது ரோஜா இதழ்களே. இது குளிர்ச்சியும், ருசியும் கூடியதாய் மிக்க ஆரோக்கியத்தைத் தரத்தக்கது.

படிப்பினைகள்.—"நெல்லுக் குமியுண்டு, நீரிற்கு நுரையுண்டு புல் இதழ் பூவிற்கும் உண்டு" என்ற தமிழ்ப் புலவர் கருத்துக் கியைய "முள்ளில்லா ரோஜா இல்லை" ஒன்ற ஓர் ஆங்கிலப் பழமொழியுண்டு. "எவ்வளவு சிலாக்கியமான பொருளுக்கும் ஏதாவது ஒரு குறை இருக்கவே இருக்கும்" என்பதே இதன் தாத்பரியம். நிற்க.

இந்நறுமலர் எவ்வளவோ எழிலும் நேர்த்தியும் இயைந்து விளங்குவதாயினும் ஒருமணிப்பொழுதில் இதழ் வளம் குன்றி, நிறம் மங்கி, ஒரு பகலில் உலர்ந்துபோகும். ஆயினும் இப்பூவிற்கு, இவ் அவனியிலுள்ள ஏனை அரியபன்

மலர்க்கும் இல்லா அருங்குணம் ஒன்று உண்டு: அஃதென்ன வெனில், அதன் இதழ்கள் வாடி, எழில் நிறம் எல்லாம் கெட்டு மாய்ந்த காலத்தும், அது இனிய நறுமணமே வீசும் என்பதே. இம்மலர், ஆராய்ச்சி மிக்குடைய அறிஞர்களுக்கு,

"இளமையும் மக்கள் தம்மின்
எழிலும்இம் மலரைப் போன்று
வளமையும் வனப்பும் வாய்ந்தும்
வாவா வாட்டம் கண்டு
தளர்வுறும். தளர்வுறாமல்
தடுத்தவை ஓம்பல் வீணே;
மளமள எனச்செல் காலன்
மாத்திரைப் போதில் மாய்க்கும்.

ஆதலின் இளமை தேசென்
றாயஇவ் விரண்டும் பற்றித்
தீதுறு செருக்கே கொள்ளேல்;
தேய்ந்தவை வாடிச் சாமால்.
ஓதுநம் கடன்நன் றாற்றி
ஓங்குநற் புகழே எய்தின்
ஈதுரோ ஜாவைப் போல
இறப்பினும் மணமே வீசும்."

என்ற சிறந்த உண்மையை நன்றாக அறிவுறுத்துவதோடு, ஈசுவர சிருஷ்டியின் அற்புதத்தையும் காட்டுகிறது.

வானம்பாடி.

உலகத்தில் நாகரிக மக்கள் பேசும் நாநா பாஷைகளிலு முள்ள காவியங்களில் பட்சிகளைக் குறித்துப் பலவிதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆரியவர்த்தப் புலவர்பெருமக்கள் அன்னம், கிளி, மயில், குயில், நாரை, கருடன் ஆதியவற்றை வர்ணித்துள்ளது போல் மேற்றிசைப் புலவர்கள் வானம்பாடி, பரிகசிக்கும் பறவை, இராப்பாடி (Night-in-gale) முதலியவற்றைப் பற்றி அலங்காரமாய் வர்ணித்திருக்கின்றார்கள். இவற்றுள் ஷெல்லி, ஜேம்ஸ் ஹாக், ஷேக்ஸ்பியராதியோரால் பலவிதமாகப் பாவித்துப் பாடப்பட்ட வானம்பாடியே நமது விஷயமாகும்.

இடம்:—இது ஐரோப்பாவில் இங்கிலாந்து, பிரான்ஸ், இட்டலி, கிரீஸ்முதலிய பலவிடங்களிலும், ஆசியாவில் நேபாளம், வடசீனு, பஞ்சாப்,பாரஸீகம், பாலஸ்தீனு முதலிய இடங்களினும், ஆபிரிகாவில் ஈஜிப்ட்,பார்பாரிஸ்டேட்டாதிய இடங்களிலும், விசேஷமாய்க் காணப்படும். அமெரிக்காவில் அதனைக் காண்பதரிது. ஆஸ்திரேலியாவில் காணப்படுவன ஐரோப்பாவிலிருந்து அங்கு கொண்டுபோகப்பட்டுப் பல்கியவைகளே. மாரி காலங்களில், இவை பேரோ தீவு (Faroe Isles) களிலும், குரைல் தீவு (Kurile Islands) களிலுமே மிகுதி.

தோற்றம்:—இஃதொரு சிறு குருவி. இது மயில், எருத்து வாற்குருவி முதலியவைகளைப் போல், பார்வைக்குப் பகட்

டானதும் ஒய்யார மானது மன்று. அதன் கால்களின் பின் விரல் குருவியினத்தைச் சார்ந்த ஏனைய பறவைகளின் விரல்களைக் காட்டிலும் நீளமாயிருக்கும்.

இப்புள்ளின் நீளம் 7 அங்குலம். நிறம் பழுப்பு. கரும் புள்ளிகள் நிறைந்து, மங்கிய மஞ்சள் நிறத்தோடு இதன் மார்பு இருக்கும். இக் குருவிக்கு ஓர் அழகிய சின்னஞ் சிறு உச்சிக் கொண்டை உண்டு. மூக்கு நீண்டு கூர்மையாயிருக்கும். அதன் விரல் வளைந்திராமல் நீண்டு நேராக இருக்கும்.

இயற்கை விசேஷங்கள்:—வானம்பாடி காலப்பொழுதை அறிவிக்கும் கட்டியக்காரன்போல்வது. வசந்த காலத்தின் வருகையை உணர்த்துவது. இது வேறு பல பாடும் பறவைகளைப் போன்று மரத்தில் வாழ்வதில்லை. ஊர்க் குருவியையும் பருந்தையும் பார்க்கிலும் அது அதி உயரத்தில் பறந்தாலும், அதன் வாசஸ்தலம் தரையே. அதன் நகம் நீண்டு நேராய் வளர்ந்திருப்பதினாலேயே அது தன் விரல்களால் மரக்கொம்புகளைப் பற்றி உட்கார முடியாது. புலங்களிலும் புற்றரைகளிலும் அதி வேகமாய் ஓடுதற்கேற்ற விதமாக அதற்குக் கால்கள் அமைக்கப்பட்டுள. நிற்க.

பக்ஷி ஜாலங்களில் பெரும்பான்மைய விட்டு விட்டுப் பாடுவது வழக்கமாய் இருக்க, வானம்பாடி மட்டும் ஒருதரம் பாட ஆரம்பித்துவிட்டால் தன் பாட்டு முடிகிறவரை கொஞ்சமும் சலிப்பின்றி மூச்சுவிடாமற் பாடித் தீர்க்கும். வேறு சில விசேஷங்களும் இதனிடத்துண்டு: பாடும் பறவைகள் யாவும் யாதானும் ஓர் இடத்தில் தங்கியே பாட நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் பாடிக்கொண்டே உயரப் பறப்பதும் பறந்துகொண்டே பாடுவதும் வானம்பாடியின் இயற்கை.

இவ்வாறு செய்யும் பக்ஷி இஃது ஒன்றேதான். இக்குணம் பற்றியே இதற்கு வானம்பாடி என்ற பெயர் வழங்கியது போலும். இது இளைப்பாறும் நேரம் தவிர எப்பொழுதும் ஆகாயத்தில் பறந்து பாடிக்கொண்டே இருக்கும். பாடா தொழிந்த காலத்தில் மட்டும் அதனைத் தரையில் காணலாம்.

அது அம்பினும் விரைவாய் ஆகாயத்திற் கிளம்பி, 'நுட்பம் ஆய்குநர்க்கும் அதிசயம் பயப்ப' நொடிவரைப் பொழுதினில் மறையும். பின்பு அது கண்ணுக்குப் புலப்படாவிடினும் அது பாடுகிற சத்தம் மட்டும் நமது காதில் விழும். அதன் குரல் தீர்க்கமாயும், தெளிவாயும் தெவிட்டாத இன்பத்தை விளைக்கக் கூடியதாயு மிருக்கும். இப்பறவை ஆகாயத்தில் உயர உயர, அதன் இன்னிசை அதிகரித்துக்கொண்டும், கீழே இறங்கும்பொழுது அது வர வரக் குறைந்துகொண்டும் வரும். அது சூரிய அஸ்தமனம் வரை இடை இடையே பாடிக்கொண்டிருந்து "பாறு நெடுந்தேர் படுகடலிற் பாய்ந்" ததும் தனது பைம்புல் மனைபோய் அடையும். தனது இறகை உதிர்க்கும் பருவம் தவிர மற்றைப் பருவங்களில் எல்லாம் அது பாடும்.

கூடு:—இப்புள், பைம்புல்லேனும், பயிரேனும் வளம் பெற வளர்ந்த மைதானங்களிலும் புலங்களிலும் குதிரையின் காலடிபட்டு அழுந்திப் பள்ளமாயுள்ள குழிகளில் காய்ந்த சுள்ளிகளையும் புற்களையும் பரப்பிக் கூடு அமைத்து வாழும்

முட்டையும் குஞ்சும்:—வானம்பாடி வருஷத்திற்கு இரு முறை முட்டை இடும். அதன்பேறுகாலம் பெரும்பாலும் வைகாசி மாதமும் ஆடி அல்லது ஆவணி மாதமுமாகும். அது தடவைக்கு மூன்று முதல் ஆறு முட்டைகள் வரை

இடும். இம்முட்டைகள் கருமையும் பழுப்பும் கலந்த புள்ளிகள் நிறைந்தனவாய்ச் சாம்பல் நிறத்துடன் இருக்கும்.

பெண் குருவி அடைகாத்துக் கொண்டு இருக்கும் பொழுது ஆண்குருவி ஆகாயத்தில் பறந்து தனது இனிய குரலால் தனது காதலியைக் களிப்பிக்கவும், அதற்கு ஆகார முதலியன கொண்டு வந்து கொடுக்கவும் செய்யும். தாய்ப் பறவைகளுக்குத் தம் குஞ்சுகளிடத்தும், முட்டைகளிடத்தும் மிகப்பிரீதி. முட்டைகள் வெடித்துக் குஞ்சாகிப் பறந்து தம்மைத்தாமே காப்பாற்றிக்கொள்ளும்படியானசக்தி அவைகளுக்கு வரும் வரை ஆணும் பெண்ணும் அவற்றை அதி ஜாக்கிரதையாகப் பாதுகாக்கும். அவற்றிற்கேதேனும் ஆபத்து நேரிட்டால் அவைகள் தம்முயிரைக் கொடுத்தேனும் தம் குஞ்சுகளைக் காக்கச் சித்தமாய் இருக்கும்.

புலங்களில் இவை கூடு கட்டியிருக்குமிடம் சாதாரணமாக மனிதர்கள் கண்ணுக்குத் தென்படாது. ஆயினும், தமது வாசஸ் தலத்துக் கருகில் எங்கேனும் கதிர்கள் அறுக்கப் படுவதை வானம்பாடிகள் கண்டுகொண்டுவிட்டால் தக்ஷணமே அவை வேறு ஓர் சாவதானமான இடம்தேடிச் சென்று, திரும்பி வந்து, அவ்விடத்தில் தம் குஞ்சுகளைப் பத்திரமாய்ச் சேர்ப்பிக்கும்.

உணவு:—வானம் பாடியின் கோடைகால உணவு, பூச்சி புழுக்களே. மாரிகாலத்தில் அவை பூமியில் விதைக்கப்பட்டும், மானுஷக்கிருஷியின்றித் தாமாகவே முளைத்துமுள்ள பலவகைப்பட்ட விதைகளைத் தின்று தின்று பிழைக்கும்.

உபயோகங்கள்:—இஃதினிய குரலுடன் கூடியதால் இதன் பாட்டைக் கேட்டு ஆனந்திக்குமாறு அநேகர் இதனைப் பிடித்துக் கூட்டில் அடைத்துப் பட்சமாய் வளர்ப்பார்கள். இது அகப்படாத இடங்களில் இதற்கு எவ்வளவு விலை கொடுத்தும் பணக்காரர்கள் வாங்கத் தயாராயிருப்பார்கள்.

வானம்பாடியின் மாமிசம் மிக்க கொழுப்பும் உருசியும் உள்ளதாம். ஆதலின் அங்குள்ளோர் அதனைப் பிடிக்க வலை விரித்தும் பூமியிற் கண்ணிகள் வைத்தும் பலவகைப் பட்ட தானியங்களைத் தெளித்து வைத்து எங்கேனும் பதுங்கிக் கொண்டிருப்பார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் தீனியைக் கண்டுகொண்ட பறவைகள் அவற்றைத் தின்னும் பொருட்டுப் போய் உட்காரும். அப்பொழுது அவைகளில் எண்ணிறந்தவை அகப்பட்டுக் கொள்ளும். பல தம்மைத் தளையினின்றும் விடுவித்துக்கொள்ளச் செய்யும் முயற்சியில் சுருக்குண்டு சாகும். எஞ்சியவை தவித்துத் தத்தளித்துக் கொண்டிருக்கும்போதே குற்றுயிரோடு எடுபட்டுக் கூடையில் அடைக்கப்படும். லண்டன் சந்தையில் இவை பவுனுக்குப் பத்துப் பறவைகள் வீதம் விலையாகின்றனவாம். டன்ஸ்டேல் என்ற இடமே வானம்பாடி வியாபாரத்திற்குப் பேர்பெற்ற இடம். நிற்க.

படிப்பினை:—இது வானம் நோக்கிச் செல்லச் செல்ல மகிழ்ந்து பாடுவதையும் பூமி நோக்கி வர வர அப்பாடல் குறைவதையும் நோக்குங்கால், பரலோக வாழ்விற் பெருவிருப்பும் இகலோக வாழ்வில் அருவருப்பும் கொண்டுள்ள மெய்ஞ்ஞான நிலையை இவை குறிப்பிடுகின்றதாகத் தோற்றுகின்றது.

மனிதரது காதும் மனமும் களிக்கப்பாடும் கானரசம் மிகுந்த இப்பேதைப்புள்ளின் ஊனத்தின்றேனும் தமது ஊனைப் பெருக்கவேண்டுமென்றெண்ணும் பேதைமாக்கள் தாங்கள் இவற்றிற்குச் செய்யும் கொடுமையை அறிந்து நல் வழிப்படுவது எக்காலமோ!

கறையான்.

"வான் குருவியின் கூடு, வல்லரக்குத் தொல் கறையான், தேன், சிலம்பி, யாவருக்கும் செய்வரிதாம்" என்பது ஔவை வாக்கு. இங்ஙனம் அம்மூதாட்டியால் சிற்ப வன்மைக்காகவே பெரிதும் சிறப்பித்துக் கூறப்பட்ட ஜந்துக்களுள் கறையானைப்பற்றி நாம் கற்றும் கேட்டும், உற்றுப் பார்த்தும் உய்த்துணர்ந்த விஷயங்களை ஒருவாறு அறிவிக்க முயல்வாம்.

கறையானின் மறுபெயர்கள்:

கறையான், செல், சிதல், சிதலை முதலியன ஒரு பொருள் குறித்த பல சொற்களாகும்.

சிதலை செய்யும் சேதங்கள்:

நமது வீடுகளிலும் பிறவிடங்களிலும் கூட்டம் கூட்டமாக வசிக்கும் இச்சின்னஞ்சிறு ஜந்துக்கள் மிருதுவான

சரீரமும் மங்கிய வெண்ணிறமும் கொண்டவை. இவை அழிப்பதற்கென்றே அவதரித்தவை போலும். "இருப்புத் தூணையும் செல்லரித் திடுமோ?" என்ற பழமொழியினாலேயே இரும்பைத்தவிர வேறு எதையும் அழிக்கக் கூடிய சக்தி இவற்றிற்குண்டு என்பது வெள்ளிடை மலை போல் தெள்ளிதிற் புலப்படுமன்றோ? ஆயினும், "இருப்புத்தூண்" என்றதனால் அதனை ஒத்த கடின பதார்த்தங்களாகிய மற்ற லோகங்களும், கருங்கல்லும், பிறபொருள்களும் உபலட்சணத்தால் கொள்ளப்படல் ஒரு சிறிதும் தவறாக மாட்டாது. நிதானித்து யோசிப்போமாயின், இரும்பை இவை அரிக்காவிடினும், இரும்பிற்கும் இவற்றால் கேடு உண்டு என அறியலாகும். எங்ஙனமெனில், இரும்பின் மேல் இவை புற்றுக் கட்டுங்கால் ஈரம் பட்டு அதனால் இரும்பு துருப்பிடித்து உதிருமன்றோ?

இவை விசேஷமாய் அரித்துப் பாழ்படுத்துவது மரச்சாமான்களையே. இவை விளைவிக்கும் அநர்த்தத்திற்கு அளவேயில்லை. வெளிச்சத்திற்கு அஞ்சியோ, இருளையே விரும்பியோ, பல்லாயிரம் சத்துருக்களுக்கும் பயந்தோ, தம்மைப் பிறர் காண விரும்பாமையாலோ, இவ்வற்ப ஜந்துக்கள் தம்து சேஷ்டையைத் தாம் அழிக்கும் பொருட்குள் இருந்து மறைந்தே, எவ்வளவு சாதுரியத்துடனும் சுறுசுறுப்புடனும் செய்து முடிக்கின்றன! கடைசிவரை இவை விளைக்கும் கேடுகள் கண்ணுக்குப் புலப்படுவதில்லையே!

உதாரணமாக: இவை ஒரு மேஜையை எங்ஙனம் அரித்தழிக்கின்றனவெனப் பார்ப்போம்: பூமியினின்றும்

இவை எவரும் அறியாமல் மேஜையின் கால் ஒன்றைச் சிறிது அரித்து அதனுட்புகுந்து, வரவர அதனைத் துளைத் துக்கொண்டே போய்க் கடைசியில் முழு மேஜையையும் வெறுங் கூடுபோல் ஆக்கிவிடும். அங்ஙனம் கூடாக்கப்படினுங்கூடப் பார்வைக்கு அம்மேஜை முன்பு எப்பொழுதும் இருந்தது போலவே இருக்கும். ஆனால் சிறிது பார மேனும் அம்மேஜையிற் றாக்கிய பின்னரேதான் மேஜை கூடாக இருக்கும் விஷயம் தெரியவரும். எங்ஙனமெனில், பாரம் பட்ட மாத்திரத்தில் மேஜை பட படவென நொறுங்கி உட்காரும்.

இவ்வாறு எத்துணை ஆயிரம் மரங்கள், எத்துணை ஆயிரம் கப்பல்கள், எத்துணை ஆயிரம் வீடுகள் இதன் சேஷ்டைக்கு உள்ளாகிப் பயனற்றுப் பாழாப்போயின! எமது நண்பர் ஒருவர் சொல்லியபடி "தமக்குப் பின் வருபவர்க்கென்று எவ்வளவோ வருந்திப் பாடுபட்டு ஊண் உறக்கங்களை ஒழித்துக் காடுகளிலும் மலைகளிலும் இருந்து, கடினமான ஏரைப்பிடித்துக் கற்பாறையில் உழுவது போலக் கட்டைவிரல் நுனியில் இருப்பெழுத்தாணிகளைச் சாய்த்து, ஓலை ஓலையாகக் கைம்மாறு ஒரு சிறிதும் கருதாது லோகோபகாரமாகவே எழுதி, தமது உயிரினும் மேலாக நமது பெரியோர்கள் காப்பாற்றிய. அளவற்ற சுவடிகள், இருந்த இடங்கூடத் தெரியாமற் போய்விட்டனவே" அவைகள் யாவும் யாங்குச் சென்றன? ஆ! ஆ!! கடலுக்கும் தீக்கும் கொடுங்கோன்மைக்கும் போனவை போக, எஞ்சியவை, சிதலைக் கன்றே இரையாய்விட்டன? இஃதென்ன அதிசயம்? தென் அமெரிகா முழுதிலுமே ஐம்பது

வருஷங்களுக்கு முற்பட்ட புத்தகங்கள் காண்பதரிது என்று ஹம்போல்ட் பண்டிதர் கூறுகின்றாரெனில், ஆங்கு இவை செய்துள்ள நாசம் இவ்வள வவ்வளவு என நாமோ நவிலத் திறமுடையேம்?

"கண்ணைக்கெடுத்த தெய்வம் மதியைக் கொடுத்துளது" என்ற முதுமொழிக் கேற்பப் பிறவிக் குருடாகிய இவற்றிற்கு, எல்லாம் வல்ல இறைவன் குசைநுனி யதனினும் கூரிய மதியினைக் கொடுத்திருக்கின்றார் என்றே நாம் கொள்ளவேண்டியிருக்கிறது: ஏனெனில், இவை நெடும் பெரும் உத்திரங்களை யெலாம் அழிக்குங்கால் மதியினையாய் முழு உத்திரத்தையும் அரித்துவிடாமல், பாரத்தைத்தாங்குவதற்கு எவ்வளவு பலம் அவ்வுத்திரங்கள் கொண்டிருக்க வேண்டுமோ, அவ்வளவு பலமான பாகத்தைச் சேதியாமல் விட்டு, மிச்ச பாகத்தையே அரிக்கும். இதற்குக் காரணம் அறிந்துகொள்ளக் கஷ்டப்படவேண்டாம்: 'மடி கொன்று பால்கொளல்' போலப் பேராசையென்னும் பேயால் பீடிக்கப் பட்டு முழு உத்திரத்தையும் இவை அரித்துவிடுமாயின், உத்திரம் விழுவதோடு, அவற்றால் தாங்கப்பெற்ற வீட்டின் மேற்புறமே இடிந்து தபகுபலாய்த் தம்மேலேயே விழுமென்றும், அங்ஙனம் விழுந்தால் தாம் நசுங்கிச் சாகவேண்டி வருமென்றும், இவை எவ்வாறோ நன்றாய் அறிந்திருக்கின்றன. ஆனால், முழு உத்திரத்தையும் அரிக்கவேண்டியது அத்யாவசியம் என இவைகட்குப்படின், சில கறையான்கள் அவ்வுத்திரத்தின் ஓர் பாகத்தை அரித்தோய்ந்தவுடன், வேறுசில, மண்ணுங் களியும் கல்லும் கலந்து, ஓர் வகைச்சாந்து செய்து, அதனை அந்த உத்திர அணுக்கள் இருந்த இடத்தில் பூசும்.

இச்சாந்து காய்ந்து இறுகியவுடன் வேறுபாகம் அரிக்கப் படும். அப்பாகமும் கூடிய சீக்கிரத்தில் சாந்தினால் இவ் வாறே நிரம்பும். இங்ஙனம் உத்திரம் முழுதும் மாத்திற்குப் பதிலாகக் கறையானின் புற்று மண்ணினாலேயே ஆகிவிடும். மாத்தினும் மிக்கப் பலங்கொண்டு நின்று கட்டிடத்தைத் தாங்கிக் கொடுக்கக்கூடிய உறுதி இச்சாந்திற்கு உண்டு.

ஐரோப்பா கண்டத்தில், ஸ்பெயின், வியன்னா, பிரான்ஸ் முதலிய இடங்களிலும், ஆசியாவில், ஸிலோன், கீழ் இந்திய தீவுகள், சீனா, முதலிய இடங்களிலும், அமெரிகாவில், பிரேஜில் முதலிய இடங்களிலும், ஆபிரிகாவில், ஈஜிப்ட், ஸூடான், ஸெனிகல், காம்பியா முதலிய இடங்களிலும் இறுகாறும் இவை செய்துவரும் தீங்கும் நஷ்டமும் கணக் கிட்டுக் கூறமுடியா. ஆதலால் "சிறிய பகையெனினும் ஓம்புக; தேற்றார் பெரிதும் பிழைபாடு உடையர்" என்பது நாம் கேவலமாக நினைக்கும் இவ்வற்ப ஜந்துக்கள் சம்பந்தப் பட்ட மட்டில் மிகச் சிந்திக்கத் தக்கதன்றோ? நிற்க.

"உண்டு குணமிங்கொருவர்க் கெனினும், கீழ் கொண்டு புகல்வதவர் குற்றமே" ஆதலால், அவற்றின் நாசத் தொழிலைப்பற்றி நவின்றதோடு நில்லாமல், சிற்பநூல் வல்லுநரும் மூக்கின்மேல் விரல் வைத்து அதிசயிக்கத் தக்க அவற்றின் உறைவிட அமைப்பைப் பற்றி உரைக்கப் புகுவாம்.

கறையான் புற்று:

கறையான்கள் களி, கல், காய்ந்துவற்றிய மரம், செடி, கொடி முதலியவற்றைப் பிசு பிசுப்போடு கூடியதும், ஒட்டுந் தன்மையுள்ளதுமான தம் உமிழ் நீருடன் கலந்து பிசைந்து,

ஒரு வகைச் சாந்து உண்டாக்கி, தாம் இருந்து வாழ வீடு அமைத்துக் கொள்ளும். இவ்வாறு அமைக்கப்பெறும் வீட்டையே நாம் "கறையான் புற்று" என்கிறோம். இப்புற்றுக்கள் அநேகமாக நனிகுவிந்தே இருக்கும். பாரவண்டிகள் தம் மீது ஏறிச் சென்றாலும்,யானையே ஏறி மிதித்தாலும் கொஞ்சமேனும் தளர்ச்சியுற்று உட்கார்ந்து போகாவென்றால், இப் புற்றுக்களின் அமைப்பையும் உறுதியையும் பற்றிப் பல சொல்வானேன்?

ஆரம்பத்தில் புற்று அதிகச் சிறிதாகவே அமைக்கப் பெறும். அதன் உயரம் அப்பொழுது ஒரு அடிக்குமேல் இராது. ஆயினும், கறையான்கள் பல்கப் பல்க, ஆவசியகத்திற்கேற்ப, அப்போதைக் கப்போது, இடமும் விசாலித்தெழுப்பப் படும். இவ்வாறு இருபது அல்லது 25 அடி உயரம் கூடப் புற்றுக்கள் கிளம்புவதுண்டு. ஸாமர்ஸேட்டில் புற்றுக் காட்சிக்குப் பேர்போன இடம் ஒன்று உளது. கடலினின்றும் அதனைக் கண்ணுறின், அதன் விஸ்தீரணம் சுமார் ஒன்று அல்லது ஒன்றறை மைல் போல் இருப்பது தெரியும். ஆங்கு, ஆறு அடி முதல் 13 அடி கொண்ட கூர்முனைக்கோபுரங்கள்போல் புற்றுக்கள் பல உள. இதனினும் அதியற்புதமான காட்சியினை ஆபிரிகா கண்டத்தின் மேற்குப் பாகத்தில் உள்ள ஸேனிகல் என்ற ஊரில் காணலாகும். அங்கு 20 அடி உயரமுள்ள புற்றுக்கள் பலவுள என்றும், அவை தூரத்தில் இருந்து பார்ப்போர்க்கு மனிதர் வசிக்கும் மனைகள் போன்றும்,மாளிகை போன்றுமே இருக்கின்றனவென்றும், முன்பு இவற்றைப் பார்த்திராதாரும், இவற்றைப்பற்றியே கேட்டிராதாரும், இவையாவும் வீடுகள்

என்றே எண்ணி ஆங்குச் சென்று ஏமாந்தும் வழிதப்பியும் போய்த் திண்டாடி யிருக்கின்றார்களென்றும் தெரியவருகிறது.

நாம் முன்பு கூறியுள்ளபடி கடினமான களிச்சாந்தினால் ஆக்கப்பட்டிருக்கும் இப்புற்றின் புறப்பாகம், மழை, பனி, காற்று முதலியவற்றால் கேடுறாமலும், சாமானிய சத்துருக்களின் தாக்கம் முதலிய பலவித இடையூறுகளுக்கும் எளிதில் இடம் கொடாமலும், மிக்க வன்மையும் வனப்பும் வாய்ந்திருக்கும். வெளிப்பார்வைக்குப் புற்றுக்கள் யாவும் ஒன்றைப்போல் ஒன்றிராமல் பல் வேறு வகைப்பட்டதாகவே தோன்றும். சில குவிந்த வடிவும், வேறு சில தூண் உருவும் கொண்டன.

கறையான்கள் அடுத்தடுத்துப் பல கூடுகள் அல்லது திட்டுக்கள் எழுப்பும். ஒரு கூட்டிலிருந்து மற்றொரு கூட்டிற்குப் போக்கு வரவு முதலியன செய்யவும், சுவாசிக்கப் போதுமான காற்று தமக்குக் கிடைக்கவும், இவை ஒவ்வொரு புற்றிற்கும் இடையில் "தரைக்கீழ்ப் பாதைகள்" (Tunnels) அமைக்கும். அன்றியும் தாரை தாரையாகப் பொழிந்து தீர்க்கும் பெருமழையானது தங்கித் தமது கூட்டைக் கரைத்து விடா வண்ணம், ஜலம் உடனுக் குடனேயே ஓடி பூமிக்கடியில் செல்லுமாறு, இவை முன்னுக்கு முன்னாகவே பல சிறு வாய்க்கால்களும் கழிகால்களும் அமைத்து வைத்திருக்கும். நிற்க.

கூர்நுனிக் கோபுரம் (Pyramid) போன்ற இப்புற்றில் காணப்படும் பல்லாயிரம் அறைகளும், சிற்றறைகளும்,

ஆகார விடுதிகளும், போஷண சாலைகளும், காவற் கறையான்களாகிய சிப்பாய்களின் வாசஸ்தலமும், பாலங்களும், பிராகாரங்களும், பாதைகளும், படிக்கட்டுகளும், நிலவறைகளும், தரைக்கீழ்ப் பாதைகளும், மாடங்களும், வில்மச்சு மண்டபங்களும், சபாமண்டபங்களுமே, சிதலைகளின் சிற்ப வன்மையையும், மதிநுட்பத்தையும் முன்யோசனையையும் சிறப்பித்து எடுத்தோதிப் பறைசாற்றுவிக்கும்.

அரசமாளிகை முதலியன:

இவ் வதியற்புதமான கட்டிடத்தின் மத்தியில் அபாயம் என்பது ஒரு சிறிதும் எளிதில் அணுகக்கூடாத ஓர் இடத்தில் அதி உன்னதமான ஓர் உறையுள் உண்டு. இது ஒரு கஜ நீளமும் ஒன்றரை அடி அகலமுமாக இருக்கும். இதுவே அரச அரசியரது இருக்கை. இது "ராஜமாளிகை" யாயினும் இதனை அரசியின் காராக்ருஹம் அதாவது, அது அடைபட்டுள்ள சிறைச்சாலை என்றே சொல்வோம். நாம் இப்படிக் கூறுவதால் கறையான்கள் நம்மேற் கடுங்கோபம் கொள்ளுமோ வென அஞ்சுகின்றோம். ஆயினும் அவை நாம் அங்ஙனம் கூறுதல் தவறு என்பதற்குத் தக்க காரணம் காட்டிவிடுமாயின் தடையின்றி அவைபால் மன்னிப்புக்கேட்போம். ராஜமாளிகை சிறைச்சாலையே ஆகும் விதம் நாம் இனிப் பிறிதோரிடத்தில் அரசியைப்பற்றி சொல்லுங்கால் அறிவிப்போம். நிற்க.

இவ்வரச மாளிகையைச்சுற்றிப் போஷணசாலை (Nurseries) இருக்கும். இதில் கறையான் முட்டைகளும் உருப்பெறுக் கிருமிகளும் நிரம்பி இருக்கும். இராணியின்

பக்கத்தில் இது இருக்தல் இன்றியமையாத தன்றோ? எனெனில், அப்பொழுதுதானே, அரசியின் வேலைக்காரர் களாகிய சிறு கறையான்கள் அதன் முட்டைகளை எளிதில் உடனுக்குடனேயே எடுத்துச் சேர்த்துப் பத்திரப்படுத்தச் சௌகரியமாக இருக்கும். இப்போஷணசாலை பிசினோடு சேர்ந்த மரத்தூளாலேயே ஆக்கப்பட்டிருக்கும். இவ் வறை யைச் சுற்றிலும் அரசிக்குத் தொண்டு செய்ய அதனது பரிவாரங்களும் பணிவிடையாளர்களும் இருக்க இடம் கட் டப்பட் டிருக்கும். இதற்கும் அப்பால் இவ்வறையைச் சுற் றிலும் களியினாலேயே கட்டப்பட்ட 'பண்டசாலை'யின் அமைப்பு. இதில் பல்வகைப் பிசின்கள், குங்கிலியம், பட் டுப்போன செடிகளின் சத்து, குறுநொய், செடிகளின் வித் துக்கள், பழங்கள், மரச் சக்கைகள், தூள்கள் முதலியவை நிரம்பி இருக்கும். இவ்வறைகளுக்கும் அப்பால் புற்றைக் காவல் செய்யும் சிப்பாய்க் கறையான்களின் உறையுள். அறை கள் ஒன்றிலிருந்து ஒன்றிற்கு வர, அநேக வாயில்கள் அமைக்கப்பட்டுள. முற்கூறிய அறைகளைத்தவிர ஒவ்வொரு புற்றிலும் கறையான்களின் "ஆலோசனை சபை" கூடும் பேரறை ஒன்று உளது. இவ்வறைக்கும் பல கூடுகளி லின்றும் கறையான்கள் வர மார்க்கம் உண்டு. இப்பேரறை சபாமண்டபமாய் இருப்பதுடன், காற்று உலாவும் பெருவாயி லாகவும் உதவும். நிற்க.

ஐவகைக் கறையான்கள்:

இதுகாறும் புற்றைப்பற்றிப் புகழ்ந்து கூறிய நாம், இனி அப்புற்றில் வசிக்கும் பிராணிகளைப்பற்றிச் சிறிது கூறத் தொடங்குவாம். கறையான்கள் பலவகைப் படும்:

அவற்றுள் முக்கியமானவை அரசன், அரசி, ஈசெல்கள், சிப்பாய்கள், சிற்பிகள். இவற்றில் ஒவ்வொன்றிற்கும் தொழில் வெவ்வேறு. ஒன்று செய்யும் வேலே மற்றென்று செய்யாது.

இனி, நாம் கூறிய ஐவகைக் கறையான்களின் செய்தொழில்களைப் பற்றியும் அவற்றின் சம்பந்தமான வேறு விஷயங்களையும் இயன்றவாறு சுருங்கச் சொல்வாம்.

அரசனும் அரசியும்:

அரசக் கறையான் அதிகச் சுறுசுறுப்புள்ளது. என்ருலும், அது சிறிதும் தைரியமற்றது. யாரேனும் புற்றினைச் சிறிது பொத்து விடுவாராயின், தயாராகத் தப்பியோட முன்னிருப்பது இதுவே. ஓட வாய்க்காவிடினும் புற்றில் எங்கேயாவது மறைவிடம் பார்த்து அதில் ஒளிந்து கொள்ளும். இதன் அதிமுக்கியவேலை, நன்ருய் விலாப்புடைக்க உண்டு, அரசிக்கு உதவியாக அதனுடன் இருந்து, சந்ததி அபிவிருத்தி செய்வதற்காவன புரிவதே. வேறு எக்கருமமும் இது புரிவதில்லை. நிற்க.

புற்றுவாசிகள் அனைத்தினும் சிறந்ததாகத் தமது அரசியையே கறையான்கள் கருதும். இவற்றின் முழுவாழ்க்கையுமே அரசியின் இருப்பைப் பொறுத்துள்ளது. ஆதலின் அதற்கு மயிரிழையாவது தீங்கு சம்பவியாமல் சிப்பாய்களும் சிற்பிகளும் அதனைச் சர்வ ஜாக்கிரதையுடன் போற்றிவளர்க்கும். உள்ளபடியே, அரசமாளிகை ஒன்றுமட்டும் புற்றினின்றும் எடுபடுமாயின், அப்புற்றில் உள்ள கறையான்கள் யாவும் சிதைந்து கலேந்து பல திக்குகளிலும் ஓடிச் சாகும்; ஆனல், அரசமாளிகை ஒன்றைமட்டும் வைத்துவிட்டுப் புற்

றைப் பூராவாக அழித்துவிட்டாலும்கூட அதனை ஒரு பிரமாதகாரியமாகச் செறித் தப்பிய சிற்சிகள் சிறிதும் எண்ணு. புற்று, இருந்தாற் போலிருந்து முன்பு எங்ஙனமிருந்ததோ அங்ஙனமே, கூடிய சீக்கிரத்தில் குவிந்துவிடும்.

சிலர் ஒரு கேள்வி கேட்கலாம். அதாவது:—"அரசி சிரஞ்சீவி யன்றே? என்றைக்காயினும் அது இறக்கத்தானே செய்யும்? அது இறப்பின் இப்பொழுது கூறப்பட்டபடி அதன் பிரஜைகள் யாவும் இறக்கின்றனவா?" என்பதே. இக்கேள்விக்கு விடை இதுவே:—"அதிமதி நுட்பம் வாய்ந்த இவ்வற்ப ஜந்துக்கள் தமக்குப்பின்னால் நேரிடக்கூடிய விபத்தினை முன்னுக்கு முன்னடியே எதிர்பார்த்து, தமக்கு இனிமேல் அரசியாமாறு, பெண்கறையான்கள் சிலவற்றைப் பிடித்து, அரசமாளிகை போன்ற வேறு சில அறைகளில், அவற்றைத் தனித்தனி அடைத்துக் கொழுக்கவைத்திருக்கும். அரசி இறந்தவுடன் இவற்றில் ஒன்றுக்குப் பட்டம் கிடைத்துவிடும். ஆதலால் கறையான்கள் தேனீக்களைப்போன்று, அரசியே இல்லாவிடில்மட்டும் சிதைந்து அழியும் என்று நாம் கொள்ளவேண்டுமேயன்றி, இன்ன அரசி இல்லாவிடில் இறந்துபோம் என்று எண்ணல் தவறு."

அரசனும் அரசியும் "அரசமாளிகை"யில் அநேகமாய் என்றென்றும் இணைபிரியா திருக்கும். இம் மாளிகையை அரசியின் காராக்ருகம் (காவற்கூடம்) என்று சொல்லலாம் என்றேம். இதற்குக் காரணம் ஈங்கெடுத்துக் கூறுவாம்: இவ்வறையினுள், ஆரம்பத்தில் சிறிதாக இருக்கும்பொழுதே உய்க்கப்பெற்ற அரசியானது, முட்டையிடும் பருவம் வந்தவுடன் வைகலும் பெரிதாகிச் சிறு கறையான்களைக் காட்டி

லும் (அல்லது தான் முன்பிருந்ததைவிட) 3000 பங்கு பருமனும் கனமும் உடையதாகிவிடும். அது அங்கிருந்து வளரப்போதுமான விசாலத்துடன் ஆரம்பத்திற்றானேயோ, அல்லது நாள்பட நாள்படவோ, அறை அமைக்கப்பட்டிருப்பினும், வெளிச்செல்லும் துவாரம் மட்டும் வெகு சிறிதாகவே ஆக்கப்பட்டிருக்கும். இத்துவாரம் சின்னஞ்சிறு கறையான்கள் தடையேதுமின்றித் தம் இராணியைப் போஷிக்க உட்செல்லப் போதுமான அளவே இருக்கும். ஆதலால் பென்னம்பெரிய இராணி தனது அந்திகாலம் மட்டும் அவ்வறைக்குள்ளேயே சுகஜீவியாக வாழ்ந்து அங்கேயே பிராணனை விடவேண்டியது தான்.

இவ்வாசமாளிகை வெளிப்பார்வைக்கு வெறும் மண்ணாங்கட்டி போன்றே இருக்கும். வேண்டுமென்றே இது சிறு கறையான்களாகிய சிற்பிகளால் இவ்வாறு அமைக்கப்பட்டுளதேயன்றி வேறன்று. இதற்குக் காரணம் யாதெனில், தமது முழுப்பிராணனையும் இராணியின் பேரிலேயே இவை வைத்திருக்கின்றனவாதலின், தமது புற்றைக் கலைக்கும் மானிடராவது அல்லது மற்றப் பிராணிகளாவது இது வெறும் மண்ணாங்கட்டியென்றே எண்ணி அதில் உறையும் அரசியைத் தொந்திரவு செய்யாதிருக்கட்டும் என்ற யோசனையினாலேயே என்க. ஆனால், எதிலும் தலையிட்டு இடரிழைத்து வரும் மதியூகியாகிய மனிதனை இவை ஏமாற்ற எண்ணுவது வீண். ஏனெனில், பண்டசாலையையும் போஷணசாலையையும் பார்த்தமாத்திரத்திலேயே அவற்றிற்கு நடுநாயகமாக விளங்கும் இம்மண்ணாங்கட்டி சாமானிய மண்ணாங்கட்டியன்று என்றும், அது அரச அரசியரது இருக்கையே என்றும் அவன் எளிதில் கண்டுகொள்வான். நிற்க.

விவாகமுறையும் சந்ததி விருத்தியும்:

தேனீக்களைப்போல் இவை ஆணும் பெண்ணும் கூட்டினின்றும் வெளிக்கிளம்பிப் பிறர் காணாது ஆகாயத்திற் கூடிக் கூடு புகுவதில்லை. ஏனெனில், இவை இறகு உதிர்த்த பின்னரே சிறு கறையான்களால் வெகு சிரமத்துடன் தேடிப் பிடித்துக்கொண்டு போகப்பட்டு அரசனும் அரசியும் ஆகின்றன. அன்றியும் ஆணுக்கு ஜநநேந்திரியம் போது மான நீளமில்லாமையால், பெண்கறையான் ஆணுடன் பறந்து செல்லுகையில் சேர்ந்து கருத்தரிக்க முடியாது. ஆதலால், அவைகளுக்கு, ராஜமாளிகையில் அடைக்கப் பட்ட பின்னரே சம்பந்தம் ஏற்படும் என்றுரைப்பர் ஒரு சாரார். பிறிதொரு சாராரோ, "ஆண், பெண் ணுடன் சேரவேண்டியது அனுவசியம். சேரவும் முடி யாது. அது பக்கத்தில் இருந்தால் மட்டுமே போதும். அரசி தானாகவே கருத் தரித்துவிடும்" என்பர். இராணி தன் துணையுடன் சேர்ந்து கர்ப்பமுற்றாலும் சரி, அல்லது சேரா மலே கருத்தரித்தாலும் சரி; அது 24 மணி நேரத்தில் சுமார் 80,000 முட்டைகள் இட்டுத் தள்ளும். இது இவ் வாறு முட்டையிட யிட வேலைக்காரச் சிறு கறையான்கள் ராஜமாளிகையை அடுத்துள்ள போஷணசாலையில் இவற்றை உடனுக்குடனே எடுத்து வெகு சாவதானமாக வைக்கும். அம்முட்டைகள் சர்க்கரைத் தூளைப் போன்றாவது எறும்பு முட்டைகளைப் போன்றாவது இருக்கும்.

சேவகர்கள்:

சிற்பிகளாவது சிப்பாய்களாவது ஆகாமல் சோம்பித் திரிந்து, வயிறார உண்டு, பருத்துக் கொழுக்கும் கறையான்

களுக்கு நாளடைவில் இறகு முளைத்து விடும். இச்சிற குள்ள பெருங்கறையான்களையே ஈசெல்கள் என்கின்றோம்.

இவை பரந்த கண்ணும், நான் புள்ளிகள் வாய்ந்த இறகும் உடையன. ஆணும் பெண்ணும் தக்க பரிபக்குவம் அடைந்து முதிர்ந்தவுடன்,அரைக்கண மேனும் கூட்டில்இரா. இவை சோம்பி, இருக்கவிரும்பினும்கூடப் பொதுநன்மை யை உத்தேசித்துச் சிறு கறையான்கள், அவற்றை நிர்த் தாக்ஷண்யமாய் அப்புறப்படுத்தி விடும். இங்ஙனம் இவை செய்வதின் முக்கிய நோக்கம் இப்பெரிய கறையான்கள் புதி தாகப் பிறிதொரு கூட்டின் அரசர் அரசியராகிச் சந்ததி யபி விருத்தி செய்யவும், ஏற்கனவே தமது கூட்டில் பல்கிப் பருத்த சிறு கறையான்கள் நெருக்கத்தால் அவிந்து மடியா திருக்கவுமே. இன்ன சமயத்தில் ஈசெல்களை வெளிக்கிளப்ப வேண்டுமென்று சிறு கறையான்கள் இயற்கையாகவே உணரும். அக்காலத்துப் பார்க்கவேண்டும் அவற்றின் சுறு சுறுப்பை! அதி தீவிரமாய் அவை கூட்டில் உள்ள அறை களின் முகத்துவாரத்தைக் கடித்து உதறிப் பெரிதாக்கிப் பருத்துக்கொழுத்த ஈசெல்களைப் பாடு எதுவுமின்றி பறந் தோடச்செய்யும். அப்பொழுது அவ்வீசல்கள் ஒன்றன்பின் ஒன்றாக எழுந்து பூமியைப்பிளந்து ‘புலபுலெனக் கலகலென’ப் புற்றுனின்றும் கிளம்பும். மந்தகதியையுடைய இவற்றிற்குத் தம் சரீரத்தைத் தூக்கிக் கொண்டு பறக்கக்கூடப் போது மான பலம் இராது. இங்ஙனம் இவை புற்றினின்றும் எழு வது பெரும்பாலும் மாரிகாலத்து மாலைவேளைகளிலும், சிறு பான்மை வானம் மேகத்தால் மூடப்பட்டிருக்கும் காலை வேளைகளிலுமே.

எழுந்தும் என்ன? இவற்றிற்கு இம்மியேனும் சுக முண்டா? ஆயிரக்கணக்காக இவை இல்லங்கள் தோறும் ஏற்றப்பட்டிருக்கும் விளக்குகளில் விழுந்து விட்டில்போற் பொசுங்கியும், எண்ணெயில் விழுந்து மூச்சடைத்தும் சாகும். இது யாவரும் அறிந்ததன்றன்றோ? இவற்றின் வீழ்ச்சியால் எத்துணைதரம் விளக்குகள் அணைந்துள! அப்பொழுது நம்முள் யாவராயினும் 'ஐயோ! பாவம்' என்று இரங்கினர்க ளுண்டா? அவை பற்றி யெரிந்து நாசமுறுவதைக் கண்டும் நம்முள் எத்துணைபேர்கள் "நாசமாகப் போகிற ஈசெல் என்னபாடு படுத்துகிறது?" என்று வைது அதனை நொந்து ளோம்! இம்மட்டோ? விளக்கொன்றினால் தானா இதற்கு விபத்து? "அடைக்கலான் குருவிக்கு ஆயிரத்தெட்டு கண்டம்" என்பதுபோல் இது வெளிக்கிளம்பி வந்ததும் வாராத தற்கும் முன்பே எறும்பு, சிலந்தி, பாம்பு, பல்லி, பறவை, வௌவால், தவளை முதலியன இவற்றைப் பிடித்துண்ணத் தயாராகக் காத்திருக்கும். இவற்றினும் இதற்குக்கொடிய சத்துரு மனிதனே. மற்றச் சத்துருக்கள், கறையான்களும் ஈசெல்களும் வெளிவந்தவுடன் அவற்றைப் பிடித்துண்டு வயிற்றை நிரப்பிக்கொள்ளும். மனிதனோ அவற்றைத் தானே வெளிப்படுத்திப் பிடித்து உண்கின்றான். விளக்கிற்கும் எண்ணெய்க்கும் மற்றைப் பிராணிகளுக்கும் தப்பி, சிற்சிலவே பிழைக்கும். ஈசெல் இனத்தில் இவ்வாறு தப்பிப் பிழைத்த சிலவே அதிர்ஷ்டசாலிகள். இவை வெகு சிரமப் பட்டுச் சிறுகறையான்களால் தேடிக் கண்டெடுக்கப் பட்டதன் பேரில் புதிதாக அமைக்கப்பெறும் கூட்டின் அரச அரசியராகும்.

ஈசெல்கள் பறந்து வெளிக் கிளம்பியவுடன் இறகு உதிர்க்க ஆரம்பிக்கும். இவ்விறகு தானாக அவற்றின் இச்சா மாத்திரத்தில் விழுவதாகும். வேறு எப் பிராணிகளாலும் இது நிகழ்வதாகமாட்டாது. ஏனெனில், எவராயினும் பரீக்ஷார்த்தமா ஓர் ஈசெலைப் பிடித்து அதன் இறகைப் பிடுங்கிப்பார்ப்பாராயின், அவ்விறகுடன் அதன் சரீரத்தைப் போர்த்துள்ள சதையும் ஒரு சிறிது வரக் காண்பர்.

சிற்பிகள்:

வேலைக்காரத் தேனீக்கள் போன்றே இவையும் பரிபக்குவமடையாச் சிறுஜந்துக்கள். இவை பிறவிக் குருடு. புற்று வாசிகளில் பெரும்பான்மைய இவைகளே. இவற்றின் முக்கிய தொழில் புற்றெழுப்புவதும், அப்புற்றினுள், (நாம் முன்பு ஓர் இடத்தில் சவிஸ்தாரமாகக் கூறியுள்ளபடி) பல கட்டிடங்களும் அறைகளும் மூடுபாதைகளும் ஏனைய பிறவும் அமைப்பதும், அரச அரசியரையும், அவற்றின் முட்டைகளையும் உருப்பெறாக் கிருமிகளையும் குஞ்சுகளையும் காத்து, அவற்றிற்கு வேண்டிய ஆகாராதிகள் கொடுத்துப் பொன் போற் போற்றி வளர்ப்பதும், ஆகாராதிகள் தேடிச்சேர்ப்பதும், பக்குவமுற்றுப் பருத்துக்கொழுத்த ஈசெல்களைப் பறக்கவிடுவதும், புற்றுவாசிகளுக்குப் பிற சௌகரியங்கள் செய்து கொடுப்பதுமே. இவற்றிற்கு இராஜபக்தியும் விசுவாசமும் மிகுதி. மகத்தான விபத்திலும் இவை தம் அரசியை விட்டுப் பிரியா.

இவை கூர்மையான அலகு படைத்தவை. அவற்றின் உதவியாற்றான் இவை யாதானுமொன்றைப் பற்றிக் கறுவி அரிக்கும். தமது வலிமிக்க தலையையே காரணையாகவும் சுத்-

தியலாகவும் உளியாகவும் கொண்டு இவை எழுப்பும் புற்றுக்களின் சிற்பவன்மையை எவ்வளவு சிலாகித்துப் பேசினாலும் போதாது. இவற்றின் தொழிற் பிரிவினையையும் கூட்டுறவையும் என்னென்போம்! கட்டடம் கட்டும் காலையில் கறையான்கள் யாவும் ஒருமிக்கத் தளர்ச்சியும் சோர்வும் எய்தாவண்ணம் சில கறையான்கள் ஒருபொழுதும், வேறுசில ஒருபொழுதுமாக வேலைசெய்து, பரஸ்பரம் சிரமபரிகாரம் செய்துகொள்ளும். நல்ல கறை நீளமன்று. ஆதலின் இவற்றைப் பற்றிய விஷயங்களை இம்மட்டோடு நிறுத்திச் சிப்பாய்களைப் பற்றிச் சிறிது சொல்வாம்.

சிப்பாய்கள்:

இவைகளும் பிறவிக்குருடு. இவற்றிற்கும் இறகு இல்லையா. இவை கைம்மாறு கருதாது கடமையின்பொருட்டே கடமையைச்செய்து பொதுநன்மைக்காக உழைத்துப் பாடுபடுவன. இவ்வற்ப ஜந்துக்களின் வீரமும் சூரமும் தீரமும் வியக்கத் தக்கன. இவை சண்டை செய்ய வென்றே பிறந்தவை. ஆதலின் பிறக்கும்பொழுதே அவைகள் அடுபடைகளும் தடுபடைகளும் கொண்டு பிறந்துள. இவற்றிற்குப் பருத்த வலிமை வாய்ந்த தட்டைத்தலையும், கருக்கு வாய்ந்த நீண்ட அலகும் உள. தலைகள், கேடகமாகவும், கூரிய அலகுகள் ஈட்டியாகவும், சூலமாகவும், அரம்பமாகவும் உதவும். இவற்றின் உதவிகொண்டு தம் சொத்தையும் உறைவிடத்தையும், அதில் உள்ள ஜீவன்களையும் காக்கத் தோன்றிய இச்சிறு ஜந்துக்கள், தமது ஆருயிர் பிரியும் மட்டும் சத்துருக்களுடன் தம்மால் இயன்றவரைப் போராடியே தீரும். பாதுகாக்ஷ யின்றி இவற்றின் பக்கத்திற்செல்ல

ஆபிரிக நீக்ரோவரும் அஞ்சுவார்களாம். தம்மைத் துன் புறுத்தவரும் வெள்ளையர்களை இவை வெடுக்கெனப் பிடுங்கிக் களகளவென இரத்தம்பீறிட எத்துணையோ தடவைகளில் செய்தன. அதிலும் அரசமாளிகைக்குத் தீங்கு விளைவிப் போரை இவை படாத பாடெலாம் படுத்திவிடும்.

உறுதியான ஓர் மண்வெட்டிகொண்டாவது கட்டப் பாரைகொண்டாவது புற்றைச்சிறிது பொத்தால் நாம் முத லிற் காண்பது ஓர் சிப்பாயையே. வெட்டு சப்தம் கேட்ட மாத்திரத்தில், இச்சிப்பாய் வெகு தைரியமாய் வெளிக்கிளம்பி வந்து, புற்று இடிந்ததற்குக் காரணமும் சத்துருவின் தன் மை யின்னவென்பதும் நிதானித்து அறியும் பாவனையாக சிலநேரம் நின்று, பின்னர் உட்புகுந்து ஓர்வகை அச்சக் குறிப்பால் நிகழ்ந்த சம்பவங்களைப் புற்றுவாசிகளுக்கு அறி விக்கும். இதுவே சிப்பாய்களுக்கெல்லாம் தலைவன்போலும்! அச்சக்குறியைக் கேட்பது தான் தாமதம். ஆயிரக்கணக்கா கச் சிப்பாய்கள் வெளிக்கிளம்பும். அப்புறம் பார்க்கவேண் டும் அவற்றின் சண்டையை! இவற்றிற்குக் கண்கள் தெரியா. ஆதலால் இவை தம் சத்துருவைக் கண்டுகொள்ளக் கூடா மல் தமக்கெதிர்ப்படும் எதையும் கடக்கு கடக்கு எனக் கடித் துச் செல்ல ஆரம்பிக்கும். இவ்வாறு இவை கடிப்பதாலும், கட்டிடத்தையே கண்தெரியாமல் தாக்குவதாலும் "டிக் டிக்" என்று, கைக்கடியாரம் ஓடுவதால் உண்டாகும் ஒலியினும் அதிவிரைவாய்க் கேட்கும். இவ்வொலி, நுட்பமான செவிப் புலன் கொண்டார்க்கு வெகுதூரத்தில் இருக்கும்பொழுதே கேட்கும். சண்டையிடும்பொழுது அவற்றிற்கு உண்டாகும் கோபமும் வீராவேசமும் இவ்வளவவ்வளவெனக் கூறமுடி

யாது. செயங்கொண்டார் மட்டும் இவற்றின் சண்டையைக் கவனித்துப் பார்த்திருப்பாராயின் இவற்றின் போரைச் சிறப்பித்தும் ஓர் பாணிபாடியே இருப்பார்.

ஒரு முறை இவை தமது கூரிய வளைந்த இடுக்கி போன்ற அலகைத் திறந்து சிறிதேனும் சதையைக் கௌவி விடுமாயின், பிராணனே போனாலும் பிடித்த பிடியைவிடா. சிறிது சிறிதாக அவற்றின் உறுப்புக்களைக் கத்திகொண்டாவது கையினாலாவது அறுத்தறுத்துச் சித்திரவதையே செய்தாலும் உயிர் பிரியுமட்டும் பிடித்த பிடியை அவை விடுவதில்லையென்றால் அவற்றின் பிடிவாதத்தையும் மூர்க்கத்தையும் என்னென்று உரைப்பது? இவை சண்டையிடும் காலத்தில் மனிதச் சிப்பாய்கள் போன்றே அணிவகுத்து நின்று போர் தொடங்கும். முன்னணி அழிந்துபோமாயின், பின்னணி சென்று செத்தவைகளை அப்புறப்படுத்திக் காலியான இடத்தை நிரப்பும்.

ஆனால் தம் சத்துரு தாம் சென்று பற்றக்கூடாத தூரத்தில் ஓடித் தப்பினால் இவை அதற்குக்கேடு எதுவும் செய்யச் சிறிதும் முயலாமல், எதிரி தமக்கு அஞ்சி ஓடிவிட்டதாகவே எண்ணி மீண்டும் உட்புகும். சிறிதுநேரத்திற் கெல்லாம் சிற்பிகளிற் சில, அதி விரைவினில், சாந்து தயாரித்து உறுதிமிக்குடைய அதனைப்பழுதுற்ற பாகங்களிற் பூசவே, புற்று முன்போலாகிவிடும். நிற்க,

நாம் எடுத்துக்கொண்ட விஷயம் அநேகமாய் முடிவு பெற்றது. இனி, நாம் கூறப்போவன கூறாதுவிட்ட ஏனைய விஷயங்களும் விஷயச் சுருக்கமுமே.

விஷயச்சுருக்கமும் பிறவும்:

உஷ்ணப் பிரதேசங்களே கறையான்களின் உற்பத்தி ஸ்தானமும் உறைவிடமும் ஆகும். உதாரணமாக: பூமத்திய ரேகைக்கு அப்பாலும் இப்பாலும் அவற்றை அடுத்தும் உள்ள பாகங்களாகிய ஸிலோன், கீழ இந்திய தீவுகள், சீனு முதலியவும், ஸ்பெயின் வியன்னு பிரான்ஸ் முதலிய இடங்களும், ஸஹாரா என்னும் பெரும் பாலைவனத்தை அடுத்துள்ள ஸெனிகல், காம்பியா, ஸூடான், ஈஜிப்ட் முதலிய இடங்களும், ப்ரேஸில், ஈக்வடோர் முதலியவும் இவைகள் நாசத் தொழிலை நடத்தும் ஸ்தானமாகக் கண்டோம்.

தோற்றம்:

ஐவகைக் கறையான்களுள் அதிகப் பெரியது அரசி. அதிகச் சிறியவை சிப்பாய்களும் சிற்பியுமே. பருத்துக் கொழுத்த இறகுள்ள கறையான்களே ஈசெல்கள். இறகு உதிர்ந்த ஈசெலே அரசக் கறையான். ஒவ்வொன்றும் அதனதன் தொழிலுக் கேற்ப சரீரமும் உறுப்புக்களும் அமைக்கப்பெற்றது. ஈசெல்களுக்கு மட்டும் அடுபடைகளும் தடுபடைகளும் கிடையா. கறையான்கள் பிறவிக் குருடாயிருந்தும் ஈசெல் இனத்திற்குமட்டுமே நாள்பட்டு நேத்திரமும், இறகுகள் நான்கும் தோன்றுகின்றன. இவை அற்ப ஆயுளே கொண்டவை.

குணவிசேஷங்கள்:

தமக்கு இடரிழைக்கும் எதிரியை மூர்க்கத்துடன் எதிர்த்து ஜயமோ மரணமோ சிப்பாய்கள் அடையும். "முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா" என்ற முதுமொழிக்கு

"முதலேயும் சிதலேயும் மூர்க்கரும் ஒன்றே" என மாற்றிக் கூறலாம். சிற்பிகளாகட்டும், சிப்பாய்களாகட்டும், தம் அரசியைக் காக்கும் விஷயத்தில் தமதாருயிரையும் ஒரு பொருட்டாக எண்ணு. இவற்றிற்குள்ள ராஜபக்தியும் விசுவாசமும் இவற்றினும் எத்துணையோ மடங்கு தான் மதியூகியென மதிக்கும் மனிதனுக்கிருக்குமோ என்பது சந்தேகம். அவற்றின் கூட்டுறவும் தொழிற் பிரிவினையும் நாம் கூறுமலே விளங்கும்.

பழக்க வழக்கங்கள்:

இவை கூட்டம் கூட்டமாகச் சஞ்சரிப்பன. தரையின்மேல் புற்றுக்கள் எழுப்பி அதனைத் தம் வாசஸ்தானமாக இவை கொள்ளும். வெள்ளத்தால் நிச்சயமாகச் சேதம் நேரிடக் கூடிய இடங்களில் அவை தமது உறைவிடத்தைக் கணுக்கள் பல கொண்ட உறுதி வாய்ந்த மரக்கிளைகளின்மேல் பீப்பாய் வடிவமாகக் கட்டும். இவ்விடத்தில் இருந்து அடிமரத்தின் வழியாகப் புரைவைத்து தரைக்கீழ்ப் பாதைகள் அமைக்கும். சில்வகைச் செல்கள் மட்கிப் போன மரங்களிலும் வேறு சில பிலத் துவாரங்களிலும் வசிக்கும். பிற்கூறப்பட்ட இரு வகைச் செல்களுமே நாம் நகரங்களில் காண்பன. நம்முள் பலர் அறிந்தமட்டில் இவையே துணிகளேயும் புத்தகங்களேயும் மரச்சாமான்களேயும் மிகுதியும் நாசம் செய்வன. ஐவகைக் கறையான்களின் செய்தொழில்களும் வெவ்வேறு. சிற்பி செய்யவேண்டிய வேலேகளேச் சிப்பாய்களாவது சிப்பாய்களின் வேலேகளேச் சிற்பிகளாவது செய்யா: சிப்பாய்கள் சண்டையே செய்யும். சிற்பிகள் புற்றுக்கட்டிப் பொது நன்மைக்கு உழைக்கும். அரசனும் அரசியும் சந்ததிவிருத்தி செய்யும். இவையாவும் அடிக்கடித் தோல் உரிப்பதுண்டு.

இரை:

கறையான் காய்கனி கந்த மூலாதிகளை உண்பதோடு நில்லாமல் காய்ந்துவற்றிய மாமிசத்தையும், தோலையும், தம் மினத்தில் செத்துப்போனவற்றையும், தம் தேகத்தினின்றும் வெளிப்படுத்தும் கழிவு பதார்த்தங்களையும், தம் சரீரத்தினின்றும் தாம் உரிக்கும் மெல்லிய தோலையும் உண்டு வளரும். ஆகாரம் வேண்டும்போதெல்லாம், இவை, தமக்கு அருகில் உள்ள கறையான்களைத் தம் தும்பியால் மெதுவாகத் தாக்கும். உடனே, தாக்குண்ட கறையான்கள் தமது வாய்ப்புற மாகவாவது, பின்புற மாகவாவது, துளித் துளியாக ஏதோ சிலவற்றை வெளிப்படுத்த, பசியினால் வருந்தும் கறையான்கள் அதனை உண்ணும். வாய்ப்புறம் வருவது பின்புறம் வருவதினும் முற்றிலும் வேறுபட்டதென நாம் அறிவிக்காமலே யாவரும் தெரிந்துகொள்ளலாகும். ஆயினும், அவைகள் வாயினின்றும் வருவதைக் காட்டிலும் பின்புறத்தினின்றும் வெளிப்படுவதையே விரும்பி அதி ஆவலுடன் உண்ணும்.

உபயோகம்:

இது அசுத்த பதார்த்தங்களை உட்கொண்டு ஆகாயத்தைச் சுத்தப் படுத்துகிறது. மற்றப்படி இது மனிதர்க்கும் மற்றப் பிராணிகளுக்கும் முக்கியமாய்க் காடிக்கும் சிறந்த உணவாகும். மனிதர் நம் நாடுகளில் மாரிகாலத்தில் ஈசெல்களின் இருப்பிடத்தைக் கண்டுபிடித்து "கிலியோ" "கிலியோ" எனப் புற்றின் வாயிலில் வாயை வைத்துக் கீச்சுக் குரலாகக் கத்தி, அவற்றை வெளிவரச்செய்து உண்பர்.

நீகிரோவர் சிப்பாய்க் கறையான்களையும் பின்வரும் சூழ்ச்சியால் ஏமாற்றிப்பிடித்துண்பர்! அவர்கள் புற்றின் ஒரு பாகத்தைச் சர்வ ஜாக்கிரதையாய்ச் சிறிதே இடித்து, காலதாமதமின்றி, கொழுத்த கோரைத் தாளையாவது அல்லது சதைப் பற்றுள்ள வேறு எதையாவது புற்றுக்குள் நுழைப்பர். நுழைக்கவே, இத்தாளைத் தம் சத்துருவென எண்ணிச் சிப்பாய்க் கறையான்கள் வெகு மூர்க்கமாய்க் கௌவும். கௌவவே தாளைப் புற்றினின்றும் பிடுங்கித் தண்ணீருக்குள் அமிழ்த்திக் கறையான்களைக் கொல்வர்.

கறையானின் பெயர்க்குக் காரணம்:

ஒவ்வொரு வார்த்தைக்கும் தமது யுக்தியால் பொருள் கூறத் துணிந்து முற்பட்டிருக்கும் இக்காலத்தியவர் சிலர், "கறுவுந் தொழிலும், மாசுறுத்துவதிலும் வல்லதாதலின், "கறையான்" என்றும், செல்ல (அதாவது பொருள்கள் கெட)ச் செய்வதால், "சேல்" என்றும், குப்பை யாக்குவதால், "சிதல்" அல்லது "சிதலை" என்றும், செல்லுக்கு இறகு முளைத்து அது ஈயாகிப் பறத்தலால் "ஈ சேல்" என்றும், பூமியில் ஆழ்ந்து மறைந்து வசிப்பதால் "ஆழல்" என்றும், ஜனங்கள் தாம் உண்ணுமாறு அவற்றை ஊதி வெளிப்படுத்திப் பிடிப்பதால் "சிழ்க்கை" என்றும், கறையானுக்குப் பெயர் என்பர். இவர்களது பேச்சை நம்பியே, நாம் "ஈசல்" என்று சொல்லை "ஈசேல்" எனச் சரியாகவோ தவறாகவோ எழுதியுளேம். தவறாயின் அறிஞர் பொறுத்தருள்க.

கறையான் வராதபடி தடுக்கும் விதம்:

தம்பெயர்ப் பொருட் கேற்பப் பல விதத்திலும் பண்டங்களை நாசம் செய்து வரும் இச்சிறு பகையை வராதபடி தடுக்கவும் நிர்மூலம் பண்ணவும் சில வழிகளே கையாடப் பட்டுவருகின்றன:–(1) அடிக்கடி தார் அடித்தல் (2) தாமரை இலைகளைப் பரப்பி அதன்மேல் பொருள்களை வைத்தல் (3) வைட்ரோல்தான் என்னும் மர எண்ணெய் பூசல்

(4) காணுமிடங்களில் எல்லாம் கிரோஸின் ஆயில் என்னும் மண்ணெண்ணெயிட்டுக் கொல்லல். நிற்க.

படிப்பினைகள்:

சின்னஞ்சிறு கறையான்களின் சிற்பவன்மையும் முன் யோசனையும் சுறுசுறுப்பும் இராஜபக்தி விசுவாசமும் மனித ஜந்மம் எடுத்த ஒவ்வொருவனும் கண்டு அறிந்து வியக்கத் தக்கவைகளாய் இருப்பதுடன் அவை ஒவ்வொன்றும் ஒவ் வொருவராலும் பின்பற்றத்தக்கன. ஒற்றுமையும் கூட்டுற வும் கொண்ட இவ்வற்ப ஜெந்துக்களைப்பற்றித் தெரிந்து கொண்டதினின்றே ஈசுவர சிருஷ்டியில் பயனற்றதாவது நிஷ்பிரயோஜன மானதாவது மக்களறிவை விசாலிக்கக் கூடாததாவது எதுவும் கிடையாது என்று துணிந்து கூற லாம். ஆதலால் நாம் பிரதிதினமும் பார்த்துப்பார்த்து இருப் பதால் அற்பமானதென்றும், சாதாரணமானதென்றும், யா தானும் ஒன்று தோன்றினுற்கூட, சிறிது ஆழ்ந்து உற்று நோக்கின் முன்பு அதனைப்பற்றி யறிந்தே இராத பல அற் புதமான விஷயங்களைப் புதிது புதிதாக அறியலாகும். இவ் வாறு அறியப்பெற்றவை ஆராய்ச்சி மிக்குள்ள அறிஞர் களுக்கு ஆச்சரியத்தை விளைவிப்பதுடன் அவர்களது அறிவு விசாலத்திற்கும் மெய்ப்பொருள் உணர்ச்சிக்கும் ஏது வாகும். "ஆர் அறிவார் என்னு அநந்தமறை ஓலமிடும் பேரறிவே" உருவாக்கொண்ட கடவுளது சிருஷ்டிவன்மை யும் முன்யோசனையும் பேரன்பும் நுண்பொருள்களிடத்துக் காணப்படுவனபோல் பிரமாண்ட பொருள்களாகிய பனி நிரம்பிய பர்வதங்கள் ஆரவாரித்துப்பாயும் அருவிகள், முத லியனபால் விளங்குவதில்லை யென்னலாம். பிற்கூறப்பட்ட னவற்றுள் கடவுளுடைய மகிமையும் வல்லமையுமே பெரும் பாலும் காணப்படுவன. ஈசுவர சிருஷ்டியில் ஒவ்வொரு பொருளும் சிந்திப்பதற்காம் சில குறிப்புடையது. ஆதலின் சற்குணமுடையோர் சற்றும் பயனிலா அற்பப் பொருளி னும் அறநெறி காண்க.

மதனலீலையார்.

உலகத்தில் அரிய கல்வியும் பெரிய செல்வமும் ஒருங்கே வாய்ந்த ஆடவரையேனும் பெண்டிரையேனும் காண்டலரிது.

'இருவேறு உலகத்து இயற்கை: திருவேறு;
தெள்ளிய ராதலும் வேறு'

என்பது பொய்யா மொழி அன்றோ? இவ் இரு இலக்கணங்களும் நன்கமைந்த ஸ்திரீ புமான்களைத் தனித்தனிக் காண்டலே அரிதாயின், அவர்களை, ஒத்த கிழவனும் கிழத்தியுமாகவும், யாவரும் புகழும் மேவரும் சிறப்பினை உடையோராகவும், வாழக் காண்டல் எவ்வளவு அருமை!

ஆயினும், அமிழ்தினும் இனியசெந் தமிழ்மணம் கமழ்கிற மதுரை என்னும் மாநகர் தன்னை ஆண்டு வந்த பாண்டியர் குலமே இத்தகையோர் சிலரைப் பெறும்படியான பெரும்பேறு பெற்றுள்ளது. அவ்வாறு சிறந்தோங்கிய சிலருள், வரதுங்கராமபாண்டியனது ஆருயிர்த் துணைவியாகிய 'மதனலீலையார்' என்பவளது சரித்திரமே நாம் ஈண்டு எடுத்துக்கொண்ட விஷயமாகும். ஆனால் நாம் இங்குச் சொல்ல வேண்டியது ஒன்று உண்டு. புலவர் பெருமக்களின் ஜீவிய சரித்திரம் எழுதும் வழக்கம் நம்மவரிடத்தில் இல்லாமற் போன பெருங்குறையால் இச்சரித்திரம் எழுதுவதற்கும் போதுமான ஆதாரம் எவர்க்குமே நாளைவரைக் கிடைத்

இலது. ஆயினும் கர்ன பரம்பரையாகவும் என்னினும் கல்வி யறிவாதியவற்றில் சிறந்த பெரியோர்கள் மூலமாகவும் கேட்டு உணர்ந்த சிற்சில விஷயங்களையே ஈண்டுக் குறித் துளேன்:

நுண்ணிய அறிவும், திண்ணிய கற்பும் வாய்ந்த இந் நல்லிசைப் புலமை மெல்லியலாரது சிறப்பு, பின் வரும் விஷ யங்களால் விளங்கும்:—

இற்றைக்கு ஏறக்குறைய நானூற்றுச் சில்லறை வரு ஷங்கட்கு முன்னே, செந்தமிழ்ப் பாண்டிநாட்டின் தலைநக ராகிய மதுராபுரியில், சந்திர வம்சத்தவனாய் ஆண்டுவந்த பாண்டிய மன்னன், வரதுங்கம பாண்டியன் என்பவன். இவ னுக்கு அதிவீரராம பாண்டியன் என்ற ஓர் தம்பி உண்டு. சகோதரர்கள் இருவரும் நூலாராய்ச்சியும் தமிழ்ப் பாண்டித் தியமும் பெரிதுமுடையோர். ஆனால் இவர்களில் இளையோ னாகிய அதிவீரராமன், கற்றறிமூடனாய், வெய்யர், பதகர், பர தார விருப்பர், வீணர், கையர், கயவர், பொய்யர், புலையர் முதலிய பல கீழ்மக்களோடு சேர்ந்து தனது காலத்தைக் கழித்து வந்தான். இவன் தன் கௌரவத்திற்கு ஏற்றபடி இராமல் கண்டவருடன் சேர்ந்து ஈனமான காரியங்களைச் செய்து வந்ததனால்; இவனை யாவரும் *'பிள்ளைப்பாண்டியன்' எனக் கூறத் தலைப்பட்டார்கள். இவன் காமகலா ஞானத் தில் கைதேர்ந்தவன். ஆதலின், சாமுத்திரிகா லக்ஷணம் பூரணமாய் அமைந்த பெண்கள் தன் குலத்தில் எவ்வளவு சிரமப்பட்டுத் தேடியும் கிடையாமற் போனமையால், அவ்

* பிள்ளைப்பாண்டியன் - பிள்ளைக்குணமுள்ள (ஆனவயதிற்கு அடையாளமில்லாத) பாண்டியன்.

லக்ஷணம் யாவும் குறைவற வாய்ந்த சக்கிலியப்பெண் ஒருத்தியைக் கடிமணம் புரியலாயினன்.

தமையன் தன் தம்பியைச் சீர்திருத்த முயன்றும் முடியாமற்போகவே, தன் முகத்தில் என்றென்றும் விழியாதிருக்குமாறு அவனைத் தனது நாட்டினின்றும் ஓட்டிவிட்டான். துரத்துண்ட அதிவீரராமன் சில மூர்க்கர்களின் உதவியால் தற்காலம் 'தென்காசி' என வழங்கும் 'கொற்கை' என்னும் நாட்டைப்பிடித்து அதற்கு அரசனாகி, அழகும் கல்வியும் அமைந்த அவ் இழிகுலப் பெண்ணோடு இல்லறம் நடத்தி வருவானாயினான்.

அதிவீரராம பாண்டியன் தமிழ்ப் பாண்டித்யம் பெரிதுமுடையவனாயும், கல்விப்பிரியனாயு மிருந்ததால், பொழுது போக்காக, தன்போன்று சந்திர வம்சத்தில் தோன்றி, நிஷத புரியை ஆண்ட நள ராஜனது திவ்ய சரித்திரத்தை விருத்தப் பாவில் எழுதி முடித்து, அதற்கு 'நைடதம்' என்று பெயரிட்டான். தான் செய்த நூலின் சொல் நயம், பொருள் நயம், கற்பனை முதலியவற்றைக் கண்டு, தான் மகிழ்வெய்தியதோடு நில்லாமல், பற்பல தேசங்களினு முள்ள புலவர் பெருமக்களை வரவழைத்து, அவர்களுக்கும் தன் நூலைப் படித்துக் காட்டி அவர்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டான். அவன் தயவை எதிர்பார்த்த சிலர், 'நைடதம் புலவர்க்கு ஔடதம்' என்றனர். அவன் பரம துஷ்டனாகையால் அவனது தண்டனைக்கு அஞ்சியோரும் சிலருண்டு. ஆயினும், அவர்களுக்குத் தங்கள் மனச்சாட்சிக்கு விரோதமாக நூலைப்பற்றி நல்ல அபிப்பிராயம் கொடுக்க மனமே இல்லை. ஆதலின், அவர்கள் அரசனையும் தம்மை

யும் திருப்திப்படுத்திக் கொள்ளுமாறு அந்நூலின் நடை ஆரம்பம் முதற்கொண்டு கடைசிவரைக் 'கரும்பு போன்றே இருக்கிறது' எனக் கூறினர். இவற்றை எல்லாம் தன் காதாரக் கேட்ட அதிவீரராமன், உளம் பூரித்துத் தன்னைவிடச் சிறிதும் கல்வியில் தாழாத தன் தமையனுக்கும் ஓர் பிரதி அனுப்பி, அவனது அபிப்பிராயமும் வேண்டினான். அது வந்துசேர்ந்த சமயம் வரதுங்கன் இராஜாங்க விசாரணையில் தனது முழு கவனத்தையும் செலுத்திக்கொண்டிருந்த காலமாக இருந்தது. ஆதலின், அவன் தனது இன்னுயிர்த் தோழியாகிய மனைவி கையில் அதைக் கொடுத்து, அவளையே அதன் குணதோஷங்களைக கண்டறிந்து அதிவீரராமனுக்கு அறிவிக்குமாறு ஆக்ஞாபித்தான். அக் கற்பரசியும் அதனை ஆதியோடந்தமாகப் படித்து, "அதன் நடை வேட்டை நாய் நடை போன்றுள்ளது" என அறிவித்தாள். இவ் வபிப்பிராயம் பெற்ற அதிவீரராமனுக்குக் கோபத்தால் முகம் பொங்கியது. ஏனெனில், "கல்வி கேள்விகளில் தேர்ச்சிபெற்றவர்கள், 'நைஷதம் புலவர்க்கு ஔஷதம்' என்றும், அதன் நடை 'கரும்புபோன்றுளது' என்றும் கூறியிருக்க, கேவலம் பெண்ணாய்ப் பிறந்த ஒருத்தி 'வேட்டை நாய் போலிருக்கிறது' என துணிந்து சொல்லலாமா?" என்று நினைத்தான். தவிரவும், தான் அபிப்பிராயம் வேண்டியது தன் தமையனிடத்திருந்தே ஆதலால், தமையன் தன்னை அவமதிக்க வேண்டுமென்றே தன் மனைவியின் மூலமாகத் தன்னை அவமானப் படுத்தினான் எனக் கருதினான்.

இவ்விதமாக அவன் 'எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி' மனம் புழுங்கித் தன்னை அவமதித்தவனைத் தக்க

படி சிக்ஷிக்கக் கருதி நால்வகைப் படைகளுடனும் புறப்பட்டு வாதுங்கனது இராச்சியத்துட் பிரவேசித்து யுத்தபேரிகை முழக்கினன்.

அதிவீராமன் போர்க்கோலம் பூண்டு வந்திருக்கும் செய்தி வாதுங்கனுக்கு எட்டவே, அவன், தம்பிபால் ஓர் தூதனை விடுத்துப் போருக்குக் காரணம் கேட்டறிந்தனன். பிறகு அவன் தன் மனைவியை அழைத்து, "பெண்கள் நாயகமே! 'பெண்புத்தி பின்புத்தி' என்பதற்கேற்பக் காரியத்தைச் செய்து முடித்தனையே. முதலையும், மூர்க்கனும் கொண்டது விடாவே. நம்மிருவருக்கும் சம்பவிக்கும் அபாயத்தைக் கருதி இது யான் சொல்ல வரவில்லை. ஏனெனில், வெற்றியோ, தோல்வியோ இருதிறத்தாருக்கும் பொது. ஆயினும் இரு கக்ஷியினும் எவ்வளவு உயிர்ச்சேதம் நேரிடக்கூடும் என்பதை நினைக்குங்கால் என் மனம் வருந்துகின்றது. இதற்கு யாம் என் செய்வது" என்றனன்.

அதற்கு அவள், "அன்பே! யான் இச்சண்டைக்குக் காரணமாவது எப்படி? அதிவீராமன் வேண்டியது அபிப்பிராயமா? புகழ்ச்சியா? அவன் அபிப்பிராயமே விரும்பியதால் நானும் அபிப்பிராயமே கொடுத்தேன். இருக்கட்டும். இதற்காக வருந்தவேண்டாம். 'அறிவன் பகையேனும் அன்புசேர் நட்பாகும்.' கூடுமாயின், ஓர் உபாயத்தால் நேர் வழியிலேயே சண்டையை நிறுத்தப் பார்க்கிறேன்" எனக் கூறி, ஓர் ஏடும் எழுத்தாணியும் எடுத்து, "இருந்திருந்தும், ஒரு தாய் வயிற்றிற் பிறந்தும் பிராதத் துரோகிகளாய்ப் போய்விட்ட ஸூர்யபுத்திரனாகிட ஸுக்ரீவன், லங்காதிபதியான விபீஷணன், பஞ்சபாண்டவர்களில் ஒருவனாகிய அர்ச்

சனன் ஆகிய இம் மூவருடைய உதாரணத்தையுமா நீர் பின் பற்றவேண்டும்? தமையன் சொல்லை வேதவாக்காகக் கருதி நடந்துவந்த பரதனை அறியீரோ? ராமனும் பரதனும் யாவர்? உங்கள் இருவரையும்போல ஒரே தாய்வயற்றில் உதித்தவர்கள்கூட இல்லையே! மாற்றாந்தாய் வயிற்று மக்களன்றோ? அப்படி இருந்தும், அவர்களுடைய பரஸ்பர நேசம் எத்தன்மையது? நீரும் பரதனுடைய உதாரணத்தைப் பின்பற்றுவீரானால் நம் குலத்திற்கே எவ்வளவு பெருமை!" என்ற கருத்தை யடக்கி,

"செஞ்சுடரோன் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரிற் பார்த்தனையும் பாராதே—விஞ்சு
விரதமே பூண்டிந்த மேதினியை ஆண்ட
பரதனையும் ராமனையும் பார்"

என்ற ஓர் வெண்பா எழுதி அவனிடம் போக்கினளாம்.

அதிவீரராமன் அதை வாங்கிப் படித்து அதில் கூறியவற்றின் பொருளைச் சிந்திப்பானாயினன். சிறிது நேரத்திற்கெல்லாம் அவன் கைப்பிடித்த வாளாயுதம் அவனை அறியாமலே நழுவிக் கீழே விழுந்தது. இரண்டு கண்களினின்றும் நீர் ததும்பியது. அவன் தனது தகாத செய்கைக்காக அத்தியந்த விசனமடைந்து தனது சைந்யங்களைத் தக்ஷணமே தன் ஊர்போய்ச் சேரும்படி ஆக்ஞாபித்து, அண்ணன் அண்ணியாரைத் தரிசித்து, அவர்கள் திருவடிக்கமலங்களில் வீழ்ந்து, 'சிறியோர் செய்த சிறு பிழை எல்லாம் பெரியோராயிற் பொறுப்பது கடனே' என இரந்தனன்.

இது நடந்த சிலநாட்களுக்குப் பிறகு, அதிவீரராமன், “அண்ணா! தொல்லிசைப் பயனார் நல்லிசைப் புலவர்கட்கெல்லாம் கரும்பு போன்றிருக்கும் எனது நூலின் நடை, அண்ணியார்க்கு மட்டும் வேட்டைநாய் நடை போன்றிருப்பானேன்?” என விநயமாய்க் கேட்க, அவன், “உனது அண்ணியாரையே கேட்டுத் தெரிந்துகொள்” என்றான். அவனும் அவளை அப்படியே கேட்க, அவள், “வேட்டைநாய் வேட்டை பிடிக்கும்போது உள்ள சுறுசுறுப்பும், அது வேட்டை முடிந்து வீட்டுக்குத் திரும்பும்போதுள்ள சோர்வும், மந்தகதியும் நீர் அனுபவத்தில் கண்டறிந்திருப்பீரே” என்றாள். அதற்கவன், “ஆம்! ஆம்! அப்படிப்போல்—?” என்றான். “அப்படிப்போல் உமது நூல் நடையும் வேட்டைநாய் நடை போலவே ஆரம்பத்தில் குதூகலமாய்த்தான் ஓடுகிறது. ஆயினும் அதன் ஓட்டமெல்லாம் புனல் விளையாட்டுப் படலம் முடியும் மட்டே. காரணம் அறியக் கஷ்டம் சிறிதும் இல்லை. நீர் ஓர் சிற்றின்பப் பிரியர் என்பதை உமது நூலாலேயே வெளிப்படுத்திக் கொண்டீர். உமது நூல் உருவகவணி யாதிய லக்ஷணங்களாற் சிறந்ததேனும், சிற்றின்ப வர்ணனைகளே அக்காண்டம் வரை அதில் பெரும்பாலும் நிறைந்துள. எஞ்சிய காண்டங்களிலும் இத்தகைய விஷயத்தை உம்மால் கூடியவரை நுழைக்கத்தான் பார்த்தீர். ஆயினும் முடியவில்லை. ஆதலால் வெகு கஷ்டப்பட்டு வேண்டா வெறுப்பாகச் சிற்சில பாக்களைப் பாடி நூலை முடித்திருக்கின்றீர். யான் கூறியது உண்மைதானா?” என்றாள். இதைக் கேட்டவுடன் அவன் உத்தரம் சொல்லாது நின்று, சிறிது நேரத்திற்கெல்லாம், “உண்மையே. ஆயி

னும், புலவர் பெருமக்கள் ஏன் என் நூலின் நடை கரும்பு போன்றுள்ளது எனக் கூறினர் என்று எனக்குப் புலப்படவில்லை" என்றனன்.

அதற்கு அவள், "மைத்துனரே! அவர்கள் சொல்லியது வஞ்சகப் புகழ்ச்சியே யாகும். நீர் தமயனுக்கே அடங்காத் தறிதலையாதலின் அவர்கள் உமது ஆக்ஞைக்கு அஞ்சியே இவ்வாறு உரைத்திருக்கக் கூடும். ஆயினும் அவர்கள் வாக்கும் பொய்யாகாது. நீர் கூறிய புலவர்களும் யான் கொண்ட கருத்தே கொண்டவர்களே. எவ்வாறெனில், கரும்பு எப்படி ஆரம்பத்தில் அதிக இனிமையும் ருசியுமாயிருந்து கொழுந்தாடைப் பக்கம் போகப்போக இனிமை குறைந்துவிடுகிறதோ, அப்படியே, உமது நூலின் நடையும் ஆரம்பத்தில் இனிமையாயிருந்து கடைசியில் போகப் போக இனிமை குன்றியுள்ளதென இரகசியமாய் வெளிப்படுத்தினர். அன்றியும் கஷ்டப்பட்டுச் சாரத்தைக் கிரகிக்கவேண்டி யிருப்பதாலும், அதனைக் கரும்புக்கு அவர்களிற் சிலர் உவமித்து இருக்கலாம். இது உமக்குத் தெரியாமற் போயிற்றே" என்றாள்.

இதனைச் செவியுற்ற அதிவீரராமன் நாணித் தலைகவிழ்ந்து வாயடங்கி நிற்க, அவனுடைய அண்ணியார், இதுதான் அவனைத்திருத்தி நல்வழிப் படுத்தத் தக்க சமயம் எனத் தேர்ந்து,அவனை நோக்கி, மைத்துனரே! நான் ஒன்று தெரியப்படுத்திக் கொள்ளுகிறேன். யான் புகல்வது கடுமொழிபோற் காணப்படினும் இன்சொல் எனவே ஏற்குமாறு வேண்டுகிறேன். வேறொன்றும் இல்லை. உமது படிப்பெல்லாம் விழலுக் கிறைத்த நீர்போல் வீணாயிற்றே

என்று விசனப்படுகிறேன். 'கற்பதனு லாயபயன்வாலறிவன் நற்றாள் தொழல்' அன்றோ? உமது கல்வித் திறத்தை இதுபோன்ற சிற்றின்பா திகளிற் காட்டாமற் பேரின்ப விஷயமாய் யாதேனும் ஓர் நூல் செய்வதில் உபயோகத்திருப்பீராயின் எத்துணை பெருமையாய் இருந்திருக்கும்!" என்ன, அவன், தனது மூடத்தனத்திற்கு இரங்கி, தான் முன்பு பெண் என அவமதித்த பேரறிவுடையாளைப் பெரிதும் வியந்து, இனித்தான் ஒருக்காலும் சிற்றினம் சேர்வதில்லை என்றும், இனி சத்காலக்ஷேபமே செய்வதாகவும் அவளுக்கு உறுதி மொழிகொடுத்துத் தன் வர்க்கையும் நிறைவேற்றினன். எங்ஙனமெனில், இவன் இதற்குப் பின்புதான் காசிகண்டம் முதலியன இயற்றினனென்றும், அப்பொழுது, தானே, வரதுங்க பாண்டியனது மனைவிக்கே, தாளியற்றிய நூலின் பிரதியை அனுப்பி அவளது அபிப்பிராயத்தை வேண்ட, அவள் அவற்றின் நடை, 'வேட்டைக்குதிரையின் நடைபோன்றுள்ள' தெனக் கூறினள் என்றும் தெரியவருகிறது. [வேட்டைக் குதிரையின் நடை, போகப் போகத் தீவிரமும் சலிப்பின்மையுமாக இருக்குமென்று அனுபவசாலிகள் கூறக் கேட்டிருக்கிறோம்.] இவன், பிறகு, இலிங்கபுராணத்தைப் பாடி அவளுக்கு அனுப்ப , அவள் "பாட்டு வெள்ளை (எளிய நடையில் எழுதப்பட்டுள்ளது) ஆயினும், பொருளோ மிகவும் மதிக்கத் தக்கது" என்பதைக் குறிப்பாய்க்காட்ட அது 'முத்துப் போல் இருக்கின்றது' எனக் கூறினளாம். நிற்க.

அதிவீரராம பாண்டியன் அவளுடைய நல் உபதேசங்களைக் கேட்டுத் திருந்திய பிற்பாடு, தான் துஷ்டனுய் அடங்காப் பிடாரியாகத் திரிந்த காலத்தில் வந்த சிறுமையையும்,

சற்குணவா னனதன் பின் தனக்குக் கிடைத்த பெருமையை யும் பூஜ்யதையையும் நினைத்து நினைத்துப் "பெருமையும் சிறுமையும் தான்தரவருமே" என்று அடிக்கடி சொல்லிக் கொள்வானும். அவன் இயற்றிய 'வெற்றிவேற்கை' என்னும் 'நறுந்தொகை'யானது பெரும்பாலும் அவனது சுவானுபவங் களைப்பற்றியே கூறும் ஒரு சிறு நூல் என்றாலும் பொய் யாக மாட்டாது. இவை நிற்க.

பொற்புறு கற்பரசி யாகிய இவ்வற்புதக் கலைமாதைப் பற்றி மற்றும் சில கூறவேண்டியிருக்கின்றன. அவளுடைய ஆருயிர்க் கொழுநனாகிய வரதுங்க பாண்டியன், தன்னுடைய தம்பியாகிய அதிவீரராமபாண்டியனோடு சமாதானமாகித் தென்காசியையும் ஆண்டுவந்தபொழுது, சிற்சில காரணங்க ளால் தன் உயிர்க்காதலியைப் பிரிய நேர்ந்தது. நாட்கள் பலவாகியும் அவன் வராமற்போகவே, அவனது பிரிவாற் றாது வருந்தி, அம்மாது சிரோமணி, நாரை, வண்டு முதலிய வற்றைத் தூதுவிட்ட பாவனையாக,

"என்னையிவ்வா றவர்மறந்தும் யான்அவரை
மிகநினைந்திங் கிருந்து வாட
முன்னைவினைப் பயன்தானோ? அப்பிறப்பிற்
செய்ததவம் முடிந்த வாறோ?
கன்னன்மதன் அபிராமன் வரதுங்க
ராமனியற் * காசி நாட்டில்
அன்னவயற் குருகினங்காள்! இனியெவ்வா
றுயிர்தரித்திங் காற்று மாறோ?"

---

* காசி — தென்காசி.

"செப்பாரும் முகிழ் முலையார் எல்லாருங்
கணவருடன் சேர்ந்து வாழ,
ஒப்பாரு மில்லாஎன் கணவனுடன்
யான்கூடி உறவா டாமல்
வெப்பாலும் மிகுகாமத் துயராலும்
நாடோறும் மெலிந்து வாடி
இப்பாடு படவன்றோ இறையோன்என்
தலையோட்டில் எழுதி னானே."

"எண் திசா முகத்துந் திங்கள்
இளநிலா வெள்ளங் காயக்
கொண்டமால் பெருகுந் தோறுங்
கொழுங்கணீர் முலையிற் சோரப்
பண்டுநாம் அறியாக் காமத்
துயரினாற் படுவ தெல்லாம்
வண்டுகாள்! உரையீர் உங்கள்
வரதுங்க ராம னுக்கே."

என்று சில பாக்கள் பாடி, அவை எழுதிய ஓலையைப் பணியாரக்குடத்துள் வைத்துத் தன் நாயகனுக்கு அனுப்பினளாம்.

பிறகு சின்னாட்களுக்கெல்லாம் நிகழ்ந்த ஓர் அதிசய சம்பவத்தால் கற்பிற் சிறந்த நம் கதாநாயகியின் உண்மைப் பெருமை விளங்கும். அவ்வதிசய சம்பவம் வருமாறு:—

வரதுங்கராம பாண்டியனுக்கு உலக வாழ்க்கை குறுகவே, அவன் அதி புத்திசாலியாக இருந்தும், தன் மனைவியினின்றும் பிரிவதற்காகச் சிறிது மனங்கலங்கிப் பின்னர்,

அஞ்சலென்ற கரதலமும் கணபணகங் கணமும்
அரைக்கிசைந்த புலிஉடையும் அம்புலிச்செஞ் சடையும்
கஞ்சமலர்ச் சேவடியும் கனைகழலும் சிலம்பும்
கருணைபொழி திருமுகமும் கண்கள்ஒரு மூன்றும்
நஞ்சைஉண்ட மணிமிடறும் முந்நூலும் மார்பும்
நலம் திகழ்வெண்ணீற் றொளியும் மறிமானும் மழுவும்
பஞ்சணைச்சிற் றிடைஉமையாள் ஒப்பனைப்பா கமுமாய்ப்
பால்வண்ணன் உளத்திருக்கப் பயமுண்டோ எமக்கே.''

என்று மனந் தேறினனும்.

இஃது அறிந்த அவனது மனைவி, பிறப்பு இறப்பிற்குக் காரணமாக இருக்கும் பற்றினை ஒழிக்குமாறு அவனுக்குப் புத்தி புகட்டி, "உடம்பு என்ற புழுக்கூட்டைச் சேர்ந்தும் சேராமலும் இருக்கும் பரம்பொருளும், அருட் பிரகாசமும், பரம் அபரம் (ஆதி, அந்தம்) என்பவற்றிற்கும் அப்பாலாகிய அறிவும், மயிர்முனைகூட இடமில்லாமல் எங்கெங்கும் நிறைந்த முழுமுதற்பொருளும், நினைத்தமாத்திரத்தில் உதிக்கக்கூடிய ஜோதியும், பெரும் பாக்கியம் செய்து பல குறைகளை நிவர்த்திக்க விரும்பும் மெய்யடியார்களுக்கு வேண்டுவன உதவும் பசுமையான பூங்கொத்துக்களை யுடைய கற்பக விருக்ஷம் போன்றுள்ளதும், மனவாக்காதிகளின் வேறுபாட்டால் அளவிடக் கூடாததுமான களங்கமற்ற வெட்ட வெளியை மனமாகிய ஆகாயத்தில் அடைப்பாம்" என்ற கருத்தை அடக்கி,

"ஆக்கையெனும் புழுக்குரம்பை அழிந்து அணையாப்
அருள் ஒளியைப் பாபரத்திற்கு அப்புறமாம் அறிவை
நீக்கமற மயிர்முனைக்கும் இடமற எங் கெங்கும்
நிறைந்து நின்ற முழுமுதலை நினைவில் எழும் சுடரை
பாக்கியங்கள் செய்து அனந்த தவக்குறைகள் முடிக்கும்
பழ அடியார் தமக்கு உதவும் பசுந்துணர்க் கற்பகத்தை
வாக்குமன விகற்பத்தால் அளவுபடா ஒன்றை
மாசற்ற வெறு வெளியை மனவெளியில் அடைப்பாம்"

எனக்கூறவே, என்ன ஆச்சரியம் பாருங்கள்! நமது கதா நாயகி உடனே குன்றாத மாங்கல்யக் கோமளமாகவே பரம பதம் அடைந்தனள்! அவள் புருஷனே மான ஆபத்தி னின் றும் தப்பிப் பிழைத்து விட்டான்!

சகோதர சகோதரிகளே! இவ்வுத்தமியின் உண்மைச் சரிதையைப் பற்றிச் சற்று யோசித்துப் பாருங்கள். இவ் வற்புதக் கலைமாது கல்விமானாகிய அதிவீரராமனுக்குப் புத்தி புகட்டி, கல்வியைக் கொண்டே அவனை நல்வழிப் படுத்தியது எவ்வளவு பாராட்டத்தக்கது! இதனால் நமது தேசத்து ஸ்திரீகள் முற்காலத்தில் கல்வி கேள்விகளில் தேர்ச்சி பெற்றவர்களாய் இருந்தனர் என்று தெரியவருகின் றதல்லவா? வேத ஆகம புராண இதிகாசங்களும், தொல் காப்பியம் ஆதிய தொன்மைப் பேரிலக்கணங்களும், சிந்தா மணி சிலப்பதிகாரமாதிய ஐம் பெருங் காப்பியங்களும், பதி னெண்கீழ்க் கணக்கிற் சிலவும், ஏனைய பிறவும், தக்க நூலா சிரியரிடம் வரன் முறையிற் கற்றுத் தெளிந்து, அவற்றி

னுள்ள சொற்களையும் விஷயங்களையும் தனது நூலில் அநேக இடங்களில் அதிவீரராமன் பொருந்தப் பிரயோகித்துள்ளானாதலின், அவ் வரிய நூலின் குணதோஷங்களைக் கண்டறிய எத்துணைக் கல்விப்பயிற்சி அவளுக்கு இருந்திருத்தல் வேண்டும்!

அன்றியும், 'அஞ்சலேன்ற...' என்று சகுண மூர்த்தத்தைக் குறித்துக் கூறியதால், வாதுங்க ராமன் த்வைதி என்றும் சித்தாந்தி யென்றும், 'ஆக்கையெனும்......' என்று நிர்க்குண சொரூபத்தைச் சுட்டியதால் அவன் மனைவி அத்வைதி என்றும் வேதாந்தி என்றும் அறியலா மன்றோ? இவ்வாறு வேதாந்த சித்தாந்திகள், காதன் மனையாளும் காதலனுமாக, மாறின்றிச் சமரச நன்னிலை பெற்ற உத்தம வித்துவ ரத்தினங்களாய் வாழ்ந்து, இல்லறம் நடாத்தினது எவ்வளவு ஆச்சரியகரமானது! இதனால் ஸ்திரீ புருஷர்கள் கூடத் தத்தம் மதக்கொள்கையை அநுசரித்து வாழும்படியான ஸ்வாதீனம் முற்காலத்திற் பெற்றிருந்தார்கள் என்பது விளங்கவில்லையா?

மேலும், அரிவையரை, இயற்கை யறிவும் மழுங்க, அந்தப்புரங்களில் அடைத்துவைத்து அஞ்ஞானம் என்னும் அந்தகாரத்தில் ஆழ்த்துவது பூர்வீக சம்பிரதாயம் இல்லை என்பதும் வெள்ளிடைமலைபோல் தெள்ளிதிற் புலப்படும் அன்றோ? பாருங்கள்! அந்தப்புரத்திலேயே நமது வரதுங்கன் மனைவி அடைபட் டிருப்பாளேயாயின், 'வேட்டைநாய்' 'வேட்டைக் குதிரை' இவைகளைப்பற்றிய இயற்கை விசேஷங்கள் அவள் எப்படி அறிந்திருக்கக் கூடும்? மேலும், கல்வி கற்பதாலும்,

கணவனையன்றி மற்ருேனைக் கண்ணுறுவதாலும் கற்புநிலை தவறும் எனப்பிதற்றும் பேதைமாக்களுக்கு அப்பெண்மணியின் திவ்ய சரித்திரம் சற்புத்தி புகட்டாமற் போகாது.

அல்லாமலும், 'கற்பு' என்ற பதத்திற்குக் 'கல்வி' என்றே அர்த்தம். ஆதலால் கற்பு வேண்டுமாயின் கல்வியும் வேண்டும் என்பது அப் பதத்தினலேயே விளங்கவில்லையா? ஒருவன் பெறுதற்கரிய பொருள்களுள் கற்புடைய மனையாளினும் உயர்வான பொருள்கள் எவை? 'தையலர் சிறந்துழி வையகம் சிறக்கும்' என்பது ஆன்ருேர் வாக்கு. இதனை ஆடவர்கள் கடைப்பிடித்துத் தங்கள் மனைவிமார், தாய்மார் சகோதரிகள் முதலியோர்க்கு வித்தியாப்பியாசம் முதலியன செய்வித்து அவர்களை அந்தகாரத்தினின்றும் அகற்றுமாறு வேண்டுகிறேம். சுகந்தத்தோடு கூடிய சுவர்ண புஷ்பம்போல் குணமும் கல்வியும் வாய்த்த பெண்மணிகளுடன் ஆடவர்கள் இல்லறம் நடத்திவருவது எத்துணை மேன்மையாய் இருக்கும்!

அன்பார்ந்த சகோதரிகளே! உங்களை யான் வேண்டுவது ஒன்று உண்டு. அஃதென்ன வெனில், நீங்கள் வாயில்லாப் பூச்சி போலிருப்பதே கற்பு என்று எண்ணுமல், நீங்களே வித்தை பெரிதும் விரும்புகிறீர்கள் என்பதை உங்கள் புருஷர்களுக்குக் காட்டி, அவர்களது அநுமதி பெற்றுக் கற்றுத் தேர்ந்து அடங்கி அதி புத்திசாலிகள் ஆவீர்களாக!

முத்து.

"மரகதம் பவளம் நீலம் வச்சிரம் பதுமராகம்
விரவிய தரள மேகோ மேதகம் புருடராகம்
உரவிய காந்திவிட்டே உமிழும்வை டூரியந்தான்
பெருகிய நவ மணிக்குப் பெயரிவை ஆகும்என்ப."

இவற்றுள் "தரளம்" என்பதே முத்து. தரளம், மௌத்திகம், நாவி, திரட்சி, மணி, முத்தாபலம், ஆரம், நித்திலம், முத்தம்—இவை முத்தின் மறு பெயர்களாம். நிற்க.

"பார்த்திபர் மதிக்கும் முத்தம்" என நம்முடைய பரத கண்டத்துப் பண்டைக்காலப் பனுவலோர்களால் பாராட்டிக் கூறப்படும் இம் முத்தானது, நவரத்நங்களுள் ஒன்றாயினும் பவளம் ஒழிந்த பிற மணிகளைப்போல் சுரங்கங்களினின்றும் வெட்டி யெடுக்கப்படும் கல்லாகமாட்டாது. அது கடினமும் பளபளப்பும் வெண்ணிறமும் சாதாரணமாய் உருள் வடிவமும் வாய்ந்ததோர் ரத்நம். இது பெரும்பாலும் "கடற்படு திரவிய"மாகும் என்பது,

"திரைக்கடற் படுவ உப்பு, செய்யவெண் பவளம் வெண்முத்
திரைத்தெழும் சங்கொக் கோலைஇவ் வைந்தும் என்னலாமே"

என்பதால் உணர லாகும்.

2. முத்துப் பிறக்கும் இடங்கள்.

பரஞ்சோதி முனிவர், "முத்து * 'தலசம்' என்றும், † 'சலசம்' என்றும் இருவகையாகி, சங்கு, மேகம், மூங்கில்,

* தலசம் (ஸ்தலஜம்) - நிலத்திற் பிறப்பது.
† சலசம் (ஜலஜம்) - நீரிற் பிறப்பது.

பாம்பின் தலை, பன்றிக்கொம்பு வெண்ணெல்(வெள்ளை நெல்), இப்பி, மீன் தலை, கரும்பு, யானைக் கொம்பு, சிங்கத்தின் புஜம், பதிவிரதைகளின் கழுத்து, கொக்கின் கழுத்து ஆகிய பதின்மூன்று இடங்களினின்றும் பிறக்கிறதென்றும், இவற்றுள் கடைசியில் கூறியமூன்று இடங்களினின்றும் பிறக்கும் முத்துக்கள் கிடைப்பது அருமையென்று பின்வருமாறு கூறுகிறார்:—

"நக்கமுத் திரண்டு வேறு : தலசமே சலச மென்ன;
இக்கதிர் முத்தம் தோன்றும் இடம் பதின் மூன்று: சங்கம்,
மைக்கரு முகில், வேய், பாம்பின் மத்தகம், பன்றிக் கோடு,
மிக்கவெண் சாலி, இப்பி, மீன்தலை, வேழக் கன்னல்,
கரிமருப், § பைவாய் மான்கை கற்புடை மடவார் கண்டம்,
இருசிறைக் கொக்கின் கண்டம் என; கடை கிடந்த மூன்றும்
அரியன..........." (திருவிளையாடற்புராணம்).

இப் பரஞ்சோதி முனிவருக்கு முன்னிருந்த "திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராண நூலுடையாராகிய செல்லிநகர்ப் பெரும்பற்றப் புலியூர் நம்பியாரும் முத்தின் பிறப்பிடம் பதின்மூன்று என,

*"தண்தரளத் தியல்வகுப்பிற் பிறப்புப் பாம்பில்,
சங்கினில்,மீ னின்தலையில், தழைநெற் றூளில்,
ஒண்டொடிமங் கையர்களத்தில், யானைக்கோட்டில்,
உயர்கழையில், காகவா கனர்திண் தோளில்,
கொண்டலில்,இப் பியில்,ஏனக் கொம்பில் இக்கில்,
கொக்கில்,எனப் பகர்வர்வியப் பிப்பி முத்தால்."
என்னும் செய்யுள் மூலமாக அறிவிக்கின்றார்.

* மாணிக்கம் விற்ற திருவிளையாடல்—16-ஆவது செய்யுள்.

ஆனால் இப்பாட்டில் "ஐவாய்மான்கை" என்பதற்குப் பதிலாகக் "காகவாகனர் (சனீசுவரன்) திண்தோள்" எனக் கூறப்பட்டிருக்கிறது. ஆகவே இதுவரை சொல்லியவற்றாற் முத்தின் பிறப்பிடம் பதினான்கு என அறியலாகும்.

இவற்றுள் மேகத்தின் முத்து இளஞ்சூரியன் நிறமும், மூங்கில் முத்து மழைத்துளி நிறமும், பாம்பின்முத்து நீல நிறமும், பன்றிக்கொம்பின் முத்து இரத்த நிறமும், நெல்லின் முத்துப் பச்சை நிறமும், மீனின் முத்துப் பாதிரிப்பூ நிறமும், சிப்பி முத்து பளபளப்புடன் கூடிய வெண்ணிறமும் கொண்டதாம். நிற்க.

முற்கூறிய பதினான்கு இடங்களைத் தவிர மற்றும் கமுகு, வாழை, நத்தை, தாமரை, பசுவின்பல், சந்திரன் உடும்பு, முதலை என்னும் எட்டு இடங்களிலும் முத்து உண்டாகும் என்பதை,

"தந்தி, வராக மருப், பிப்பி, 1பூகம், தழை 2 கதலி,
3 நந்து, சலஞ்சலம், மீன்றலை, கொக்கு, 4 நளினம், மின்னார்
கந்தரம், சாலி, கழை, கன்னல், 5 ஆவின்பல், கட்செவி, கார்,
6 இந்து, 7 உடும்பு, 8 கரா, முத்தம், ஈனும் இருபதுமே."

பனிமதி, கதலி, மேகம், பைந்தொடி கழுத், தா வின்பல்,
தனியானை, ஏனக்கொம்பு, தடம்கரா, உடும்பு, கொக்கு
வினை அரா,ச் சலம் சலம்,நந் திப்பி, மீன் மூங்கில் பூகம்
நினைசெந்நெல், கரும்பு, கஞ்சம், நிகழ் இருபதின்முத் தாகும்

என்னும் தனிப்பாடல்களால் அறிக.

ஐவாய் மான் - சிங்கம் அல்லது யாளி.
1. பூகம் - கமுகு - பாக்குமரம். 2. கதலி - வாழை. 3. நந்து-நத்தை.
4. நளினம் - தாமரை. 6. இந்து - சந்திரன். 8. கரா - முதலை.

ஆகவே, இருபத்திரண்டு இடங்களிலும் முத்து உற்பத்தியாகும் எனத் தமிழ் நூலாசிரியர்கள் கூறிய விஷயம் இப்பொழுது அறிந்தோம். ஆயினும் தற்காலம் வியவசாய இலாகா பரிசோதகராகிய ஸ்ரீ ராஜகோபால் நாயுடு அவர்கள் தென்னையிலும் முத்து இருக்கும் விஷயம் தெரிவிக்கின்றார். ஆகவே முத்தின் பிறப்பிடம் இதுகாறும் கூறியவற்றால் இருபத்து மூன்றாகும்.

3. இப்பியில் முத்து உண்டாகும் விதம்:

இப்பியினின்று முத்து எடுக்கப்படுவதே பண்டிதர் பாமரர் பலரும் கேள்வி மூலமாகவும் நேரிலும் அறிந்த விஷயமாதலின் இப்பி முத்தைப் பற்றியே இப்பொழுது சிறிது கூறுவாம்.

"இப்பி" என்பது முத்துச்சிப்பி என்று சொல்லப்படும் ஒருவகை * ஜலசரம். இவ்விப்பிகளின் சரீரத்தினிடையில் மிருதுவான தோல் இருக்கும். இத்தோலைச் சுற்றி இரு †மருங்கிலும் கடினமான ஓடுகள் கவிந்திருக்கும். சிப்பிகளின் மிருதுவான மெல்லிய தோலுக்கும் கடினமான ஓட்டிற்கும் இடையே ஒருவகைப் பொடிமணல் புகுந்து அவற்றை உபத்திரவப்படுத்தும். படுத்தவே, அவை எரிச்சல் பொறாது அப்படியும் இப்படியும் புரளும். அவ்வாறு புரளுகையில் சுண்ணாம்புத் தன்மையுள்ள ஓர்வகைநீர் வெளிப்பட்டு முற்கூறிய நுண்மணலைக் கவிந்துகொள்ள, அதுவே முத்தாகும் என்பர். இம்மர்மத்தைச் சீனர்களே முதல் முதல் அறிந்தவர்களென்றும், முத்து அகப்படாக் காலங்

---

* ஜலசரம் - நீர்வாழும் பிராணி. † மருங்கு - பக்கம்.

களிற்கூட அவர்கள் இப்பிகளைப் பிடித்து மணலை அவற்றின் மெல்லிய தோலுக்கும் ஓட்டுக்கும் இடையே புகுத்தி அவற்றிற்கு எரிச்சல் உண்டாக்கி முத்தினைச் செய்து பெருத்த லாபம் அடைந்து வருகிறார்களென்றும் தெரியவருகிறது.

சிப்பிகளின் சரீரத்தினின்றும், அவற்றின் முட்டைகள் வெளிப்படாக் காலத்து அம்முட்டைகளும், மேலே சொன்ன பொசிநீரால் மூடப்பட்டு முத்தாக மாறுவதுண்டு.

ஆனால், பர்த்ருஹரி போன்ற வடநூற் புலவர்கள், மழைத்துளிபெற எதிர்பார்த்த வண்ணமாகச் * சிப்பியானது நீர்மட்டத்திற்கு மேலே வந்து தன் அகட்டைத் திறந்துகொண் டிருக்குமென்றும், மழைத்துளி ஒன்று அதனுள் விழுந்தவுடன் அது ஓட்டை மூடிக்கொண்டு உள்ளே சென்று விடுமென்றும், அவ் வானத்துளியே பிறகு வண்முத்தாகிறதென்றும் கூறுகின்றார்கள். சுவாதி நக்ஷத்திரம் உச்சத்தில் இருக்குங்காலைச் சிப்பி அகட்டில் விழும் விசும்பிற்றுளியே மிக விலை யேறப்பெற்ற முத்தாம்.

4. இப்பிகள் இருக்கும் இடங்கள்:

வெண் முத்து ஈனும் இப்பிகள் விசேஷமாய் இலங்கையில் மன்னார்குடாவிலும், மறிச்சுக்கட்டியை அடுத்த கடலிலும், இந்தியாவில் தூற்றுக்குடிக்கு அருகிலும் பாம்பன் கடலோரத்திலும் பாரஸீக்குடாக்கடலிலும், போர்னியூவுக்

---

* சிப்பிகள் பாறைகளில் எப்பொழுதும் கெட்டியாய்த் தொத்திக்கொண்டு இருக்குமேயன்றி நீர் மட்டத்திற்குமேல் வராதென்று தற்கால சாஸ்திர நிபுணர் கூறுகின்றனர். ஆயினும் பாரஸீகரும் பூர்வீக மேற்றிசையாரும் பர்த்ஹரியார் சொல்வது போலவே எண்ணியிருந்தவர்களே.

கடுத்த ஸெஹெலுதீவுகளிலும்,—கருமுத்து என்பன காலிபோர்னியாவிலும்,—கபிலநிற முத்து என்பன மெக்ஸிகோவிலும் உள்ளன.

5. முத்துக் குளித்தல்.

முத்துப் பெறவேண்டி கடலின் கீழ் இருக்கும் முத்துச் சிப்பிகளை முழ்கி எடுத்து மேலே கொண்டு வருவதற்கு "முத்துக்குளிப்பு" என்று பெயர். கடலில் அதிக ஆழத்தில் உள்ள பாறைகளில் கூட்டம் கூட்டமாகத் தொத்திக்கொண்டிருக்கும் சிப்பிகளைப் பெற்று முத்தெடுக்கும் விதம் இலங்கை முத்துச் சலாப விஷயங்களைக் கொண்டு ஒருவாறு அறியலாகும். அவ்விஷயம் வருமாறு:—

இலங்கையில் முத்துச் சலாபம் பிப்ரவரியீ தொடங்கி எப்பிரல் மாதாரம்பத்திற்குள் முடிவுறும். முத்துக் குளிப்போர் பெரும்பாலும் இந்தியர்களும் சிங்களவர்களுமே. இவர்கள் இளம்பிராய முதற்கொண்டே நெடுநேரம் நீர்க்குள் நிற்கவும் நீந்தவும் நன்றாய்ப் பழகியவர்கள். ஆயினும் இவர்கள் பிழைப்பு என்றும் அபாயகரமானதே. ஏனெனில், கொம்பன் சுறுவினாலும் ஏனை நீர்வாழும் பிராணிகளாலும், கடற்பூண்டுகள் சிக்கிக்கொள்வதனாலும் இவர்களுக்கு மரணம் நேர்வதுண்டு. ஆதலின் இன்னோர், தாம் மூழ்குவதற்குமுன், சுறுவாயைக் கட்டுவதில் கைதேர்ந்தவர்களெனத் தாம் கருதிய மலையாளத்து மந்திரவாதிகளை வரவழைத்து அவர்களிடம் ஆரூடம் கேட்ட பின்பே முழுகத் தொடங்குவார்கள். மந்திரவாதிகளின் வார்த்தையில் குளிகாரர்களுக்குத் தேவதா விசுவாசம். இம்மாந்திரீகர்கள் அந்தந்த ஜாதியார்க்குத் தக்கபடி சடங்காசாரங்கள் ஏற்படுத்தித் தாமும்

சுறுக்களை அப்புறப்படுத்த ஓர்வகை விரதம் அனுஷ்டிப்பார்கள். விரதத்தை மாந்திரீகனும் அனுஷ்டித்த விவரம் அறிந்தாலொழிய அவர்கள் முழுகுவதற்கு முன்வாரார்களாம். முத்தெடுக்கச் சென்ற படகுகள் திரும்பும்வரை மாந்திரீகன் மந்திரம் ஜபித்துக்கொண்டு உபவாசத்துடன் இருப்பான். சில வேளைகளில் மந்திரவாதியும் படகேறிச் செல்வதுண்டு. இவன் மட்டும் தம்முடன் வருவானாயின் தம் காரியம் இலாபகரமாயும் இடையூறின்றியும் இனிது நிறைவேறுமென்பது குளிகாரர்களின் கொள்கை. மாந்திரீகர் குளிகாரர்களிடத்துமட்டுமேயன்றி வியாபாரிகளிடத்திருந்தும் மிக லாபம் பெறுகின்றனர். நிற்க.

“சாஸ்திராயச ஸுகாயச” என்றபடி குளிகாரர்களுக்கு மந்திரவாதிகள் அனுஷ்டிக்குமாறு கூறுவனயாவும் ஒரு விதமாகப் பார்க்கில் நன்மைக்கேதுவான காரியங்களாகவே இருக்கின்றன. எங்ஙனமெனில், குளிகாரன், முழுகு முன்னே உபவாசத்துடனிருந்து, முழுகும்போது மந்தரித்துத் தந்த விளக்கெண்ணெயைப் பூசிக்கொண்டு கடலில் இறங்கவேண்டுமென விதிக்கப்படுகிறான். வயிறு ஆகாரத்தால் நிரம்பியிருப்பின், வாந்தி முதலிய உபத்திரவம் உண்டாவதுடன் சுலபமாகக் குளித்தெழும்பவும் கூடாற்போகுமன்றோ? அன்றியும் பசபசவென்று உவர்நீர்ப்பட்ட மாத்திரத்தில் தேகம் அரிப்பெடாதிருத்தற்கு விளக்கெண்ணெய்ப பூச்சும் வேண்டியதுதானே? நிற்க.

குளிகாரர்கள் கரைக்கு எட்டுமைல் தூரம்வரை படகுகளில் கூட்டம் கூட்டமாகச் செல்வார்கள். ஒவ்வொரு படகிலும் மாலுமியைத்தவிர இருபதுபேர்கள் இருப்பார்கள்.

இவ்விருபது பேர்களில் பத்துமனிதர்கள் படகு ஓட்டவும், முழுகுவோரைக் குறித்த காலத்தில் தூக்கி யெடுக்கவும் நியமிக்கப்பட்டவர்கள். எஞ்சிய பத்துப்பேர்களும் குளிகாரர்களே. இவர்கள் ஐவர் ஐவராக மாறி மாறி வேலைசெய்வர். முழுகுவோர் முன்கூறியபடி எண்ணெய்ப் பூச்சு உடையவராயும் கோவணம் மட்டும் தரித்தவராயும் இறங்குவார்கள். இவர்கள் தாம் எளிதில் இறங்கிச் செல்வதற்கு உதவியாக சுமார் 50 ராத்தலுள்ள பெருங்கற்களை உபயோகிக்கின்றனர். ஒவ்வொரு படகிலும் இவ்வாறு ஐந்தாறு கற்களேனும் இருக்கும். இவை அடி பரந்தும் நுனி குவிந்தும் கயிறுகள் கோக்கத் துவாரம் கொண்டும் இருக்கும். பிறைச் சந்திரன்போற் செதுக்கப்பட்ட கற்களும் உபயோகிக்கப் படுவதுண்டு. முழுகும்பொழுது குளிகாரன் கல்லிற் கட்டப்பட் டிருக்கும் கயிற்றை வலதுகால் விரலிற் பிடித்துக் கொண்டு, இடதுகால் விரலால் தான் எடுக்கப்புகும் இப்பிகளைப் போட்டுக்கொள்ள ஒருவகை வலையை இறுகப் பிடித்துக்கொள்வான். பின்பு அவன் கல்லில் கட்டப்படாத மற்றொரு கயிற்றையும் கற்கயிற்றையும் தனது வலதுகையாற் பற்றிக்கொண்டும், காதில் மெழுகு திணித்துக் கொண்டும் நாசித்துவாரங்களை இடது கைவிரல்களால் இறுக அடைத்துக்கொண்டும் தண்ணீர்க்குள் சில சமயம் 100-அடி ஆழம் வரைகூட மூழ்குவான். மூழ்கி அடியிற் சென்றதுங் காலில் மாட்டிய வலையை எடுத்துக் கழுத்தில் மாட்டிக் கொண்டு விரைவாகவும் சாதுரியமாகவும் எவ்வளவு சிப்பிகள் அள்ளக் கூடுமோ அவ்வளவையும் அதனுள் அள்ளிப் போடுவான். அவன் தடைக்கு ஞாஅ சிப்பிகளுக்குக் குறையாமல் அள்ளுவானும். நீரில் அவன் அமிழ்ந்து நிற்பதெல்லாம் 120 விநாடி

(Seconds) இருக்கும். (மூன்று அல்லது நான்கு நிமிஷத்திற்கு அதிகம் எவனாலும் நீரில் மூழ்கி இருக்க முடியாது.) மூச்சுத் திணரும் சமயத்தில் அவன் தான் இறங்கிய கல்லின் மேல் மீண்டும் ஏறிக்கொள்ளாமல் கீழே நின்றபடியே வலது கைக்கயிறுகளை மட்டும் இழுத்து அசைத்து ஆட்டுவான். இதுவே அவன் தன்னை வெளியில் தூக்குமாறு அறிவிக்கும் அடையாளமாகும். இக்குறிப்பைப் படகோட்டிகள் அறிந்து படகில் அமைக்கப்பட்டிருக்கும் இராட்டினத்தின் வழியாய்க் கல்லில் கட்டப்படாதிருக்கும் கயிற்றை இழுத்து அவனை மேலே தூக்கிக்கொண்டு வந்துவிடுவார்கள். பிறகு அவன் விட்டுவந்த கல்லை அதன் கயிற்றால் மேலே இழுத்துக்கொள்வார்கள்.

முத்துக் குளிக்கச் செல்வோர் சூரியன் உதிக்குமுன் முத்திருக்கும் பாறை போய்ச் சேர்ந்து கடல்நீர் வெதுவெதுப்புடன் இருக்கும் நேரமாகிய சுமார் 7-மணிக்கு மூழ்கத் தொடங்கிச் சுமார் 12-மணிக்குக் கரைசேரப் படகேறுவார்கள். 12-மணிக்குப் பிறகு அவர்கள் குளிப்பதில்லை. நாள் ஒன்றுக்கு அவர்கள் 40 அல்லது 50-தடவை மூழ்குவார்கள். திரும்புகையில், படகு, கரையிலுள்ளோர் கண்ணுக்குத் தென்படும் தூரத்திலிருந்து குண்டு போடப்படும். இது படகு சாவதானமாகத் திரும்பி வந்த சுபசமாசாரத்தை அதன் சொந்தக்காரர் அறிவதற்கான அடையாளமாம். படகுகள் கரை சேர்ந்ததும் அதில் உள்ளன யாவும் சூரியன் அஸ்தமிக்குமுன் கீழே இறக்கப்படும். நிற்க.

மூழ்கும்பொழுது விலை உயர்ந்த முத்துக்கள் அகப்பட்டால் குளிகாரர்கள் அவற்றை விழுங்கிப் பிறகு வெளிப்

படுத்தி விற்று மிக்க லாபம் பெறக்கூடுமாதலின், இவர்களைக் கூலிக்கு அமாத்துவோர், இவர்களுக்குப் பேதி மருந்து கொடுத்து நன்றாய்ப் பரிசோதித்து முத்துக்கள் இருப்பின் பிடுங்கிக்கொண்டு விடுவார்கள். பிறகு குளிகாரர்கள் தம் கூலியாகச் சிப்பிகளில் நான்கில் ஒரு பங்கேனும் தக்க பொருளேனும் பெறுவர். பின்னர், எஞ்சிய சிப்பிகள் ஆயிரம் ஆயிரமாக ஏலத்தில், மிகுந்த தொகைக்குக் கேட்போர்க்கு விற்கப்படும்.

சிப்பிகள் சொந்தக்காரர்களால் இரண்டு அடி ஆழமுள்ள குழிகளி லாயினும், வேலி சூழ்ந்த சதுப்பு நிலங்களி லாயினும் மணல் சிறிதும் படாதபடி பாய்களின்மேல் கொட்டி வைக்கப்படும். அங்கிருந்தபடியே அவை நன்றாய் அழுகி உலர்ந்து சாகும். உலர்ந்த பின்னரே அவற்றினின்றும் முத்துக்களைச் சேதமின்றி எடுக்கக் கூடும். அவை உயிருடன் இருக்கும்பொழுதேனும் அழுகி உலருமுன்பேனும் திறக்கப்பட்டால் முத்துக்குச்சேதம் மிகுதியும் உண்டாகும். ஏனெனில் உயிருடன் இருக்குங்கால் சிப்பிகளை எளிதில் உடைக்க முடியாது. சுத்தியல்கொண்டு உடைத்தாலோ முத்துத் தெறித்துப்போம். நிற்க.

சிப்பிகள் நன்றாக அழுகுங்கால் எழும் துர்நாற்றம் சகிக்கத் தரமன்று. ஆயினும் அவற்றினின்றும் எதிர்பார்க்கும் இலாபமே இந்நாற்றத்தை ஒரு சிறிதும் பாராட்டாமல் சந்தோஷமாகவே சகிக்கச்செய்து, கருமத்தில் கண்ணுயிருக்கச்செய்து விடுகிறது. நீரில் சிப்பிகளை வேகவைத்தும் முத்துப் பெறுவதுண்டு. இதற்குக் காரணம் யாதெனில்,

முத்துக்கள் சில சமயங்களில் சிப்பிகளின் ஓடுகளில் இராமல் அவற்றின் சரீரத்திலேயே தங்கி நின்றுவிடுவதே. நிற்க.

சிலோன் வாசிகள் முத்துக்களைத் துளையிடுவதிலும் மாலையாகக் கோத்துக் கட்டுவதிலும் கைதேர்ந்தவர்கள். அவர்கள் முத்துத் தூளால் ஆகிய பொடியைக்கொண்டு முத்துக்களைத் துலக்கி மெருகிடுவார்கள்.

இதுகாறும் கீழ்த்திசையோராகிய இந்தியரும் சிங்களவரும் முத்தெடுக்கும் விதத்தைக் கூறினோம். இனி மேலைத் திசையோராகிய வெள்ளையர்கள அது பெறும் விதத்தை அறிவிப்போம்:—

இவ் விஷயத்தைப் பற்றிச் சொல்லப் புகுமுன் இதனை வாசிப்போர் அறியவேண்டிய முதலாவது சங்கதி ஒன்று உளது. அஃதியாதெனில்,—உள்ளே சொட்டு நீர் கூட இல்லாமல் நன்றாய் உலர்ந்திருக்கும் அரிக்கும் சட்டி ஒன்றை எடுத்து ஓர் தொட்டி ஜலத்தில் தலை கீழாக வைத்து அமிழ்த்தினால், ஜலம் அச்சட்டிக்குள் சிறிதே தூரம் சென்று மேற்கிளப்புமன்றி முழுவதும் உட்புகுந்து அதனை நிரப்புவதில்லை. அச்சட்டியை அசைக்காமல் அஃதிருந்தபடியே மேலே தூக்கி ஜலத்தினின்றும் எடுத்துப்பார்த்தால் இவ்வுண்மை இனிது விளங்கும். அச்சட்டியி னுட்புறத்தில் வாயு நிறைந்திருத்தலே அதனுள் ஜலம் ஏறாததற்குக் காரணமாகும் என்பதே.

இம்மர்மத்தை அனுஸரித்து ஹால்லி என்ற ஓர் ஆங்கிலேயன் குளிமணி ஒன்று முதல் முதல் இயற்றினான். அஃதொரு பிரமாண்ட கோவில்மணி போன்றது, மரத்தினால்

ஆகியது. அம்மணியின் உட்புறத்தில் முழுகுவோர்கள் உட்காரப் பீடம் கொண்டது. அப்பீடங்களில் குளிகாரர்கள் பாதாதிகேச பரியந்தம் ஜலத்தை உள்ளே புகவிடாத ஓர் வகைக் கவசம் பூண்டு உட்கார்ந்து கொள்ளுவார்கள். பின்னர், அம்மணியின் வாய் கீழ் நோக்கும்படி வைத்து அதனை ஜலத்துக்குள் மெதுவாகப் படகில் உள்ளோர் இறங்குவர். மணிக்குள் வாயு நிரம்பி இருக்கும் காரணத்தால் நீர் உள்ளே சென்று நிரம்பாது. மணிக்குள் இருப்பவர் விடும் மூச்சு சீக்கிரத்தில் விஷக்காற்ருக மாருதிருக்கவும், சுவாசம் தாராளமாய் விடவும் போதுமான சுத்த வாயு பீப்பாய்களின் மூலமாய் முன்னுக்கு முன்னுலேயே இறக்கிவிடப்பட் டிருக்கும். அப்பீப்பாய்களிலிருந்து அவற்றுடன் பொருத்தப்பட்டிருக்கும் தோற்குழாய்களின் மூலமாய் மணிக்குள் இருப்போர்க்குச் சுத்தவாயு கிடைத்துக்கொண்டிருக்கும். இம்மணியிலும் சிற்சில குறைகள் இருந்தன. ஆனுல் காலம் செல்லச் செல்ல ஸ்மீட்டின் முதலிய சாஸ்திர பண்டிதர்களின் ஆராய்ச்சி வன்மைக்கும் மதிநுட்பத்திற்கும் தக்கவாறு, குளிமணிகள், சதுரவடிவாயும், முழுகுதற்கான வசதிகள் யாவும் குறைவற வாய்ந்தவைகளாயும் இரும்பினுல் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

ஆதலால் மேலைத்திசையோராகிய வெள்ளையர்கள் கோவணத்துடன் மூழ்கிக் கஷ்ட நிஷ்டூரங்களுக்குள்ளாகக்கூடிய நிலைமையிலுள்ள இந்திய குளிகாரர்கள் போலச் சிரமப்படாமல் மிகுந்த ஸௌகரியத்துடன் உடைதரித்தே முழுகக்கூடும். ஆயினும் இந்திய சிங்களவர்களே, சாமர்த்தியத்திலும் சாதுரியத்திலும் மேற்றிசை யோரினும் மிகப் பேர்போன

வர்களென்றே சொல்ல வேண்டும். ஏனெனில், இன்னோர் தம் கால் விரல்களைக்கொண்டே, வெள்ளையர்கள் தம் கை விரல்களால் பிடுங்கி எடுக்கும் பொருள்களை, அவர்களினும் அதிதீவிரமாயும் எளிதாயும் எடுப்பார்கள்! நிற்க.

பாலினீஷியாவில் உள்ள குளிகாரர்கள் கற்களின் உதவியின்றியே கடலில் முழுகுவார்கள். இவர்களுள் ஆடவர்களினும் பெண்டிரே முழுகுவதில் சாமர்த்திய சாலிகளாம்.

6. முத்தின் குண விசேஷங்கள்:

முத்தின் பரிமாணம் அது பக்குவமாகச் செல்லும் காலத்திற்கேற்ப வேறுபடும். சாதாரணமாகச் சிப்பிகள் பருவமடைய நான்கு வருஷங்களும் பூரணபக்குவமுற ஏழு வருஷங்களு மாகும். உஷ்ணப் பிரதேசங்களில் காணப்படும் முத்துக்களே நேர்த்தியாயும் பருமனுயும் மனோகரமான குளிர்ந்த ஒளியுடனும் விலை மிகுத்தனவாயும் இருக்கின்றன. குளிர்ச்சியான தேசங்களிற் காணப்படுவன சிறு முத்துக்களே.

நக்ஷத்திரங்கள் போல ஒளியும்,உருட்சியும், காற்றேறு, மண் ஏறு, கல் ஏறு, நீர்நிலை முதலிய குற்றமில்லாமையும், கையினுல் எடுத்தால் கெட்டியாயும் கண்ணுக்கு நன்றாய் இருத்தலும், ஸ்படிகம்போல் இருத்தலும் உயர் நன்முத்தின் குணங்களாம். இவ் வாறு குணங்களும் ஒருங்கு அமைந்த முத்துக்களை அணிந்தால் மூதேவியும் தரித்திரமும் அணிபவரை விட்டு நீங்குமென்றும், லட்சுமியும் செல்வமும் ஆயுளும் பிரபலிக்குமென்றும் பெரியோர் கூறுவர்.

"உடுத்திரள் அனைய காட்சி,
உருட்சி, மா சின்மை, கையால்
எடுத்திடில் திண்மை, பார்வைக்
கின்புறல், படிகம் என்ன
அடுத்திடும் குணம் ஆறு, இன்ன
அணியின் முதனாங்கோ டின்மை
விடுத்திடும்; திருவந் தெய்தும்;
விளைத்திடும் செல்வம் வாழ்க்கை."

—திருவிளையாடற் புராணம்

எவ்வளவுக் கெவ்வளவு வெண்மை, பளபளப்பு, திரட்சி களங்கமின்மை, நல்லநீர் முதலியவற்றுடன்கூடி ஒரு முத்து இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு அது விலை உயர்ந்ததாகும். ஏறக்குறைய ஓர் அங்குல கனமும் இரண்டு அங்குலத்திற்கு அதிகமான நீளமும் உள்ள முத்து ஒன்று அராபியாவில் பதினொரு லட்ச ரூபாய்க்குச் சமீபத்தில் வாங்கப்பட்டது. சர்வ லக்ஷணங்களும் பூரா அமைந்த முத்து இந்திய முத்தே எனத் தெரிகிறது. இம்முத்தில் ஒன்று தற்காலம் மாஸ்கோ (Moscow) பொருட்காட்சி சாலையில் வைக்கப்பட்டிருக்கிறது. இதன் எடை 28-காரெட்டுகள்.

7. முத்தின் குற்றங்கள்.

"தங்கிய முள்எறு, முகம் கறுத்தல், செந்நீர்
சார்வன, மண்எறு இடப்புத் திருகல்கோணை
மங்குறு சிப்பிப் பற்று,க் காகவன்னி,
மருண்டிருத்தல்"

என்னும் பத்துக் குற்றங்கள் முத்துக்கு உண்டெனத் திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணமுடையார் கூறுகின்றார்.

8. முத்தின் அழிவும் அதனை உயிர்ப்பிக்கும் விதமும்.

முத்து உயிருள்ள பிராணியிடத்துத் தோன்றிய உயிரற்ற பொருளாக இருந்தும் அதற்கு அழிவும் இறப்பும் உண்டு. முத்து க்ஷீணிக்கும் என்ற விஷயம் நமது முன்னோர்கள் நன்கறிந்திருந்தனர். மேற்றிசையோர்க்கு இவ்விஷயம் வெகு காலமாகத் தெரியாது. சமீபத்தில்தான் அவர்கள் இவ்வுண்மை அறியலாயினர். முத்தின் அழிவிற்குக் காரணம் பல. அவற்றுள் சில கூறுவாம்:—முத்துக்கு ஊட்டம் கொடுத்துக் கொண்டே இருக்க வேண்டுமாம். உயிர்ப்பிராணிகள் உணவில்லாமற் போனல் வாடி வருந்திச் சாதல்போல் முத்தும் உணவில்லாவிடில் வரவர வளமை வனப்பாதிய குன்றி வாடிச் சாகுமாம். மெல்லியலாரின் மிருதுவான தோலின் கண் உள்ள ஓர் வகை உயிருள்ள சத்தையே முத்து உணவாகக்கொண்டு பிழைக்கின்றதாம். முத்தை ஸ்திரீகள் சதைப்பற்றுள்ள இடங்களிலேயே அணிந்துகொள்ள வேண்டுமென்று ரத்நப் பரிக்ஷகர் கூறுவதை நாம் நாளும் கேட்கிறோமன்றோ? ஆயினும் முத்துத் தரித்துக்கொள்ள யோக்கியதையே யில்லாத சில ஸ்திரீகள் உளர். ஏனெனில் முத்துக்களுக்கு ஸ்பரிச உணர்ச்சி மிகுதியும் உண்டு. ஆதலின் அவற்றைத் தரித்துக்கொள்ளும் சில ஸ்திரீகளின் மார்பாதிய இடங்களில் அவற்றின் ஆகாரத்திற்கு வேண்டியன வாகாதனவும் அவைகட்கே தீமை செய்வனவுமான வஸ்துக்கள் இருக்குமாம். இஃது தன்மையுடையன்

பதை வேறு சில விஷயங்களைக்கொண்டு விளக்கிக் காட்டலாம். வைடூரியத்தைச் சில ஸ்திரிகள் அணிந்தால் என்ன ஜ்வலி ஜ்வலிக்கிறது? அதே கல்லை வேறு சில ஸ்திரிகள் அணிந்தால் அது உயிரற்ற களிமண் மாதிரி ஆகிவிடுவதைக் காண்கிறோ மன்றோ?

ஆகவே, முத்து முதலிய இரத்தினங்கள் மங்கிச் சாவதற்கும் "டால்" வீசி ஜ்வலிப்பதற்கும் ஸ்திரீகளின் அங்க இயலே காரணமென நன்கு தெரிந்துகொண்ட மேற்றிசை ரத்தின வியாபாரிகள், சில தக்க ஸ்திரீகளை ரத்தினம் அணிந்து கொள்வதற்கென்றே கூலிகொடுத்து வேலைக்கு அமர்த்தியிருக்கிறார்கள். ஆ! இவர்கள் எவ்வளவு பாக்கியசாலிகள்! முத்தை அணிவதற்கு அருகரல்லாத ஸ்திரீகளிடமிருந்து, அவர்கள் அணிந்ததால் மங்கி நிறங்கெட்ட முத்து மாலையை மிகக் குறைந்த விலைக்கு வாங்கி அம்மாலைகளையும், தம்மால் ஏற்கனவே புதிதாய் வாங்கப்பட்டும் ஊட்டமில்லாக் குறையால் வாடி நிறங்குன்றி இருக்கும் மாலைகளையும், இந்தக் கூலிக்கார ஸ்திரிகளுக்கு அணிந்து, முத்தைக் கூடியமட்டும் முன்னிலையுறச் செய்து விற்றுப் பெரு லாபம் பெறுவர். இம்மர்மத்தை அறிந்த பிரபு பத்தினிகள் பலர் தாம் முத்துக்கள் அணியத் தகுதி யற்றவர்களெனக் கண்டுகொண்ட போதெல்லாம் அவற்றைச் சிலகாலம் தமது தோழிமார் மார்பிற் பூட்டி வைத்திருந்து, அவர்கள் அணிதலால் அவற்றிற்குக் காந்தியும் பளபளப்பும் வந்தவுடன், தாம் அணிந்து வருகின்றனர். நிற்க.

தக்க ஸ்திரிகள் அணிந்தும் கூட, துலக்கமுறாது க்ஷீணிக்குந் தன்மையுள்ள முத்துக்களு முண்டு. இத்தகைய

முத்துக்களை உயிர்ப்பிக்க இரத்தினப் பரிக்ஷையிற் தேர்ந்தோர் ஓர் உபாயம் செய்து பார்ப்பர். இவ்வுபாயத்தால் பெரும்பான்மையும் காரிய சித்தி உண்டாகும். அவ்வுபாயமாவது:—கடல் நீர் தாராளமாக உட்புகுந்து ஓடிக்கொண்டிருக்கும்படியாய் இடுக்குகள் பல வாய்ந்திருக்குமாறு இருப்புக் கம்பிகளால் இணைத்துச் செய்த ஓர் கூண்டில் முத்துக்களைச் சாவதானமாய் வைத்து, அக் கூண்டைக் கடல் நீரில் சில மாதங்கள் அமிழ்த்தி வைப்பதே. இவ்வாறு செய்தால் ஒளிகுறைந்த முத்துக்கள் முன்போற் பிரகாசமுறும் என்பதற்குப் பின்வரும் விஷயங்களே போதிய சான்றாகும்:—

நமது மாஜி மகாராணியாகிய அலெக்ஸாண்ட்ராவுக்கு முத்துப் பைத்தியம் மிகுதியும் உண்டாம். அவர் சேர்த்து வைத்திருக்கிற மாதிரி பலவகைப்பட்ட முத்துக்கள் எவருமே இதுவரைச் சேர்த்து வைத்த தில்லையாம். அவர்க்கு முத்துக் கிரீடமும், முத்து உடையும், முத்து அரைக் கச்சும் உண்டு. அவர் பாதாதி கேசபரியந்தம் முத்துடை தரிக்குங்கால் அவரிடம் காணப்படும் முத்தை மதிப்பிட்டால் அவை நான்கு லக்ஷம் பவுன் ஆகும் என்று கூறுகின்றனர். இவற்றைத் தவிர இனி "உருப்படாது" என்று ஒதுக்கப்பட்டவை இரண்டு லட்ச ரூபாய் பெறும்படியான முத்துக்களாம். இவை தரித்துக் கொள்ளாமல் உள்ளே வைக்கப்பட்டதால் கேடுற்றவைகளாம். சமீபத்தில் அவருடைய முத்தாரம் ஒன்று நிறம் மங்கிப் பிணியுற்றதாம். ஓர் பிரபல ரத்நப் பரிக்ஷகனிடம் அது கொண்டுபோகப் பட்டபோது அதை அவன் பரிக்ஷித்தறிவதாய்ச் சொல்லிப் பெற்று எவரும் அறியாமல் முன்பு நாம் சொல்லியபடி ஓர் கூண்டுக்குள் போட்டுச்

சமுத்திர ஜலத்தில் 3 மாதம் போட்டு வைத்திருந்து பிறகு எடுத்துப் பார்த்த போது, அது குறை எதுமின்றி முத்துக்கு உரிய லட்சணங்கள் யாவும் பூரா அமைந்து முன் போல் ஜ்வலித்துக்கொண்டிருக்கக் கண்டு அதி சந்தோஷத்துடன் அதனை அரசியிடம் தந்து பரிசுபெற்றனும்.

இது சம்பந்தமாக மற்றுமோர் உதாரணங்கூறி முத்து நோயைப் பற்றிய விஷயத்தை நிறுத்துவோம்: சமீபத்திற் காலஞ்சென்ற, ஆஸ்திரியா தேசத்து ராணியாகிய எலிஸபெத் அஸ்திஜ்வர (Typhoid Fever) த்தினுல் வருந்திக் கொண்டிருந்தபோது, பலகோடிப் பவுன் விலையுள்ள அவள் முத்து மாலை நிறங்குன்றிக் கறுக்க ஆரம்பித்தது. உடனே அது ரத்தினப் பரிசோதகர்களால் ஏட்ரியாட்டிக் கடலில் ஓர் குறிப்பிட்ட இடத்தில் கொண்டுபோய்ப் போடப்பட்டது. அன்றுமுதல் நாளைவரை அம் முத்து மாலையைக் கவர்ன்மெண்டாரின் கடற்படை இரவும் பகலும் காத்து வருகிறது. இவை சரித்திர பூர்வமாக நம் காலத்தவர்களே நன்கறிந்த விஷயமாகும். இரத்தின சோதனு நிபுணர்கள் அம்முத்தாரம் முன் இருந்த நிலைமையுற மூன்று வருஷங்களாவது ஆக வேண்டுமென அபிப்பிராயப் படுகின்றனர். நிற்க.

முத்துக்கு உறும் பிணியையும் அதற்கான நிவர்த்தியையும் பற்றி நாம் எழுதிக்கொண்டு வரும்போது ஓர் பரிதாபகரமான விஷயம் நம் ஞாபகத்திற்கு வருகிறது. அதனை நமது நேயர்களுக்கு அறிவிக்காமல் இருக்க மனம் வரவில்லை. அவ்விஷயம் வருமாறு:—

பிரான்ஸ் தேசத்து ராஜதந்திர நிபுணராகிய தியர்ஸ் (Thiers) என்பவரின் மனைவிக்கு 7,50,000 ரூபாய் பெறும்

படியான முத்துமாலை ஒன்று உண்டு. அம்மாலை அந்நாட்டார்க்கு அவ்வம்மையின் ஞாபகார்த்தமாகக் கொடுபட்டு விட்டது. இப்பொழுது அது லவர் (Lowvre) பொருட்காட்சி சாலையில் இருக்கிறது. அதற்கு எவராலும் உணர்ந்தறிந்து கொள்ள முடியாத ஓர் நோய் பற்றி நாளுக்குநாள் க்ஷீணித்து வருகிறது. ஆதியில் 7,50,000 ரூபாய் பெற்ற அம்மாலை இப்பொழுது 5,000 ரூபாய்கூடப் பெறுதென ரத்நப் பரீக்ஷகர்கள் கருதுகின்றனர். இவ் ஹாரத்தை உத்தம ஸ்திரீகள் அணிந்தால் ஒருவேளை அழிந் திறந்த முத்துக்கள் போக அழியாது எஞ்சிய சிலவேனும் முன்போல் ஒளி பெற்றுப் பிழைக்கும் என்று மேனாட்டு நிபுணர்கள் எவ்வளவோ சிபார்சு செய்தும் அவ்வாறு செய்யக் கூடாமலிருக்கிறது. ஏனெனில், "விநோதரஸ மஞ்சரி"யில், பரமார்த்த குருவின் வாக்கைப் பரிபாலனம் செய்த அவரது சிஷ்யர்களைப் போன்று, பிரஞ்சு கவர்ன்மெண்டாரும் தியர்ஸ் அம்மையின் வாக்கைப் பரிபாலனம் செய்து வருகிறார்கள். "அம்முத்துமாலை, அது வைத்திருக்கப்பட்ட பெட்டியை விட்டு எக்காலத்தும் எக்காரணத்தை யிட்டும் எடுபடக் கூடாது" என்ற நிபந்தனையின் பேரில் அவ்வம்மையால் கொடுபட்டிருப்பதால், அவர்கள் அதனை அதன் இருப்பிடத்திலேயே வைத்து அநியாயமாய் அழிந்து சாகவிட்டு வருகின்றனர். அந்தோ! தியர்ஸ் அம்மை என்ன நோக்கத்துடன் அவ்வித நிபந்தனை ஏற்படுத்தி யிருக்கக் கூடும் என்பதை இவர்கள் யோசிக்க வில்லையே. நாளுக்கு நாள் அம்முத்துக்கள் கறுத்துச் செத்த ஆட்டுப் பல்லின் நிறமடைந்து வருகின்றனவாம்.

9. உபயோகங்கள்:

(1) முத்து பல தேசத்தாராலும் ஆடவர் பெண்டிர் இளையோர் முதியோர் என்ற ஏற்றத் தாழ்வின்றி அலங்காரத்திற்காக அணியப்படுகிறது. பெண்கள் புலாக்கு, கொப்பு, மூக்குத்தி முதலிய ஆபரணங்களில் அவைகளைப் பதித்தும், மாலையாகக் கோத்தும் அணிவர். சிலர் கடுக்கண் மோதிரம் முதலியவைகளில் அவற்றைக் கட்டி அணிவர். ஸ்வாமிகளுக்கும் ராஜாக்களுக்கும் செய்யப்படும் கிரீடங்களில் முத்தை விசேஷமாகக் காணலாம்.

(2) இஃதொரு அரியவியாபாரச் சரக்காயிருப்பதால் வணிகர்க்கு இதனால் பெருத்த லாபம் உண்டு.

(3) முத்து ஓர் வைத்தியப் பொருளாதலின் பொடி முத்துக்களைச் சீனரும் இந்தியரும் புடம் போட்டுப் பிற மருந்துடன் கூட்டி விற்றுப் பணம் பெறுவர்.

(4) மேற்றிசையோரிற் பலர் பவளத்தைக் கொள்வது போலவே, சிலர் மலடு நீங்கவும் திருஷ்டிகழியச் செய்யவுங் கூடிய ரக்ஷையாகக் கருதி முத்தை உபயோகிக்கின்றனர்.

(5) நகைகளுக்கு உபயோகிக்க முடியாத கடுகு போன்ற 'விரை' முத்துக்களைச் சில தனவான்கள் வாங்கிச் சுட்டுச் சாம்பலாக்கித் தாம்பூலத்துடன் அருந்துவர்.

(6) தென் ஐரோபாவில் உள்ளோர் முத்துடன் சில பொருள்கள் சேர்த்து ஓர் வகைத் தைலம் எடுத்து அதனை முகத்தில் பூசிக்கொள்வார்களாம். அவ்வாறு செய்வதால் அவர்கள் நரைத்தலையாங் காலத்தும் முகத்திரை காணுதாம்.

(7) முத்துச் சிப்பிகள் நானுவித பொத்தான்கள் செய்யவும் அநேகவிதமான அலங்கார வேலைகள் செய்யவும் உபயோகமாகும். நிற்க.

10. நித்திலம் உணர்த்தும் நீதிகள்.

இனி முத்து சம்பந்தமாய்த் தாமாக விளங்கக்கூடியவையும், அன்றி, உய்த்துணரத் தக்கவையுமான அரிய நீதிகள் சில இங்குரைத்தல் மிகையாகாதென்று எண்ணுகிறோம்.

(1) "அளவிடவும் முடியாத ஆழ்கருங் கடலினுக்
கடியினுட் குகையினுள்ளே
அதிசுத்த மானபிர காசஒளி உமிழ்கின்ற
அரியமணிபல உறுதல்போல்
ஒளியபுக ழோடுதித் தும்தமது பெருமையும்
உறைவிடமும் ஒருவராலும்
உரைமுடி யாதபடி மறைநிலையில் உத்தமர்கள்
உறைவர் பலர்" என அறியலாம்.

(2) "பொங்கு திரைக்கடல்மேல்
புன்துரும்பே தோன்றுதல் போல்
இங்கெவர்க்கும் தோன்றும்
இழிகுணமே—அங்குயர்ந்த
முத்தெடுக்க வேண்டுபவர்
மூழ்குவது போல்முயலின்
உத்தமகு ணம்வெளியா கும்."

இதன் கருத்து என்னவெனில், சமுத்திரத்தில் பார்ப்போர் கண்ணுக்கு எளிதில் தென்படுவன அதில் மிதக்கும் இழி துரும்புகளே. அது போல, ஒருவனுடைய தவறுகளே மேலெழுந்த பார்வையுடன் நோக்குவார் கண்ணுக்குப் புலப்படும். ஆனல் அதில் முத்தை நாடுவோன் அப்புன் துரும்பு

களைப் புறம்பே தள்ளி, அடியில் ஆழ்ந்து நோக்கல் போல் நோக்கினால்தான் அவனுடைய நற்குணங்கள் நன்கு விளங்கும் என்பதே.

(3) விலை யேறப்பெற்ற நன்முத்து உவர் நீரும் புலால் நாற்றமுங்கொண்ட கடலில், சிப்பி வயிற்றிற் றோன்றுவது போலவே நற்குண நற்செய்கையுடைய பெரியோர் இழி குலத்திலும் தோன்றல் இயல்பு. இதுபற்றி யன்றோ,

"கள்ளி வயிற்றின் அகில் பிறக்கும் மான் வயிற்றின்
ஒள் அரிதாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கும் அறிவார் யார்
நல்லாள் பிறக்கும் குடி ?

என்னப்பட்டது ?

(4) நத்தையின் வயிற்றிலும் முத்துப்பிறக்கும் என்ற பழமொழியும் இவ்வுண்மையை வலி யுறுத்துகின்ற தென்னலாம்.

(5) "ஆக்கும் அறிவான் அலது, பிறப்பினால் மீக்கொள் உயர்வு இழிவு வேண்டற்க." என்ற நீதியையும் முத்து கற்பிக்கின்றது. எவ்வாறெனில், முன்பு உரைத்த படி "சேயார் முகத்துச் சென்றுதைக்கு கழிமுடைப் புன்புலால் நாற்றம்" புறம் பொதிந்தும், அகம் வதிந்தும், உள்ள சிப்பியில் தோன்றிய காரணத்தால், முத்தை இழிவு படுத்துவார் எவருமிலர். அதன் உயர்ந்த தன்மையையே எவரும் பாராட்டுவர். அதுபோல அறிவு ஒழுக்கங்களிற் சிறந்த பெரியோர்கள் இழிகுலத்தில் தோன்றினும் அவர்களது குணஞ் செயல்களைப்பற்றிப் பாராட்ட வேண்டுமேயன்றி

அவர் தோன்றிய குலத்தின் இழிவு கருதி இகழலாகாது. நீதிவெண்பாவிலும்,

"தாமலை பொன் முத்துச் சாமரைகோ ரோசனைபால்
பூமருதேன் பட்டுப் புனுகு சவ்வா—தாம் அழல்மற்
றெங்கே பிறந்தாலும் எள்ளாரே: நல்லோர்கள்
எங்கே பிறந்தாலும் என்?"

என்று கூறி இருத்தல் காண்க.

உயர்தர முத்து உண்டாதலைப் பற்றிய பர்த்ருஹரி யாரது அபிப்பிராயம் உண்மையாக இருக்குமாயின், வேறு சில நீதிகளும் நாம் அறியலாகும். உதாரணமாக:—

(6) மழைத்துளி ஒன்று பழுக்கக் காய்ச்சிய இரும்பிற் படுமாயின் தன் உருவமே தெரியாமல் மறைந்து சுவருகின்றது. அதே மழைத்துளி தாமரை இலைமேல் தங்குமாயின், நீர் உரு நீங்கி முத்தின் உருக்கொண்டு விடுகிறது. அம் மழைத்துளியே ஆடியில் சுவாதி நக்ஷத்திரம் உச்சத்தில் இருக்கும்பொழுது சிப்பியின் அகட்டில் விழுமாயின் மிக்க வனப்பும் விலையும் வாய்ந்த முத்தே ஆகிறது. இதனால் அறிவும் பெருமையும் கொடையும் நட்பும், அதமர்சேர்க்கையால் அயர்ச்சியும் அழிவும், மத்திமர் சேர்க்கையால் மகிமைத் தோற்றமும், உத்தமர் சேர்க்கையால் உயர்ச்சியும் பெருமையும் உறலாகும் என்பது புலப்படும். இவ்வாறே சிநேக பாத்திரத்தைப் பற்றிச் சொல்லும் காலையில் பர்த்ரு ஹரியார்,

"காய்ந்தகரும் பொன்வாவிக்
கமலஇலை கடற்சிப்பி
தோய்ந்தநீர் பெயர்கெடல், மேல்
தோன்றல் முத்துத் தோன்றிடல் போல்

வாய்ந்ததமன்மத்திமன் உத்
தமர் தம்பால் மருவினர்கள்
ஆய்ந்துமேற் சொன்னபடி
அனுபவிக்கப் பெறுவாரே”

எனக் கூறி யிருக்கின்றனர். நிற்க.

(7) “முன் சொல்லியபடி சிப்பி குறித்த காலத்தில் மழை நீரைக் கிரஹிப்பதற்காகக் கடலின் அடியிலே உள்ள தனது இருப்பிடத்தை விட்டு மேலே கிளம்பி வந்து, தன் ஓட்டை அகலத் திறந்துகொண்டு மிதந்தவண்ணமாய் இருக்கையில், ஸ்வாதி நக்ஷத்திரத்து மழைத்துளி அதில் விழவும், அது தன் பழைய இடம் சேர்ந்து, தான் உட்கொண்ட நீர்த்துளியி னின்றும் அழகிய முத்தை உண்டாக்குவது போல், சில முமுக்ஷுக்கள் மோக்ஷத்வாரத்தின் கதவைத் திறக்க வல்ல மூலமந்திரத்தை உபதேசிக்கும் திறன்வாய்ந்த ஸத்குருவை, பற்பல இடங்களிலும் விடா முயற்சியுடன் தேடித்திரிகையில், அவர்களுள் ஒருவன் அதிருஷ்ட வசத்தால் அத்தகைய குருவை அடைந்து, தான் வெகுகாலம் ஆவலாய் விரும்பி இருந்ததும், எல்லாவித பந்தங்களையும் சேதிக்க வல்லதுமான ஞானோபதேச பாக்கியத்தைப் பெற்று, ஸம்ஸாரிகளின் ஸங்கத்தினின்றும் விலகி, தனது ஹிருதய குகையில் த்யான யோகத்தில் அமர்ந்து, சாச்வதமான சாந்தியைப் பெறுகிற வரையில் அதே நிலையிலிருக்கிறான்” என்ற ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் உபதேசமொழியும் உய்த்துணரத் தக்கது.

இவ்விதம் சிருஷ்டியில் ஒவ்வொரு பொருளும் சிந்திப்பதற்காம் சில குறிப்புடையது. சற்குண முடையோர் சற்றும் பயனிலா அற்பப் பொருளினும் அறநெறி காண்பர்.

அந்நிய தேச சஞ்சாரம்.

*நேயமுடன் பன்னாட்டில் நிகழ்இயற்கை வளம்,குடிகள்
நிலைமை, நீதி,
ஆயும்அர சியல்,அமைச்சர் திறன்,திருத்தம், வாணிபத்தின்
அமைவு, வீரர்,
சீயம்எனப் படைபழகு முறைமாந்தர், செயுமணத்தின்
சீர்த்தி, மற்றும்
பாயவளம் பிறவுமறிந் தன்னவற்றுள் ஏற்பனதம்
பால் அமைப்பான்,

† மண்ணாளப் புகுவர் தமக்கில் லாதிங்
கமை வின்றாய், மற்றுளோர்க்குக்
கண்ணாகி அனைவருக்கும் கலையாகி
நமை நடத்தும் கருவியாகி
உண்ணாடும் புரையகற்றும் உணர்வாகி
என்றென்றும் உயர்வோ ராவர்
எண்ணாடும் தகவுடைய தயல்நாட்டுச்
செலவென்ப தியம்பல் வேண்டா.

---

* ஈ. பலராமையர். † காலஞ்சென்ற பண்டிதர் முத்துராமலிங்கம் பிள்ளையவர்கள், B.A.

"அந்நிய தேச சஞ்சாரம்" என்னும் தொடர்மொழிக்குப் "பிற நாட்டிற்குச் செல்லல்" என்பது பொருள். ஒரே வித ஆகாரம் எவ்விதம் உடம்புக்குப் புஷ்டி தராதோ, அவ்விதமே, ஒரே இடத்தில் இருத்தல் புத்திக்குப் பலம் தராது. அன்றியும் நமது ஜீவனோபாயத்திற்கும், அறிவு விசாலத்திற்கும், தேகாரோக்கியத்திற்கும் ஆவசியகமான பொருள்களை நமது உறைவிட மொன்றிலேயே பெற முடியாது. இவற்றை நன்குணர்ந்தன்றோ எவ்வமில் புகழுடை ஔவை மூதாட்டியும் "திரை கடலோடியும் திரவியம் தேடு" என்றார். "திரவியம்" என்பதற்குப் "பொருள்" என்று அர்த்தம். "பண"த்தை மாத்திரம் "திரவியம்" என்று சொல்வது தவறு. ஏனெனில், அது பணத்தையே குறிக்குமாயின், மலைபடு திரவியம், காடுபடு திரவியம், நாடு படு திரவியம், நகர்படு திரவியம், கடல்படு திரவியம் என்னும் பொழுது அதற்கு அப்பொருள் பொருந்தாதிருப்பது காண்க. அன்றியும் நகர்படு திரவியத்தில், அரசன் பித்தன், கருங்குரங்கு, யானையாதிய சேர்ந்திருப்பதும், நாம் சொல்வதையே மெய்ப்பிக்கும். ஆதலால் கண்ணுக்கினிய காட்சிகளும், காதுக்கினிய ஓசைகளும், புத்தி யுக்தி, ஞானம் முதலியவும், திரவியமே. இத் திரவியங்களையே தேட ஒவ்வொருவரும் பிரயாசப்பட வேண்டும்.

இகபர சாதனத்திற் கின்றியமையாத கல்வி, அந்நிய தேச சஞ்சாரமில்லையேற் பூரணமுற்ற தாகாதென்பது நமது முன்னோர்களின் துணிபு: இக்காலத்தில், இங்கிலாந்து முதலிய ஊர்களிலுள்ள கலாசாலைகளிற் பயிலும் மாணவர் எவ்வளவு சிறப்பாக உயர்தரப் பரிக்ஷைகளிற் றேறியிருப்பினும்,

குறைந்தபக்ஷம் ஐரோப்பா கண்டமாவது சுற்றிப்பார்த்துத் திரும்பிய பின்னரே, அவர்கள் படிப்பு அநேகமாய் நிறைவேறியதாக மேனாட்டார் கருதுவதுபோலவே, அறிவிற் சிறந்த நமது பண்டைக்காலப் பெரியோர்களும், பிரமசரியத்தை அனுஷ்டித்துவந்த வித்தியார்த்திகள் யாவரும் குருகுலவாசம் செய்து முடிந்ததும், குறைந்தது காசி வரையாவது போய்வரவேண்டு மென்றும், அவ்வாறு போய்வந்த பின்னரே அன்னோர் விவாகாதி சடங்குகளை நிறைவேற்றி இல்லறதருமத்தை நடத்தவேண்டுமென்றும் கண்டிப்பாய் விதித்திருந்தனர். இவ்விதியும் வெகுகாலம் அநுஷ்டானத்திலிருந்து வந்தது. அப்புராதன வழக்கத்தின் காரணமாகத் தான் இப்போதும் விவாக காலங்களிற் "பரதேசிக் கோலம்" என்னும் போலிக் "காசியாத்திரை"க் காட்சியைக் காண்கிறோம். மறு கல்யாண முடிப்போர்க்கு இக் "காசியாத்திரை" யின்மையும் இதனுண்மையை இனிது விளக்கும்.

இருபிறப்பாளர் இவ்வாறு செய்யவேண்டு மென்ற நியதி ஆதிகாலத்தில் இருந்ததற்குக் காரணம் வருமாறு:—(1) வித்தியார்த்திகளாகிச் சஞ்சாரத்தின் பொருட்டுச் செல்வோர் தாம் செல்லுமிடங்களில் உள்ள கல்வி கேள்விகளிற் றேர்ச்சி பெற்ற வித்வ சிரேஷ்டர்களிடமிருந்தும் தாம் கற்றிராதவைகளை அறியலாம். (2) புத்தக மூலமாயும் நேரிற் காணாதும் அறிந்த பல விஷயங்களையும் அவற்றைப்பற்றிய உண்மைகளையும் நேரிற்கண்டு களிக்கலாம். (3) தமக்குள்ள அரைகுறையான அபிப்பிராயங்களைம் தப்பான விருப்பு வெறுப்புக்களையும் போக்கிக்கொள்ளலாம். (4) தம்மினும் கற்றோரை நோக்கிக் கற்றவெல்லாம் எற்றே இவர்க்கு நாமென்று கருத்

தழிந்து மேன்மேலும் கற்கலாம். (5) மனோச்ஸாகம் அடைந்து பெருந்தன்மையான எண்ணங்கள் உதிக்கப் பெறலாம். (6) ஈசுவரசிருஷ்டியின் வன்மையையும் பெருமையையும் அறிந்து தெய்வ பக்தியை மிகுதியும் பெறலாம். (7) பட்டுக் கெட்டாயினும் உலகியல் அறிந்து பயன் பெறலாம்.

எம்மதத்தி லாயினும் சரி, மாந்தரை நல்வழிப்படுத்திய மகான்களுடைய ஜீவிய சரித்திரத்தை நாம் வாசிப்போமேல் அவர்களிற் பெரும்பான்மையோர் தேச சஞ்சாரிகளாகவே இருந்திருக்கக் காண்போம்: ஸ்ரீ சங்கரர், ராமானுஜர், மத்துவர், சைவசமய குரவர்கள், புத்தர், மகமது, மோஸஸ், ஜொராஸ்டர், இயேசுநாதர், ஹோமர், விவேகாநந்தர் ஆதியோரது திருச் சரித்திரங்களே இதற்குப் போதிய சான்றாகும்.

"வேற்றுநாட் டின் சுவையை விடுத்த அறி
விலிகள் அக விளக்கம் நீங்கி
ஊற்றுநீர்க் கூவல் தனில் உறை தரு'மண்
டுக'மென ஒழிவர்" என்பர்.

அதாவது, தம் ஜன்ம பூமியின் நீங்கி அப்பால் செல்லாதாரைக் "கூப மண்டுகங்கள்" என்ன அறிஞர் இகழ்ந்துரைப்பர்: நாட்டு வளப்பம் கிணற்றுத் தவளை அறியாதது போலவே, வேற்றிடம் பார்த்திராதோர், கல்வியிலும், செல்வத்திலும், நற்குணத்திலும், நாகரீகத்திலும் தம்மினும் மேம்பட்டோர் இருக்கின்றனர் என்பதை அறியாதவராகின்றனர். தாம் கண்டதே உலகம் எனக்கொண்டு வீண்வாதம் செய்யும் இயல்பினராகிய இவர்கள், புதிய மாறுதல்கள் எவ்வளவு நல்லவையாயினும் அவற்றைக் கண்டித்துக் கடிந்துரைத்து இகழ்வர்.

அன்றியும், அவர்களுக்குத் தம்மிடத்துள்ள துர்க்குணங்கள் தெரியாமலே போகுமாதலின், அவற்றை அகற்ற அவர்களா லாகாது. "பெற்ற சிறுகப் பெறுத பெரிதுள்ளு"வோரே அறி வபிவிர்த்தி யடையலாமன்றி, "உள்ளதே போதும்" எனத் திருப்தியடைவோர் ஒருக்காலும் விருத்தியடையார்: விருத் திக்குக் காரணம் பிரயாசை. இப்பிரயாசையோ அதிருப்தி ஏற்படும் பொழுதுதான் நிகழ்வதாகும். இது நிற்க. பக்ஷி கள்கூடத் தமது உறைவிடம் நீங்கிக் கடலும் காடும் கடந்து ஆயிரம் காதத்துக்கும் அப்பாலுள்ள நாடுகள் புக்குச் சுகம் அனுபவிக்கும்போது, மனிதர்கள் மட்டும் ஏனோ தமதூரிற் கிடைக்கும் அற்ப சொற்ப சுகத்தோடு திருப்தியடைய வேண்டும்?

இதுகாறும் சொல்லியவற்றால் மாணவர்க்கு மட்டும் அன்னிய தேச சஞ்சாரம் அவசியம் என எண்ணிவிடக் கூடாது. எந்தத் துறையிலேனும் விருத்தியடைய விரும்பும் எவர்க்குமே இது இன்றியமையாதது. உதாரணமாக:—

கண் கண்டது கை செய்யும் தன்மையார் யாத்திரை செய்யின், ஆங்காங்குள்ள நூதன கருவிகளையும், பொருள் களையும், கண்டு திரும்பியதும், தம் நாட்டில் தம் யுக்தி புத்தி கொண்டு அவற்றைச் செய்வித்துப் பல்கச் செய்து பயனுற்ற வும் பயன் எய்தவும் முடியும்.

புறத்தேசத்துக்குப் போவோர் ஆங்காங்குள்ள ஜனங் களின் நடை உடை பாவனைகளைப் பார்த்தறிந்து, அவற்றுள் நல்லவைகளைப் பின்பற்றவும் தம்மிடத்திலுள்ள குறைகளை நீக்கவும் செய்யலாம்.

வியாபாரிகள் தேச சஞ்சாரம் செய்வார்களாயின், இன்னவிடத்தில் இன்ன பொருள்கள் மலிவாகக் கிடைக்கின்றனவென்றும், இன்னவிடத்தில் இன்ன பொருள்கள் அதிக விலைக்கு விற்கப்படுகின்றனவென்றும், இன்ன இடத்தில் அவை தேவை என்றும் அறிந்து, தம் பொருள்களைத் தேவையான இடங்களுக்கு அனுப்பி விற்றும், மலிவாய்க் கிடைக்கு மிடங்களிலிருந்து அவற்றைப் பெற்றும் வியாபாரம் செய்து மிக்க ஊதியம் பெறலாம்.

ராஜ தந்திரிகள் தேசங்களைச் சுற்றிப் பார்ப்பதால் ஒவ்வொரு நாட்டு அரசியலையும் சட்ட திட்டங்களையும் நன்கு கவனித்து ஆராய்ந்து, அவற்றுள் தீயன விலக்கி, நல்லன வோம்பித் தம் நாட்டுக் குடிகளுக்கு நன்மை செய்யலாம் என்பதற்கு ஸோலன் என்னும் கிரீஸ் தேசத்து ராஜதந்திரியே சான்றாவன்.

சீதோஷ்ண நிலைக்கும் பிறகாரணங்களுக்கும் அனுகுணமாக தேகாரோக்கிய நிலை இருப்பதால், அந்நிய தேச சஞ்சாரம் வியாதிபஸ்தர்களுக்கு அவசியமானது என்பது சொல்லாமலே விளங்கும்: ஆற்று நீரோடு ஊற்று நீர் கலப்பதாலும் ஆறுகளே பல மலைகள் குன்றுகளிற் புகுந்து வருவதாலும் அவற்றில் தேக ஆரோக்கியத்துக்கு அடுத்த பல லோஹ சம்பந்தங்களிருப்பதால் அவற்றில் மூழ்கும் வியாதியஸ்தர்கள் பிணிநீங்கிக் குணமுறுவர்.

சரித்திர ஆராய்ச்சியிற் பிரியங்கொண்டோர் நானா இடங்களிலுமுள்ள பூர்விகக் கட்டிடங்களையும் சிலாசாசனங்களையும் கொண்டும், அத்தேசங்களில் வழங்கும் கதைகளையும்

அந்நாட்டாரின் நடை, உடை, ஆசாரம், மதம், பாஷை, திருநாள் முதலியவற்றைக் கொண்டும், புராதன சரித்திர ஆராய்ச்சி செய்யவும், அத்தேசாசாரத்துக்குத் தக்க பல கட்டுக் கதைகள் எழுதவும் ஆகும்.

தர்ம சிந்தையோடு கூடியவர்கள் யாத்திரை செய்வார்களானால் பசி, பிணி, தாகம் முதலியவற்றால் தாம் வருந்த நேரிடுங்கால், பிறர் இயற்றிய அன்னசத்திரம், அறக்குளம், வைத்தியசாலை முதலியவற்றால் பயன் எய்தும்பொழுது, அப்பெரியோரது புண்ணியத்தைப் புகழ்ந்து தாமும் அவர்போல் நல்ல பேரெடுக்க வேண்டுமென்று விரும்பவும், அவர் செய்தன போன்று சிலவற்றையேனும் வேற்று இடங்களில் செய்து முடிக்கவும் கூடும்.

உயர்தர ஜாதியாருக்குத் தாழ்ந்த ஜாதியாரிடத்துள்ள வெறுப்பைக் குறைப்பதற்கு இருப்புப்பாதை, நீராவிக்கப்பல், தபால் வண்டி இவற்றிற் செய்யும் பிரயாணமே முக்கிய காரணமாக இருக்கிறது. இன்னும் இவைபோல் அந்நிய தேச சஞ்சாரத்தால் விளையும் நன்மைகள் அநந்தம். நிற்க,

யாத்திரை செய்வோருக்குப் பல பாஷைகள் தெரிய வேண்டிய தவசியம். தெரியாவிடில் அவ்வவ்வூர்ப் பாஷை தெரிந்த ஓர் ஆளைத் துணையாகக்கொண்டு செல்லல் நலந்தரும். ஆங்காங்குள்ள தக்க மனிதர்களுக்குச் சிபார்சு கடிதம் கொண்டு செல்வதும் அவசியம். அன்னோர் செல்லுமிடந்தோறுமுள்ள பிரபல கட்டிடங்கள், நீதிசாலைகள், துறைமுகங்கள், தேசாசாரம், அந்நியநாட்டாரின் பழக்க வழக்கங்கள், அவர்கள் அணியும் ஆடை ஆபரணம், விளைபொருள்கள்.

முதலியவற்றைக் கவனித்தும் பிரசித்திபெற்ற பெரியோர்களோடு பற்பல விஷயங்களைப்பற்றிச் சம்பாஷித்தும் திரும்பவேண்டும்.

அந்நியதேச சஞ்சாரம் ஐம்பதறுபது வருஷங்களுக்கு முன்கூட இக் காலத்தைப்போல எளிதில், நிறைவேறக்கூடியதா யில்லை. இப்பொழுதோ காலநஷ்டம், பொருள்நஷ்டம், தேகசிரமம், அச்சம் முதலியன இல்லாமல் சொற்பப் பொருள்கொண்டே நெடுந்தூரம் செல்வதற்கான சகல சௌகரியங்களும் அமைந்துள்ளன. புறத்தேச சஞ்சாரம் சாஸ்திர விரோதமன்றாயினும், சம்பிரதாயத்துக்கு விரோதமாக இருத்தல்பற்றி "ஜாதிக் கட்டுப்பாடு" என்ற பெருந்தொல்லைக்குத் தாம் உள்ளாகக்கூடுமே என்று பலர் சொல்லலாம். வைதிக கருமங்களை விதிப்படி நடாத்துவோர், யாத்திரை செய்யுங் காலங்களில் மதாசாரத்தை இழப்பதற்கஞ்சி ஒருவேளை அவ்வாறு ஆக்ஷேபித்தாலும், ஆங்கிலம் கற்றோர் அவ்வாறு கருதுங்காலம் கழிந்து விட்டது. இது ஆசாரக் குறைவு என்று என்னும் வைதிகர்களும் ஹிமா ஸேது பரியந்தம்கூட நமது இந்தியாவைச் சுற்றிப்பார்க்கக் கூடாதென்று எவரும் கட்டுப்பாடு செய்யவில்லையே !.

"பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" என்றவாறு, நம்முன்னோர் கடல் யாத்திரையை விலக்கியிருந்த வழக்கமானது தற்காலம் நம்மவர் பலராலும் கைவிடப்பட்டதாயிற்று. இன்னும் நாள் செல்லச் செல்ல அவ் வழக்கம் முற்றும் கைவிடப்படும். லௌகிகப் பிரவர்த்தகர்கட்குத் தேசயாத்திரை அவசியம் வேண்டியது போலவே, வைதிகப் பிரவர்த்தகர்க்கும் அவசியமாகும்.

கன்னியாகுமரி இராமேசுவரம் முதலிய இடங்களிலுள்ளவர்கள் காசி யாத்திரை செய்துவருகின்றனர். அயோத்தி காசி முதலிய இடங்களிலுள்ளவர்களோ சேதுயாத்திரை செய்கின்றனர். ஆகவே, ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் உறைவிடம் விட்டுச்சென்று பிறதேயங்கண்டு வருதலையே பாராட்டி வருதல் பிரத்தியக்ஷம். இங்ஙனம் யாத்திரைசெய்யும் பக்திமான்கள் ஒவ்வொரு ஸ்தலங்களிலே திருவருட்பேறு பெற்று வாழ்ந்தனராவர். நம்முடைய சமயாசாரிய சுவாமிகளென்ன, பாஷியக்காரர்களென்ன, நாரதாதி முனிசிரேஷ்டர்களென்ன, எல்லாரும் தேசயாத்திரை செய்தவர்களேயல்லது இருந்த இடத்திலே யிருந்தவரல்லர். இது பற்றியன்றே நமது தாயுமானசுவாமிகள்,

> "மூர்த்திதலந் தீர்த்தம் முறையாத் தொழுபவர்க்கு
> வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

எனத் திருவாய் மலர்ந் தருளுவாராயினர்.

இங்ஙனம் யாத்திரையால் எய்தும் பயன் பலவாயினும் அதனால் அடையும் துன்பமும் சிலவுண்டு. மலரிலுள்ள தேனை மட்டும் கிரஹித்துச் செல்லும் வண்டுகள்போன்று புறத்தேயங்களிற் செல்பவர் அங்கங்கே தோன்றும் நன்மையான காரியங்களைமட்டும் கிரஹித்துக்கொண்டு, தீயவற்றைப் பற்றுது விட்டொழிக்கவேண்டும். தந்தையற்ற செல்வப் புதல்வர்கள் பலர் செய்யும் பிரயாணம், குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டாற் போலாய் விடுகிறது. ஜான் கே என்னும் ஆங்கிலக் கவிஞன் இயற்றிய கட்டுக்கதைகளில் ஒன்றாகிய "உலகியல் அறிந்து திரும்பிய வாநரத்தின் பிர

யாண"மாகவே அவர்கள் பிரயாணமும் முடிகிறது. இதற்கு உதாரணம் கோர்ட்-ஆப்-வார்ட்ஸ் பரிசிலனைக் குட்பட்டுத் தேச சஞ்சாரஞ்செய்து மீண்ட சிலராவர். அந்தோ! இவர்கள் பெருங்குடியாகத் தலைதடுமாறிக் கெடுகின்றனர். மற்றும் பல தீயசெயல்களையே பின்பற்றுகின்றனர். புறநாட்டார் களின் தொழிற்றுறைகள் ஒற்றுமைகள் ஊக்கம் முதலிய நல்லனவெல்லாம் இவர்கள் மனத்திற் பதியவில்லை. குடிப் பதும், பந்து அடிப்பதும் குதிரை நடத்துவதும், சுஜாதி வெறுப்புந்தான் இவர்கள் மனத்தைக் கொள்ளை கொள்கின் றன. இவர்கள் செய்கை மிகவும் பரிதபிக்கற் பாலதேயாம். அதிகம் சொல்வானேன்? சாமனியப் படிப்பின் நிமித்தம் சென்னைசென்று திரும்புவோரிடம் எவ்வளவு துற்குண துற் செய்கைகளைக் காண்கிறோம்! நிற்க.

யாத்திரைசெய்து மீள்வதென்றால் எளிதான காரிய மன்று. செல்லும் இடம், காலம், தேகபலம் இவைகளைக் கவனிக்கவேண்டும். அவ்வவ் விடங்கட்கு வேண்டும் பல சாதனங்களைக் கொண்டுபோகவேண்டும். போகுமிடங்களில் தமக்காவது தம் நண்பர்கட்காவது தெரிந்தவர்கள் இருக்கி றார்களாவென்று விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும். "தான்செல்லுந் திசைக்குப்பாழ் நட்டோரை யின்மை" என்றார் நம் முதியோரே. பல வேறுவகைப்பட்ட ஜாதியாரோடு பழக வேண்டி வருதலின், கோபத்தை அறவே யொழிக்க வேண் டும். பசி தாகம் முதலியவற்றைச் சகிக்கவேண்டும். ஒவ் வொரு விஷயங்களையும் உற்றுநோக்கிக் கருத்திலமைத்துக் காகிதத்தில் குறிக்கவேண்டும். திரும்பி வருங்காலம்வரைத் தம் செலவிற்குவேண்டும் பொருள் முட்டுப்படாதவிதம்

முன்னமே திட்டம் செய்துகொள்ளவேண்டும். பாலர், விருத்தர், பிணியர் முதலினர் யாத்திரைக்கு அருகரேயல்லர். இத்தகைய சிரமம் பல இருத்தல் பற்றியன்றே "வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்'' எனக் கட்டளையிட் டருளினர் நம் வாதவூர் வள்ளலார். இவ்வாறு சிரமம் பல இருப்பினும் ஒவ்வொருவரும் தாம் இருந்த இடத்திலேயே இருந்து பொழுது போக்காமல் இயன்றவரை வேற்றுதேச யாத்திரை செய்து மீள்வது மிகவும் நலமேயாம்.

காங்கரு.

இரண்டு கால்களினாலேயே செல்லும் நாற்காற் பிராணி ஒன்று உண்டெனில் பலர் நம்புவார்களோ என்று ஐயமுறுகின்றோம். இந்தியாவிலும் ஆஸ்திரேலியா ஒழிந்த பிற இடங்களிலும் இதனைப் பார்த்திருப்பவர் சிலரே. அநேகருக்கு இதன் பெயர்கூடத் தெரியாது. இதனைப்பார்த்திருப்பவரும் சிற்சில மிருக காட்சி சாலையில் தான் பார்த்திருக்கக் கூடும். ஆனால் உயர்தரப் பாடசாலைகளிற் கல்விபயிலும் மாணவர்கள் இப்பிராணியின் உருவத்தைப் படத்தில் பார்த்தே இருப்பார்கள். ஆயினும் அவர்களுக்குக் கூட இது இரண்டு கால்களாலேயே செல்லும் விஷயம் தெரியுமோ என்பது சந்தேகம். இதனைப் பார்த்திராதாரும், இதனைப் பற்றியே கேட்டிராதாரும் இப்படியும் ஓர் பிராணி உண்டென அறிய வியப்புறுதிரார். இவ் வற்புத விலங்கின்

பெயர் காங்கரு. இவ் விநோதப் பிராணிக்கு இவ்விநோதப் பெயர் அமைந்த வரலாறே ஓர் விநோதம். அது வருமாறு:—

1770-ம் ௵ ஆஸ்திரேலியாவிற்போய் இறங்கிய ஆங்கிலக் கப்பலோட்டிகள் சிலர், அங்குள்ள காடுகளில், பின்னங் கால்கள் இரண்டினாலேயுமே குதித்தோடிச் செல்லும் இயல்பினதாய இப் பிராணியைக்கண்டு ஆச்சரியமெய்தி, பக்கத்திருந்த வேட்டைக்காரர்களை நோக்கி "இப் பிராணியின் பெயர் என்ன?" என்று வினவ, அவர்கள் "காங்கரு, காங்கரு" என்றனராம். காங்கரு என்ற வார்த்தைக்கு "சொல்வது விளங்கவில்லை" என்றே அர்த்தம். வேட்டைக்காரர் ஆங்கிலமே அறியாதவர்களா யிருந்தமையால் கப்பலோட்டிகளின் கருத்தும் கேள்வியும் இன்னவென அறியும் ஆற்றல் இல்லாதாராய் அவர்கள் சொல்வது தமக்கு விளங்கவில்லை என்பது பொருள்பட "காங்கரு" என்று தமது பாஷையில் விடை கூறினர். ஆனால் இவர்களுடைய பாஷையை அறிந்திராத ஆங்கிலக் கப்பலோட்டிகள் "காங்கரு" என்பது இதன் பெயரென்ன வேட்டைக்காரர் அறிவித்தனர் எனவே எண்ணிவிட்டனர். அதுமுதற்கொண்டு அப்பெயரே அவ் விலங்கிற்கு அமைந்ததாம். நிற்க.

இடம்.

ஆஸ்திரேலியா கண்டமே இப்பிராணியின் உற்பத்தி ஸ்தானமாகும். இப்பொழுது இஃது ஆஸ்திரேலியாவில் மட்டுமேயன்றி டாஸ்மேனியா, நியூகினியா, நியூஅயர்லண்ட், ஆருதீவுகள் முதலிய இடங்களிலேயே மிகுதியும் காணப்படுகின்றது. இது வேறெங்கும் அகப்படுவது அரிது.

தோற்றம்.

காங்கருவில் பலவகையுண்டு. அதிகப் பெரியது ஆடு அவ்வளவு பருமன் இருக்கும். அதிகச் சிறியது எலியினும் பெரிதன்று. இரு காலாலும் நிமிர்ந்து நிற்குங்கால் பெரிய காங்கரு சுமார் 7 அடி உயரமிருக்கும். மான்தலையைப் போன்றிருக்கும் அதன் சிரசு சரீரத்தையும் பிற உறுப்புக் களையும் உத்தேசித்து மிகச் சிறிதென்றே சொல்லவேண்டும். அதற்கு நீண்ட செவியும் கூரிய மூக்கும் உண்டு. ஏனைய பிராணிகளுக்குள்ளது போல் இல்லாமல் இதன் கீழ்த்தாடை எலும்புகள் இரண்டும் முற்பக்கம் சமமாக வளர்ந்திரா. காங்கருவின் பற்கள் வெகு கூர்மையாக விருக்கும். இவ் வினத்தைச் சார்ந்த எல்லாப் பிராணிகளுக்கும் சரிந்த வயி றுண்டு. பெண் காங்கருவிற்குப் புற வயிற்றில் குட்டிக ளிருக்கப் பையுண்டு. இப்பைக்குள் உட்புறமாக வயிற்றி னின்றும் வெளிக் கிளம்பிய முலைக்காம்புகள் நான்குள. அதிகக் குட்டையான அதன் முன்னங்கால்கள் இரண்டும் கைகள் போல் வேலைசெய்ய உதவுகின்றனவே யன்றி நடக்க உதவா. இக்கால்கள் கிழங்கு தோண்டவும் சொறிந்துகொள் ளவும் தன்னை எதிர்க்கும் பிராணிகளைக் கிழிக்கப் பற்றவுமே உபயோகமாகும். அன்றியும் இவை ஓரிடத்திலிருந்து தழை மேயும் சமயத்தில் கீழே ஊன்றப்படுவனவாம். இவ் விரண்டு கால்களும் அவ்வைந்து விரல்கள் கொண்டவை. இவ்வைந்து விரல்களிலும் கூரிய வலிமை வாய்ந்த வளைந்த நகங்களுண்டு.

பின்னங்கால்கள் முன்னங்கால்களினும் அதிக நீள மாயும் பலமுள்ளனவாயும் இருக்கும். இக்கால்கள் ஒவ்வொன்

றிலும் நான்கு விரல்களுண்டு. இந்நான்கில் சிறு விரல்களிரண்டும் ஓர்வகைச் சதைப்பற்றினால் பிணிக்கப்பட்டிருக்கும். இச்சிறு விரல்களிற்றான் கூரிய நகங்களுண்டு. இந்நகங்கள் அப்பிராணி தன்னைச் சொறிந்துகொள்ளவும் தன் மீதடையும் அழுக்கை அப்போதைக்கப்போது சுறண்டி எடுத்து சுத்தம் செய்துகொள்ளவும் உதவும். மற்றைய இரண்டு விரல்களிலுமுள்ள நகம் பார்வைக்குக் குளம்பு போலவே இருக்கும்.

வால் மிக்கத் தசைக்கட்டுள்ளதாயும், உரோமத்தினால் மூடப்பட்டதாயுமிருக்கும். அஃது அடிப்பக்கம் அகன்றும் நுனிப்பக்கம் குறுகியும் இருக்கும். அதன் நீளம் 3 அடி. குதிரையின் காலையும் ஓர் அடியினால் முறிக்கக்கூடிய பலம் அதற்குண்டு. காங்கருவின் நிறம் பழுப்பு அல்லது சாம்பல் கலந்த கறுப்பு.

குண விசேஷங்கள்.

காங்கரு கோபம் மூட்டப்படும் பொழுதல்லாமல் மற்றப்படி ஒருபொழுதும் எதற்கும் தீங்கிழைப்பதில்லை. இயற்கையில் அமரிக்கையானதும் அச்சமுற்றதும் தீங்கற்றதுமான இப்பிராணி, தன் சத்துரு தன்னையேனும் தனது குட்டிகளையேனும் எதிர்க்க வரும்பொழுது அதனுடன் சண்டித்தனமாய்ச் சண்டையிடும். இதன் முக்கிய சத்துருக்கள் வேட்டைக்காரரும் வேட்டை நாயுமே. ஒருமுறை இதன் எதிரி சிறிதேனும் இதன் கையில் சிக்கிவிடுமாயின் அது பிழைப்பது புநர்ஜன்மந்தான். நாய் எதிர்ப்பட்டால் அதனைத் தனது முன்னங்கால்களால் கரடிபோல் இறுகப்பற்றி அச்சத்தை விளைவிக்கக் கூடிய தசைக்கட்டுள்ள அதன் பின்

னங்கால்களின் கூரிய நகத்தால் சாகப் பீறிவிடும். சில சமயங்களில் அதனைக் 'கரகர'வெனப்பற்றி இழுத்துப் பக்கத்திலுள்ள ஆறு அல்லது குளத்திற்குக் கொண்டுபோய் அதில் அமிழ்த்திக் கொன்றுவிடுவதுமுண்டு. தன் குட்டிகளைக் காக்கும் விஷயத்தில் தனது ஆருயிரையும் ஓர் பொருட்டாய் அது எண்ணாது. இதனைப் பழக்கிப் பராமரித்து வருபவரிடம் இது பக்ஷம் பாராட்டும் என்று சொல்லுகிறார்கள்.

வழக்கங்கள்.

காங்கரு மைதான வெளிகளிலும், மரங்களும் புதர்களும் அடர்ந்த காடுகளிலும் கூட்டம் கூட்டமாகச் சஞ்சரிக்கும். நாம் முன்பு கூறியபடி அஃது இடம் பெயர்ந்து செல்வது வலிமை வாய்ந்த அதன் பின்னங்கால்களாலேயே. அஃது உட்காரும் பொழுது பின்னங்கால்கள் இரண்டடனும் தனது வலிமிக்க வாலையும் சேர்த்து முக்காலியாக்கி உட்கார்ந்து கொள்ளும். அப்பொழுது முன்னங்கால்கள் தொங்கிநிற்கும். அஃது இவ்வாறு உட்கார்ந்திருக்கும் நிலைமையில்தான் தனது சத்துருவின் வரவு, வாசனை, சத்தம் முதலியன எளிதில் உணரும். தன் கண்களை சூக்ஷ்மமாக உபயோகிக்க ஏற்றநிலையும் இதுவே. இதற்குச் செவிப்புலன், கட்புலன், பரிசவுணர்ச்சி ஆகிய இம்மூன்றும் கூர்மை. அச்சத்தால் இது தன்னைத் தற்காத்துக்கொள்ளுமாறு குதித்தோடும்பொழுது அதன் உடல் தராசுபோல் நிற்றற்கு வாலையே ஆதாரமாகக் கொள்ளும். இது பாய்ச்சலுக்குப் பத்தடி முதல் 30 அடி பாயும். காங்கருவில் பெரிய இனம் தழைத்துச் செழித்த புலங்களிலும் சிறிய இனம் அணிலைப் போல் மரத்திலும் சஞ்சரிப்பது வழக்கம்

இரை.

காங்கரு சாகபக்ஷணி. புல், பூண்டு, கிழங்கு, கீரை, தழை, பல்வகைப் பயிர் இவை முதலியவற்றைத் தின்னும். சுத்தநீரும் குடிக்கும். இது தனது இரையை கத்தரிக்கோல்போன்ற கூரிய முன்பற்களாற் கறிக்கும்.

குட்டி.

பிறந்தவுடன் காங்கருக்குட்டி எலிக் குஞ்சை விட அதிகப் பெரிதாயிராது. அதன் நீளம் ஒரு அங்குலந்தான் இருக்கும். அப்போது அது கண்திறவாமலும் செயலற்றும் இருக்கும். இக்குட்டி தாய்க் காங்கருவால் அதன் வயிற்றுப் பைக்குள் வைக்கப்படும். அவ்வாறு பால் குடிக்குமாறு வயிற்றிற் சேர்க்கப்பட்டவுடன் அது தாயின் முலைக்காம்பைப் பற்றிக்கொள்ள, தாய் தனது தேகத்தை ஒருவாறு சுருக்கிப் பாலை அதன்வாயிற் பீச்சும். இப்பையிலேயே அஃது இருந்து வளரும். தனக்குப்போதுமான பலம் உண்டானவுடன், அது கீழே இறங்கி வயிற்றில் கலநெருப்புக் கட்டிக்கொண்டு தாயுடன் சேர்ந்து புற்கறிக்க ஆரம்பிக்கும். அப்பொழுது எங்கேனும் சிறிது சலசலவெனச் சத்தம் கேட்டால் நடுங்கிப் பதறிப் பரபரப்புடன் பைக்குட்சென்று புகுந்துகொள்ளும். அப்பையை இஃது ஒளிவிடமாகவும் உறைவிடமாகவும் கொள்வது, தான் பிறந்து எட்டுமாத பரியந்தமே.

உபயோகங்கள்.

காங்கரு வேட்டைக்காக மட்டுமேயன்றி சிறந்த உணவாகவும் உபயோகப்படுவதால் அதன் மாமிசம் பெறவும் ஆஸ்திரேலியா கண்டத்தார் அதனை மிகுதியாகக் கொல்வர்.

தனியாக இருக்கும்பொழுது, இந்தியாவில் குறவர்கள் அணில்களைக் குத்துவதுபோல் ஈட்டிகொண்டு மறைந்திருந்து குத்தியும், கூட்டம் கூட்டமாக இருக்கும்பொழுது அவற்றைப் பலர்கூடிச் சூழ்ந்து வளைந்து நாய்களைக் கொண்டு, "சூ" விட்டும், குண்டாந்தடி, ஈட்டி முதலியன கொண்டு, நாயடி காலங்களில் நாயடிப்பது போல்,மூளை சிதற அடித்தும் அதனைக் கொன்று வீழ்த்துவர். அதன் வாலே மிக்க ருசியுள்ள பாகமாம். அதன் தோலினால் விரலுறை பாதரக்ஷை முதலியன செய்யப்படுகின்றன. நிற்க.

ஆஸ்திரேலியாவே அற்புதப் பிராணிகட்கெல்லாம் உற்பத்தி ஸ்தானமும் உறைவிடமும்போலும். ஏனெனில், "இருக்கமுடியாது" என்று நாம் எண்ணக்கூடிய பிராணிகள் பல அங்குள. அவற்றுள் சில கூறுவம். நாற்காற்பிராணியாக இருந்தும் முட்டையிடும் விலங்கு அங்குளது. வாத்தின் மூக்குப்போன்ற நாசியும், ஜவ்வுபோன்ற மெல்லிய தோல்கள் விரல்களின் இடையிற்கொண்ட கால்களும், மெல்லிய ரோமமும் விசாலமான பாதங்களும் தட்டை வாலுங் கொண்டது மற்றோர் விலங்கு. அவகாசம் ஏற்படும்பொழுது ஆஸ்திரேலியாவின் அற்புதப் பிராணிகள் என்றதலைப்பின் கீழ் வேறு சில பிராணிகளைப் பற்றி எழுதுவோம்.

தேகப்பயிற்சி.

சிலம்பமுதல் மல்யுத்தம், *தேசி, நடை, கொள்ளின்
பலம்பாவும்; மெய்இறுகும்; பன்னத்—துலங்குபசி
உண்டாம்; கபவாத மோடுவலி சூலையும்போம்;
உண்டாம் மனத்திடமும்; ஓர்.—தேரையர்.

மானிட ஜன்மத்திற்குரிய கடமைகளைத் தீரச் செய்யவும், இவ்வுலகத்தில் எங்கும் கடவுள் படைத்திருக்கிற சிறந்த பொருள்களைக் கிரமமாக உபயோகித்து அனுபவிக்கவும், பிறர்க்குச் சுமையாக இராமல் சகாயமாக இருக்கவும் வேண்டுமானல் அனைவரும் கூடுமானவரை சௌக்கியமாக வாழ்ந்திருக்கவேண்டு மென்பதை யாவரும் அறிவர்.

தேகம் சௌக்கியமாக இருப்பதற்குப் பயிற்சி இன்றியமையாதது. நமது சரீரம் பல உறுப்புக்களைக் கொண்ட ஓர் மிகநுட்பமான யந்திரம் போன்றது. தொழிலற்றுக் கிடக்கும் யந்திரம் விரைவில் பழுதுபடுவதுபோல் பயிற்சியற்ற உடம்பும் சிக்கிரத்தில் பாழாய்ப் போய்விடும். பயிற்சி செய்வதால் சரீரத்திலுள்ள துர்நீர் வேர்வை ரூபமாகத் தோலிலுள்ள எண்ணிறந்த துவாரங்களின் வழியாய் வெளிப்படுகின்றது. அன்றியும் பயிற்சி செய்வதால் மட்டுமே இரத்த ஓட்டம், பசி, ஜீரணம், நாடி நரம்புகளின் முதிர்ச்சி, மார்பு விசாலிப்பு, கறுப்பு இரத்தம் சிவப்பாக மாறுதல் முதலியனவும், ஞாபகசக்தி, சிந்தனைசக்தி, அறிவு, தற்காப்பு, தன்னம்பிக்கை முதலியனவும் பெறலாம்.

---

* தேசி - குதிரை.

"நாளுக்குநாள் தேகம் பலஹீன முறுகின்றது. இராப்பொழுது போகவே இல்லை. செவ்வையாகத் தூக்கம் என்பதே கிடையாது. தின்ற சோறு ஜீரணிக்கமாட்டேன் என்கிறது. பசி மந்தித்துப் போயிருக்கிறது. வாயில் ஜலம் ஜலமாக ஊறுகிறது." என்றும், சிற்சிலவேளை இவற்றோடு கூட, "மலச்சிக்கலினாலும் கீல்வாயுவினாலும் மிகவும் வருந்த வேண்டி வருகிற" தென்றும் அநேகர் முறையிடக் கேட்டிருக்கின்றோ மன்றோ? அவர்கள் அவ்வாறு வருந்திக்கூறக் காரணமென்ன? தேகப்பயிற்சி யின்மையே யாகும்.

"தேகத்திற்குப் பயிற்சி எவ்வாறு நன்மை பயக்கும் என்பதை ஒருவாறு விளக்கிக் காட்டுவோம்: நமது சரீர மானது பயிற்சிக்கப் படுங்கால் உடம்பும் கைகால் முதலிய உறுப்புக்களும் அசைகின்றனவல்லவா? அவை அசையும் போது தேகத்திலுள்ள மாமிசம் தனக்குள்ளே இருக்கும் உதிர நரம்புகளை அழுத்துகின்றது. பீச்சாங்குழலை அழுத்தினால் தண்ணீர் பீறிடுவது போல உதிர நரம்பை அழுத்தினால் ரத்தம் வேகமாய் ஓடி உடம்பு முழுதும் பரவும். உதிரம் பரவவே, சரீரத்தில் உள்ள இருதயம், சுவாஸாசயம், இரைப்பை, குடல் முதலிய உடலின் உள்ளுறுப்பு ஒவ்வொன்றும் வேகமாய் அசைந்து தன்தன் வேலையைச் செய்கின்றது. எங்ஙனமெனில், இருதயம் விரைவாய் அடித்துக் கொள்ள ஆரம்பிக்கிறது. அதிலிருந்து உதிரம்வந்து சேரும் போதெல்லாம் அதைச் சுத்திசெய்யப் போதிய காற்றைத் துரிதமாய்ச் சுவாசாசயம் ஏற்றுக்கொள்ளத் தொடங்குகின்றது. சுத்திகரிக்கப்பட்ட இரத்தம் வேகமாய் தேகமுழுதும் பரவி, கெட்டுப்போயிருக்கும் தாதுக்களைச் சுத்திசெய்து,

தான் செல்லுமிடமெல்லாம் ஊட்டம் கொடுத்துக்கொண்டே போகிறது உதிரம் விரைவாய் ஓடுவதால் ஒவ்வொரு உறுப்பும் உறுதியும் உற்சாகமு முறுகின்றது: இரைப்பை உணவை ஜீரணமாக்குகின்றது. குடல் அன்னப் பாகினின் றும் அன்னசாரத்தை வேருகப் பிரிக்கின்றது. நன்ருய் வேர்வை உண்டாகிறது. இவ்வாறு முன் உட்கொண்ட உணவு சிக்கிரத்தில் நன்ருய் ஜரித்துப் போவதால் பசி தீபன மும் நன்ருய் உண்டாகிறது."

தேகத்தைப் பயிற்சிக்கும் மார்க்கங்கள் பலஉள. அவற் றுள் சில கூறுவோம்:—

உலாவுதல் அல்லது நடத்தல்:—இது பயிற்சிகள் பல வற்றினும் சுலபமானது. என்ருலும் இது அவ்வளவு இன் பத்தைத் தருவதன்று. இன்பத்தைத் தரவேண்டுமானல் மனமொத்த நண்பர்களுடனும் பிறகாரணம்பற்றியும் அது செய்யப்படவேண்டும். நடக்கும் பொழுது எவ்விதமான கவலையும் மனத்தில் இருக்கக்கூடாது. நடப்பதால் கறுப்பு இரத்தத்தை சுத்தப்படுத்தக்கூடிய சுத்தமான காற்றுப் பெறுவதுடன் இரத்த ஓட்டமும் பெறலாகும். இப் பயிற் சிக்குக் காசுபணம் செல வில்லையே!

ஜோடிக் கட்டை சுழற்றல்:—இது மார்பை விசாலப் படுத்தித் தசையை இறுக்கிச் சரீரமுழுதும் இரத்தத்தைப் பரப்பும்.

'கசரத்' அல்லது தண்டம்:—குப்புறற்றுச் சரீர பாரம் முழுமையும், பூமியில் ஊன்றப்பட்ட கைகளிலும் கால் விரல் களிலும் நிறுத்தித் தேகத்தின் பல பாகங்களையும் நாணு

விதத்திலும் திருப்புவதால், தசை, நாடி, நரம்பு, முதலியன அழுத்தப்பட்டு தேகத்தின் ஒவ்வொரு பாகமும் தொழில் பெறுகின்றது.

இவற்றைத் தவிர இலாபத்தையும் இன்பத்தையும் தரக்கூடிய சில விளையாட்டுக்கள் உள்ளன. அவை கால்பந்து, கிட்டிப்பந்து, பலீன்சடார், கிளித்தட்டு, நீந்துதல், சிலம்பம், மல்யுத்தம், சவாரிசெய்தல், கத்தி சுழற்றல், குத்துச் சண்டை முதலியன. இவை செய்யுங்காலையில் நாம் நமது நண்பர்களுக்கிடையில் இருப்பதால் நம்மை அறியாமலே ஊக்கமும், உற்சாகமும் உண்டாகும். இவற்றுள் பெரும்பான்மைய பஞ்சேந்திரியங்களுக்கேனும், அவற்றுள் பலவற்றிற்கேனும் பயிற்சி தருவன ஆகும்.

தேகப் பயிற்சியினால் சரீரத்தின் ஒவ்வொரு பாகமும் வலிமை அடைகின்றது. அதிலும் எந்தப்பாகம் அதிகமாகப் பயிற்சி செய்யப்படுகிறதோ அதற்கே அதிக பலம். இதனைப் பின்வரும் விஷயங்களால் அறியலாம்:—கொல்லனுடைய கைகள் விடாமல் வேலை செய்வதால் எவ்வளவு உறுதியாய்ப் பருத்திருக்கின்றன! தையற் காரனுடைய கால்கள் அதிகமாய் உபயோகப்படுத்தப்படாமல் மடங்கி நாள் முழுதும் கிடப்பதால் எவ்வளவு மெலிந்து பலவீனப் பட்டிருக்கின்றன! ஆனல் எல்லா உறுப்புக்களையும் ஒரே சமமாக உபயோ

கிக்கின்ற சிப்பாய்கள் கப்பலாட்கள் முதலியவர்கள் எவ்வளவு புஷ்டியாயும் திடமாயும் வளர்ந்திருக்கின்றனர்! லிகிதர்களுடைய கைகள் பலனற்று மெலிந்திருக்கின்றன வன்றோ? ஆதலால் சரீரத்தின் ஒவ்வொரு பாகமும் நன்றாகப் பிரயாசப்படும்படி செய்யும் பயிற்சியே தேகத்திற்கு மிகவும் ஆரோக்யத்தைத் தரும் பயிற்சியாகும்.

தேகப்பயிற்சி செய்வோர் கவனிக்கவேண்டிய அதிமுக்கியமான விஷயங்கள் சில உண்டு:—

1. தேகப்பயிற்சி காற்றோட்டமான வெளிகளில் செய்யப் படவேண்டுமே யொழிய காற்றோட்ட மில்லாத இடங்களில் செய்யக்கூடாது.

2. இராக்காலத்தை விடப் பகற் காலத்தில் பயிற்சி செய்வதே தேகத்திற்கு நன்மை. ஏனெனில், இரவில் பனி, காற்று முதலியவற்றால் எவ்வளவோ கெடுதிகள் விளையும்.

3. வயிறு நிரம்பப் புசித்தபின் எப்போதும் கடும் பயிற்சி செய்யவே கூடாது. அளவிற்கு மிஞ்சிய பயிற்சியும் கூடாது. மிஞ்சினால் சுவாச ஓட்டப்பிறழ்ச்சி, கைகால் வீக்கம், குடற்பிதுக்கம், நரம்புகளின் முறை வழுவல் முதலிய தீமைகள் உண்டாகும்.

4. தேகப் பயிற்சியை ஒரு நாள் செய்து பல நாள் விட்டுவிடாமல் ஒழுங்காகச் செய்துகொண்டு வரவேண்டும்.

தேகப்பயிற்சியினால் உடலுரம் பெற்றவர்களே தமக்கும் பிறர்க்கும் பயன் பெறத்தக்க காரியங்களைச் செய்வாரென்று கருதியே முன்னாளில் கிரீஸில் அரசாங்கத்தார் அதிக சிரத்தையெடுத்துக்கொண்டு தேகப்பயிற்சி சம்பந்தமாய்ப் பல கண்டிப்பான விதிகள் ஏற்படுத்தியும் அதில் வல்லாருக்கு வருடந்தோறும் பரிசளித்தும் ஊக்கமூட்டி வந்தனர் என்னும் விஷயம், "ஒலீம்பிக் கேம்ஸ்" (Olympic games") என்பதைப்பற்றி அறிந்தோரும், கிரேக்கர் சரித்திரம் படித்தோரும் அறிவர். இப்பொழுது நமது காருண்ய துரைத்தனத்தாரும் வித்தியா இலாகா தலைவரும் முறையே இராணுவத்திற் சேர விருப்பமுள்ளார்க்கும், மாணக்கர்கட்கும் தக்க உபாத்தியாயர்களைக் கொண்டு தேகப்பயிற்சி கற்பித்துவருவதும் நம் நாட்டிலும் முன்காலத்தில் "கரடி"ப் பள்ளிக்கூடங்கள் இருந்ததும், இப்பொழுதும் ஆங்காங்கு இருந்துவருவதும் நாமறியாததன்றே? ஆயினும் நம்மவர்களிற் பலர் தேகப்பயிற்சி இத்தன்மைத்தென்றே அறியாமல் திரிவது நமது துரதிருஷ்டமே. ஐரோப்பாவுக்கு ஸாண்டோவும் இந்தியாவுக்கு வீமசேனன் எனத்தகும் இராமமூர்த்தியும் எவ்வளவு பெருமையை விளைத்திருக்கின்றனர்!

இனி நாம் சொல்லவேண்டிய விஷயம் சிறிதே: இளமை கடந்துவிட்டால் எவரும் எந்தக்காரியத்தையும் எளிதிற் செய்யமுடியாதாதலின் இன்றியமையாத இதனை ஒவ்வொருவரும் தக்க காலத்தில் செய்யத்தொடங்கித் தமக்கும் தமது தாய் நாட்டிற்கும் புகழைத் தேடுவாராக.

அதிகாலையி லெழுந்திருத்தல்.

"புத்தி யதற்குப் பொருந்து தெளிவளிக்கும்;
சுத்த நரம்பினரற் றூய்மை யுறும்;—பித்தொழியும்;
தாலவழி யாதபித்தம் தத்தநிலை மன்னும்; அதி
காலைவிழிப் பின்குணத்தைக் காண்."

சரீர சுகத்திற்கு நித்திரை இன்றியமையாதது; ஆயி னும் பொழுதொடு படுத்துறங்கிப் பொழுதொடு விழித் தெழுந்தால்தான் நன்மை உண்டாகும் என்பதை எவரும் மறக்க வொண்ணாது.

இவ்வுலகத்தில் சீரும் சிறப்பும் சௌக்கியமும் சம்பத்தும் வாய்ந்த பெரியோர்களுடைய ஜீவிய சரித்திரத்தை வாசிப்பமேல் அன்னோரிற் பெரும்பாலர் அதிகாலையில் எழுந்திருக்கும் வழக்கத்தைக் கைக்கொண்டவர்களென்றும், அவ்வதி முக்கிய வழக்கம் அவர்களிடத்திலிருந்ததன் நிமித்தமே அவர்கள் அதி உன்னத நிலையுற்றனர் என்றும் தெரியவரும்.

நம் முன்னோர்களிடத்தும், தற்காலத்தில் சில கிராமாந்தரங்களிலுள்ளோரிடத்தும், "வைகறைத் துயிலெழு"ம் வழக்கம் உண்டென்பதை நாம் நன்கறிவோம்: இன்றும், நாட்டுப்புறங்களில் அந்தணோத்தமர்களும் பிறரும் வைகறை யாமத் துயிலொழிந்து புனலாடி, இந்திராக்ஷி, சிவகவசம், தேவாரம், திருவாசகம், திருவாய்மொழியாதிய இசைப்பதும், தேவாலயங்களில் 'திருப்பள்ளி யெழுச்சி' முதலியன நடத்துவதும் அறியாதார் யார்? கோழி, காக்கை, வானம்பாடி

யாதியனகூட அதிகாலையில் எழுந்து உல்லாசமாய் இனிய குரலுடன் பாடும்போது, அறிவுடையோராகிய மனிதர், அக் காலத்தைத் தெய்வ ஸ்துதியிலும், விசேஷ மனோபிவிருத்தி செய்வதினும் பற்பல காரியங்களில் சித்திபெறுவதிலும் செலவு செய்யாமல் தமது சரீரத்துச் சுத்த நரம்புக்கும் படிப்புக்கும் பயிற்சிக்கும் கேடுண்டாகத் தூங்குவது எவ் வளவு அயுக்தமான விஷயம்!

ஆயினும் பெரும்பான்மையோர் விடிந்து 8 மணிவரை கூட 'கண கண' என்று துப்பட்டியைப் போர்த்துக்கொண்டு தூங்குகின்றனர். 9 மணிக்குப் பின்னும் உறங்குகிற உத்த மர்களு முண்டு. இன்னோர் காலை விழிப்பின் நற்பயனை யறி யாததனாலோ அல்லது சோம்பேறித் தனத்தாலோ இவ் வாறு செய்துவருகின்றனர். இவ்வாறு தூங்குவது தவறு. ஆதலின், பொழுது புலருமுன் எழுந்திருத்தலால் உண்டா கும் நன்மைகளையும் எழாது படுத்துறங்குவதால் நேரும் தீமைகளையும் ஒருவாறு விளக்கிக் காட்டுவாம்:—

வைத்திய சாஸ்திர நிபுணர்கள் "அதிகாலையில் விழிப்ப வர்களுக்கே புத்திக்குத் தெளிவை யுணர்த்துகின்ற "சுத்த நரம்பு" என்ற ஒருவித நரம்பினது துவாரத்தில் நிறைந் திருக்கிற நீரானது கலங்கலின்றிப் பரிசுத்தமாக இருக்கும். பைத்தியம், கோபம் இவை நீங்கும். வாதமும் பித்தமும் சிலேஷ்மமும் தத்தம் இடங்களிலேயே பொருந்தும்' என்கின்றனர்.

இரண்டாவது:—காலைப்பொழுதிற்றூன் இராத்தூக்கத் தின்பயனாக புத்தி களங்கமற்றும் சரீரம் களைப்பற்றும் இருக்

கும். அதுவே வெய்யோன் கிரணம் வெளிப்படாக் காலம்; மீங்கிளர் தென்றல் வீசும் நற்சமையம். ஆதலின் படியாத விஷயங்களைப் படித்தற்கும் படித்த விஷயங்களைச் சிந்திப்பதற்கும் ஏற்ற தருணமாகும். இதுபற்றியே வேதாத்தியயனம் பண்ணுவோர், பாடகர்கள், தேகப்பயிற்சி செய்வோர் முதலிய சகல வித்தியார்த்திகளும் சிரமப்பட்டு அதிகாலையில் எழுந்து தத்தம் வித்தைகளை முற்காலத்திற் கற்றார்கள்; இன்றும் கற்று வருகிறார்கள்.

மூன்றாவது:—மலஜலங்கள் கழிப்பதற்குத் தக்க தருணம் காலை வேளையே. அப்பொழுது நித்திரை செய்தால், அவை வெளியாகாமல் வயிற்றில் தங்கி விடும். இவ்வாறு தங்குவதால் பலவித வியாதிகள் உண்டாகும். அவற்றைக் காலாகாலத்தில் கழித்து விட்டாலோ எவ்விதத் துன்பமும் இராது.

நான்காவது:—இருட்டுவேளையில் நாம் துயிலெழுந்தெழுந்து இரண்டொரு நிமிஷம் கழித்து மினுக்கு மினுக்கெனச் சிற்றொளி காட்டும் ஓர் விளக்கைப் பார்க்கின் நம் கண் கூசமாட்டாது. அவ்விளக்கொளியை வரவரப் பெரிதாக்கிய காலத்தும் கண்ணுக்கு எவ்வித அதிர்ச்சியும் உண்டாகாது. இவ்வாறின்றி, விழித்தும் விழியாதும் திடீரென்று கொழுந்து விட்டெரியும் தீவர்த்தி ஒளியைப் பிடித்தால் கண்ணுக்கு எவ்வளவு கூச்சமும் அதிர்ச்சியும் உண்டாகும்? அற்ப நெருப்பைப் பார்த்தாலே கண்ணுக்குக் கெடுதியெனின், பெரிய அக்கினிப் பிழம்பாகிய சூரியனை எட்டு மணிக்குப்பின் காண்டல் கண்ணுக்கு எத்துணைக் கேட்டைத்தரும்! ஞாயிறு உதித்திடும் முன்னரே எழுந்து சிறு

வெளிச்சமுள்ள இள வெயிலே முதலிற் கண்ணுற்று வரவா அதன் சுடுகொடுங்கதிரைக் கண்ணுறினே கண் சிறிதும் கெடாது. இதுபற்றியே சர்வக்ஞான கடவுள் பகலுக்குப் பின் இரவும், இரவிற்குப்பின் பகலும் வரும்போது இவ் விரண்டிற்கும் இடையில் அந்தி சந்திகளை ஏற்படுத்தி இருக் கிறார். இவ்வந்தி சந்திகளை ஆங்கிலத்தில் "ட்வைலேட்" (Twilight) என்பர். "Twilight" என்ற பதத்திற்கு (Two lights) இரு வெளிச்சம் என்பது பொருள். அதா வது பகலும் இரவும் சந்திக்கும் போதுள்ள வெளிச்சம்.

ஐந்தாவது:--வைகறை தேவர்களுக்குரிய காலமாதலால் இதில் நித்திரை செய்யின் தேவசாபமுண்டாகும். அச் சாபத்திற் குள்ளாகாதபடி தக்க நேரத்திலேயே எழுந்திருக்க வேண்டும்.

ஆறுவது:—ஒவ்வொருவரும் மலஜலம் கழித்துப் பல் தேய்த்து முகங்கழுவி ஸ்நானம் செய்து தாங்கள் முன்பு உடுத்த வஸ்திரம் தோய்த்து சுத்த உடையணிந்து நித்திய கர்மானுஷ்டானம் பூஜை முதலியன முடித்துக் காலேஉணவு அருந்துவதற்கே சுமார் 1 மணி அல்லது $1\frac{1}{2}$ மணி நேர மாகும். 7 அல்லது 8 மணி வரை தூங்கிப் பின்பு இவற் றைச் செய்தால் 9 மணியாவது ஆகுமல்லவா? இதற்கே 9 மணியாய்விட்டால் பிறகாரியங்களை எப்பொழுது பார்க் கிறது? இக்காரியம் யாவும் நாம் வயிற்றுப்பாட்டின் நிமித் தம் உழைத்துப் பொருள் தேடச் செல்லுமுன் முடிய வேண் டியவைகளன்றோ? ஆதலின் தத்தம் சரீரத்தைப் பொறுத்த இவ்வின்றியமையா வேலையைச் செய்யும் பொருட்டாவது அதிகாலேயில் எழுந்திருக்க வேண்டாமா?

இவற்றை யெல்லாம் நன்குணர்ந்தன்றோ உலகத்தார்க்கு நீதிநூற் பொருட்களை நுணுக்கமாகச் சிறுசிறு வாக்கியங்களால் வெளியிட்ட ஒளவையார், 'வைகறைத் துயிலெழு' என்று கட்டளையிட்டுள்ளார். ஆகிலும் இந்நீதியை இளமை தொட்டே கற்ற அநேகர் கற்றறி மூடராகி நெடுந்துயில் கொள்ளுகிறார்களே! ஈதென்ன பரிதாபம்! இத் துர்வழக்கத்தால் வரும் பெரிய நஷ்டத்தை ஒரு உதாரணத்தால் உணர்த்துவோம்: ஒரே வேளையில் படுத்துறங்கும் இருவருள் ஒருவன் மட்டும் பிரதிதினமும் 5 மணிக்கும் மற்றவன் 7 மணிக்கும் எழுந்திருப்பதாக எண்ணுவோம். இவ்வாறு நாற்பதுவருஷம் நடந்துவந்தால் நாள் ஒன்றுக்கு 2 மணி வீதம் 29,000 மணிநேரம் வித்தியாசப் படுமன்றோ? இரண்டு மணிநேரம் தாழ்த்து விழிப்பதால் உண்டாகும் வித்தியாசம் இவ்வளவாயின் 8 மணிக்கு எழுந்திருப்பின் 43,500 மணிநேரம் அல்லவா வித்தியாசப்படும்? பெருந்துயில்கொள்வோன் விழித்திருப்பானாயின் இத்தனை மணிநேரங்களில் எவ்வளவு காரியங்களைச் செய்திருக்கக்கூடும்? அவன் மாணக்கனாயிருப்பின் எவ்வளவு கல்விப்பொருளும், வணிகனாக இருப்பின் எவ்வளவு செல்வப் பொருளும் பெற்றிருக்கலாம் பாருங்கள்!

இதுகாறும் கூறியவாற்றால் அதிகாலையில் எழுவதாலுண்டாகும் நற்பயன்களும், எழாததால் வரும் தீமைகளும் பச்சை மரத்தறைந்த ஆணிபோற் படிப்போர் மனத்திற் பதிந்தே யிருக்குமென் றெண்ணுகிறோம்.

"ஆ! ஆ! இவ் வுண்மைகளை ஓராமல் இதுகாறும் நமது வாணாளை வீணாளாகக் கழித்துத் தூங்கித் தொலைத்

தோமே" என்று அநேகர் வருந்தக் கூடும். அவ்வாறு வருந்துவோர்க்கு நாம் சொல்லும் புத்திமதி இதுவே: சென்று போனகாரியத்தை நினைந்து நெஞ்சம் புண்ணுவது வீண். (ஏனெனில் சென்ற நாட்கள் என்றும் வாரா) இனியேனும் இயன்றவரை இத் துர்வழக்கத்தை ஒழிக்கப் பாடுபடுவதே அறிவிற் கடுத்த விஷயம். "வருந்தினால் வாராதது ஒன்று மில்லை." நிற்க.

அதிகாலையில் தூங்கித் தூங்கிக் காலத்தைக் கழித்தோர் பலர் வைகறையில் எழவேண்டும் என்று எவ்வளவோ உறுதியாகத் தீர்மானித்துக்கொண்ட போதிலும் அவர்களுக்கு அக்காலத்தில் துயிலொழிந்தெழ இலேசில் மனம் வாராது அவர்களை எழுப்பினாலும் ஏதாவது சாக்குப்போக்குக்கள் சொல்லி உறங்கவே செய்வர். அல்லது எழுப்புவோரது தொந்தரவு பொறுமல் எழுந்தும், அவர்களை மனத்திற்குள் வைதுகொண்டே ஓர் மறைவிடந்தேடி ஆங்கு முடங்கிக் கிடப்பர். இன்னோர் பிரஷியாதேசத்தை ஆண்ட "மகா" பிரடரிக் (Frederick II) கின் நன்மாதிரியைப் பின்பற்றினால் மிக்க நன்மையுறலாகும்:

இம் மஹான் தாம் அதிகாலையில் தூங்கும் துர்வழக்கத்தை அறவே ஒழிக்கத் தீர்மானித்துத் தம்மை சுமார் $4\frac{1}{2}$ மணிக்கே எப்படியேனும் எழுப்பிவிடும்படி ஒருநாள் வேலைக்காரன் ஒருவனுக்குக் கண்டிப்பாகக் கட்டளையிட்டனர். இக் கட்டளைப் பிரகாரம் வேலைக்காரனும் மறுதினத்தில் குறித்த வேளையில் மகாராஜாவை எழுந்திருக்கும்படி கேட்டுக்கொண்டான். ஆயினும் கரும்புபோன்ற நித்திரையினின்றும் எழ அவர்க்கு மனம் வரவில்லை அரசர் எழாதது

கண்டு வேலைக்காரன் அவரைத்தொட்டு எழுப்பி "மகா ராஜா! தயவுசெய்து எழுந்திருக்கவேண்டும்" என்று கெஞ்சி னன். அப்போதும் அரசர்க்கு எழ மனம் வராமல் அரைத் தூக்கத்துடன் "அடா! என்னைத் தொந்தரவு செய்யாதே. மிக்க சிரமமாக இருக்கிறது. சற்றுநேரம் கழித்து என்னை எழுப்பு" என்றார். வேலைக்காரனோ "அஃதெல்லாம் முடி யாது. இப்பொழுதே தங்களை எழுப்பிவிட எனக்கு உத் தரவு. ஆகலால் அதன்படியே நான் செய்துதீருவேன். தாங்கள் எழுந்தே தீரவேண்டும்" என்றான். அரசர் மூடிய கண்ணுடனேயே "நீ சொல்லியது சரியே. ஆயினும் இன் னும் அரையேஅரை நாழிகை என்னைத் தூங்கவிடு. பின்னர் என்னை எழுப்பு" என்றார். ஆயினும் வேலைக்காரன் "அப்படி உங்களுக்கு இடம்தர எனக்கு உத்தரவில்லை"என்று கண்டித் துக்கூறி, முன்பு அரசர் தன்னிடம் சொல்லிவைத்திருந்த படியே ஓர் கைச் சவுக்கத்தை எடுத்து அதைப் பனிபோற் குளிர்ந்த நீரில்நனைத்து வேந்தருடைய முகத்தில் மூடினன். அரசர் குளிர் பொறுமல் தக்ஷணமே எழுந்து முதலில் வே லைக்காரன்மீது கோபங்கொண்டனர். ஆயினும் அக்கோபம் 'நீர்கிழிய எய்த வடுப்போல' மாறிற்று. மாறவும், அவர் வேலைக்காரனை விளித்து "அப்பா! நீ அதி தைரியசாலியே. உன்னைப்பிடித்த நல்லவேளையே என்னை எழுப்பினை. என்னை மட்டும் நீ தூங்க விட்டிருந்தாயாயின் நீ படும்பாடு சொல்லி முடியாது. உன் தலையை வாங்கியே இருப்பேன்" என்று சொல்லி வேலைக்காரனின் துணிகரச்செயலைப் பலவாறு வியந் தோதினர். இவ்வாறு இரண்டொரு நாட்கள் செய்யவே அவ் வரசர் காலையில் துயிலும் வழக்கம் நீங்கி, எவரும் எழுப் பாமலே வைகறைத் துயிலெழுந்தனர். நிற்க.

அதிகாலையில் எழ விருப்பமுடையோர் சுத்த வீரரும் ராஜதந்திர நிபுணரும் நூலாசிரியருமான இப்பிடரிக் அரசரின் சரித்திரம் மட்டுமேயன்றி மகா அலெக்சாந்தர், நெப்போலியன், கிராஞ்சி, ஹானிபால், உவில்லியம்ஜேம்ஸ் பண்டித ராதியோருடைய சரித்திரத்தையும் படித்துணர்க.

இனிக் கடைசியாக இரண்டொரு வார்த்தைகூறி விஷயத்தை நிறுத்துவோம்:

"(இரவிற்) சீக்கிரம் படுத்துறங்கிக் (காலையிற்) சீக்கிரம் எழும் வழக்கத்தால் ஒருவனுக்குத் தேகாரோக்கியமும் திரவிய லாபமும் தெள்ளறிவும் உண்டாகும்" என்னும் முதுமொழியை யாவரும் மறவாமல் இளமை தொட்டே,

"வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதிற்
றந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை."

என்பதைக் கடைப்பிடித்து, வைகறையாகிய பின்சாமத்தில் விழித்துக்கொண்டு செய்தற்குரிய கருமங்களையும் (நல்வழியில்) திரவியம் சம்பாதித்தற்கு வேண்டிய மார்க்கங்களையும் நன்காய்ந்து, பின்பு தக்க விதத்தில் தாய் தந்தையரைத் தொழுதெழுந்து எக் காரியத்தையும் செய்யத்தொடங்க வேண்டும்.

"காட்டுக் களைந்து கலங்கழீஇ இல்லத்தை
ஆப்பிநீர் எங்குந் தெளித்துச் சிறுகாலை
நீர்ச்சால் கரகம் நிறைய மலரணிந்து

இல்லம் பொலிய அடுப்பினுள் தீப்பெய்க
நல்ல துறல்வேண்டு வார்"

என்பதை அனுஸரித்து, மகளிர், அதிகாலையில் எழுந்து மங்களகரமாக வீட்டை விளக்கிச் சாணிநீர் தெளித்து, மெழுகிப் பாத்திரங்களைச் சுத்திசெய்து பெரிய நீர்ச்சால்களிலும் சிறிய கரகங்களிலும் மலர்களையிட்டுப் பிறகு அடுப்பில் நெருப்புமூட்டிச் சமைக்கத் தொடங்குவார்களாயின் செல்வம் ஆரோக்கியம் முதலான சகல பாக்கியங்களுமுண்டாகுமென்பதற்கு ஐயமில்லை.

கார்க்.

கார்க்கை நாம் அடிக்கடி பார்த்தும் உபயோகித்தும் வருகிறோமாயினும், அது நம் நாட்டில் இல்லாக் குறையால் அஃது இன்னதென்பதும், எப்படிக் கிடைக்கிறதென்பதும், நம்மவரில் அநேகர் அறிந்திருக்க மாட்டார்கள். "கார்க்"என்னும் பதத்தின் அர்த்தம் யார்க்கேனும் தெரியுமானால் அவர்களுக்கு அஃது இன்னதென்பதும், நன்கு தெரியும்."கார்க்" என்பதற்கு "மரப்பட்டை" என்பது பொருள். ஆகவே, இது இயற்கையில் பொதுப்பெய ராயினும், சிறப்புப் பெயரே யாகி என்றென்றைக்கும் பச்சையாயிருக்கும் ஓர்வகைச் சிந்துரப் பெருமரப் (Oak) பட்டையையே உணர்த்துவதாகும்.

உற்பத்தி:—இம்மரம் சீதளப் பிரதேசங்களில் பயிராகும். இதனை ஐரோப்பாவில் பிரான்ஸ், ஸ்பெயின், போர்ச்சுகல் முதலிய தேசங்களிலும், வட ஆப்பிரிக்காவில் கடலோரமாயுள்ள நாடுகளிலும், பல இடங்களில் ஏராளமாகக் காணலாம். இவற்றுள், பிரான்ஸில் பயிராகும் மரமே சிறந்த கார்க்கைத் தருவதாகும்.

இம்மரம் 35 அல்லது 40 அடி உயரம் வரை சாதாரணமாக வளரும். அடிமரத்தின் சுற்றளவு ஏறக்குறைய 8 அடி. பயிரிடப்பட்ட இருபது அல்லது இருபத்தைந்து வருஷங்களுக்குப் பிறகு தான் அதன் பட்டை முதல் முதல் எடுபடும். ஆயினும் அப்போது எடுபடும் பட்டை "மோட்டா" வாகவும், பொருக்குப் போன்று கரடு முரடாகவும், துவாரங்கள் நிரம்பியும் இருக்கும். ஆதலால், அது விசேஷமாகப் பயன்படமாட்டாது. வலையர்கள், மீன் பிடிக்கும் தங்கள் வலைக்கு மிதப்பானுக இவைகளை உபயோகிப்பார்கள்.

முதல்முறைப் பட்டை எடுத்தானதும் பத்து வருடங்களுக்கு அதினின்றும் பட்டை எடுபடமாட்டாது. பிறகு மரத்தின் தகுதிக்கு ஏற்ப 10 வருஷங்களுக்கு ஒரு முறையேனும் 8 வருஷங்களுக்கு ஒரு முறையேனுமே பட்டையை எடுப்பார்கள். பட்டை அடிக்கடி எடுக்கப்பட்டால் எந்த மரத்துக்கும் அழிவு நேரிடுவது இயல்பாக இருக்க, கார்க் மரத்துக்கு மட்டும் எவ்வளவுக்கெவ்வளவு பட்டை எடுபடுகிறதோ அவ்வளவுக் கவ்வளவு நன்மையே யாகும். பட்டை எடுபடாத கார்க் மரம் 50 அல்லது 60 வருஷங்

களுக்குள் இறந்து பட்டொழிவதும், கிரமமாகப் பட்டை எடுபடும் மரம் 180 வருஷங்களுக்குக் குறையாமல் ஜீவித்திருப்பதுமே இதற்குப் போதிய சான்றும்.

பட்டை எடுபடும் பருவம்:—கோடைகாலமே பட்டை எடுக்க ஏற்ற காலமாம். ஜூலை ஆகஸ்டு மாதங்களில் அது சம்பந்தமாய் வேலை செய்வோர் பலரை அந்த உண்டாகுமிடங்களிற் காணலாம்.

பட்டை பெறுமாறு:—பட்டையானது போதிய அளவு பருத்து முதிர்ந்தவுடன் (அதாவது மரம்வைத்துக் குறைந்தது இருபது வருஷங்களாவது ஆனபிறகு), அதனை எடுக்க வேலை செய்வோர், பூமிக்கு இரண்டொரு சாணுக்கு மேலும், கிளைகள் தொடங்கிய விடத்திற்கு இரண்டொரு சாணுக்குக் கீழும் மரத்தைச் சுற்றிலும் வட்டமாய் ஆழக்கீறி அடையாளம் செய்துகொள்ளுவார்கள். இவ்வாறு கீறுகையில் மரத்தின் அகணி (உட்பட்டை), யாதொரு கேடும் உறாதபடி கீறவேண்டும். ஏனெனில், அகணி கிறுண்டால் அது கொஞ்ச காலத்துக்குள் வாடி உலர்ந்து போவதோடுகூட மரத்திற்கே அழிவை உண்டாக்கும். நிற்க. இக்கீறல்கள் பட்டை இன்ன இடத்திலிருந்து இன்ன இடம் வரைதான் எடுக்கலாமென்று காட்டக்கூடிய அடையாளங்களாம். பிறகு மரத்தைச் சுற்றி நெடுக்காகவும், குறுக்காகவும், மூன்று அல்லது நான்கு இடங்களில், முன்போல் (அதி நுட்பமான அதன் அகணிக்கு யாதொரு பழுதும் உறாதபடி) கீறி மெதுவாய் உளி முதலியவற்றின் உதவியால் தகடு தகடாக அவற்றைப் பெயர்த்தெடுப்பார்கள்.

பட்டையைப் பண்படுத்துமாறு:—இவ்வாறு எடுபட்ட பட்டையானது தான் எடுக்கப்பட்ட சிறிது நேரத்திற்கெல்லாம் சுருண்டுகொள்ள ஆரம்பிக்கும். அது அவ்வாறு சுருளாதபடி அதைத் தண்ணீரில் ஊறவைத்து அச்சுப்போன்ற பள்ளங்களில் திணித்துத் தட்டை ஆகுமாறு அழுத்தப்படும். பிறகு அதை வெயிலில் காயவைத்து, அதிலுள்ள அற்பசொற்ப துவாரங்களும் நெருங்கி ஒடுங்கி அடைபடும் பொருட்டும், அத்துவாரங்களுள் அடைந்திருக்கும் பூச்சிகள் சாகும்பொருட்டும் பட்டையை நெருப்பில் சூடுற வாட்டுவார்கள். அப்போது பட்டைகள் மீண்டும் சுருள ஆரம்பிக்கும். அவற்றை நிமிர்த்தி மீண்டும் தகடாக்குமாறு பளுவுள்ள பாரங்களை அவற்றின்பேரில் பலநாள் வைத்திருப்பார்கள். பிறகு பட்டைகள் மீண்டும் பருமனாகுமாறு அவற்றை 5 அல்லது 6 மணி நேரம் தண்ணீரில் ஊறவைப்பார்கள். இதற்கப்புறம் தகடுகள் போன்ற அப்பட்டைகளை ஒன்றன் மேல் ஒன்றாய் அடுக்கிப் பெருமூட்டைகளாகக் கட்டி அந்நிய நாடுகளுக்கு வியாபாரத்துக்காக அனுப்புவார்கள்.

தக்கை யாதிய செய்யும் விதம்:—இவ்வாறு அனுப்பும் பட்டைகள் யந்திர உதவியின்றிப் பெரும்பாலும் மனிதர்கள் கையாலேயே அறுப்புண்டு நானாவித அடைப்பான்களாகவும், பிற பொருள்களாகவும் ஆகின்றன. ஐரோப்பாவின் தென் பாகத்திலிருந்து வருஷாவருஷம் 600 டன்களுக்கு குறையாமல் கார்க் பட்டை ஐக்கிய நாடுகளுக்கு அனுப்பப்படுகிறதாம். "கருங்காலிக் கட்டைக்கு நாணாக் கோடலி இருங்கதலித் தண்டுக்கு நாணு"வதுபோல் பல பொருள்களையும் வெட்டும் இருப்புக்கத்தி கார்க்பட்டையை வெட்டுவதால்,

சீக்கிரம் மழுங்கிவிடுமாம். ஆயினும் கிளாஸ்கோவில் கூட்டு வியாபாரம் செய்யும் சிலர் கார்க்கை நறுக்க அற்புத யந்திரம் செய்து இருக்கின்றனர் என்றும் அதன் உதவியினால் மணி ஒன்றுக்கு 72 டசன் கார்க் (அடைப்பான்கள்) செய்து வருகிறார்களென்றும் தெரிகிறது.

கார்க்கின் தன்மை:—நெகிழ்ந்துறழும் தன்மை கார்க்குக்குண்டு. ஆதலின் அது தன் பருமனிற் குறைந்த சிறு துவாரங்களில் திணித்தாலும் உள்ளே செல்லக்கூடியதாகும். அன்றியும் அது அடங்கி ஒடுங்கிச் சுருங்கக் கூடியதும் காற்றை ஒரு சிறிதும் உட்புகவொட்டாததுமாக இருக்கிறது. அது சீக்கிரம் கெட்டுப்போகாமல் நீடித்து நிற்குந் தன்மை வாய்ந்தது. கனமின்றி இலேசாயிருக்கும் மிருதுவான மங்கல் நிறமுள்ள வஸ்து அது. உஷ்ணம் சத்தம் மின்சாரம் முதலியவற்றை உள்ளே செல்லவிடும் தன்மை அதற்கில்லை; ஆதலால் அதற்குள்ளிருக்கும் பதார்த்தம் எதுவும் ஆவி உருக்கொண்டு வெளிச் செல்லாது.

உபயோகங்கள்:—முற்கூறிய சிறந்த தன்மைகள் பல கார்க்குக்கு இருப்பதால் புட்டிகளுக்கு அடைப்பானாகவும், பீப்பாய்களுக்குப் பரு முளையாகவும் உபயோகிக்கக் கூடிய சிறந்த பொருள் இதனினும் வேறில்லை யென்றே துணிந்து கூறலாம்.

(2) தங்கள் வலைகள் தண்ணீரில் அமிழ்ந்தாவண்ணம் செம்படவர்கள் 'மோட்டா' கார்க்கை வலையோரங்களில் கட்டி வைப்பார்கள் என்று முன்னமேயே கூறியிருக்கிறோம்.

(3) கப்பல்களிற் பிரயாணம் செய்வோர் கவலையீனத்தால் கடலில் தவறி விழும்போது அவர்கள் உயிர் தப்புமாறு கார்க்கினுல் செய்த ஒருவகைச் சட்டையையும் அரைக் கச்சையும் கப்பலில் உள்ளோர் எறிவார்கள் என்றும், அவற்றின் உதவியால் வீழ்ந்தோர் உயிர் தப்பிக் கப்பலேறுவரென்றும் சொல்லப்படுகிறது. இவை உயிரைக் காப்பாற்றுவதால் முறையே "உயிர்ச்சட்டை" என்றும், "உயிர்க் கச்சு" என்றும் பெயர்பெறும். மாலுமிகள் இக் கார்க்கால் சேமப் படவுகள் அல்லது ஜீவரக்ஷ ஓடங்கள் செய்துகொள்வார்கள்.

(4) கார்க்கின் மெல்லிய பட்டைகள் பாத ரக்ஷைகளுக்கு அடித் தோலாக உபயோகிக்கப்படும்.

(5) கைகால் இழந்தோர்களுக்குப் போலிக் கை கால்களும், நானுவித பொம்மைகளும் செய்ய கார்க்கு உதவும்.

(6) அதன் உட்பட்டை, தோல் பதனிட மிக்க பிரயோஜனப் படும்.

இன்னும் என்னென்ன விதங்களாக இது உபயோகப் பட இருக்கிறதோ !

சுத்தமுடைமை.

"சுத்தம் சோறிடும்; தூய்மை துறக்கம் புகுத்தும்; எச்சில் இரக்க வைக்கும்; பற்றுப் பறக்கடிக்கும்." என்ற இவைபோன்ற பழமொழிகளாலேயே சுத்தத்தா லாகும் நன்மைகளும், அசுத்தத்தா லாகும் தீமைகளும் நன்கு புலப்படும். சுத்தம், ஆசாரம், சுசியுடைமை என்பன ஒரு பொருட்சொற்களேயாம். இச்சுசியுடைமை உயர்ந்தோர் தாழ்ந்தோர் ஆடவர் பெண்டிர் இளையோர் முதியோர் முதலிய எவர்க்குமே இன்றியமையாதது என்பதற்குக் காரணங்கள் பலவுள. அவற்றுள் சில வருமாறு:—

முதலாவது:—சரீர சுத்தமும் உடைச் சுத்தமும் மரியாதையை வெளிப்படுத்தும் அறிகுறி யாகவும், பிறரால் மதிக்கப்பெறுவதற்குக் காரணமாகவும் இருக்கின்றன. அநாசாரமுள்ள எவனுமே சாதாரணமாக அறிஞர்கள் நிரம்பிய அவைக்கண் அடி யெடுத்து வைக்கவும் அஞ்சுவான். "குருட்டுக்கண் இருட்டுக்கு அஞ்சாது" என்ற முதுமொழிக் கேற்ப அவ்வசுத்தன் அங்குச் செல்லினும் அவன் அங்குள்ளோரால் அருவருக்கவும் கடிந்துகொள்ளவும் பட்டு அவமரியாதை யுறுவன் என்பதில் ஐயமின்று. ஆதலின், அசுத்தத்தால் அறிவோர் கூட்டுறவு பெற எவனும் அருகனாகின்றான்.

இரண்டாவது:—சுத்தமுடைமை ஒருவர்மீது நமக்குள்ள அன்பையும் அபிமானத்தையும் அதிகரிக்கச் செய்வதாகும். அழகைக் கண்டு நாம் ஆசைகொள்வது இயற்கை

யாயினும், அவ்வழகும் சுத்தமுடன் கூடியிராவிடில் என்னும்? "அஃதுண்டேல் பொன்மலர் நாற்றமுடைத்து." விளக்கமற் றுத் துருப்பிடித்துக் களிம்பேறிய புதிய பண்டத்தினும், நன்றாய்த் தேய்த்துப் பளபளப்பாய் வைக்கப்பட்டுள்ள சுத்தப் பழம்பாத்திரத்தையே நாம் விரும்புகிறோம். அன் றியும், அழகெலாம் திரண்டு ஓர் வடிவெடுத்து வந்தாற் போன்று வந்த ஒரு குழந்தை அசுத்தமாக மட்டும் இருக்கு மாயின், அதனை எவரும் கையால் தொடவும் கூசுவர். அழ கில்லாக் குழந்தையாயினும் சுத்தத்துடன் கூடியிருக்குமா யின் எவரும் விரும்பி அதனை முத்தமிடுவர். அநேகரால் அருவருக்கப்படும் விருத்தாப்பியமும் சுசியுடன் கூடியிருக்கு மாயின் யாவராலும் விரும்பிப் புகழப்படும். இதில் ஐயம் என்னை?

இருமை இன்பங்களையும் எய்துதற்கு ஏற்ற சாதன மாக எல்லாம் வல்ல இறைவனால் அளிக்கப்பட்டதும், உயி ரினும் அரிய ஆத்மா உறைவதற்காகும் அகமுமான, சரீரத் தைச் சுத்தமாக வைத்துக் கொள்ளாதவர்களா, தமது வீடு வாசலாதியவற்றைச் சுத்தமாக வைத்துக்கொள்ளப் போகி றார்கள்? அசுசிக்கு எளிமையும் காரணமாகமாட்டாதே. குசேலனைப் போல் "மெத்திய பற்பல் கிழிதுணி இயைத்து மெல்இழைச் *சரட்டினால் †பொல்லம் பொத்திய ‡சிதரே" கொண்டுளரேனும், சுத்த உடையினராக இருக்கலா மன்றோ? "இரக்கப்போனாலும் சிறக்கப்போ" என்பதை யும், "கந்தையாயிருப்பினும் கசக்கி உடு" "கூழே ஆயினும் குளித்துக் குடி" என்பதையும் எவரும் மறக்கலாகாது.

---

* சரடு - நூல். † பொல்லம் - துவாரம். ‡ சிதர் - துணி.

மூன்றாவது:—சுத்தமுடைமை சுகத்திற்கு இன்றியமையாதது. எங்ஙனமெனில், நாள்தோறும் தலைமுழுகுவதால் சிரசின்மேலுள்ள உஷ்ணம் கீழ் இறங்கவும் இரத்தம் ஓரிடத்தில் மிகுதியாகத் தங்காமல் சமமாக எங்கும் பரவவும் நேர்கின்றன. இதுபற்றியன்றோ, "உண்பொழுது நீராடி உண்டிடுக" என்றும் "காய்ந்ததெனினும் தலையொழிந்தாடாரே ஆய்ந்த அறிவினவர்" என்றும் ஆன்றோர் கூறிப்போந்தனர். நிற்க.

நம் சரீரத்தைப் போர்த்துள்ள சருமத்தில் சதுர அங்குலம் ஒவ்வொன்றிற்கும் சற்றேறக் குறைய 3000 துவாரங்கள் இருக்கின்றன. ஆதலின், உச்சந்தலை முதல் உள்ளங்கால்வரை நம்முடம்பில் இருக்கும் துவாரங்களைக் கணக்கிட்டுரைக்க யாரால் ஆகும்? இத்துவாரங்களின் வழியாய் எப்பொழுதும், அழுகினதும் விஷ அணுக்கள் நிறைந்ததுமான துர் நீராகிய வியர்வை வெளிப்பட்டுக் கொண்டிருக்கிறதன்றோ? இவ்வியர்வை, பாதி நீரும், பாதி மெழுகு போன்ற ஓர்வகை அழுக்கும் சேர்ந்து ஆவது. இவ்வழுக்கும், நீரும், துர்க்கந்தத்திற்கும் நாம் அணியும் ஆடையாதிய அழுக்கேறுவதற்கும் காரணமாக இருப்பதோடு, அடிக்கடி எடுபடாவிடின் முற்கூறிய கோடிக்கணக்கான நுண்ணிய துவாரங்களை அடைத்தும் விடும். விடவே உள்ளிருந்து வெளிக்கிளம்ப வேண்டிய அழுக்கெல்லாம் சரீரத்திலேயே அடைபட்டு, இரத்தத்தோடு சம்பந்தமாகி ஜலதோஷம், காய்ச்சல் முதலிய பல பிணிகளையும் பிறப்பிக்கும்.

நான்காவது:—புறச்சுத்தமே முடிவில் அகச்சுத்தமும் எய்துவிக்கும்: தமது சரீரத்தையும் தம்மைச் சுற்றிலுமுள்ள பொருள்களையும் சுத்தமாக வைத்துக்கொள்வது தமது முக்கியமான கடமைகளுள் ஒன்றெனக் கடைப்பிடித்து ஒழுகுவோர் முடிவில் திரிகரண சுத்தத்தையும் விரும்பாதிரார். இங்ஙனம் இவர்கள்,

"பொய்குறளை வன்சொல் பயனிலஎன் றிந்நான்கும்
எய்தாமை சொல்லின் வழுக்காது—மெய்யிற்
புலமைந்துங் காத்து மனமாசு கற்றும்"

நலம்வாய்ந்து, நல்லாறொழுக்கின்றலை நின்றால் இவர்களுக்கு நிகராவார் எவர்?

ஆகவே, அறிவிற்சிறந்த நமது முன்னோர்கள், அசுசியானது உள்ளத்திற்கும், உடம்பிற்குங் கேடுவிளைத்து இருமைப் பயனையும் எய்தவொட்டாமற் பெருங்கேட்டினை விளைக்குமென் றுணர்ந்தே, "ஆசாரம் நமது தினக்கடன்களுள் ஒன்று" என விதித்து, "நாள்தோறும் பல்தேய்த்து முகம் கழுவி சுத்தஜலத்தில் அழுக்குத் தேய்த்து முழுகுவதும், அழுக்குற்ற பழைய உடையைமாற்றி மாசற்றுலர்ந்த வேறு உடைதரிப்பதும், எச்சில் மலசலாதிகளைத் தீண்டாதிருப்பதும், தீண்டினல் கைகால்களையேனும் சுத்திசெய்துகொள்வதும் தேவ ஆராதனை செய்வதற்கு ஆவசியகமான அங்கங்கள்" என்று வற்புறுத்தி, நாள்தோறும்,

காட்டுக்களைந்து கலங்கழீஇ இல்லத்தை
ஆப்பிநீர் எங்கும் தெளித்துச் சிறுகாலை
நீர்ச்சால் கரகம் நிறைய மலரணிந்து

இல்லம்பொலிய அடுப்பினுள் தீப்பெய்க
நல்லதுறல் வேண்டுவார்"

என்று புத்திகூறி, அருவருக்கத்தக்க உணவு, மனிதர், பொருளாதியவற்றை விலக்கவேண்டுமென்று எச்சரித்து, அவ்விதிகளை மீறிநடத்தல் பாபமென்றும், அப்பாவத்திற்குத் தவறாமல் தண்டனை யுண்டென்றும், பயமுறுத்தியிருக்கின்றனர். "தத்தம் இன் புதல்வர்க்கன்றே பலகாலும் சொல்வார் பயன்?"

என்னே இவர்தம் மதியூகம்! பரிசுத்தம் வைதிக கருமங்களுள் ஒன்றென விதியாவிடின் அதனை நம்மவர்கள் அலட்சியம் செய்துவிடுவார்கள் என்று தானே இவ்வாறு அவர்கள் உரைத்தனர்? ஆயினும் நம்மவர்களிற் பெரும்பான்மையோர் அந் நன்மொழியைச் செவிடன்காதில் ஊதிய சங்கொலி போலாக்கிக் கவலையீனராக இருக்கின்றனரே. இம்மட்டோ? இது பூர்வீகருடைய பேதைமைக் கொள்கையென அறியாமையாலெண்ணி அவமதிக்கும் அறிவிலிகள் எத்துணைப் பேர்களிருக்கின்றனர்!. நிற்க.

இதுகாறும் புறத்தூய்மையைக் குறித்துப் பேசினோம். இனி அகத்தூய்மையைக் குறித்து இரண்டொரு வாசகம் கூறி விஷயத்தை நிறுத்துவோம்.

அகத்தூய்மை புறத்தூய்மையினும் சிறந்தது. புறம் தூய்மை யுறுதற்கு நீர் காரணமாதல்போல, அகம் தூய்மை யுறுவதற்கு வாய்மையே முக்கிய காரணமாகும். இவ்வுண்மையை,

"புறந்தூய்மை நீரானமையும்; அகந்தூய்மை
வாய்மையாற் காணப்படும்"

"தூஉய்மை யென்பது அவாவின்மை; மற்றது
வாஅய்மை வேண்ட வரும்"

என்னும் அருமைத் திருக்குறள்களால் அறிக. நிற்க.

சுசியுடைமையின் ஆவசியம் நன்கறிந்த பின்னரேனும் நம்மவர்கள்,

"உள்ளும் புறமும் ஒருபடித்தாய் நின்றுசுகம்
கொள்ளும் படிக்கிறைநீ கூட்டிடவும் காண்பேனோ"

என்று தாயுமானவரைப்போல் வேண்டி, சரீரத்துக்கு ஆரோக்கியத்தையும், மனத்திற்கு மகிழ்ச்சியையும், பார்ப்பவர்க்கும் தமக்கும் மரியாதையையும் பிரீதியையும் இம்மையில் அளித்து மறுமையில் வீடடையச் செய்வதாகிய இச்சிறந்த ஒழுக்கத்தினை உபேக்ஷைசெய்யாது, ஒழுகுவாரர்க.

நற்பவளம்.

மனிதன் தனது மகத்தான புத்தி வல்லமையினால் பிரகிருதியை அநேக விதத்தில் ஜயித்தவனாக இருக்கின்றான். ஸ்தாவர ஜங்கமப் பொருள்கள் யாவும் அவனது மனோரதத்திற்கும் அத்தியாவசியகத்திற்கும் ஏற்றவண்ணம் உபயோகப்படுமாறு ஆக்கப்பட்டிருக்கின்றன. அதி உன்னதமாயுள்ள பனி நிரம்பிய பர்வதங்களிலும், ஆரவாரித்துப்பாயும்

அருவிகளினும், பார்ப்பதற்கு அமைதியும் அச்சமும் விளை விக்கும் கம்பீரத் தோற்றத்தோடு கூடிய மாநதிகளினும், விரி பனி நிரம்பிய துருவ சக்கரத்தினும்கூட, தானெடுத்த காரியத்தை முடிக்கும் மனவுறுதியும் காரியசித்தியும் பெற்ற மனிதனது காலடி பட்டே இருக்கிறது. தனது வாசஸ்தா னத்திற்காவனவும் உண்டி, உடை, அணிகலம் முதலியவும் தெரிந்தெடுக்கும் காரணத்தினாலேயே மனிதன் இவ்வுலக சிருஷ்டியில் யாவற்றினும் மேம்பட்டு, இப்பிரபஞ்சத்திற்கே ஓர் முடிசூடா மன்னனாகின்றான்.

இவன் முதல் முதல் தேடிக்கொள்வது தான் உயிர்வாழ் வதற்கு இன்றியமையாத பொருள்களே. இதன் பின்னர் இவன் மனமானது அலங்காராதிகளிற் செல்லுகிற அளவு உண்மையாய் உபயோகப்படக் கூடிய விஷயங்களிற் சாதா ரணமாகச் செல்வதில்லை. எருத்துவாற் குருவி (Birds of paradaise) மயில், முதலிய சிங்காரத் தோகை வாய்ந்த பற வைகளும், நீண்ட பிடரி மயிரும் கம்பீரத்தோற்றமும் உள்ள சிங்கமாதி மிருகங்களும், தத்தம் இயற்கை அழகோடு விளங் குகின்றன. ஆனால் மனிதனோ இயற்கையழகுடன் செயற் கையழகும் விரும்புகின்றான். ஆதலால் சராசரப் பொருள் களினின்றும் அலங்கார வஸ்துக்கள் எவ்வளவு பெறக்கூடு மோ அவ்வளவும் லோஹங்களாகவும் அவற்றினும் விலை ஏறப்பெற்ற ரத்நங்களாகவும் கொள்கின்றான். நவரத்தினங் களில் ஒன்றாக நமது முன்னோரால் மதிக்கப்பட்டுள்ள ஓர் வஸ்துவானது பார்வைக்குக் கல் போலவும், எளிதில் ஒடி த்து நறுக்கி நெருக்கிடக் கூடியதாயும் செந்நிறத்ததாயும் இரு க்கிறதல்லவா? இவ்வரிய வியாபாரச்சரக்குத் தான் யாது?

இதுதான் மாலையாகக் கோக்கப்பட்டு நமது தாய்மார்களாலும் மனைவி மக்களாலும் சகோதரிகளாலும் தம் கழுத்திலணியப்பெற்ற நற்பவளம். ஏழை, பணக்காரி, கிழவி, குமரி, என்ற வித்தியாசமேயின்றி ய˘வராலும் ஆவலுடன் அணியப்படும் இவ்வரிய வஸ்துவைப் பற்றித்தான் நாம் இப்பொழுது சிறிது சொல்லப் போகிறோம்:—

பவளம் என்பது யாது? இது நவரத்நங்களில் ஒன்றாயினும் வச்சிரம், பதுமராகம், மரகதம், நீலம், கோமேதகம், புஷ்பராகம், வைடூரியம், என்ற இவ்வேழினையும் போல், கனிகளில் இருந்து எடுக்கப்படும் கல்லாகாது. முத்துச்சிப்பியென்று சொல்லப்படும் ஓர் ஜலசர த்தினின்றும் முத்து உண்டாவது போல், அரிய விலையுயர்ந்த பவளமும் ஒருவகைப் பூச்சியினின்றே உண்டாகிறது. இது "பவளக்கோடிமாலை" படித்து அதிற் சொல்லியவற்றுள் நம்பிக்கை கொண்டிருக்கும் பாமர ஜனங்களுக்குப் பெரிதும் ஆச்சரியம் விளைவிக்கக்கூடியதே. ஏனெனில், அதில் அல்லியரசானியின் குமாரன் புலந்திரனைத் திருப்திப்படுத்துவதற்காக பவளத்தேர் ஒன்றிற்கு வேண்டிய பவளம் சம்பாதிக்க, கிருஷ்ணார்ச்சுனர் இருவரும்,

"வேங்கை அடர்ந்தவனம், வெண்களாப் பூத்தவனம்,
சிங்கம் உறங்குவனம், சிறுபுலிகள் தூங்கும்வனம்,
ஆளியுறங்குவனம், அன்னப்புள் தூங்குவனம்,
கருநாரைக் கிரைதேடும் கதலிவனங்கடந்து
பவளம் விளைகின்ற பாங்கான காடதனைப்
பார்த்தார். இருவருமப் பவளக்காட் டுள் நுழைந்தார்.

கொம்பும் கயிறுகளும் கலந்த கொழுந்துகளும்
ஓடிப் படர்கிறதும் உயர்ந்த கொம்பாகிறதும்
தாவிப் படர்கிறதும் சன்னல் பின்ன லாகிறதும்
பவளம் மின்னுவதும் பார்த்துத் திகைத்து நின்றார்"

என்றும், அப்பொழுது அக்காட்டிலுள்ள,

" ஆனைத் தலைஅரியும் ஆங்காரக் கதண்டுகளும்
சிங்கத் தலைபிளக்கும் செங்குளவி வண்டினமும்
குதிரைத் தலையறுக்கும் குளவிகளும் தாம்சேர்ந்து
மார்பளவாய் முகமளவாய் வெளிப்பட்டோடி வந்து"

அர்ச்சுனனைக் கொல்லப் பார்த்தனவென்றும், ஆனால் அவை அவனது மச்சரேகையைக் கண்டஞ்சிக் கொல்லாது விட்டனவென்றும், இங்ஙனம் இவர்கள் சாகாதிருத்தலைக் கண்ணுற்ற அவ்வனத்து வேடுவர் சிலர் ஆச்சரிய மெய்தி, அன்னோரை நோக்கி,

"கதண்டுகள் கொட்டாதோ காவலரே உங்களையும்,
பவளம் வெட்ட வந்தவரைப் பரலோகம் அனுப்பிவிடும்:
கதண்டு கொட்டிச் செத்தவர்கள் கணக்கு மிதங்களில்லை"

என்று கூறியதாகவும் சொல்லப்பட் டிருக்கிறது. இதனை மெய்யென நம்புவோர்க்குப் பவளம் என்பது காட்டில் உண்டாகும் ஓர் வஸ்துவென்றும் அதனை வெட்டிக் கொண்டு வரப்போனால் யானை, குதிரை, சிங்கம் முதலிய வலிமிகுத்த பிராணிகளையும் கொட்டிக் கொல்லும் செங்குளவி கருங்குளவி முதலியவற்றால் சாவு நேரிடக்கூடும் என்றும், ஆனால் மனிதர் இப்பொழுது யாதோ ஓர் சூழ்ச்சி

யால் அக்குளவிகட்குத் தப்பிப் பவளம் வெட்டிக்கொண்டு வருகின்றனரென்றும் தானே மனத்திற்படும். உண்மை யாதெனில், தாம் வசிக்கும் சமுத்திரத்தின் அலைகள் தம்மீது தாக்காதபடித் தற்காத்துக் கொள்ளுமாறு, பலகோடி சிறு பூச்சிகள் அவ்வாழ்கடலில் உண்டாக்கும் ஓர்வகைக் கடின பதார்த்தமே பவளம். இவ்விலையேறப் பெற்ற அரிய வஸ்துவை உண்டாக்கும் பிராணியைப் பற்றி சிறிது கூறுவாம்.

பவளப்பூச்சி.

இது பார்ப்பவர் கண்ணுக்கு ஒரு செடி போலத் தோன்றும். அதனிடம் வேர்கள், தண்டு, அத்தண்டினின்றும் பிரிந்த பல கிளைகள் அக்கிளைகளில் உள்ள அரும்புகள், மலர்கள், பூவிதழ்கள் முதலியன இருப்பன போற்றோன்றும். ஆயினும் சிறிது நுட்பமாய் ஆராய்குநர்க்கு, கருங்காலி போல் உறுதியாய் ஆழ்ந்த சமுத்திரத்தில் ஊன்றிக்கிடக்கும் இது, ஓர் பிராணியே என்பது நன்கு விளங்கும். "இஃதோர் பிராணியாயிருப்பின் இடம் பெயர்ந்து செல்ல வேண்டுமே? இதோ இடம் பெயர்ந்து செல்லாமல் ஆழப்பதிந்து நின்ற நிலையிலேயே நிற்கிறதே. பின்னை இதனைப் பிராணியென்று எவ்வாறு கூறலாம்,? எனப் பலருக்கு ஐயமுண்டாகலாம். நிலைபெயர்ந்து செல்வன வெல்லாம் பிராணியும் செல்லாதன செடிகளும் ஆகா. அங்ஙனம் நிதானித்து விடுவது தவறு. ஏனெனில், செடிகளா யிருந்தும் Diatoms போல்வன நிலைபெயர்ந்தே செல்லுகின்றன. பிராணிகளா யிருந்தும் நமது பவளம் போல்வன சில நிலைபெயர்ந்தே செல்லாமல் ஓரே இடத்தில் ஊன்றிப் பதிந்து கிடக்கின்

றன. சாதாரணமாக நாம் காணும் யாதானும் ஒன்று பிராணி அல்லது செடி என்று அது உட்கொள்ளும் உணவை நோக்கியே தீர்மானிக்கவேண்டும். இதுவும் ஓர் பொது விதியேயாகும். ஏனெனில் இவ்விதிக்கு விலக்காகப் பூச்சியைத் தின்றும் வளரும் செடிகளும் உள. நிற்க. இப்பூச்சியின் நிறம் நாம்வெகுவாய் விலைமதிக்கும் பவளத்தின் நிறமே. முன் "அரும்பு" "மலர்" என்று நாம் குறிப்பிட்டுள்ளவை தாம் ஓர் குழுவில் ஒருங்கு சேர்ந்து வசிக்கும் பூச்சித் திரள்கள். இவை அநேகமாய் நிறமில்லாதன. "இதழ்கள்" என்று நாம் குறிப்பிட்டவை தென்னை மட்டையில் ஓலைகள் உள்ளனபோல் ஜோடி ஜோடியாய் நடுநரம்பினின்று வெளிக் கிளம்பிய மயிர்கள்கொண்ட அங்குரங்கள் (processes) வாயப்பெற்றன. நிற்க. இப்பூச்சிகள் யாவும் நேராகவேனும் சுற்று வழியாகவேனும் ஒரே தாய்ப் பூச்சியினின்றும் தோன்றியவை. அரும்புபோல்வன யாவும், சுருங்கி ஒடுங்கிய பூச்சிகளே. இவை இங்ஙனம் சுருங்கக் காரணம் யாது? ஏதோ ஒன்றன் தொந்தரவு பொறாமலே. இவற்றிற்கு நம்மிலும் கூச்சம் அதிகம். இவற்றின் சரீரவாசி அப்படி அமைந்திருக்கிறது. சிறிது நேரத்திற்கெல்லாம் அரும்புபோற் றோன்றிய யாவும் எவ்வெட்டு இதழ்களுடனும் விரிந்து முழு அழகுடனும் ஜ்வலிக்கக் காணலாம். இவ் விதழ்களெட்டும் அப்பூச்சியின் கரங்களே. இவற்றின் உதவியாற்றான் அப்பூச்சி தனக்குக் கிடைக்கும் ஆகாரத்தைப்பற்றி இழுத்து அதன் மையத்திலிருக்கும் ஓர் துவாரத்திற்குட் செலுத்தும். இம் மையத் துவாரமே அதன் வாய். இப்பூச்சியின் கரங்களிடத்து அதற்கு வேண்டிய 'அடுபடை'களும் 'தடுபடை'களும் அமைக்கப்பட்டுள்ளன. இப்படைகளை அவை வெகு சாதுரி

யத்துடனும் உபயோகிக்கும். இவற்றுள் ஒன்றாகிய "நூல் அறை" யைப்பற்றிச் சில கூறுவோம்.

இவ்வறைகள் அப்பூச்சியின் புறத்தோலில் உள்ளன. அறை ஒவ்வொன்றிலும் நச்சு நூற் சுருள் ஒன்றுளது. யாதேனும் தம்மேற் பட்டமாத்திரத்தில் கூச்சமடையக்கூடிய உரோமங்கள் இப்பூச்சியின் கண் உள்ளன. இவை இன்ன காலத்தில் பூச்சியானது தன் படைகளை உபயோகப்படுத்தவேண்டும் என்று அறிவிக்கும். எவ்வாறெனில், இதனை இம்சிக்கவரும் ஜந்துக்கள் உட்கார்ந்த மாத்திரத்திலேயே தொட்டாற் சுருங்கியாகிய உரோமம் சிலிர்க்க ஆரம்பிக்கும். தக்ஷணமே மின்னலினும் அதி தீவிரமாய், நாம் முன் கூறிய நூலறையினின்றும் நச்சு நூற்சுருள் கண்ணிபோல் வெளிக்கிளம்பி தன்னை இம்ஸிக்கவந்த ஜந்துவின் சரீரத்தில் ஆழத்தைப் பதுமன்றி வேதனை தரக்கூடிய ஓர் வஸ்துவையும் உட்புகுத்திவிடும். உடனே வேதனை தாங்காமல் இதனினும் வலிகுறைந்த பூச்சிகள் மாண்டுபோம். வலிமிகுத்த ஜந்துக்கள் சாகாவிடினும் இனி ஒருக்காலும் அண்டாது ஓடிப்போம். இவ்விஷயமானது திமிங்கலம் முதலிய கடற் பிராணிகளை மனிதர் தந்திரமாய் எறி ஈட்டி முதலிய சூழ்ச்சிகளால் கொல்வதை ஞாபகப்படுத்தக் கூடியதாயிருக்கிறது.

உணவும் பழக்கவழக்கங்களும்.

இனி அதன் உணவைப்பற்றியும் பழக்கவழக்கங்களைப் பற்றியும் சில கூறுவாம். இப்பூச்சியின் கரங்கள் எப்பொழுதும் ஆடி அசைந்த வண்ணமாகவே இருக்கின்றன. இவ்வசைவு மையத் துவாரமாகிய அதன் வாயை நோக்கி

யேதான். இவ்வாய் ஒரு சிறு பிளவு போன்றிருக்கும். அதினின்றும் ஓர் சிறு ஆகாரக்குழாய் ஆரம்பித்து, இரைப்பை போய்ச் சேரும். இப்பூச்சி உட்கொள்ளும் உணவு ஆகாரக் குழாய் வழியாய் ஜவ்வுபோலும் மெல்லிய தோலினாலாகிய இரைப்பை போய்ச் சேர்ந்து அங்கிருந்து உதரக் குழிபோய்ச்சேருகிறது. ஜீரணிப்பிக்கும் இக்குழியின் மேற்புறம் தோலினாலாகிய பல தடுப்புகளால் பெரிதாக்கப்பட்டிருக்கிறது. குடம் மட்டும் ஏடுபட்ட வண்டிச் சக்கரத்தின் வட்டைக்கால்கள் எவ்விதம் ஒன்றையொன்று தொடாமலிருக்குமோ, அவ்விதமே, இத்தடுப்புக்களும் ஒன்றையொன்று சந்தியாது மையத்தினின்றும் சற்று விலகியே இருக்கின்றன. இவை ஆகாரக் குழாயோடும் மேலே இருக்கும் இரைப்பையோடும் பொருத்தப்பட்டு, அவ்வுதரக் குழியின் கீழ்பாகத்தில் ஒன்றோடொன்று சிறிதும் சம்பந்தப்படாமல், தொங்கிக்கொண்டிருக்கின்றன. இக்குழியிற்றான் ஜீரணம் நடந்தேறுகிறது. இக்குழியைச் சுற்றிலும் நிரை நிரையாகப் பல சிற்றறைகளுள. இவ்வறைகள் அங்குரங்கள் வாய்ந்தவை. இவ்வங்குரங்களால் ஆகாரத் திவலைகள் கிரகிக்கப்படுகின்றன. (இவை, மூக்கின்றி மணங்கவர்ந்து, காலின்றி நடத்தல் செய்து, நோக்கின்றிக் கண்டு, கனி நுவல்தாய நாக்கின்றி அறுசுவையும் அருந்துகின்ற சிற்றுயிர்க் கிருமியாகிய அமீபா (Amoeba) அல்லது வெண்குருதியணு (White corpuscles) வைபற்றி நினைப்பூட்டாமற் போகா.) இச்சிற்றறைகள் மரணவாயில்களே. ஏனெனில், இவ்வறையினுட் புகும் சிற்றுயிர்க்கிருமியாவும் மடியும், அல்லது ஸ்மரணையழியும். இவ்வறைக்குள் சிற்றுயிர்கள் வருவதெங்ஙனம்?

ஆகாரக் குழாயில் நிரை நிரையாய் அமைக்கப்பட்டுள்ள சிற்றறைகளைச் சார்ந்த பல்லாயிரம் நுண்ணிய மயிர்த்திரள்கள் இடைவிடாது அசைந்துகொண்டே யிருப்பதால் தண்ணீர் ஜீரணக்குழியிலும் வழிந்தோடும். அங்ஙனம் வழிந்தோடும் தண்ணீரோடு சேர்ந்து இச்சிற்றுயிர்கள் உட்புகும். இப்பூச்சியின் வாய் சரிவர அமைக்கப்படாமல் கோணலாய் இரண்டு தனிவாயில்கள் கொண்டதுபோல் அமைக்கப்பட்டுள்ளது. நாம் முற்கூறியுள்ள மயிர்த்திரள்களிற் சில, இவ்விருவாயில்களின் ஒன்றன்வழியாகத் தண்ணீரை உட்புகுத்தும். அப்பொழுது இத்தண்ணீர் ஜீரணக்குழிக்குள் புகும். வேறு சில மயிர்த்திரள்கள் இத்தண்ணீரை மற்றொரு வாயில் வழியாய் வெளிக்கிளப்பும். இங்ஙனம் இரத்தோட்டத்திற்கு, உள்ளே போகிற வழியும் வெளியே போகிற வழியும் ஏற்பட்டுள்ளதுபோல், இந்நீரோட்டத்திற்கும் இரண்டு வாயில்கள் ஏற்பட்டுள்ளன. நமக்குப் பிராண வாயு ஆகாரத் திவலைகள் முதலியவற்றின் சேர்க்கையால் ஜீவாக்கினியை உண்டாக்கி, கழிவு பதார்த்தங்களை விலக்கி, அழிந்துபோகும் சிற்றறைகளை மீண்டும் கட்ட உதவுகின்ற இரத்த ஓட்டம் போன்றுள்ளது இதற்கு இந் நீரோட்டம். இப்பூச்சியினிடத்துக் கழிவு பதார்த்தங்களையும் மலத்தையும் புறம்போக்கப் பிரத்தியேக வழி கிடையாது. இதுவே இவ்வினத்தில் காணப்படும் விசேஷமாம். (இச்சமயத்தில் நாம் ஒன்று சொல்ல வேண்டியிருக்கிறது: அநேகர் வௌவாலானது, ஆகாரம் உட்கொள்ளும் வாயிலாகவே மலம்முதலியன புறம் போக்குகிறதென எண்ணியிருக்கின்றனர். "இவன் வாயாலே தின்று வாயாலே கக்கும் வௌவால்" என்று

அசுத்தமான ஒருவனை மற்றொருவன் இழித்துப்பேசுவதைப் பன்முறை கேட்டு இருக்கிறோம். இன்னோர் கொண்டது தப்பபிப்பிராயம் என்றே சொல்லவேண்டும். ஏனெனில் பிராணி சாஸ்திரங்களிலும் சரீரக சாஸ்திரங்களிலும் பெரிதும் தேர்ச்சி யடைந்தவர்கள் ஆகாரம் உட்செல்லவும் கழிவு பதார்த்தங்கள் வெளிவரவும் வௌவாலிடத்து வெவ்வேறு வழிகள் இருக்கின்றன என்று சொல்லுகிறார்கள்.)

பூச்சிகளின் கூட்டுறவு.

இங்ஙனம் உட்கொள்ளப்பட்ட ஆகாரம் என்னவாகிறது? அது ஜீரணமாகித் தேகத்தோடு தேகமாய்ச் சேருகிறது. இவ்வுணவின் சாரம் புறத்தோலின்கண் உள்ள சிற்றறைகளுக்கும் தேவையானமட்டும் போய்ச்சேருகிறது. நிற்க.

ஒரே தண்டில் இருக்கும் வெவ்வேறு பூச்சிகளுக்குள் வெகு அந்நியோந்நியம் ஏற்பட்டிருக்கிறது. ஒன்று உணவு கொள்ளுமாயின் மற்றவற்றிற்குப் பசியெடுக்காது. இதற்குக் காரணமென்னவெனில், இப்பூச்சிகள் யாவற்றிற்கும் ஒருவகைச் சதைப்பற்றின் மூலமாகப் பரஸ்பர ஸம்பந்தம் ஏற்பட்டுளது. நம்முள் பலர் பட்டினியால் வருந்த, சிலர் விலாப்புடைக்கத் தின்று கொழுப்பது போ லில்லாமல் ஏற்றத்தாழ்வின்றி யாவும் சமமாக அநுபவிக்கும் இக்கூட்டுறவு வெகுவாகச் சிந்திக்கத் தக்கதே. இப்பிராணிகளைப் பற்றிய படிப்பைச் சிலாக்கியமாக மதிக்க இவ்வொன்றே போதுமானதாக இருக்கின்றது. அசூயை அல்லது அயல் வாழப் பொறாமை, தன்னயம் பாராட்டல், முதலிய துர்க்குணங்களைப் போக்கி "நாடெங்கும் வாழக் கேடொன்று

மில்லை" என்னும் முதுமொழியைக் கடைப்பிடித்து யாவரும் ஒழுக வேண்டும் என்பது இதன் முக்கியமான படிப்பினைகளில் ஒன்றன்றோ? நிற்க.

இதன் சரீரம் இரண்டு தோற்படைகளால் அமைக்கப்பட்டு ரப்பர்க் குழாய் போன்றுள்ளது. கடல், கொந்தளிப்புள்ள அலைகளையும் உடுமீன், நத்தை முதலிய ஜலசரங்களையும் கொண்டிருப்பதால் இவற்றினின்றும் தப்பிப் பிழைக்குமாறு இப்பூச்சி யாதானும் ஓர் வகைப் பாதுகாப்பைத் தேடிக் கொள்ளவேண்டியது இன்றியமையாததன்றோ? எதற்கும் தலை சாயாது நிமிர்ந்து உறுதியாய் நின்று உய்யுமாறு ஒருவகைக் கடினபதார்த்தத்தைக் குழலுக்குள்ளேயே உற்பத்திசெய்து அதனை இது நிரப்புகிறது. இதுவே இதற்கு எலும்பு போலாவதுடன் ஓர் சிறந்த பாதுகாப்பாகவும் ஆய்விடுகிறது. ஓர் பாதுகாப்பாக அமைக்கப்பட்ட இந்த எலும்பே இதன் சீரழிவிற்கும் காரணமாகிறது. எங்ஙனமெனில், இது கடினம், அழகு, நிறம் முதலியன வாய்ந்திருக்கும் காரணத்தினாலேயே மனிதர் மனத்தைப் பெரிதுங் கவர்கின்றது. ஆனதுபற்றி மனிதர் இதன் பரமசத்துருக்கள் ஆகின்றனர். ஜலசரங்களைச் சிறிதும் அணுகவொட்டாது செய்யும் இப்பூச்சி, மனிதனைத் துரத்த எவ்வகைச் சூழ்ச்சியும் கண்டுபிடிக்கவில்லையே! ஒருவேளை "மனிதனும் தன்னை வருத்தும் பிராணிகளுள் ஒன்று" என்ற பிரக்ஞையே இதற்கில்லை போலும்! மனிதனோ எங்கு சென்றாலும் தனது சேஷ்டையையும் பிறருக்கு இடர் இழைப்பதையும் விடுவதில்லை. பிராணிகளின் ரூப விகாரம் நிறமாற்றம் முதலியவற்றால் பக்ஷி

மிருகங்கள் வெகுவாக ஏமாறினும் மதிநுட்பமும் வலிமிகுத்த வலுமான மனிதன் ஏமாறுவதரிது. (எமக்குப் பத்துவருடங்களுக்கு மேலாகத் தென்னிந்தியாவிலுள்ள சிலந்திப்பூச்சிகளைப் பற்றிய அநுபவம் பெரிதும் உண்டு. அவ் வநுபவத்தைக்கொண்டு அனேக ஜந்துக்களை ஏமாற்றிப் பிடித்து வயிறு வளர்த்தும், தந்திரமாய் உறைவிடம் அமைத்துக் கொண்டு தம்மிலும் வலிமிகுத்த அநேக ஜந்துக்களுக்குத் தப்பிப்பிழைத்தும் வருகின்ற சிலந்திப்பூச்சியின் உபாயங்களும், மனிதரிடம் சிறிதும் பலிப்பதில்லையென்று சொல்லத் துணிவோம்.) எதிலும் தலையிட்டுக்கொண்டு இடர் இழைத்து வரும் மனிதனினின்றும் இப்பூச்சிகள் நிறம், உரு முதலியன மாறித்தப்ப எவ்வளவோ காலஞ்செல்லும்.

விவாகமுறை.

பவளம் உயிர்வாழும் விதமும் அதுவளரும் விதமும் கூறினம். இனி அது நிர்மூலமாகாமல் பல்கும் விதத்தைப் பற்றிப் பகருவாம்: சந்ததியறுவண்ணம் பிராணிகளும் செடிகளும் பிரதியுற்பத்தி செய்யவேண்டிய தவசியம். ஆண் பெண் சம்பந்தத்தினல் மாத்திரமன்றி வேறுவிதத்திலும் பிரதியுற்பாதனம் நடந்தேறக் காண்கிறோம். உதாரணமாக:— ஒரு மரத்தின் கிளைகளைவெட்டி யூன்றுவதாலும் கொடிகளையறுத்துப் பதிகம் இடுவதினலும் புதிய மரஞ் செடிகள் அவற்றினின்றும் தோன்றிப் பல்குகின்றன. இவ் விருவகையாலும் பவளப்பூச்சியானது பிரதியுற்பத்தி செய்யும். இப்பொழுது நாம் ஒரு தாய்ப்பூச்சியை யெடுத்துக்கொள்வோம். அது வளரும்பொழுதே, வாழையடியில் வாழை உண்டாவதுபோல், வேறுபூச்சிகள் அதினின்றும் தோன்

றும். அல்லது தாய்ப்பூச்சியானது இரண்டாக நீளவெடித்து ஒவ்வொருபாகமும் அதனதன் கரங்களுடன் ஓர் தனிப்பூச்சியாகும். இவ்விதமாகப் பல பூச்சித்திரள்கள் உண்டாகின்றன. நாம் இப்பொழுது கூறிய இவ் விருவகையிலும் ஆண்பெண் சம்பந்தமே கிடையாது. மனிதரால் இவ்விரு வகையாலும் பிரதி உற்பத்தி செய்ய முடியாது. மனிதவர்க்கத்தில் ஆண் பெண் அறியப்படுவது போல இப் பூச்சிகளிற் கண்டறிய முடியாது. ஆயின், பவளம் சம்பந்தப்பட்டமட்டில்,

ஆண் பெண் சம்பந்தப் பிரதியுற்பாதனம்

என்றால் என்னை? இப் பவளப்பூச்சியானது ஜீரணக் குழியில் உள்ள பல்வகைத்தாய சிற்றறைகளினின்றும் சுக்கிலத்தையும், இக்குழியில் உள்ள (நாம் முற்கூறிய) தடுப்புக்களினின்றும் சோணிதத்தையும் உற்பத்தி செய்கின்றன. சந்ததி விருத்திக்கான இவ்விரண்டும் ஒரே பூச்சியிடமிருந்து உண்டாகின்றன. சுக்கில சோணித சம்பந்தமே பிரதி உற்பத்திக்குக் காரணம் எனினும், ஒரே தாய்ப்பூச்சியினிடத்துத் தோன்றிய பிராணிகளின் பரஸ்பர சுக்கில சோணிதங்கள் சம்பந்தப்படுவதே யில்லை. ஆனால் ஒரு தாய்ப்பூச்சியினிடத்துத் தோன்றிய பிராணிகளின் சுக்கில சோணிதங்கள் வெகு தூரத்திலிருக்கும் வேறொரு தாய்ப்பூச்சியினிடத்துத் தோன்றிய சோணித சுக்கிலங்களுடனும் முறையே சம்பந்தமாகின்றன. ஆண் பூவிற்கும் பெண்பூவிற்கும் தேன் அருந்த வரும் வண்டினால் சம்பந்த மேற்படுவதுபோல், ஒரு தாய் வயிற்றுதித்த பூச்சிகளுக்கும் வேறொன்றனிடத்துத் தோன்றிய பூச்சிகளுக்கும், கடல்நீர் மூலமாக சம்பந்தம் ஏற்படுகின்றது. இதனால் ஒரே குடும்பத்திற் றோன்றிய ஸ்திரீ புரு

ஷர்களுடைய பரஸ்பர சம்பந்தம் இயற்கைக்கு விரோதமானது என்பது இனிது விளங்கும். இவ் விஷயத்தையே தர்ம சாஸ்திரம் விதித்த அதி புத்திமானாகிய மநு, அதிகமாக வற்புறுத்திச் சொல்லியிருப்பதுடன், அவ்வித விவாகத்தால் ஜீவாதாரம் பலம் முதலியன குன்றி இறுதியில் சந்ததியற்று நாசமாகவேண்டிவரும் என்றும் கண்டிப்பாய் எச்சரித்திருக்கிறார். ஆனால் நாம் இக்கட்டளையை மீறி நடந்துவருகிறோம். அங்ஙனம் மீறி நடத்தலால் வரும் பலனையும் பிரத்தியக்ஷமாகக் கண்டும் அனுபவித்தும் இருக்கிறோம். இப் பவளப் பூச்சியைப் பற்றி அறிந்தபின்னரேனும் நம்மவர்கள் தங்கள் குலம் நசித்து க்ஷீணித்து நிர்மூல மாகாவண்ணம் வெவ்வேறு குடும்பங்களில் பெண்ணெடுப்பார்களாக. நிற்க.

ஒரு பூச்சியின் சுக்கிலத்தோடு மற்றொன்றின் சோணிதம் போய்ச்சேருவதால் அதியற்பமான முட்டையொன்று தோன்றி, சின்னாட்களில், தன்னிஷ்டப்படி நீந்தக்கூடிய ஓர் மயிர்க்கிருமி யாகிறது. அதன் மயிர்களே அதற்குக் கைகள் போல் உபயோகப்படுகின்றன. இவற்றின் உதவி கொண்டே இது இடம்பெயர்ந்து சென்று அதி தூரத்திலுள்ள முன்னிலும் சிறந்த ஓர் வாசஸ்தானத்தை நாடிச் செல்லும். இது பல மாறுதல்களை அடையும். வாய் ஜீரணக்குழி முதலியன உண்டானவுடன் இப் புதியவிடத்தில் உள்ள பாறையில் தாய்ப்பூச்சி போலவே உறுதியாகப் பொருந்தி தன் முறைக்கு ஒரு புதுக்குடும்பம் உண்டாக்குகின்றது. இதனின்றும் பல பூச்சிகள் நாம் முற்கூறியபடி உற்பத்தியாகி, தம் உற்பத்தி ஸ்தானத்தில் இராமல் அதற்கு அப்பாலுள்ள சௌகரியமான இடங்களிற் போய்ப் பதிந்துகொண்டு

தங்கள் முறைக்குக் குடும்பங்களுண்டாக்கும். இவ்விதம் அவை யெங்கும் பரவிப் பல்குகின்றன. பூச்சிகள் யாவும் தாய்ப்பூச்சி யிருக்குமிடத்தில் இல்லாமல் ஏன் வெவ்வேறு இடங்களிற் குடியேறுகின்றன? நெருக்கடியாய் ஒரே இடத்தில் பலகூடி அவதிப்பட்டு அவியாதிருக்கவே. "சாணி யிலே பிறந்து சாணியிலே வளர்ந்து சாணியிலே நசிக்கும் சாணிப் புழுப்போல்" ஜனநெருக்கம் மிகுந்த ஜனன பூமியில் சுகங்கெட்டுச் சீரழிபவர்களுக்கு இது ஓர் சிறந்த புத்தி புகட்டக் கூடியதாக இருக்கிறது. நாம் இப்படிச் சொல்வது, நம்மவர்கள் இந்தியாவைவிட்டு வெளியேறி வேற்றிடங்களில் குடிபுகவேண்டுமென்ற கருத்துக்கொண்டன்று. ஏனெனில் அங்ஙனம் செய்வது முடியாதகாரியம். எப்படியெனில், முதலாவது ஜாதிக்கட்டுப்பாடு என்ற ஒரு பெருந்தொல்லை தொன்று தொட்டுள்ளது. இதினின்றும் தப்பி வெளியேறி ணுலும், அந்நிய தேசங்களில் கறுப்பு மனிதர் காலடி எடுத்து வைக்க முடியாதபடி அடாத முறைகேடான பல நிபந்தனை கள் வெள்ளையர்களால் விதிக்கப்பட் டிருக்கின்றன. ஆதலால் நம்மவர்கள் இந்தியாவிலேயே ஜன அடர்த்தி இல்லாத பாகங் களில் போய் சுகமாக வாழவேண்டுமென்பதே நமது துணிபு. நிற்க.

ஜனன பூமிக்கும் நூதன வாசஸ்தானத்திற்கும் உள்ள பரஸ்பர உறவு,நோக்கம்,அவா,ராஜரீக சம்பந்தம் முதலியன மனோகரமாயும் படிப்போர்க்கு அறிவு புகட்டுவதாயும் இருக் கக்கூடும். ஆனால் வெகுதொலையில் வெவ்வேறிடங்களில் உள்ள இவ்வற்பப் பூச்சிகளுக்கும் அவா, ராஜரீகக் கட்டுப் பாடு முதலியன இருக்குமா என்று சிலர் நினைக்கலாம்.

அப்படி நினைப்பது தவறு. ஏனெனில், நமக்கு அவை தெரிய வராவிட்டால் இல்லையென்று நாமெப்படித் துணிந்து சொல்லலாம்? சாஸ்திர பண்டிதராகிய ஹக்ஸ்லி சொல்லுகிறபடி நாமும் பவளப்பூச்சி ஜன்மம் எடுப்போமேல் அப்பொழுது தான் அவற்றைப் பற்றிய யாவும் நன்கு புலப்படும் போலும். ஆதலின் நமக்குள்ள சக்திகள் சிற்றுயிர்கட் கண்ணும் உண்டென்றுவது இல்லையென்றுவது கண்டிப்பாய்ச் சொல்ல நமக்கு யாதொரு அதிகாரமும் கிடையாது. அச் சக்திகள் அவ்வவற்றிற் கேற்றவண்ணம் அமைந்திருக்கக் கூடும். ஆனால் அவைகளைப்பற்றி இன்னும் நாமெவ்வளவோ அறிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

பவள வியாபாரம்.

இதுகாறும் அரியவிலை உயர்ந்த பவளத்தை உண்டு பண்ணும் பூச்சியைப்பற்றிப் பேசினோம். இனி, பவளத்தையே பற்றி சில பகருவாம். இஃதோர் அரிய வியாபாரச் சரக்கு. பவளப் பாறைகள் இந்துமகா சமுத்திரத்திலும் பசிபிக் மகாசமுத்திரத்திலும் வளருகின்றன. இப்பாறைகளிற் சில 500 மைலுக்கு அதிகமான நீளத்தோடு இருக்கும். அகலம் ஏறக்குறைய 50 மைல். ஆயிரம் மைலுக்கதிக நீளமுள்ள பாறைகளும் உள.

பவளம் பலநிறத்தது. வெள்ளையாயும் கறுப்பாயும்இருப்பவை நற்பவளமாகா. செந்நிறத்தவை அல்லாதன பெருஞ் சுண்ணாம்புக் களஞ்சியங்களேயாகும். நாகபட்டினம் முதலிய விடங்களில் பெரும்படகுகள் சுண்ணாம்பின் பொருட்டே இப்பவளப் பாறைகளை ஏற்றிக்கொண்டு வருவதைக் காண

3435

லாம். சிவப்புப்பாறைகள் விசேஷமாய் மத்தியதரைக் கடலில் உள்ளன. பவளம் ஓர் அரிய வியாபாரச்சரக்காதலின், மத்திய தரைக் கடலைச் சுற்றிலுமுள்ள பல துறைமுகங்களிலும் எண்ணிறந்த ஜனங்கள் அது சம்பந்தமாக அதிக ஊக்கத்துடன் வேலை செய்துகொண்டு வருகின்றனர். தூற்றுக்குடி முத்துச்சலாபம் போலவே, தியூனிஸ் அல்ஜிரியா மொராகோ முதலியவிடங்களிலும், நேபிள்ஸ்க்கு அருகாமையிலும் ஸார்டினியா, கார்ஸிகா முதலிய தீவுகளின் கரையோரங்களிலும் மனிதர் தத்தம் படகுகள், நூதனச் சூழ்ச்சிகள் முதலியவற்றுடன் முழுகி, சதா வேலை செய்துகொண்டிருக்கக் காணலாம். பவளம்பெற மனிதர் சமுத்திரத்தில் ஆழமுழுகி அப்பூச்சிகளைப் பற்றி யெடுப்பர். இங்ஙனம் குளிகாரர் வெளியில் கொண்டுவரும் பவளமெல்லாம் அழுகிப் பதனழிய விடப்படுகின்றன. இப்படிச் செய்வதால் மிருதுவான பாகமெல்லாம் போய்ப் பசையற்ற எலும்பே மிச்சப்படும். இவ்வெலும்பின் நிறம் ஆரம்பத்தில் மனத்தைக் கவரக்கூடிய அவ்வளவு அழகுடன் இராது. அது அழகுற வேண்டுமானால் ரோம், ஜினோவா, நேப்பிள்ஸ் முதலிய இடங்களில் உள்ள தொழிற்சாலைகளில் செதுக்கப்பட்டு மெருகிடப்படவேண்டும். அப்பொழுதுதான் அதற்கு ஒரு காந்தியும் பளபளப்பும் ஏற்படும். பின்னர் அது இத்தொழிற் சாலைகளிலேயே மணி மணியாய் நறுக்கப்பட்டு, உலகத்துள்ள வெவ்வேறு ஊர்களுக்கும் அனுப்பப்படுகிறது.

முன்பு பவளச் சலாபத்திற்காக ஐரோப்பிய ஜாதியார் பலருக்குள் பிரமாதப் போட்டி இருந்துகொண்டிருந்தது.

ஆனால் இப்பொழுதோ இத்தாலியாராலேயே இத்தொழில் பெரும்பாலும் கையாளப்பட்டுவருகிறது.

உபயோகம்.

தொன்றுதொட்டு காலவரை இந்தியர்களாகிய நாம் நற்பவளத்தைக் காந்தியாகவும் களங்கமற்ற நல்வர்ணமாகவும் இருக்கும் விலையேறப்பெற்ற இரத்தினங்களில் ஒன்றாக மதித்து வருகிறோம்.

2. தங்கள் சிரோகவசத்திற்கும் யுத்தாயுதங்களுக்கும் சிறந்த அணிகளாக இதனை எகிப்தியரும் பிராஞ்சியரும் உபயோகப்படுத்தி வந்தனரென்றும் தெரியவருகிறது.

3. இற்றைக்கும் இந்தியாவில் நாம் மதிப்பது போல் அதனை ஓர் வைத்தியச் சரக்காக உரோமர் எண்ணி வந்தனர்.

4. நம்மவர்கள் இதனைப் பஸ்மமாக்கி அப் பஸ்மத்தை இருமல், கக்குவான், மிடற்றழற்சி முதலிய பல நோய்களைப் போக்கச் சிறந்த கைகண்ட ஔஷதமாய் உபயோகிக்கின்றனர். (யாமே எமது சொந்தக் கையால் இப்பஸ்மம் தயாரித்து அதன் பிரயோஜனத்தை நேரில் கண்டறிந்தோம்.)

5. தற்காலத்திலும் இத்தாலியர் பவளத்துண்டத்தை மலடுநீக்கவும் கண்திருஷ்டி போக்கவும்கூடிய ஓர் சிறந்த ரக்ஷையாகக் கருதுகின்றனர். ஏதோ ஓர் சிறந்த தன்மை இருக்கின்றதெனக் கருதி பவளத்தை மாத்திரமல்லாமல் முத்தையும் நாம் அணிந்து வருகிறோம்.

6. இந்தியாவிலும் அநேகரால் பவளம் ஓர் ரக்ஷையாகக் கருதப்படுவதுடன் ஓர் சிறந்த அணிகலனுயும் இருப்பதால் யாவரும் இதனை ஆவலுடன் அணிவர்.

விஷயச்சுருக்கம்.

1. நற்பவளம் ஓர் செடியினின்றும் உண்டாவதன்றென்றும், அது, ஆழ்கடலில் வசிக்கும் பலகோடி சிறு பூச்சிகள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் பொருட்டுத் தமக்குள்ளேயே உண்டாக்கும் ஓர்கடின பதார்த்தமென்றும் அக்கடின பதார்த்தமே அவற்றிற்கு எலும்புகள் போலாகின்றனவென்றும் அறிந்து கொண்டோம்.

2. இதனை உற்பத்தி செய்யும் பூச்சியின் சரீரம் இரண்டு தோலடுக்குகளால் ஆக்கப்பட்டிருக்கிறதென்றும், அவற்றுள் புறத்தோல் கூச்சத்தை விளைவிக்கக்கூடியதென்றும், உள்தோல், வாய், ஆகாரக்குழாய், இரைக்குடல் உதரக்குழி முதலியன கொண்டதென்றும், அதற்கு ஜீரணிப்பிக்கும் சக்தி பெரிதும் வாய்ந்துள்ளதென்றும் அறிந்தோம்.

3. உதரக்குழியில் ஜீரணிப்பு, சுவாசம், ரத்த ஓட்டம், பிரதிபுற்பாதனம் முதலியன நடந்தேறுகின்றனவென்றும் தெரியலானோம்.

4. இப்பூச்சியானது தனது இரையைப் பற்றிக்கொள்ள அதற்கு அடுபடையும் தன்னை இம்ஸிக்கவரும் பிராணிகளை அணுகவொட்டாது அடித்துத் துரத்தத் தடுபடைகளும் கொண்டுள்ளதென்றும் கண்டோம்.

5. தவிரவும், மூன்று உட்கொள்ளும் இரையே மற்றவைகட்கும் சமமாகப் போய்ச்சேருவதையும், இவை யாவும் ஒத்து ஏற்றத்தாழ்வின்றி மனிதரும் அடையாத கூட்டுறவைப் பெற்று வாழ்வதையும் அறியலானோம்.

6. இது பிரதியுற்பத்தி செய்யும் இருவகையும் நமக்குத் தெரியும். ஒருவகையால் சந்ததி விருத்தியாவதும் மற்றொன்றினால் நூதன வாசஸ்தலங்கள் ஏற்படுவதும் தெரியவந்தன.

7. ஒரே குடும்பத்திற்றோன்றிய ஸ்திரீ புருஷர்களின் பரஸ்பர சம்பந்தம் உதவாதென்றும், அப்படிச்செய்வதால் இறுதியில் குலம் நசிக்கும் என்றும், குழந்தைகள் பிறந்தவுடனேயே தம் குடும்பத்தில், இன்னார்க்கு என்று பொட்டுக்கட்டிப்போடும் புண்ணியவான்கள் அறிவார்களாக.

8. கடைசியாக, பவளத்தின் உபயோகமும் அது இருக்கு மிடமும் அது வியாபாரமாகும் ஸ்தலங்களும் அறிந்தோம்.

9. இதனால் நாம் அற்பப் பிராணிகளைப்பற்றியும் அறிவதினால் எவ்வளவு பயனடையலாகும் என்பதும் புலப்படும். இனியேனும் இத்தகைய சிறு பூச்சிகளைக் கேவலமாக நினைத்து விடாமல் அவற்றுள் நமக்குப் புலப்படா விஷயங்களைப்பற்றி ஆய்ந்தறிந்து பார்த்துத் தெளிவோமாக.

*அக்பரின் காலக்ஷேபம்

நானு நிலைமைகளிலுமுள்ள பிரஜைகளின் க்ஷேம லாபமும் இன்பமும், அரசன் காலங்கழிக்கும் விதத்தைப் பொறுத்துள்ளவை. இஃது யாவருமறிந்த விஷயமே. அக்பர் சக்ரவர்த்தியும் பிரஜைகளைத் தம் வயமாக்கி, அவர்களுடைய அன்பையெல்லாம் கொள்ளைகொள்ள ஸதா முயன்றுகொண்டே யிருப்பார். "யாவரையும்ரஞ்ஜிக்க(சந்தோஷங்கொள்ள)ச் செய்பவன்" என்பதே ராஜா என்னும் பதத்தின் பொருளாகும். †.பிரஜைகளின் மனத்தைக் கவர்ந்து அவர்களது மனமெல்லாம் உருகிக் கரைந்து தன் மனமோடு ஒன்று சேரும்படி செய்யும் வசீகர சக்தியுடையவனே ராஜா. இவற்றிற் கிணங்கவே, நமது அக்பர் சக்கரவர்த்தியும் நடக்கலாயினர். ஓயாக்கவலையுடனிருந்தாலும், இராஜாங்க சம்பந்தமாக நானுவித வேலைகளிருந்தாலும், சற்றேனும் மன அமைதியை அவர் கைவிடமாட்டார். சதா சர்வகாலமும் சந்தோஷத்துடனேயே இருப்பார். மேலும் ஈசுவரனுக்குத் திருப்தியாகவும் பிரியமாகவும் எந்தெந்தத் தொழில்கள் புரியவேண்டுமோ அவைகளைச் செய்வதில் இடையறு ஊக்கத்துடனிருப்பார். யோகத்திலும், தியானத்திலும்,சிந்தையை ஆழ்த்துவர். ஞான நெறியடைய மிக்க தீவிரமுள்ளவராதலால் பிறரிடம்

---

*இது 'அபுல் பாசில்' எழுதிய 'அயின் அக்பரி' யிலிருந்து எடுத்தெழுதப் பட்டது.

† c. f 'A king is he who melts all others' wills into his own'—*Carlyle*.

ஞானமார்க்கத்தைக் கேட்டுத் தெரிந்துகொள்வார். தாம் மஹா நுண்ணறிவுடைய வராயிருந்தாலும் அதை வெளிக் காட்டுவதில்லே. பெரியோர்முதல் தாழ்ந்தவர் வரை எதைச் சொன்னாலும் கவனமாகக் கேட்டுக்கொள்வார். ஒவ்வொருவ ரிடமிருந்தும் நல் விஷயத்தைத் தெரிந்தெடுத்துக் கொள்வார். அவருடைய கொள்கையோவெனில் "சற்குணமுடையோர் சற்றும் பயனிலா அற்பப் பொருளினும் அறநெறிகாண்பர்" என்பதே. இப்படி நெடுங்காலம் நடந்துவந்தும் அவரு க்குப் புதிதாய்க் கற்றுத் தெரியவேண்டுவது ஒன்றுமில்லே. அவருக்குச் சமானமாக தெரிந்தவர்களும் கிடையாது. ஒவ் வொரு விஷயத்திலும் மேற்போனவர். கரை கடந்தவர். ராஜ்ய தந்திர நிபுணர்களெல்லாம் சக்கரவர்த்தி அரசுபுரியும் விதத்தைக்கண்டு "ஏதப்பா! இவருடைய புத்திக்கு நம்மறிவு எவ்வளவுதூரம்! சூரியனுக்கு முன் மின்மினிபோலிருக் கிறது" என்று ஆச்சரியப்பட்டுச் சிங்காதனத்திற்கு சிரோ ரத்னமாய் விளங்கும் இவரிடம் ராஜ்ய தந்திரங்களைக் கற்றுக் கொள்வார்கள். தாம் மிகவும் தெரிந்தவரென்ற அகம்பாவம் எப்போதும் அவர் கொண்டவரல்லர். தாம் கேட்டறிய வேண்டியவைகள் நிரம்ப இருக்கின்றன என்றே எண்ணி ஒவ்வொருவரிடத்திலும் கேட்டுக் கற்க முயலுவார். தன்னிகரில்லா ராஜ ராஜேசுவரனுக இருந்தும் தம்மிடம் சமஸ்த ஐசுவரியங்களுமிருந்தும், அவர் ஒருக்காலும் தம்மை மறப்பதில்லே. கோபக்குறியென்பதே அவரிடம் தோன்றாது. வெகு உல்லாசத்துடன் தான் இருப்பார். ராஜப்பிரபுக்கள், தங்களுக்கு நித்திரை வரும்வண்ணம் கதாசாகரர்களைக் கூப் பிட்டுக் கதைகள் சொல்லச்சொல்லி கேட்பது சகஜமென்பது பொதுவாகத் தெரிந்தவிஷயமன்றோ? ஆனல் நமது சக்ர

வர்த்தியோ அப்படிப்பட்டவரல்லர். தமக்கு நித்திரை வராமலிருக்கும் பொருட்டு விநோதக் கதைகள் சொல்லச் சொல்லிக் கேட்பார். ஆகையால் அகமும் புறமும் தூய்மையுற வேண்டிய கிரியைகளைச் செய்துகொண்டு தியானத்திலிருப்பர். புறச்சுத்த சம்பந்தமாகப் பாடு படுவதில் மிகப் பிரயோஜனமில்லை யென்று அறிந்தவராக இருந்தும், புறச் சுத்தியில் விசுவாச நம்பிக்கை உள்ளவர்கள் மனம் கோணுவண்ணம் தாமும் அவைகளை அனுஷ்டித்தே காட்டுவார். அவர் வாழ் நாட்களெல்லாம் நன்னெறிப் பயிற்சியிலும் அவைகளை அனுஷ்டித்து நடப்பதிலுமே கழிந்தன. சமஸ்த பெரியோர்களும் இதையறிவார்கள். ஈசுவரனுக்கும் தெரியும்.

சக்ரவர்த்தி எச்சாதியரையும், எம்மதத்தையும் தூஷிப்பதே இல்லை; நகைத்துப் பரிகாசம் செய்வதும் கிடையாது. அவர் தம் காலத்தை விருதாவாகக் கழித்ததே இல்லை. தம்முடைய கடமையைச் சரிவரச் செய்வதில் கருத்தும் கவலையுமாக இருந்து செய்து முடிப்பார். அவருடைய சன்மார்க்க ஒழுக்கங்களின் விசேஷப்பயனால் அவர் செய்யும் ஒவ்வொரு கிரியைகளும் ஈசுவரார்ப்பண மென்றே அறிதல் வேண்டும். சதா ஈசுவர ஸ்தோத்திரம் செய்வார். தம்முடைய சொந்த நடவடிக்கைகள், செய்த காரியங்கள், எண்ணிய எண்ணங்கள் முதலியன சரியா, தவறா என்று தமக்குள்ளேயே சிந்தித்துப் பார்ப்பார். இப்படிச் சிந்திக்க நான்கு வேளைகள் ஏற்படுத்தியுள்ளார். முதலாவது அதிகாலையில் சூரியன் கிரணங்களை வீசுவதற்கு முன் கிழக்கு வெளுத்திருக்கும் காலம். இரண்டாவது—சூரியன் ஜ்வலித்துப் பிரகாசித்துத் தலை உச்சிக்கு வரும் தருணம். மூன்றாவது—சூரியன் படுகடலிற்

பாயப்போகும் அந்திவேளை. நான்காவது—இரவு நடுச் சாமமான 12 மணி வேளை. இதெல்லாம் ஈசுவரார்ப்பணமாக வே செய்வார். மூடர்களும் அறிவீனர்களும் இந்த ரஹஸ்யம் உணராமலிருந்தால் யாரென்ன செய்யலாம்? நம்மைப் படைத்து ரக்ஷிக்கும் கருணாசாகரரான பகவானைக் கொண்டாடிப் புகழவேண்டுவது அத்யாவசிய மென்று தெரியாதாருமுளரோ? சர்வ வல்லமையும், சர்வ வியாபகத்துவமும், சர்வ காருண்யமும், சர்வக்ஞமும் உள்ள சக்ரவர்த்திகளுக்குச் சக்ரவர்த்தியாயுள்ள சர்வேசுரனுடைய ஒரு அற்ப அம்சம் தம்மிடமிருந்து விளங்குவதால் அரசுசெலுத்தி வருகிறோமென்று அறிந்து புவி மன்னர்கள் ஈசுவரனை நன்காராதிக்க வேண்டுவது மிகவும் அவசியமல்லவா? நம் சக்ரவர்த்தி இதை நன்கறிந்தவராதலால் தம் கடமையை ஒழுங்காகச் செலுத்தி ஆராதனை செய்து வந்தார். அவருக்கு அக்நியிடத்தில் பக்தியுண்டு. தீபங்களையெல்லாம் ஆராதிப்பார். சர்வஜோதிக் கெல்லாமிருப்பிடமாகிய பகவானின் ஒரு நுண்ணிய அம்சமாக அக்நியையும் தீபங்களையும் கருதுவார். தம் பிரஜைகளின் க்ஷேமத்தையும் சந்தோஷத்தையும் கருதும் அவருக்கு, பெரும் குற்றவாளிகளுக்குக்கூட மரணதண்டனை விதிக்க மனம் கூசும்.

அவர் மாம்ஸ போஜனத்தைப் பெரும்பாலும் ஒழிப்பர். வெகு மாதங்கள் இறைச்சியைக் கையால் தொடாமலும் கண்ணால் கூடப் பாராமலும் இருப்பார். அவருக்கு சிற்றின்பங்களிலும் ஸ்திரீ லோலனத்திலும் விசேஷித்த பிரியமில்லை. ஒரு தினமாகிய 24-மணி நேரத்துக்கு ஒரு வேளைதான் உண்டு கொள்வார்.

அனேகமாய் இராப்பகலெல்லாம் ராஜ்யகாரியங்கள் செய்வதிலும் பகவத் தியானத்திலுமே போக்குவார். நித்திரை செய்யும் காலம் வெகு அற்பம். மாலை வேளையில் சில நேரமும், காலை வேளையில் சிறிது நேரமும் சயனித்து இளைப்பாறுவார். இராவேளையில் அனேக நேரம் வேலையாகவே யிருப்பார். தான் ஏகாந்தமாய் வீற்றிருக்கும் அரண்மனை மண்டபத்திற்கு இராக்காலத்தில் தத்துவ சாஸ்திர பண்டிதர்களான முதியோர்களும், மகமதிய மகான்களாகிய பேரறிவுள்ள சூபி (Sufis) களும் சக்ரவர்த்தியினிடம் யாதொரு கட்டுக் காவல் தடையின்றி வருவார்கள். வந்தவர்களுக்கு மரியாதை செய்து ஆசனங்களிலிருத்தி ஸத்சம்பாஷணையில் காலங்கழிப்பர். பெரியோர்கள் சொல்வதை யெல்லாம் செவ்வனே கேட்டு ஆழ்ந்து அறிந்து பழைய மார்க்கங்களைத் தெளிவுற ஆராய்ந்து ஒப்பிட்டுப் பார்த்து, ஏதாவது அம்மார்க்க அனுஷ்டானங்களைச் சீர்ப்படுத்தித் திருத்தவேண்டிய அவசியமிருப்பது கண்டால் அவ்வண்ணம் அவைகளை ஒழுங்கு படுத்தச் சட்டதிட்டங்கள் ஏற்படுத்துவார். அவைகளால் பழைய அனுஷ்டானங்களைத் தீர விசாரியாமல் முரட்டுப் பிடியாக இருந்து வந்த வயதில் முதியோர்கள், ஞாயத்தை அறிந்து, பழையவைகளை விட்டுவிட்டு, மேலானதாயுள்ள நூதன அனுஷ்டானத்தை அனுசரித்துச் சந்தோஷமடைவராயினர். வாலிபர்களும், பிரகிருதத்தில் தங்கள் புத்திக்கு ஒத்திருக்கிற தென்று நூதன சம்பிரதாய சட்ட திட்டங்களை யறிந்து அதன்படி ஒழுகி நன்னெறி பயில்வாராயினர். சக்ரவர்த்தி சபைக்குச் சரித்திரம் முதலியவைகளில் தேர்ச்சியடைந்தவர்கள் வந்து கூடி முன் நிகழ்ந்தவைகளை யெல்லாம் கூட்டாமலும் குறைக்கா

மலும் நடந்தவை நடந்தபடி உண்மையாய் எடுத்துப் பேசு வார்கள்.

இராக்காலத்தில் ராஜ்ய காரியங்கள் நடவடிக்கைகள் இவைகளை விசாரித்துக் கேட்டு ஒவ்வொரு இலாகாவிலும் என்ன என்ன உத்திரவு பிறப்பிக்கவேண்டுமோ அவை களை யெல்லாம் பிறப்பிப்பார். விடிவதற்கு ஒரு ஜாமம் அல்லது மூன்றுமணி நேரத்திற்கு முந்தி சகல தேசத்திலி ருந்தும் மகா சங்கீத ப்ரவீணர்கள் தங்கள் வாத்தியங்களான வீணை, சாரங்கி, கித்தார், சுவரபத்து, யாழ், கின்னரி, பிடில் முதலியவைகளோடும் வந்து கூடி அருமையாய்ப் பாடி வாசிப்பார்கள். இப்படியாக $4\frac{1}{2}$ மணி வரை கழியும். அப் பால் வித்வான்களுக்கு மரியாதை செய்து விடையளித்து விட்டு $4\frac{1}{2}$மணிமுதல் மௌனமாகக் கண்களை மூடிக்கொண்டு ஏகாந்தமாகத் தியானத்திலிருந்து விடுவார். உடனே கிழ க்கு வெளுத்து சூரியன் கிளம்பப் போகும் தறுவாயில் நானு வித அந்தஸ்துள்ள உத்தியோகஸ்தர்கள், ஜனங்கள், ராஜத் துவாரத்தில் தயாராகக் காத்திருப்பார்கள். சூரியன் கிளம் பினவுடன் எல்லாரும் "கூர்னிஷ்"(Koornish)என்ற தொழு கையால் சக்ரவர்த்தியை வணங்க ஆரம்பிப்பார்கள். தொழு கை முடிந்தவுடன் கூட்டம் கலையும். உடனே பத்நிமார் களும் மங்கள விலாஸத்திலுள்ள சக்ரவர்த்தியின் காதலி களும் சக்ரவர்த்திக்குத் தண்டம் ஸமர்ப்பிக்க வருவார்கள். அப்போது ஒவ்வொருவருடைய யோக க்ஷேமலாப முதலிய வைகளை விசாரித்து விட்டு சில்லரை வேலைகளையும் முடித்துக் கொண்டு சிறிது நேரம் இளைப்பாறவேண்டிச் சக்ரவர்த்தி சயனித்துக் கொள்வர்.

ஒரு தினமாகிய இருபத்திநான்கு மணி நேரத்தில் இரண்டு தடவை சகல ஜனங்களுக்கும் சக்ரவர்த்தி, 'பேட்டி' கொடுப்பார். காலைக் கடன்களை முடித்த உடனே முதல் தடவை 'பேட்டி'. அப்போது அவர் ஜரோகா (Jarokha) என்னுமிடத்தில் யாரும் பார்க்க வீற்றிருப்பார். எல்லாரும்—காவற்காரர்கள், கட்டியக் காரர்கள், சோப்தார்கள், துருப்புகள் இவர்கள்—சக்ரவர்த்தியைத் தாராளமாகப் பார்க்கலாம். இதற்குத் தான் "சக்ரவர்த்தி, தரிசனம் கொடுத்தல்" என்று பெயர். இந்தச் சமயத்தில் ராஜ்ய காரியமான அனேக வேலைகள் நடந்தேறும். இரண்டாமுறை தரிசனம் அவர் "தவலத் கானு" வில் வீற்றிருக்குங் காலத்தில். அந்தத் தவலத் கானுவுக்குப் அவர் காலை சுமார் ஒன்பது மணிக்கெல்லாம் செல்வார். அந்த மண்டபத்தில் எல்லாரும் சென்று அவர் முன்பு நிற்பார்கள். இந்தத் தர்பார் சில சமையம் மாலையிலும் சில சமையம் இரவிலும் கூடுவதுண்டு. அனேக சமையம் 'தவலத் கானு'வுக்குக் கொண்டுவந்துவிடும் ஒரு சாளரத்தில் யாவர் கண்களுக்கும் புலப்படும்படி வீற்றிருந்து ஒருவர் சிபார்சு மில்லாமல் வந்திருப்பவர்களிடம் நேரே (பிரியாது) மனுக்கள் தமது சொந்தக் கையாலேயே வாங்கிப் பார்வையிட்டு அவற்றிற்குத் தக்கபடி நியாயமாக உத்திரவளிப்பார். ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய குறைகளை ராஜசமுகத்தில் தெரியப்படுத்திக் கொள்வார்கள். அவர்களுக்கெல்லாம் வேண்டியவைகளைச் செய்து, இன்னின்னபடி நடத்தவேண்டுமென்று அவர் புத்திமதி உரைத்தனுப்புவார்.

அவர் எல்லாருக்கும் நடு நிலைமையாக நியாயம் செய்யத் தீர்மானம் கொண்டுள்ளவர். பிரஜைகள் எல்லாரும் க்ஷேமமாக சந்தோஷத் துடனிருக்க நடப்பவர். அவர்கள் சந்தோஷமாக இருந்தால் தான், தாம் ஆநந்தமாயிருக்கலா மென்பதைத் தீர உணர்ந்தவர். ஆதலின், அவர் வழக்குகளை விசாரணை செய்யும் காலத்தில் கொஞ்சமேனும் ஆத்திரம், கோபம் என்பதே வரவொட்டாமல் அமரிக்கையுடனும் மனச் சாந்தத்துடனு மிருப்பார்.

சக்ரவர்த்தி கொலுக்கூட்டுவதாக இருந்தால் அது விஷயம் ஒரு பெரிய பேரிகை (நகரா) அடிப்பதன் மூலமாகப் பிரசித்தம் செய்யப்படும். அப்போது சகலரும் அறிந்து கொண்டு, தொண்டமான் முதல் தோட்டிவரை உடனே கொலுவுக்கு வந்துகூடுவார்கள். அவரவர்கள் அந்தஸ்துக்குத் தக்கபடி அணியணியாக ராஜ சன்னிதி முன் நிற்பார்கள். அவர்கள் சக்ரவர்த்தியைக் கூர்னீஷ் என்னும் ஸ்தோத்திரத்தால் தொழுவதற்குத் தயாராக இருப்பார்கள். அப்போது வித்வான்கள், கைத்தொழிற்காரர்களாகிய கொல்லர், தச்சர், தட்டார், நெசவுகாரர் முதலானவர்க ளெல்லாரும் அவரவர்களுக்கு வேண்டியவற்றைச் சக்ரவர்த்தி முன் தெரியப் படுத்திக் கொள்வார்கள். தேவாலய தர்மசத்திர அதிகாரிகளும், நாநா இலாகா உத்தியோகஸ்தர்களும், தங்கள் இலாகாவுக்கு வேண்டியவைகளைத் தெரியப்படுத்திக் கொள்ளுவார்கள். முன்சிப்கள் முதலிய நீதித் தலைவர்கள் தாம்தாம் நடத்திய நடவடிக்கைகளைப் பற்றிய அறிக்கையைப் படிப்பார்கள். இக் காலங்களில், கொலு மண்டபத்துக்கு முன்,

மல்யுத்தம், குஸ்தி, சிலம்பம் நடக்கும். சகல சங்கீதமும், வாத்திய கோஷங்களும் அப்பொழுது காணலாம்.

சக்ரவர்த்தியை இரண்டு விதமாக வணங்குவதுண்டு: அவை கூர்னீஷ் (Koornish,) தஸ்லீம் (Tuslim) எனப் படும்.

கூர்னீஷ்:—வலது கை உள்ளங்கையை நெற்றியில் வைத்துக்கொண்டு தலையைக் குனிந்து கொள்ள வேண்டும். இவ்விதம் சிரமேற் கைகுவித்து வணங்குவது சபையோருக் கெல்லாம் மரியாதை செய்வதாகும்.

தஸ்லீம்:—வலது புறங்கை பூமியிற் படியவேண்டும். குனிந்த மனிதன் நிமிரநிமிரப் புறங்கையும் மெதுவாக உயர வேண்டும். நேரே நிமிர்ந்த பிறகு உள்ளங் கையைத் தலை மேல் வைத்துக் கொள்ள வேண்டும்.

இது விஷயமாக, சக்ரவர்த்தி ஓர் விருத்தாந்தத்தைப் பின்வருமாறுசொன்னார். "ஒரு நாள் என் அருமைப் பிதா எனக்கு ராஜகுமாரன் தரித்துக்கொள்ள வேண்டிய குல்லாவை அன்புடன் அளித்தார். அதைத் தலையில் வைத்துக் கொண்டேன். அது என் தலைக்கு மிகவும் பெரிதாயிருந்தது. தலையிலிருந்து நழுவிக் கீழே விழுந்துவிடுமென்று நான் என் இடக்கையால் அதைத் தாங்கிக் கொண்டு மேற்சொல்லிய தஸ்லீம் அநுஷ்டானப்படி குனிந்து வணங்கி நின்றேன். இந்தத் தஸ்லீம் நானகவே நூதனமாக அப்போதைக்கு என் புத்தியில் உதித்துச் செய்தது. என்பிதா இதைக்கண்டு வெகு மனச்சந்துஷ்டி யடைந்தவராய், என்னை மிகவும் அன்போடு

மெய்ச்சினர். அது முதல் இந்தத் தஸ்லீம் அனுஷ்டானம் ஊர்ஜிதத்திற்கு வந்தது." நிற்க. கொலு மண்டபத்தில், ஜாகீர், அந்தஸ்த்து உயர்த்தும் உடுப்பு, யானை, குதிரை இவைகளைப் பரிசர்கப் பெற்றவர்கள் விடை பெற்றுச் செல்லுங் காலத்தில் இந்தத் தஸ்லீம் வணக்கம் மூன்றுதரம் செய்ய வேண்டும். மற்ற வேளைகளில் ஒருதரம் செய்தாலே போதுமானது.

மூற் காலங்களில் சிரசு தரையிற்பட வணங்க வேண்டுமாம். அப்படி வணங்குவது சர்வ வல்லமையுள்ள கடவுளுக்கு மட்டும் உரித்தேயன்றி மானிடர்க்குப் பகிரங்கமாக வணங்குவது தகாதென்று அவ் வழக்கத்தைச் சக்ரவர்த்தி நிறுத்திவிட்டார். ஆயினும் சக்ரவர்த்தி தனிமையாக இருக்குங் காலத்தில், யாராவது வந்து அரசனால் உட்காரும்படி உத்தரவு பெற்றால் அவன் தலையைத் தரையில் படியும்படி பணிந்து பிறகு உட்காருவது வழக்கம்.

ஆத்மஞான, தத்துவஞான வழி நடத்துகை.
(Spiritual Guidance.)

எல்லாம் வல்ல கடவுளுடைய மாயாசக்தியால் இப்பிரபஞ்சம் வேறுவேறு தோற்றங்களோடும், பற்பல குணங்களோடும் நானாவித ஜாதி வித்யாஸத்தோடும் உற்பத்தியாய் நடைபெற்று வருகிறது. மானிடர்களோ ஒருவரைப்போல் ஒருவர் நினைப்பதுமில்லை, நடப்பது மில்லை பெரும்பான்மையோர் தங்கள் தங்கள் செயல்களைப்பற்றியே புகழ்ந்து பேசித் திரிவார்கள். மற்றவர்களுடைய நடவடிக்கைகளை இகழ்ந்து பேசிக் கண்டனம் செய்வார்கள். சிலர் பிறருக்குத் தீங்கு

இழைப்பதிலேயே சந்தோஷம் அடைவார்கள். தீங்கு செய்யாவிடில் துக்கிப்பார்கள். மற்றும் சிலர் தங்களுடைய சுயநயம் என்பதைச் சற்றேனும் பாராட்டாமலே உலகத்திற்குப் பாடுபட்டு உழைக்கக் கருத்தா யிருப்பார்கள். இப்பற்பல குணத்தினர்களுக்கும், பற்பல நம்பிக்கைகளும், கோட்பாடுகளும் உண்டு. ஒவ்வொருவரும் அவரவர்களுக்குத் தோன்றும் சொற்பனங்களையும் ஜாலங்களையும் நிஜமென்று எண்ணிச் சிந்தை மகிழ்வார்கள். ஆனாலும் அபூர்வமாகச் சிற்சிலர் ஒரொரு சமயம் ஆழ்ந்த சிந்தை உள்ளவர்களாய்த் தங்கள் நடை, உடை, பாவனை விஷய இன்பங்கள் முதலியவைகளைப் பரித்தியாகம் செய்து உலகியல்களை நீக்கிக் கண்களை உள் திருப்பி நோக்கி, யோகம் செய்து, அதன் பயனைப் பிரபஞ்சமே 'ஜாலம்' 'மித்தை' என்று தெளிவுறத் தெரிந்து ஞானக் கண்களால் ஸத், சித், ஆநந்தத்தைக் கண்டுகொள்வார்கள். ஆனால் மெய்ஞ்ஞான தீபமோ ஒவ்வொரு வீட்டிலும் பிரகாசிப்பதில்லை.

ஒவ்வொரு மனதும் உபதேசம் பெற்றுக்கொள்ளப் பக்குவப் பட்டதாக இருப்பதில்லை. கொஞ்சம் உழைத்துச் சிறிது ஞானம் அடைந்தவன், மற்ற மானிடர்களைத் துஷ்ட கொடிய விலங்கினங்கள் போல் எண்ணி மௌனமாக இருந்துவிடுகிறான். அவனுக்கு ஞானம் முதிர்வடைந்து அவன் மன உல்லாஸத்தினால் தன்னுடைய அனுபவத்தை ஏனையோருக்குச் சொல்லப்புகின், ஏனையோர்கள் அவனைப் பித்தன் என்றும், மூடன் என்றும், உன்மத்தனென்றும், திட்டித் தூற்றுவார்கள். "கோவணம் கட்டாத ஊரில் கோவணாண்டி பைத்தியக்காரன் அல்லவா?" சிலர் அவனை நாஸ்திகன் என்

றும், தெய்வ நிந்தனை செய்வோன் என்றும், கல்லால் அடித்து இம்சை செய்து, ஒருசமையம் அவன் உயிரையும் வாங்கி விடுவார்கள். இவை எல்லாம் உலக இயல்பே. ஆனாலும் தர்மம் தாழ்ந்து அதர்மம் ஓங்கி வளரும் காலத்தில் சர்வ தயாபரனாகிய பகவான் சர்வஜன ரக்ஷிப்புக்காகத் தன்னுடைய அம்சத்தை ஒரு மஹானிடம் புகச்செய்து, அவனை அரசனாக்கி, சகலவித ஞானங்களையும் புகட்டி, ஜனங்களை நல்வழிக்குக் கொண்டுவரச் சகல அதிகாரத்துடன் திட்டம்செய்வார். தாமே அவதார புருஷனாகத் தோன்றுவார். இது சகல சாஸ்திரங்களிலும் ஏற்பட்டுள்ளது. இதை அநுசரித்தே, இவ் வேளையில் நமது அக்பர் சக்ரவர்த்தி அவதரித்தார் என்று சொல்லவேண்டும். இவர் பிறந்த காலத்தில் மகான்களாகிய ஜோதிட சாஸ்திர பண்டிதர்கள் இவர் தெய்வத் தன்மையை அறிந்து தங்களுக்குள் இவரை உத்ஸாகத்துடன் புகழ்ந்து பேசி ஆனந்திப்பார்கள். நம்முடைய சக்ரவர்த்தி தம் தெய்வத்தன்மையை அறிந்துள்ளாராயினும் அந்நியர்கள் அறியாவண்ணம் தாம் சாமான்யர் போலவே நடித்துக் காட்டிக் கொள்வார். இப்படியிருந்தாலும் பகவான் ஆக்ஞையை மீறிச் செல்பவர் யார்? அவர் திரு வுள்ளக் கட்டளைப்படி நடந்தே தீரவேண்டிய தன்றோ? சக்ரவர்த்தி தம் குழந்தைப் பருவத்திலேயே—தாம் அறியாத காலத்திலேயே—பிறர் ஆச்சரியப்பட்டு வணங்கும்படியான சிற்சில அற்புத விநோத லீலைகளைப் புரிந்தார். இவர் எவ்வளவு மறைத்து அடக்க முயன்றும் இவரது தெய்வத்தன்மை, தானாகவே, இவர் செய்யும் காரியங்கள் இவருடைய நடவடிக்கைகள் முதலியவற்றால் எவரும் எளிதில் அறியும்படி வெளிப்பட்டது. இதையுணர்ந்து "நாம் செய்வதொன்றில்லை. எல்லாம்

பகவான் திருவுள்ளப்படி தான் நடக்கும். பகவான் ஆக்ஞையைச் சிரஸால் வகித்து அதன்படி நடக்கவேண்டும். நம்மை ஒரு கருவியாக அவர் நியமனம் செய்து இருக்கிறார். நாம் அறிந்ததை எல்லாருக்கும் வெளியிடுதல் வேண்டும்." என்று தீர்மானித்து அவர் நன்னெறி மார்க்கம் உபதேசிப்பாராயினார். சந்தேகத்தால் விசார சாகரத்தில் முழுகிக் கிடப்பவனை சந்தேகம் தெளிவித்துக் கைதூக்கி விடுவார். சிற்சிலருக்கு அவரவர் எண்ணப்படிக்கும் இஷ்டப்படிக்கும் பாடம் சொல்வார். வேறு சிலருக்கு அவர்களுடைய கோரிக்கைகளுக்கு விரோதமாகப் போதிப்பார். சக்ரவர்த்திக்கு அநேகர் சீடர்கள். தபஸ்விகள், சன்னியாசிகளிடம் ஒரு மண்டலம் (45 நாள்) பட்டினி கிடந்து சிசுருஷை புரிந்து கற்றுக் கொள்ளக்கூடிய வித்தைகளை ஒரே நாளில் இவருடைய சன்னிதி விசேஷத்தாலும், ஸ்பரிசத்தாலும், போதனுசக்தியாலும் அவர்கள் அறிந்து கொள்வார்கள். உலகத்தைத் துறந்த சன்னியாசிகள், பரதேசிகள், கியாலண்டர்கள் (புருவ மயிரைச் சிரைத்துக் காஷாயம் பூண்டு திரியும் ஒருவகை மகமதிய பக்கிரிகள்), தத்துவ சாஸ்திர பண்டிதர்கள், மஸ்தான்கள், சூபிகள், துருப்பு சிப்பாய்கள், யுத்தவீரர்கள், வியாபாரிகள், வைசியர்கள், பயிரிடுவோர்கள், வேளாளர்கள், கைத்தொழில் புரிவோர்கள் முதலிய நாஞ ஜனங்களும் பற்பல தேசங்களிலிருந்து சக்ரவர்த்தியிடம் வருவார்கள். ஒவ்வொருவரும் ஏதாவது கொஞ்சம்கொஞ்சம் ஞானக்கண் திறக்கப்பட்டு பரவித்தையுடன் போவார்கள்.

நாஞவித அந்தஸ்தும், யோக்கியதையும் உள்ள நாஞ ஜாதியாரும் தங்கள் தங்கள் கோரிக்கை நிறைவேற வேண்டு

வதாக இருந்தால் தெய்வத்திற்குப் பதிலாகச் சக்ரவர்த்திக்குப் பிரார்த்தனை செய்வார்கள். அப்படிச் செய்வதால் தங்களுடைய சங்கடங்கள் நிவிர்த்தியாகும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு உண்டு. அப்படி அவர்கள் கோரியவை கைகூடி வந்தால் அவர்கள் சக்ரவர்த்திக்காகப் பிரார்த்தனை செய்து வைத்த சாமான்கள், பொருள்களை எல்லாம் அவர் முன் கொண்டுவந்து சமர்ப்பிப்பார்கள். வெகுதூரம் இருந்து இம்மாதிரி அர்ப்பணம்செய்ய முடியாதவர்கள் சாமான்களை, சக்ரவர்த்தியை உத்தேசித்து, தர்மத்தில் உபயோகப்படுத்தி விடுவார்கள். சக்ரவர்த்தி இராஜ்யங்களைச் சுற்றிப்பார்ப்பதற்கும் இதர இராச்சியங்களைப் பிடிப்பதற்கும், வேட்டையாடிக் களிப்பதற்கும் ராஜதானியைவிட்டு வெளியே புறப்படுவதுண்டு. அக்காலங்களிலெல்லாம், ஒவ்வொரு நகரத்திலிருந்தும், பட்டணத்திலிருந்தும், கிராமங்களிலிருந்தும் ஏராளமாக ஆண் பெண் அடங்கலும் பிரார்த்தனை செய்துவைத்திருந்த தத்தம் பொருள்களையெல்லாம், சக்ரவர்த்திமுன் அர்ப்பணம் செய்யத் தவறமாட்டார்கள்.

சக்ரவர்த்தியோ மஹான். சித்த புருஷர். இவர்க்கு இவ்வண்ணம் அர்ப்பணம் செய்வதிலிருந்து ஜனங்கள் அடைந்த நன்மைகள் அநந்தம். இவ்வாறு செய்வதனுல் வியாதியாயிருந்து சுகப்பட்டவர்களுமுண்டு. பிள்ளையில்லாதவர்கள் மகப்பேறடைந்ததும் உண்டு. பரஸ்பரம் சத்துருவாக இருந்தவர்கள் எத்தனையோ பேர்கள் துவேஷம் நீங்கி மித்திரராயினர். இன்னும் எவரெவர்கள் எவ்வெவற்றை விரும்பி வேண்டிக்கொண்டனரோ அவை யாவும் அவரவர்கள் இஷ்டப்படியே நிறைவேறி வந்தன: செய்த பிரார்த்தனை வீணானதே இல்லை.

மேலும் சக்ரவர்த்தியோ வருங்காலம் அறியும் சக்தி வந்தராதலால், அதனை உணர்ந்து, நடக்கத் தக்க விதமாக ஆறுதலான வசனங்களைப்பேசி, ஒவ்வொரு துன்பத்திற்கும் தக்க பரிகாரம் சொல்வார்.

இவர்க்கு சித்தி வல்லமை உண்டு என்று சொல்லியிருக்கிறோமல்லவா? ஓயாமல் நாள் தவறாமல், ஜனங்கள் பாத்திரங்களில் ஜலங்கொண்டு அரண்மனைக்கு வந்து அஜ் ஜலத்தை அவரது வாயால் ஊதி மந்திரித்துக்கொடுக்குமாறு சக்ரவர்த்தியை மன்றாடிக் கேட்டுக்கொள்வார்கள். சக்ரவர்த்தி திரிகால ஞானி. ஒவ்வொருவர் கொண்டு வந்த ஜலத்தையும் ஞானதிருஷ்டியால் பார்ப்பார். அவரவர் கர்ம விதிப்படி எவை ஈசுவர சம்மதமாக நிவிர்த்தியாகக் கூடியவைகளோ, அவற்றை அறிந்து, அந்தந்த ஜலபாத்திரங்களைக் கையால் வாங்கி அவைகளைச் சூரிய புடத்தில் வைத்து, மந்திரித்து, வாயால் மூன்று முறை ஊதி அவர்களிடம் கொடுத்துவிடுவார். இவ்வண்ணம் மனிதப் பிரயத்தனத்தால் தீரக்கூடிய வியாதியெல்லாம் நிவர்த்தியாயின.

இவரிடம் அற்புதச் செயல்களும் வல்லமையும் அமர்ந்திருந்தன. பின் வரும் ஓர் ஆச்சரியமான திருஷ்டாந்தம் இதை விளக்கும்: ஒரு நாள் 'கல்லி' பேசுவதைத் தவிர மற்றேதும் அறியாத ஓர் துறவி இவரண்டை வந்து, "ஓ மஹாத்மா! என்னிடம் இருதயத்தில் உள்ளழுந்திக் கிடக்கும் நற்பொருள் ஏதேனும் இருக்குமாயின் அதை வெளிக்கிளப்பிப் பூரணமாக்கியருள்க" என்று மன்றாடினான். இவ்வாறு அவன் சொல்லி முடித்தும் முடியாததற்கு முன், அவன் அரண்மனை வாயிற்படியிலேயே மூர்ச்சையற்று

லமாதியில் இருப்பவன்போல் விழுந்துவிட்டான். அன்றைய தினமே அவன் நாடிய பொருள் கைகூடிற்று.

சக்ரவர்த்தி மஹா ஞாதா. யாராவது உபதேசத்திற்கு வந்தால் உடனே உபதேசித்து விடமாட்டார். "உபதேசம் செய்யும்படியாய் எனக்கென்ன தெரிந்துவிட்டது? நானே கற்கவேண்டியது எவ்வளவோ இருக்கிறதே. ஐயந்திரிபற யான் கற்றுத் தெளிந்த பின் அன்றோ பிறர்க்கு உபதேசிக்க வேண்டும். என் செய்வது"? என்று போக்குச் சொல்வார். இவ்வாறு அவர் சொல்லக் கேட்டும் பூரண நம்பிக்கையோடு, சத்தியத்தின் பொருட்டே போய்விடாமல் காத்திருக்கும் சிலரைத் தாம் ஏற்றுக் கொண்டு, உபதேசம் செய்து, ஞாயிற்றுக்கிழமை சூரியன் உச்சிக்கு வரும் வேளையில் அவர்கள் அபீஷ்டத்தை நிறைவேற்றி விடுவார். இவ்வற்புதச் செயல்களை யெல்லாங் கண்கூடாக கண்ட ஆயிரக்கணக்கான ஜனங்கள் அவரைத் தெய்வமாகவே நம்பி வணங்கிக்கொண்டாடி வந்தனர்.

நன்னெறியில் உபதேச தீக்ஷை பெற விரும்புவோன் தன் தலைப்பாகையைத் தலையினின்றும் எடுத்து உள்ளங்கையில் ஏந்திக்கொண்டு தன் சிரசைச் சக்ரவர்த்தி திருவடியில் வைப்பான். வைத்துக்கொண்டு "ஓ மஹாத்மாவே! நான் உலக டம்பம், பெருமை, சுயநயம், அகம்பாவம் இவற்றை வேரறுத்து ஒழித்துவிட்டேன். இவை யாவும் பல பாவங்கட்கேதுவாய் இருந்தன. சிறிதுகாலம் இப்புவியிலிருந்து தேர்ச்சியடைந்து முத்தி பெறவேண்டும்" என்பான். உடனே சக்ரவர்த்தி அவனுக்கு அபயஸ்தம் அளித்துத் தம் கரங்களால் கீழே இருந்தவனே வாரித் தூக்கியெடுத்து அவன்

தலைப்பாகையை அவன் தலையில் வைத்துவிட்டு "நண்ப! நீ கொண்ட கருத்து நிறைவேறும்படிக்கும், இப் பொய்யுலகைவிட்டு மெய்யறிய வேண்டியும், நான் உன் விஷயமாக ஸர்வலோக ரக்ஷகனான பகவானை ஸ்தோத்திரித்துப் பிரார்த்தனை செய்தேன்" என்று சொல்லிப் பகவானின் மகாநாமங்கள் பதிப்பிக்கப்பட்ட ஒரு ஷஸ்ட் (அதாவது தங்க 'மோஹரா'வை) அவனிடத்தில் கொடுத்து "இந்தப் பரிசுத்தமான ஷஸ்டையும் நேர் மார்க்கத்தையும் தவறவிடாதே" என்பர்.

கால வர்த்தமானங்கட் கேற்ப, மற்றவர்களுக்கு, அவரவர்களுக்கு இயைந்தபடி உபதேசம் செய்வார். பண்டிதர்கள் முன்பாக அற்புதமான அகண்ட சாஸ்திரங்களை யெல்லாம் எடுத்து வெகு விநயமாய் உபந்நியாசிப்பர். (இவர் மானிடர்க்குச் செய்து வந்த உபதேச விதங்களையும் அவர் செய்த விநோத அற்புத லீலைகளையும் இங்கு விரிவாய் எடுத்தெழுதச் சரியான இடமில்லை. (நான் உயிரோடிருந்து சாவகாசமும் இருக்குமாயின், இவ்வினிய மனோகரமான விஷயத்தைப் பற்றி ஒரு பெரிய புத்தகம் பிரத்தியேகமாகவே எழுதத் தீர்மானம்.)

சீஷர்கள் அனுஷ்டிக்க வேண்டிய ஒழுங்கு விதிகள்.

ஒரு சிஷன் மற்றொரு சிஷனைச் சந்திக்குங் காலத்தில் ஒருவன் "அல்லா அக்பர்" (பகவானே மஹத்தானவர்) என்று சொல்லவேண்டும். மற்றொருவன் "ஜிலிஜில்லாலெஹூ" (பகவான் மகிமையே மகிமை) என்று பதில் அளிக்க வேண்டும். பகவானையும் அவரது திவ்ய கல்யாண குணங்களையும் ஸதா வாயாற் சொல்லவும் அவரை ஸதா

இருதயத்தால் தியானிக்கவும் அப்பியஸிக்க வேண்டி இவ்விதி ஏற்படுத்தப்பட்டது.

ஒவ்வொரு சிஷனும் தன் பிறந்த நாளை உத்தேசித்து விருந்தளிக்க வேண்டும். அவரவர்கள் சக்திக் கேற்பப் பிச்சையிடலும் வேண்டும்.

சீடர்கள் மாமிச போஜனத்தைக் கண்டிப்பாய்த் தள்ள வேண்டும். மாமிசத்தைப் பூராவாக நிறுத்த ஒருவனுக்கு அவன் தேக ஸ்திதி இடங்கொடாதிருக்குமாயின், திங்கள், வெள்ளி, ஞாயிறிலும், பௌர்ணமி, அமாவாசை, சந்திர கிரஹணம், சூரியகிரஹணம் முதலிய தினங்களிலும், தான் ஜனித்த மாதம் முழுவதிலும் வேறு சில மாதங்களிலுமாவது மாமிசத்தைக் கட்டாயமாய் ஒழித்து விட்டு மற்ற தினங்களில் சிறிது உட்கொள்ளலாம். (இவ்வாறு செய்வதால் எவருமே வருஷத்திற்கு 45 தினங்களுக் கதிகம் மாமிச போஜனம் உண்ண முடியாது.)

தானாகவே வதைத்த எந்தப் பிராணியின் இறைச்சியையும் சாப்பிடக்கூடாது. ஆடறுக்கும் கசாப்புக் கடைக்காரர்களுடனும், வேட்டை புரியும் வேடர்களுடனும் ஒருக்காலும் உண்ணக் கூடாது.

கர்ப்ப ஸ்திரீகளுடனும் மலடிகளுடனும் பக்குவமடையாத கன்னிப் பருவமுடையவர்களுடனும் ஒருக்காலும் எந்த முகாந்தரத்தை யிட்டும் சம்பந்தம் வைத்துக்கொள்ளல் கண்டிப்பாய்க் கூடாது. ஆகவும் ஆகாது. இச்சக்ரவர்த்தி ஏற்படுத்திய சர்வ ஜனோபகாரமான சட்டதிட்டங்கள் இன்னும் பலவுள.

பிஸ்மில்லா இற் றஹ்மான் இற் றஹீம்:

*உபாத்திம-மாணவர்களுக்கோர்

உபதேசம்.

எனக்குக்கிடைத்த இக் கௌரவத்தை, நம் ஈன்றோர், உடன் பிறந்தோர் இவர்கள் நம்முடன் பேசி இன்பமூட்டிப் பாராட்டி வந்ததும், முற்கால தற்கால பாஷைகள் எவற்றிற்குமே கற்பனாலங்காரம் முதலியவை நிரம்பியதால், ஒரு சிறிதும் முடிசாய்த்து நில்லாததும், மேற்றிசைக் கலைஞர்களின் மனத்தையும் கொள்ளை கொண்டு அவர்களையும் அடிமைப் படுத்தும் ஆற்றல் வாய்ந்ததுமான, நமது தாய் பாஷைக்கு நீங்கள் செய்த நன்றிமிகு பெருமையாகவே நான் கொள்வேன்.

சிற்றணில்களும் சேதுபந்தனம் செய்ததொப்ப, தேச பாஷாபி விருத்திக்காகச் செய்யவேண்டிய கடமைகளில் நான் செலுத்திய அற்பத்தையும் மதித்து, என்னைப் பெருமைப் படுத்தக் கருதியதாகவும் கொள்வேன். கலாசாலைகளிற் பரிசளிக்கும்போது புஸ்தகத்தின் மேலட்டையின் உட்புறத்தில் ஒட்டப்பட்டிருக்கும் காகிதத் துண்டில் "இன்னாருக்கு, இப்பரிசு, யோக்கியதைக் கறிகுறியாகவும், மேலும் அபிவிருத்தி ஆவதற்கு ஊக்கம் அளிக்கும் பொருட்டும்."

---

* இது திண்டுக்கல் கவர்ன்மெண்ட் டிரெயினிங் ஸ்கூல் அதிகாரிகளின் வேண்டுகோட் கிணங்கி அக் கலாசாலை வருஷோத்ஸவ தினத்தன்று செய்த ஓர் பிரசங்கத்தின் சாராம்சமாகும்.

என்று காணப்படும் வாக்கியத்தை ஒப்ப, எனக்குச் செய்த உங்கள் வெகுமானம், நான் செய்த அற்ப முயற்சியையும் நீங்கள் அற மதித்தற்கு அறிகுறியாக மாத்திரமேயன்றி மேன்மேலும் நான் இனியும் உழைப்பதற்கு எனக்கு ஊக்கம் ஊட்டவும் என்றும் நான் கொள்வேன்.

நம் பாஷையை அபிவிர்த்தி செய்வதில் சிறிது நேரமேனும் நீவிர் சிரமப்படவேண்டு மென்பதே உங்களை என் முழு மன வலிமையோடும் மன்றாடிக் கேட்டுக்கொள்ளும் முதல் விஷயமாகும். வீணன் எவனேனும் "நம் பாஷை முற்றிலும் பூரணமானது. அதற்கோர் குறைவும் இல்லை" என்று சொன்னால், "அவ்வாகடியக்காரனின் மொழி ஒரு சார் உண்மையே ஆயினும் பிழைபட்டதே" யென்பேன்.

தமிழ் எவ்வளவோ உயிருள்ளது தான். தமிழ்க் கிரந்தங்களின் கருத்துக்களையும் சொற்போக்கையும் பிற பாஷைகளுக் கேற்ப இன்றும் பொருத்தலாம். ஆயினும் அதன் வளர்ச்சி நின்றுவிட்டது விசனிக்கத் தக்கதன்றோ? அவ் வளர்ச்சி குன்றியது சுமார் ஒரு நூற்றாண்டு என மதிக்கலாம். வளர்ச்சி குன்றுவது வயோதிக காலத்தின் அறிகுறி. "வயோதிக முதிர்வே சாவு"என்று அறிஞர் கூறுவர். ஆதலின் தமிழைப் பின்னும் அலட்சியம் செய்து மேலும் தளர்ச்சியடையாத வழியை நீங்கள் தேடுவதோடு கூட, மீண்டும் உங்கள் முயற்சியினால் அதற்கு இளமை உண்டாக்குவதும் உங்கள் உத்தம கடமைகளில் ஒன்றாகும். இவ்வித முயற்சியில் ஓர்வகைப் படுகுழியில் விழாதீர். பொதுவாக, சென்ற சில நூற்றாண்டுகளாகத் தமிழ் நூல் இயற்றப் புகுவோரின் ஓர் பெருங்குறை யாதெனில், சிறி

தறிவு பெற்றபின் மேன்மேலும் அதை விருத்தி செய்யாது, நம் பண்டைப் புராண இதிகாசங்களை மூலமாகக்கொண்டு, கவிகட்ட ஆரம்பிப்பதே. கவிபாட இவர்கள் சக்தியற்றவர்கள் என்பது பற்றி நான் இதுசொல்ல வரவில்லை. இவர்கள் அதி சாதுரியமாகச் செல்ல விரும்பும் விஷயங்கள், தமிழ்க் காப்பிய நூல்களிலும் ஏனைய புத்தகங்களிலும் பரக்க இருக்கின்றன. ஒன்றைப் போலவே பற்பல செய்வது வீணான காரியமே. ஒரே விஷயத்தை அகவலிலும், வெண்பாவிலும், விருத்த வர்க்கத்திலும் பாடுவது, ஆக்கியோன் பெருமையைச் சிறிது காட்டுமேயன்றி, நூற்பெருமையையும் விஷயப் பெருமையையும் ஒருபோதும் காட்டாது. ஏனெனில், கற்பனுலங்காரமும் காம்பீரிய நடையும் பண்டைக் காவியங்களில் பூரணமாக அமைந்துள. யாரே அழகுக்கு அழகு செய்வார்? ஆதலின் அவற்றைப் பின்னும் பூரணமாக்க முயல்வது,

புடமிடப் பட்ட பொன் மேல் பொன் முலாம் பூசல், அல்லி
மடலில் வெண் நிறத்தைத் தீட்டல், மருக்கமழ் கருநெய்தல் மேற்
படநறு மணத்தை ஊட்டல், பனி உறை வழுக்க லாக்கல்,
அடைவுற வான வில்லுக் கதிற்கிலா வர்ணம் சேர்த்தல்.

போலாகும். காலதேச வர்த்தமானத்தை உணர்ந்த அறிஞரும் அவர்கள் அறியாமைக்கு இரங்கி வெறுப்பர்.

மகா பரிசுத்தமானதும், தொன்மையும் கடவுட் டன்மையும் வாய்ந்ததும், எவரையும் வசீகரம் செய்யும் வன்மை படைத்ததுமான, நம் தாய்ப் பாஷையை அபிவிருத்தி செய்து யாவர்க்கும் பயனுறவும், அதில் ஆர்வமூட்டவும் உண்மையில் விரும்புவீர்களானல், நீங்கள் புதிய வழியில் உழைக்க

வேண்டும். அவ்வழி இன்னதென இனிப்பிறிதோர் இடத்தில் அறிவிப்பேன்.

தாய்ப் பாஷையின் வலிமை தான் என்னே! அந்நிய அரசாங்கத்தார் அதனை முற்றிலும் ஒழிக்க எவ்வளவோ பெரு முயற்சி செய்த காலத்திலும், அது தன் வன்மையையே காட்டித் தலை தூக்கி நின்று முன்னினும் பன்மடங்கு சோபிக்கும் என்பதற்குச் சமீபத்தில் நாம் அறிய நடந்த ஓர் அதி ஆச்சரியகரமான விசேஷ சம்பவத்தையே சான்றாகக் குறிப்பேன். அது வருமாறு:—

பிரான்ஸ் தேசத்தின் ஒரு பாகமாகிய லோரைன் மாகாணத்தை ஜர்மானியர் வசப்படுத்தியவுடன், அம்மாகாணத்தார்க்குள், ஒரு காலத்தில் அந்நாடு, பிரசித்தி பெற்ற பிரான்ஸுக்குச் சொந்தமாக இருந்ததென்னும் ஞாபகம் அடியோடு ஒழியுமாறு, லோரைன் பாஷையை வேர் களைந்து வெந்நீர் ஊற்றவேண்டுமென்றும், அவ்வாறு செய்தாலன்றி, பூர்விகப் பிராஞ்சியப் பற்றை ஒழித்து ஜர்மானிய தேச பக்தியை அவர்களுள் ஜனிக்கச் செய்யக் கூடாதென்றும், ராஜதந்திர ஞானத்தால் கண்டு, சகல வைபவங்களும் லோரைன் வாசிகளுக்குத் தங்களாலேயே கிட்டினவென்று பின்னோர் கருத ஏதுவாகுமாறு, அத்தேசத்துப் பூர்விக நடையுடை பாவனைகளை உணர்த்தும் லோரைன் பாஷா புத்தகங்களை அகற்றியதுமன்றி, அப்பாஷையைச் சிறுவர்களுக்கும் கலாசாலைகளிற் கற்பிக்கக் கூடாதென்று கண்டிப்பான அரசாங்க உத்தரவிருந்து வந்ததைப் பலர் அறியாதிருக்கலாம். பள்ளிக்கூடங்களில், தவறி, லோரைன் பாஷையிற் பேசும்

உபாத்திமார்க்குக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது மன்றி, அவர்கள் அமர்ந்த கலாசாலைகள் பெறும் சர்க்கார் நன்கொடையும் நிறுத்தப்பட்டது. முப்பது ஆண்டுகளாக அவர்கள் பட்ட அவஸ்தை மூன்று வாரங்களுக்கு முன்பு தான் நீங்கிற்று. எவ்வித மெனில்:—ஜெர்மனி சக்ரவர்த் தினி லோரைனில் உள்ள ஓர் பாலிகா பாடசாலைக்கு விஜயம் செய்தபோது, ஆங்கு படித்த சிறுமியரில் ஒருத்தியின் வண க்கம், புத்திசாலித்தனம், இனிய குரல், மிருது பாஷணம் சுத்தஉடை ஆதிய இவற்றில் ஈடுபட்டவராய், அவளைநோக்கி, "குட்டி! நீ விரும்புவதைக் கேள். யான் உனக்கு அளிப் பேன்" என மகிழ்ந்து கூற, அச்சிறுமி முழந்தாளிட்டு நாக் குழற உடல் இளக, "நான் கேட்பதை அளித்தல் தங்க ளால் ஆகுமோ?" என விநயமாய்க் கேட்டாள். இது கேட்ட அரசி புன்னகை செய்து, "சக்ரவர்த்தினியாகிய என்னால் ஆகாததும் உண்டோ? நீ விரும்பிய எதையும் கேள். கொடுத்தே தீர்வேன். அரசியாகிய நான் செய்யும் வாக்குறுதியை நம்பு." என்று கம்பீரமாகச் சொன்னார். பரிவாரங்களும் பள்ளியின் உபாத்திமார்களும் சிறுமியின் விருப்பம் எத்தகைத்தோ! என்று, ஆவலுடன் அவளுடைய உதடு அசைவதை எதிர்பார்த்தனர். சிறுமியோ மெல்லிய குரலுடன் "தாயே! என் தாய் என்னுடன் பேசும் பாஷை யில் எங்களுக்குக் கல்வி பயிற்றத் திருவுளம் உவந்து ஆக் ஞாபிக்க வேண்டுகிறேன்" என்று பிரார்த்திக்க, யாவரும் பிரமித்தனர். மகாராணியும் இவ்வண்ணம் செய்வது ராஜாங்க விஷயமானதால் தம் சக்திக்கு மிஞ்சியது என்று பெரிதும் கலங்கினர். ஆயினும் அது மகாராணி கொடுத்த

வாக்காதலால், அது பிரமா வண்ணம் நிறைவேற்றியே தீர வேண்டி வந்தது. சிறுமி தம் முன் முழந்தாளிட்டது போல் தாமும், தம் கணவனே ஆயினும், சக்ரவர்த்தியார் முன் முழந்தாளிட்டு நின்று, அப்பெண்ணின் கோரிக்கையை ஈடேற்ற இறைஞ்சினர். அச்சம்பவம் அரசர் மனத்தையும் இளக்கியதால், "அவ்வண்ணமே ஆகுக" என்று அவரும் ஆக்ஞாபித்து விட்டார்.

ஆ! ஆ!! நமது ராஜாங்கத்தினரோ பாஷா துவேஷ மாத்திரமா? மதத்துவேஷங்கூட இல்லாதிருக்கிறார்கள். இவ்வித சாதகம் இருந்தும், கூட நம் பாஷையை நாம் விர்த்தி செய்யாதிருந்தால் அதனினும் அறியாமைக்கு அறிகுறி வேறு என்ன இருக்கிறது! நம் தாய்மொழிக்கு மாற்றாந்தாய் போல் இதுவரை நடந்துவந்த ஸிண்டிக், ஸினேட்டிலுள்ள கனவான்களும் நம் பாஷைக்கு உண்மைத் தாயாகி இரண்டு மூன்று மாதங்களாக தேசபாஷையை விருத்திசெய்ய வேண்டும் என்றும், உயர்ந்த சம்பளத்தில் ஆசான்களை நியமிக்க வேண்டுமென்றும் செய்யும் ஆலோசனைகளாலும், பேசும் பேச்சுக்களினாலும் வெளி ஆவதால், இன்று தொட்டாவது விடாமுயற்சியுடன் அதனை நாம் விருத்திசெய்யாவிடில் பழிச்சொல் நமதேயாகும். நிற்க.

அறியாமையினால் தமிழை இகழ்ந்து திரிவோரும் சிறிது காலத்திற்குள் அதன் இயற்கை வலிமை, வனப்பில் ஈடுபட்டு அதற்குத் தொண்டு செய்வார்களென்று நான் துணிந்து கூறுவேன். நான் தமிழனும் தமிழ்ப்போதகனும் ஆதலால் இவ்வாறு தமிழிற்கு இல்லாப் பெருமையை ஏற்றி உரைக்கிறேன் என்று எவரும் எண்ணற்க. அப்படி எவரேனும்

கருதுவீரேல் உம்மினும் மோசம் போனவர் எவருமிலர்· தமிழ், தாய்ப் பாஷையாய் இருப்பதோடுகூட, இச்சபை தமிழர் நிரம்பியதாயும், நம் பிற்கால அபிவிருத்திக்கு அப் பாஷையே சாதனமென்று நான் அறிவதாலுமே அவ்விதம் கூறினேன். நான் துருக்கனுயிருந்து என் வாழ்நாள் கழிக்கும் இடமும் துருக்கிஸ்தானமாகவே இருப்பின் துருக்கி பாஷையையே மேம்படுத்திக் கூறியிருப்பேன். நிற்க.

சரித்திர அறிவுடையார், தேசபாஷையானது, அவ்வத் தேயத்தார் அடைந்த சிறப்பைப் பற்றியே பெரும்பாலும் விருத்தி அடைந்து வருகிறதென்றும், அரிய முயற்சி யாவும் சித்தி பெறுவது அத் தேச பாஷையில் எழுதப்பட்ட சிறந்த லக்ஷிய கிரந்தங்களாலேயே என்றும் கூறுவர். ஆதலின், தேசத்தின் பெருமையும், பாஷாபிவிருத்தியும், பாலும் தயிரும் போலவும், பீஜாங்குர நியாயமாகவும், ஒன்றுக் கொன்று ஆதாரமாய் இருக்கின்றன. உதாரணமாக:—

இலியட் யுத்தம் ஹோமர் மகாகவிக்கு உற்சாகத்தையும், ஹோமர் இயற்றிய இலியட், பின் வந்த கிரேக்கருக்கு மன எழுச்சியையும் உண்டாக்கியது. ட்ரேக், (Drake) பார்பிஷர் (Forbisher) ராலி (Raleigh,) Armada வில் ஜயமுற்றோர் முதலியோரின் துணிகரச் செய்கையே ஷேக்ஸ்பியர், பென்ஜான்ஸன் ஸ்பென்ஸர் ஆகிய மகாகவிகள் வழி வந்த நூற்றுக்கணக்கான பாவலரும் மற்றோரும் சிறக்க ஆதாரமா யிருந்தது. அவர்கள் இயற்றிய அரிய கிரந்தங்களே நாளை வரை ஆங்கிலேயர் அடைந்துள்ள சீருக்கும் சிறப்புக்கும் மூலமாக இருக்கின்றன. நிற்க.

உங்களில் அநேகர் ஏன் பங்காள, பம்பாய் மாகாணங்கள், ஏனையவற்றினும் எதிலும் தலைமை வகித்து முற்படுகின்றன என்று ஆச்சரியப் படலாம். சுமார் பத்து வருடங்களுக்கு முன், பாண்டவநாத ஸிம்ஹம் என்னும் வங்காளியோடு நான் செய்த சம்பாஷணையினாலேயே இதன் உண்மையை அறியலானேன். சென்னையில் எத்தனை பி. ஏ. பட்டதாரிகளுண்டோ அதனினும் அதிகமான எம். ஏ. பட்டதாரிகள் பங்காளத்தில் உண்டாம். இதற்குக் காரணம், அவர், பங்க பாஷாபிவிருத்தியே என்றார். அறிவு நூல்கள் யாவும் மொழிபெயர்க்கப்பட்டும், முதல் நூல்களும், பிரசுரிக்கப் பட்டும் விட்டதால் ஆங்கில அறிவு சிறிதேனுமின்றியே, பூகோள ககோள கணித ரசாயன பூத பௌதிக ஸ்தாவரமாதிய சாஸ்திரங்களைக் கற்பதற்கு அந்நியபாஷை பயில 10, 12 வருஷம் கழிக்காமல், அற்பக் குடியானவனும் எளிதில் கற்றுணர அங்கு சாத்தியமாக இருக்கிறதாம். நம் நாட்டு நிலைமையைச் சிறிது கவனித்துப் பாருங்கள்: புத்தி கூர்மையும் பயிற்சியுமிக் குடையோருமான பிள்ளைகளிற் பலர் வருடந்தோறும் சர்வ கலாசாலைப் பரீக்ஷைகளில் தோற்பதையும் அவரினும் சாமர்த்தியத்திற் றாழ்ந்த அநேகர் தேறி வருவதையும் பிரத்யக்ஷமாக நான் கண்டிருக்கிறேன். இதற்குக் காரணம் சாமானியமே. நான் கூறியபின் ஆச்சரியப்படுவீர்கள். அந்நிய பாஷையாகிய ஆங்கிலத்தில் தம் உட்கருத்தை வெளியிடக் கூடாமையே என்க: "உஷ்ணமானி" என்ற "தர்மாமிடர் செய்யும் விதம் வரைக" என்ற கேள்விக்கு விடையாக "Get a glass blower and blow him into a pipe" (அதாவது, கண்ணாடியை ஊதுவோனைப் பிடித்து அவனை ஒரு குழலாக்குக) என்ற முதல் வாக்கியத்தை எழுதுவோர்.

பலரை நான் கண்டிருக்கிறேன். அவர்கள் சொல்ல விரும்பியது "Go to a glass-blower and get him to blow a pipe for you") (கண்ணாடி ஊதுவோனைக் கொண்டு உனக்கு ஓர் குழல் செய்து தரச்சொல்க,) என்பதே. இவ்விரண்டு வாக்கியத்திற்கும் எவ்வளவு பேதம் இருக்கிறதென்று பாருங்கள்! ஆங்கில பாஷையில் தன் கருத்தைப் பாஷா இலக்கணத்திற் கேற்ப இவன் எழுதாததால் தோற்கவும் இவனினும் தாழ்ந்தவனாயினும் ஆங்கிலம் சரியாய் வரையக் கற்றதால் ஒருவன் தேறவும் பிறபாஷை யன்றோ காரணமாக இருந்திருக்கிறது.

இன்னமும், மகாபாரதத்திற் காணப்படும் ஸ்திரீ புருஷர்களின் பெயரும் அக்காவியத்தடங்கிய விஷயங்களும் முற்கால தற்கால மேற்றிசைச் சரிதங்களில் இல்லை யென்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள். இவ்வாறு இருந்தும்கூட தன் தாயிடமிருந்து ஆவலோடு கவனமாகக் கற்றுணர்ந்த 10 வயதுள்ள பையனும் பாரதத்தில் ஆலசியமின்றி நேர்விடை பகர்வதையும், 20, 25 வயதாகியும் மெற்றிகுலேஷன் பரீக்ஷையில் பையன்கள் சரித்திரத்தில் தோல்வி அடைவதையும் பற்றி விசாரிக்கக் காரணமே இல்லை.

என்ன அக்கிரமம்! ஆங்கிலம் அறியாக்குறை ஒன்று பற்றியே, மேன்மேலும் அறிவை வளர்க்காத பழம் பாடங்களையே படிக்க விதிக்கப்பெற்றோரின் நிலை எத்துணை பரிதாபத்திற் கிடமானது! பன்முறை தோல்வியடைந்து மனச் சலிப்பால் பள்ளிப்படிப்பை நிறுத்துவோர் பலரை நான் கண்டிருக்கிறேன். பங்காளம் பம்பாயிலோ முக்கிய பாடமாகிய இங்கிலீஷ் இலக்கிய இலக்கணங்களைத் தவிர பிற

பாடங்களைத் தங்கள் சுயபாஷையிலேயே பரீக்ஷையில் விடையளிக்கலாமாம். நமது துர்ப்பாக்கியமோ, எட்டு வயதில் ஆங்கிலேயச் சிறுவன் உணரும் பூத பௌதிக ரசாயன சாஸ்திரங்களைப் பத்து வருஷம் ஆங்கிலம் கற்கப் பாடுபட்டு 16 வயதுக்கும் மேல் அரைகுறையாய் உணர வேண்டியதாயிருக்கிறது. அந்நூல்கள் தமிழில் வரச் சிறிதேனும் உதவுவீராயின் ஏழை மாணவரின் ஆயுட்காலத்தில் 10 வருஷ சிரமத்தைக் குறைத்த புண்ணியம் உங்கட்குண்டு. அந்நூல்கள் நம் பாஷையிற் பரவவும், பெண்டிரும் அதை உணரவும் செய்வீராயின் அப்பொழுது தான் நீங்கள் மேடையேறிப் பேசுவதும் கேட்பதும் சித்திபெறும்; அப்பொழுது தான் உங்களுக்கும் பெருமை. அன்றுதான் நம் சந்ததியும் முன்னுக்கு வரும். நாடும் மேம்படும்.

பாமரப் படிப்பினாலேயே நாடு க்ஷேமம் அடையுமென்பதையும், அது தாய்ப் பாஷாபிவிருத்தியினாலேயே எளிதில் ஆகக்கூடிய தென்பதையும் நீங்கள் நன்கு கவனியுங்கள். ஏனையோரிலும் நீங்கள் செல்வம், செல்வாக்கு, தேகவலிமை முதலியவற்றால் ஏறக்குறையக் குறைந்தோராயினும், நீங்கள் ஒன்றில் மாத்திரம் எவர்க்கும் தாழ்ந்தவர்கள் அல்லர் என்பதை நான் அறிவேன்; அதாவது தேசாபிமானத்தில். இவ் வபிமானம் யாவர்க்கும் இயற்கையில் உதிப்பதே. இதைப்பற்றி கோல்ட் ஸ்மித் என்ற ஆங்கில கவி,

"குளிரால்" நடுங்கிக் கொண்டே இருக்கும்
சீதள பூமியிற் சேர்ந்துறைவோனும்
இவ்வுல கத்துள இடங்களி லெல்லாம்
தன் உறை விடமே தான்சுக பூமியென்று

இம்மியும் கூசா தெடுத்துரைக் கின்றான்;
கொந்தளிப் புடனே கூடிய தாகிய
தன் கடல் கொண்டுள மன்பெரு நிதியையும்
கள்ளாட் டயரவும், கவல்களை நீக்கவும்
தனக்குள நீண்ட தனிஇராப் பேற்றையும்
குறித்துப் பெருமை கொண்டாடுகிறான்;
புனையுடை நீக்கிப் பூமத் தியரே
கைக்கரு காண்மையில் கடுவெயில் பொறுது
நெடுமூச் சுடனுறை நீகிரோ வனும் தன்
எழில் பொன் மணலையும் ஈச்சங் கள்ளையும்
பற்றிப் பெருமை பாராட் டுகிறான்;
காந்தும் வெயிலிற் காய்ந்தும், வெய்ய
திரையொடு பொருது திளைத்தும், தனக்கு
நல்கிய எல்லா நலநிமித் தமுந்தன்
வழிபடு கடவுளை வாழ்த்துகின் றனனால்,
எங்கெங் கேகாம் எய்திக் காணினும்
தேசாபி மானம் திகழ்பவர் புகழுரை
இத்தகைத் தாகவே இருக்கும்; இன்னவர்க்கு
ஒருமுதல் நாடும் உத்தம பூமியும்
தாயக மாகும் தமதுறை விடமே.

என்று கூறி யிருப்பதையும், இஃதில்லாளைப்பற்றி ஸர் வால்டர் ஸ்காட் என்ற ஆங்கில கவி,

"இஃதென் சொந்த ஊர்: இஃதென் பிறப்பிடம்"
எனத்தன் னுள்ளே எப்போ தாயினும்
உன்னுதற் கொண்ணுத் தன் உணர் வில்லா
ஒருவ னேனும் உயிருடன் உளனோ?

அந்நிய நாட்டினில் அலைந்துபின் தன்னூர்
நோக்கிக் காலடி போக்கிய காலையில்
உள்ளம் குளிரா ஒருவனும் உளனோ?
இத்தகை ஒருவன் இருப்பனே ஆயின்,
சென்று 'அவன் யாவன்?' என்று நன்குஅறிதி.
உயரிய பட்டம் உடையோ னுயினும்,
பெயரால் அவன்மிகப் பெரியவ னுயினும்,
ஆசையே விரும்பும் அளவிலா நிதியம்
படைத்தவ னுயினும், பரவசத் துடன்எப்
பாண னும் அவன்புகழ் பாடுதல் ஒழிவன்.
தன்னையே யாவுமா உன்னும்இப் புன்மையோன்
இடம்பொருள் ஏவல் இவைஇருந் தும்,தான்
இருக்கையி லேநல் இசைஎலாம் இழப்பன்
இவ்வாறு இருமுறை இறந்துஇப் பதடி
புலம்புவா ரற்றும் பூஜ்யதை அற்றும்
பாடல் பெறுதும் பண்டுதான் தோன்றிய
இழியபுன் புழுதிக்கு இழிந்து செல்குவனே"

என்று கூறியிருப்பதையும் நீங்கள் நன்கறிவீர்களே. நிற்க.

உங்கள் தேச விஸ்தீரணத்தைப் பற்றித் திகிலடையாதீர்கள். தற்கால இந்தியா மிகவும் விசாலித்ததே. ஒருக்கால் திபேத்தையும் அதற்கப்பால் உள்ள நாடுகளையும் இஃதுள்ளடக்குங் காலம் வந்தாலும் வரும். ஆரம்பத்தில் உங்கள் அபிமானம் கிராமத்தில் தொடங்கட்டும். நாளடைவில் இந்தியா உலகமுழுதும் வியாபித்தாலும் உங்கள் அபிமானம் லோகாபிமானமாகவே பெருகு மென்பது திண்ணம்.

இனி நீங்கள் மாணவர்க்குக் கற்பிக்க வேண்டிய விதம் நடந்து கொள்ள வேண்டிய விதம் முதலியன, பெருந்தகை சான்ற உங்கள் உபாத்திமாராலேயே நன்கு போதிக்கப்பட்டிருப்பீர்கள். போதாக்குறைக்குக் கல்வி இலாகா அதிகாரிகளால் அப்போதைக் கப்போது நிர்ணயிக்கப்படும் விதிகள் மூலமாயும் அறிவீர்கள். ஆயினும் மூன்று விஷயங்கள் மாத்திரம் நான் சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

முதலாவது:—உங்கள் நடத்தையால் பிள்ளைகள் உங்களைக் கண்டவுடன் பேய்போல் அஞ்சவாவது, புல்லுருவாக உங்களை அலட்சியம் செய்யவாவது செய்துகொள்ளாதீர்கள். "பிரம்பினால் பயமுறுத்துவதிலும் பிரியத்தால் வசீகரிப்பது பலவகையினும் பயனுடைத்து" என்பதை மனத்திருத்துங்கள். பாடந் தெரிந்து கொள்வதற்கே யன்றித் தங்கட்கியற்கையில் ஏற்படக் கூடிய பலவித கஷ்டங்களினின்றும் நிவர்த்தி தேட உங்களைப் பிள்ளைகள் அணுகும்படி உங்கள் பிரியத்தாலும் முன்மாதிரியாலும் செய்து கொள்ளுங்கள். சுருங்கச்சொல்லின், பிள்ளைகளை உங்கள் தம்பிமார்கள் போலவும் அருமை மக்கள் போலவும் கருதி நடத்துங்கள்.

இரண்டாவது:—தம் தகுதியையும் தம் தொழிலின் பொறுப்பையும் உணராது வயிற்றுப்பாட்டிற்காக உபாத்திமத் தொழில் புரிபவர் சிலர் உளர். இன்னோர் பையன்கள் படிப்பைப் பற்றிக் கருத்தில்லாது மாதமுடிவையே எதிர்பார்த்துச் சம்பளம் பெறுவர். இவர்கள் கேவலம் அற்பக் கூலி வேலைக்காரர் என்றே எண்ணுங்கள்.

இன்னும் சில உபாத்தியாயர்க்குத் தங்களையும், தங்கள் மாணவர்களையும் பற்றியே தான் ஏதேனும் தெரியும்; அன்

ஞோர் அக்கரை எல்லாம் கலாசாலைக் கட்டிடத்தோடும் பள்ளி நேரத்தோடும் முடிவடையும். ஒருக்கால் மனச்சாட்சிக்கு விரோதமின்றிப் பள்ளி நேரத்தைக் கற்பிப்பதிலேயே அவர்கள் செலவழித்தலும் கூடும். ஆயினும் பயன்மட்டும் திருப்தியாக இராது.

உத்தம உபாத்தியாயர்கள் தம் தொழிலில் தம்மையும் பிள்ளைகளையும் தவிர இதில் சம்பந்தப்பட்டவர்கள் பிள்ளைகளின் பெற்றோர் என்பதை உணர்ந்தவர்கள். மேற் சொல்லிய வற்றால் மூவகை உபாத்திமார் இருப்பதை அறிவீர்கள். நிற்க,

நம் சிறுர்களிடம் பெற்றோர்க் கடங்காக் குணம் தற் காலத்தில் அதிகரிக்கிற தென்று புலம்புவோர் சிலரை நான் அறிவேன். நான் அறிந்தமட்டில் பிள்ளைகள்குணம் தொன்று தொட்டு இன்று வரை வேறுபடவே இல்லை. தோஷம் முதலில் பெற்றோரிடத்தும் இரண்டாவது உபாத்திமாரிடத்திலும் இருக்கிற தென்பதே என் முழு நம்பிக்கை.

சாதாரண உபாத்திமார்களுக்குப் பிள்ளைகளுக்குப் பிரம்படி கொடுத்தல் முதலிய சிக்ஷை விதிக்க அதிகாரமில்லை; ஆதலின் தம்பால் பிள்ளைகள் அஞ்சார். சிரத்தையும் நல்லொழுக்கமும் குறைந்த பிள்ளைகளைத் திருத்துவது பெற்றோரின் உதவி கொண்டால் மட்டும் ஏகதேசம் எளிதாகும். ஆதலின் சமயம் வாய்த்த போதெல்லாம் பிள்ளையின் பெற்றோர்களோடு கூடி அவனது குறையைக் கூறப் பிரயத்தினப் படுங்கள்.

ஆனால் எனது அருமை நண்பர் ஒருவர் கூறியபடி இதைப் பூரணமாக அநுஷ்டித்தல் சிறிது கஷ்டமே. அவர் என்னிடம் ஒருநாள் சொன்னதாவது:—"ஐயா, சொல்வதற்கும் செய்வதற்கும் எவ்வளவோ வித்தியாசம்! நான் முதலில் இவ் வுத்தியோகத்தில் அமர்ந்த பொழுது உங்கள் போதனையைக் கேட்டு அதன்படி நடக்க எவ்வளவோ பாடுபட்டேன். முடிவில் ஏமாந்தேன். முதல் முதல் என் கவலையெல்லாம் ஏழைப் பிள்ளைகள்பாற் சென்றது; அவர்கள் பெற்றோரைக் கண்டு பையன்களின் குறையை இரண்டு தடவைகளில் எடுத்துச் சொன்ன பிறகு நான் மூன்றாந் தடவை அவர்களைப் பார்க்கச்சென்ற போது அவர்கள் "ஐயோ! எங்கள் பிள்ளைகள் எருமைக் கடாவுக்கும் கேடாய் விட்டார்களே! இம் மந்திகளை என்ன செய்வது! படிப்பை நிறுத்தினால் பணச்செலவாவது குறையும்" என்று என்னைக் கட்டிக்கொண் டழுதார்கள். பையன்களை நிறுத்தி விட்டால் மாணவர் தொகை எங்கு குறையுமோ என்ற அச்சத்தால் நான் அவர்களைப் பின்னும் பார்ப்பதை நிறுத்தி விட்டேன். அப் பெற்றோரின் நிலை கண்டு பெரிதும் இரங்கினேன்.

"இனிச் செல்வர்களைப்பற்றி அதிகம் சொல்ல வேண்டியதே யில்லை. தமக்குப் பிள்ளையுண்டு என்பதே மாதா மாதம் 7-ம் தேதிக்கு மேல் அவர்களுக்குச் சம்பளம் கொடுபட வேண்டிய 15உக்குள் ஒருநாள் தான் ஞாபகத்திற்கு வரும். ஏனெனில், அவர்களைச் சம்பளத்திற்காக அரித்தெடுக்க வரும்பொழுதே அவர்களைக் காணநேரிடும். வக்கீல்களின் பிள்ளைகளுடைய நிலைமையோ எவரும் பொறாமை எய்தத் தக்கதன்று. ஏனெனில், இச்சம்பளப் பொருட்

டேனும் தம் பெற்றோரைக் காணவேண்டிய அவசியம் அவர்களுக்கில்லை. சிரமமேயின்றி குமாஸ்தாக்களிடம் குறித்த காலத்தில் பெற்றுச் செல்லுகின்றனர். ஆயினும் பிள்ளைகள், பெற்றோர், உபாத்தியாயர் ஆகிய இம் மூவருக்கும் துக்ககரமான தினம் பள்ளிக்கூடம் திறந்த முதல் வாரத்தில் பரீக்ஷை முடிவு வெளியிடுந் தினமேயாகும். அன்று எத்தனை பெற்றோர்கள் பிள்ளைகளின் உபத்திரவம்பொறுக்கமுடியாமல் "Trial promotion"ல் அவர்களை மேல்வகுப்புக்கு எடுக்குமாறு மன்றாடுகின்றனர். என்னை என் வீட்டிலாவது பள்ளியிலாவது பார்ப்பது அகௌரவமென அவர்கள் உணர்கிறார்கள் என்பதைக் கண்டுணர்ந்த நான், வலிய அவர்கள்வீட்டிற்குச் சென்றேன். அப்பொழுது என்னை வரவேற்ற விதத்திலிருந்து, மறுமுறை என்னைக்காண அவர்கள் அவாக்கொண்டவர்கள் அல்லர் என்பது வெளியாயிற்று. அவர்களைக் குறை கூறவும் காரணமில்லை. ஏனெனில் எவருமே வயிற்றுப்பாட்டின் நிமித்தம் பொருள் தேடுவதில் இக்ஷாம காலத்தில் "நீ முந்து நான் முந்து" என்று உழல்பவர்களாகவே இருக்கிறார்கள். "செல்வ மென்பது சிந்தையின் நிறைவே" யாதலின் லக்ஷ ரூபா சம்பாதித்தும் அது 2-லக்ஷ ரூபாய்க்குக் குறைவாயிருப்பதாகக் கருதித் துயருறுவாரேல் அது சேர்க்கும் வரை அவரை வறிஞரே என்பேன். ஏனெனில், "அல்கா நல்குரவு அவா வெனப்படும்" அன்றோ? இத்தகையோரின் காலக்ஷேப அட்டவணை வருமாறு:—

"காலையில் காபி. பிறகு 11 மணிவரை கட்சிக்காரருடன் கலந்து பேசல். பிறகு வெந்ததும் வேகாததுமாக அவசரத்தில் விழி பிதுங்க ஜீரண சக்திக்கு ஹானி உண்டாகத்

தின்று சச்சேரி சென்று, 5 அல்லது 6 மணி வரை மூலை வறளக் கட்சி பேசல். பின்பு 8½ மணி வரை காற்று வாங்கவோ களிப்பாறவோ கிளப்பிற்குச் செல்லல். பிறகு சாப்பிட்டு நாளைச் செய்யவேண்டிய காரியங்களுக்குச் சட்டாதாரம் தேடல்; நித்திரை செய்தல். இத்தகையோர்க்குப் பிள்ளைகளின் படிப்பு நடத்தை சம்பந்தமாய் ஒரு நாளைக்கு அரைமணியேனும் எவ்வாறு கழிக்கக்கூடும்?" என்று விசனித்துக் கூறினர்.

நண்பர் சொல்லிய வெல்லாம் உண்மை யென்றே கண்டேன். ஏனெனில், அப்பெற்றோரே இவைஎல்லாம் உண்மையென ஒப்புக்கொண்டனர். அப் பெற்றோரிற் சிலரை நோக்கி "நீர் சொல்லுவதுசரியே. ஆயினும் உமக்கு ஒரு யுக்தி சொல்லுகிறேன். அதை அனுஷ்டித்தால் அது உமது ஜீரண சக்தியையும் பையன் அபிவிருத்தியையும் அதிகரிக்கச் செய்யும்: உம்மோடல்லது பையனுக்கிரவில் உணவிட வேண்டாம் என்று பரிசாரகனுக்கு உத்திரவிடும். இருவரும் உண்ணும்போதே பையனை அவன் அன்றன்றுடு செய்த காரியத்தைப் பற்றி விசாரணை செய்யும். அப்பொழுது அடையும் அபிவிருத்தியைப் பாரும்!" என்றேன். அப்பிரகாரமே அவரும் செய்து இருவகையிலும் தாமெய்திய நலத்திற்காக நன்றி கூறி எனக்குக் கடிதம் வரைந்தார். ஆதலால் மனமுண்டானால் வழியுமுண்டு, பாருங்கள்.

போதனுமுறை பயிற்றும் சாலையைச் சார்ந்த உபாத்திம மாணவர்களே! உபாத்திம சங்கத்தினரே! பெற்றோர் உதவியின்றி நீவிர் பெரும்பயன் எய்தல் அரிது என்பதற்கு இன்னமும் ஓர் உதாரணம் கூறி நிறுத்துவேன்.

சென்னையில் வசித்துவந்த ஒரு பிரமுகர் தமது சிற்றப்பன் இல்லத்தில் கும்பகோணத்தில் வசித்துப் பிரவேச பரீக்ஷை முதல் தரத்தில் தேறின தனது மகனை 'சென்னப்பட்டின த்தில், இராஜதானிக் கலாசாலையில் F. A. வகுப்பில் சேர்த் தார். இரண்டு வருஷ முடிந்த உடன் "பரீக்ஷை தேறினவர் ஜாப்தா" வில் பையனுடைய பெயரைக் காணுமல் பதை பதைத்து, 'பங்களா' சென்று, பையனை விளித்துப் பின் வருமாறு பிரலாபித்தனர். "அடே துரோகி! இன்று வரை எனக்கு எவரும் இணையில்லை என்று இறுமாந்திரு ந்தேனே! என் சீர் குலைக்க எங்கு தலைப்பட்டாய்? உச்சி வெ டிக்க, கடுவெயிலில் காதவழிநடந்து கலாசாலை சென்ற போது மெற்றிக்குலேஷன் முதலாய்த் தேர்ந்த நீ, இங்கு வந்தவுடன் மோட்டார் ஏறுவதிலும் பந்து விளையாடுவதி லும், உல்லாசமாய் உனது காலத்தைக் கழித்ததனுலன்றோ நான் "காஸ்மாபாலிடன் கிளப்" சென்றவுடன் சகலரும் சந்தோஷமடைய, நான்மாத்திரம் துக்கமிக்கவனாய்த் தலை குனிந்திருக்கவேண்டியதாயிற்று"? என்று முகம் வியர்க்க மொழிந்து பையன்கன்னத்திலும் பளீரெனஅறைந்தார். வாய் மொழி முடியும் வரை மௌனமாயிருந்த அப்பையன் அறை யைப்பெற்ற பின் ஆத்திரப்பட்டு, "ஐயா! என்னை வளர்த்தது வெயிலன்று, படிப்பைக்கெடுத்தது பந்துமன்று, நான் இக் கதியுற்றதற்கு நீங்களே முக்கிய காரணர். தந்தையைத் தாழ்வாய் பேசுவது தவறென்று அறிந்தேனுயினும், மன மின்றியே உண்மையை மொழிகின்றேன். தாங்கள் இப் போது பேசியதினின்றும், என் மீது, தங்களுக்கு அதிகக் கருத்தில்லை என்பதையும், காஸ்மாபாலிடன் கிளப்பார் என்ன

சொல்லுவாரோ என்னும் ஏக்கமே தங்களுக்கு மேலிட்டிருக்கிறது என்பதையும், நான் அனுபவித்த மோட்டார் முதலிய ஆடம்பரங்கள் ஒருவிதத்தில் தங்கள் பெருமையை பிரசித்தம் செய்ய உதவினவேயன்றி, உள்ளன்போடு உபகரித்தவை இல்லையென்பதையும், ஒருவாறு அறிகிறேன். இரண்டு வருஷ காலமாக நான் இங்கே இருப்பது கூடத் தெரியாதே. என் பந்தாட்டத்தின் பெருமையைப் பத்திரிகைகளில் கண்டு மகிழ்ந்த நீர், என் படிப்பைப் பற்றி என்னை எப்போதாவது விசாரித்தீரா? ஆங்கிலம் சிறிதும் உணராத என் சிற்றப்பன் என் படிப்பு விஷயமாகக் கொண்ட கவலையில் தாங்கள் ஐம்பதில் ஒரு பங்கேனும் வாரம் ஒரு முறையாவது நீர் கொண்டிருந்தீரேல் எனக்கு அடியும், தங்களுக்கு அவமானமும் இல்லாதிருந்திருக்குமே" என்று அழுதான்.

நல்ல வேளையாய் உங்கட்கிதுபோன்ற கஷ்டம் ஏதும் இராதென்றே எண்ணுகிறேன். ஏனெனில் உங்களிற் பெரும்பான்மையோர் இனிச் செல்லுமிடம் சதா பலவகைக் காரியங்களிலும் பட்டுழலும் பட்டணமன்று. ஏதும் செய்ய அவகாசமுள்ள கிராமங்களே. மாலைவேளைகளில் தம் வேலையினின்றும் கிராமவாசிகள் திரும்புங்காலை, அவர்களிடம் சம்பாஷிக்கும் போதே, தமிழ் மொழியில் உங்கட்குள்ள பாண்டித்யம் போதுமானதா யிருப்பின், பூதபௌதிக சாஸ்திரங்களின் சிறு நுட்பங்கள் உலகாற்புதங்கள், நானாதேசத்திய நாகரீக வளர்ச்சி முதலியன பிரஸ்தாபித்துணரத் தக்க சமயம் வாய்க்கும். இவ்விதம் செய்வீரேல் பொதுஜனப் பாமாரிவிருத்தி முளைத்து, சிறிதுசிறிதாக நாளடைவில் பெரிதாகப் பரவும். இப்பெரும் பேறு அடைவதுவேறு எவ்வகைத் தொழில் முயற்சியாலு மில்லை.

இனி, பரிதபிக்கும் வண்ணம் உங்களுக்குக் கிடைக்கும் சொற்பச் சம்பளத்தைக் குறித்து உங்களுக்கு நான் இரங்கப் போவதில்லை.' ஜட்கா வண்டிக்காரன், பரிசாரகன், டபேதார் இவர்கள் பெறும் சம்பளத்தினும் குறைந்த சம்பளம் நீங்கள் பெறுவதும், அது உங்கள் ஜீவனார்த்தத்துக்குப் போதாதென்பதும் உண்மையே. ஆயினும் பொருள் வருவாய் ஒன்றையே கருதும் அதமாதமர்களான அற்பக் கூலிக்கார உபாத்திம வகுப்பைச் சேர்ந்தவர்களல்லவோ நீங்கள்? இத்தொழிலை நீங்களே வலிய விரும்பி ஏற்றதால் அதை மனத்திருப்தியோடு பலாபேக்ஷை கருதாமல் உழைத்துத் தீரவேண்டியவர்களாய் இருக்கிறீர்கள். இக்காரணம் பற்றிக் கலாசாலை அதிகாரிகளும் வித்யா இலாகா தலைவர்களும் உங்களைச்சிறுமைப்படுத்தா திருப்பார்களாக. உங்கள்தகுதியை அவர்கள் கவனியாவிடினும், பாமரப்படிப்பு விருத்தியாகும் பொழுது உங்கள் க்ஷேம லாபங்களும் தாமாகவே விருத்தியாகிவிடும். உங்களிடமிருந்து மிக்க பயன் பெற்ற பாமர ஜனங்கள் பதிலுபகாரம் செய்யாத அவ்வளவு நன்றி கெட்ட மாந்தர்களாக இரார் என்பதே எனது மெய் எண்ணம்.

இனி, நான் சொல்லப்போகும் விஷயம், கற்பிப்பதில் சித்திபெறும் விதமே. எனது நல்லாசிரியரை நோக்கி "ஐயா! மந்தனுக்கும் எளிதில் பொருள் விளங்க நீங்கள் எவ்வாறு செய்து விடுகிறீர்கள்?" என்று நான் கேட்க, அவர், "என் மனைவி எனக்குக் கற்றுக் கொடுத்தாள்" என்றார். ஆச்சரியமுற்ற நான், "அஃதெப்படி?" என்றேன். அவர் "ஒவ்வொரு இரவும், மறுதினம் நான் கற்றுத்தா

இருக்கும் விஷயத்தை என் மனைவிக்குக் கற்பிப்பேன். விளங்காத இடங்களை என் மனைவிபடும் கஷ்டங்களிலிருந்து அறிந்து அவை விளங்குமாறு அவளுக்கு எடுத்துரைப்பேன். அவளுக்கு விளங்காத இடமே பெரும்பாலும் மாணவர்க்கும் விளங்காதிருக்கும். அவளுக்கே விளங்கும்பொழுது மாணவர்களுக்கு, அவை, நன்கு போதித்தவுடன் விளங்கக் கேட்பானேன்? இவ்வாறு அற்ப அறிவு படைத்தவரும் அதிபுத்திசாலி ஆவர்'' என்றார். நண்பர்களே! பாருங்கள் இவர் ஒரே முயற்சியில் இரண்டு காரியங்கள் சாதித்ததை!—மனைவிக்குக் கல்வி புகட்டினர்; மாணவர்களுக்கும் கற்பித்தார்.—இதனால் ஆண்மக்கள் கல்வியும் பெண்மக்கள் கல்வியும் ஏககாலத்திற் பரவின. "ஆண்கல்வி பரவினது உண்மையே. ஒருத்திக்கே கற்றுத் தந்தால் பெண்கல்வி எவ்வாறு பரவும்?'' என்று நீங்கள் ஐயமுறலாம். எப்படியெனில், இவ்வொருத்தியின் மூலமாக அவள் தோழிகளும் அத்தோழிகளின் மூலமாக அவர்கள் தோழிகளும், அவ்வாறே அத்தோழிகளின் தோழிகளும் விஷயம் அருமையாக இருந்ததால் கற்றுக்கொண்டார்கள்: பெண்கள் சுவபாவம் பெரும்பாலும் வம்படிப்பதாதலால் வெறும் வாயை மெல்லுபவர்கள் அவல் வாயை மெல்லலும் ஓர் ஆச்சரியமா? வீண் வம்பில் காலத்தைப் போக்குவதைவிடப் பயனுள்ள காரியங்களில் காலத்தைச் செலவழிப்பதால் நாட்டிற்கு எவ்வளவு நன்மை யுண்டாகும் பாருங்கள்! உங்கள் தாய், சகோதரி, மனைவி முதலியோருக்கும் இவ்வாறு பயிற்றிப் பயனுறப் பாருங்கள். நிற்க.

பெண் கல்வியை அபிவிருத்தி செய்வதால் நான் ஏற்கனவே சுட்டியுள்ள அதி முக்ய விஷயமான "பிள்ளைகட்குப் பெற்ருர் விசாரணையின்மை." என்ற பெருங்குறையை நிவர்த்தி செய்தவர்களாவீர்கள். நம் அதிர்ஷ்ட வசத்தால், ஆடவர் வயிற்றுப் பாட்டிற்கும் ஆஸ்தி தேடுவதற்கும் அலையவும், பெண்டிர் அவர்களை உண்பித்தும் அவரையும் அவர் தேடுவதையும் பேணி வரவும் ஏற்பட்டவர்களாயிருக்கிறுர்கள். நம் தேசத்தில் புருஷன் வெளியில் சர்வாதிகாரமும் வகிப்பவனுகக் காணப்பட்ட போதினும், வீட்டில், தான் உட்பட, அதில் சம்பந்தப்பட்ட யாவினும் மனைவியின் ஆணையே செல்லுகிறது. ஆதலால் அவள் மனக்கண்ணை விசாலியுங்கள். அவ்விதம் செய்வீரேல் புதல்வரைக்குறித்த அக்கறை உங்கட்குக் குறைந்தாலும் அதற்கேற்ப அவர்களுக்கு அதிகரிக்கும். உயர்தரக் கல்விகள் பெறும் வரையாவது நம் பெண்டிரே அவர்களைப் பார்த்துக்கொள்ளக் கூடும். இவ்வித மேற்படுவதும் நன்றே. அச்சுறுத்தி மக்களைத் தந்தை ஆளுகிறுன்; தாயோ தனது தெய்விக அன்பினுல் பிள்ளையை வசப்படுத்துகிறுள். கல்நெஞ்சன் மனத்தையும் கரைத்து அவனைத் தனது பேரன்பினுலேயே நல்வழிப்படுத்தக் கூடிய வன்மை நற்றுய் ஒருத்திக்கே உண்டு.

இனி உங்களையே பற்றி ஒரு வார்த்தை சொல்வேன். நீர், உயரத்திலிருந்து கீழ் இறங்குகிறதென்பது நீங்கள் அறிந்த விஷயம். இதை உங்கள் அனுஷ்டானங்களிலும் பொருத்திப் பாருங்கள்: படித்ததோடும் கற்றதோடும் திருப்தியடையாதேயுங்கள். "கட்டிக்கொடுத்த சோறும் கற்றுத் தந்த சொல்லும் நெடுநாளைக்கு நில்லா" என்பது நீங்கள்

அறியாததன்றே? நீங்கள் கற்க எவ்வளவோ இருக்கிறது. எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாகக் கற்கிறீர்களோ அவ்வளவுக் கவ்வளவு உங்கள் போதனு சக்தியும், எளிதில் விளங்கச் சொல்லும் ஆற்றலும் மிகும் என்பதை உணருங்கள்.

இதனினும் அதிகமாகக் கவனிக்க வேண்டிய அதி முக்கிய விஷயம் ஒன்றுண்டு. உங்களிடம் கற்கும் சிறுவர்களைக் "குருட்டுப்பாட சாஸ்திரிகள்" ஆக்காமல், மேன்மேலும் கற்கவும் விஷயங்களை அறியவும் அவாக்கொள்ளுமாறு செய்யுங்கள். பிள்ளைகள் தம் யோசனு சக்திக் கேற்பக் கேள்வி கேட்கும்போது, அவர்களை அதற்காகக் கண்டிக்கவாவது அதட்டவாவது செய்யாமலும், "இது உன் பாடமில்லை; பாடத்தையே அறிந்துகொள்ளவில்லையாம்! மேலே போய்விட்டாளும்" என்று வெடுக்கென்று விழாமலும், கேட்கும் விஷயத்தை விளக்கி அவர்கள் அறிவை விசாலியுங்கள். வருடாந்தப் பரீக்ஷை முடிவு ஒன்றை மட்டும் கருதாமல், மாணவர்களுக்குப் புதிது புதிதாகக் கேட்டறியும் அவாவை விருத்திசெய்பவனே உபாத்திமத் தொழிற்குரியவன். இதனுல் பரீக்ஷை முடிவைத் தாழ்வுபடுத்திக் கூறியதாக எண்ணுதீர். என்ன இருந்தாலும் கலாசாலை அதிகாரிகளிற் பெரும்பான்மையார் பரீக்ஷை முடிவு ஒன்றினுலேயே உபாத்திமத் திறமை, பிள்ளைகளின் ஆற்றல், முதலியவற்றை நிதானிக்கின்றார்கள்.

என்னுடன் படித்தவர்களில் அநேகர் அநியாயமாக அறிவு விருத்தியின்றிக் கலாசாலைகளிற் கற்றதைக் காட்டிலும் ஒரு அக்ஷரமாவது அதிகமாகக் கல்லாதிருப்பதைக் காண என் மனம் வருந்துகிறது. ஐந்து வருஷத்திற்கு முன்

படிப்பை நிறுத்திய 5-வது பாரமாணவர்களில் சிலரை நான் சந்தித்துப் பேசிய காலையில் அவர்களுக்கு ஜப்பான் எங்கிருக்கிறதென்பது கூடத் தெரியவில்லை. ஐரோப்பா கண்டமே அவர்களுக்கு நடத்தப்பட்டதால் இது தெரியவில்லையாம். இவர்கள்பேரிற் குற்றமில்லை. வறுமைப் பிணியால் படிப்பை நிறுத்திய இவர்களுடைய, உபாத்திமார்களே குற்றம் சாட்டப்படற் குரியர். நிற்க,

உங்களுக்கே ஆவலும் அக்கரையும் இருந்தால்தான் மற்றவர்களுக்கு நீங்கள் ஆவல் உண்டாக்க முடியும். ஒரு உதாரணம் உங்கட்கு எடுத்துரைப்பேன்: சீமையில் தொழிற் காட்சித் தலைவராகிய கேர்ஹார்டி (Keirhardi M P.) யை உங்களிற் சிலர் நேரிற் கண்டிருக்கலாம். காணக் கொடுத்து வையாமற் போனபோதிலும் அவரைப்பற்றிப் பத்திரிகைகள் வாயிலாகவாவது அநேகர் கேள்வியுற்றிருக்கலாம். அவர் நான்கு வகுப்பிற்கு அதிகம் படித்தவர் அல்லர். ஆயினும், தற்பயிற்சியினாலேயே ஷேக்ஸ்பியர் கிரந்தங்களையும், தெளிவுபெற அறிந்துணரும் ஆற்றல் படைத்தவர். அவர் நாளைக்கும் அவற்றை விரும்பிப் படித்துவருகிறார். ஷேக்ஸ்பியர் நூல்களைப்பற்றி அவர் அறிந்ததுபோல எவரும் அறியவில்லை என்பேன். சர்வகலாசாலை மாணவன்கூட இவ்வளவு அக்கறையாய்ப் படிக்கக் கேட்டிலேன்.

விஷயங்களை மேன்மேலும் அறிய உங்களுக்கு ஆவல் இல்லாவிடில் மாணவர்களுக்கு ஆவல் புகட்ட உங்களால் முடியாது. நீங்கள் படித்த அளவில் உங்களுக்கே திருப்தி இல்லையென்பதையும் மேன்மேலும் நீங்கள் கற்க விரும்பு

கிறீர்கள் என்பதையும் உங்கள் செய்கையாற் காட்டுங்கள். அவர்கள் உங்கள் உதாரணத்தைப் பின்பற்றி நல்வழிப் படு வார்கள் என்பது திண்ணம்.

வேண்டுவதற்கு அதிகமாகக் காலம் தாழ்த்தி இன்று அக்ராஸநாதிபத்யம் வகிக்கும் மகா-௱-௱-ஸ்ரீ கனம் குருசாமி ஐயர் அவர்களின் அதிநுட்ப சாதுர்ய உபதேச மொழிகளைக் கேட்க ஆவலுடன் இருக்கும் உங்களுக்கு அருவருப்பு உண்டாக்கத் துணியேன். ஏனெனில் அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகும். அதுவும் என் போன்ற உபாத்திமத் தொழிலையுடைய ஒருவன் அத் தொழிலைப்பற்றி நீட்டித்துப் பேசின் கட்டாயம் வெறுப்புப் பிறக்கும். ஆதலின் இச் சுப தினத்தில் அதி முக்கியமான விஷயத்தைப்பற்றிச் சிறிது கூறி நிறுத்துவேன்.

இன்று, மாட்சிமைதங்கிய மகாராஜ சக்ரவர்த்தியவர்கள், சரித்திரப் பிரதானமும், இந்துக்களுக்கு மகிழ்ச்சியுடன் ஞாபகம் வரக்கூடியதுமான பூர்வீக அஸ்தினபுரமாகிய டில்லி மாநகரில் பிரஜைகள் மனங்களிக்க, "பல வேறுபட்ட இந்த இந்திய ஜன சமுகம் ஒன்று" என்பதைக் காட்டும் அறிகுறியாய் சிங்காதனமேறிய மஹோத்ஸவத்தை மனத்திருந்தும் நாளாகும். உங்களுக்கு ராஜபக்தி போதிப்பதானது சூரியனைப் பிரகாசிக்கவும், நக்ஷத்திரங்களை மின்னவும் சொல்வது போலாகும். ஏனெனில், மேற்றிசையோர், கொடுங்கோல் அரசு, முடியரசு, குடியரசு இவைகள் மாறி மாறித் தொன்று தொட்டு வரும் ராஜரீகத்தைக் கொண்டவர்களாயிருக்க, நம் தேசத்தில் புராணகாலம் தொட்டு நாளது பரியந்தம் பிரஜாப் பிரயத்தனத்தால் டார்க்வினைப் போல ரோமபுரியினின்றும்,

இரண்டாவது ஜேம்ஸ் அரசனைப்போல இங்கிலாந்தினின்றும் துரத்தப்பட்டும், ஸர்வியாதேசத்து அலேக்ஸாண்டர் அரசனென்ன, பிரான்ஸு தேசத்து லூயி அரசனென்ன, நமது இங்கிலாந்து தேசத்து சார்லஸ் அரசனென்ன, இவர்களைப் போல், வியாஜமாகவேனும், சதியாகவேனும், படுகொலை புரியப்பட்டும், இவ்விதமான அநாகரீக பாபகாச் செய்கைகள் நடந்ததாக யாம் கதையிலும் கேட்டிலேம். நம் தேசத்தார் "திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே" என்னும் கொள்கை வம்ச பரம்பரையாகப் பாலுடனே ஊட்டப் பெற்றவர்களாக இருக்கிறார்கள். நம்முடைய மகா காருண்யமுள்ள ஜார்ஜ் அரசர், முன்பு ஆண்டு முடிதரித்தோர் யாவரினும் காருண்ணிய மிக்கார். அவர் நம்மைத் தக்க வண்ணம் அறிவதற்கு அருமையான சிரமம் எடுத்தவர் என்பது பின் சொல்லும் செய்கையாலேயே வெளியாகும்.

சர்வ வியாபியாகிய, "ராய்ட்டர்" கம்பெனியார் அனுவையும் அண்டமாக்கி "ராஜாங்கக் கொலை" "அராஜரீகம்" இந்தியாவில் நடை பெறுகிறதென்று தினே தினே குடல் நடுங்கும் தந்திமாரிகள் பொழிய, ஒருசார் கிராமபோன் போல் இந்தியரிடத்து உண்மைப் பற்றில்லாத சில ஆங்கிலேய இந்திய பத்திரிகைகள் இதற்கு "ஓம்" என்று பல்லவிபாட, இத்தருணத்தில் இந்தியாவை நேரிற்காண விஜயஞ்செய்யத் துணிந்து தீர்மானித்த நம் அண்ணலின் ராஜ தைரியம் என்னே! என்னே!! சுத்த ராஜத்துவம் அவருடைய ஒவ்வொரு செய்கையிலும் ஒவ்வொரு அருமையான வார்த்தையிலும் பிரசித்தியாயிற்று. புண்பட்ட இடம் எங்கு என்று கண்டார். அதைத் தம்முடைய பிரசன்னத்தினாலும் ஆற்றினார். அதன்

பயன் அவருடைய சுத்த தீர ராஜத்துவத்தை லோகப் பிரசித்த மாக்கியது. யார் எவ்விதம் அபிப்பிராயப்பட்ட போதிலும், பிரிட்டானிய ராஜ்ய விஷயமாக, அரசன் மந்திரிகளின் மதிகொண்டு ஒழுகியபோதிலும், இந்தியா சம்பந்தமான விஷயத்தில் மந்திரிகட்கு, தம் மதிக்கோலால், அரசராகிய அவர் வழிகாட்டுகிறார் என்ற தீர்மான எண்ணம் சகலர் மனத்திலும் மறுக்க ஒண்ணாது குடிகொண்டிருக்கிறதென்பது திண்ணம். கேவலம் லோகாயத ஞானத்தையே மிகுதியும் கொண்ட சில மூடப் பத்திரிகைகள் நம்முடைய இயற்கை ராஜவிசுவாச அறிவை மறந்து, இந்தியர் பலாபேக்ஷை கருதியாவது ராஜ பக்தியுடையவராயிருத்தல் அவசியமென்றும் வேறு எவ்வரசர் ஆட்சியிலும் இவ்வளவு சுயேச்சையும், சுபிக்ஷமும் பெறவே முடியாதென்றும், வெகு சிரமப்பட்டு நெடிய வியாசங்கள் எழுதிப் போதிக்க வருவது எனக்கு ஒருவாறு சிரிப்புண்டாக்குகிறது. ஆங்கில ராஜரீக தத்துவ சாஸ்திர உணர்ச்சி மிக்காரான (Fox) பாக்ஸ், ஷேரிடன் என்ன, லாக், பேந்தம் என்ன, மில், மார்லீ என்ன, இத்தியாதி நதிகளில் தெள்ளிய நீரையுண்டு, ஆவேசத்தால் அம்மகான்கள் கூறியிருக்கும் தத்துவத்தின்படியே ஆத்திர அவசரப்பட்டு ஆர்த்த சிலருடைய காரணத்தினாலேயே நம்மை அராஜரிகர்களென்று ஏகதேசமாய் நம் விரோதிகள் நமக்கிடும் பட்டத்தை அவர் சிறிதேனும் ஏற்கவில்லை. இவர்களிடத்துக் கூட நமது சக்ரவர்த்தியார் தமது பரிதாபத்தைக் காட்டினார்.

அவர் மந்திரிமார், இவ்வித நவீன இந்திய உணர்ச்சிக்கு ஆங்கிலத்தாரே குருவாதலாலும், ஆங்கில அரசாட்சியே அதை வளர்த்ததனாலும், "நீவிர் கேட்பது அவசரப்படாதிருப்பின் காலத்திற்கேற்ப கொடுக்கப்படு"மென்றும், உறுதி கூறினார்கள். வெடிகுண்டும், படுகொலையும் பிரமிக்கச் செய்யும் பங்காளத்தில் சென்றபோது தாம் அவர்களுடைய அன்பிற்கும் ஆர்வத்திற்கும் உரிய உத்தம சக்ரவர்த்தி என்றும், 'இந்தியர் குணத்தை மந்தமதியால் துவேஷித்த தீயர்கள் கொண்ட எண்ணம், தவறு' என்றும், லோகப்பிரசித்தமாகும் பொருட்டே மெய்காப்பாளரும் புறஞ் சூழாது தன்னந் தனியாய் அச்சமின்றி உலாவினர்.

டிசம்பர்மீ 12உயாகிய இன்று யார்க்கும் மஹோத்ஸவ நாளே. அதிலும், உபாத்திமைத் தொழிலுடைய நமக்கும் மாணவர்களுக்கும் இது அது முக்கியமான தினம். ஏனெனில், சென்ற வருஷம் இத்தினத்தன்றோ நமது வள்ளல் வித்தியாபிவிர்த்திக்காக இந்திய வருமானத்தில் பிரத்யேகமாக 50 லக்ஷ ரூபா செலவு செய்யக் கட்டளையிட்டது?

இனி இப்புனித பூமியைப் பற்றியும், இப்புவிதாங்கும் ஒப்பிலாச் சக்ரவர்த்தியைப் பற்றியும், சில வாழ்த்துக்கள் கூறி என் பேச்சை நிறுத்துகிறேன். என்னையும் மதித்து இச்சபையில் உபந்நியாசம் செய்யக் கேட்டுக் கொண்ட பெரியோர்களுக்கும் எனது பேச்சு முடியும் வரை பொறுமையோடு சலியாது செவிகொடுத்த இச்சபையிலுள்ளோர்க்கும் மனப்பூர்வமாக நன்றி கூறுகிறேன்.

*மனிதர்க்கு நல்லுணவு மாமிசமா மரக்கறியா?

"நீங்கற்ற பிராணிகளது ஊனைத்தின்று தன்னூனை வளர்ப்பவனினும், கொடியோனும், தன்னயங் கருதுவோனும் யாவன் ?"

"தெள்ளறிவு, அழகு, நோயற்ற வாழ்வு, சரீரவலி, மனவலி, ஆத்ம சுகம் இவைகளை வேண்டுவோன் ஊனுண்ணுதிருக்கக் கடவன்." (மஹாபாரதம்)

[ஃஹிம்ஸாவாரமொமயஉ-ஃ]

[நோன்பென் பது கொன்று தின்னாமை]

தற்காலத்துப் பேர்போன வைத்தியர்களும், ஆகார முறையைச் சீர்திருத்துவோர்களும் மனிதர்க்கு நிர்த்தோஷமான ஆகாரம் எதுவென நிர்ணயிப்பதிலும், மேனாடுகளில் உணவுச்சீர்திருத்தம் உண்டாக்குவதிலும், மிகக் கவலை எடுத்துக்கொண் டிருக்கிறார்கள். அவர்களது நன் முயற்சியால், அமெரிக்காவில் புத்திமான்களாயுள்ளவர்கள் மரக்கறி கொடிக்கறி உண்பதினாலுண்டாகும் நற்குணத்தை வரவர அறிந்து வருகின்றார்கள். தாங்களும் சாகபட்சகராகி விடலாமா எனவும் யோசிக்கிறார்கள். இப்பொழுது நடப்பதுபோல்

* இஃது, அமெரிக்காகண்டத்து நியூயார்க் பட்டணத்தில் "சாகபட்சகர்சபை"யிலே, சுவாமி—அபேதானந்தரால் செய்யப்பட்ட "ஹிந்துசாகபக்ஷகனா யிருப்பதேன்?" என்ற ஆங்கில உபந்நியாசத்தின் மொழிபெயர்ப்பு.

மேனாட்டில் இதற்கு முன் அவ்வளவு ஊக்கத்துடன் இவ்விஷயம் விசாரித்து வாதிக்கப்பட்ட தில்லை. பிதாகோரர் (Pythagoras) பிளேட்டோ (Plato) ஸாக்ரடிஸ்(Socrates),சேனகர் (Soneca), புளூடார்க் (Plutarch), திருத்தலையர் (Tertillian), பாற்பிரியர் (Prophyry,) முதலிய—புலாலை மறுத்துக் காய்கறியுணவே மேன்மையெனக் கொண்டாடிய—அநேக ஞானிகள் பழைய கிரேக்கர்களுக்குள் உண்டு. ஆனால் தற்காலத்தில் மேனாட்டாருள் பெரும்பான்மையோர் காய்கறி உணவு உண்பவர்களை இகழ்ந்து பரிகசிக்கின்றார்கள். ஆரியவர்த்தத்தில், பிதாகோரர் (Pythagoras) பிறப்பதற்கு வெகு நாளைக்கு முன்னமேயே நமது ஆரிய ருஷிகள் இப்புலால் மறுப்பதைக் குறித்து சித்தாந்தம் செய்திருக்கிறார்கள். ஜீவவதை கூடாதென்றும், மாமிச பக்ஷணம் கூடாதென்றும், யுக்திக்கும் சாஸ்திரத்திற்கும் ஒத்த காரணங்கள் காட்டி, நூல்கள் எழுதியிருக்கின்றார்கள். சரித்திரம் ஏற்படாத காலத்திற்கு முன்னமேயே காய்கறி உணவே மேலானதெனக் கொண்டும் அவ்வுணவை அனுஷ்டித்தும் வந்த ஆரிய மேலோரிடமிருந்து, பிதாகோரர் (Pythagoras) அவ்வுணவைப்பற்றிய தமது கொள்கையைக் கற்றறிந்தார் என்று அநேக சரித்திரக்காரர்களும் கீழ்நாட்டுப் புலவர்களும் எண்ணி யிருக்கின்றார்கள்.

ஜனங்களிற் பெரும்பான்மையோர் காய்கறியுண்ணும் வழக்கம், இப் பூவுலகில், அநேக ஆயிர வருஷங்களாக இந்தியா தேசம் ஒன்றிலேயே பரவியிருக்கின்றது. அவ்வுணவை ஏன் உண்ணவேண்டும் என்பதின் சரியான நியாயத்தை அச்சாதியாரே முதலில் அறிந்தவர்கள். சீனர்கள், ஜப்பானி

யர்கள், திபேத்தியர்கள், ஸயாமியர்கள், பர்மியர்கள், இலங்கை நாட்டினர்— 'தின்னும் பொருட்டு ஜீவ வதை செய்வது கொடிது: காருண்யமற்றது: தீது' என்ற கொள்கையை ஆரியர்களிடமிருந்தே அறிந்துகொண்டவர்கள். சரீர சுகம், சரீர அங்க அமைப்பு, உணவுகளின் குணகுணம், நீதிவழிபற்றியும் மதவழிபற்றியுமுள்ள ஜீவலக்ஷணம், முதலிய வெவ்வேறு நிலைகளை அனுசரித்துக் கறிகாயுணவே மேலானதென்று, ஆரியவர்த்தத்தின் நுண்ணறிவுடையோரும், ருஷிகளும் காரணங்கள் எடுத்துக்காட்டி விளக்கி இருக்கிறார்கள். சுதேச வைத்தியர்கள் மாமிச உணவு கூடாது என்கிறார்கள். மாமிச உணவே அஜீர்ணம், குன்மம், கீல்வாயு, க்ஷயம், நரம்பின் ஒழுங்கீனம்முதலிய வியாதிகளுக்குக் காரணமென மேனாட்டு வைத்தியர்கள் அபிப்பிராயப்படுவது போலவே, அவர்களும் அபிப்பிராயப்படுகிறார்கள். கொல்வதற்கென்று கொழுக்க வளர்க்கப்படும் மிருகங்கள் முறைதப்பிய உணவுகள் ஊட்டப்படுவதாலும் முறைதப்பி வளருவதாலும் ஏதேனும் ஒரு வித நோய் உடையனவா யிருக்கவேண்டுமென்றும், அநேக நோய்களுக்கு வித்து மனிதசரீரத்திற்குள் புகுகின்றனவென்றும், பிராணிகளின் மாமிச மூலமாய் மனிதசரீரத்துள் கிருமிகள், பூச்சிகள் செல்லுகின்றனவென்றும், சொல்லுகின்றார்கள்.

மாமிசம், உண்ணு முணவின் சத்து பாகத்தினு லுண்டாவதால், அவ் வுணவு முழுதும் சீரணிப்பதன்முன் மிருகத்லைதக் கொல்லுவதால் உணவுமுற்றும் சீரணியாமல் கழிக்கப்பட்ட வஸ்துக்களும் அசுத்தமும் அம் மாம்ஸத்தில் தங்கிவிடுகின்றது. இக் கழிபட்ட வஸ்துக்களில் முக்கியமாய்

(creatin) போன்ற பாஷாணமுண்டு. மாமிச உணவு, வேண்டா அளவிற்குமேல், இரத்தத்தில் (fibrin) என்ற தசையை வளர்த்து வருகின்றது. இதனால் உடம்பில் வரம்பு மீறிச் சூடுண்டாகின்றது. சூடேறுவதால் விசேஷ சுறு சுறுப்பும் அலைப்பு முண்டாகின்றன. இதன் முடிவோ, புலா லுண்ணும் பெரும்பான்மையோர், அதன் பயனாக நரம்புத் தளர்ச்சியினாலும், ஓய்வினாலும் மெத்த அவதிப்படுகிறார்கள். புலாலை யுண்பதால் ரக்தாசயத்தின் தொழில் அதிகப் படுகிறது. அதனால் உயிர்வலிமை யெல்லாம் குன்றிவிடு கின்றது. உடற்கூறு அறிந்த சாஸ்திரிகளும், (Sir Everard Home) ஸர் எவரார்ட் ஹோம் போன்ற உடற்கூற்றுப் பரி சோதகர்களும், மனிதனுடைய பற்கள், இரைப்பை, ஆகாரக் குழல், ரக்தத்திலுள்ள பரமநுட்பமான இரத்தப் புழுக்கள் (corpuscles) இவைகளின் அமைப்பையும், இரை ஜீரணிக் கும் தன்மையையும் உற்றுணர்ந்து பார்த்து, மனிதன் தன் னியற்கை அமைப்பால், தழைகுழை உண்ணும் பிராணிகளை அதிகமாய் ஒத்திருக்கின்றானே யல்லாது மாமிசமுண்பனவை களை ஒத்திருக்கவில்லையென்று நன்கு எடுத்து விளக்கியிருக் கிறார்கள்.

பலவிதமான காய்கறிகள், தானியங்கள், பழங்கள், கொட்டைகள் முதலியவைகளின் பிரகிருதியையும், வெவ் வேறு பிராணிகளது மாமிசங்களின் பிரகிருதியையும், விசே ஷமாகப் பரிசோதித்தும், ஒன்றோடொன்று ஒப்பிட்டும் பார்த் தால், தாது வர்க்கத்திற்றான், தசை வளரவும், நரம்புகள் உறுதிகொள்ளவும், சரீர முழுமையும் புஷ்டிகொள்ளவும் சத்து இருக்கிறதென்று நன்குவிளக்கிக் காட்டலாம். சரீர

புஷ்டிக்கும் வளர்ச்சிக்கும் முக்கிய ஆதாரமான கொழுப்பும் லோஹ வஸ்துக்களும் ஜீவவர்க்கத்திலிருந்து கிடைப்பது போலவே, தாதுவர்க்கத்திலிருந்தும் ஏராளமாகக் கிடைப்பதுடன், ஜீவவர்க்கத்திற் கிடைக்காத மதுவஸ்துவும், தாதுவர்க்கத்திற் கிடைக்கின்றது. உண்மை இவ்வாறிருக்க, மாமிச உணவை ஏன் நாம் உண்ணவேண்டுமென்னும் கேள்வியுண்டாகின்றது. புஷ்டி யுண்டாக்குவதற்காகவா? அன்று. அந்தப் புஷ்டி, காய்கறிகளும், தானியங்களும், பயறுகளுந் தின்ன உண்டாகும். சரீர சவுக்கியத்தின் பொருட்டா நாம் புலால் உண்கிறோம்? ஒருபொழுதுமில்லை; மரக்கறியுண்பவர்ளே மொத்தத்தில் புலாலுண்பவர்களில் பெரும்பாலரைவிடச் சௌக்கியமாக இருக்கிறார்கள். இப்படி யிருக்க, புலாலுண்ண வேண்டுவதேன்? தொன்று தொட்டு வரும் பழக்கவாசனையும், மூடபத்தியும், பாரபக்ஷமும், அறிவின்மையுமேயன்றி வேறு காரணமில்லை.

ஜனங்கள் உழவுத் தொழில் அறியாத பழையகாலத்தில், ஏராளமாய்க் கிடைத்த பழங்கள், கொட்டைகள், காய்கறிகள் (கந்த மூல பலங்கள்) இவைகளையுண்டே பொழுது போக்கினார்கள். கந்தமூலபலங்கள் கிடைப்பது அரிதென அறிந்த ஜீவர்கள் தமதியற்கைக் கேற்ப, ஒருவரோடொருவர் திண்டாட்டம் போராட்டம் அதிகரிக்கவே, தமக்குக் கிடைக்கும் எதையுந் தின்றார்கள். அவ்வாறு திண்டாடும்பொழுது, தின்பது எதுவானாலும் உயிர் பிழைத்தாற் போதுமென்றே முடியும். உழவுத் தொழிலைப்பற்றி யெதுவு மறியாத மிலேச்சர் (கானவர்) க்குக் கனிகளும் கந்தமூலங்களும் கிடைப்பதரிதாகவே, காட்டு விலங்குகள், பறவைகள், ஊர்வன, புழுப்

பூச்சிக ளிவைகளைத் தின்று பிழைக்கலாயினர். மனிதன் புலாலுண்ணை ஆரம்பித்தது இப்படித்தான். வேறொன்றின் மாமிசம் மனிதர்களுக்கு இயற்கையாகவே அமைந்த உணவெனச் சிலர் வாதிக்கின்றனர். இது தவறு: புலாலுண்ணும் பழக்கம் அவசியத்தாலுண்டாகிப் பரம்பரையாய் வந்துவிட்டது. நாகரிகம்பெற்ற தேசங்களில் அநேகர், பாலப்பருவ முதலே பெற்றோர்களுண்பது கண்டு, தாங்களும் மாமிசந்தின்னப் பழகுகின்றார்கள். இவ்வாறு மாமிச உணவின்றித் தாம் பிழைக்கமாட்டார்கள் என்ற ஓரெண்ணம் அவர்களுக் குண்டாயிருக்கிறது. சில மிலேச்சர்களுக்குக் காட்டுமிருக மாமிசவுணவு வேண்டியமட்டும் கிடையாதபொழுது நரமாமிச பட்சகராய் விடுகின்றார்கள். மிலேச்சர்களது வாழ்க்கையால் மனிதனுக்கு மனிதமாமிசம் இயற்கை யுணவெனச் சொல்லலாமோ? ஆஸ்திரேலியா நாட்டுப் பழையகுடிகள் அருவருக்கத்தகும் புழுக்களையும் ஊர்வனவற்றையும் தின்கின்றனர். இந்தியாவில் மலைகளிலுள்ள ஓர் வகைப் பழங்குடிகள் விஷப்பாம்புகளை அதிக ஆவலுடன் தின்கின்றார்கள். இதனால் அவ்வுணவு மனிதனுக்கு இயற்கையுணவெனச் சொல்வோமா? தக்கபடி பாகஞ் செய்துவிட்டால் மனிதன் எதையும் தின்னலாம். இதனால், பன்றிபோல் எதையும் தின்னக்கூடியவன் எனச் சொல்வது முறையோ? 'காடுமுனை' (Cape Cod) நாட்டிலுள்ள பசுக்கள், மீன் கழிவைத் தின்கின்றன. மாட்டிறைச்சி தின்னக் குதிரைகளைப் பழக்கலாம். புகைச்சுருட்டுப் பிடிக்கக் கரடிகளைப் பழக்கலாம். குரங்குகள் காபி, டீ, சாராயமிவைகள் குடிக்கப் பழகுகின்றன. இவ்வாறு மனிதன் தானாக உண்டுபண்ணிக்கொண்ட வாழ்க்கையை ஆதாரமாகக்

கொண்டு அவன் இறைச்சி தின்பதற்குச் சார்பாக வாதிக்கலாமோ? ஒருநாளுமில்லை. மனிதனுக் கியற்கை யுணவு மாமிசமன்று. இயற்கையாய்ப் பூமியில் முளைக்கும் காய்கறிகள், கனிகள், கொட்டைகள், தானியங்கள் இவைகளேயாம்.

இந்துப் பிள்ளைகளும் பெண்களும் பாடசாலைக்குப்போய் முதற் பாடம் தொடங்கும் பொழுது உயர்ந்த நீதிமுறைகள் பயில்கின்றார்கள்; அருள் வற்புறுத்தும் நூற்பாடங்கள் கற்கின்றார்கள். அவர்கள் வயது முதிர முதிர எல்லாப் பிராணிகளிடத்தும் கருணைபாராட்டுகின்றார்கள். [ஸவ-ஜ-ஓ தஷ-ஹிதொஹவ] "பகுத்தறிவில்லாத ஜந்துக்களிடம் அன்புடையனாகுக. மனிதனுக்கியற்கையுணவு மாம்சம் அன்று. ஆதலால், உணவின் பொருட்டு இவைகளைக் கொல்லற்க" என்னும் நீதிமுறை அவர்களுக்குப் போதிக்கப்படுகின்றது. "தாமாக, பூமியில் முளைத்து வளரும் செடி கொடி முதலிய தாதுவர்க்கங்களினின்றும் போதுமான சத்துக் கிடைக்கும்பொழுது தனது வயிற்றுக்குழியை நிரப்பி, நாவிற்கு அற்ப உருசியுண்டாக்குவதற்காகப் பிராணிகளைக் கொல்லும் மகாபாதகம் யார் செய்வார்?" என்று ஸம்ஸ்கிருத முதற்பாட புத்தகத்திற் படித்திருக்கிறேன். உண்ணப்படும் பிராணியையும் உண்ணுபவனையும் ஒப்பிட்டுப்பார். உண்பவனுக்கு உண்டாகும் சுகம் நொடிப்பொழுதுள்ளது. உண்ணப்படும் பிராணிக்கோ அதனது வாணாள்முழுதும் அநுபவிக்குஞ் சுகம் இல்லாது போகின்றது.

"நமது வயிறுநிரம்ப" சாகபட்சணமே போதுமானதாயிருக்க ("தொக்க விலங்கிற்கும் புள்ளிற்குங் காடே புலன்கெட்ட, புல்லறிவாளர் வயிறு" என்றபடி) அவ்

வயிற்றிலுள் சிறந்த பிராணிகளையிட்டு அடைக்கின்றோமே" என ஜைன ஞானியார் இக்கருத்தை வைத்து அமைத்தே சொல்லியிருக்கின்றார். (மேலே கண்ட நாலடியார் வாக்கியத்தை யிங்குச் சேர்த்துக்கொள்க.)

உணவிற்காகவேனும், வேடிக்கைக்காகவேனும் பிராணிவதைசெய்வது எப்படிப் பாவமென்று மேனாட்டார்களுக்குக் கொஞ்சமேனுந் தெரியவில்லை. இதையறிவதற்கு அவர்களது மதம் ஓர் பெரிய இடறுகட்டையாக நிற்கின்றது. கிரியக்கு ஜந்துக்களுக்கு ஆத்துமாவில்லையென்றும், மனதில்லையென்றும், உணர்ச்சியில்லையென்றும், மனிதனது உணவின் பொருட்டு அவைகள் படைக்கப்பட்டனவென்றும், சர்வஜீவ தயாபரக்கடவுள் தமது ஆகாரத்தின்பொருட்டு உண்டுபண்ணியவைகளைத் தாம் தின்றுவிட்டுக் கைம்மாறாக அவருக்கு முகமன் கூறுவதே நமது கடமையென்றும், அவர்கள் மதம் அவர்களுக்கு உணர்த்துகின்றது. இந்தக்காரணங்கொண்டே ஈசன் தான் படைத்த பிராணிகளிற் சிலவற்றை மனிதன் கொன்று தின்றாலல்லது அவன் செய்யுந் தோத்திரங்களுக்கு அவ்வீசன் செவி சாயான் போலுமெனவெண்ணிக் கிறிஸ்துவ நாடுகளில் தேவாராதன காலங்களிலும் கிறிஸ்மஸ்ப் பண்டிகை காலங்களிலும், பல்லாயிரம் பிராணிகளை வதை செய்கின்றார்கள். காய்கறி யுணவைக் குறித்து நான் பிரஸ்தாபித்துக் கொண்டிருந்த ஒரு சமையம் அங்கிருந்த லண்டன் நகர்ப் பெரிய பாதிரியாரொருவர் என் நண்பரை நோக்கி "இக்கோட்பாடுகளுக்குச் செவி சாயாதேயும்.; பைசாசங்களின் கோட்பாடுகளிவை யென நமது வேதங் கூறுகின்றது" என்றார்.

அவர் புது ஏற்பாட்டிலுள்ள ஓரிடத்தைச் சுட்டி அப்படிச் சொன்னூர். அஃதாவது:—

"ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியிற் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள்... விசுவாசிகளும் ஸத்யத்தை அறிந்தவர்களும் ஸ்தோத்திரத்தோடே அநுபவிக்கும்படி தேவன் படைத்த போஜன பதார்த்தங்களை விலக்கவும் வேண்டுமென்று அந்தப் பொய்யர் கட்டளையிடுவார்கள். தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்க தன்று. அது தேவ வசனத்தினாலும், ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும்."

(I, தீமோத்தேயு, iv; 1. 3. 4. 5.)

இவ்வார்த்தைகளைத் தேவ வாக்கென்று நம்பும் ஜனங்கள் உணவின் பொருட்டு ஜீவ வதை செய்வது பாவமென எப்படி யெண்ணுவார்கள்? இந்த வார்த்தையை நம்பி விசுவசிக்கும் கிறிஸ்தவர்கள், தின்பதற்காகப் பிராணிகளைக் கொல்வது பாவமென எண்ணுவது எப்படி அரிதோ, அப்படியே, சர்வகாருண்ணிய மூர்த்தி, மனிதன் தின்பதற்காகச் சிறீன பிராணிகளைப் படைத்தாரென்று இந்துக்கள் நம்புவதும் அரிது. மனிதன் உணவிற்காகப் பிராணிகள் படைக்கப்பட்டன வென்ற எண்ணம் முதலில் செய்பட்டவர்களுக்கு உண்டாகியது. சிம்மாஸனத்துப் பரமண்டலத்தில், ஏதோ

ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டு, மனிதன்உண்பதற்காகப் பிராணிகளை உண்டுபண்ணியும் அவைகளை உண்ணும்படி அவனுக்குக் கட்டளையிட்டுக் கொண்டுமிருக்குந் தேவனொரு வன் இவ்வுலகை முதற்காரணம் எதுவுமின்றிப் படைத்தா னென இந்துக்களுக்கு அவர்கள் மதம் போதியாததால், அந் நற்கோட்பாட்டைக் கேட்க அவர்களுக்குத் தலைநடுக்கம் முண்டாகிறது.

வேதாந்த மதம், புத்தமதம், ஜைன முதலிய பன்முக முடைய இந்துமதம், மனிதன் அற்பப் பிராணியாயிருந்து அதிலிருந்தும் பெருகினனென்னும் நியாயத்தை அடிப்படி யாகக்கொண்டது. ஒருவஸ்துவே கல், மண், புற்பூண்டு, பற வை, விலங்கு முதலிய பலவகைத் தோற்றங்கொண்டு விளங்கு கின்றதென்றும், எல்லாம் ஆவிர்ப்பாவ சக்தியென்றும், ஒரு பெரும் பந்தத்தால் எல்லாம் ஒன்றோடொன்று பிணிக்கப் பட்டுள்ளன வென்றும், ஒவ்வொரு ஜீவனிலும் பரமாணுப் பிண்டம் முதல், மனிதன் வரையில் எல்லாம் ஒன்றோடொ ன்று அளவில் வேற்றுமைப் படுவனவன்றிப் பொருளில் வேற்றுமை யில்லை என்றும், அம்மதம் அவர்களுக் குணர் த்துகின்றது. கீழினப் பிராணிகளுக்கு ஆத்மாவில்லை மனமில்லை யென்னும் கொள்கையை அது அடியோடு மறுக் கின்றது. ஆத்துமாவும் மனமும் ஒரே காலத்திலுண்டென் றும் புகட்டுகின்றது. எங்கு ஜீவன் உளதோ, அங்கு பிர புத்தியுண்டென்றும், ஆனால் வெளித் தோற்றத்தின் அளவு மட்டும் வேறுபடுமென்றுஞ் சொல்லுகின்றது. அத்தோற் றம் உலோக வர்க்கங்களில் கேவலம் அற்பம். தாதுவர்க்க த்தில் அதைவிட அதிகம். அதைவிட ஜீவவர்க்கத்தில் அதிகம்.

பரமசூட்சுமமான புழுப்பூச்சிக்கும் மனமுண்டு. அதற்கும் வலி தெரிகிறது. அவ் வுணர்ச்சிக்குத் தப்ப வழி தேடுகின்றது. முதிர்ந்த தற்கால சாஸ்திரிகள் அப்படி யில்லையென மறுத்தனரில்லை. 'லி காண்டே' (Le Conte) என்னும் புலவர் இக்கருத்தைத் தமது பிரசங்கங்கள் சிலவற்றில் மிக வற்புறுத்திச் சொல்லி யிருக்கின்றார்.

இதற்கு மேலுள்ள ஜீவவர்க்கப்படியை நாம் பரிசோதிக்கும்பொழுது, மிகப்பருத்து வளர்ந்த உடம்புகளில் இவ் வுணர்ச்சியும், அறிவுமிருப்பது நன்றாகத் தெரிகிறது. போகப் போகத் தனித்தனித் தோற்றமுஞ் சுழலுமுள்ள மனித சரீரத்தில் எல்லாவற்றிற்கும் மேலாகத் தெரிகின்றது. இப்பிராணிகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியே ஜீவனுண்டு: இருப்புண்டு: "நான்" என்னும் அறிவு உண்டு: இன்பதுன்ப உணர்ச்சியுண்டு: யாவும் சாவைக்கண்டஞ்சும்: உயிர்வாழ மன்றாடும்; இவைகள் ஒவ்வொன்றிலுமுள்ள ஜீவ வித்து, ஆவிர்ப்பாவப் பல படிகளின் வழியே சிறுகச் சிறுகச்சென்று, கடைசியாக, மனித உரு எடுக்கின்றது. உயிர் நமக்கெப்படி அருமையோ அப்படியே திரியக்கு ஜந்துக்களுக்கும் அருமையென ஆரியர்களது சுருதி முதலியன கூறுகின்றன. நமக்குச் சாக எப்படி மனமில்லையோ, அப்படியே அவைகளுஞ் சாவைக் கண்டு நடுங்கிச் சுருங்குகின்றன. "இன்பம் வேண்டி எந்தப் பிராணியையுங் கொல்லாதே; பிரகிருதியிலுள்ள எல்லாவற்றிலும் ஒற்றுமையான உயிருள்ளது எதுவானாலும், அதற்கு அனுகூலியாயிரு' என வேதம் முறையிடுகின்றது. அதாவது அநாதியான வேதம் "மாஹிம்ஸ்யாத் ஸர்வபூதாநி" என்று ஓலமிடுகின்றது. அதாவது உண்ணவென்

றேனும் வேடிக்கை கருதியேனும் எந்தப் பிராணியையுங் கொல்லாதே." என்பதே.

இராமனது சரிதமாகிய இராமாயணமென்னும் மஹா காவியத்தில், மிருகாதிகளையும் நம்முடன் பிறந்தவர்கள் போலப் பாவிக்க வேண்டுமெனச் சொல்லியிருக்கின்றது. அவைகளால் நாமெய்தக் கூடிய பயன்கள், கவி சாதுரிய மாகவும் வருணித்துச் சொல்லப் பட்டிருக்கின்றன. இரத்த மாமிச சரீரியாய்ப் பூமியில் ராமனென்னும் மனிதாவதார மெடுத்துவந்த ஸ்ரீபகவான், இலங்கைக் காசனான அரக்கன் எடுத்துச்சென்ற தனது உயிர்க்காதலி சீதாபிராட்டியை மீட்க, அவ்வரக்க மன்னனுடன் போர்செய்தார். நானுஜாதி மிருகங்களே அவருக்குப் பெரும்படையாயின. ஆவிர்ப்பாவப் படியில் மற்றவைகளிலும் உயர்ந்து மனிதனுக்கு அடுத்த கீழ்ப்படியிலுள்ள வானரமான அநுமானே அவரது படைத் தலைவன். (ஜாம்பவான் ஆகிய) கரடியே அவருக்குப் பிரதான மந்திரி. மற்ற விலங்குகளே படையாட்களெனவுஞ் சொல்லி இருக்கிறது. மஹா நேர்த்தியாக எழுதப்பட்டுள்ள அக் கதையை அடிமுதல் நுனிவரையிற் படிக்கும் எவனும் எந்தப் பிராணியிடமும் அன்பிலாதிரான்: கொடுமையாயிரான்: என்றால், அவைகளைக் கொல்லானெனச் சொல்லவும் வேண்டுமோ?

ஆரியர்களுக்குள் காய் கறி உண்ணும் பழக்கமுண்டு பண்ணியது புத்தரென்று மேனாட்டோர் எண்ணியிருப்பது தவறு; அது முற்றுந் தவறு. அக்காலத்திலுள்ள ஆரிய இருடிகளிற் சிலர்மட்டும் அநுஷ்டித்து வந்த கொல்லாவிரதத்தை ஜனங்களெல்லோரும் அநுஷ்டிக்கும்படியாய்ப் புத்தர் உப

போதித்தார். யாகாதி கிரியைகளிற் செய்து வந்த பிராணி வதையும் உதவாதென வாதித்தார். மாமிசமுண்ண வேண்டு மென்ற எண்ணத்துடன் அப் புரோகிதர்கள் பிராணிவதை செய்யவில்லை. அக்கிரியைகளாற் றேவர்களுக்குத் திருப்தி யுண்டாக்கினுல், அவர்களது அருளால், சுவர்க்காதிபத்திய முதலியன கிடைக்குமென்றும், சத்துருக்களை வெல்லலாம் என்றும் எண்ணி யிருந்தார்கள். நிற்க.

பிழைப்புத் திண்டாட்டமாகும் பொழுது ஒரு பறவை மற்றொன்றைத்தின்பதுபோலவும், மாமிசபட்சணிகள் மற்றப் பிராணிகளைத் தின்பது போலவும், ஒன்று மற்றொன்றைத் தின்னவேண்டுவது முறையென்றும், அதனால் நாம் புலாலு ண்ணுவது முற்றுஞ்சரியென்றும் சிலர் சொல்லுகின்றூர்கள். உலகியலைப்பார்க்கும் பொழுது, இந்த நியாயஞ் சரி யென்று சொல்லும்படி தோன்றுகின்றது; ஆனால் இந்த நியாயம் திரி யக்கு ஜந்துக்களுக்கு மட்டும் பொருந்தும். அந்த நியாயத்தை மிருக நியாயமென்றே சொல்லலாம். அவைகளினும் மேலோ ரான நமக்கு மேலான விதிகளிருக்கின்றன. ' மிருக பக்ஷிக ளிடம் விளங்காதனவும் மனிதனிடமட்டுமே விளங்குவனவு மான நீதி விதிகளும், ஆசார விதிகளும் இருக்கின்றன. இவ் விதிகளுண்டென நாம் ஒப்புக்கொள்ளாமல் மறுப்போமானுல் விலங்கின் தன்மைக்கு மேற்றன்மை ஒருபொழுதும் நாம் எய் தோம். ஜீவர்கள் எல்லாவற்றினும் மனிதன் மேலாய் நிற்பது, விலங்கு பறவைகளுக்குள்ள அதே குணங்கள் அவனிடம் அதிகமா யிருக்கின்றன என்பதற்காக வன்று. ஆனுல், நீதி லக்ஷணத்தாலும், தெய்வத்தன்மையறியும் லக்ஷணத்தாலும் அர்தஜந்துக்களை அடக்கியாளுந்திறமை இருப்பதனுலேயாம்.

எவனிடம் நீதி லக்ஷணமில்லையோ, ஆத்தும லக்ஷணமில்லையோ, அவன் இழிந்த விலங்கினும் மேலானவ னல்லன். மகா இழிந்த ஜந்துக்களுக்கும் கீழிழிந்து செல்லுந்திறமையும், ஆத்ம லக்ஷணம் அறியும்படியான மேற்பதவிக்கு உயர்ந்து செல்லும் வல்லமையும், மனித னொருவனுக்குத்தான் உண்டு. அவனது தேவாம்சத்தை அவன் தெளிய வெளிக்காட்டலாம். உற்றுணர்வோமானல், சுருக்கிச்சொல்லின், எல்லா நன்மையும் உருக்கொண்டு விளங்குவதுபோல் அவனிருக்கலாம். அதே மனிதன் தான் செல்லுமிடமெங்கும் நாசம், கொலை, கலகம், விலங்கியற்குக்கொடுமை இழைக்கலாம். அவனே உபகாரம், நன்மை, சாந்தம், அன்பு, அனுக்ரகம் இவைகளும் உண்டாக்கலாம். அந்தச் சக்தி விலங்கினியல்கொண்டு செல்லும் போது சங்காரஞ்செய்யும் பேய்க்குணமாகிறது. உத்தம குணமும் அன்புங்கொண்டு செல்லும்போது உலக ரஞ்சினியாகிறது.

கசாப்புக்கடைக் கொலைக்காரர்களது மனநிலைத்தாழ்வை யோசித்துப்பார். ஓயாது கொலைத் தொழிலைக் கையாளுவதால், அவர்களது நல்லுணர்ச்சிபோய் வர வரக் கன்னெஞ்சினராய் விடுகிறார்கள். ஆதரவற்ற பிராணிகளை எந்தக் கத்தியாற் கொல்லுகின்றார்களோ அதே கத்தியை, தம் இனத்தராய மனிதர்களது நெஞ்சிற் பாய்ச்சக் கூசார்கள். சிகாகோவிலுள்ள கசாப்புக்கடைகளே பூமியிலுள்ள எல்லாவற்றினும் முதன்மையானவைகள். கொலைத்தொழிற் கென்றே பழகிய சண்டாளர்கள் கையால் மாதந்தோறும் பல்லாயிரம் பிராணிகள் வதையுண்கின்றன. கொலையாளிகளிற் பெரும்பான்மையோர் கசாப்புக் கடைக்காரர்களாகவே இருப்

பார்கள். அவர்களது இந்த மனநிலைத் தாழ்விற்கும், அவர்கள் செய்யும் பழி பாவங்களுக்கும் யாரை நாம் குற்றஞ்சாட்டுவது? இறைச்சி யுண்பவர்கள் அவ்வுணவினுலாகும் இப்பயனைச் சிறிதேனும் யோசிக்கிறுர்களா? இவைகளைக் கேட்க அவர்களுக்கு அங்கங் குலைவதால் அவைகளைக்கேட்கவேனும் நினைக்கவேனும் அவர்களுக்குப் பிரியமில்லை. அக்காட்சிகளைக் காணவும், அவ்வார்த்தைகளைக் கேட்கவும், மனம் பொருது கண் காதுகளைப் பொத்திக் கொள்ளுகின்றுர்கள். உண்மையை ஆராயின் இறைச்சி தின்பவர்களே இப்பழி பாவங்களுக்கெல்லாம் உத்தரவாதிகள். அக்கொலையாளிகள் செய்யும் எல்லாத் தீச்செயல்களுக்குந் தின்பவர்களும் முக்கிய காரணமாயிருக்கின்றுர்கள். அவர்களது மனத்தாழ்விற்கு இவர்களே காரணம். இறைச்சியுண்போர் இலையேற் கொலையாளிகளுமில்லை. ("தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும், விலைப்பொருட்டால் ஊன்றருவா ரில்.") செந்நீர்க் கையுடைய கொலையாளி யொருவனை, மெல்லிய ளொருத்தி கண்டால் தலைநடுங்குவாள். ஆனுலும், அவன் கொலை பாதகத்திலும், இழிவிலுந் தனக்குமொரு பங்குண்டென்பதையும் அவள் நினைக்கவேண்டும். தன் உணவிற்கென்று தன் கையாலொரு பிராணியை வதைப்பாளாயின் அவள்பழி சிறிது குறையும். எப்படியெனின், வேறொருவன் தன் பொருட்டுக் கொடிய பழிகாரனுகாபல் அவள் தடுப்பள். கொலையாளிகள், பாவிகள், கொடியர்கள் என்ற வசைச் சொற்கள் எந்நாட்டிலுமுண்டு. இந்தியாவில், மேன்மக்களிருக்குமிடத்துக் கொலையாளிகள் தலை நீட்டக்கூடாது. ஒருவனைக் கொலைகாரன், சண்டாளன் என்று சொல்லித் திட்டுவதைவிடப் பெருஞ்சாபம் அவனுக்கில்லை. கொலைகாரர்கள்

பிராணிகளைக் கொல்வதிலேயே பழகிவருவதால் அவர்களது மனமுங் குணமும், மரத்துப்போயிருக்குமென்றெண்ணியே அத்தொழிலுடையோர் ஜூரிகளாயிருக்க வொண்ணாது என, ஐக்கிய நாட்டிற் சில மாகாணங்களில் விதித்திருக்கின்றார்கள். சுவைமிக்க இறைச்சித் துண்டொன்று பந்தியிற் பரிமாறியிருக்கக் காண்பவர்கள், கொலைச்சாலையிலிருந்து சமையற்சாலைக்கு இறைச்சி கொண்டுவரப்பட்ட விதத்தைச் சற்றுமனதால் நினைப்பாரேல், (இறைச்சி தின்பவர்களுக்குக் கொஞ்சமாவது இரக்கமிருக்குமாயின்,) அவர்களில் மூன்றிலிரண்டு பகுதியார் அந்த நிமிஷமே அவ்வுணவைத் தள்ளிப் போடுவாரென்பதில் ஐயமில்லை. எனக்குத்தெரிந்த அமெரிக்க நண்பரொருவர், சிகாகோ கசாப்புக்கடைச் சாலைகளை ஓர் முறைபார்த்து அங்கு நடக்குங் கொலை, கொடுமை, பழி பாதகங்களைக் கண்டு மனநடுங்கி யுருகி, அன்றுமுதல் இறைச்சியுணவை விட்டுவிட்டார். புலாலுண்பவன் எவனும் அப்பழி பாவத்திற்குத் தானுத்திரவாதியில்லை யெனச் சொல்ல முடியாது. உலகோரது மனத்தாழ்விற்கும் மானத் தாழ்விற்கும் தானுமொரு பங்காளியாகவே வேண்டும்.

இறைச்சி யுண்பவர்கள் மரக்கறியுணவைக் குறித்துப் பலவித ஆட்சேபஞ் சொல்லுகின்றார்கள். இறைச்சியுண்ணாத முறையில், பிராணிகள் பூமியெல்லாம் பல்கிப்பெருகி விடுமென்கிறார்கள். ஆடு, மாடு, பன்றி, கோழி முதலிய உண்ணப்படும் பிராணிகளைக்குறித்து என்ன வாத நியாயஞ் சொல்லுகின்றார்களோ அதே வாதநியாயம் உண்ணப்படாத பிராணிகளாகிய குதிரை, கழுதை, நாய், பூனை, எலி முதலிய பிராணிகளைக் குறித்துஞ் சொல்லலாமே? ஆரியவர்த்தத்தில் ஆரி

யர்கள் பசுக்களைக் கொல்வதில்லை. அப்படியிருந்தும் அவைகள் அளவு மீறிப் பல்கவில்லை. ஆங்கிலேய அரசாட்சி இந்தியாவிற்கு வருவதற்கு முன் இந்தியாவில் கசாப்புக் கடைகளே கிடையா. இப்பொழுதும் சுதேச அரசாங்கத்திற் குட்பட்ட நாடுகளில் காட்டுவிலங்கு பறவைகளையுங் கூடக் கொல்லக் கூடாதென்று கடுமையான சட்டங்கள் உண்டு. ஆனாலும், இந்நாடுகளில் காட்டுப்பிராணிகள் அளவிறந்து பல்கவில்லை. அவைகளால் ஜனங்களுக்கு இம்சையுமில்லையே!

பூர்வம், சிகாகோ வாசியாகிய டாக்டர் பாரோஸ் என்னும் அமெரிக்கப் புலவர் ஒருவர் சிகாகோவில் அடிமாடுகளாகக் கொழுக்க வளர்க்கப்படும் மாடுகளைவிட, இளைத்து மெலிந்துள்ள சில எருதுகளை வாரணாசி நகர்த் தெருக்களிற் கண்டதாகப் புது ஆர்க்நிஸ் பிரசங்கமொன்றிற் சொன்னார். அவைகளைக்காண அவருக்குத் தண்ணீராக மனம் உருகியது. இப்படி அரைத்தீனி தின்று அல்லது போதுமான தீனியின்றி வாழும் மாடுகளிருப்பதைவிட அவைகளை உணவின் பொருட்டுக்கொல்வது நலமாகுமென்றார். அவரது ஜீவகாருண்ணியக் கோட்பாடு வியக்கத்தக்கதே. நாம், மீன் தின்னுமற் போனாற் கடலெல்லாம் சீக்கிரம் மீன் குவியலாய் விடுமெனவுஞ் சொன்னார். கடல் மீன்கள் குறையவேண்டுமென என்னபாடுபட்டு மீன்களை நாம் வாரி வாரித் தின்றாலும், அவைகளது பிறப்பையும், இருப்பையும் சமப்படுத்திக்கொண்டுவர ஈசனாணையில்லாவிடின் நம் பாடெல்லாம் வீண் பாடாகும். ஆனால் இவ்வித விரதங்களும் நியாயங்களும் பேசுவது புலாலுண்ணும் பழக்கமுள்ளவர்களுக் கியல்பே. புலாலுண்ணாவிடின் மனிதன் பலமற்று, வேலைக்குத்

தகுதியற்றுக், துணிவுந் தைரியமுமின்றி ஆகி விடுவானென் பது வேறு சிலரது அபிப்பிராயம். இஃதோர் பெருமதிக் குறைவு. இந்தியப் படையில் சீக்கிய காலாட்படை யிருப் பது நீங்கள் அறிவீர்கள். இங்கிலீஷ்ப் படையினுள் அவர் களைவிட வீரமுள்ளோரில்லை; பலவான்களில்லை; சண்டைக் களத்தி லொருபொழுதும் அவர்கள் புறங்காட்டுவதில்லை; கைச் சண்டையில ஒரு சீக்கியன் இறைச்சி தின்போர் மூவ ருடன் எதிர்த்து நிற்பான்; ஆனால் இவ்வீரர்கள் இறைச்சி யுண்பதில்லை. மீனுண்பதில்லை; மதுபானஞ் செய்வதில்லை; சுருட்டுப் பிடிப்பதில்லை: முற்றுஞ் சாகபட்சகர்கள். 'ஓட்டு' என்னுந் தானிய உணவுண்பதால் கோடிக்கணக்கான ஸ்காட் மென்கள் நோயற்றுப் பலமுற்று, வீரமெய்திப் புத்திமான் களாகவும் இருக்கின்றார்கள். ஜர்மனியில், ஏழு மல்லர்களு க்குள் நடந்த பந்தயத்தில் அவர்களில் சாகபட்சகனை ஒருவனே மற்றவர்களை வெல்லக் கூடுமெனக் கண்டு கொண்டார்கள். சாகபட்சணத்தால், பொறுமையும், மித வுணவு முண்டாகும். மூர்க்கத்தனம், படபடப்பு, துடுக்கு இக்குணங்களை வீரமென்றும், பலமென்றும் ஜனங்கள் தாறு மாறாக என்னுகின்றார்கள். இம்மனிதர்கள், புலி, ஓநாய், இவைகள், குதிரை, எருமை அல்லது யானை, இம்மிருகங் களினும் வலியுள்ளவை யென்கின்றார்கள். வீரமுள்ளதா என்றறிய மூர்க்கத்தனம் வழி யென்கிறார்கள். ஒரு குதிரை யை ஒரு புலி கொல்லக் கூடுமென்பது உண்மையே. ஒரு வனது பலத்தையறிய மூர்க்ககுணம் பிரதானம் ஆய் விடுமா? நெடுந்தூரம் ஒரு பெரும்பாரச் சுமையை இழுத்துச் செல்லும் தசைவலி அப் புலிக்குண்டோ? ஒரு புலி

யானையைக் கொல்லக்கூடும். ஆயிரம் பவுண்டு நிறையுள்ள ஒரு பீரங்கியைத் தூக்கும் வல்லமை அதற்குண்டோ? மூர்க்கத்தனம் ஒரு பகுதி; தசைவலி ஒரு பகுதி. இரண்டிற்குமுள்ள வித்தியாசம் நாமறிய வேண்டும். வலியுண்டாவது தாதுவர்க்கத்தாலன்றி இரத்தமாமிசத்தாலன்று. தசைவலியுண்டாவது புலாலுண்பதனு லென்போமானுல், மனிதர்கள் மாமிசபட்சணிகளது மாமிசத்தை விரும்பாது சாகபட்சணிகளது மாமிசத்தை என் விரும்புகிறூர்கள்? சாகபட்சண சத்துப்பாகமெல்லாம் மாமிசத்திற் சுருக்கி யடக்கி வைக்கப்பட்டிருக்கிற தெனப் புலாலுண்போர்கள் சொல்லுகிறூர்கள். புலாலுண்பதற்கு இஃதோர் காரணமாயின், மாமிசபட்சணிகளான புலி, ஓநாய் கழுகு முதலிய விலங்கு பறவைகளின் மாமிசத்தையே அவர்கள் உண்ணவேண்டும்.

விலங்கினத்தில் மாமிச பக்ஷணிகள், சாகபக்ஷணிகளினும் அதிக அலைப்புள்ளவைகளாக இருப்பதுபோல், மனிதர்களுள்ளும், காய்கறி உணவினரைவிடப் புலாலுணவினர்கள் அதிக அலைப்புள்ளவர்களாகவும், தன் வசமானவர்களாகவும் இருக்கக் காண்கிறோம். சாந்தமும், சமமும், சுவாதீனமும்(அல்லது தன்னடக்கமும்)உள்ள குணமே, ஆத்தும லக்ஷண அறிவிருப்பதற்கு முதற்குறியாதலால், அவ் வறிவு விருத்திக்குப் புலாலுணவு சிறிதேனும் உதவியாகாதென்பது திண்ணம். இறைச்சி தின்பவர்கள் ஒரு விஷயத்திலும் மனத்தை ஒருமுகப்படுத்த முடியாமற் போவதற்கு இது தான் காரணம். தமது ஆத்துமலக்ஷணம் தெய்வ லக்ஷணம் இவைகளைக்குறித்துத் தியானஞ்செய்ய அவர்களால் முடியாது. ஆத்துமலக்ஷண இரகசியத்தை அறிந்துள்ள ஆரி

யர்கள் இதனுற்றான் இறைச்சி உணவு உதவாதென்கிறார்கள். ஆத்துமலக்ஷண ஞானம் முற்றுப்பெறுவதற்குத் தமது வாழ்வையும் மனத்தையுஞ் செலுத்தும் ஆரியர்களே யோகிகள் எனப் படுவார்கள். ஆத்துமலக்ஷண ஞானம் பெறுவதற்குக் கொல்லாவிரதம் வேண்டுமென்பதும், உணவின்பொருட்டேனும் பிராணிவதை செய்வது ஆத்மலக்ஷண ஞானத்திற்கோர் பெரிய இடறுகட்டையென்பதும் அவர்கள் கோட்பாடு. இதுவுமன்றி, பிராணிவதை செய்வதையும் அல்லது பிராணி இம்சை செய்வதையும் மூன்று வகுப்பாகப் பிரித்திருக்கின்றார்கள். அவைகள்:—"செய்தல்" "செய்வித்தல்" "சம்மதித்தல்" என்பவைகளாம். அதாவது, ஒரு பிராணியை நானே வதைக்கலாம். யோகிகளது கொள்கைப்படி நான் செய்தவனாகிறேன். இரண்டாவது, வேறொருவனைக்கொண்டு செய்விக்கலாம். மூன்றாவது, கசாப்புக்கடைக்காரனிடமிருந்து வாங்கும்பொழுது, அவன் செய்வதற்கு நான் சம்மதித்தவனாகிறேன். வதை கூடாதென்பவன் வதைக்கக் கூடாதென்றும், வேறொருவனைக்கொண்டு செய்விக்கக்கூடாதென்றும், வேறொருவன் செய்வதற்கும் சம்மதிக்கக்கூடாதென்றும் அவ்யோகிகளது மதம். யோகியொருவன் வதைக்கவும் கூடாது, இம்சிக்கவும் கூடாது என ஏற்பட்டால், அவனை யெவனும் இம்சியான்; புலி பாம்புகளும் இம்சியா. புலி பாம்புகளை இம்சிக்க வேண்டுமென்ற எண்ணம் நமக்குண்டாவதால், நம்மை அவைகள் இம்சிக்கின்றன. இந்தியாவில் இந்த உத்தம தர்மத்தைச் சிறிதுங் குறைவின்றி அவ்யோகிகள் பரிபாலனஞ்செய்து, திரியக்கு ஜந்துக்களிடமும் அதைச் செலுத்திவர, அஃதெங்கும் விலக்கிலாப் பொதுவிதி

யாயிற்று. யோகிகளது சந்நிதியில் கொடுவிலங்கு முதலிய ஜந்துக்களும் சாந்தமாயடங்கி, அவர்களுக்குப் பணிவிடையுஞ் செய்கின்றன. ஆண்பாலர் பெண்பாலரிருவருள்ளும் பூர்வகாலத்திருந்த மகான்களது இந் நிலையைப் பதுமைகளிலும் படங்களிலுங் காணலாம். யோகிகளுக்கு யோகியான சிவபெருமான் கழுத்திலும் சிரசிலும் உடம்பிலும் விஷப் பாம்புகளை ஆபரணமாக அணிந்திருக்கிறார். பெண்யோகியாகிய துர்க்காதேவி கொடிய புலி சிங்கங்களது முதுகில் வீற்றிருக்கிறாள். அவ்வித யோகிகளுக்கு உண்மையில் சத்துருக்கள் இல்லை.

ஆத்தும லக்ஷண அறிவுமுதிர்ந்த ஓர் ஆரியன் இறைச்சியை வெறுப்பதற்கு மற்றோர் காரணமென்னவெனின், மாமிசவுணவும் மதுவுணவும் ஒன்றைவிட்டொன்று பிரியாதவை. இறைச்சி உணவைச் சீரணிக்கச் செய்வதற்குச் சாராயம் முதலிய லாகிரித் திராவகங்கள் வேண்டுமாதலால், அநேகர்களுக்குக் குடிப்பழக்கம் உண்டாகிவிடுகிறது. குடியால் வேறு பல விதத் துர்குணங்களுண்டாவதால், மரக்கறியுண்ணுவதில் இவ்விதத் தீக்குணமெலலாம் அணுகா; இலகுவாய் விலகும் என்பது ஆரியரது கொள்கை. இந்துக்களுக்குச் சாராய முதலிய இலாகிரிப் பண்டங்களிடத்தும் வெறுப்பு. மேற்குல ஆரியனொருவன் பலரறியக் குடிக்கப்போவானேல், அல்லது பலரறியக் குடிப்பானேல் அவன் ஜாதிப்ரஷ்டனாவான். ஆரிய ஸ்திரீகள் சாராயத்தைக் கையாற்கூடத் தீண்டுவதில்லை. மேனாட்டு நகரத்தெருக்களில் குடிவெறிகொண்ட மகளிரைக் காணக்கூடியது போல, இந்துப் பெண்களுள் ஒருவரையேனுங் காண்பதரிது. பெருநகரங்களிற் பகிரங்க மதுபான

சாலே உதவாதென்று இந்துக்கள் விதித்தார்கள். ஆங்கிலேய அரசாங்கச் சாராய வியாபாரத்தின் இழிந்த வாசனையால், சில நகர்களில் அநேகம் சாராயக் கடைகள் இப்பொழுது இருக்கின்றன. சாராயவியாபாரமும், அபின் வியாபாரமும் சரியென்று ஒரு நாகரிகமுற்ற ஜாதியார் எவ்வாறு ஒப்புவதென இந்துக்களுக்குத் தெரியவில்லை. கிராமங்கள்தோறும் சாராயக் கடைகளுண்டாக்கிச் சொற்பவிலைக்குச் சாராயம்விற்று, கூலிவேலைக்குக் கையாலுழைத்துப் பாடுபடும் ஏழைஜனங்களுக்குக் குடிப்பழக்க முண்டாவதும், தெள்ளறி வுடையோரை விலங்கினர்களாகச் செய்வதும் எப்படியென்பதும் அவர்களுக்குத் தெரியவில்லை. ஆங்கிலேய அரசாட்சி வந்ததன்பின், இந்துக்கள் நல்லொழுக்கத்திலுயர்ந்தனரா ? என்று அநேகர் என்னை அடிக்கடி கேட்கிறார்கள். இந்தியாவில் நடக்கும் சாராய வியாபாரம் அபின் வியாபாரம் இவைகளாலாகும் இழிபய னின்னதென அவர்கள் அறிந்திருப்பரேல், கிறிஸ்து மதப் போதகர்கள் செல்லுமிடமெல்லாம் சாராயக்குப்பியும் பிராந்திக்குப்பியும் அவர்களைவிட்டுப் பிரியாது செல்வதையும் அவர்கள் அறிந்திருப்பரேல், இக்கேள்விகள் கேட்கமாட்டார்கள். மாக்கறியுண்ணும் ஓர் இந்து, மருந்தாகவேனும் சாராயத்தைத் தீண்டான்.

இவை யெல்லாவற்றிற்கும் மேலாக ஆரியர்கள் சாக பட்சகரா யிருப்பதற்குப் பிரேமை (அல்லது அன்பு) யுங் காரணம். பிரேமை யென்றால் எல்லாமொன்றென் றுணர்த்துவ தாகும்; எல்லா மொன்றென்ற காரணத்தாலேயே இந்துக்கள் தாழ்ந்த பிராணிகளிடமும் பிரேமையாயிருக்கிறார்கள்.

எல்லாவுயிர்களும் ஒரு பரம்பொருளின் பலவகைத் தோற்றமென்ற அறிவு அனுபவத்திற்கு வரவேண்டுமென் பதே அவர்கள் கருத்து. நம்முள் அந்தரியாமியாயிருந்து ஞானஒளியால் அஞ்ஞான இருளகற்றும் அந்தப் பரமாத்மா வே, திரியக்கு ஜந்துக்களுள்ளும் அந்தரியாமியா யிருக்கிறார். "சகோதரபாவம்" என்ற வார்த்தைபோல், அவர்கள் கொண் டுள்ள அபிப்பிராயம், தெளிவற்ற பொருளற்ற வெற்று வார்த்தை யன்று. தாழ்ந்த பிராணிகளும், எந்த உயிருடை ஜந்துவும் நாமும் ஒரே ஜீவஸ்வரூபங்களென்று அனுபவத்தில் அறியவேண்டு மென்பது அவர்களது அபிப்பிராயம். எல்லா வற்றுள்ளும் ஒரேஜீவன் இயங்குவதால்,"எவ்வுயிரையுந் தன் னுயிர்போற்கருதி நேசி" என்பது அவர்கள் மதம். [ரூத்வ த்வ-ஷ-ஞதாமி டஃவஶ்ஶ்ரதிஷவஶ்ரிகி] "உன்னுளுள்ள ஜீவாத்மாவை அறி: பிறகு, எங்கும் அதே ஜீவன் இயங்கு வதை யறிவாய். எங்கும் விளங்குவது ஒரே ஜீவ சொரூப மென அனுபவித்தறியுமொருவன் ஒரு ஜீவனால் மற்றொன் றைக் கொல்ல முடியாது." அவனுக்கு அகங்காரமில்லை. எவருக்கும் உதவிபுரியச் சந்நத்தனாயிருப்பன். உணவின் பொருட்டேனும் சுகத்தின்பொருட்டேனும் ஜீவவதை செய் பவன் அகங்காரியாவான். மற்றப் பிராணிகளது உரிமையை மறப்பதற்கும், தீங்கற்ற அவைகளைக்கொன்றோ, இம்சித் தோ, அல்லது அவ்வுரிமையைப் போக்கியோ நம் மூளை

வளர்க்கவும்-அம்மட்டோ-வேடிக்கைபார்க்கவும் வழிதேடுவ தற்கும் இந்த அகங்காரந்தான் காரணம். இவ் வகையகங் காரமே துர்எண்ணங்களுக்கும், துர்நடத்தைக்கும் பிறப் பிடம். எதனால் நாம் அகங்காரிகளாவோமோ, விஷயவாசனை களில் எதனால் நமக்காசையுண்டாகின்றதோ, அவையெல் லாம் இழிந்தவைகள்; கெட்டவைகள். அகங்காரத்தை விடுவதற்கு நமக்கு வழிகாட்டிகளெவையோ, அவையெல் லாம் மேம்பாடுடையவைகள்; நல்லவைகள். ஜீவனென்றென் பதை நாமறிய முடியாமல் எது செய்கின்றதோ, அது பிசகு (தவறு); நமக்கு ஆத்மலக்ஷணஞானமுண்டாகித், திரியக்கு ஜந்துக்களது மூலமாகவும் ஜீவன் பிரகாசிக்கின்றதென்பதை நமக்குணர்த்தி, நம்மைப்போலவே அவைகளிடத்தும் அன் பை யுண்டாக்குவது எதுவோ அதுவே தெய்வத்தன்மையா னது.

நாமுட்கொள்ளும் எந்த ஆகாரமும் மனது சரீரமிரண் டிலும் மாறுதல்களுண்டாக்குகின்றது. புலாலுணவால் வரும் மன அலைவை ஊன்றிக் கவனிப்பவர்கள், சித்த சுவாதீன முண்டாகவேண்டுமெனப் பாடுபடுவார்கள். இவர்கள், அப் புலாலுணவை விடாதவரையில் காமம், குரோதம், மனச் சஞ்சலம் இவைகளைப்போக்குவது அரிது என அறிவார்கள். சாகபீட்சணம் பண்ணுவது எதற்கு எனப் பலவகையினும் ஆராயின், ஆரியன் சாகபட்சகனுகான்; புலாலுண்பது சரி யெனவுஞ் சொல்லான்.

தபாற்சாலை ஏற்பாடு.

Postal System.

அன்பருள் வாய்ந்து நம்மை ஆளும் ஆங்கில அரசாட்சியால், நமது தாய் நாடாகிய இந்தியா தேசம் அளவிறந்த நன்மை அடைந்திருப்பது யாவரும் அறிந்ததொன்றே. இந்நன்மைகள் பலவற்றுள்ளும் அதி முக்கியமானதும், ஆள்வோர்க்கும் ஆளப்படுவோர்க்கும் அதிகப்பிரயோஜனம் ஆனதும், லாபகரமானதும், யாவராலும் அபிப்பிராய பேதமின்றிப் புகழப்படுவதும் "தபாற்சாலை ஏற்பாடு" ஒன்றே ஆகும்.

ஆதியில் இந்தியாவில் தபாற்சாலை இருந்ததில்லை. இந்தியாவில் மட்டுமேன்? எங்குமே அஃதிருந்ததில்லையென்று துணிந்து உரைக்கலாம். இஃதில்லாதிருந்ததற்குக் காரணம் அறியக் கஷ்டமில்லை. முற்காலத்தில் மனிதர்கள் இப்போதையினும் எவ்வளவோ மடங்கு ஜனத்தொகையிற் குறைந்திருந்தனர். அவர்கள் தம் இனத்தாருடன் ஆதியில் ஓரே கிராமத்தில் வசித்து வந்தனர். அவர்களுடைய தொகை வரவர அதிகரிக்க ஆரம்பிக்கவே, அவர்களிற் பலர் அக்கம் பக்கத்துக் கிராமங்களில் வசிக்கலாயினர். அப்பொழுதும் அவர்களுக்குத் தபாற்சாலை அநாவசியமாகவே இருந்தது. ஏனெனில், அவர்கள் பரஸ்பரம் தம் க்ஷேமலாபங்களை நேரிற் போயும் ஆங்காங்கு சென்று திரும்பும் உற்றோர் உறவினர் மூலமாகவும் அறிவர். செல்வவான்களாய் இருப்போர் தம் "வேட்டியார்"கள் மூலமாக வேற்றூர் விஷயமும் அறிவர்.

பாமர ஏழைகளாயிருப்போரும், பணக்கார லோபிகளும் தம் இனத்தாரைப் பற்றிய க்ஷேமலாபங்கள் தெரியாவிடினும், அவர்களைப்பற்றிய அசுப சமாசாரம் எட்டாமலிருக்கும்வரை அவர்கள் க்ஷேமமாக இருப்பதாகவே யெண்ணி மகிழ்வர். இக்காலத்தில் கிராமாந்தரங்களில் உள்ளோர்க்குத் தந்தி போனால் அவர்கள் தொந்தி கலங்குவதுபோல, முற்காலத்திலேயும், கடிதம் பெற்றே வழக்கமில்லாத இன்னோர்க்கு, "வெட்டியான்" அல்லது வேற்றாள் மூலமாக 'நறுக்கு' அல்லது சமாசாரம் கிடைக்குமாயின், அது "இழவோலை" யோ, விசனம் விளைக்கும் வேறு எவ்விஷயமோ என்ற பீதியைத் தரும். பெரும்பாலும் அவர்கள் எண்ணம் பொய்க்காது.

இந்த வழக்கமும் சமாதான காலத்தில் தான் அனுஷ்டானத்தில் இருந்தது. யுத்த காலங்களில் சமாசாரப் போக்குவரவுக்காகப் புறாக்களைப் பழக்கி அவற்றின் கழுத்தில் காகிதம் அல்லது ஓலைகளைக் கட்டிக் குறித்த இடங்களுக்கு அனுப்பி அவற்றின் மூலம் சங்கதிகளை அறிந்தும் அறிவித்தும் வந்தனர். நானா அரசாங்கத்தினரும், ராஜகலகம் யுத்தம் முதலிய அபாயகரமான காலங்களில் இம் முறையைக் கையாடிவரும் விஷயம் இன்றும் நன்கறியலாகும். நிற்க.

இவ்வாறு அக்கம்பக்கங்களில் உள்ள கிராமங்களில் வசித்தோரும், நாளடைவில் ஜனத்தொகையில் பன்மடங்கு பல்கிபதினாலும், தாம் வசிப்பதற்கு இடமும், தம் ஜீவனோபாயத்திற்கும், அறிவு விசாலத்திற்கும், தேகாரோக்கியத்திற்கும் ஆவசியகமான பொருள்களும், தமது உறைவிடம் ஒன்றிலேயே பெற முடியாமற் போனபோதிலும், இவை

போன்ற பிறகாரணங்களாலும், வேறு தூரதேசங்களிற் சென்று ஆங்குக் குடியேறி வசிப்பது இன்றியமையாத தொன்றாயிற்று. "தூரதேசம்" என்றால் 'இந்தியாவுக்கும் அப்பால்' என்று எண்ணற்க. இரண்டொருநாள் பிரயாணம் பிடிக்கும் இடமென்றே கொள்க. முற்கூறிய எல்லாக் காரணங்களிலும் ஊர்விட்டுஊர் போவதற்கு அதி முக்கிய காரணம் ஜீவனோபாயமே.

சேவித்தும், சென்றிரந்தும், தெண்ணீர்க் கடல்கடந்தும்,
பாவித்தும், பாராண்டும், பாட்டிசைத்தும்,—போவிப்பம்
பாழின் உடம்பைப் பசியின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம்.

ஜனங்கள் இவ்வாறு தொலை தூரங்களுக்குப் போகவே, அவர்கள் தமது உள்ளக் கருத்தையும், சுபாசுபங்களையும் பரஸ்பரம் அறிவித்துக் கொள்ளவும் தமக்கு வேண்டியவற்றை எளிதிற் பெறவும் இயலாமற் போய்விட்டது. அப்பொழுது அவர்கள் பட்ட கஷ்ட நஷ்டங்களுக்கு அளவில்லை. இக்கஷ்டங்களை நிவிர்த்தித்துக் கொள்ள ஓர் மார்க்கம் கண்டு பிடிப்பது அவர்களுக்கு அவசியமாயிற்று. அவசியம் ஏற்பட்டால் யுக்தி தானாகவே தோன்றுமன்றோ? சின்னாட்களுக்கெல்லாம் ஜனங்கள் தம் கடிதங்களையும் பொருள்களையும் கொண்டு போகவென்றே தனியாக வேலையாட்களை நியமித்து அவர்களுக்குத் தக்க சம்பளம் கொடுத்து வந்தனர். ஆயினும், இவ்வாறு கடிதம் முதலியன போக்குவரவு செய்து வருவதற்குப் பொருள் நஷ்டத்துடன் காலநஷ்டமும் ஆனதோடு வேறு பல இடையூறுகளும் இருந்தன: கடிதம், பொருள் முதலியன கொண்டு போகிறவனைக் கள்வர்கள் வழியில் மட

க்கி அடித்தோ, கொன்றோ அவன் கையிலுள்ளவற்றை அப கரித்துச் செல்லக் கூடும். அல்லது, கடிதம் கொண்டுபோகிற வனுக்கு ஏதேனும் வேறு இடையூறு நேரிட்டாலும் அதிக மாகக் காலம் தாழ்க்கக்கூடும். அல்லது அவனே அயோக்கி யனாக இருந்தால் "அகப்பட்டது லாபம்" என்று அப்பொரு ளுடன் எங்கேனும் எவர்க்கும் சொல்லிக்கொள்ளாமல் கம்பி நீட்டி விடக்கூடும் அன்றோ?

இரண்டொருநாள் பிரயாண தேசங்களுக்குக் கடிதம் பொருள் முதலியன போக்கு வரவு செய்ய இவ்வளவு கஷ்ட மிருந்தது என்றால், இப்போதுள்ளது போல் பல்லாயிரக்கணக் கான மைல் தூரமுள்ள இடங்களுக்குப் போக்கு வரவு செய்ய எவ்வளவு சங்கடப்பட வேண்டியிருக்கும் பாருங்கள்! கஷ் டம் ஒருபுறம் இருக்கட்டும். எல்லாராலுமாவது இவ்வாறு கடிதப் போக்கு வரவு செய்யப்பட்டு வந்ததோ என்றால் இல் லையே! பெரும்போக போக்கியங்களை அனுபவித்து வந்த பணக்காரரே செய்து வந்த காரியம் இது. ஆனால் இப்பொழு தோ, அறிவும் ஆற்றலும்படைத்த நமது அரசாங்கத்தாரது பேருதவியால் நித்திய தரித்திரரும் காலணாவே செலவு செய்து கடிதமும், சொற்பப் பணமே செலவழித்து விலை மிக்க அரிய பொருள்களும் ஆயிரக் கணக்கான மைல்களுக் கப்பாலும் அனுப்பலாகும். அவ்வாறு அனுப்பப்பட்டவை அதி சீக்கிரத்தில் குறித்த காலத்தில் அனுப்பப்படுவோர் கையிற் கிடைக்கும்.

இந்தியாவில் அரசாங்கத்தார் மூலமாக, குடிஜனங்களின் தபால் போக்குவரவு முதல் முதல் ஏற்பாடு செய்தவன் ஷேர்ஷா என்னும் மகமதிய அரசன். அப்பொழுதும் பணக்காரர்களே

அவ்வேற்பாட்டாற் பயன் அடைந்தவர்கள். 1840-ஆ தான் உலகமுழுதும் தபாற்சாலையால் உண்மையிற் பயனடைந்த வருஷமாகும். ஏனெனில் அவ்வருஷந்தான் சகாயமான தபாற் கட்டணம் ஏற்படுத்தப்பட்டது.

சகாயமான தபாற்கூலி ஏற்பட்டதற்குக் காரணம் வருமாறு:—"கோல்ரிட்ஜ்" என்ற ஆங்கில கவிஞன் ஒருவன் ஒரு நாள், ஒரு ஸ்திரீயினிடம், தபாற்காரன் ஒருவன், அவளுக்கு வந்த ஓர் கடிதத்தைக் கொடுத்ததையும், அவள் அதற்கு அக்காலத்தில் விதிக்கப்பட்டிருந்த கூலியாகிய ஒரு ஷில்லிங் (அதாவது முக்கால் ரூபாய்) கொடுக்கத் தனக்குச் சக்தி இல்லாததால், அக்கடிதத்தைப் பாராமலே விசனத்துடன் திருப்பிவிட்டதையும் பார்த்து, மனம் இரங்கி, வெகுதூரம் சென்ற தபாற்காரனை அழைத்து, அவனிடம் அவளுக்காக அக்கடிதத்திற்குச் சேர வேண்டிய ஒரு ஷில்லிங்கையும் கொடுத்து அதனை வாங்கி அப்பெண்ணினிடம் கொடுத்தான். அவள் தபாற்காரன் தலை மறையும் வரை மௌனமாக இருந்து, பின்பு கவிஞனை நோக்கி "ஐயா! தங்கள் அன்பிற்கு வந்தனம். ஆயினும் ஐயோ! அநாவசியமாகப் பணம் செலவழித்ததற்காக விசனிக்கிறேன். ஏனெனில் கடிதத்தைப் பிரித்துப் பாராமலே அதில் உள்ள சங்கதிகளையும் அது இன்னாரிடமிருந்து வந்திருக்கிறது என்ற விஷயத்தையும் நான் அறிந்துகொண்டு விட்டேனே!" என்றாள். கவிஞன் "அஃதெப்படி?" என, அவள், அது தன் சகோதரனிடத்திலிருந்து கிடைத்த க்ஷேம கடிதம் என்றும், மெல்லிய காகிதத்தால் செய்த உறையொன்றில், ஒன்றும் எழுதாத கனத்த வெள்ளைக் காகிதத்தை வைத்து அனுப்பினால் அது க்ஷேம

கடிதம் என்றும், இத்தகைய கடிதம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை தன்னிடமிருந்து சகோதரனுக்கும், சகோதரனிடமிருந்து தனக்கும் போக்கு வரவாகிறதென்றும், இவை முதலான சங்கேதங்கள் தாங்கள் முன்னுக்கு முன்னுகவே செய்து வைத்துக்கொண்டு விட்டதாகவும், ஆனது பற்றியே தான், இருபுறமும் பார்த்துவிட்டு க்ஷேம கடிதம் தான் என்று கண்டு தெளிந்தவுடன் அக்கடிதத்தைத் திருப்பி விட்டதாகவும், இவ்வாறு திரவியச் செலவின்றி வெகு காலமாகக் கடிதப் போக்கு வரவு இருவருக்கும் நடந்து வருகின்றன வென்றும், அக்கடிதங்களில் எழுத்தேதும் இல்லாமையால், அவற்றை அனுப்பியோர் இன்னுரெனத் தெரியாமற்போவதனிமித்தம், தபாற்கட்டணம் வசூலிக்கமுடியாதென்றும்கூறித் தன்பொருட்டு வீணில் அவர் மிகுந்த பொருட்செலவு செய்ததற்காக மீண்டும் விசனித்தாள். இதைக்கேட்டு கவிஞன், "இவர்கள் செய்துவருவது கெட்டிக்காரத்தனமேயாயினும் அயோக்கியமான செய்கையே. இவர்களைப் போல் இன்னும் எத்துணைப்பேர்கள் துரைத்தனத்தாரை வஞ்சித்து வருகின்றார்களோ! இவர்கள் அகப்பட்டுக் கொள்ளாதிருக்கும் வரை சுகந்தான். ஆயினும் "கெட்டிக்காரன் சமர்த்து எட்டுநாள்" என்பதுபோல, இவர்கள் மோசம் என்றேனும் வெளிப்படுமாயின் இவர்களுக்குக் கிடைக்கும் தண்டனை அபாரமே! ஆயினும் இதைப் பார்த்தால் ஏழைகள் பிரதி கடிதத்திற்கும் ஒவ்வொரு ஷில்லிங்குக்கு எங்கே போவார்கள்?" என்று எண்ணி, "இரு கன்றுகளுக் கிரங்கும் ஒரு பசு" ப் போல் ஏங்கினர். இவ்வெண்ணம் அவரை அரை நாழிகை சும்மா இருக்கவில்லை. ஒருநாள் தாம் நேரிற் பார்த்த இச்சம்பவத்தை அவர் தமது நண்பருள் ஒருவனுன ரோலண்ட்ஹில்

என்பவருக்கு அறிவித்தார். செல்வாக்கும் யோசனை சக்தியும் வாய்ந்த ரோலண்ட்ஹில் இதைக்கேட்டு மனம் இளகி, மிகுந்த தீர்க்காலோசனையின் பேரில், "குறைந்த கூலியில் தபால் கடிதம் அனுப்புவதாக இருந்தால், அது, பிரஜைகளுக்கு மட்டுமேயன்றி, துரைத்தனத்தாருக்கும் மிகுந்த நன்மையோடு லாபமும் பயக்கும். ஒருபோதும் அது நஷ்டத்திற்கு ஹேதுவாகாது" என்று கண்டறிந்து, தம் நல் யோசனையை அதிகாரிகளுக்கு அறிவித்து அவ்வாறு செய்யுமாறு கேட்டுக்கொண்டனர். துரைத்தனத்தாரும் இங்கிலாந்தின் பிரதான நகராகிய லண்டனிலிருந்து, ஸ்காட்லண்டின் பிரதான நகராகிய எடின்பரோவுக்குத் தபாற் கூலி அவர் கூறியபடியே ஒரு பென்னி (அதாவது ஒரு அணு)யில் 36-ல் ஒருபங்கு போதுமானது என்ற உண்மையைக் கண்டறிந்தனர். இச்சகாயமான தபாற் கூலி இருதிறத்தார்க்கும் நன்மை பயக்கவே, இச்சுப செய்தி நாகரிகம் பெற்ற நாடுகள் எல்லாவற்றிலும் பரவி, எங்கும் க்ஷேமத்தை விளைக்கலாயிற்று.

1840-ஆம் ஜனவரிமீ 10உ யன்று இங்கிலாந்தில் பென்னி போஸ்டேஜ் என்ற சகாய தபாற்கட்டணம் ஏற்படுத்தப்பட்டது. 1854-ம் ஆடு தான் தூரத்தைப் பற்றிய கவலை யேதுமின்றி தபாற் கூலி விகிதம் அயல் நாடு எங்கும் ஒரேவிதமாக இருப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது.

முன்காலத்தில் கடிதம் ஓர் இடத்திலிருந்து தொலை தூரங்களில் உள்ள தேசங்களுக்குச் செல்ல பல மாதங்கள் பிடிக்கும். உதாரணமாக, இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு முன்பு சுமார் 6 மாதகாலமாவது கழித்துத் தான்

சர்க்கார் தபால்களை கிடைத்துக் கொண்டு வந்தன வென்பதற்குப் பின்வரும் சரித்திர விஷயமே போதிய சான்றாகும். பிரதிதினமும் கிறிஸ்தவஆலயங்களில் அரசனது நீண்ட ஆயுளைக்குறித்துப் பிரார்த்தனை செய்யப்பட்டு வருவது நாம் அறிவோம். முன்பு இங்கிலாந்தை ஆண்ட இரண்டாவது சார்லஸ் மன்னனைக் குறித்து இப் பிரார்த்தனை நடத்தப் பட்டு வருகையில், இங்கிலாந்தில் அவ்வரசன் இறந்து போனான். ஆயினும் அவன் இறந்த சங்கதி இந்தியாவை எட்ட ஐந்தாறு மாதங்களாயின. அவன் இறந்து ஐந்தாறு மாதமாகியும் கிறிஸ்தவாலயங்களில் "நிருபன் சார்லஸ் நீடு வாழ்க!" "நிருபன் சார்லஸ் நீடுவாழ்க!" ("Long Live King Charles! Long Live King Charles!") என மணியடித்துப் பிரார்த்தனை செய்தார்கள் என்று அறிந்திருக் கிறோமன்றோ?

இப்பொழுதோ தபால் முதலிய எல்லாப் பொருள்களும் அஞ்சலாட்கள் மூலம் மட்டுமேயன்றி பரசல், கப்பல், புகைக்கப்பல், இருப்புப்பாதை, டிராம் வண்டிகள், மோடார் ரதங்கள், குதிரைகள், ஒட்டகங்கள், சடையெருமைகள், மானினம் முதலியவற்றின் மூலமாகவும் சிறிதும் தடை படாமல் அதிசீக்கிரத்தில் போய்வருகின்றன. இப்பொழுது இங்கிலாந்துக்குத் தபால் முதலியன இரண்டு வாரங்களிற் போய்ச் சேர்ந்துவிடும். இனி, இதனினும் அதி விரைவில் அதாவது சுமார் 10 அல்லது பதினொரு தினங்களில் இங்கிலாந்துக்குத்தபால் போய்ச்சேரும் விஷயத்தை நாம்இன்னும் 5 வருஷம் உயிரோடிருப்பின் காணலாகும். ஏனெனில் கடல்மார்க்கம் தொலையெனக் கண்ட நானா அரசாங்கத்தா

ரும் தரை மார்க்கமாக பர்ஸியன்–பாக்டாட் இருப்புப்பாதை (Persian-Bagdad Railway) என்ற இருப்புப் பாதை போடுவதற்கான முயற்சிகளைத் தொடங்கி நடத்திக்கொண்டு வருகிறார்கள். நிற்க.

கடிதப் போக்குவரவு மட்டுக்குமே யன்றிப் பிற அதி முக்கிய விஷயங்களுக்கும் தபாற்சாலை தற்காலம் உபயோகப் படுகின்றது. இதிற் பல பிரிவுகள் உண்டு. அவை யாவெனில்:—

(1) மணியார்டர் பிரிவு:—இது நாம் கொடுக்கும் சிறு தொகையைக் கூலியாகப்பெற்று, நாம் அனுப்ப விரும்பும் பெரிய தொகைகளைத் தொலைதூரங்களில் உள்ள ஜனங்களுக்கு மோச நாசம் ஏதுமின்றிச் சேர்ப்பிக்கின்றது.

(2) "ரிஜிஸ்ட்ரேஷன், இன்ஷியூரேன்ஸ்" பிரிவுகள்:— இவற்றின் மூலமாக எவ்வளவோ விலையுள்ள நகைகளையும் சாமான்களையும் நிர்விசாரமாய் அவற்றிற்கேற்பட்ட சொற்பக் கூலியைக் கொடுத்து யாரும் அனுப்பலாம். இவைகள் சம்பந்தமாய் நஷ்டம் நேரிடுமானால் துரைத்தனத்தாரே நமக்கு உத்தரவாதம் செய்து கொடுப்பார்கள்.

(3) "ஸேவிங்ஸ்பாங்க்" அல்லது "தனரக்ஷகசாலை":— யாராவது மூலதனமாகப் பணம் கட்டினால் அதை வைத்துக் காப்பாற்றி வட்டிபோட்டுச் சேர்த்துக் கொடுப்பதற்காக இது ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. இப்பிரிவு, கட்டும் செட்டு மாகக் காலக்ஷேபம் செய்ய விரும்பும் ஏழைகளுக்கும் பிறர்க்கும் மிகுந்த நன்மை கொடுக்கும்.

(4) தந்தித் தபால்:—1883-ம் வருஷம் ஏற்படுத்தப்பட்ட இப் பிரிவு, அதி சீக்கிரத்தில் விஷயங்களை வேற்றார்களுக்கு அனுப்புவதின் நிமித்தம் ஸ்தாபிக்கப்பட்டது. சில நாட்களுக்கு எல்லாம் தந்தித் தபால் மூலமாகப் பணமும் அனுப்புவதற்கு ஏற்பாடு ஆயிற்று.

(5) தபாற் காகித விற்பனை:—தலைச்சீட்டு (Stamp) களும், கார்ட், கவர்களும் முன்பு தபால் ஆபீசிலும், ஆங்காங்கு சிற்சில விடங்களில் 'கம்மிஷ' னுக்கு ஆள்மூலமாகவும், விற்கப்பட்டு வந்தனவன்றோ? இப்பொழுது சில வருஷங்களாகப் பின்னைய வழக்கம் அடியோடு நின்றுவிட்டது. ஜனங்களின் சௌகர்யத்தையும் தபாற்சாலையின் லாபத்தையும் உத்தேசித்து அவை பிரதி தபாற் சேவகர் மூலமாகவும், வேண்டுவோர்க்கு விற்கும்படியாக, அனுப்பப்படுகின்றன. சிற்சில சோம்பேறித் தபாற்காரர்கள் முத்திரைக் காகிதங்களை வைத்துக்கொண்டே தம்மிடம் அவைஅனுப்பப்படவில்லையென்று சொல்லிவிடுவதைக் கண்டும், ஜனங்களுக்கே தாம் செய்துள்ள ஏற்பாடு நன்கு தெரியுமாறும், தபாற்சாலை அதிகாரிகள், தபாற்சேவகர் பெட்டி ஒவ்வொன்றினும் "தபாற்காகிதம் விற்கப்படும்" ("Stamps for sale")என்று தடித்த எழுத்தில் அச்சிட்ட காகிதத்தை ஒட்டியிருக்கின்றனர்.

(6) கொய்னா விற்பனை:—முற்கூறிய விஷயங்களைத் தவிர வேறு காரியங்களுக்கும் தபாற்சாலை பிரயோஜனப்படுகிறது. உதாரணமாக மலை ஜ்வரத்தினால் வருந்தும் ஜனங்களுக்கு விற்கும்படி கோய்னாப்பொடி, தபாற்சாலை சேவகர்கள் மூலமாக அனுப்பப்பட்டு வருகிறது.

இதுவரை சொல்லியவற்றால் நமது வாழ்க்கைக்கு அவசியமான ஒவ்வொரு விஷயத்திலும் தபாற்சாலை உதவி செய்துவரும் விஷயம் நன்கு அறியத்தக்கது. துரைத்தனத்தாரால் நடத்தப்பட்டுவரும் உத்தியோகசாலைகள் எல்லாவற்றிலும் இதுவே பெரும்பாலும் சுதேசிகளாலும், மிகுந்த பணச்செலவு இல்லாமலும் ஜன உபகாரமாயும், நடைபெற்று வருவது. உள்ளபடியே இஃதொன்றே எல்லாவற்றிலும் சர்வ ஜனங்களுடைய நம்பிக்கையையும் புகழ்ச்சியையும் பெற்று விளங்குவதாகும். இது செய்துவரும் நன்மை இனியும் ஓங்கிப் பெருகுக. இந் நன்மைகட் கெல்லாம் காரணமாயுள்ள ஆங்கில ஆட்சி நீடூழி வாழ்க.

எறும்புகள்.

எறும்பு ஓர் சின்னஞ் சிறிய ஜந்துவே யெனினும், அதனினும் அதி விசித்திரமானதும், நுண்ணிய அறிவு படைத்ததும், மிகச் சுறுசுறுப்புள்ளதும் பிறிதொன்றில்லை. எறும்பு அநேகமாய் எங்கும் காணப்படும். அதனை மிகுதியாக உஷ்ணப் பிரதேசங்களிலும் மிகச் சீதள மில்லா இடங்களிலும் காணலாகும்.

எறும்பிற் பலவகை உண்டு. உலகம் முழுவதிலும் எறும்புகளில் 3000 ஜாதிக் கதிகம் உண்டாம். ஆகிலும் இந்தியாவில் நூற்றுக்கணக்கான வகைகளும், இங்கிலாந்தில் 30 வகை எறும்புகளுமே உள்ளனவாம்.

எறும்பு பல நிறத்தது. பெரும்பாலார் கண்டுள்ளவை மஞ்சள், கபிலம், சிவப்பு, கறுப்புநிற எறும்புகளே. எறும்புகளைப் பற்றிய உண்மை அறியாதார் கறையானை "வெள்ளை யெறும்பு" என்பர்.

உடற் கூறு:—எறும்பின் தேகம் 3 பிரிவுகளுடையது. அவை தலை, மார்பு, அடிவயிறு என்னப்படும். எறும்பிற்கு விலா வெலும்புகளுண்டு. சிலந்திக்குள்ளதுபோல் எறும்பிற்கும் பல நூறுகண்களுண்டு. ஆயினும் அவையாவும் இரண்டு இரண்டு கண்களாய் அமைந்துள்ளன என்று அறிஞர் கண்டுபிடித் திருக்கின்றனர். அதற்கு நுண்ணிய கட்புலன் உண்டு. நமக்குக் கை உதவுவதுபோல எறும்புக்குத் தும்பிகள் உதவுகின்றன. இத் தும்பிகள் எறும்பின் தலையில் உள்ளன. "ஸ்பரிசனி"யாகிய இவற்றின் உதவியால்தான் எறும்புகள் பரஸ்பரம் தமது எண்ணத்தை அறிவித்துக்கொள்ளும்.

மூவகை எறும்புகள்:—எறும்புப் புற்றைச் சேதித்துச் சோதித்தால் அதில் மூன்று வகை எறும்புகள் இருக்கக் காணலாம். அவை ஆண், பெண், அலி ஆகும். "அலி" எறும்புகள் என்பன பிறக்கும்பொழுதே அவ்வாறு பிறந்தவை அல்ல. அவை ஆணாகவோ பெண்ணாகவோ பிறந்தவைகளே. ஆயினும் ஏனைய எறும்புகளால் பிறந்தவுடன் அத்தன்மைகள் போக்கப்பட்டவைகள் ஆகும்.

அலியில் இருவகை உண்டு. அவை "சிப்பாய்"கள் (Soldiers) என்றும், "வேலைக்காரர்கள்" (Workers) என்றும் பெயர்பெறும். எறும்புக்கூட்டில் பெரும்பாலும்

காணப்படுபவை வேலைக்கார எறும்புகளே. சிப்பாய்கள் வேலைக்காரரினும் சற்று உருவத்திற் பெரியன. ஆண் பெண் இவற்றின் தொகை சொற்பமே. ஆண், பெண்ணி னும் உருவத்திற் சிறிதாயிருக்கும். ஆணுக்கும் பெண் ணுக்கும் பளபளப்பான மெல்லிய இறகுகள் உண்டு. அலி களுக்கு இறகு இல்லை.

ஆணும் பெண்ணும் சந்ததி அபிவிருத்தி செய்யவே பிறந்தவை. கூடு கட்டுவதும், குஞ்சு, முட்டை முதலிய வற்றை உரிய இடங்களில் வைத்து அடிக்கடி சூரிய வெளிச் சத்திற் கொண்டுபோய்ச் சுத்தப்படுத்துவதும், அவை பூரண பக்குவமுற்றவுடன் கூட்டைக் கிழித்து அவற்றை வெளி யேற்றுவதும், அவை தாமாக இரைதேடப் பழகும்வரை உடன்சென்று அவற்றைக் காத்துப் போஷிப்பதும், புற்று வாசிகளுக் கிரையளிப்பதும் இவைபோன்ற பிறவும் வேலைக் காரரின் தொழில்களாம்.

கூட்டையும் புற்று வாசிகளையும் ஆகாராதிகளையும் காத்துப் பகைவரைத் துரத்தப் போர்புரிவது சிப்பாய்களின் தொழில். சிப்பாய்களுக்கு முன்பின் அசையக்கூடிய உறுதி யான அலகுகள் உண்டு. அவை குறடுபோலவும், கத்திரி போலவும், குந்தாலிபோலவும், வாள்போலவும் அவைகட்கு உதவும். சிப்பாய்கள் தம் சத்துருவை அலகுகளாற் கடிக் கும்போது கடிவாயில் புளிப்புள்ள ஓர் நீரைக் கக்கும். இதனால் வலியிற் குறைந்த சத்துருக்கள் சாகவும் வலி மிகுத்தவை நோயுறவும் நேரும். நிற்க.

எறும்புகளில் அற்பாயுசுள்ளன ஆண்களே. "இராணி எறும்பு" என்னும் பெண் எறும்பும் வேலைக்கார எறும்புகளும் அநேக வருஷம் பிழைத்திருக்கும்.

முட்டை:—இது ஆரம்பத்தில் வெறுங்கண்ணுக்குப் புலப்படாத அவ்வளவு நுண்ணிய உருவுடனிருக்கும். பிறகு அது மஞ்சள் அல்லது வெண் மஞ்சள் நிறத்துடன் காணப்படும். சின்னாட்களில் இம்முட்டைகள் சின்னஞ்சிறு புழுக்களாகும். அப்பொழுது அவை அரிசிக் குறுநொய் போன்றாவது கோதுமை மணி போன்றாவது இருக்கும். மனிதரும் அதனைச் சில வேளைகளில் முட்டைகளெனக் கண்டு கொள்ள மாட்டாமல் ஏமாந்துபோய் விடுவதுண்டு. ஆயினும் கோழிக்குலம் மட்டும் ஏமாறா. இயற்கையிலேயே இவை இன்ன என அவை கண்டுகொண்டு அவற்றைக் கொத்தித் தின்ன ஆரம்பித்து விடும். இப்புழுக்கள் வேலைக்கார எறும்புகளால் நன்கு போஷிக்கப்படும். பிறகு சில காலம் இவை இரை யுண்ணாமற் கிடந்து தாமே நூற்கும் மெல்லிய நூற்போர்வையால் தம்மைச் சுற்றிக்கொண்டு "கூண்டுப் புழு" எனப் பெயர்பெற்றுச் சிலகாலம் உயிரற்றன போற் கிடக்கும். இவ்வாறான சில நாட்களுக்குப் பின்னர்தான் அவை சரியான எறும்புருக் கொள்ளும். ஆகவே முட்டைகளைக் குஞ்சு பொரிக்க 15-நாளாவது ஆகும்.

வாசஸ்தலம்:—சிலவகை எறும்புகள் கூடு கட்டியும், சில, பெரிய கற்களின் கீழ் வளை தோண்டியும், சில, பழ மரங்களின் அடியைத் துளைத்தும், சில, இலைகளை ஒன்றோடொன்று ஒட்டிக் கூடாக்கியும், சில, பூமிக்குமேல் புற்றெழுப்பியும் வசிக்கும். உஷ்ண தேசங்களில் எறும்புகள்

சிறு குன்றுகள்போல் புற்றெழுப்பும். இவை கட்டிய திட்டு கள் சில இடங்களில் 15 அடி உயரத்திற்கும் அதிகமாக இருக்கின்றன. இத்தகைய புற்றுக்களை மிக்க உஷ்ண பூமி யாகிய ஆபிரிக்காவில் காணலாம். கிராமாந்தரங்ககளிலும் 5 அடி வரையில் நம் நாட்டிலேயே அவற்றைக் காணலாம். எறும்பின் வசிப்பிடம் அதி அற்புதமாக அமைக்கப் பட்ட தாகும். எறும்புகள் உலாவவும், குஞ்சு பொரிக்கவும், அவற் றை வளர்க்கவும்,உண்ண உணவும், மழையால் நாசமுறுதபடி தம் புற்றைக் காப்பாற்றப் போதிய மரச்சக்கை வைக்கோல் துணுக்கு, சிறு கற்கள் முதலியன வைக்கவும், தம் பசுக்களும் அவற்றின் குழந்தைகளும் இருக்கவும் நானாவிதமாய் நானாவித அளவிற் கட்டப்பட்ட அறைகள் பல அவை கட்டும். அடுக்கடுக்காகப் பூமிக்கு அடியிலும் நில மட்டத் திற்கு மேலும் வெகு சித்திரமாய்ச் செய்யப்பட்டிருக்கும்.

ஆகாரம்:—எறும்புகளிலும் சாகபக்ஷிணிகளும் மாமிச பக்ஷிணிகளு முண்டு. ஆயினும் அவற்றிற் பெரும்பான்மைய சகல வஸ்துக்களையும் தின்று பிழைக்கும். உள்ளபடியே காக்கையைப் போல எறும்புக்கு ஏதும் தள்ளுபடி யில்லை. உஷ்ணப் பிரதேசங்களில் பிணந்தின்னிப் பறவைகளும் மிரு கங்களும் தின்ற மிச்சமெல்லாம் எறும்புகளின் உணவே என் றால் அதிகம் சொல்வானேன்? ஆயினும் எவ்வகை எறும் பிற்கும் தித்திப்பில் தான் அதிகப் பிரீதி. இனிய பண்டம் எவ்விடத்திருந்தாலும் எறும்புகள் அவை இருக்குமிடத்தை வாசனையால் அறிந்துவிடும். சர்க்கரையை மேஜைமேல் வைத்து, மேஜைக் கால்களை நீருள்ள பாத்திரங்களில் அமிழ் த்தி வைத்தாலும், எறும்புகள் மோப்பத்தால் அதன் இருப்

டம் அறிந்து, சுவரின் வழியாக உத்திரத்திற் கேறி அங்கிருந்து சர்க்கரை இருக்கும் இடத்திற்கு நேரே தொப்பென்று விழும். செடிகளை இவை செய்யும் நாசம் பயிரிடுவோர் நன்கறிவர். நிற்க.

தேனையே சேகரித்துத் தினந்தோறும் உண்ணும் எறும்புகள் அமெரிக்காவில் உள்ள மெக்ஸிகோவில் ஏராளமாக இருக்கின்றன. இவ்வெறும் பினத்தைப் பிற வெறும்பினங்கள் தேடிப் பிடித்து அவற்றின் மூலமாகத் தேன் பெற்று வாழ்கின்றன. இவற்றைப் பற்றிய பிற விஷயங்களை "தேனும் தேனீயும்" என்ற வியாஸத்தில் "தேன் எறும்புகள்" வரலாற்றால் அறிக.

வேறு சில எறும்புகள் பற்பல வர்ணமும் வடிவமும் அமைந்த ஒரு வகை அறுகாற் சிறு ஜந்துக்களை, நாம் பசுக்களை உபயோகிப்பது போல், உபயோகிக்கின்றன. அவற்றின் உடலிலிருந்து வரும் இனிய துளிகளை நக்கிக் குடித்துத் தம் பசியைத் தீர்த்துக்கொள்ளும். இவ் வெறும்புப் பசுக்கள் பெரும்பாலும் முள் நிறைந்த ரோஜாச் செடியில் வசிப்பன ஆகும்; அப் பசுக்களை எறும்புகள் தம்மினும் அதிக கவனத்துடன் பொன் போற்போற்றி வளர்க்குமாம். இப்பசுக்களை அவை அவற்றிற் கேற்ற ஆகாரங்கள் கிடைக்குமிடந்தேடி இட்டுச் சென்று அவைகளைக் கொழுக்க வைத்து உணவு பெறும். மஞ்சள்நிற எறும்பே இப்பசுக்களைப் பெரும்பாலும் வளர்த்துப் பல்குவிப்பன.

சில் வகை எறும்புகள் தாமே ஒரு வகைப் புல்லரிசியைப் பயிரிட்டுக் களை பிடுங்கி எருவிட்டு அவற்றை வளர்த்துத் தான்யம் பெற்று அவற்றைத் தின்று வளர்கின்றன என்று கண்டு பிடித்திருக்கிறார்கள்.

எறும்பின் பழக்க வழக்கங்களும் இயற்கை விசேஷங்களும்:—எறும்புகளுக்குள் ஒற்றுமை மிகுதி. ஒரு கூட்டத்தெறும்புகளில் ஒன்று களைத்துப் போனால் மற்றொன்று அதனைத் தன் முதுகில் எடுத்துச் சென்று வளை சேர்ப்பிக்கும்' ஆகாரம் தேடச் சக்தியற்றவைகட்குச் சக்தி யுள்ளவை ஆகாரம் தேடித் தரும். தனித்திழுத்துச் செல்ல முடியாத பொருள்களைப் பல ஒருங்கு சேர்ந்து விரைவில் அதி சுறுசுறுப்புடன் இழுத்துச் செல்லும். எறும்பின் பருமன் என்ன? அதன் பலமென்ன? ஐந்து வயதுக் குழந்தை யானைக் குட்டியைத் தூக்குவதைக் காட்டிலும் எறும்பு வெட்டுக் கிளியை இழுத்துச் செல்வது அதிக அதிசயமன்றோ?

எறும்பின் பேராற்றலும் முயற்சியும் ஒரு புறம் இருக்கட்டும். அதன் நிதான யோசனையை என்னென்பேம்! அது மாரிகாலத்திற்கு வேண்டியவற்றைக் கோடைகாலத்திலேயே தேடி வைத்துக்கொண்டு விடுகிறது. மாரிகாலத்தில் சாப்பிடும் நேரந் தவிர மற்ற வேளைகளில் அது படுத்துறங்குமாம். நிற்க.

மனிதர், தம் எதிரிகள் மீது படையெடுத்துச் சென்று தம்மினும் மெலியாரை அடிமையாக்கித் திரும்புதல் போல, சில சிவப் பெறும்புகள் கார் எறும்புகளை எதிர்த்துப் பற்றி அவற்றின் குஞ்சு குழந்தைகளுடன் அவற்றைச் சிறை செய்து தம்மிருப்பிடம் கொண்டு சென்று அடிமைகளாக்கி வேலை வாங்குகின்றன. இக் காரெறும்புகள் இல்லாவிடில் அச்சிவப்பெறும்புகள் உயிர் வாழவே முடியாது. எஜமான

விசுவாச மிகுந்த இக்காரெறும்புகளையே தமக்காகக் கூடு கட்டவும், ஆகாரம் தேடவும், தமக்கும் தம் குழந்தைகளுக்கும் வாயில் ஆகாரம் ஊட்டவும், இடிந்த தம் புற்றைப் பழுது பார்க்கவும் சிவப்பெறும்புகள் செய்கின்றன. இச் சிவப்பெறும்புகளுக்கு முற் கூறிய தொழில் எதும் செய்யத் தெரியாது. இவை பரிக்ஷித்தறிந்த உண்மையாகும்.

மழைபெய்து வெள்ளம் வரும் காலத்தில் இவை ஒருங்கு திரண்டு தம்மைப் பந்து போலாக்கிக் கொள்ளும். (இவ் வெறும்புப் பந்தில் உள்ளிருப்பன சின்ன எறும்புகளும் குஞ்சுகள் முதலியனவுமாகும். சுற்றிலும் இருப்பன வயதான பெருத்த எறும்புகளே.) இப்பந்து மிதந்து நீரோட்டத்தின் வழியே சென்று எங்கேனும் ஒதுக்கப்பட்டவுடன் அங்குத் தங்கி சந்ததி அபிவிருத்தி செய்து வாழ்ந்திருக்கும்.

எறும்பினத்தில் மகா கொடியது கட்டெறும்பினத்தைச் சேர்ந்ததும் ஆபிரிகாவில் காணப்படுவதுமான 'வெருட்டு எறும்புகள்" (Driver Ants) என்ற ஒருவகை எறும்புகளே. இவற்றிற்குக் கண்ணே தெரியாது. இவற்றின் கொடுக்குகள் பழுக்கக் காய்ச்சிய ஊசிகள் போலிருக்கும். இவை படையெடுத்துவந்து விடுமாயின் வீட்டி லுள்ளோர் வீட்டைப் போட்டது போட்டபடியே போட்டுவிட்டு எங்கேனும் ஓடிப்போய்விட வேண்டியதுதான். தீயினின்றும் தப்பவும் இவற்றிற்குப் பலவகை உபாயங்கள் தெரியும். இவற்றின் வரவை யறிந்தால் யானை, புலி, சிங்கமும் அஞ்சி நடுநடுங்கி ஓடும்.

சண்டை:—வேறு வேறு வளைகளில் இருக்கும் எறும்புகள் பரஸ்பரம், ஆகாரம், பசு அடிமை முதலியவற்றை அப

கரித்துக்கொள்ளுமாறு அடிக்கடி சண்டைபோடும். அச் சண்டையில் அவை பெரும்பாலும் சின்னாபின்னமாகச் சிதைவுண்டு செத்தாலும் சாகுமேயன்றிப் புறங்காட்டி ஓடாவாம். தோற்றோடுவன மகா பயங்கொள்ளிகளாகிய கறுப்பெறும்புகளேயாம். இவைகளும் இவற்றின் குடும்பமுமே செந்நிற எறும்புகளால் கைதி செய்து அடிமை யாக்கப்பட்டு அவைகளால் அதிக பட்சத்துடன் வளர்க்கப்படுவனவாகும். எறும்புகளும் சிற்சில விதிகளை யேற்படுத்திக் கொண்டு தர்மயுத்தமே செய்கின்றனவாம்! கார் எறும்புகளிலும் சில வகை அதி தைரியத்துடன் தம் எதிரியை எதிர்த்துப் போர் புரிவதுண்டு. சண்டை முடிந்த சற்று நேரத்திற்கெல்லாம் புற்றண்டை கால் வேறு, கைவேறு, தலைவேறு, உடல்வேறாகக் கணக்கற்ற எறும்புகளைக் காணலாம்.

உபயோகங்கள்:—(1) எறும்பின் முட்டை, புழு, பெரிய எறும்பு முதலியன ஓந்தி, கோழி, பல்லி, வான் கோழி, எறும்புச் சிம்மம் முதலியவற்றிற்குச் சிறந்த ஆகாரமாகும்.

(2) அழுகி நாற்றமெடுத்த பிராணிகளைத் தின்று எறும்புகள் நகரச் சுகாதாரத்தை நன்கு பாதுகாக்கின்றன.

(3) இங்கிலாந்து முதலிய தேசங்களிலும், பவளம், சங்கு, முத்து, ஸ்பஞ்சு முதலியன சுத்தம் செய்யும் இடங்களிலும்எறும்பு செய்யும் வேலையை விசேஷமாகக் காணலாம். எந்தப் பிராணியின் எலும்புக் கூட்டையாவது பெற வேண்டின் இறந்த அப்பிராணியை எறும்புப் புற்றண்டை வைத்துவிட்டுச் சின்னாட்களுக்குப்பின் வந்து பார்த்தால்

சதைப்பற்று அணுவேனுமின்றி எறும்புகள் அவற்றை அறவே அரித்துத் தின்றிருக்கக் காணலாம்.

(4) "தேன் எறும்புகள்" என்ற ஒருவகை எறும்புகளின் சரீரத்தினின்று தேனும், அத்தேனால் சாராயமும் உணவும் பெறலாகும்.

(5) அராபியர் நீர் அகப்படாத நெடுஞ்சுரத்தில் தாகத்தால் வருந்துங்கால் ஒட்டகத்தினின்றும் தண்ணீர் பெற்றுப் பிழைப்பதுபோல, பரம ஏழைகளும் "ஓர் தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஒக்க விற்கும் கார்தட்டிய பஞ்சகாலத்தில்" எறும்புவளையைத் தோண்டி அது பிற்காலத்திற்கென்று சேகரித்து வைத்திருக்கும் தானியங்களையும் கொள்ளையடித்துப் பிழைப்பர்!.

படிப்பினைகள்:—"அத்தி முதல் எறும்பு ஈறான உயிர் அத்தனைக்கும்" என்று நம் முதியோர் எறும்பை அதன் சிற்றுருவைக் குறித்து அதைக் கடைசியில் வைத்துக் கூறுவர். ஆயினும், "சிறியோரெல்லாம் சிறியரும் அல்லர்" "உடல் சிறியர் என்றிருக்க வேண்டாம்" "சோம்பித் திரியேல்" என்பனவாதிய ஆன்றோர் வாக்கிற்கு இலக்காக நிற்கும் இவ்வெறும்புகள் கற்பிக்கும் நீதிகளும் இவை நினைப்பூட்டும் பழமொழிகளும் பலவுள. அவற்றுள் சில கூறுவோம்:—

ஆகாரம் கிடைத்தற்கரிய காலங்களில் தமக்கு உபயோகமாகுமாறு, எறும்புகள், அவை எளிதிற் கிடைக்கக்கூடிய காலங்களிலேயே சேர்த்து வைத்துக் கொள்ளல் போல, மனிதரும் மழைகாலத்திற்கு வேண்டியவற்றிற்காக

மற்ற எட்டு மாதங்களிலும், க்ஷாம காலத்திற்கு வேண்டியவற்றிற்காக சுபிக்ஷகாலத்திலும், முதுமைக்கு வேண்டியவற்றிற்காக இளமையிலும், மறுமைக்கு வேண்டியவற்றிற்காக இம்மையிலும் பிரயாசப்பட்டு அவற்றைத் தேடி வைத்துக் கொள்ளவேண்டும். "சிதல்எறும் பாதிமூக் கறிவின்மூ வறிவுயிர்" என்பார் நன்னூலார். மூவறிவுடைய எறும்புகளுக்கு இருக்கும் முன்யோசனை ஆறறிவுடைய மனிதர்களுக்கிருக்கிறதா பாருங்கள்! இது பற்றி யன்றோ ஆங்கிலேய 'சோமசன்மா'வாகிய ஜான் கே என்பவர் தமது "கட்டுக்கதை" ஒன்றில்,

> "எண்ணித் துணியும் எறும்பினைக் கண்டும்
> பின்னே வேண்டுவ இன்னே தேடாது
> இருக்க யாரால் இயலும்?" என்றனர்?

ஸாலமன் என்ற ஞானியாரின் நீதி வசனமும் இங்கு உய்த்துணரத் தக்கதே: அவர் சோம்பேறியை நோக்கி, "ஏ சோம்பேறியே! எறும்பினிடம் நீ சென்று அதன் வழிகளைக் கவனித்தறிந்து நல்வழிப்படுவாயாக. அதற்குப் பிரபுவும், தலைவனும், அதிகாரியும் இல்லாதிருந்தும், கோடைகாலத்திலேயே தனக்கு வேண்டிய ஆகாரத்தைச் சம்பாதித்து அறுப்புக் காலத்தில் தானியத்தைச் சேகரித்து வைக்கும். சோம்பேறியே! நீ எவ்வளவு நேரம் படுத்திருப்பாய்? எப்பொழுது நித்திரையினின்றும் நீங்கி எழுவாய்? கொஞ்ச நேரம் தூங்குவோம். இன்னும் கொஞ்சம் உறங்குவோம். இன்னும் சற்றே கை முடக்கிக்கொண்டு நித்திரைசெய்வோம்' என்பாயோ? உன் தரித்திரம் நீ எதிர்பாராமல் திடீரென்றும், வறுமை, வலிய ஆயுதம் தரித்தும் வந்தேவிடும்" என்கிறார்.

(2) உருவிற் சிறியனவாயினும், எறும்பினம் பல கால் வார்ந்து செல்லுமாயின், கடினமான கற்பாறையுந் தேயக் காண்கின்றோம். இதுபோலவே ஒருவன் எவ்வளவு மந்தனாயினும் இடையறாது முயற்சித்து வருவானேயானால் முடிவில் காரியசித்தி பெறுவான் என்பதற் கையமில்லை. "எறும்பூரக் கல்லுந் தேயும்" என்ற பழமொழியை உபயோகிக்குங் கருத்து இதுவே என்க. இதுகாறுங் கூறிய இவ்வரிய குண விசேஷம் இரண்டும் இருப்பதால் அன்றோ யாவரும் நிதான புத்தி சுறுசுறுப்பு முதலியவற்றுடன் தம் கருமம் கடைப் பிடிக்க வேண்டுமெனச் சொல்ல வந்த பெருவாயில் முள்ளியார் எறும்பையே முதலில் வைத்துக்கூறி உதாரணங்காட்டி,

"நந்தெறும்பு தூக்கணம் புள்காகம் என்றிவைபோல்
தங்கருமம் நல்ல கடைப்பிடித்துத்—தங்கருமம்
அப்பெற்றி யாலும் முயல்வாருக் காசாரம்
எப்பெற்றி யாலும் படும்"—என்றனர்?

(3) நம்மவரிற் பெரும்பான்மையோர் சேட்டு என்பது இன்ன தென்றே அறியாமலிருக்கின்றனர். பணக்காரர் தாம் செல்வச் செருக்கால் அவ்வாறிருக்கின்றனர் என்றால், இவர் களைப் பார்த்து எத்தனை ஏழைகள் "அற்பம் அற்பம் அன்று" என்ற உண்மையறியாமல் நாள்தோறும் இடர்ப்படு கின்றனர். செல்வர்க்குச் சிறிதுபொருள் அழியினும் துன்ப மில்லை. அதைக் கொண்டு எளியோர் பலர் பிழைக்கலாமே? இன்னோர்,

"வாங்கும் கவளத்து ஒரு சிறிது வாய்தப்பின்
தூங்கும் களிறோ துயர்உறா—ஆங்கதுகொண்டு
ஊரும் எறும்பிங் கொருகோடி உய்யுமால்
ஆரும் கிளையோ டயின்று."

என்ற குமர குருபரரின் உபதேச மொழியைக் கேட்டுணர்ந்து சிறுமுயற்சி செய்து உறுபயன் பெறுவாராக.

(தான் பெறும் கவளத்தில் ஒரு சிறிது வாயிலிருந்து தப்பி விழுந்து விட்டால், அசைகின்ற இயல்பினையுடைய யானைகள், அதன் நிமித்தம் துன்பமுறா. ஆனால், அக்கவளத்தில் தவறிவிழுந்த அச்சிறிதைக் கொண்டே நகர்ந்து செல்லும் கோடிக்கணக்கான எறும்புகள் மிகுதியான தம் சுற்றத்தோடு உண்டு பிழைக்கும் என்பதே இப்பாட்டின் பொருள்.)

(4) ஒரு மனிதன், இறந்த தன் போன்ற மனிதனை எளிதில் தூக்கிச் செல்ல முடியுமா? பாருங்கள்! எறும்பு தன்னினும் 15 மடங்கு வலிமிகுந்த பிராணியை இழுத்துச் செல்வதைப் பார்க்குங்கால் எவர்க்குத்தான் "ஈயைப்போல் சுத்தமும் எறும்பைப்போல் பலமும்" என்ற பழமொழி ஞாபகத்திற்கு வராமற் போகும்?

(5) * இவறன்மை கண்டும், † கைத்துடையான் காற்கீழ் ஒதுங்கும் பித்துடையாரைக் காண நேரின்,

ஆகா தெனினும் அகத்துநெய் உண்டாயின்
போகாது எறும்பு புறம்சுற்றும் யாதும்
கொடாஅ ரெனினும் உடையாரைப் பற்றி
விடாஅர் உலகத் தவர்.

என்ற நாலடிச் செய்யுள் ஞாபகத்தில் வராமற் போகாது. ("உள்ளே புகுந்து நெய் குடிக்கக் கூடாமல் இருந்தாலும் அந்நெய் இருக்கும் கலசத்தை எறும்புகள் சுற்றிக்கொண்டு

* இவறன்மை-உலோபகுணம்; † கைத்துடையான்-பணக்காரன்;

நிற்றல் போல், மறந்தாயினும் அரைக்காசும் கொடாதாரா யினும் செல்வவான்களை உலகத்தார் சுற்றிக்கொண்டிப்பர்" என்பதே இவ்வெண்பாவின் கருத்து)

(6) எதிர் கால விஷயங்கள் தெளிவுபற்றி இறந்த காலமாகக் கூறப்படும் போதெல்லாம் "எறும்பு முட்டை கொண்டு திட்டை ஏறினால் மழை பெய்தது" என்று சொல்லி நம் விஷயத்தை விளக்குகிறோம். காலவழுவமைதிக்கு இதனையே உதாரணமாக இலக்கணக்காரர் கூறியிருத்தலும் காண்க.

(7) இருதலைக் கொள்ளி எறும்புபோ லாயினேன்:— விலகித்தப்ப முடியாத விபத்துக்களின் மத்தியில் அகப் பட்டு வருந்துவோர் தம் பரிதாப நிலைமையைக் குறித்துச் சொல்லுங்கால் உரைக்கும் சொல் இதுவே.

(8) மனதைக் கவரக் கூடிய நல் விஷயங்களும் அனு பவிக்கக் கூடிய பொருள்களும் ஒருவரிடம் இருக்குமாயின், பிறர் பிரயாசைப் படாமல் தாமாகவே அவற்றைக் கிர கித்துச் செல்லுமாறு பலர் அவரிடம் வருவர் என்பதை "கரும்பு கட்டோடு இருந்தால் எறும்பு எங்கிருந்தும் வரும்"என்ற பழமொழியால் அறியலாம்.

(9) "அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல் * உற்றுழித்தீரும்" உறவினரைக் காணின்,

"நண்பர்உற வினர்கள் நம்மை நாடி உற வாடல்
நறுநெய் உறு குடத்தெறும்பு நண்ணல் என எண்ணாய்"

என்பதை நினைப்பூட்டும்.

---

*உற்றுழித்திரும்--ஆபத்து வந்த விடத்தில் நம்மைவிட்டு நீங்குகிறது.

(10) பல கற்ரேம் யாம் என்று தற்புகழும் பேதை மாக்கள்

கற்றதுகைம் மண்ணளவு கல்லா துலகளவென்
றுற்ற கலைமடந்தை ஓதுகிருள்—மெத்த
வெறும்பந் தயங்கூற வேண்டாம் புலவீர்!
எறும்புந்தன் கையாலெண் சாண்."

என்ற எவ்வமில் புகழ் சால் ஔவை மூதாட்டியின் வாக்கை ஓர்ந்து திருந்தலாகும்.

இவ்விதம் சிருஷ்டியில் ஒவ்வொரு பொருளும்
சிந்திப் பதற்காம் சிலகுறிப் புடையதே.
சற்குணம் உடையோர் சற்றும் பயன் இலா
அற்பப் பொருளினும் அறநெறி காண்பர்.

தாவரங்கள் பரவும் விதம்.

இயற்கையின் மர்மங்களை நாம் உட்புகுந்து ஆராய்வோமானல், தாவரங்கள் தாம் க்ஷீணித்துப் போகாமலிருக்கவும், தம் சந்ததி அபிவிருத்தியா மாறும், ஏராளமாக வித்துக்களைத் தருவதும், அவ் வித்துக்களை அவை அதிசாமர்த்தியமாய்ப் பல கண்டங்களாகிய நானு இடங்களிலும் பரவச்செய்யச் செய்துவரும் பலவித உபாயங்களும் புலப்படாமற் போகா.

தேச சஞ்சாரியும் உற்றுப்பார்க்கும் வழக்கத்தை இளமை தொட்டே அப்பியசித்தவருமான ஜான் ரே (John Ray)

என்னும் ஆங்கிலப் பிரகிருத சாஸ்திரி ஒருவர், ஒரு கசகசாச் செடி (Poppy) யில் முப்பத்திராயிரம் வித்துக்களைத் தாம் கண்டதாக குறித்துள்ளார். லின்னியஸ் (Linneaus) என்பவர் தாம் புகையிலைச்செடி ஒன்றில் நாற்பதினாயிரம் வித்துக்களைப் பார்த்ததாகப் பகர்கின்றார். டாடார்ட் (Dodard) தாவர சாஸ்திரி எல்ம் (Elm) என்ற ஒருவகை வனவிருக்ஷத்தில் ஐந்நூற் றிருபத்தோன்பதினாயிரம் வித்துக்களைக் கணக்கிட்டதாகச் சாதிக்கின்றார். பல்வகைப்பட்ட காளான்களும் பிரதி *யுற்பாதனம் (Reproduction). செய்யும் வகை அதி ஆச்சரியகரமானது. இவை எண்ணிறந்த வித்து அம்சங்களைப் பெற்றுள்ளவை. ரெற்றிகுலேரியா மாக்ஸிமா (Reticularia Maxima) என்ற காளான் விசேஷத்தில், ஊன்றிப்பார்க்கும் வழக்கத்திற் சிறந்த பிரகிருத சாஸ்திரி ஒருவர் 100 லக்ஷம் வித்துக்களைக் கணக்கிட்டிருக்கிறார் என்றால் அதிகம் வளர்ப்பானேன்? இவற்றினும் அதிக வித்துக்கள் கொண்ட பூண்டுகளுமுண்டு. இவைகளை, இதுகாறும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நுட்ப தரிசனியாகிய எவ்வகைப் பூதக்கண்ணாடியாலும் கூடக் கண்டுணர்தல் அசாத்தியமான காரியம். இவ் வினத்தின் வித்து அம்சங்களைப் பூமி முழுதும் பரப்பி முளைக்கச் செய்தால் இருபத்துநான்கு மணி நேரத்திற்குள் பூமி முழுதும் காளான் காடாகவே போய்விடுமாம்.

ஆகையால் செடிகள் தரும் விதைகள் முழுதும் முளைகண்டு உஜ்ஜீவித்தால் அவை இப் பூமி முழுதும் பரவி, பூமியை மனிதராதிய பிராணிகளின் வாசஸ்தலத்திற்கு யோக்

---

* உற்பாதனம்—பிறப்பித்தல்.

கிய மற்றதாக்கிவிடும். ஆனால் இயற்கை யெனும் நற்றாய் அவை நம்மீது அவ்வாறு படையெடுத்துத் தாக்தாதபடி வித்துக்களின் வீரத்தை அளவுபடுத்தியும், வெவ்வேறு வகையான செடிகள் முளைத்தற்கு வெவ்வேறு காலத்தை நியமித்தும் அவை தோன்றி உஜ்ஜீவிக்கும் நிலங்களையும், அந் நிலங்களின் சீதோஷ்ண நிலைமையையும் வேறு வேறாகக் குறித்தும் இருக்கிறாள். அன்றியும் வித்துக்களின் பெரும் பாகம் பிராணிகளின் ஆகாரமாகிவிடுகின்றன. இப்பெரும் பகைவர்களினின்றும் தப்பியோடக் கூடியவைகள் அதி சொற்பமே. இவை தம் குழந்தைகளுக்கு வேண்டிய வெப்பம் உணவு முதலியன தம்மிடம் போதிய அளவு கிடையா என்பதை நன்கறிந்து அவை தம்மைவிட்டுப் பிரிந்து சென்றுவது பிழைக்கும் பொருட்டுச் சில உபாயங்கள் செய்து வைக்கின்றன; எவ்வளவுக் கெவ்வளவு வித்துக்கள் தமக்கு இருக்கின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு உபாயங்களையும் அவற்றைப் பரப்புகிற விஷயத்தில் தாய்ச்செடிகள் தேடிக் கொடுக்கின்றன. நிற்க.

மாம்பழத்தின் இனியசுவை, நிறம் முதலியனவும், நாயுருவியின் 'கொக்கி' போன்ற கதிரும், எருக்கு வித்தின் பஞ்சுபோன்ற வாலும், 'ட்பாஸ்' காயின் வெடிப்பும், தேங்காயின் கவசமாகிய மிதக்கக்கூடிய மட்டையும், இன்னும் இவைபோன்ற பிறவும் வித்துக்கள் இடம்விட்டு இடம் சென்று பரவவென்றே இயற்கைத்தாய் செய்த உபாயங்களாகும்.

ஆயினும் மேற்கூறிய உபாயங்கள் ஒவ்வொன்றும் பெரும்பாலும் பட்சிகளின் மூலமாகவோ, மிருகங்கள் மூல

மாகவோ காற்று மூலமாகவோ, ஜலத்தினுதவியாலோ அல்லது மனிதர் மூலமாகவோ தான் நடந்தேற வேண்டியவைகளா யிருக்கின்றன. இவ்வாறின்றியும் சில காய்களின் வித்துக்கள் வெளியாகிச் சிதறி ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் செல்லுகின்றன. உதாரணமாக:— காசித்தும்பை, புளியாரை, டபாஸ் இவை வெடித்து உதிர்ந்து பரவுதலையும், வெள்ளரி, பீர்க்கு முதலியன சிதறிப் பரவுதலையும் காண்க.

இனி, பறவை, மிருகம், காற்று, நீர் முதலியவற்றின் மூலமாக எவ்வாறு தாவரங்கள் பரவுகின்றன என்பதைப் பற்றியும் இவற்றைப் பற்றிய பிற விஷயங்களையும் கூறுவோம்.

பட்சிகள்:—அநேகர் தாம் மகப்பேறு பெறுமாறு அரசு ப்ரதிஷ்டை செய்யவும், அரசுக்கும் வேம்புக்கும் கல்யாணம் செய்துவைக்கவும், முயன்றும், ஊன்றிய செடிகள் அழிந்து பட்டுப் போவதைக் காண்கின்றோம். ஆனால் ஆங்காங்கே கோவில்களிலும் பழைய மதில்களிலும் நாம் பெரும்பாலும் இதே செடிகளைக் காண்கிறோம் அன்றோ? இவை அங்குத் தோன்றுவதற்குக் காரணம் பக்ஷிகளே என்க: கிளி, காக்கை முதலியன அவ்வப்பழங்களை அதி ஆவலுடன் விழுங்கி மேற்கூறிய இடங்களிலிருந்து எச்சமிடுகின்றன. அப் பட்சிகளால் இவ்வாறு உண்ணப்படும் அவற்றால் ஜீரணிக்கப் படாமல் வெளியேறிய வித்துக்களே அங்கு விழுந்து முளைத்துச் செடியாகி

—"நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்கு விடாப் பாறை பசு மரத்தின்
வேருக்கு நெக்கு விடும்"

என்பதை நினைப்பூட்டுகின்றன. நிற்க.

ஒரு செடிமேல் மற்றோர் செடியும் ஒரு மரத்திற் பிறி தொரு மரமும் முளைத்து அது உண்ணும் உணவுகளிற் பங்கு பெற்றுச் செழித்துக் கொழுக்கக் காண்கின்றோமன் றோ? வேம்பு, பூவரசு முதலியவற்றில் இருந்து வசித்து வளரும் "தொத்துச் செடி" (Parasitic Plants) யாகிய புல்லுருவியையும் பனை, வேம்பு முதலியவற்றில் முளைக்கும் ஆல் அரசு முதலியவற்றையும் கவனித்துப் பாருங்கள். இவை முளைத்தற்கும் காரணம் முற்கூறியபடி பக்ஷிகளே. நிற்க.

ஸுமத்ரா, ஜாவா முதலிய தீவுகளில் டச்சுக்காரர் ஜாதிக்காய் மரங்களை அடியோடு வெட்டி வீழ்த்திப் பன் முறை சாய்த்தும் அம் மரவர்க்கம் க்ஷீணிக்காமல் விருத்தி யடைந்து வருவதற்கு மூலகாரணம் புறாக்களே என்று சொல்லப்படுகிறது. இப் புறாக்கள் அம்மரப் பழங்களைத் தின்று நானு இடங்களிலும் எச்சமிட அவை வேர் ஊன்றி முளைத்துப் பல்குகின்றனவாம்! இவ்வாறே ரொமேனியா நாட்டிற் பல இடங்களிலும் பல்வகை விருக்ஷங்கள் செடிகள் முதலியன காணப்படுவதற்கும், பிரான்ஸ் முழுதும் போர் டோவிலிருந்து திராக்ஷை பயிராகிப் பரவி வருவதற்கும் பக்ஷிகளே காரணமாயிருந்து வருகின்றன.

நாற்காற் பிராணிகள்:— இவைகளும் ஒரு விதத்தில் ஸ்தாவர வகைக்குச் சத்துருக்களே யெனினும், தாம் அறிந் தோ அறியாமலோ அவற்றைப் பரவச்செய்வதற்கும் பே ருதவி செய்வனவாகும். ஆடு முதலிய பிராணிகள் மேயுங் காலை அவைகளறியாமலே பிசு பிசுப்பான சில விதைகளும் கொக்கிகள் போன்ற வித்துக்களும் அவற்றின் உரோமத்தில்

முறையே ஒட்டிக்கொள்ளவும் மாட்டிக்கொள்ளவும் காண்கிறோம். இவ் வித்துக்கள் இப் பிராணிகள் செல்லும் இடங்களில் எல்லாம் சென்று பாவி விடுகின்றன. எத்தனை பழங்கள் தமது வனப்பினாலும் நிறத்தாலும் வாசனையாலும் அளவில், குரங்கு முதலிய பிராணிகளின் மனத்தைக் கவர்ந்து அவற்றை இடம் விட்டு இடம் எடுத்துச்செல்ல செய்துவிடுகின்றன!

காற்று:—வித்துக்களை நாலு இடங்களிலும் பரப்புவதில் காற்றும் முக்கிய சாதனமாக இருக்கிறது. பஞ்சுபோன்று வாலுடைய இலேசான வித்துகள் சில அதி தூரம் பறந்து செல்லக் காண்கிறோம். சாதாரணமாக அற்பக்காற்று அடித்தாற்கூட ஆழ்ந்த பள்ளத்தாக்கில் இருக்கும் அவ்வித்துக்கள் அதி உன்னதமான மலைச்சிகரம் போய்ச்சேர்ந்து விடுகின்றன. அடிக்கும் புயற்காற்றில் கேட்பானேன்? அவை மேக மண்டலங்களுக்கு அப்பாலும் கொண்டு போகப்பட்டு அங்கிருந்து கடல்களையும் கடந்து தூரதேசங்கள் புக்கு ஆங்கு இறங்கி முளைத்துவிடுகின்றன. அவ்விதமான செடிகளில் ஆசிய கண்டத்து மலைகளில் முளைக்கும் ஒருவகைப் பாசியையே உதாரணமாகச் சொல்லலாம். இத்தகைய செடிகள் சிற்சில சமயங்களில் பாழ் வெளிகளில் அடர்த்தியாய் விழுந்து முளைத்துப் பிரயாணத்தாற் களைத்த வழிப்போக்கர்களுக்கு ஆகாரமாயும் உதவிவிடுகின்றன. இவ்வாறு பறந்து சென்று பயிராகும் வித்துக்களுக்கு உதாரணமாக வால் நீண்ட எருக்கு, சருகு போன்ற வெங்கைக்கனி பீநாறிக்கனி ஈண்டங்கனி முதலியவற்றைக் கூறலாம்.

நீர்:—விலங்குகள், பறவைகள், காற்று முதலியவைக ளால் கொண்டுபோக முடியாதபடி மிகக் கனமாய் இருக்கும் வித்துகள் தண்ணீரின் வழியாக ஓரிடத்திலிருந்து மற்றோ ரிடத்திற்குப் பிரயாணஞ் செய்கின்றன. இத்தகைய வித்துக் கள் தாம் போர்த்துள்ள கவசங்களின் உதவிகொண்டே நீரில் மிதந்து செல்லுகின்றன. உதாரணமாக: ஆபிரிகா கண்டத் தில் ஸெஷெல்ஸ் (Soychelles) தீவுகளில் முளைத்துப் பயி ராகும் தேங்காய்கள் கடல் நீர் வழியாகவே நமது இந்தியா வின் மேற்கடலோரமாயுள்ள மலையாளக் கரைவந்து சேர்ந்து அங்குள்ள நிலம் தம் வளர்ச்சிக்கு ஏற்றதாய் இருப்பதால் அங்கு வேரூன்றி முளைத்துச் செழிக்கின்றன. இதே மாதிரி யாக அமெரிகா கண்டத்திலிருந்து கோகோ, பனம் பழம் முதலியன அலைகளால் ஐரோப்பாக் கண்டத்திலுள்ள ஸ்கா ண்டிநேவியா என்னும் தீபகற்பம்போய்ச் சேருகின்றன. ஆயினும் அவை பயிராவதற்கான சீதோஷ்ணம் அங்கின்மை யால் அவை அவ்விடங்களில் முளைப்பதில்லை. சமுத்திரங் களின் இடையில் ஆறெனச்செல்லும் நீரோட்டங்கள் (currents) தாம் ஓடிச்செல்லும் இடந்தோறும் தம்மிடத்து வந்த வித்துக்களைக் கொண்டுபோய்ச் சேர்ப்பிக்கின்றன என்று கார்ல் முல்லர் (Karll-Muller) போன்ற நிபுணர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். இது முற்றிலும் பொருத்த முடைத்தேயாம். ஏனெனில் தென் அமெரிக்காவில் உள்ள பிரேஜில் எங்கிருக்கிறது? ஆப்பிரிக்காவில் உள்ள காங்கோ எங்கிருக்கிறது? பிரேஜிலிலிருந்து காங்கோவுக்கும், இந்தி யாவிலிருந்து பிரெஜீலுக்கும் வித்துக்கள் பிரயாணம் செய் செய்கின்றன வென்று உள்ளபடியே கண்டு பிடித்திருக்கி றார்கள். நிற்க.

விதைகளும் தாவரங்களும் பாவ இன்னும் இரண்டு வகைகள் உண்டு. அவற்றைச் சுருங்கக் கூறி விஷயத்தை முடிப்பாம்.

இமயமலையின் உன்னத சிகரங்களில் முளைக்கும் செடிகள் அதனின்றும் உற்பத்தியாகும் கங்கை போன்ற நதிகளின் வீழ்ச்சியால் அந்நதிகளின் கழிமுகத்தெதிர் நிலம் (Delta) போய்ச்சேருகின்றன. ஆபிரிக்காவில் உள்ள நீல நதி (Nile) யில் அது தோன்றுமிடமிருந்து சமுத்திர சங்கமமாகும் வரை பிரமாண்டமான அல்லிகள் நிறைந்திருப்பதற்குக் காரணமும் இதுவேயென்க. செடிகளைப்போலவே மலையில் உள்ள வித்துக்களும் பாறைபாறையாக உருண்டிறங்கும் பனிக்கட்டிகள் மூலமாகப் பூமிவந்து சேருகின்றன. ஜர்மனி தேசத்தின் வடபாகங்களிற் காணப்படும் பாசிகளும் காளான்களும் ஸ்காண்டிநேவிய (Scandinavian Mountains) பர்வதங்களினின்றும் பனிப்பாறைகள் மூலமாக வந்து சேர்ந்திருக்கவேண்டு மென அபிப்பிராயப்படப் பல ஹேதுக்கள் காணப்படுகின்றன.

இனி மனிதன் மூலமாகத் தாவரம் பரவுவது சொல்லித் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயமே யன்று. மனிதன் தன் உணவிற்கும் உபயோகத்திற்குமான எவற்றையும் எப்பாடு பட்டேனும் எங்கிருந்தேனும் பெற்றுக்கொண்டு விடுவா னன்றோ? புலிப்பால் வேண்டுமாயினும் பெறுவதற்குப் பின்வாங்காத மனிதனுக்குத் தனக்கு வேண்டிய தாவரங்களைத் தருவித்து விருத்தி செய்யவா முடியாமற் போய் விடும்? அவன் சுருட்டுப்பிடிக்க விரும்பினனாயின் அமெரிகாவிலிருந்து புகையிலை வித்து, செடிமுதலியன வரவழைத்துப்

பயிர்செய்து விடுகிறான். அயர்லாண்டில், எதேஷ்டமாய்ப் பயிராகி அங்குள்ளார்க்குக் கற்பக விருக்ஷமாக விளங்கும் உருளைக் கிழங்கு தென் அமெரிக்காவிலிருந்து கொண்டுவரப் பட்டதன்றோ? மத்திய அமெரிகாவில் பயிராகும் காப்பிச் செடி அரேபியாவிலன்றோ தோன்றியது? வட அமெரிக்கா விற் பயிராகும் கோதுமை நம் ஆசியா கண்டத்துப் பாரஸீகத்தினின்றும் போனதேயாகும். ஒலிவையும் திராக்ஷையும் எல்லாக் கண்டங்களுக்கும் அவ்வக்கண்டத்தாரால் ஆசிய மலைகளினின்றே கொண்டுபோய்ப் பயிராக்கப்பட்டவை. ஆஸ்திரேலியாவில் உள்ள நியூஸவுத் வேல்ஸ் கிச்சிலிக்குப் பேர்போன தென்பர். அக்கிச்சிலிச் செடி சீனவிலிருந்து கொண்டுபோகப்பட்ட விஷயம் சிலரே அறிவர். இவைகளும் இன்ன பிறவும், மனிதனுல் தான் பெரும்பாலும், தாவரங்கள் பரவுகின்றன என்பதற்குப் போதிய சான்றாகும். நிற்க.

இது காறும் கூறியவற்றால் தாவரங்களும் தாம் இருக்கும் இடத்திலேயே இருந்து அவிந்தொழியாதிருக்கவும், சந்ததி அபிவிருத்தி செய்யவும் விரும்புகின்றன வென்றும் அதற்காக இடம்விட்டு இடம் செல்ல வேண்டிய தவசியமென அவைகளுக்கே படுகின்றதென்றும், பற்பல உபாயங்களால் அவை தமதெண்ணத்தை இயன்றவரை இனிது நிறைவேற்றுகின்றன வென்றும் யாவரும் அறிந்திருப்பர். கனிகள் முதலியன வெடித்தலாலும் சிதறுதலாலும் வித்துக்கள் ஒருபோதும் 15 மீட்டர்கள் அதாவது சுமார் 50 அடிக்கு அதிகம் சென்றதில்லை. ஆனல் நீர், காற்று, விலங்கு, புள் ஆதியவற்றால் இவ்வளவு தூரந்தான் அவை பரவும் என்று

குறித்துரைக்க எவராலும் இயலாது. ஏனெனில், அது பருவ நிலைமையையும் அப்போதைக்கப்போது நேரும் பாதக சாதகங்களையும் பொறுத்திருக்கிறது. ஆயினும் மற்ற எல்லாவற்றைக் காட்டிலும் நீரே வித்துக்களையும் அதிகதூரம் கொண்டு செல்லுகின்றன என்று மட்டும் துணிந்து கூறலாம்.

பரிகஸிக்கும் பறவை.

பாடும் பறவைகள் எல்லாவற்றினும் சிறந்தது பரிகஸிக்கும் பக்ஷியே. இதனை விசேஷமாக ஐக்கிய மாகாணங்கள் முதல் பிரேஜில்வரை எங்குங் காணலாம்.

இப் பறவையின் நீளம் ஏறக்குறைய 9 அங்குலம். சரீரத்தின் மேற்பாகம் கருமை கலந்த தவிட்டுநிறத்தோடும் கீழ்ப்பாகம் சிறிது ஊதாகலந்த வெண்ணிறத்தோடும் கூடியிருக்கும். அதற்கு வாலும் சிறகும் கறுப்பு.

தன் காதில்விழும் எவ்வித சப்தத்தையும் உள்ளபடியே சிறிதும் ஏற்றத்தாழ்வின்றி, அதிநுட்பமாய் அமைக்கப்பெற்றுள்ள போனகிராப் வாத்தியப் பெட்டிபோல் மீண்டுந் தொனிக்கும் காரணம்பற்றி இதற்குப் "பரிகஸப் பறவை" (Mocking Bird) என்ற பெயர் வாய்த்தது. பல்வேறு பறவைகள் ஒரேகாலத்தில் சேர்ந்து பாடுவதுபோல இது பல்வேறு குரல்களுடன் ஏககாலத்திற் பாடும். இப் பறவையைப்பற்றியே கேட்டிராதவரும் பார்த்திராதவரும், வகைக்கு ஒரு பறவையாகச் சேர்ந்து ஏககாலத்தில் பாடுகின்றன

என்று நினைப்பரேயன்றி, ஒரே பறவைதான் இவ்வளவு குரல்களுடனும் ஏககாலத்திற் பாடுகின்றதென எண்ணவே எண்ணார். ஆதலின் அமெரிக்க இந்தியர் இதனை "நானூறு நாப்புள்" என்பர்.

ஆனால் இதன் கண்டத்தொனியோ அசல் பாடகனின் இனிய கீதத்தினும் அதிக இனிமையோடு கூடியதாயிருக்கும். ஏனைய பக்ஷிகள்யாவும் தத்தம் இடஞ்சென்று நிசப்தமாயிருக்கும் நடுராத்திரியே இதன் சுயகீதத்தைக் கேட்டு ப்ரமாநந்தம் கொள்ளத்தக்க சமயமாம். அவ் வமயம் தொடங்கி வெள்ளிமுளைக்கும்வரை விடாதுபாடிக்கொண்டே இருக்கும். பனிநிறைந்த காலைவேலைகளில் சோலைப் பறவைகள் யாவும் சேர்ந்து பாடுங்காலை, இதன் கம்பீரத்தொனியே யாவற்றிற்கும் மேலாய்க் கிளம்பி சுரோத்திரானந்தம் விளைவிக்கும். பாட ஆரம்பித்த சிறிது நேரத்திற்கெல்லாம் ஏனைப் பறவைகள் யாவும் நாணித் தலைகவிழ்ந்து வாயடங்கும்.

உண்மையிலேயே இஃதோர் அதி அற்புதமான விகட கவியே. விகடர்க்குள்ளதுபோல் இதற்கும் குறும்பதிகம். திண்டாடவிட்டு வேடிக்கை பார்ப்பதில் இதற்கு மெத்தப் பிரியம். அநுபவம் பெரிதுமுடைய வேட்டைக்காரரைக் கூட இது ஏமாந்தலையச் செய்யும். இது எந்தப் பக்ஷிமாதிரியும் கூவவும் பாடவும் கூடுமாதலின் அவர்கள் தேடிவரும் பக்ஷிகள் சமீபத்தில் இல்லாதிருக்கும்பொழுதே அவைமாதிரி இது கூவும் அல்லது பாடும். இத் தொனியைச் செவியுற்ற வேட்டைக்காரர், இது பரிகஸிக்கும் பக்ஷியின் சேஷ்டையென்றறியாது மயங்கித் தாம் நாடிவந்த பக்ஷியே இங்குளதென நிச்சயித்து எங்கும் அதற்காகத் தேடிக் காணாது

சோர்வடைவர். பார்க்கப்போனால் இது இருக்கும் இடத் திற்கும் இவர்கள் நாடிவந்த பக்ஷிகள் இருக்கும் இடத்திற் கும் உள்ள தூரம் மைல் கணக்காயிருக்கும்.

மனிதர் ஏமாறுவதில் அதிசயம் என்ன இருக்கிறது. பறவை இனங்கூட ஏமாந்து போகின்றனவே! எங்ஙன மெனில், தன் பரமசத்துருவாகிய வல்லூறு அல்லது இரா ஜாளி போல இது இருந்தாற்போலிருந்து கிரீச்சென்று உரத் துக் கூவும். இச்சப்தத்தைக் கேட்பதுதான் தாமதம். பறவை யினம் முழுதும் அஞ்சி நடுநடுங்கித் தத்தம் கூடு நுழையும். மற்றொரு சமயம், இது பறவைகள் தத்தம் பேட்டை அழைப்பதுபோல் கூவும். தக்ஷணமே ஒவ்வொருபக்ஷியும் அதனதன் துணையைச் சேரும். அதன் விகடத்திற்கு அள வென்பதில்லை. நிற்க,

இது வீட்டில் வளர்க்கப்படும்பொழுதுகூடத் தன் குதூகுலத்தையும் சுபாவத்தையும் விடுகிறதில்லை. இது வாயைத் திறந்துவிடுமாயின் ஆகாயமுழுதும் இனிய கீதத் தினாலேயே நிரம்பும். அப்பொழுது யாவரும் மெய்மறந்து அதனருகிலேயே ஸ்தம்பித்து நிற்கவேண்டி யிருக்குமே யன்றி வேறு எக்கருமமும் புரிய மனம் செல்லாது. இங்கும் இது தன் சேஷ்டையை விடுகிறதில்லை. உதாரணமாக: நாயைத் தன் எஜமானன் அழைப்பதுபோல சிட்டியடித்துக் கூப்பிடும். உடனே நாய் திடுக்கிட்டு விழித்து வாலைக் குழைத்துக்கொண்டு எஜமானன் முன்போடி அவன் இடும் கட்டளையை எதிர்பார்த்தவண்ணமாக நிற்கும். இருந்தாற் போலிருந்து ஆபத்தால் அஞ்சிய கோழிக் குஞ்சுபோல் யாவ ரும் பரிதாபப்படும்படி அலறும். உடனே தாய்ப்பறவை

யானது, பருந்துதான் தனது குஞ்சுகளை அடித்துக்கொண்டு போக எத்தனிக்கிறதென்று நினைத்துத் தீங்குற்ற (தாகத் தான் கருதிய) தன் குஞ்சுகளைப் பாதுகாக்க அலறிப்புடைத் துக்கொண்டு ஓடும். நாய்போற்குலைத்துப் பூனையை நடுங்கி ஒளியச்செய்யும். பூனைபோற்கத்தி நாயை, பூனையைத்தேடி அலைய விடுக்கும். இம்மட்டோ? தன் எஜமானன் கற்றுக் கொடுக்கும் ஸ்வரம் எவ்வளவு நீளமாயிருந்தாலும் அதனை அதி சுலபமாக எள்ளளவும் வித்தியாசமின்றி யாவரும் வியக்க மீண்டும் கூறி விடும்.

சிறந்த பாடகனும் விகடனுமாயிருப்பதோடுகூட நமது பறவை தன் மட்டில் தான் அசகாய சூரனென்றே சொல்ல வேண்டும். பறவைகளின் பரம சத்துருவாகிய கரும்பாம் பிற்கு இதன் குஞ்சுகளை விழுங்கி முட்டைகளைக் குடிக்க மிகப் பிரியம். இது இப் பறவைக்கூடிருக்கும் இடத்தைக் கண்டுகொண்டவுடன் எவ்விதத்திலேனும் அதிசம்ப்ரமமாகத் தன் வயிற்றை நிரப்பிக்கொள்ளவேண்டுமென்ற முழுத் தீர் மானத்தோடும் கூட்டண்டை செல்லுமாம். ஆதலின் கரும் பாம்பைக் கண்டா லிதற்கு ஆகவேயாகாது.

ஆண்பறவை, பேடு உட்கார்ந்திருக்கும் கூட்டண்டை நின்று காவல் காத்துக்கொண்டிருக்கும் பொழுது மரத்தி னடியில் உதிர்ந்து கிடக்கும் சருகுகளிலேனும் இலைகளிலே னும் சலசலவென்று இருந்தாற்போலிருந்து சப்தம் கேட் கும். கேட்டதோ இல்லையோ கண்களிரண்டு பளீரிடும். தக்ஷணமே காந்தியோடு கூடிய நீண்ட உடற்செந்து ஒன்று கொஞ்சங்கொஞ்சமாய் மரத்தின்மேல் ஏற ஆரம்பிக்கும். இது தான் கரும்பாம்பு! தனது ஜன்மசத்துருவைக் கண்ட

மாத்திரத்திலேயே நமது விகடவுக்கு அளவுக்கு மிஞ்சி கோபம் ஜனித்து அம்பினும் அதி தீவிரமாக ஒரே பாய்ச்சலாய் அதன்பேரில் பாய்ந்து வெகு உக்கிரகமாக அதன் தலையைப் பார்த்தே அடிக்கும். இப்படிச் செய்யும்பொழுது நமது பறவையானது பாம்பின் விஷப்பற்கள் தன்மேற்படாதபடி சர்வ ஜாக்கிரதையாய்த் தற்காத்துக்கொள்ளும். மேலும் பாம்பு சுலபமாய்க் காயமடையக்கூடிய பாகம் தலையே என்று அது தன் இயற்கை யறிவால் அறியும். அடிபொறுக்கமாட்டாமல் சிறிது நேரத்திற்கெல்லாம் கரும்பாம்பே சளைத்துப் போகும். ஆனால் நமது வீரனோ முன்னினும் இருமடங்கு வலியுடனும் தீவிரத்துடனும் பாம்பை அடி அடியென்றடிக்கும். உடனே பாம்பிற்கு எப்படியாவது உயிர்தப்பினால் போதும் என்றாய்விடும். தக்ஷணமே அது அங்கிருந்து விரைவாக நழுவிஓடிச் சமீபத்தில்உள்ள புதருக்குள் மறைய ஆரம்பிக்கும். ஆனால் நமது தீரனோ சிறிதும் மனந்தளராது அதனைத் தொடர்ந்துசென்று சண்டித்தனமாய்ச் சண்டையிடும். பாம்பே முடிவில் அபஜயம் அடையும். அது குற்றுயிராய்க் கிடக்கும் சமயத்தில் அதனை இறுகப்பற்றி ஆகாயத்தி லுயரத் தூக்கிச்சென்று தொப்பென்று கீழேபோடும். உயிர் பிரியுமட்டும் அதைக்கொத்தியாவது செட்டையாலடித்தாவது தீர்க்கும்.

பாம்பு செத்தபின் பார்க்கவேண்டும் நமது வீரப்புள்ளினை! மரத்தின் அதி உயரமான கொப்பிலேறி உட்கார்ந்துகொண்டு, பாம்பின் தோல்வியையும் தனது வெற்றியையும் நினைத்து நினைத்துப் பரவசங்கொண்டு, ஆநந்தவெள்ளம் ஆறுகப்பெருக, அதி சுத்த கெம்பீர தொனியுடன் வெகு நேரம் இடைவிடாது பாடித் தீர்க்கும். ஈச்வர சிருஷ்டியின் அற்புதத்தை யாவரே அறிய வல்லவர்?

*அந்தணரும் செந்தமிழும்.

இன்று எடுத்துக் கொண்ட விஷயம், 'ஆரியரில் முதல் வராய அந்தணரால், தமிழ்ப்பாஷை எவ்வாறு வளர்வதா யிற்று' என்பதைப் பற்றியதேயாம். இவ்வரிய விஷயம், முன்பு பல அறிஞர்கள் மனத்தைக்கவர்ந்து இருக்கக்கூடிய தாயினும், இதனை ஓர் தனி விஷயமாகக்கொண்ட வியாசம், இம்மாணவர் கூட்டத்தின் முன்பு வெளிவர வேண்டுமென் பது எனது விருப்பம். இவ்விஷயத்தை யான்எடுத்துரைக்க முற்பட்டதற்குக் காரணம் சிலவுள. அவை வருமாறு:—

பழமையும் பெருமையும் படைத்த உயர் தனிச் செம் மொழியாகிய தமிழ்மொழியின் உண்மையை அறிய ஆவலும் அக்கறையும் ஆற்றலுமற்ற அந்தணர் அநேகர், தாம் ஆரிய பாஷைக்கே அருகரென்றும், தமிழ் தமக்குச் சிறிதும் சம் பந்தமே இல்லாத ஓர் பாஷையென்றும், அதனால் வடமொ ழியை அபிமானித்தலே பொருந்துமென்றும் கருதித் தமி ழைப் புறக்கணிக்கின்றனர். இவர்களது அபிப்பிராயத்தை மெய்யென நம்பியோ, அல்லது வெளி வேஷத்திற்காகவோ இவரது மக்களும் தமிழை இழித்துக்கூறி அநாதரவு செய் கின்றனர். ஆங்கில கலாசாலைகளிற் பயிலும் அந்தணமாண வர்களில் வடமொழி கற்போர் மட்டுமேயன்றித் தமிழ்மொழி கற்போரும், தமிழை இவ் வெண்ணம்கொண்டு உபேட்சை

---

* இது "மதுரைமாணவர் செந்தமிழ்ச் சங்கத்து நச்சினார்க் கினியர் ஞாபகச் சின்ன வருஷோத்ஸவத்" தன்று வாசிக்கப்பட்ட ஓர் வியாசத்தின் சாராம்சமாகும்.

செய்துவருவது எவ்வளவு தவறுனகாரியம்.! இத்தகைய அந்தணர்களும் அவர்களது மக்களும் வடமொழியை அபிமானித்தல் முற்றும் பொருந்துமாயினும் தமிழைப்பற்றிய இவர்களது அபிப்பிராயம் முற்றிலுந் தவறுனதே. இன்னோர் கருத்து உண்மையாயின், இவர்களது முன்னோர்களும் அவ்வாறு தமிழை அபிமானிக்காமலும் அநாதரவுசெய்து மன்றோ இருந்திருக்கவேண்டும்? ஏனைய வருணத்தாரினும் அந்தணரே தமிழின் நாகரீகவளர்ச்சிக்கு முக்கிய காரணர் என்று பட்டப்பகலாக ரூபிக்கக்கூடுமாறுல், அதன்பின்னராவது, இன்னோர், ஆரிய பாஷைக்கேயன்றி தமிழ்க்கும் பலவிதத்திலும் உரிமைபூண்டு தம் முன்னோர் வழி நடக்கமாட்டார்களா என்று வெகு நாளாக எண்ணியிருந்தேன். நிற்க.

அந்தணர் ஒழிந்த தென்னுட்டார் பலர் தாங்களே தமிழ்க்குரியர் என்றும், அந்தணர்கள் அல்லர் என்றும், வாதாடிப் "பார்ப்பார் தமிழ் வழ வழ"வென்று பரிகஸித்துரைக்கின்றனர். அந்தணர்க்கும் செந்தமிழ்க்கும் உள்ள சம்பந்தத்தை இவர்களும் அறியவேண்டுமென்பது எனது வெகு நாளை விருப்பம்.

சமீபத்தில் நான் திருநெல்வேலிக்குச் சென்றிருந்த காலத்தில் அங்குள்ள C. M. S. காலேஜ்'பிரின்ஸிபால்'ஆகிய ரேவரண்ட் ஷாப்டர் (Rev. Shafter) என்னைத் தற்செயலாய்ச் சந்திக்க நேர்ந்தது. அப்பொழுது அவர் எனது பெயர், உத்தியோகம் முதலியவற்றைக் கேட்டறிந்ததும், அதி ஆச்சரியத்துடன் என்னை நோக்கி" ஐயா! அந்தணர் ஆரிய மொழியே கற்பிக்கக் கண்டுளேன். அவர்கட்கேற்றதும் உரியதும் அதுவே. அந்தணராயிருந்தும் நீர் தமிழ் கற்பிக்கப்

போந்தது எனக்கு ஆச்சரியத்தை விளைவிக்கின்றது. அந்தணர்க்கும் தமிழ்க்கும் எவ்வித சம்பந்தமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லையே" என்றனர். அதற்கு நான் "அந்தணர்க்கும் தமிழ்க்கும் அதிக சம்பந்தம் உண்டு. அதன் நாகரீக வளர்ச்சிக்கு அவர்களே பெரும்பான்மையும் காரணராயிருப்போர். உண்மையை நீர் அறிய விரும்பினால் கூடிய சீக்கிரத்தில் அறிவிப்பேன்" என்றேன். பாதிரியாரும் அவ்வாறே செய்யுமாறு கேட்டுக்கொள்ள யானும் ஒப்புக்கொண்டேன்.

ஆகவே, முற்கூறிய மூன்று விஷயங்களுமே என்னை இவ் வியாசம் எழுதத் தூண்டின. அந்தணர்க்கும் தமிழ்க்குமுள்ள சம்பந்தத்தை இம் மதுரை யம்பதியிற் கொண்டாடப்படும் ஓர் அந்தணோத்தமரின் ஞாபகச் சின்ன தினத்தன்று அறிவித்தலே அதிகச் சிறப்புடைத்தென்றும், மிகவும் பொருத்தமுடைத்தென்றும் கருதி, "உச்சிமேற் புலவர்கோள் நச்சினார்க்கினிய"ரது ஞாபகச்சின்ன மஹோத்ஸவதினமாகிய இன்று அதனைத் தெரிவிக்க லாயினேன். ஆனால் ஆராய்ச்சி செய்வதிற் பெயர் பெற்றோர் எடுத்துக்கொள்ள வேண்டிய இக் காரியத்தை அறிவிற் சிறியயான் எடுத்துக்கொண்டு முற்பட்டது, 'கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழி தானுமது போலாடும் தன்மைத்' தாகும். அறிஞர்கள் 'குணநாடிக் குற்றமு நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்'. இனி விஷயத்திற்குச் செல்வேன்:

தமிழ்ப்பாஷை அநாதிகாலமாயுள்ள ஓர் தனிப்பாஷை என்பதும், அது தலை, இடை கடை என்ற முச் சங்கங்களாலும் வளர்க்கப்பட்டு வந்ததென்பதும் யாவரும் ஒப்புக்

கொண்ட விஷயம். இவை பெரும்பாலும் "ஒப்புக்கொள்ளப் பட்டவைகள்" ஆதலால் இவற்றைப்பற்றிய விசேடங்களை விரித்துக் கூறுதல் வேண்டாததாகும். தலை, இடை, கடை என்ற முச்சங்கக் காலமும், அவற்றிற்கும் முற்பட்ட 'ஆதி' காலமும் தமிழ்மகளின் வளர்ச்சிக் காலமெனக் கருதப்படும்.

ஆதிகாலமாவது, அகஸ்திய மகாரிஷிமுதலிய அந் தணமேலோர் தென்னாட்டை அடைந்ததற்கும், தலைச்சங்கம் தொடங்கியதற்கும் முற்பட்ட கால விசேஷமாகும். இவ் ஆதிகாலத்தில் பிராமணர்களுக்குத் தமிழோடு எவ்விதத் தொடர்பும் இல்லையென்றே சொல்லி விடலாம். இக்காலத் தில் அவர்கள் விந்திய இமயமலைகளுக்கு இடைப்பட்ட ஆரிய வர்த்தத்தின் நீங்கி, தென்றிசை எட்டிப் பார்த்தவர்களு மல்லர். அப்போது தென்னாட்டுப் பாஷையாயிருந்த தமிழின் நிலை இவ்வண்ணமாக இருந்ததென்பதற்கு இக்காலத்தில் ஒரு சான்றும் இல்லை. இப்பொழுது உள்ளதுபோன்ற இலக் கண இலக்கிய அமைதிகள் அவ் ஆதிகாலத்தில் இருந்தது என்று துணியமுடியவில்லை. ஆயினும் இவ் இலக்கிய இலக் கண அமைதியை ஏற்றுக்கொள்ளற்குரிய அளவில் அது ஒருவாறு சீர்திருத்தம் பெற்ற பாஷையாக இருந்ததென்று கருதலாம். தொல்காப்பியத்திற் கண்ட எழுத்தமைதி, சொல் அமைதிகளையும், பா, பாவினங்களையும் ஊன்றி நோக்கு மிடத்து, தமிழ், இவ் ஆதிகாலத்தில் ஒருவிதச் சொந்தப் போக்கைக் கொண்டிருந்ததாகவே தெரியவருகிறது.

இங்ஙனமிருந்த பாஷை, வடமொழியைப் பெருமைப் படுத்திய பாணினிபோன்ற பெரியோர் சிலர் வரவை எதிர் பார்த்ததாயிருந்தது. நல்ல தருணத்தில் அகஸ்திய முனிவர்

வடபாகத்திலிருந்து சில முனிவர்களுடனும், அரசர்களுட னும் தென்னாடு அடைந்தனர். இவர், தாம் வரும்பொழுது பெரிய ஆரியப் படையெடுப்பின் தலைவராகத் தென்னாடு புகுந் தவர் என்பதற்குத் தொல்காப்பியப் பாயிர உரையில் ஆசிரி யர் நச்சினார்க்கினியர் எழுதிய இவரது வரலாறே சாக்ஷியாம். ஆனால் புராணங்களில் அகஸ்தியர் வருவதற்குமுன் தமிழ்ப் பாஷை சிறந்த மொழியாக இருந்ததென்று சொல்லப்படு கிறது. "'சிறந்த மொழியாய் இருந்தது" என்று சொல்லப்படுவதற் குத் தக்க ஆதாரம் இல்லாமையால் நாம் முன்கூறியவாறு சீர்திருத்தம் செய்வதற்கு ஏற்ற நிலைமையில் இருந்த ஓர் சிறந்த மொழியாயிருந்த' தென்றே கருதவேண்டும். அதாவது, இக் காலத்துச் சில அநாகரீக மக்கள் பேசும் பாஷை போன்று இல்லாமல், இலக்கிய இலக்கண அமைதிகளை எளிதில் ஆக்கிக் கொள்ளற்கேற்ற பக்குவம் பெற்றிருந்தது என்றபடி. ஐம்பது ஆண்டுகளுக்கு முன் பெங்காளி பாஷை இருந்த நிலைக்கும், இக்காலத்தில் இலக்கிய இலக்கணங்களுடன் விளங்கும் அதன் உன்னத நிலைக்கும் காரணம் அது சீர்திருத்தம் பெறத்தகுதி யாய் இருந்து சீர்திருத்தப்பட்டதேயாம். இதுபோல் அகஸ் தியர் வருங்காலத்தில் இருந்த தமிழ்மொழியை அவர் இந் நாட்டில் வேரூன்றியபின் அப் பாஷையின் இயல்பெல்லாம் நன்குணர்ந்து அதனைச் சீர்திருத்தலாயினர். இவர் வட மொழிப் போக்குகளையும், வழக்குகளையும் தமிழ்போக்கொ டும் வழக்கொடும் பொருந்தப் பொருத்திப் பாஷைக்கு இலக் கண வரம்பை ஏற்படுத்தினர். இவரும் இவரது அந்தணச் சீடரும் வடமொழி இசைமுறையினையும் தமிழ்க்குக் கொ ணர்ந்து தமிழைச் சிறப்பித்தனர். இவ்வாறு இவர் இயல்,

இசை, நாடகம் என முத்திறமும் பட அமைத்தநூலே அகத்தியமெனப் படுகிறது. அகத்தியனார் வடமொழிப் போக்கைத் தழுவியும், தமிழ்முறையைக் கையாண்டுமே அகத்தியத்தை இயற்றியவரென்பது,

*"எழியல் முறையது. எதிர்முக வேற்றுமை
வேறெனா விளம்பான் பெயரது விகாரமென்று
ஓதிய புலவனும் உளன். ஒரு வகையால்,
இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன்"

முதலிய சூத்திரங்களால் இனிது விளங்கும். இவ் அகத்தியனாரின் சீடர் அந்தண சிரேட்டர்கள். இவர்கள் தொல்காப்பியர், அதங்கோட்டாசான், துராலிங்கன், செம்பூட்சேய், வாய்ப்பியன், பனம்பாரன், கழாரம்பன், அவிநயன், காக்கைபாடினியன், நற்றத்தன், வாமனன் ஆகப்பன்னிருவர். இவர்கள் எல்லோரும் இயல் இசை, நாடகத்தைப்பற்றித் தனித்தனியே நூல்கள் இயற்றினர். இவர்கள் விளங்கியகாலத்திற்றான் தலைச்சங்கம் பாண்டியனால் நடைபெற்றது. இச்சங்கத்தில் வால்மீகியார், மார்க்கண்டேயனார், கௌதமனார் முதலிய அந்தண மேலோர் பலர் விளங்கினர். (தொல் பொருள்-75) இவருள் மார்க்கண்டேயனார் பரம தர்மங்களையும் வெளியிடும் 'காஞ்சி' என்ற நூலைப் பாடினார். அகத்தியனார் சீடருள் தலைவர் "தோல்காப்பியர்" என்று அழைக்கப்படும் திரண

* வேற்றுமை எழுவகையதே. எட்டாம் வேற்றுமை எழுவாய் வேற்றுமையாகிய பெயரின் விகாரமே அன்றி வேறன்று என்று கூறிய வடமொழிப் புலவனும் உண்டு. (இவர் பாணினி ஆவர்) ஆனால், இந்திரன் 'வேற்றுமை எட்டாகும் என்றான்' என்பது கருத்து.

தூமாக்கினி முனிவர். இவர் ஜமதக்கினி முநிவரின் வம்சியராய்க் காப்பியக்குடியில் கவின்பெற வளர்ந்தவர். தம் ஆசிரியர் அகஸ்திய முனிவர் முதலியோர் இயற்றிய நூல்கள் மிக விரிந்து கிடத்தலை நோக்கி, எழுத்து, சொல், பொருள்களின் இலக்கணங்களைச் சுருங்கச் சொல்லி விளங்கவைத்துத் தோல்காப்பியம் என்னும் பெயரோடும் ஓர் நூலை வெளியிட்டனர். இந்நூலே இடைச்சங்கநாள் முதல் இன்றுவரை தமிழின் தொன்மைப் பேரிலக்கணமாகத் திகழ்கின்றது.

இனி, அடுத்து இடைச்சங்கம் தொடங்கிய காலத்தில், இத் தோல்காப்பிய மகாரிஷியே தலைமைப்புலவராக வீற்றிருந்தார். இவ் இடைச்சங்கத்தைப்பற்றிய வேறு விசேடம் நமக்கு அதிகமாகத் தெரியவரவில்லை.

பின்பு கடைச்சங்கம் தொடர்ந்தது. இச்சங்கத்தில் வீற்றிருந்தோர் நாற்பத் தொன்பதின்மர். இவர்களுள் முக்கியமாக விளங்கிய புலவர்கள் நக்கீரனார், கபிலர், பரணர், பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார், கடியலூர் உருத்திரங்கண்ணனார், ஏணிச்சேரி முடமோசியார், காமப்பல் கண்ணனார், அம்பர்கிழான் அருவந்தை, சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான், கௌணியன் விண்ணந்தாயன் முதலியோர். தொல்காப்பிய மரபியலில் "ஊரும் பேரும்" என்னுஞ் சூத்திரத்து, "உறையூர் ஏணிச்சேரி முடமோசி, பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகன், கடியலூர் உருத்திரங்கண்ணன் என்பன அந்தணர்க்கு உரியன" என்று உரைகாரர் எழுதலால் அவர்கள் அம் மரபினராதல் காண்க. இவர்களுள் நக்கீரனார் பிராமணருள் ஒரு சாராரானவரும், சங்கறுக்கையைத் தொழிலாக உடையவருமான ஓர் வகுப்பைச் சேர்ந்தவர்.

கபிலபரணர்கள் கடைச்சங்க நாளில் எல்லாப் புலவராலும் சிறப்பிக்கப்பட்ட பிராமணோத்தமர்கள் என்பது பிரசித்தம். இதனை "வெறுத்த கேள்வி விளங்குபுகழ்க் கபிலன்," "புலனழுக்கற்ற அந்தணாளன்," "பொய்யா நாவிற்கபிலன்," என்பதால் அறிக. இன்னும் பல அந்தணர்கள் கடைச்சங்கத்தில் விளங்கினர் என்பது கடைச்சங்கநூல்களை வைத்து ஆராய்வோருக்கு நன்கு புலப்படும்.

இனிக் கடைச்சங்கக் காலத்தை அடுத்து நாயன்மார்கள், ஆழ்வார்கள் முதலிய சமயாசாரிகளைக் கவனிப்போம்:— நாயன்மார்களில் ஸ்ரீஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், முதலியோரும், ஆழ்வார்களில் பொய்கைஆழ்வார், பூதத்தாழ்வார், பேய் ஆழ்வார், திருமிழிசை ஆழ்வார், பெரிய ஆழ்வார், ஆண்டாள், மதுரகவி ஆழ்வார் முதலியோரும் ஆகிய முக்கியஸ்தர்கள் பிராமணோத்தமர்களே.

இவர்களை அடுத்து உரையாசிரியர்களாகி விளங்கியோரைக் கவனிப்போம்: இளம்பூரணடிகள் முதல் முதல் தொல்காப்பியத்திற்கு உரையிட்ட ஆதி உரையாசிரியர். இவரது எழுத்தைக்கொண்டு பார்த்தால் இவர் அந்தணர் என்பது புலப்படும். சேனாவரையரும், வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்தவர் என்பதையும் அவரது வியாகரணப் பெருஞானத்தையும் நோக்கும்போது, அந்தணர் என்னலே பொருத்தமுடைத்து. உரையாசிரியர்களில் இவருடைய ஞானம் அளவிடற்கரியது. இவர் தொல்காப்பியம் சொல்லதிகாரமட்டும் உரையிட்டவர். பரிமேலழகர் வைஷ்ணவரில் தீக்ஷைபெற்ற பாஞ்சராத்திர பட்டர் வகுப்பைச் சேர்ந்தவர் என்பது அவரது பாயிரத்தாலும் வழக்காலும் அறியப்படு

கிறது. இனி, இம் மதுரையம்பதிக்குரியவராய் நமது சங்கத்தார் தொழும் தெய்வமாய் விளங்கிய ஸ்ரீ நச்சினார்க்கினியரைப்பற்றி நாம் சொல்லவேண்டுவதில்லை. இப் பெரியோர் பிராமணரில் ஸ்மார்த்த வகுப்பில் பாரத்துவாஜ கோத்திரத்தில் உதித்தவர். அத்வைதி—இதனை, "சிவச்சுடர் 'தானே' யாகிய தன்மையாளன்" என்பதனாலும், "முக்கோல்" என்று கலித்தொகை முதலிய நூல்களில் வரும் சொல்லுக்கு அத்வைதக் கொள்கைப்படி குடீசக சந்யாசத்துக்குரிய திரிதண்டப் பொருளைக் கூறுவதாலும் பிறவற்றாலும் அறியப்படும்.

இதற்குப் பிறகுவந்த பெரியபுலவர்களில் மகாபாரதம் பாடிய வில்லிப்புத்தூராரும், பாகவதம் பாடிய செவ்வைச் சூடுவாரும், ஸ்காந்தம் பாடிய கச்சியப்பரும் பிராமணோத்தமர்களே. பிரயோக விவேகம் செய்த சுப்பிரமணிய தீக்ஷிதர் பெருமை அளவிடத் தக்கதன்று. இவர்காலத்தும், இவருக்குப் பின்னும் தமிழை விருத்திபண்ணிய பிராமணர்களின் பெருமையெல்லாம் விரித்துச் சொல்லுவதற்கு இப்பொழுது அவகாசமில்லை.

இனி நம் காலத்தை யோசிப்போமானால், தமிழ்ப்புலவர்களின் சிரோரத்நமாயும்,இம்மஹோத்ஸவ காரணராயும்விளங்கும் மகா மகோபாத்தியாயர் பிரம்மஸ்ரீ வே. சாமிநாதையர் அவர்களே தமிழிற் சிறந்த பெரியவித்துவான் என்பதற்கு ஐயமில்லை.

நான் சொல்லப்புகுந்த தென்னவெனில், தமிழின் சிறப்பிற்கு ஆதிமுதல் முக்கிய காரணராக இருந்தவர்களில் சிறந்தோர்கள் அந்தணர் என்பதே. தமிழ்க்குமட்டு மென்? இந்தி

யாவில் வழங்கும் எப்பாஷைகளின் சிறப்புக்கும் இவர்களே முக்கிய காரணஸ்தர்களென்பது அவ்வப்பாஷைச் சரிதங்களே சான்றாகும்.

இதனால் பிராமணச் சிறுவர்களாய் விளங்குவோர் தமிழ் அணங்கைச் சிறப்பிப்பதில் தம் முன்னோர்கள் எப்படி முக்கிய காரணராய் விளங்கினரோ, அப்படியே தாமும் தமிழ்ப்பாஷையை நன்கு கற்று அதன் பெருமையை எல்லா வழியாலும் சிறப்பிக்கக் கடமைப்பட்டவர்களாவர் என்று அறிவார்களாக. அன்றியும் இவர்களது பெற்றோர்களும் அந்தணர்களொழிந்தபிறரும் தமிழையும் அந்தணரையும் பற்றித் தாம்கொண்ட தவறான அபிப்பிராயத்தை முற்றும் நீக்கித் தமிழ் அபிவிர்த்திக்காக ஒத்துழைப்பார்களாக.

இதுகாறும் நான் சொல்லியவற்றால் ஏனைஜாதியார்க்கும் தமிழ்க்கும் எவ்விதத் தொடர்பும் இல்லையென்பது எனது எண்ணம் என்று எவரும் எண்ணற்க. 'சிந்தாமணியின் நந்தாப்பெருமையும் மணிமேகலையின் அணிகெழுபோக்கும், சிலப்பதிகாரத்திலக்கியச் செறிவும், திருவள்ளுவரின் ஒருமொழியமும், கம்பன் கவியின் செம்பொருளின்பமும், கல்லாடத்தின் எல்லாச் சிறப்பும், இன்னோரன்ன பன்னூல் மாண்பும்," நானே முற்றக் கற்றிராவிடினும் கற்றார் மூலம் சிறிதேனும் அறிந்துளேன். நான் சொல்லவந்ததெல்லாம் ஏனைச் சாதியாரினும் அந்தணரே தமிழின் நாகரீக வளர்ச்சிக்கு ஆதி முதல் முக்கிய காரணராயிருந்தோர் என்பதே.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

தேனும் தேனீயும்.

I. தேன் எனப் படுவது யாது?

பல்வகைப் பூக்களினின்றும் தேன் ஈக்கள் அல்லது தேன் வண்டுகளால் சேகரிக்கப்படும் இனிமையான பதார்த்தமே தேன் எனப்படும். இத்தேன் சர்க்கரை, ஜலம், மெழுகு, பூச்சத்து, பூந்தாது, (மகரந்தப் பொடி), சாயப் பொருள்கள், நிரசவஸ்துக்கள் முதலியன சேர்ந்து ஆகிறது.

II. தேன் உண்டாகும் விதம்.

பூக்களில் உள்ள இனியசாரத்தைத் தேனீக்கள் நக்கிக் குடித்து இரைப்பையில் சேர்க்க அச்சாரமே தேனாக மாறும். பசுமாடு முதலில் வயிறு நிரம்ப மேய்ந்து பின்பு ஓரிடம் சென்றிருந்து உட்கொண்ட இரையை மீண்டும் கக்குவது போல், தேனீக்களும் வயிறு நிரம்பியவுடன் தமது உறைவிடம் நோக்கிச் சென்று இரைப்பையினின்றும் தேனை வெளிப்படுத்தி அதில் (உறைவிடத்தில்) உள்ள அறைகளில் வைக்கும். இவை இங்ஙனம் மீண்டும் மீண்டும் சென்று திரும்பி அறைகள் யாவையும் நிரப்பும்.

III. தேன் கூடு.

நாம் முற்கூறிய அறைகள் அடங்கிய தேனீயின் உறைவிடமே "தேன் கூடு" எனப்படும். இது ஈக்களின் இனத்திற்கும் தொகைக்கும் ஏற்பப் பெரிதாகவேனும் சிறிதாகவேனும் அமைக்கப்படும். மலைத்தேனீ ஆறு அல்லது ஏழு அடி

சுற்றளவு கூடுகட்டும். இக் கூடு ஒன்றை எடுத்துப் பரி சோதிப்போமானால் அது அநேக துவாரங்கள் வாய்ந்திருக் கக் காண்போம். இத் துவாரங்களுக்குத்தான் "அறைகள்" என்று பெயர். இவ்வறைகள் ஆகாராதிகள் வைப்பிடமாக வும், ஈக்களின் துயிலிடமாகவும் பக்குவமடையாச் சிற்றீக் களின் உறைவிடமாகவும் உபயோகிக்கப்படுகின்றன. இவற் றுள் தேன் முதலியன வைக்கப்படும் அறைகள், முட்டைகள் ஈக்கள் இருக்கும் அறைகளினும் அதிக ஆழமுள்ளனவாக இருக்கும். ஆகார அறையின் ஆழம் சுமார் 2 அங்குலம் இருக்குமாம். அறைகள் யாவும் மெழுகினாலானவை. இவற் றைப் பற்றிய ஏனைய விஷயங்கள் பின்னாடி அறிவிக்கப்படும். கிற்க.

IV. மெழுகு பெறும் விதம்.

தேனீக்கு மெழுகு ஏது? பூக்கள்தோறும் ஈக்கள் உட்கார்ந்து உட்கார்ந்து கொஞ்சங்கொஞ்சமாய் அவற்றி னின்றும் மெழுகு எடுத்துச் சேர்க்கின்றன என்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். இன்னோர் கொண்டது தப்பபிப் பிராயமே. எனெனில், மெழுகை ஈக்கள் பூக்களினின்றே பெறுவதில்லை. பின்னை, சிலந்திப்பூச்சிகள் தம் சரீரத்தி னின்றும் நூலை வெளிப்படுத்துவதுபோல் தேனீக்களும் மெழுகைத் தம் உடம்பினின்றே உற்பத்தி செய்கின்றன. மெழுகை உற்பத்திசெய்ய ஈக்கள் சிறிதும் சிரமப்படவேண் டியதில்லை. எனெனில், அவை ஒரு வேலையும் செய்யாமல் இருந்த இடத்தில் இருந்து இளைப்பாறும் சமயத்தில்தான் மெழுகு உற்பத்தியாகுமேயன்றி வேலைசெய்யும்பொழுது உண்டாகாது.

சில சமயங்களில் யாதானும் ஓர் கட்டிடத்தையாவது மரக்கிளையையாவது பற்றிக்கொண்டு பூத்தொடுத்த ஆரம் போல் சில ஈக்கள் தொங்க, அவற்றின் நடுவில், சர்க்கஸில் ஒருவர் காலை ஒருவர் பிடித்துப் பலர் தொங்குவதுபோல், வேறுசில ஈக்கள் சரம் சரமாய்த் தொங்கிக்கொண்டிருக்கவும் இவற்றின்மேல் வேறுசில மொய்த்துக்கொண்டிருக்கவும், சிலர் கண்டிருக்கலாம். இங்ஙனம் இவைகள் சுமார் 24 மணிநேரம் மொய்த்தவண்ணமாகவே தொங்கிக்கொண்டிருக்குமாம். இவைகள் எதற்காக இப்படித் தொங்குகின்றன என்று நினைக்கின்றீர்கள்?. மெழுகு பெறவே. இப்படி மொய்த்திருப்பதுதான் அவைகள் இளைப்பாறிக்கொண்டிருத்தற்கு அடையாளமாம். நமக்குள் பலர் நெருங்கி உட்காருவதனால் புழுக்கம் மிகுந்து வியர்வை வெளிக்கிளம்பவில்லையா? அவ்வண்ணமே இவை இங்ஙனம் நெருங்கி மொய்ப்பதால் சூடு உண்டாகி இவற்றின் சரீரத்தைக் கவிந்துள்ள செதில்களின் அடியிலிருந்து அடையடையாய்ப் பாளம் பாளமாய் மெழுகு வெளிக் கிளம்பும். இங்ஙனம் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும் மெழுகை ஏனைய ஈக்களிற் சில, உடனுக்குடனேயே எடுத்துச்சேர்த்துத் திரட்டும். ஒரு வீசை மெழுகுண்டாக்க இரண்டுவீசை தேன் செலவழியும்.

V. அறைகளின் அமைப்பு.

தமக்குப் போதுமான மெழுகு சேகரிக்கப்பட்டவுடன் இவ்வீத்திரளினின்றும் ஓர் ஈ கிளம்பி, ஏனைய ஈக்களைத் தனது தலைபால் சுமார் ஒரு அங்குலம் விலக்கி, காலி இடத்தின் மத்தியில் உட்கார்ந்து தனது சரீரத்திலுள்ள மெழுகறையினின்றும் சில பாளங்களை ஒவ்வொன்றாய் எடுத்து,

அவற்றை இடுக்கிபோன்றுள்ள தனது கால்களாற் பற்றி, நாவைக் கரணையாக உபயோகப்படுத்தும். பின்னர் இம்மெழு கடைகளைச் சீர்ப்படுத்தித் தனது உமிழ் நீரால் நனைத்து தான் உட்கார்ந்திருந்த இடத்தில் உறுதியாய் ஒட்டி, அங்கிருந்து கிளம்பி, ஏனைய ஈக்களோடு ஈயாய்ப் போய் உட்காரும். இந்த ஈ இப்பொழுது அஸ்திபாரம் போட்டுவிட்டுப்போய் இருக்கிறது. உண்மையிலே தேனீக்களும் மனிதரைப்போலவே அஸ்திபாரக்கல் ஊன்றிய பின்னர்தான் மேல் வேலை தொடங்குமாம். இதன் பிறகு வேறு சில ஈக்கள் அவ் வஸ்திபாரத்தின் பேரில் சுவர் எழுப்பி ஓர் சிற்றறை கட்டும். இவ்வறையைச் சுற்றிலும் அடுத்தடுத்துப் பல அறைகள் எழுப்பப்படும். இவ்வறைகள் நிரை நிரையாய், பெரும்பாலும் அறுகோண வடிவமுள்ளனவாகவே இருக்கும். தாம் அறுகாற் சிறு ஜந்துக்களாகையால் தாம் இருக்கும் அறைகளை இவை அறுகோண வடிவமாக அமைக்கின்றன போலும். இங்ஙனம் இவை அறுகோணமாக அமைப்பது தடுப்புச் சுவர்கள் ஏற்ற வித்தியாசமின்றிப் பொருந்தவும் அநாவசியமாய் மெழுகு அதிகமாகச் செலவழியாமல் இருக்கவுமே யென்றாலும் தவறாகமாட்டாது. நிற்க.

ஒரு அறைக்கும் மற்றொரு அறைக்கும் உள்ள மெழுகுத் தடுப்புச்சுவரின் கனதி $\frac{1}{2}$ அங்குலம் இருக்கும் ஒவ்வொரு அறையிலும் இருவகைச் சிறு அறைகள் உண்டு. இங்ஙனம் இவ்வீக்கள் அறைகள் கட்டக்கட்ட வேறுசில ஈக்கள் கட்டப்பட்ட அறைகளைக் கரடுமுரடு இன்றிச் சமன்படுத்தும். மற்றும் சில ஈக்கள், தம் கை, கால், வாய், சரீரம் முதலியவற்றைக்கொண்டு வெகுநேரம் வேலைசெய்து

உள்ளே புகுந்தும் வெளியே வந்தும் அறைகளைச்சிர்படுத்தி மெருகு கொடுத்தாற்போன்று பளபளப்பாக்கும். பின்னும் சில ஈக்கள், இவ் வறைகளில் தப்பித்தவறி இருக்கும் இடுக்குகளும் நன்றாய் அடைபடுமாறு, முன்னரே தாம் பூவரசு முதலியவற்றினின்றும், ஏனைய செடிகளினின்றும் ஒருவகைப் பசையையும், சுக்கில் மொட்டிலிருந்து எடுத்துச் சேகரித்து வைத்திருக்கும் பிசுபிசுப்புடன் கூடியிருக்கும் குங்கிலியத்தையும் பூசும். இப்பூச்சினால் வேறு நன்மையும் உண்டு. எங்ஙனமெனில் அது தொற்று வியாதியை வரவொட்டாமற் றடுக்கக் கூடியதாம். நிற்க.

இன்னும் சில ஈக்கள், வீடுகட்டி முடிக்கும் வேலையில் அமர்ந்துள்ள ஈக்களுக்கு ஆகாரந்தேடிக் கொண்டுவந்து கொடுக்கும். ஏனெனில், இவ்வீக்கள் வீடுகட்டுவதைவிட்டு இரைதேடப் புறப்பட்டால் காலதாமதம் ஆகு மென்றே போலும். இங்ஙனம் கட்டப்பட்ட அறைகளில் தான், ஈயானது தேனை நிரப்பி, அது ஒரு சிறிதும் வழிந்தோடாவண்ணம் ஒவ்வொரு அறையையும் மெழுகுத்துண்டுகளால் அடைக்கும்.

சுமார் 14 அங்குல நீளமும் 7 அங்குலம் அகலமும் உள்ள ஓர் தேன்கூடு சிற்றீக்களால் 24 மணிநேரத்திற்குள் கட்டி முடிக்கப்படுமேயானால் இவ்வீக்களின் சுறுசுறுப்பையும் விடாமுயற்சியையும் புத்திகூர்மையையும் திறமையையும் என்னென்று எடுத்துரைப்போம்!

இவ்வறைகள் யாவும் அநேகமாய் உருவத்தில் ஒத்திருப்பினும் அளவில் ஒத்திரா. அறை பெரிதும் சிறிது

மாகத் தான் இருக்கும். அறைகள் யாவற்றினும், அடியில் தொங்குவதும் குவிந்த வடிவுள்ளதுமான அறையே பெரிது. இப்பெரிய அறைக்கு "ராஜமாளிகை" என்று பெயர். இத்தகைய "ராஜமாளிகைகள்" சில கூடுகளில் ஐந்து அல்லது ஆறும் இருக்கும்.

VI. மூவகை ஈக்கள்.

அறைகள் யாவும் அளவில் ஒரே மாதிரியாய் இல்லாமல் ஏன் ஒரு அறை மட்டும் எல்லாவற்றினும் மிகப் பெரிதாயும், வேறு சில அறைகள் மிகச்சிறிதாயும் மற்றுஞ்சில அறைகள் இச்சிறு அறைகளினும் சற்றுப் பெரிதாயும் இருக்கின்றன? மூவகைப்பட்ட அறைகளுக்கும் காரணம் தேன் கூண்டிலுள்ள ஈக்களிற் சிலவற்றைப் பரிசோதித் தறிவோமேல் நன்கு புலப்படும்.

இராணி ஈ.

முதலாவது, நாம் அதிமிகப் பெரிய அறையாகிய "ராஜமாளிகை"யைப் பரிசோதித்தறிவோம். இவ்வரச மாளிகை, சுற்றளவில் மூன்று சிற்றீக்களின் அறைக்குச் சரியாக இருக்கும். தவிரவும் அது ஏனைய அறைகள்போல் அறுகோண வடிவமாய் இராமல் உருளைபோன்று இருக்கும். இவ்வறையில் இருக்கும் ஈயானது, ஏனைய எல்லா ஈக்களைக் காட்டிலும் பெரிதாயும், நீண்ட வயிறுடையதாகவும் இருக்கிறதெனத் தெரியவரும். இது தனது தேகத்தை முற்றிலும் மூடப்போதாத குட்டைச் சிறகுகளை யுடையதா யிருக்கும். இதற்கு வளைந்த கொடுக்கு உண்டு. அது கொண்டு இது படுகொட்டுக் கொட்டும். இதனை உற்று நோக்கின்,

இஃதோர் பெண் ஈ என்பது தெற்றெனப் புலப்படும். அறைக்குள் இருக்கும் 60,000 ஈக்களிலும் இது ஒன்று தான் முட்டையிடக்கூடியது. இதன் வேலை ஆயிரக் கணக்கணக்கான முட்டைகளை இட்டுக்கொண்டு சுகமாகக் காலம் கழிப்பதும் ஈக்கள் பல்கிய காலத்து அவற்றை வேற்றிடங்களுக்கு இட்டுச் சென்று புதுக் குடும்பம் ஸ்தாபித்து விருத்தி செய்வதுமே. உண்மையிலேயே அதற்கு ஒரு சிரமமும் இல்லை. ஏனெனில், அதற்குப் படுக்கை இருக்கை முதலிய அமைப்பதோ, உணவு ஊட்டுவதோ, தேன் உண்பிப்பதோ, சகலமும் சிற்றீக்களின் வேலையாய்ப் போய்விடுகிறது. சிற்றீக்களுக்கு இதனிடத்தில் பயபக்தி விசுவாசம் அதிகம். இப்பெண் ஈக்கு "இராஜாத்தி" அல்லது இராணி ஈ என்று பெயர். இது முட்டையினின்றும் வெளிக் கிளம்பும்போது ஏனைய ஈக்களைப் போலவே அதி அவலக்ஷணமுள்ள ஓர் சிறு வெண் புழுவாகத்தான் இருக்கும். முட்டையாக இருந்த ஈ, தான் பிறந்த 13 தினங்களில் ராணியாகும் நிலை எய்தும். இதற்கு எதற்கும் இல்லா மேன்மை கிடைக்கப்போகிறதென்று அதன் அறையைப் பார்த்தே அறிந்துகொள்ளலாமன்றோ? இது கொழுத்துப் பரிபக்குவமடையுங்கால் இதற்கு எவ்வளவு பெரிய இடம் வேண்டியிருக்குமோ அவ்வளவு பெரிய இடத்தை முன்னுக்கு முன்னாலேயே உணர்ந்து அமைக்கும் சிற்றீக்களின் புத்தி என்ன புத்தி! இம்மட்டோ? இவ்வீ கூடிய சீக்கிரத்தில் கொழுத்துப் பருத்துப் பரிபக்குவ மடைந்து சந்ததி விருத்தி செய்யுமாறு பூச் சத்துக்களினின்றும் ஓர்வகைப் பாகை உண்டாக்கி சிற்றீக்கள் இதற்கு ஊட்டுமாம்! நிற்க.

இவ்வளவு மகத்துவத்துடன் வளர்ந்து முதிரும் இந்த இராணி ஈ, தேசாஷ்ண நிலைமைக்கேற்ப முட்டையிட்டுத் தள்ளும். இது முட்டையிட முட்டையிட இது இருக்கும் இடத்திற்கப்பாலுள்ள அறைகளில் வைக்கப்படும். இம்முட்டைகள் புழுவாக ஐந்து தினங்களாகும். அவை குஞ்சு பொரிக்கப்படும்பொழுது, தாய்போலவே சிறகு முளையாச் சிறு வெண்புழுக்களாய், பட்டுப் பூச்சி நூற்பது போல் பட்டைநூற்று அதனைத் தமக்கு ஓர் போர்வையாக்கிக் கொள்ளும். ஏனெனில், அவைகளும் உயிர்ப்பிராணிகள் அன்றோ? அவைகட்கு மட்டும் குளிராதா? இப்புழுக்கள் தாம் பிறந்த எட்டாம் நாளில் சிறகு பெற்றுத் தாமிருக்கும் கூடு கொள்ளும் மட்டும் வளரும்வரை சிற்றீக்களாலேயே பூந்தாது, தேன் முதலியன கொடுக்கப்பட்டு சம்ரக்ஷிக்கப்பெற்று வருகின்றன. நிற்க.

இதுகாறும் இராணி ஈயின் சுகஜீவனத்தைப்பற்றிக் கூறி வந்த நாம் இப்பொழுது அதன் அந்திய காலத்தைப் பற்றிச்சில கூறுவோம். அதற்கு நாம் முற்கூறிய சீரும் சிறப்பும் பூஜ்யதையும், அது சந்ததி அபிவிருத்தி செய்து கொண்டு இருக்கும் வரையிற்றான். வயதாய் விட்டால் பக்குவந் தவறி அதனால் முட்டையிட முடியாதன்றோ? அப்பொழுது சிற்றீக்கள் பெரும் ராஜத்துரோகிகளாகித் தம் இராணியை, ஈவிரக்கமின்றிக் கொட்டியேனும், அரசமாளிகையினின்றும் குளிரில் துரத்தியேனும், அல்லது மூச்சடைத்துச் சாகும்படி, காற்று ஒரு சிறிதும் புக வழியில்லாதபடி, மெழுகினால் அதன் அறையை நன்றாய் அடைத்தேனும் கொன்றுவிடும்.

முற்கூறிய விதத்தைத் தவிர பிறவிதங்களிலும் இராணி ஈக்கு அகால மரணம் சம்பவிப்பதுண்டு. எங்ஙனமெனில், இவ்வீயானது ஆண் ஈக்கள் முட்டை அதிகமாய் இட்டாலும், ஈக்கள் பல்கிய காலத்து அதிகப்பட்ட ஈக்களை வேற்றிடத்திற் கிட்டுச் செல்லாமல் இருந்தாலும் சிற்றீக்களுக்கு வெகு கோபம் ஜனித்து, நாம் முற்கூறிய வகையில் யாதானும் ஓர் விதமாய் அதன் உயிரைப்போக்கி விடும். இது அகால மரணத்திற்குள்ளாகாது கருதி வளர்க்கப்பெறின் மூன்று அல்லது நாலு வருஷம் உயிரோடிருக்குமாம். இராணி ஈ மட்டும் இல்லாவிடில் கூட்டில் ஈக்களே இரா. இவ் விஷயம் ஞாபகத்தில் வைக்கத்தக்கது.

சிற்றீக்கள்.

இனி, நாம், ராஜமாளிகையை விட்டுவிட்டுச் சிறிய அறைகளைப் பரிசோதிக்கப் புகுவாம். இச் சிற்றறைகளில் சிற்றீக்கள் காண்போம். இவை ஒவ்வொன்றும் அரை அங்குல நீளமும் ஆறில் ஒருபங்கு அங்குல அகலமுமாய் இருக்கும். இவை முன்பு முட்டைகளாக இருந்து, தாம்பிறந்த 20-ஆம் நாள் சிற்றீ உருக்கொண்டு விளங்குவன. இவை அறுகூறுடைய அடிவயிறும் பன்னிரு கணுக்கள் கொண்ட இரண்டு தும்பிகளும் பெற்றுள. இவற்றின் தும்பிகள் ஏனைய ஈக்களின் தும்பிகளினும் மிக நீண்டவையாக இருக்கும். இவ் வீக்களுக்குத்தான் மெழுகறையும் மகரந்தத் தூள் சேர்க்கும் பையும் உண்டு. இப்பைகள் இவற்றின் கால்களில் அமைந்துள. இவற்றிற்குச் சிறிதும் வளையாத நீண்ட கொடுக்குகள் உண்டு. இவற்றின் கொட்டு இராணி ஈயின் கொட்டினும் அதிக வேதனை தரக்கூடியதாய்

இருக்கும். இத்துணை இலக்கணமும் வாய்ந்த சிற்றீக்களுக்கு "வினையாளர்" (Workers) அல்லது, "வேலைக்காரர்" என்று பெயர்.

இவைகளுக்கு இப்பெயர் இடப்பட்டது வெகு சரியே. எங்ஙனமெனில் அறைகள் கட்டுவதும் ஆகார முதலிய தேடிக்கொண்டு வருவதும், ஆகாரம் இருக்கும் இடங்களைப் புதிது புதிதாய்க் கண்டு பிடிப்பதும், சத்துருக்களைக் கொட்டித் துரத்திக் கூட்டைப் பாதுகாப்பதும், இராணி ஈக்குச் சகல சௌகரியங்களையும் செய்தும் செய்வித்தும் அதனையும் அதன் முட்டைகளையும் போற்றி வளர்ப்பதும், மழை காலத்திற்கு வேண்டிய ஆகாராதிகளை வேனிற்காலத்திலேயே சேகரித்து வைத்துக்கொள்வதும், ஏனைய கருமங்களும் இவற்றைப் பொறுத்தவைகளே. இவ்வீக்களே கூட்டில் மிகுதியாய்க் காணப்படுவன. இவை ஆணோ பெண்ணோ என்று சாதாரணமாகப் பகுத்தறிய முடியாது. ஆயினும், சமீபத்தில், இவையாவும் பெண்ணீக்களே என்றும், ஆனால் பக்குவம் அடையாது இருக்குமாறு, அவைகள் முட்டைகளாய் இருக்கும்போதே, பெண்தன்மை போக்கப்பட்டு. சிற்றறைகளில் அடைத்து வேலையாட்கள் ஆக்கப்படுகின்றன என்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள். இவை ஒரு வருடத்திற்கு அதிகம் உயிரோடிரா. இவற்றைப் பற்றிய பிற விஷயங்கள் ஆங்காங்குக் கூறப்படும்.

ஆண் ஈக்கள்.

இனிச் இச் சிற்றீக்களை விட்டு இவை இருக்கும் அறைகளினும் பெரிதாய் உள்ள அறைகளைப் பார்ப்போம். அறைகள் பெரிதாக இருப்பதால் அவற்றில் உள்ள ஈக்களும்

பெரியனவாக இருக்கும் என்று சொல்லாமலே தெரியவரும். இவை முன்பு முட்டைகளாக இருந்து தாம் பிறந்த 24-ஆவது நாள் இப்பொழுது நாம் காணும் உருவோடு தோன்றுவன. இவை 13 கணுக்கொண்ட இரு தும்பிகளுடையன. இவற்றிற்குக் கொடுக்கில்லை. ஆதலின் இவை கொட்டவே கொட்டா. இவைகள் கதியும் மந்த கதியே. பறந்து செல்லும் பொழுது இவை தாம் உங்காரம் செய்துகொண்டு போவன. இவை உச்சந்தலைக்கு அப்புறமும் இப்புறமும் புடைத்துப் பரந்த கண்களையுடையன. பார்த்த மாத்திரத்திலேயே இவை ஆண் ஈக்கள் என்பது விளங்கும். இவைகட்குச் "சோம்பர்" (Drones) என்று பெயர். ஏனெனில், இவ்வீக்களில் எதுவும் தேனும் சேர்க்காது; வீடும் கட்டாது; மெழுகும் உற்பத்தி செய்யாது. ஒரு வேலையுமின்றி அகப்பட்ட பூக்களில் வாயை வைத்து மது அருந்தி வயிற்றை நிரப்பிச் சுகமாய்த் தன் இருப்பிடம் போய்க் காலங்கழிக்கும். ஆண் ஈயின் வேலையெல்லாம் சந்ததி உற்பத்தி செய்வதுதான். இது மெத்த பாக்கிய சாலி என்று எவரும் இதனிடத்திற் பொறாமை கொள்ளவேண்டாம். ஏனெனில், அந்தோ! இது பெண் ஈயோடு சம்பந்தப்பட்ட மாத்திரத்தில் தனது ஜீவாதார பாகத்தையும் அதனால் உயிரையும் இழக்கவேண்டி வருகிறது. தவிரவும், ஆண் ஈக்கள் கொண்டாட்டம் எல்லாம் குளிர் காலம் வருமட்டே. மாரிகாலம் தலை காட்டியதோ இல்லையோ, இவை பாடு திண்டாட்டம் தான். ஏனெனில், முதலில் இவற்றிற்குக் குளிரில் வெளிக்கிளம்ப மனம் வராது. மனம் வந்த போதிலும் தேன் கிடைக்காது. காரணம் யாதெனில் தேன் உற்பத்திக்கு உஷ்ண காலமே ஏற்றது. தவிரவும் மாரிகாலத்தில் பூக்கள் இருப்பது அரிது. ஆதலின்

இவை பசியினிமித்தம் பெரிதும் வருந்தும். "சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்" என்ற முதுமொழி பொய்க்குமா? இவை சிற்றீக்கள் சேர்த்து வைத்திருக்கும் தேனையாவது உண்டு, கொழுத்து விட்டெரியும் பசித்தழல் அவிக்கத் தேனண்டை செல்லும். ஆனால் சிற்றீக்களோ நிர்த்தாக்ஷண்யமாய், சிறிதும் இரக்கமின்றி, முன்னுக்கு முன்னேயே மாரிகாலத்தில் வேண்டிய தேனை வேனிற்காலத்திலேயே சேர்த்து வைக்கச் சிறிதும் பிரயாசைப்படாது சுத்த சோம்பேறிகளாய்த் திரிந்து காலங்கழித்த ஆண் ஈக்களைப் படுகொட்டுக் கொட்டிக் கொல்லும். இவ் விஷயம் அறியும் நாமும், நமக்குப் பிற்காலத்தில் வேண்டியதை இளமை முதற்கொண்டே சோம்பேறித்தனத்தை ஒழித்துச் சுறுசுறுப்புடன் சிற்றீக்களைப்போல், தேடிவைத்துக் கொள்ளாவிடின், அந்திய காலத்தில் ஆண் ஈக்களைப்போல் பட்டினியால் வருந்தவேனும் உயிரிழக்கவேனும் நேரும் என்பதை உய்த்துணருவோமாக. நிற்க.

இவ் வீக்களிற் பல இனம் உண்டு. அவற்றுள் சில மலைத்தேனீ, நாட்டுத்தேனீ, கொசுகுத்தேனீ என்பன. இவையாவிலும் அதி மூர்க்கமானது மலைத்தேனீயே.

VII. ஈக்களின் அபிவிருத்தியும் இடப் பெயர்ச்சியும்:

இதுகாறும் மூவகை ஈக்களைப் பற்றியும் சில கூறிவந்தோம். இனி, இவற்றின் அபிவிருத்தியையும் அதனால் நேரும் இடப் பெயர்ச்சியையும் பற்றிச் சிறிது கூறுவாம்.

இராணி ஈ சீதோஷ்ண நிலைக்குத் தக்கபடி முட்டையிடும் என்று முன்பு சொல்லி யிருக்கிறோமல்லவா? அது

ஒரே நாளில் 300 முதல் 2000 வரை முட்டை இடக்கூடும். (ஆனால் இது பிரதிதினமும் இவ்விழுக்காடு முட்டையிடும் என்று நினைத்துவிடக் கூடாது.) இங்ஙனம் ஈக்கள் அதிக மாய்ப் பல்குவதால் முன் இருந்த இடம் எப்படிப் போதும்? ஆதலின் இவை வேற்றிடம் நாடிச் செல்வது அத்தியா வசியம் அன்றோ?

இவை சாதாரணமாகப் பல்கிப் பெருகுவது, மே மாதத் திலேயே. இருந்தாற்போலிருந்து நிசப்தமாயிருக்கும் நல்ல நிசி வேளையில் ஓர் நாள் உங்காரப் பேரிரைச்சல் உண்டா கும். இவ் விரைச்சலே அதன் அபிவிருத்திக்கு அறிகுறி. இவ்வுங்காரம் இரண்டு அல்லது மூன்று தினங்கள் இருந்து கொண்டிருக்கும். மூன்றும் நாள் மதியத்தில் இவைகளிற் பல, வேற்றிடம் செல்ல ஆரமபிக்கும். இவ் வீக்களை இராணி ஈயே வேற்றிடத்திற்கு இட்டுச்செல்லும். இராணி ஈ தம்மை நடத்திச் செல்லாவிடில் இவை முன்னிருந்த கூட்டை விட்டு நகரா. இராணி ஈயானது சிறிது தூரம் அவற்றுடன் சென்று, பின்னர் திரும்பி, தன் பழைய இடம் வரினும், கூடச்சென்ற ஈக்களும் இதனைத் தொடர்ந்தே தாமும் பழைய கூட்டிற்கு வந்துவிடும். அப்பொழுது சிற்றீக்கள் கோபங்கொண்டு பொது நன்மை கருதி இருப்பிடம் விட்டுச் செல்ல மனமிலா இராணியைக் கண்ணோட்டமின்றி கொட் டிக் கொல்ல ஆரம்பிக்கும். ஆதலின் இராணி ஈயானது தன் னுயிரைக் காப்பாற்றிக்கொள்ளவும், கூடச் செல்லும் ஈக்கள் திரும்பாதிருக்கவும் வேண்டி, தான் பழைய கூட்டுக்குத் திரும்பாமல் இவற்றைப் பிறிதொரு இடத்திற் கிட்டுச் சென்று முன்போல இவைகளைக் கொண்டு ஒரு கூடு கட்டு

வித்து ஆகாராதி சேர்ப்பித்து அவைகளை அதில் இருத்தித் தாலும் வாழும்.

VIII. அரசுமாற்றம்.

"இராணி ஈ இல்லாவிட்டால் கூட்டில் ஈக்கள் இரா" என்று கூறப்பட்டதே. இப்பொழுது இராணி ஈ தன் பிரஜைகளில் பலவற்றுடன் வேற்றிடம் போய்விட்டதே. இனிப் பழைய கூடு காலியாய்த்தானே இருக்கும்?" எனச் சிலர் ஐயமுறலாம். பின் சொல்லப்படும் விஷயங்களால் இச் சந்தேகம் நிவிர்த்தியாகும். தேன் கூட்டில் "அரசமாளிகைகள்" ஐந்தாறு இருக்கும் என முன்பு நாம் கூறியது ஞாபகத்தில் இருக்கிறதா? இவ்வரசமாளிகைகள் எதற்காக என்று நினைக்கிறீர்கள்? கப்பல்களில் ஆபத்துக் காலத்தில் உதவுமாறு சில ஜீவரக்ஷ ஓடங்கள் (Life boats) எக்காலத்திலும் தயாராய் வைத்திருப்பது போல், வேற்றிடங்களுக்குப் புதுக் குடும்பம் ஸ்தாபிக்கப் போகவேண்டி வருவதனாலோ, அங்ஙனம் போகாமையால் கொட்டிக்கொல்லப் படுவதனாலோ, அல்லது ஆயுள் முடிந்து இறத்தலினாலோ, இராணி ஈ இன்றிக் கூடு காலியாகவிருக்கும் என்று முன்னுக்கு முன்னாலேயே உணர்ந்துகொண்ட சிற்றீக்கள், பின்னால் நேரிடக் கூடிய விபத்தைத் தடுக்குமாறு சில பெண் ஈ முட்டைகளை எடுத்து, பெரும்பெரும் மெழுகறைகளுள் அடைத்து, பாகு முதலியன கொடுத்துப் போஷித்துக் கொழுக்க வைத்திருக்கும்.

இராணி ஈயானது தனது பரிவாரத்துடனும் பிரஜைகளுடனும் புறப்பட்டுப் போன சிறிது நேரத்திற்கெல்லாம் பருவம் முதிர்ந்து பக்குவம் அடைந் இவ் வீக்களில் ஒன்று

ஏனைய ஈக்களின் ஆரவாரத்தால், நிகழ்ந்தன யாவும் உணர்ந்து, இராஜ மாளிகையினின்றும் இராணியாக விரும்பி வெளிக் கிளம்பும். உடனே சிற்றீக்கள் யாவும் ஆனந்தம் மேலிட்டு இரைந்து அரச வாழ்த்துக்கூறல் போல் உங்கரிக்கும். இதற்கு எளிதில் பட்டம் கிடைத்துவிடுமென எண்ணவேண்டாம். ஏனெனில் இஃதொப்ப ராஜமாளிகைகளில் வளர்ந்த ஏனைய ஈக்களில் ஒன்றுக்கு அது பட்டம் பெறுவது பொறுமையாயிருக்கும். தவிரவும், தானே அக்கௌரவமும் பட்டமும் பெறவேண்டுமென்று அது விரும்பும். ஆதலின் இது அதனை முற்றும் ஒழித்துவிட எண்ணி ஒரே பாய்ச்சலாய்த் தன் எதிரியின் பேரில் பாயும். அப்பொழுது அவ் விரண்டிற்கும் நடக்கும் போரைக் கம்பர், வில்லி போன்ற கவிராயர்கள் அல்லவோ இருந்து வர்ணிக்க வேண்டும்?

"நத்தியும் தோளும் தோளும் தாக்கியும் சென்னிகொண்டு
மொத்தியும் பற்பல் சாரி முடுக்கியும் வயிரக்கையாற்
குத்தியும் காலும் காலும் கோத்தும்மற் கூறுதோன்ற
ஒத்தியும் பாறைஎன்ன *உரனுடன் உரன்கள்சேர்த்தும்"

வெகு நேரம் சண்டைசெய்யும்.

செய்த சண்டையில் இவ்விரண்டும் களைத்துத் திகில் அடைந்து பின்னிட ஆரம்பிக்கும். இச் சமயத்தில் இது காறும் உங்கரித்து வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த சிற்றீக்கள் சும்மா இராமல் ஓர் பேரிரைச்சல் எழுப்பும். தக்ஷணமே சில சிற்றீக்கள், கூட்டத்தினின்றும் வெளிக் கிளம்பித் தப்பி யோடும் பெண்ணீக்கள் மேல் பாய்ந்து,

---

*உரன்—மார்பு.

அவை பின்னிடுவதை நிறுத்த ஆரம்பிக்கும். உடனே இவ்விரண்டுக்கும் என்றுமில்லாக் கோபம் ஜனித்துவிடும். ஆனால் இவை தம் கோபத்தைச் சிற்றீக்கள் பேரில் செலுத்துவதற்குப் பதிலாக ஒன்று மற்றொன்றையே பரஸ்பரம் எதிர்த்துத் தாக்கும். முடிவில், இவ்விரண்டினுள் அதிபலசாலியாய் உள்ளது மற்றதன் சிறகினைப்பற்றிக் கவ்விப்பிடுங்கிப் பாதுகாப்பு எதுவுமின்றி இருக்கும் அதன் சரீரத்தில் அதி உக்கிரத்துடன் கொட்டும். இக்கொட்டினால் எதிரி மரண வேதனைப்பட்டு மாண்டுபோம்.

பின்னர் ஜயங்கொண்ட இவ்வீயானது எஞ்சிய ராஜ மாளிகைகள் நான்கிலும் புகுந்து, யோசனையற்று மெய் மறந்து நித்திரைசெய்து கொண்டிருக்கும் பக்குவமடையாக் குஞ்சு ஈக்களையெல்லாம் ஒவ்வொன்றாய்க் கொட்டிக்கொன்று அவற்றின் அறைகளையும் சின்னாபின்னமாக்கிவிடும். இது இப்படி அடுதொழில் புரிவது, இவை எப்போதேனும் தனக்கு எதிரிகளாய் வரக்கூடுமென்ற அசூயையினாலும் அச்சத்தினாலுமே. இதன் குரூரச்செய்கை சிற்றீக்களுக்கு மனவருத்தம் உண்டுபண்ணும் என்று நினைக்கிறீர்களோ? சிற்றீக்களுக்கு இதனால் சந்தோஷமே பிறக்கும். இதன் வீரத்தனத்திற்குத் தாம் மெச்சியதாக ஓர்வகைச் சந்தோஷப் பேரிரைச்சலால் அறிவிக்கும். பின்னர் இது ஈக்களால் அரசியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு ராஜ்யபாரம் வகிக்கும். பழைய இராணிக்கு எவ்வளவு மரியாதை நடந்ததோ அவ்வளவு மரியாதை இதற்கும் நடக்கும். நிற்க. இப்பொழுது ஒரு இராணி கிடைத்துவிட்டதால் கூடு காலியாகக் காரணமில்லையே. ஆதலால் " இராணி ஈ " இல்லாவிடில் கூடுகாலி

என்று கொள்ளவேண்டுமேயன்றி இன்ன இராணி ஈ இல்லா விடில் காலியாய்விடும் என்று நினைத்துவிடக் கூடாது.

IX. சிற்றீக்களால் இராணி ஈ சிருஷ்டிக்கப்படுதல்.

இராஜமாளிகைகள் பல கட்டி எவ்வளவு சிரத்தை யுடன் பாதுகாக்கப்பட்டுவரினும், சில சமயங்களில், ஒரு இராணிஈ கூட இல்லாமற் போகுங் காலம் வரினும் வரும். அப்பொழுது ஈக்கள் என்னசெய்யும்? தங்களில் ஒன்றற்குப் பட்டங்கட்டி அரசுகொடுக்கும் என்று நினைக்கிறீர்களோ? இல்லை இல்லை. ஏனெனில் அரசியின் அதிமுக்கிய வேலை முட்டையிடுதல் அன்றோ? சிற்றீக்களோ பெண்தன்மை போக்கப்பட்டவை ஆதலால் அவைகள் அவ் வேலைக்கு உரியன அல்லவே. பின்னை என்னதான் இவை செய்கின் றன வெனில், தாமாகவே புதிதாய் ஓர் இராணி ஈயை சிருஷ் டிக்கத் தொடங்குகின்றன. இவை எப்படிச் சிருஷ்டிக்கின் றன என்று பார்ப்போம்.

இவை செத்த இராணிக்காக ஒப்பாரிவைத் தழுது துக் கம் காத்து ஓய்ந்தபின்னர், தங்கள் அதி விசித்திரக்கூட்டின் அறைகளை ஒவ்வொன்றாய் அழித்துக்கலைத்து, ஒரு பெண் புழுவைத்தேடிக் கண்டுபிடிக்க முயலும். இவை இங்ஙனம் செய்வதால் மெய்மறந்து நித்திரை செய்துகொண்டிருக்கும் புழுக்களிற் சில நசுங்கிச் சாகத்தான்வேண்டிவரும். ஆயி னும் புழுக்கூட்டில் அதிகமாண சம்பவம் இராது. ஐந்து அல்லது ஆறுபுழு அழிந்தால் அதிகம். ஏனெனில் சீக்கிரத் தில் இவை நாடும் பெண்புழு ஒன்று தட்டுப்பட்டுவிடும்.

உடனே காலதாமதஞ் செய்யாது சிற்றீக்களிற் சில அதனைச் சுற்றிலும் உள்ள சிற்றறைகளைப்பிடுங்கி யெறிந்து அவற்றை ஓர் விசாலித்த ராஜமாளிகையாக்கும். இவ் விராஜமாளிகை யில் அது 10 நாள் இருக்கும். இப் பத்துநாளும் அதற்குக் கொடுக்கும் பாகுமுதலிய ராஜ உணவினுல் அது பருத்துக் கொழுத்துப் பரிபக்குவம் அடைந்து இராணி ஈயாகி அரசு செலுத்த ஆரம்பித்துவிடும். சிற்றீக்கள் வழக்கம்போல் இவ் விராணியிடத்தில் முறைபிசகாது நடந்துகொள்ளும்.

X. அரசியில்லாக் கூட்டிற்கு ஓர் அரசி அளித்தல்.

சில சமயங்களில் சிற்றீக்கள் தம் சொந்த முயற்சியினு லாவது அரசமாளிகையினின்றாவது ஒரு இராணி ஈ கூடப் பெறக்கூடாமற் போகவேண்டி வரும். எங்ஙனமெனில், நாம் முற்கூறியபடி, குறித்த சிலதினங்களுக்குள் பக்குவம் அடை யக்கூடிய பெண் புழுக்கள் எக்காலத்தும் தயாராய் இருந்து கொண்டிருக்கும் என்பது என்ன நிச்சயம்? அன்றியும், மனிதரால் தேன் கொள்ளப்படும் பொழுது கூட்டில் உள்ள க்கள் பலவிதத்திலும் நாசமுறக்கூடுமே. அங்ஙனம் நாச முறுவனவற்றுள் இராணி ஈயும் இராஜமாளிகை வாசிகளும் பெண் புழுக்களும் அடங்குமன்றோ? அப்பொழுது உயிர்க் கஞ்சி ஓடித்தப்பிய ஈக்களின் கதி என்ன?

இவ் விருவகை சம்பவங்களும் நிகழும் காலங்களில் அவை இன்னும் யாதானும் ஓர் கூட்டை நோக்கிச் சென்று அக்கூட்டில் உள்ள ஈக்களுடன் சேர்ந்து வாழ்ந்து காலம் கழிக்கும் என்று எண்ணுகிறீர்களோ? இல்லை; இல்லை. அங்ஙனம் செய்வது சிறிதும் முடியாத காரியம். ஏனெனில்

ஒரு கூட்டில் உள்ள ஈக்கள் அதே கூட்டிலுள்ள பிற ஈக்க ளுடனேயே எவ்வித வித்தியாசமுமின்றி ஒத்து வாழுமே யன்றி அந்நிய கூட்டு ஈக்களைக் கிட்ட வரவொட்டா. அவை வந்து சேர்ந்த மாத்திரத்திலேயே கொட்டுண்டு சாகவேண்டி யதுதான். ஆதலின் உயிர்க்கஞ்சி ஓடும் ஈக்கள் என்ன செய்யும்? ஏற்கனவே தேன் கொள்ளப்பட்டதும் காலியாய்க் கிடப்பதுமான ஓர் கூடு சமீபத்தில் தென்பட்டால் அதனுள் போய் அடையும், அல்லது புதுக்கூடுகள் கட்டும் என்று வைத்துக்கொள்வோம். ஆயினுமென்ன? அக் கூட்டில் அவை தங்கமுடியுமோ? ஏனெனில் அதில் மட்டும் இராணி ஈ ஏது? ஆதலின் அவை அங்கிருந்து கிளம்பி வேற்றிடம் தானே செல்ல வேண்டிவரும்?

ஆனால், தேனீ வளர்ப்போர் ஓர் வகைச் சூழ்ச்சியால் அவை தாம் முன்னிருந்த கூட்டை விட்டு ஓடாமல் அதிலே யே இருந்து வாழும்படி செய்வர். "தேனீ வளர்ப்போர்" என்ற வார்த்தையைக் கேட்ட மாத்திரத்திலேயே அனேகருக்கு வியப்பும் நகைப்பும் உண்டாகலாம். "தேனீக்களையும் வேண்டு மெனக்கொண்டு வளர்ப்பவரும் உளரா? அப்படி உளர் எனி னும் அவற்றை வெகு சிரமப்பட்டாவது கூட்டிற்குள் இருத் தவேண்டு மென்ற அக்கறை ஏன்?" என அநேகர் எண்ண லாம். உண்மையிலேயே ஈக்களைச் சர்வ ஜாக்கிரதையுடன் மேற்றிசையோர் போற்றி வளர்த்து வருகின்றனர். அங் ஙனம் அவர்கள் வளர்ப்பது, அவை கிளி, நாய், பூனை முத லிய பிராணிகள்போல் கொஞ்சி விளையாடக்கூடியவை என் பது பற்றி அன்று; பின்னை, அவற்றை வளர்த்துப் பல்குவித் துப் பல கூடுகள் உண்டாக்கித் தாமும் மிக்க தேன் பெற்று

வியாபாரம் செய்து பெரும் லாபம் அடையக் கருதியே. இவை தம் கூட்டை விட்டு ஓடிப்போய் விடுமாயின், இவர்கள் தேன் பெறுவது எங்ஙனம்? ஆதலின் இவர்கள் தொழில் வீண் தொழிலாகாதே?

இனி அவர்கள் எவ்விதச் சூழ்ச்சியால் அதனைக் கூட்டிற்குள்ளேயே இருக்கும்படி செய்கின்றனரெனப் பார்ப்போம். ஸ்திரீக்கள் எவ்விதத்திலும் இராணி ஈ பெறக்கூடாத விஷயம் அவை எழுப்பும் ஓர் வகை அதி துக்கப் பேரிரைச்சலால் தேனீ வளர்ப்போர் அறிவர். இவ்விரைச்சல் கேட்ட 30 மணி நேரத்திற்கெல்லாம், அவர்கள், தாம் வளர்க்கும் வேறொரு கூட்டிலுள்ள இராஜ மாளிகையினின்றும் பருத்துக்கொழுத்த ஓர் பெண் ஈயையேனும் அல்லது இராணி ஈயையேனும், அதன் கொட்டுக்கு உட்படாமல் ஓர் வகைச் சூழ்ச்சியால் எடுத்து அதனை அரசி இழந்த ஈக்களுக்கு அரசி ஆக்குவர்.

ஆனால், "இது என்ன ஒரு சாமானிய காரியமா? வேறு கூட்டீக்களை வெருட்டிக்கொல்லும் ஈக்கள் இவ்வந்நிய கூட்டு இராணியை மட்டும் அங்கீகரித்திடுமோ?" எனச் சிலர் ஐயமுறலாம். இவைகட்கு அதனை அங்கீகரித்திட ஒரு சிறிதும் மனமில்லை தான். ஆயினும் தேனீவளர்ப்போர் ஓர் உபாயம் செய்து அவற்றைத் தாம் கொடுக்கும் அரசியினை அத்தியந்த சந்தோஷத்துடனும் வந்தனத்துடனும் அங்கீகரித்திடச் செய்வர். அவ்வுபாயம் தான் யாதெனப் பார்ப்போம்:

அனேகர் சிறு நுண்ணியகம்பிகளால் அதி நேர்த்தியாகப் பின்னப்பட்ட சின்னஞ்சிறு சுண்டெலிகளைப் பிடிக்

கும் பொறிகளைப் பார்த்திருக்கக்கூடும். தேனீ வளர்ப்போரிடம் பார்வைக்கு இச் சுண்டெலிக் கூடுபோன்றுள்ளதும், ஆனால் அதினும் அதிநுட்பமான வேலைப்பாடுள்ளதுமான ஓர் கம்பிக்கூடு இருக்கும். இக் கூட்டினுள் நாம் சற்று முன் கூறிய அரசியை (அல்லது பெண் ஈயை) அதனுடன் பழகிய அதன் பரிவாரங்களிற் சிலவற்றுடன் பிடித்துப்போட்டு அக் கூட்டின் துவாரத்தை மெழுகினால் அடைப்பர். பின்னர் இக்கூடு சர்வஜாக்கிரதையுடன் ஈக்களிருக்கும் தேன்கூட்டின் முற்புறத்தில் வைக்கப்படும். அப்பொழுது அக் கூட்டின் காவல்ஈக்களிற் சில வாசனையால் புதிய ஈக்கள் சமீபத்தில் இருப்பதை உணர்ந்து அவற்றைக் கொல்லுமாறு அதி உக்கிரத்துடனும் கொட்டும். கொட்டி என்ன பிரயோஜனம்? கம்பியிருந்து காக்கும்பொழுது ஈக்களுக்குச் சிறிதேனும் சேதம் விளையுமா?

தம் முயற்சியும் எண்ணமும் வீணானதுகண்டு அக் காவல் ஈக்கள் வெகு மூர்க்கமாய்க் கூட்டினை மொய்த்து தம்முழு பலத்துடனும் நெருக்கும். இச்செய்கையால் கல்லைக் கிள்ளிக் கைநோவுறுவர்போல் அவ் வீக்கள் ஆகிவிடும். முடிவில் இவற்றிற்குக் கோபத்தினும் ஆச்சரியமே மேலிட்டு, கொட்டுவதையும் நெருக்குவதையும் ஒழித்துப் பிரமித்து அக்கம்பிக் கூட்டினுள் உள்ள ஈக்களைப் பார்த்தவண்ணமாய் இருக்கும். அகஸ்மாத்தாய் அவற்றுள் ஒன்றன் கண்ணுக்கு அரசி புலப்படும். தக்ஷணமே கோபம் போயே போய்விடும். அவை அரசிக்குச் செய்யவேண்டிய சகல மரியாதையுடனும் பணிந்து அதனை வணக்க ஒடுக்கத்துடன் சூழும். அரசியின்றித் தவித்த தமக்கு அரசு கிடைத்த இச் சந்தோஷ நற்

செய்நியை இவை தக்ஷணமே மின்னலினும் அதி தீவிரமாகக் கூடெங்கும் பாவச்செய்யும். உடனே கூட்டு ஈக்கள்யாவும் ஒருங்கு கூடி ஆலோசித்து இவ்வீயை அரசியாக ஏற்கும். பின்னர் இவை கம்பிக்கூட்டை அதி நுட்பமாய்ப் பரிசோதித்து, அடைத்துள்ள மெழுகுத்துண்டைப் பற்றி எடுத்து, இராணி ஈயையும் அதன் பழைய பரிவாரங்களையும் வெளிப் படுத்தும். இதுமுதல் அவ்வீ இக்கூட்டின் அரசியாகிக் குடும்ப அபிவிருத்தி செய்து தன் கடமையைச் சரிவர நடத்திவரும்.

அதன் பரிவாரமும் அதனுடன் இருக்க இடம்பெறும். ஒருவேளை அப் பரிவாரம் தம் புதிய இடத்தை விரும்பாது பழைய கூடு நோக்கி ஓடினும், இராணி ஈ எக்காலத்தும் நம்பிக்கை மோசம் செய்யவே செய்யாது! இதனுல் இதன் பரிவாரம் ஓடிவிடுமோ? எனில், அவையும் ஓடா. ஏனெனில் இப் புதிய கூட்டு ஈக்கள் தம்மை வெகுநேரம் மொய்த்து நெருக்கியதால் அக்கூட்டு ஈக்களின் ஓர் வகை வாசனையை இவை பெற்றுவிடுகின்றன. ஆதலின் இவை இவ் வாசனையுடன் தம் பழைய கூடு புகின் அதில் உள்ள ஈக்கள் வாசனை பேதத்தைக் கண்டு இவை வேற்றீக்கள் என எண்ணி கொன்றேவிடும். தவிரவும், முதலில் இவற்றிற்குத் தம் இராணியை விட்டுப்பிரிய மனம் வாராது. நிற்க. இவ்விராணி ஈ இருந்த பழைய கூட்டில் உள்ள ஈக்கள் தமக்கு ஓர் இராணியை நாம் முற்கூறிய எவ்விதத்திலானும் ஒருவிதம் பெறும்.

அரசிழந்த ஈக்களுக்கோர் அரசி கொடுப்போர் கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம் ஒன்றுளது. அஃதென்னவெனில், இராணி ஈ இழந்த 30 மணிக்கு அப்புறந்தான் புதிய

இராணி அளிக்கவேண்டும். ஏனெனில் இவை தமது மரித்த இராணியை மறக்கக் குறைந்தது அவ்வளவு காலம் செல்லும். இடையில் கொடுக்கப்படின் அரசி கொல்லுண்டு சாகும் என்பது திண்ணம்.

XI. சோர ஈக்கள்.

நாம் முற்கூறியபடி ஈக்கள் அரசமாளிகையினின்று வது, தமது சுயமுயற்சியினாலாவது அல்லது தம்மை வளர்ப்போர் மூலமாகவாவது ஓர் அரசி பெறக்கூடாவிட்டால் அவையாவும் சுறுசுறுப்புக் குன்றி பெரும் சோம்பேறிகளே யாகும். தவிரவும் அவைகளுள் ஒற்றுமை என்பது இராது. ஒன்றோடொன்று பொருது துர்வாசமாமுனிவர் சாபத்தால் நவகோடி நாராயணரும் மாண்டதுபோல் மாளும், அல்லது சோர ஈக்களாகும். ஈக்கள் சோரத்தனத்திற் பிரவிர்த்திக்க வேறு காரணங்களும் உள. அவை என்னவென்று பார்ப்போம். பஞ்சகாலத்தில் நாம் பாடுபட்டு அலைந்தும் பட்டினியால் வருந்த நேருவதுபோல் ஈக்களும் தமக்குப் போதுமான ஆகாரம் பெறக்கூடாமல் திண்டாடக்கூடிய காலம் வரும். அக்காலத்தில் இவை பசித்தழல் அவிக்குமாறு கூட்டம் கூட்டமாகத் தம் கூட்டினின்றும் வெளிக்கிளம்பி வேறொரு கூட்டைத் தாக்கிக் காவல் ஈக்களை வென்று கூட்டினுட் புகுந்து அதில் உள்ள தேன் முதலியவற்றைக் கொள்ளையடித்து, அவற்றைத் தமது உறைவிடம் எடுத்துச் செல்ல முயலும். அப்பொழுது கொள்ளையடிக்கப் பெறும் கூட்டீக்கள் தமது முழுபலத்துடனும் எதிரிகளை எதிர்த்துச் சண்டைசெய்யும். எதிர்க்கும் ஈக்கள் வலி குறைந்திருப்பின், அவை கொட்டுண்டு துரத்தப்படும். அவை வலி மிக்கதாயின், காவல்

ஈக்களுக்குத் தப்பி உட்புகுந்து ஆங்கு காணப்படும் ஆகாராதிகளைத் திரட்டிக்கொண்டு வெளிக்கிளம்பி தமது கூடுபுக்குத் தாம் கொண்டுவந்ததை அக்கூட்டீக்களுக்கு அளிக்கும். பின்னர், அவை முன்னினும் அதிகமாய் வெளிக்கிளம்பி தாம் கொள்ளையடித்த கூடு நோக்கியே திரும்பி, பல்வழியாகவும் அதனுட்புகும். புகுந்த பின்னர் அவை செய்யும் முதல் வேலை இராணியைக் கொல்வதே. (ஏனெனில் அப்பொழுதுதான் கூட்டீக்களுக்குள் ஒற்றுமையிராது என்று அவை நன்றாய் அறியும்) இதன் பின் கூடு கொள்ளைதான். பாவம்! கூட்டில் உள்ள ஈக்கள் என்ன செய்யும்! தாமும் கொள்ளை ஈக்களோடு சேர்ந்து தமது கூட்டையே கலைத்து அழித்து, வாய்கொண்டமட்டும் தேனை உண்டு அவ்வீக்களுடன் சேர்ந்து வசிக்கும். இவை இங்ஙனம் முதற் கொள்ளையில் சித்திபெறுமாயின், மானிடச்சோம்பேறிகளைப் போலவே கொள்ளைப் பொருளிலேயே பிரியம் கொண்டு சோர ஈக்களாகி வயிறு வளர்க்கும்.

சில சோர ஈக்கள் யாதானும் ஓர் கூட்டின் முன்புறத்தில் நின்றுகொண்டு கூட்டிற்குத் தேன் கொண்டுவந்து கொண்டிருக்கும் ஈக்களை வழிமறித்து நிறுத்திப் பயத்தினாலும் பலத்தினாலும் அவைகொண்டுபோகும் தேனைத் தம் வாயிற் கக்கும்படி செய்யும். அங்ஙனம் செய்வதால் அவற்றின் மணத்தை அச் சோரஈக்கள் பெற்றுவிடும். உடனே இவை தைரியத்துடன் கூட்டினுட்புக ஆரம்பிக்கும். வேற்று மணமின்மையாலும் தேனுடன் கூட்டிற்குள் நுழைவதாலும் காவல்ஈக்கள் ஏமாந்து இவை தமது இனத்து ஈக்களே என எண்ணிச் சும்மா உள்ளே செல்லவிடும். கூட்டில் இருந்து

தேன் எடுத்துச் சென்றால் அன்றோ சந்தேகத்திற்கிடமுண்டாகப்போகிறது ?

சில வேளைகளில் பலாத்காரம் எதுவுமின்றியே தேன் களவு போவதுமுண்டு. எங்ஙனமெனில், ஒரு கூட்டு ஈக்கள் வாய் வைத்துக் குடிக்கும் மலர்கள் புற்கள் முதலியவற்றிலேயே வேறு கூட்டீக்களும் வாய்வைத்துக் குடிப்பதுண்டு. அப்படிச் செய்வதால் இவ்விரு கூட்டீக்களும் ஒரே மணமுடையனவாய் இருக்கும். ஆதலின் இவ்விரு கூடுகளில் ஒரு கூட்டு ஈக்கள் மற்றொரு கூட்டுக்குள் நுழைந்து கொள்ளையடிக்குமாயின், அவற்றைச் "சோரஈக்கள்" என்று காவலீக்கள் தெரிந்து கொள்ளா.

ஈக்கள் தனித்தனியாகவும் திருடப்போவதுண்டு. ஆனால் இவை கூட்டம் கூட்டமாய்ச் செல்லும் ஈக்களைப் போல் தங்கள் முழுப்பலத்திலும் நம்பிக்கை கொண்டு அதிகார தோரணையுடன் செல்லாமல் அஞ்சி நடுங்கிப் பதுங்கியே சர்வ ஜாக்கிரதையுடன் செல்லும். இச்சோர ஈக்கள் யாவும் கொள்ளையடித்த பிற்பாடு தம் கூட்டீக்களுக்குக் கொள்ளையில் ஒரு பங்கு கொடாமல் இருப்பதில்லை நிற்க.

இங்ஙனம் பல விதத்திலும் தேன் திருட்டுப்போவதால் தேனீவளர்ப்போர்க்கு நேரும் நஷ்டம் இவ்வளவு அவ்வளவன்று. ஆதலின் அவர்கள் முன்னுக்கு முன்னாலேயே தம் கூட்டுத் தேன் களவு போகாதிருக்கும்படியான வழியைத் தேடிக்கொள்வர். எங்ஙனமெனில், அவர்கள் தம் கூட்டு முகத்துவாரத்தில் புனுகு தடவி வைப்பர். அப்பொழுது சோர ஈக்களும் இப்புனுகு வாசனை பெறும். இவை தமது

கொள்ளையில் ஓர் பங்கு தம் இனத்தார்க்கு அளிக்கத் தம் உறைவிடம் திரும்புங்கால், புதுவாசனையைக் கண்டுகொண்ட அக்கூட்டீக்கள், இவை வேறு கூட்டீக்களென மதித்துக் கொட்டிக் கொன்றுவிடும்.

இச்சோர ஈக்கள் ஏனைய ஈக்களைக் கொள்ளையடிப்பதோடு நில்லாமல் மனிதரையும் கொள்ளையடிக்கும். எங்ஙனமெனில், இவைகட்கிரை கிடையாக் காலத்தில் கரும்புப்பயிர் எல்லாம் பாழ் தான். மகரந்தப் பொடிக்குப் பதிலாய் கோதுமை முதலிய சில்வகைத் தானியங்களை அபகரித்தேனும் உண்டு திருப்திபெறும். இம்மட்டோ? தீம்பண்ட சாலைகள் யாவையும் இவை முற்றுகைபோட்டுச் சூறை யிடுவதால் மேற்றிசை வியாபாரிகளுக்குக் கன நஷ்டம் விளையும். நிற்க. வருந்திப் பாடுபட்டுத் தேன் முதலிய சம்பாதிக்கச் சோம்பும் சிற்றீக்களும் சோர மார்க்கத்தில் பிரவிர்த்திப்பதுண்டு.

XII. தேனீக்களின் ஆகாரம்.

இதுகாறும் நாம் ஈக்களைப்பற்றி சில கூறிவந்தோம். இனி அவற்றின் ஆகாராதிகளையாராய்வோம்: பூக்களின் ரசமும் பூந்தாதும், பாகும் எனைத் தித்திப்புப் பதார்த்தங்களுமே தேனீக்களின் விசேஷித்த ஆகாரங்களாம். இவற்றுள் பாகு இராஜ உணவாகும். பூந்தாது ஈ உருப்பெறாத புழுக்களின் ஆகாரமாகும். தேனீக்கள் எப்படியாவது நிரம்பத் தேன்பெறப் பிரயாசைப் படுகின்றனவேயன்றி நல்ல தேனகப் பார்த்துச் சேகரிக்க வேண்டும் என்ற சிந்தனையே இவற்றிற்குக் கிடையாது. நச்சுப் பூக்களினின்றும் இவை சில வேளைகளில் தேன் எடுக்கும். தேனீக்கள் தண்ணீரும்

குடிக்கும். சுத்த தெளிந்த நீரைவிட அழுகி நாற்றமெடுத்து ஊசிக் கிடக்கும் கட்டுக்கிடை நீரும் சிறுநீருமே அவற்றிற்கு அதிகப் பிரியமாம். இவ் விஷயங்களே எரிச்சலும் கடுப்பும் வேதனையும் விளைவிக்கக் கூடிய அவற்றின் கொட்டிற்குக் காரணம் போலும். இவற்றிற்குப் பல் இரண்டும் இரைப்பை இரண்டும் உள. இவ் விரைப்பைகளுள் ஒன்றைத் தேன் சேர்க்கவும் மற்றொன்றை அது உட்கொள்வன ஜீரணிக்கவும் உபயோகித்துக்கொள்ளும்.

XIII. விவாக முறை.

"காணுமல் இன்புறுதல்" காக்கைக் குணமென்ப. பெண் ஈயாகிய இராணி ஈயும் பிற ஈக்கள் காணக் கூட்டிலே யே ஆண் ஈயுடன் சேராது. பின்னை, அது கர்ப்பந்தரிக்கு மாறு, வேனிற்காலத்தில், வெயில் அழகாகக் காய்ந்துகொண் டிருக்கும்வேளையில், பெருங்காற்றடியா நேரம்பார்த்து, கூட் டினின்றும் ஆணீக்களோடு வெளிக்கிளம்பி ஆகாயத்தில் பறந்தெழுந்து மூன்று மணிநேரத்துக்குள் கூடு திரும்பும். அது திரும்புமட்டும் ஈக்களுக்கு மனச்சமாதானமே இராது. இச்சமயம் கூட்டண்டை போவோர் கொட்டுண்டே வருந்துவர். அவை இதன் பிரிவாற்றுதும், இராணி ஈ க்குப் பிறகூட் டிக்களாலும் காலநிலையாலும் சம்பவிக்கக்கூடிய விபத்துக் களை நினைந்தும், சஞ்சலப்பட்டு, அதிதுக்கப் பேரிரைச்சல் எழுப்பிக்கொண்டிருக்கும். சென்ற இராணி சுகமாகக் காரிய சித்திபெற்றுத் திரும்பிவிட்டாலோ பேரானந்தம் கொண்டு அவை உங்கரிக்கும். அது காரியசித்தி பெற்றதும் பெருத தும் பார்த்தமாத்திரத்திலேயே சிற்றீக்கள் அறியும். எங்ஙன மெனில், அது கருத்தரித்திருப்பின் ஆணீயின் ஜீவாதார

பாகம் அதன் புறத்திற் பொருந்தியிருக்க அவைகாணும். காரியசித்திபெறுவிடின், பிரதிதினமும் அதுபெறும் மட்டும் ஆகாயத்தில் ஆணீயுடன் பறந்தெழவேண்டியது தான். ஈக்கள் கருத்தரித்துத் தமது இராணி வந்துவிட்டதெனக்கண்டு விட்டால் அவைகள் தலைகால் தெரியாதபடி சந்தோஷங் கொண்டு அதன் வரவை ஸகலமரியாதையுடனுமேற்று அதனைக் கட்டித் தழுவிச் சூழ்ந்துகொள்ளும். அது செல்லுமிடந்தோறும் அதற்கு எல்லாக்காரியங்களிலும் துணைநின்று உதவ, அது, 20ஈக்களுக்குக் குறையாமல் பரிஜனமாய்ப் பெறுமாம். காரியசித்திபெற்ற இராணி ஈக்கு நடக்கும் மரியாதையில் காற்பங்கு கூட கருத்தரியா இராணிக்கு நடவாது. அன்றியும், ஸ்திரீக்கள் அதனை அதிகமாய் அசட்டைசெய்யும். நிற்க.

இது ஆண் ஈயுடன் சேர்ந்த இரண்டு மூன்று தினங்களுக்கெல்லாம் முன்பு நாம் கூறியபடி காலநிலைக்கேற்ப முட்டையிட ஆரம்பிக்கும். இது தன் இஷ்டப்படி முட்டைகள் ஆண் ஈக்களாகவும் பெண்ஈக்களாகவும் இடக்கூடுமாம். இடுமுன் அது தனது தும்பிகளைக்கொண்டு அறையானது காலியாகவும் மெருகிட்டுச் சுத்தமாகவும் இருக்கிறதா எனப்பார்த்தறியும். அது காய்ந்து, கருகி அழிய கூட்டின் வெளிப்புறத்திருந்து தரையில் முட்டையிட்டாலும் இடுமேயன்றி காலியாகவும் சுத்தமாகவும் இல்லாத அறையில் இடாது. பரீக்ஷார்த்தமாய் மேற்றிசையோர் ஒருவர் கருத்தரித்த ஓர் இராணி ஈயின் தும்பியை நறுக்கிவிட்டதால், பாவம்! அது கூட்டைவிட்டு ஓட நேர்ந்ததெனத் தெரியவருகிறது. ஏனெனில், ஸ்பரிசிக்கும் தும்பியை இழந்துவிட்டதால் கூடு சுத்த

மாய்இருந்தும் கூட்டைப்பற்றி அது எதுவும் தெரிந்துகொள்ளக் கூடவில்லை. ஆதலின், அது கூட்டிற்கு வெளிப்புறம் வந்து தரையிலேயே முட்டைகளை யிட்டதாம். பின்னர் சந்ததி அபிவிருத்தியின்மையைக் கண்டுகொண்ட சிற்றீக்களின் கொட்டுக்கஞ்சி அது தன் வேலையைத் தானே ராஜிநாமா செய்துபோட்டு பனியினாலோ குளிரினாலோ எதிரியினாலோ செத்ததாம்.

ஆண் ஈக்களுடன் சம்பந்தப்படாமலும் பெண் ஈக்கள் கருத்தரித்து முட்டையிடக்கூடும் என்று சொல்லுகிறார்கள்.

XIV. தேனீ கூடுகட்டு மிடங்கள்.

இதுகாறும், மூவகை ஈக்களைப்பற்றியும் சில தெரிந்துகொண்டோம். இனி, தேனீக்கள் கூடுகட்டு மிடங்களைப் பற்றிக் கூறுவம். காட்டு ஈக்கள் சாதாரணமாய் மலைப்பிளவுகளிலும் மரப்பொந்துகளிலும் கூடுகட்டுகின்றன. தவிரவும், நமது முன்னோர்கள், அவை சூரைச் செடிப் புதரிலும், அகப்பட்டாரை அறைந்துகொல்லும் பார்ப்பனப்பேய் வாழும் இடுகாட்டிலுள்ள புற்றுக்களிலும் கருக்குவாய்ந்து வானுறவோங்கி, வளம்பெற வளரும் மடற்பனை மரத்தின்மீதும், தேனை வைக்கிறது என்று கூறியிருப்பதுடன் இவ்விடங்களில் உள்ள தேனை லோபிகளின் திரவியத்திற்கு ஒப்பிட்டும் இருக்கிறார்கள். மேற்சொல்லியவற்றின் உண்மையை,

"சூற்றுங் கருங்குளவி சூரைத்தூறு, ஆரியப்பேய்
எற்றும் சுடுகாடு இடிகரையின்—புற்றில்,
வளர்ந்த மடற்பனைக்குள் வைத்ததேன் ஒக்கும்
தளர்ந்தோர்க் கொன்றீயாத் தனம்."

என்னும் வெண்பாவால் அறிக. ஏன் இவை இங்ஙனம் அதி உன்னதமாயும் கொள்வதற்கரிதாயும் உள்ள இடங்களில் கூடு கட்டுகின்றன வெனில், சுயநயம் பாராட்டும் மனிதன், தமது சொத்தைக்கொள்ளையடிப்பதோடு தம்மையும் நாசப்படுத்துவன் என்ற பயத்தினாலேயே. ஆயினும், இவற்றின் எண்ணமெல்லாம் வீண் எண்ணமே. ஏனெனில், எந்தஇடத்தில் இவை கட்டினாலும் என்ன? மனிதனுக்குத் தேன்பெறுவது அசாத்தியமான காரியமா?

XV. தேன் பெறுமாறு.

கூட்டினின்றும் தேன் கோள்ளல்:—வெகு தூரத்தில் இருந்து பார்த்தாலும் தெரியக்கூடிய அவ்வளவு பெரிதாகச் சில கூடுகள் இருக்கும். இத் தேன் கூடுகள் தெரிந்தமாத்திரத்திலேயே மனிதன் தீவர்த்தியும் கையுமாய் நீண்ட கயிற்றுச் சுருள் ஒன்றையு மெடுத்துக்கொண்டு உயர ஏறிப் புகை போட்டு ஈக்களைத் துரத்துவன். அப்பொழுது தீவர்த்திப் புகையால் மூச்சுவிட மாட்டாமல் ஸ்மரணையழிந்து விழும் சில ஈக்கள். உயிர் தப்பி ஓடும் வேறு சில. பொசுங்கிச் சாகும் பல ஈக்கள். எத்தனை ஈக்கள் செத்தால் தான் இவனுக்கென்ன? ஈக்கள் பாடு இவ்விதமாகவே இவன் தேன் கூட்டை அடியோடு பெயர்த்தெடுத்துக் கயிறு கட்டிக் கீழே இறக்குவன். பின்பு அதில் உள்ள தேன் ஒட்ட வடித்து எடுக்கப்படும். ஆ! ஆ!! என்ன பரிதாபம்!

பல பூக்களினின்றும் வெகு சிரமப்பட்டு ஓய்ச்சல் ஒழிவின்றிச் சேகரித்து வைத்த தேனைப் பறிகொடுத்தது மட்டுமன்றி உயிர்க்கே தீங்கையும் விளைவித்துக்கொண்ட இவ்

னீக்கள், "உண்டு உடுக்காது, மெய்வருந்திப் பாடுபட்டுத், தேடிய ஏராளமான திரவியத்தை நல்வழியிற் செல விடாது, இரவோர்க்கீதல் முதலியன புரியாது, சேர்த்து வைக்கும் பேதைமார்களுக்கு"ச் சிறந்த சற்புத்தி புகட்டக் கூடியதாய் இருக்கின்றன. உண்மையிலேயே,

"உடாஅதும் உண்ணாதும் தம் உடம்பு செற்றும்
கெடாஅத நல்லறமும் செய்யார்—கொடாஅது
வைத்து ஈட்டினார் இழப்பர் வான்தோய் மலைநாட!
உய்த்து ஈட்டும் தேனீக் கரி."

என்ற நாலடிச்செய்யுள் வெகுவாய்ச் சிந்திக்கத்தக்கதே.

தேன்காட்டி:—தேன் கூடு இருக்கும் இடம் தெரிந் தால் தானே மனிதன் இவ்வாறு தேன் எடுக்கக் கூடும்? தெரியாவிடில் என்ன செய்வன் எனில், யாதானும் ஒன்றன் உதவியினால் அறிவன். உதாரணமாக: ஆப்பிரிகாவில் வானம் பாடி அளவுள்ள ஓர் சிறு புள்ளிருக்கிறது. இப்பறவைக் குத் "தேன்காட்டி" (Honey Guide) என்றுபெயர். குயி லுக்குக் கூடு கட்டவேனும் குஞ்சு பொரிக்கவேனும் தெரியா தென்றும் அதன் குஞ்சுகளைக் காக்கை முதலிய வேறு பக்ஷி களே பொரித்துக் கருதி வளர்க்கின்றன வென்றும் கேள்விப் பட்டிருக்கிறோம் அல்லவா? இத் தேன் காட்டியும் இவ் விஷ யங்களில் குயிலைப்போலத்தானாம். இஃதொரு பிழைக்கத் தெரியாத பறவையாய் இருந்தும் இதற்குத் தேனையும் தே னீக்களையும் உண்ண வெகு பிரியம். ஆயினும் என்? இவ் விரண்டில் ஒன்றேனும் அது தன் முயற்சியினால் பெறமுடி யாது. ஏனெனில், அது தேன் கூட்டண்டை போகு முன்

னரோ, இறகினால் மூடப்பட்ட அதன் சரீரத்தில் கொட்டினா லும் பயனில்லையெனத் தெரிந்துகொண்ட சிற்றீக்கள் அதன் கண்ணையே பார்த்துப் பிடுங்கும். இப்பொழுது பக்ஷி தப் பித்துக் கொண்டால் தான் உயிரோடிருக்கும். இல்லாவிடில், இனி என்றென்றும் இரைதேட முடியாமல் பட்டினியால் வருந்திச் சாகவேண்டியதுதான். ஆயினும் இது மூடத்தன மாக உயிர்க்குத் தீங்கு தேடிக்கொள்வது அரிது. ஆனால் அது தேன், ஈ இவற்றின் பேரிற் கொண்ட ஆசையை விடுகிற தோ வென்னில் அதுவும் இல்லை. பின்னை அது எப்படித் தனதெண்ணத்தை முடித்துக் கொள்ளுகிறதென்று பார்ப் போம். அது தேன் கூட்டை எங்கேனும் கண்டுகொண்டு விட்டால் அதற்குத் தலை கால் தெரியாமல் சந்தோஷம் பிறந்துவிடும். உடனே அது எவனாவது ஒருவனைத் தேடிச் சென்று கண்டுபிடித்து அவன் தலையைச்சுற்றி வட்டமிட்டு அவனைத் தன்னை கவனிக்கும்படி செய்து அவன் பார்க்கக் கூடிய ஓரிடத்தில் போய் உட்காரும். இது நடிப்பதைப் பார்க்கும்பொழுது,

> பொற்புள் அதனைப் பிடிப்பான் நளன்புகுதக்
> கைக்குள் வருமாபோற் கழன்றோடி—எய்க்கும்
> இளைக்குமா போல இருந்ததுகண் டன்றே
> விளைக்கு மாறு எண்ணினான் மன்.

என்ற புகழேந்திவெண்பா ஞாபகத்தில் வாராமற்போகாது. நிற்க. மனிதன் இப்பக்ஷியின் கருத்தை நன்கறிவன். அத னுடன் புறப்பட்டுச் செல்லத் தயாராய் இருக்கும் சமயத்தில் சீட்டி அடிப்பன். இக்குறிப்பைப் பக்ஷி அறிந்து கொள்ளும். உடனே அது புறப்பட்டு அவன் பார்க்கக்கூடியதூரத்தில்

போய் உட்கார்ந்துகொள்ளும். மனிதன் சமீபித்தவுடன் மீண்டும் சற்று அப்பால்போய் உட்காரும். இங்ஙனம் அது போகப்போக அவனைத் தேன்கூடு இருக்குமிடத்திற்கு இட்டுச் செல்லும். கூட்டைக்கண்டவுடன் முன்பு நாம் சொல்லியதுபோல் ஈக்களைத் தீயாலும் புகையாலும் கொன்று கூட்டைக் கைப்பற்றித் தேன் எடுப்பன். பின்னர் தான் தேன் பெறுவதற்குக் காரணமாய் இருந்த பறவைக்குத் தேனில் ஒரு சிறிது கொடுப்பன். அவன் கொடுக்கும் தேன் அதன் வயிற்றிற்குப் போதுமானதாக இருந்தால் அது அங்கிருந்து பறந்தோடிவிடும். ஆனால் பேராசையுள்ள மனிதன் இதற்குப் போதுமான தேனை கொடுப்பதில்லை. இதற்குக் கொடுபடும் தேன் கிடந்தபசியையும் கிள்ளித்தான் எடுக்கும். ஆதலின் அது இம் மனிதனை வேறொரு கூட்டிற்கும் முன் மாதிரி அழைத்துப்போய் மீண்டும் கூலிபெறுமாம். சில சமயங்களில் இலவ சேர்ந்தாற்போல் மூன்று நான்கு கூட்டிற்குக் கூட கூட்டிச்செல்லுமாம்! தேன்கூடிருக்கும் இடங்களின் ஜாப்தா வைத்திருக்கும் இப்பறவைகளின் உதவியைப் பெறும் மனிதர் எவ்வளவு பாக்கியசாலிகள்!

தேனீ மூலமாகத் தேன்கூடறிதல்.

தேன் காட்டி எங்குமா இருக்கிறது? அஃதிலா ஊர்களில் தேன் கூடிருக்கும் இடம் அறியும் விதம் கூறுவம்:—உதாரணமாக, ஆஸ்திரேலியாவில் என்ன செய்கிறார்கள் என்று பார்ப்போம்: சாதாரணமாகத் "தேனீயானது தன் னிருப்பிடத்தைவிட்டு இரண்டு மைலுக்கு அப்பால் போகவே போகாது. தவிரவும் தேன் கொண்டுபோகும் ஈயானது, அங்குமிங்கும் நில்லாது, நேரே தனது வீடுநோக்கியே செல்லும்."

இவ்விரு விஷயங்களும் உண்மையே. ஆதலின், தேன்கூட்டின் இருப்பிடம் அறியவேண்டும் ஒருவன், தேன்கொண்டு போகும் ஈ ஒன்றைக் கண்டுபிடித்து, அதனைத் தொடர்ந்து சென்று அறியலாமன்றோ? வாயினால் இப்படிச் சொல்லலாமே யொழிய சாமானியமாக முடிக்கக் கூடிய காரியமா இது? ஒரு ஈ தட்டுப்பட்டால் தேன் கொண்டுபோகிறதா இல்லையா என்று தெரிந்துகொள்ளலாமே யன்றி அதனைப் பின்தொடர்ந்து செல்லல் யாரால் இயலும்? அதன் ஓட்டம் எங்கே? மனிதன் ஓட்டம் எங்கே? அதிவிரைவாக மட்டும் ஓடுமாயின், அது நிமிஷத்துக்கு இரண்டுமைலும் ஓடுமே. ஒருவேளை அதனைத் தொடர்ந்து விரைந்தோடும் மனிதன் ஒருவன் இருக்கிறான் என்று வைத்துக்கொண்டபோதிலும், அது பல திக்குகளிலும் பாய்ந்து பாய்ந்து ஓடுமே. தவிரவும் பறக்கும் பொழுது கண்ணுக்குத்தான் தெரியுமா? எத்தனையோ ஜந்துக்கள் உயரப் பறக்கின்றனவே. இதுவே தான் பார்த்த தேனீ என்று அவன் எப்படி அறிவன்? ஆதலின், தேன் கொண்டுபோகும் ஓர் ஈயுடன் தொடர்ந்து செல்லவேண்டுமானால், முதலாவது அதன் வேகம் மட்டுப்படுத்தப்பட வேண்டும். இரண்டாவது மற்ற ஈக்கள் அல்லது பறக்கும் ஜந்துக்களுக்கும் இதற்கும் வித்தியாசம் கண்டுபிடிக்கக்கூடிய யாதாலும் ஓர் அடையாளம் இருத்தல் வேண்டும். இவ்விரு காரியமும் சாத்தியப்பட்டால் தான் மனிதன் அதனுடன் தொடர்ந்துசெல்லக்கூடும். ஆதலின், ஆஸ்திரேலியன் என்ன யுக்தி செய்கிறான் பாருங்கள்! வெண்பஞ்சை உருட்டித் திரட்டிச் சிறு உண்டையாக்கி அதில் பிசின் தடவி அவ் வுண்டையைத் தேனீ முதுகில் ஒட்ட வைப்பன். இப்பொழுது அவன் அதனைச் சுலபமாய்த் தொடர்ந்து செல்லலாமன்றோ? ஏனெ

னில், தேன் சுமப்பதுடன் அவ் வற்ப ஐந்து பருத்தி உருண்டையையும் தூக்கிச் செல்லவேண்டி வருவதால் அதிகமாய் ஓட அதனுல் எப்படி முடியும்?

"இதென்ன கொக்கின் தலையில் வெண்ணெய் வைத்துப் பிடிக்கிறதுபோல் இருக்கிறதே! தேனீயைக் கண்டு பிடித்து அதை எடுத்து பிறகன்றே அதன் முதுகில் பஞ்சுண்டையைப் பொருத்தவேண்டும்? தவிரவும் அது எடுக்கும்பொழுது படு கொட்டுக் கொட்டாமல் விடுமா?" என்று சிலர் ஐயமுறலாம். ஆனுல், ஆஸ்திரேலியன் சாமர்த்தியமே சாமர்த்தியம்! அவன் பஞ்சுகூட வீட்டிலிருந்து கொண்டு போகமாட்டான். காட்டில் அது எதேஷ்டமாய் அகப்படும். பிசினும் அநேகமாய் எந்த மரத்திலும் கிடைக்கும். தேனீ எங்கிருக்கும்? அதுவும் வாசனை புஷ்பங்கள் பலவற்றில் ஒன்றிலேனும் இல்லாமல்போய்விடுமா? "மல்லிகையே வண்சங்கா வண்டே" என்று புகழேந்திப்புலவர் வர்ணித்தபடி அது பூவின் நாளத்திற்குள் தலையை நுழைத்துக்கொண்டு தலை கீழும் கால் மேலுமாக இருந்து தேனருந்திக்கொண்டிருப்பதைக் காண்பன். கண்டவுடன் என்ன செய்வன் என்று நினைக்கிறீர்கள்? தான்கொண்டுவந்த பஞ்சுண்டையைத் தொப்பென்று போடுவன் என்றா? அப்படிச்செய்பவன் பெருமூடனுக இருக்கவேண்டும். ஏனெனில் எவ்வளவு விரைவில் தொப்பென்று போட்டுக் கையை எடுத்தாலும் அதினும் விரைவாய்ப் பாய்ந்து தவருமல் கொட்டும். இவ்விஷயம் ஆஸ்திரேலியனுக்குத் தெரியும். ஆதலின், அவன் அப்படிச்செய்யாது தன் வாய்நிறைய ஜலத்தை அடைத்துக் கொண்டு பிசினூட்டிய பஞ்சுண்டையும் கையுமாகச் சென்று

மெய்மறந்து தேன் அருந்திக்கொண்டிருக்கும் ஈ மேல் கொட்டித் தக்ஷணமே வெகு துணிச்சலுடனும் தீவிரத்துடனும் ஜலத்தை உதறிக்கொண்டிருக்கும் ஈயைக் கையில் எடுத்து அதி சாமர்த்தியத்துடன் அதன்பேரிற் பஞ்சுண்டையைப் பொருத்திக் கீழே விடுவன். சற்றும் எதிர்பாராது தன் பேரில் வருஷிக்கப்பட்ட ஜலத்தை அது ஆத்திரத்துடன் உதறி உதறித் துடைத்துக்கொண்டு அரைக்கணமும் அங்கு நில்லாமல், தான் அறியாமலே தனக்கும் தனது வாசஸ்தலத்திற்கும் தனது உடைமைக்கும் இனத்தாருக்கும் பெருங்கேட்டைத் தலைப்பில்முடிந்துகொண்டு தனதுஉறைவிடம் நோக்கி ஓடும். இங்ஙனம் அதன் வேகமுங் குறைபட்டு அடையாளமுள்ளதும் ஆகிவிடவே, ஆஸ்திரேலியன் பஞ்சிலேயே திருஷ்டியாய் அதனைத்தொடர்ந்துசென்று கூட்டைக்கண்டு பிடித்து "ஈயார் தேட்டைத் தீயார் கோள்வன்." அல்லது கூடு செங்குத்தான பாறைகளிலேனும் முள் மரங்களிலேனும் கட்டப்பட்டிருந்தால் அதனை வில்லுண்டையால் வீழ்த்தித் தேன் கொள்வன்.

ஈக்களை வளர்த்துத் தேன் எடுத்தல்.

இதுகாறும் நாம் சொல்லி வந்தவை காட்டீக்களினின்றும் தேன் பெறும் விதங்களே. தேனீக்களை வளர்த்தும் தேன் கொள்ளுகின்றனர் என்று நாம் இப்பொழுது சொல்லாமலே விளங்கும். ஏனெனில் முன்போரிடத்தில், தேன்றேர் குறவர் தேன் கொள்ளுவது போற் கொள்ளாமல், நாகரீகமுள்ள ஜனங்கள் மதுகரங்களைச்சர்வஜாக்கிரதையுடன் வளர்த்துத் தேன் பெற்று கோடீசுவரர்களாயிருக்கிற விஷயம் கூறியுள்ளோம்.

ஆனால் இம் மேற்றிசையோர், நம்மவர்கள், தேனின் மிக்க நஷ்டத்திற்கும், தமது பிராணுபாயத்திற்கும் ஈ, புழு முதலியவற்றின் உயிர்ச் சேதத்திற்கும் ஹேதுவாக, தேன் கூட்டைப் பொசுக்கி அதனின்றும் தேனைப் பிழிந்து கொள்வதுபோற் கொள்வதில்லை. அவர்கள் கூடுகளுக்கேனும், கூட்டு வாசிகளுக்கேனும் தமக்கேனும் இம்மியும் சேதமுண்டாகாதபடி, கூடுகளை அதி உபாயமாக எடுத்துத் தேனை வெளிப்படுத்த வென்றே நூதனமாகத் தம் மதிநுட்பத்தால் கண்டுபிடித்து அமைத்துள்ள நானுவிதப் பெட்டிகளில் அக் கூடுகளை அதி சாவதானமாக வைத்து, "தோலிருக்கச் சுளை விழுங்கி"கள் போல, தேன் நிரம்பிய அறை எதும் பின்னமுறாமல் தேனைமட்டும் பிரித்தெடுத்து விற்றுப் பெருத்த லாபம் பெறுகின்றனர்.

XVI. மதுபானிகள்.

மனிதன் ஒருவனுக்குத்தானு ஈசுவரன் ருசியுள்ள நாக்குக் கொடுத்திருக்கிறார்? அவனிலும் அதிக ஆவலுடன் தேனைச் சுவையறிந்து உண்ணக்கூடியவை பலவுள. அவற்றுட் சில கூறுவம்.—

தேன்காட்டி:— இதனைப்பற்றி வேண்டுவன விரித்துரைத்தாய் விட்டது. அது, மனிதன் அகப்படாவிடில் ஓர் வகைக் கீரியின் உதவியினாலும் தேன்மட்டுமேயன்றி தேனீயும் பெறுமாம்.

ரேட்டல்:- இதுதான் "தேன்காட்டிக்கு" உதவிசெய்யு ஒருவகைக் கீரி. இதற்குத் தேனும் தேனீயும் மிகப்பிரியம். இது விசேஷமாய் ஆபிரிகாவில் காணப்படும். இதற்குப்

புற்றுத்தேன் மிகுதியாய்க் கிடைக்கும். தேனீக்கள் இதனைக் கொட்டியபோதிலும் அவ்வளவாய் வேதனைபெறாதாம். இது தானாகவே தேன்கூடு இருக்குமிடந்தேடிச் செல்லுமென்று சிலரும், "தேன்காட்டி"யின் மூலமாகத்தான் தெரிந்துகொள்ளும் என்று வேறு சிலரும் கூறுகின்றனர்.

கரடி:—இது மரம் ஏறக்கூடிய பிராணியாதலால் மரக்கிளையிலேனும் மாப் பொந்துகளிலேனும் வைத்திருக்கும் தேன்கூட்டைத் தனது சடைபற்றிய கையால்பற்றி எடுத்துப் பிழிந்து, பொன்னிறத்த தேன் சொட்டச் சொட்டக் கன்னிறத்த சிந்தையுடன் விழுங்கும். பாவம்! சிற்றீக்கள் செய்யக்கூடியது என்ன? கொட்டத்தானே செய்யும்? அப்படிக் கொட்டித்தான் பயனென்ன? தாமே உயிர் இழக்கவேண்டியதுதான். ஏனெனில், கரடிகள் வேதனை சகியாது வெகு உக்கிரகத்துடன் ஈக்களைப் பிடிப்பிடியாய்ப் பிடித்து நசுக்கிப் பிழிந்து கொன்றுவிடும்.

தேன் எறும்புகள்!:—இதுகாறும் தேன் ஈக்களே தேன் சேர்ப்பன என்று எண்ணிக்கொண்டிருக்கும் நம்மவர்கள் எறும்புகளும் தேன் சேர்க்கின்றதென அறிய ஆச்சரியப்படாதிரார். ஆனால், இப்பேர்ப்பட்ட எறும்புகளை இந்தியாவிற் காண்பரிது. வட அமெரிக்காவில் மெக்ஸிகோ நாட்டிலும் ஐக்கிய மாகாணங்களின் (United States) தென் மேற்கு பாகங்களிலும் பிற இடங்களிலுமே இவ்வெறும்புகள் மிகுதியா யுள்ளன. ஆனால், இவை ஈக்களைப்போல் பிரத்தியேகமாய்க் கூடு கட்டி அதில் அறைகள் அமைத்து அவற்றுள் தேனை நிரப்புவதில்லை. உருவத்தில் நமது கட்

டெறும்பு போன்ற இவ் வெறும்புகளின் சரீரத்திலேயே இடுப்பிற்கப்பால் ஒரு பை உண்டு. ஈக்களைப்போலவே இவை களும் மலர்களில் உள்ள இனிய சாரத்தை இரைப்பையிற் போக்கித் தேனாகமாற்றி அதனை இரைப்பையில் நிரப்பும். தேனால் நிரம்பும் பொழுது இரைப்பைகள் பெருங் கழற்சிக் காய் அவ்வளவு பருமனாகி உப்பும். இவைகளை ஈசல், சுண் டைக்காய், அரிசி, முதலியன போன்று அமெரிக்கரும் மெக்ஸிகரும் படிப்படியாக அளந்து விற்பர். அவற்றை வாங்குவோர் அவற்றின் பைகளை மட்டும் கிள்ளி எடுத்து அவற்றைப் பிழிந்து தேன் எடுப்பர். இத்தேனால் ஓர் வகை சாராயம் செய்யப்படுவதும் உண்டு. இவ் வெறும்புகளின் தேன் நிரம்பிய பைகள் அவ்வூரில் உள்ள பெரிய மனுஷர் களுக்கு வெகு தாராளமாய் விருந்தளிக்கும்போது செலவு செய்யப்படும். அவர்கள் அப்பைகளை உறிஞ்சிச்சப்பித் தேன் அருந்தி தோலை எறிந்து விடுவர். நமக்கு ஆடுமாடுகள் பால்தர சிருஷ்டிக்கப்பட்டிருப்பது போல இவை ஏனைய எறும்புகளின் உபயோகத்திற்காகவும் சிருஷ்டிக்கப்பட்டிருக் கின்றன. வேண்டும்போதெல்லாம் ஏனைய எறும்கள் இத் தகைய எறும்புகளினின்றும் தேன்பெற்று வளரும். எறும் புக் கூட்டம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனியாகத் தேன் எறும்புகள் உண்டு. இவை ஏனைய எறும்புகளுக்கு மிகவும் உபயோகப்படுவதால் இவற்றை அவ்வெறும்புகள் பொன் போற் போற்றி வளர்த்து தாம் செல்லும் இடந்தோறும் இட்டுச்செல்லும். சூழ்ச்சியுளங்கொடு துரோக சிந்தையராய், அயோக்கியர்கள் அயலார் உரிமையை அபகரிப்பதுபோல், ஒரு கூட்டத்துத் தேன் எறும்புகளை வேறு கூட்டத்து எறும்புகள் பொருது அபகரிப்பதுமுண்டு. நாம் எடுத்துப்

பேசும் விஷயம் எழும்பன்று. ஆதலின் இதனைப்பற்றி இம் மட்டோடு நிறுத்துவம்.

XVII. தேனீக்களின் சத்துருக்கள்.

எதிலும் தலையிட்டுக்கொண்டு இடர் இழைத்துவரும் மனிதன் இதன் பரமசத்துரு என்று சொல்லித்தானு தெரிய வேண்டும்? கரடி, தேன்காட்டி, கீரி முதலியனவும் இவற்றின் சொத்தை அபகரித்துக்கொண்டு அவைகளைக் கொன்றுவிடு கிறதைக் கண்டோம். முற்கூறியவைகளைத்தவிர வேறு பல சத்துருக்கள் இதற்குண்டு. உதாரணமாக,

குளவியும் வண்டும் கூட்டங் கூட்டமாய் வந்து தேனீக் களுடன் சண்டைதொடுக்கும்; இருகக்ஷியிலும் அநேகம் மடியும். தகசு, எலி, சுண்டெலி இவை ஈக்களை எக்காலத் திலும் எதிர்த்துப்பொரும். தூக்கணங்குருவி, ஊர்க்குருவி, குயில், கோழி, வாத்து, ஈக்கொத்தி, பல்லி, கரட்டோந்தி, தேரை, பெருஞ்சிலம்பி முதலியனவற்றுள் சில தேனீக்களை ஒவ்வொன்ருகவும், வேறுசில பலவாகவும் கொத்திக்கொத்தி விழுங்கும்.

பூச்சி, புழு, விட்டில் முதலியன செய்யும் ஹிம்ஸை சொல்லிமுடியாது. இவை உபாயமாகத் தேனீக்கள் அறியாது உட்புகுந்து கூட்டிற் பல்லாயிரம் முட்டைகளிடும். இம் முட்டைகள் கிருமிகளாகி கூட்டை அடியோடு அரித்து அழித்து ஈக்களை இருப்பிடம்விட் டோடச் செய்யும்.

XVIII. தேனைப்பற்றிய பிற விஷயங்கள்.

சுவை:— தேன், சுவையில் சர்க்கரைப்பாகை ஒத்திருக் கும். சில்வகைத் தேன் கசந்தும் புளிப்புத்தட்டியும் இருக்

கும். கைப்பன நச்சுப் பூக்களினின்றும் எடுபடுவன ஆகும். புளிப்புத் தட்டுவன மழைகாலத்தில் எடுபடுவன ஆகும். (இவற்றில் ஜலச் சேர்க்கை மிகுதி.)

தேன் எடுபடும் காலம்:—கிருஷ்ணபக்ஷமே தேன் மிகுதியாக எடுபடும் காலம் ஆகும். சுக்கில பக்ஷத்தில்தான் ஈக்கள் தேன் சேகரிக்கத் தொடங்கும்.

உபயோகங்கள்:— "மலைத்தேன்" கோழை, இருமல் கபம், அக்கி, சூடு முதலிய உடல் நோய்களைப் போக்கி, பசி, சாரீரம் முதலியன உண்டாக்கும் என்பர். "கொம்புத்தேன்" வாதம் பித்தம் காசம், மனப்பிரமை அருசி முதலியவற்றைப் போக்குமாம். "புற்றுத்தேன்" கோழை, சுவாசகாசம், வாந்தி, கண் வலி முதலியன போக்கும் என்றும், "மனைத் தேன்" புண்புரை, கண்ணிலுள்ள பூச்சி, புழுவெட்டு, கபம், இருமல் இவற்றை நீக்கிப் பசியுண்டாக்குமென்றும் கூறுவர்.

இவ்வளவு குணம் தேனுக்கு இருப்பதாக நம்மவர்கள் கொண்டிருந்தும், மேற்றிசையோர், "வைத்தியத்திற்கடுத்த விசேஷித்த குணம் அதிற்கில்லை" என்றும், ஆயினும் "ருசியற்ற பல மருந்துகளைக் கூட்டி உட்கொள்ளுங்காலையில் இஃதொரு இனிய துணைப்பொருளாக உபயோகப்படுவதினாலேயும், குழந்தைகளுக்குக் கைப்பான மாத்திரையாதிய உட் செலுத்துவதற்கு ஓர் சிறந்த அனுபானமாக இருத்தலினாலேயும், மாத்திரையாதிய செய்வதற்குச் சிறந்த பொருள்களில் ஒன்றாகப் பயன்படுவதினாலேயும், ஒவ்வொரு வீட்டிலும் இது அவசியம் இருக்கவேண்டியதே" என அபிப்பிராயப்படுகின்றனர். நிற்க,

(2) புதுத்தேன் மலத்தை இளக்கும். பழந்தேன் அதனை இறுக்கிவிடும்.

(3) பூர்வீக எகிப்தியர் பதமழியாதிருக்கச்செய்யும் தைலமாகத் தேனை உபயோகித்து வந்தனர் என்று தெரிகிறது.

(4) தேனைச் சரிக்குச் சரி நன்கு வடிகட்டிய காடி அல்லது எலுமிச்சை சாறுடன் இளஞ்சூடுறக் காய்ச்சி இருமல் மருந்துடன் சேர்த்துப் பருகலாம்.

(7) பதனழியாதிருக்குமாறு, பழம், பணியாரம், பக்ஷணம், ஒட்டவைத்த கிளைகள், விதைகள், முட்டைகள், ஊறுகாய்கள் முதலியன தூரதேசங்களுக்குத் தேனில் அடக்கமாகக் கட்டியனுப்பப்படுகின்றன.

(8) தேன் ஆடையை வெந்நீரில் காய்ச்சி உருட்டி மஞ்சள் சாயத்தோடு கலப்பர்.

(9) ஒரு பங்கு நிறையுள்ள மஞ்சள் மெழுகுடன் நான்கு பங்கு நிறையுள்ள முறித்த தேன் கலந்து இளஞ்சூடு உண்டாக உருக்கி வடிகட்டினால், தேன்களிம்பு (Ceromel) ஆகும். இக்களிம்பு அழுகு சிரங்கு முதலிய தீய ரணங்களைச் சொஸ்தப்படுத்தும். சாமானிய இரணங்களைச் சொஸ்தப்படுத்த மெழுகுக் களிம்பே போதுமானது. இது சரிக்குச் சரி அளவுள்ள சுத்திசெய்த பன்றிநெய், வாதுமைநெய் ஆகிய இவற்றோடு சுமார் மூன்று மடங்கு நிறையுள்ள வெள்ளை மெழுகைக் கலந்து செய்யப்படுவதாகும்.

(10) இந்தியாவில் தேனோடு பால் கலந்தோ அல்லது தேன் தயிர் வெண்ணெய் இவற்றைக் கலந்தோ விருந்தினர்க்

கேனும் சம்பந்திகளுக்கேனும் கொடுத்து உபசரிப்பர். இக் கலவைப் பொருளைத்தான் மதுபர்க்கம் என்கிறோம்.

(11) பிறந்த குழந்தைக்குப் புண்ணியாகவாசந தினத்தன்று தேனைத்தொட்டு வாயில் வைப்பது வழக்கம். இதுவே, மதுப் பிராசனம் எனப்படும்.

(12) தேனைக்குடித்து வாந்தி செய்யின் அபினியின் குணம் மாறுமாம்.

XIX. தேனீயின் உபயோகம்.

* தூக்கணாங் குருவி, ஊர்க்குருவி, குயில் முதலிய பல பிராணிகளுக்கும் இரையாதல், தேன், மெழுகு முதலியன மனிதர்க்கும் பிறபிராணிகளுக்கும் பயனுற ஈதல், என்ற இவ்விரண்டு உபயோகங்களும் தேனீயால் உறலாமென்று இதுகாறும் அறிந்தோம். வேறு உபயோகங்களும் தேனீயால் உண்டு.

தாவரங்கள் பல்கிப் பெருகுவதற்குக் காரணங்கள் பலவுண்டு. அவற்றுள் தேனீயின் செய்கையும் ஒன்று. எங்ஙனமெனில், ஒவ்வொரு மலரிலும் உள்ள பூந்தாதுகள் (மகரந்தப் பொடிகள்) தத்தமக்கு ஏற்பட்டுள்ள சிற்றறைகளில் அடங்கிக் கிடக்கும் சுக்கில சோணிதங்களே. ஒரே மலரில் உள்ள ஆண்கரு பெண்கரு ஆகிய இவ்விரண்டும் ஒன்று சேர்வதால் மலர்கள் கருத்தரிப்பதில்லை. இவை முறையே வேறு மலர்களில் உள்ள சோணித சுக்கிலங்களுடன் சம்பந்தப்பட்டால்தான் பிரதி யுற்பாதனம் நடந்தேறும். இச்சம்பந்தம் எவ்வாறு உண்டாகிறது? தேன் அருந்தவும் மகரந்தப்பொடி

* 312-ஆம் பக்கம் பார்க்க.

களை அபகரிக்கவும் செல்லும் நமது தேனீ போன்ற சிறு ஜந்துக்களே இக்காரியத்தைச் செய்து முடிக்கின்றன. எங்ஙனமெனில், இவைகள் புஷ்பம் தோறும் நுழையும்போது, அறிந்தோ அறியாமலோ இவற்றின்மேல் ஒட்டியிருந்த ஓர் மலரின் ஆண்தாது மற்றொன்றிலுள்ள பெண்தாதுவுடன் கலந்துவிடுகின்றது. பின்னர் மலர் கருத்தரித்துக் காய்கனி தருகிறது. அவகாசம் நேர்ந்துழி அதிகமாக அறிவிப்போம்.

XX. படிப்பினை.

*"உடாஅதும் உண்ணாஅதும்......" †"சுற்றுங் கருங்குளவி....." முதலிய தொடக்கச் செய்யுள்களால் அறியப்படுவனவற்றைத் தவிர வேறு பல நீதிகளும் அறியலாகும்: ஒற்றுமை, சுத்தமுடைமை, சோம்பலின்மை, செட்டு, தொழிற்பிரிவினை, கூட்டுறவு, ராஜபக்தி, அரசியல், பின்னை வேண்டுவ இன்னே தேடும் முன் யோசனை, ஈசுர சிருஷ்டியின் வன்மை, அற்புதம் முதலியவற்றை எத்தகையார்க்கும் கற்றுத்தர இச்சிறு ஜந்துக்களே போதுமானவை. இம்மட்டோ?

(2) பிறர் உபத்திரவம் உணராது, அகப்பட்ட மட்டும் அபகரிக்கும் அற்பரைப்போன்று, யாசகத்திற் புக்கு, பிறர் நாசமுறப் பிச்சை பெறும் பாதகர்கள்,

"ஆயுமலர்த் தேன்வண் டருந்துவது போல்இரப்போர்
ஈயுமவர் வருந்தாது ஏற்றல் அறம்—தூயஇளம்
பச்சிலையைக் கீடமறப் பற்றி அரிப்பதுபோல்
அச்சமுற வாங்கல் அகம்."

---

* 303-ஆம் பக்கம் பார்க்க. † 301-ஆம் பக்கம் பார்க்க.

என்ற அருமை வெண்பாவை நினைந்து அதன் பொருளைச் சிந்தித் துணர்வராயின் ஈவோர்க்கும் ஏற்போர்க்கும் எத் துணை நன்மை உண்டாகும்!

(3) கூட்டில் புழுக்களோடு சேர்ந்தும், தேனீ முத லியவற்றின் எச்சிலாகியும் இருப்பினும், நறுமணம், சிறந்த ஒளி, இனிய சுவை, உபயோகம் முதலியன கொண்டுள்ள கார ணத்தால், தேன் மேன்மையாகக் கொள்ளப்படுதல்போல், நல்லோரும் எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினும் குணக் காரணமாக மேன்மையாகவே கொள்ளப்படுவர் என்பதில் ஐய மில்லை.

XXI. முடிவுரை.

"தேனீ ஒரு அற்ப ஜந்து தானே? இதைப்பற்றி ஆ! ஆ!! எவ்வளவு விஷயங்கள்!" என்று ஆச்சரியமெய்தும் எனது அருமைச் சகோதர சகோதரிகளே! இதனைப்பற்றிய விஷயங்கள் யாவும் சொல்லப்பட்டுவிட்டன என்று ஒருபோ தும் எண்ணுதீர்கள். அறிய இன்னும் எவ்வளவோ இருக் கிறது. பிரகிருத சாஸ்திர நிபுணர்கள் "அத்தி முதல் எறும்பீறுன" பலவற்றையும்பற்றிக் கூறியிருப்பினும், இன் னேரில் தேனீயைப்பற்றி எழுதியுள்ளோர் தொகையே ஏனை யவற்றைப்பற்றி எழுதியுள்ளோர் தொகையினும் அதிகமாக இருக்கக் காண்பீர்கள். உண்மையிலேயே நீங்கள் அதன் உடற்கூறு உருவ அமைப்பு, குடித்தனப் பாங்கு முதலியவற் றைப்பற்றி ஆராயின் அறிவு விசாலமும், அளவிலா ஆனந்த மும் ஆச்சரியமும் அடைவீர்கள். நம்மவர்களிற் பலர் கற் றறி மூடராகவும் கண்ணிருந்தும் குருடராகவும் இருப்பி னும் மேற்றிசையார் தம் அறிவைப் பயன்றரும் வழியிற்

செலுத்தியும் எப்பொருளையும் ஊன்றிப்பார்த்தும், இக்காலத்தவர்க்குச் சிறந்த வழிகாட்டிகளாக இருந்து வருகின்றனர். மேனுடுகளிற் பயிரிடுவோரும் திரவியம் தேட விரும்புவோரும் தேனீக்களைப்போற்றி வளர்த்து விருத்தி செய்து குபேர சம்பத்துடையவர்களாக இருக்கின்றனர். என்னே! ருஷ்யாவில் உள்ள ஓர் குக்ராமத்தில்மட்டும் 5-லக்ஷம் தேன் கூடுகள் உள. ஐரோப்பாவில் 50-கோடிக்கு அதிகமாகவுள. ஜர்மனியில் 183-லக்ஷங்களுக்கு அதிகமாக இருக்கின்றன என்று படித்தேம். இவையாவும் மனிதரது முயிற்சியாலும் பராமரிப்பாலும் பல்கிப் பருகியவைகளே. அமெரிக்காவில் இவற்றினும் அதிக கூடுகள் உண்டு. ஜர்மனியில் துரைத்தனத்தாரே பணங்கொடுத்து, கிராமங்கள்தோறும் சென்று ஆங்காங்கு வசிப்போர்க்கு எவ்வாறு தேனீக்களை வளர்த்து விருத்தி செய்யலாம் என்று கற்பிக்க உபாத்தியாயர்களை நியமித்திருக்கிறார்கள். இம்மட்டோ?

இவ்வீக்களை வளர்த்தல், பாதுகாத்தல், அவைகட்கான வைத்தியம் முதலியவற்றைப்பற்றி ஆராய்ச்சி செய்ய மேனுடுகளில் எத்துணைச் சங்கங்கள் ஏற்பட்டுள்ளன? எத்துணைப் பத்திரிகைகள் இவ்வீக்கள் பொருட்டே தோன்றி அவற்றின் அபிவிருத்திக்காகப் பாடுபட்டு நலம்புரிந்து வருகின்றன! எத்துணை புலவர் பெருமக்கள் தம் முழு வாணுளையும் அற்ப ஜந்துக்கள் என்று அறியாதார் கருதும் இவ்வதி முக்கிய ஜந்துக்களைப்பற்றிய சகல விஷயங்களையும் ஐயந்திரிபற அறிந்துகொள்வதிற் செலவிட்டிருக்கிறார்கள்,? செலவிட்டும் வருகிறார்கள்? அதிகம் சொல்வானேன்?: அரிஸ்டோமேகஸ் என்பவர் தமது அரிய ஆயுளில் அறுபது வருஷங்களுக்கு

அதிகமாகவே இவற்றைப்பற்றிய விஷயங்களை யறியச் செல விட்டிருக்கின்றனராம்! பிலிஸ்கஸ் (Philiscus) என்பவர், இவற்றைப்பற்றி எவ்வகை இடையூறுமின்றி எவ்வளவு அறிந்துகொள்ளக்கூடுமோ அவ்வளவும் அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் மிகுதியால் தம் நாடு துறந்து தொலை தூரத்தில் இருந்த காடு ஒன்றில் வசித்து அவற்றை நன்கு கவனித்து வந்தனராம். நம்மவர்கள்—? நம்மவர்களா? சொல்லியா தெரியவேண்டும்? நமது அறியாமையும் சோம்பேறித்தனமும் என்று ஒழியுமோ, புதிது புதிதாக விஷயங்களை அறிய ஆவலும் அக்கறையும் என்று உண்டாகுமோ, அன்று தான் நமக்கு விடிவு காலம். அதுவரை இல்லை. இது சத்தியம். முக்காலும் சத்தியம்.

ஆ! ஆ!! நம் முன்னோர்கள் நம் காலத்து நம்மனோரைப் போன்றா இருந்தார்கள்? என்னே அவர்கள் மதியூகம்! என்னே அவர்களது பொருள்களை ஊன்றிப்பார்த்து அறிந்துணரும் திறன்!: யாம் சீரியதாய ஆரியகுலத்திற் றோன்றினேம் எனினும், ஆரியமொழி கற்றுணரும் பாக்கியம் வாய்க்கிலேம். (இப்பெரும் பாக்கியத்தைப் பெற இறைவன் எமக்கு இன்னருள் புரிவாராக) ஆயினும், அம்மொழியில் வரைந்துள்ள உபநிஷதம் ஒன்றின் ஆங்கிலமொழி பெயர்ப்பைத் தற்செயலாக நாம் வாசிக்க நேர்ந்தது! அப்பொழுது யாம் அடைந்த ஆனந்தத்திற்கும் அளவுண்டோ? என்னே? விஷயம் முழுதும் நம் ஞாபகத்தில் இல்லை; ஆயினும் கருத்தைமட்டும் சுருங்கக் கூறுவோம்.

"மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய பஞ்சேந்திரியங்களும் தம் தம் உபயோகத்தையும் பெருமையுமே பாராட்

டிச் செருக்குற்றன. இஃதறிந்த ஜீவாத்மா அவற்றின் அறிவின்மையை உணர்த்த எண்ணித் தனது இருப்பிடத்தினின்றும் சென்றது. உடனே சரீரம் இராணிஈ இழந்த கூட்டின் கதியை யுற்றது" என்று அதில் நாம் படித்ததாக ஞாபகம்.

ஆகையால், இத்தகைய பேரறிவு சான்ற பெரியோர் வம்சத்து உதித்த நாம் அவர்கள் பெருமையை நிலைநாட்டும் காலம் எக்காலமோ?

மேற்றிசையாரினும் பூர்வீக நம்மவர்க்கு தேனைப்பற்றி அதிக விஷயம் தெரியும் என்று வெளியாகிறது: ரணசாஸ்திர நிபுணராகிய சுசுருதர் தேனில் எட்டு வகை உண்டு என்கிறார். மேனாட்டார்க்கு நான்கு வகையே தெரியும். எஞ்சிய நான்கு வகைகளாகிய அர்க்கம், சத்ரம், அவுதாலகம், தாலம் என்பனவற்றைத் தேடிக்கண்டுபிடிக்க அவர்கள் நாளைக்கும் முயற்சித்து வருகின்றனர். பல சொல்லி யென்? நம்மவர் நிலையும் முயற்சியும் பெருமையும் யாதொரு விக்நமும் உறாது ஓங்க விக்நேசுவரக் கடவுளை வந்தித்து இவ்விஷயத்தை நிறுத்துகின்றேன்.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன்—கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே! எம்பெருமை
போங்கஅருள் நாளும் புரி.

புலால் உண்ணும் பூண்டுகள்.

நாம் எடுத்துக்கொண்ட இவ்விஷயத்தின் பெயரைக் கேட்ட மாத்திரத்திலேயே பலர்க்கு நகைப்பும் வியப்பும் உண்டாகாமல் இரா. ஏனெனில், "ஆயு மலர்த்தேன் வண்டு அருந்துவது"ம் "தூய இளம் பச்சிலையைக் கீடம் அறப்பற்றி அரிப்பது"வும், கறையான், கம்பளிப்பூச்சி, வெட்டுக்கிளி, பட்டுப்பூச்சி, முசுக்கட்டைமுதலியன, காய்கனி கந்தமூலாதிகளை அழித்து உண்பதுமே பலரும் பார்த்தறிந்த விஷயமாகும். ஆதலால், பயிர் பச்சைகளைப் பூச்சி புழுக்கள் உண்ணவே பார்த்தோர், பூச்சி புழுக்களைத் தின்றும் வளரும் பூண்டு செடிகள் உள என்று கேள்விப்படின், ஏனோ அவர்களுக்கு நகைப்பு உண்டாகாது? என்னை? அறிவு சிறிதுமின்றி, பூமியில் வேர் ஊன்றி, தாமாக அசைதலும் உணர்தலுமின்றித் தோன்றிய இடத்திலேயே வளர்ந்து அழியும் இயல்பினவாகிய ஸ்தாவர வஸ்துக்கள், இயங்கவும் உணரவும், அறியவும் தாமாய் ஒரு தொழில் புரியவும்வல்ல ஜீவஜந்துக்களை உண்ணும் என்றால் யார் நம்புவர்? அன்றியும், விருக்ஷ வர்க்கத்தைச் சார்ந்த நானாவித செடிகளும் பூண்டுகளும் மிசிரப்பட்ட சாதாரண வாயுவினின்றும் ஜீவஜந்துக்கள் வெளிப்படுத்தும் விஷவாயுவை இடைவிடாமல்உட்கொண்டு வளர்வதே சகஜமாயிருக்க நாம் சொல்லப்புகும் பூண்டுகள் பூச்சிகளையும் தின்பனவென்னில் அஃதொரு புதுமையே யன்றோ?

ஆனால் மனிதர்களுக்குள் தமோகுணப் பிரகிருதியுள்ளோர் சாகபக்ஷணிகளாகவும் மாமிசபக்ஷணிகளாகவும் இருப்பது போலவே, நாம் ஈங்கெடுத்துக் கூறப்புகும் பூண்டுகளும் ஏனைய செடிகளைப் போன்று விஷவாயு, தாதுப்பொருள்கள் முதலியனவற்றை உட்கொள்வதோடு நில்லாமல் பெரும்பாலும் பூச்சி புழுக்களையும், தின்று கொழுத்துக் கொழித்து வளர்கின்றன.

இப்பூண்டுகளுக்கேற்ற இந்தியப் பெயர்கள் இன்னவென்ன யாம் அறியோம். ஆதலின், இவ் வற்புதப்பூண்டுகள் நமது இந்தியாவில் இருப்பன என்றேனும், இல்லாதன என்றேனும் நாம் துணிந்துகூற வல்லேம் அல்லேம். ஆயினும் இப்பூண்டுகளிற் பெரும்பான்மைய பெரும் பெருஞ் செடிக்காட்சிசாலைகளில் மாதிரிக்கு வைத்து வளர்க்கப்பட்டு வருகின்றன என்பது தெரியவருகிறது.

இவை விசேஷமாகச் சதுப்பு நிலங்களிலும் கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போன்று குளக்கரையிலும் நீரிலுமே முளைப்பன. ஆங்கு இவை முளைக்கக் காரணம் யாது? இவை மாமிச பக்ஷணிகள் ஆகையால் வேறு இடங்களில் முளைக்குமாயின் ஆங்கு இவைகள் பிடித்துத்தின்ன பூச்சி முதலியன கிடைக்கும் என்பது என்ன நிச்சயம்? ஆனால், சதுப்பு நிலங்களிலும் நீர்நிலைகளிலுமோ, கொசுகு, விட்டில், ஈக்கள், புழு முதலிய சிறு ஜந்துக்களும், மச்சமாதிய நீர் வாழும் பிராணிகளும் ஏராளமாய்க் கிடைக்கும். தமக்குக் கிடைக்கக்கூடிய இரைகளின் இருப்பிடம் தேடி, ஆங்கு முளைப்பதே இவற்றைப்பற்றிய அதிசயங்கள் அனைத்தினும் அதி முக்கியமானது என்னலாம்.

"இஃதுண்மையாயின், செடிக்காட்சி சாலைகளில் மட்டும் இவை எங்ஙனம் வளரும்?" எனச் சிலர் கேட்கலாம். இவ்வையவினவிற்கு விடை இதுவே:—இச்செடிகளைப் பரிபாலிப்பவர்கள் இவற்றை ஆங்கும் தாம்உண்டாக்கிய சதுப்பு நிலங்களிலும் நீர் நிலைகளிலுமே வைத்துப் பயிராக்கியும் இவற்றிற்கு வேண்டியமட்டும் பூச்சி புழுக்களைப் பிடித்துத் தந்தும் வளர்ப்பர். இவை நிற்க.

இனி இப்பூண்டுகளிற் சிலவற்றையும், அவை இன்னின்ன விதமாகத் தத்தம் இரையைக் கண்ணிவைத்துப் பிடித்துண்கின்றன என்பதைப்பற்றியும் இயன்றவாறு எடுத்து ஓதுவோம்:—

1. வெண்ணெய்ப் பூண்டு. (Butter-wort.)

இது தனது பெயருக்கேற்பக் கொழுகொழுப்பும் நெய்ப்பற்றும் உள்ள ஓர் பூண்டு. இதன் இலை பிசுபிசுப்பான ஒட்டுந் தன்மையுள்ள ஒருவகைத் திரவம் கசியப்பெற்றது. இதழ் இதழாகச் சித்திரப் பூங்கொத்துக்கள் போன்றுள்ள இலைகளின் மத்தியினின்றும் இரண்டொரு தண்டுகள் கிளம்பி நிற்கும். இத்தண்டுகள் இந்திர நீலம்போன்ற நக்ஷத்திர வடிவமான மலர்களைத் தாங்கி நிற்கும். நெருப்பு, விட்டில் ஈசல் முதலியனவற்றைக் கவர்வதுபோல, வனப்பாலும் ஒண்மையாலும், இம் மலர், பூச்சிகளைத் தன்பால் இழுக்கும். அன்றியும் தேன்குடிக்க வரும் வண்டுகளும் தேனீக்களும் பூவை நாடிவரும்பொழுது, இச்செடியின் இலைகளின்பேரில் வந்து உட்காருவதுண்டு. தக்ஷணமே முற்கூறிய பசைத்தன்மையுள்ள பிசின்பேரில், இதன் சரீரம்பட அவ்விலையின் நுண்

ணிய துவாரங்களில் இருந்து திரவம் முன்னிலும் அதிக மாகக் கசிந்து இலையோடிலையாய் இதனை இறுகப்பிடித்துக் கொள்ளும். எவ்வளவுக் கெவ்வளவு பூச்சியானது தன்னை விடுவித்துக்கொள்ள முயல்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு அதிக விரைவாகவும் கெட்டியாகவும் அது அத்திரவத்தில் சிக்கிக்கொள்வதுடன் மூக்கு முகங்களிலும் அதனைப்பூசிக் கொள்ளும். சிறிது நேரத்திற்கெல்லாம் அது தவித்துத் தத்தளித்து மூச்சடைத்துச் சாகும். பூச்சி செத்ததின் பின்னர் இப்பூண்டு தனது சரீரத்தினின்றும், ஜீரணிக்கத்தக்க ஓர்வகைத்திராவகத்தை வெளிப்படுத்தித் தான் சிறைப்படுத்திய பூச்சியின் இறகு எலும்பு இவைகளைத்தவிர எஞ்சிய பாகங்களைக் கரைத்துப் பின்னர் அதனை உறிஞ்சி உட்கொள்ளும். இவ் இலையே இதற்குக் கையும் வாயும் ஆக உதவுவது.

பூச்சிகள் இலையில் பிசுபிசுப்பான பாகத்தில் உட்காராமல், அதன்மேல் பிறிதொரு இடத்தில் உட்காருமாயின், உடனே இலை சுருண்டு அவற்றைப் பிசினண்டை சேர்ப்பிக்கும். இவ்வாறு சேர்ப்பித்தவுடன் அவை முன்போலவே பூண்டிற்கு இரையாகும். இவ்விலை ஒரு தொட்டாற் சுருங்கி. அஃதாவது, இதன் சுனைகளின்மேல் யாதானும் ஒன்று படுபடுமாயின் உடனே கூச்சம் அடைந்து இலைசுருள ஆரம்பிப்பது. ஆதலால், இது, தன்மேல் தூரத்திலேனும் சமீபத்திலேனும் வந்து உட்காரும் பூச்சிகளைச் சுருட்டியது வியப்பிற்கிடனன்றோ?

சிலதுஷ்டர்கள் இதுதொட்டாற்சுருங்கி எனத்தெரிந்து கொண்டு சுத்த விளையாட்டுத்தனத்திற்காக இதின்பேரில் சிறிது மணலை அள்ளிப்போடுவர். தக்ஷணமே அது வழக்

கப்படி சுருட்டிக்கொள்ளவும் பிசின் விடவும் ஆரம்பிக்கும். ஆனால் இவர்கள் வெட்கி முகம் வெளுக்க, அது, இக்காரியம் சேஷ்டைக்காகவே செய்யப்பட்டுளதென்றும், தான் பற்றிய பொருள் ஆகாரத்திற்காக உபயோகப்படுவ தன்றென்றும் கண்டுகொண்ட பாவனையாக ஜீரண திராவகம் சிறிதும் வெளிப்படுத்தாமல் இருப்பதுடன் சிறிது நேரத்திற்கெல்லாம் விரிந்துகொள்ளவும் ஆரம்பிக்கும். ஆனால் மணலுக்குப் பதிலாக மாமிசத்துண்டு, சொட்டுப்பால், சிறிது முட்டை, முதலியவற்றை இதன்பேரில் போட்டால் முன்மாதிரி பிசினை வெளிப்படுத்துவதுடன் திராவகத்தையும் வெளிப்படுத்தி எறியப்பட்ட தின்பண்டத்தைக் கரைத்துக் குடிக்கும். இதனாலேயே இஃதொரு புலால் உண்ணும் பூண்டு என்பது சொல்லாமலே விளங்குமன்றோ?

லாப்லாண்ட் தேசத்தாரும் ஸ்வீடன்தேசத்தாரும் இப்பூண்டின் இலையின்மேல் காய்ச்சிய பாலைவார்த்துத் தயிராக்கிக் குடிப்பாராம்.

2. கதிர்ப்பனிப் பூண்டு. (Sun-dew.)

இப்பூண்டின் மலர் வெள்ளை நிறமுடையதாக இருக்கும். இதன் இலைகள் செம்மயிரால் மூடப்பட்டிருக்கும். இம் மயிர்களை இலையின் கரங்கள் என்றே சொல்லலாம். ஒவ்வொரு மயிரும் நுனியில் பனித்துளி போன்றதும் பிசுபிசுப்பானதுமான உருண்டை வடிவமுள்ள திரவம் கொண்டது. இத் திரவம் சூரிய வெப்பத்தில் ஜொலிக்கும் பொழுது பனித்துளி போன்றே இருக்கும். ஆதலால், இதற்குக் கதிர்ப்பனிப் பூண்டு (Sun-dew) எனப் பெயர் கிடைத்தது.

இலை ஒவ்வொன்றிற்கும் 200 அல்லது 300-கரங்களுக்குக் குறையாமல் இருக்கும். இச்செடியின் நிறத்தையும் மலரின் வனப்பையும் கண்டு மயங்கியோ, அல்லது நீர்வேட்கையாலோ, யாதானும் ஒரு பூச்சி சென்று அத் திரவத்தின்மேல் உட்கார்ந்ததோ இல்லையோ இக்கரம் சுருண்டு கொடுத்து, கிடைத்த இரையை மற்றொரு கரத்தினிடை கொடுக்க அஃது அதனைப்பெற்றுத் தன் பக்கத்துள்ள வேறொன்றன்பால் விடுக்கும். இவ்வாறு ஒவ்வொன்றும் அதனதன் அருகில் உள்ள கரங்களிடம் சேர்ப்பிக்கக் கடைசியில் இரையானது இலையின் மத்தி போய்ச் சேரும். இரண்டு பூச்சிகள் ஒரே இலையில் வெவ்வேறு இடங்களில் உட்காருமாயின், மயிர்கள் இரண்டு ஜதைகளாய்ப் பிரிந்து கொடுத்து ஒரு ஜதை இப்படியும் மற்றொரு ஜதை அப்படியுமாகச் சுருட்டிப் பூச்சிகளை இலைமத்தியில் சேர்ப்பிக்கும். சேர்ப்பிக்கவே இலையின்னம் போல் குழிந்து கொடுத்து, ஜீரணம் செய்யும் திராவகத்தை முன்போல் வெளிப்படுத்திப் பூச்சிகளைக் கரைத்து எலும்பு இறகு தவிர எஞ்சியவற்றை உண்டு விடும்.

3. துருத்திப் பூண்டு. (Bladder-wort.)

இதற்கு வேர் கிடையாது. இஃதொரு நீர்ப்பூண்டு. இது கார்காலத்துக் கடுங்குளிரில் நீரில் அமிழ்ந்தித் தூங்காநிற்கும். கோடைகால வேடைப் பொழுதினில் இது நித்திரை நீங்கி மேற்கிளம்பி மிதந்து மீனையும் நீர்வாழும் ஜந்துக்களையும் கண்ணிவைத்துப் பிடித்துச் சம்பிரமமாக உண்ணும். இது தனது இரையைப் பிடித்து உண்ணும் விதம் அதிக ஆச்சரியகரமானது: வலைஞர் கண்டு பிடிப்பது போலவே இது பூச்சிகளைப் பிடிக்கும். எங்ஙனமெனில், இச்செடியை

ஒட்டிச் சிறு சுரைக்குடுக்கைகள் போன்று பைகள் பல இருக்கும். இப் பைகளின் வாயில் திறந்திருத்தலைக்கண்டு தமக்கு நேரிடப்போகும் பிராண சங்கடத்தைப் பற்றிக் கனவுகூடக் காணாத சிறு மீன் முதலிய ஜலசரங்கள் அதனுட் புகும். ஆனால் இங்ஙனம் உட் சென்ற ஜந்துக்கள் மீண்டும் திரும்பவதில்லை.

இதற்குக் காரணம் யாதெனில், கம்பியினாற் பின்னப்பட்ட எலிக்கூட்டுக் குள்ளதுபோலவே ஒவ்வொரு பைக்கும் கள்ளக்கதவு உண்டு. இக்கதவு, தன்வாயிலாகச் செல்வனவற்றை உள்ளேமட்டும் செல்ல விடுமேயன்றி வெளிப்படுத்த முடியாது. இக் கதவின் வெளிப்புறத்தில் கூச்சல்விளைக்கும் கூரிய மயிரும் உள்பக்கத்தில் கட்டைமயிரும் முளைத்திருக்கும். கூட்டுக்குள் சுலபமாய் நுழைந்த எலி எவ்விதம் பிறர் விடுவிக்குமட்டும் வெளிவராதோ, அவ்வாறே இப் பைக்குள் சென்றவைகளும் வெளிவரா. அவைகள் திரும்பி வெளிக்கிளம்ப முயற்சிப்பினும் அவற்றிற்கு முன்னினும் தொந்தரவே விளையும். ஏனெனில் அவை அங்கும் இங்கும் புரள்வதால் கட்டைமயிர்கள் குத்தித் தொந்தரிக்கும். ஆனது பற்றி அவை வெளிக்கிளம்பவேண்டும் என்ற வீண் எண்ணமே கொள்ளா.

4. ஈப்பொறிப் பூண்டு. (Fly-trap.)

இதன் இலைகள் கதிர்ப்பனிப் பூண்டின் இலைகளைப் போன்று ஒன்றை ஒன்று அடுத்தடுத் திருக்கும். ஆயினும், நாம் இலையென்று குறிப்பிட்டுக் கூறுவது அதன் நுனியில் உள்ள பாகத்தையே. ஏனெனில் ஏனையபாகம் தடித்த இலை

போன்ற தட்டையான தண்டுகளே. இலை ஒவ்வொன்றும் இரண்டிரண்டு வட்ட மடல்களால் ஆனது. இவ் விரண்டு மடல்களும் முதுகு குப்புறவைத்து விரிந்துகிடக்கும் புத்த கங்கள் போன்றாவது அல்லது திறந்துவைத்த எலிப்பொறி போன்றாவது இருக்கும். எலி இடுக்கிபோன்றே இதழ் ஒவ் வொன்றும், ஓரங்களில் அரம்பம்போன்ற பல பற்கள்கொண் டவை. இதழ்களின் மத்தியில் மெல்லிய மயிர்கள் முளைத் திருக்கும். இம் மயிர்களுக்குச் சுணை என்று பெயர். இச் சுணைகளே இலையின் தும்பிகளாகும். இவற்றிற்குப் பரிச வுணர்ச்சி அதிகம்.

யாதாலும் ஒரு பூச்சி இச் சுணையின்பேரில் வந்து உட் காருமாயின் திறந்த புஸ்தகம்போன்ற இலையின் இதழ்கள் அதிவிரைவில் மூட ஆரம்பிக்கும்; தக்ஷணமே எலியிடுக்கி போலவே இவற்றின் பற்கள் ஒன்றை ஒன்று இறுக்கி நெருக் கிக்கொள்ளும். பின்னர் இதழ்களுக் கிடுக்கிலும் அவற்றிற் குள்ளும் அகப்பட்டுக்கொண்ட சிற்றுயிர்ப் பிராணிகளின் கடினபாகங்கள் தவிர எஞ்சியபாகங்கள் கரைந்து உண்ணப் பட்டதன் பின்பே இலையானது மீண்டும் இரைபெற விரிந்து கொள்ளுமாம்.

5. கமண்டலப் பூண்டு. (Pitcher-plant.)

இது விசேஷமாய் உஷ்ணதேசங்களிலேயே உற்பத்தி யாவது. ஆயினும் இது குளிர்ந்த நாடுகளில் உள்ள செடிக் காட்சி சாலைகளிலும் காணப்படும். ஆங்கு இதன் வளர்ச் சிக்கும் விருத்திக்கும் வேண்டியசூடு அச் செடியைச் சுற்றி லும் கொடுபட்டிருக்கும். இதன் இலைகள் கமண்டலம் போன்று வளர்வதால் இவற்றைக் கொண்ட செடிக்குக்

கமண்டலப் பூண்டு எனும் பெயர்வாய்ந்தது. சிலசெடிகளின் கமண்டலங்கள் திருகி வளைந்திருக்கும். வேறுசிலவற்றின் கமண்டலங்கள் படர்கொடிக் கூந்தல்போன்றுள்ள நுண்ணிய கொடியினின்றும் தொங்கி நிற்கும். இக் கமண்டலங்கள் சுமார் 9 அங்குலம் ஆழமுள்ளனவாக இருக்கும். கமண்டலம் ஒவ்வொன்றும் கொஞ்சங் குறைய நீர்கொண்டது. அதற்குக் கனத்துத் தடித்த விளிம்புண்டு. அவ் விளிம்பு தேன் ததும்பப் பெற்றது. கமண்டலத்தின் உட்புறம் சிறிதும் கரடுமுரடின்றிச் சமமாக இருப்பதுடன் வழுக்கக்கூடியதாயும் இருக்கும்.

சாதாரணமாக, பூச்சி, முத்துமுத்தாய் உருண்டை வடிவோடு கூடியுள்ள இனிய தேனையுண்ண விரும்பியோ, அல்லது நேத்திரானந்தத்தைப் பயக்கும் அதன் நிறத்தைக்கண்டு மயங்கியோ, அதில் வந்தடைகின்றது. இவ்வாறு அடையும் பொழுது எண்ணிறந்த பூச்சிகள் தாமாகவே வழுவி திரவத்தில் விழுந்துவிடும். அவை விழுவதுதான் தாமதம்; தக்ஷணமே அவை தப்பி வெளிக்கிளம்பிவிடா வண்ணம் அத் திரவத்திலேயே தயாராய் மிதந்து காத்துக்கொண்டிருக்கும் கட்டைமயிர்கள் அவற்றை மூச்சடைத்துச்சாகத் தண்ணீரில் மூழ்த்தும். பூச்சிகள், செத்தவுடன், திராவகத்தில் கரைந்து உருமாறும். பின்னர் இவற்றின் சாரம் இலைகளால் கிரகிக்கப் பட்டுச் செடிக்குச் சிறந்த உணவாகும். இவ்வாறு குருவிகளும் இக் கமண்டலங்களைத் தங்கட்கேற்ற கூடுகளென மதித்து ஏமாந்து இறந்து செடிக்கு இரையாகுமாம்.

முடிவுரை:—

இச்செடிகள் சம்பந்தமாய் நாம் சில கூறவேண்டி வருகிறது. அவை யாவெனில், "மாமிச போஜனத்திற் பிரியம்

கொண்ட மாக்கள் சிலர் கேவலம் செடிகளை மாமிசம் உண்ணும்படி படைக்கப்பட்டிருக்கும்பொழுது மனிதர்கள் உண்பதனால் தவறு என்னை?" என்று வாதம்செய்யக்கூடும் என்பதே.

இவ்விதம் தர்க்கக்ஷி பேசுவோர், "கருப்பைக்குள் முட்டைக்கும் கல்லினுட் டேரைக்கும் விருப்புற் றமுதளிக்கும் மெய்ய"னாகிய ஈசுவரன் அததற்கு ஏற்ற உணவுகொடுத்து அற்ப வஸ்துவையும் காத்து ரக்ஷிக்கின்றார் என்றும், பூண்டுகளிலும் தமோகுணப் பூண்டுகள் உள என்றும் மட்டுமே கொள்ளவேண்டும். ஏனெனில் புலிபசித்தாலும் புல்லைத் தின்னாது. மாமிசத்தையே உண்ணும். மனிதனோ அப்படியல்லன். சாகபக்ஷிணியாகவே இருத்தலால் அவனுக்குக் கேடொன்றும் இல்லை. பகுத்தறிவுள்ளவனாய்ப்பிறந்த மனிதன் மாமிசபக்ஷிணியாகவே இயற்கையில் பிறந்துளான் என்றே வைத்துக்கொள்ளுவோம். ஆயினும் விவேகாநந்த ஸ்வாமிகள் கூறும் வண்ணம் மனிதன் பிரகிருதியை ஜயிக்கிறதற்கென்றே பிறந்திருக்கிறவனானாலும், கண்மூடித்தனமாக அதனைப்பின்பற்றத் தோன்றினவனல்லனாதலாலும் அவன் தன்னுடைய சொந்தநன்மையை நாடி, சாகபக்ஷிணியாகவேண்டியது அவசியம். ஏனெனில் மாமிசபோஜனத்தால் ஒரு சிறிதும் மனத்தூய்மை உண்டாகாது. மிருககாட்சிசாலை சென்று பார்த்திருக்கும் எவனும் இதன் உண்மையைஅறிந்தே இருப்பன். சாகபக்ஷிணியாகிய மலைபோன்ற யானையும் சாந்தமும் சாதுவுமாயுருக்கிறதும், கூட்டில் அடைபட்டிருக்கும் மாமிசபக்ஷிணிகளாகிய சிங்கமும் புலியும் அரைநாழிகை நின்ற இடத்தில் நில்லாமல் குரூரச்செயல்

களைக்காட்டி நிற்றலும் யாவரே அறியாதார்? ஒன்று சாதுவும் மற்றது மூர்க்கமாயும் இருத்ததற்குக்காரணம் அதது உட் கொள்ளும் ஆகாரம் அன்றோ? மனிதன் முன்னேக்கிச் செல்லவே பிறந்துள்ளானாதலால் பரத்தை நாடுவோனுக்கு மாமிச போஜனம் ஒரு சிறிதும் தகாது என்றறிக. நிற்க.

இதனால் அணுதரிசனி என்றபூதக்கண்ணாடிகொண்டு நாம் அதிநுட்பமாய் உற்று நோக்கி அறியும் நுண்ணிய அணுக்கள் முதல், தூரதிருஷ்டிக் கண்ணாடி கொண்டு சோதி த்தறியும் அதி பிரமாண்டமான கிரகங்கள் ஈறாகவுள்ள யாவும் ஆராய்ச்சிமிக்குள்ள அறிஞர்களுக்கு ஆச்சரியம் விளைவிப்ப துடன், அவர்களுடைய அறிவு விசாலத்திற்கும் மெய்ப் பொருள் உணர்ச்சிக்கும் ஏதுவாக இருக்கின்றன என்றும், ஈசுவர சிருஷ்டியில் அற்பமானதும் அநாவசியமானதும் யாதொன்றும் இல்லையென்றும் கரதலாமலகம்போல் தெள் ளிதற் புலப்படுகின்றன. ஆதலின், அடிக்கடி நாம் பார்த்துப் பார்த்து இருப்பதால், சாதாரணமானதென்று யாதானு மொன்று தோற்றினாலுங் கூட அதனைச்சிறிது ஆழ்ந்து உற்று நோக்கி ஆராய்ந்து அதனைப்பற்றி முன்பு அறிந்தே இராத பல அதி விசித்திரமான விஷயங்களை அறிந்து கொள்ள நாம் இனியேனும் முயலுவோமாக.

சங்கங்களும் பிரசங்கங்களும்.

நாகரிகம் வளர வளர ஊர்கள்தோறும் சங்கங்களும் பிரசங்கங்களும் ஏற்படுகின்றன. சில வருஷங்களுக்குள் பல சங்கங்கள் தோன்றின. இவற்றுள் மாசக் கணக்கில் ஒழிந்தன சில. வருஷக்கணக்கில் அழிந்தன பல. எஞ்சிநிற்பன சிற்சில. இங்ஙனம் தோன்றித் தோன்றி மறைவதற்குக் காரணம் அவற்றை ஸ்தாபிப்பவர்கள் சுத்த மனத்துடன் முயலாமல் அழுக்காறு அவா வெகுளி முதலியவை காரணமாகத் தொடங்குதலே யன்றி வேறில்லை. சுத்த மனத்துடன் ஸ்தாபிக்கப் பெற்றவைகளே நிலைநிற்பன. அவற்றுள்ளும் முயற்சி நலத்துக்கேற்ப இவை விளக்கமுறுகின்றன. இங்ஙனம் விளக்கமுறும் சபைகளும் அவற்றை நடத்துவோர்களின் மதிவலிமை, அறிவுண்மை, தாளாண்மை, ஒப்புரவு, துணைவலிமை முதலியவற்றால் உலகுக்குச் சிறந்த பயன் விளைப்பனவாகும்.

சங்கங் கூட்ட வேண்டுமென்று நினைப்பதும் சந்தைக் கூட்டம்போல் பலர் கூடுவதும், வரம்பின்றி மனம்போன வாறு உச்சத் தொனியுறப் பிரசங்கிப்பதும், வீண் செய்கையே யன்றிப் பிறிதில்லை.

ஒரு சபையை ஏற்படுத்து முன்னர் "இச்சபை எதன் பொருட்டு ஏற்படுத்துவது? இச்சபையார் செய்யற்பாலன யாவை? செய்தற்கும், செய்வித்தற்கும் உரியவர் யாவர்? இதன் கடைப்பிடியான கோட்பாடு யாது? இது நெடுங் காலம் நடைபெறுமா? வருவாய்க்கு வழி யாது?" என்பன

வாதிய பலவற்றையும் நன்கு சூழ்ந்து ஸ்திர புத்தியுடன் ஏற்படுத்த வேண்டும். இங்ஙனமின்றி வரவரப் பார்ப்போமென்று தொடக்கத்தில் உற்சாகத்துடன் விரிவாக நடத்தினல் பின்னர் இடுக்கணுற்று வருந்த நேரும். வருந்த நேர்ந்துழி மேற்கொண்ட கருமங்களை ஒன்றன்பின் ஒன்ருகக் குறைக்கவும் ஒழிக்கவும் வேண்டிவரும். நீட்டிக் குறைத்தவுடன் பழிப்புக்கிடமாகி யழிவிற்கும் காரணமேற்படும். இங்ஙனம் முறைபிறழ்ந்து நடத்தப்பெற்றமையால் ஒழிந்துபடும் சபைகள் தாம் கெட்டமட்டில் நில்லாது பின்னர்த் தோன்றும் சபைகட்குமன்ரோ பழிப்பைத்தருவனவாகும்.? இந்நிலை மிகவும் பரிதாபமே!

"சங்கம், சபை, பொது என்பன ஒரு பொருளன. 'சபை' என்றபோதே ஒருவர்க்குச் சொந்தமன்றென்பதும், பலர்க்கும் உரிமையுடையதென்பதும் போதரும். ஆதலின் ஒருசபைக்குத் தலைமை வகித்து அதனை நடத்தும் பொறுப்பைக் கொள்பவர் தன்னயங் கருதாமாலும், தற்புகழ் பேசாமலும், பொதுநலப்பிரியராகி அச்சபை சம்பந்தப்பட்ட மட்டில் உறவினர் அயலார் பகைவர் என்று பிரியாப் பிரியாங் கொள்ளாது அவரவர் புரியும் தொழில்களையே கவனித்து விருப்பு வெறுப்பகற்றி நீ தி த வ ரு து நடத்திவரவேண்டும். சபையின் பொருளில் ஒவ்வொரு காசு செலவிடும் போதும் இச்செலவு செய்வது அவசியமா நியாயமா என்று தீர்க்காலோசனை செய்தே செலவிட வேண்டும். சபையின் அங்கத்தினரோ பிறரோ யாவராயினும் பொதுப்பொருளின் வரவுசெலவைப்பற்றிக் கேட்டால் அதற்கு விடையளிக்க வேண்டும். அங்ஙனம் கேட்பவரெல்லாம் தமக்கு நலஞ்செய்

பவராகக் கருதவேண்டும். இன்னோரன்ன நற்குண நற்செயலுடையாரே சபைத்தலைமையுறுதற்குப் பாத்திரராவார். இத்தகையார் நடத்தும் சபைகளே வளர்ச்சியுற்றுப் பிரகாசிக்கும். இனி சபைகளில் பிரசங்கிப்பவர்களைப் பற்றிச்சிறிது கூறுவோம்.

பலர் கூடிய சபையகத்துப்புகுந்து ஒருவிஷயத்தைப் பிரசங்கித்தலென்பது எளிதான காரியமன்று. "ஆர்த்த சபை நூற்றொருவர்" "வார்த்தை பதினாயிரத்தொருவர்" என்றவாறு சபையார் மகிழ்ந்தேறப் பிரசங்கிப்பவர் மிகச் சிலரே யாவர். தற்காலத்திலோ பிரசங்கிக்கும் சக்தி சிறிதுமில்லாதவருங்கூட வலிந்து தாம் பிரசங்கிக்க வருகின்றனர். ஒரு சபையில் பத்துப்பேர் பிரசங்கிகளாக வருவாராயின் அவருள் இரண்டு பேராவது பிரசங்கமுறை தெரிந்தவராக அமைதலருமை. சிலர் தாமெடுத்த விஷயத்தின் தொடக்க முடிவு தெரியாது மடமடவென்று சம்பந்தமற்றப் பல விஷயங்களை "ஒரு நிமிஷத்திற்கு 300 வார்த்தை பேசினார், 500 வார்த்தை பேசினார்" என்று கூறத்தக்கவாறு கூச்சலிட்டு வீண்பொழுது போக்குகின்றனர். இவ்வித அசம்பாவிதங்களையெல்லாம் அடியோடு களைய வேண்டும். பிரசங்கிப்பவர் சிந்திக்க வேண்டுவன பலவுள. அவற்றுட் சில:—

(1) தன்னளவறிதல்:—ஒரு விஷயத்தைத் தொடங்குமுன் அவ்விஷயத்தைப்பற்றி தாம் முன்னர் தெரிந்திருக்கும் அளவைக் கவனித்து இவ்விஷயத்தைப் பேச நமக்கு வலிமை யிருக்கின்றதா என்பதை யோசிக்க வேண்டும்.

(2) சபையளவறிதல்:— இக்கூட்டத்துள்ளார் நம்மினும் மிக்காரா ஒப்பாரா தாழ்ந்தாரா என்று தெரிந்து

கொண்டு, மிக்காராயின் அவர்களில் வேறு சிலர் முதலிற் பிரசங்கித்த பின்னர் அன்னவர் போக்கைப் பின்பற்றி முரணாது பேசப் புகவேண்டும். ஏனையராயின் தாமே முந்திப் பேசல் இழுக்காகாது.

(3) **விஷயத்தைக்கருதல்:**—தொடங்கு முன்னரே எடுத்த விஷயத்தை மனத்திலமைத்து பலதிறப் பாகுபாடு செய்து தொகை, வகை, விரி என்ற முறைப்படி பேசவேண்டும். விரித்துக் கூறுமிடத்துப் "பருந்தின் வீழ்ச்சி"போல முடிவு நிலைதவறாது எடுத்த விஷயத்தை விட்டுப்புறம்பாகாமை வேண்டும். எத்தனை பெரிய விஷயமேயாயினும் தமக்குக் குறித்த காலத்துக்குள் இனிது முடிக்குமாறு முன்னரே முறைப்படுத்திக் கொள்ளவேண்டும். 'விஷயம் பெரிது காலம் பற்றாது, என்று கூறுதல் கூடாது. கால நிர்ணயம் செய்யும்போதே விஷயத்துக்கேற்ப நிர்ணயிக்கவேண்டும்.

(4) **பேசுமுறை:**—சபையேறியவுடன் சபைக்குப் பணிவுடைமையும் கம்பீரமும் முகத்திற்றோன்ற இனிய ஓசையுடன் தொடங்கவேண்டும். சபையோர் முகத்தைக் கவனிக்கவேண்டும். மட்டுக்குமிஞ்சிக் கைகால் ஆட்டும் அங்கசேஷ்டையைத் தவிர்க்கவேண்டும். மிக மந்தமும் மிக அவசரமுங் கொள்ளாது சாந்தமாகவும் சபையிலுள்ளாரனைவரும் கேட்கும்படியும் விஷயநிலைக்கேற்ப இடையிடையே எடுத்தல்,படுத்தல் நலிதல்முதலாகிய சுரபேதத்துடன் பிரசங்கிக்கவேண்டும். சபையார் கண்ணுங்கருத்தும் பிரசங்கியினிடமும் பிரசங்கவிஷயத்தினிடமும் விருப்பத்துடன் பொருந்துமாறு சபையை வசீகரிப்பிக்கவேண்டும். "அவையறிந்தாராய்ந்து சொல்லுகசொல்லின்றொகையறிந்த தூய்மையவர்" என்ற தேவர் திருவாக்கைப் போற்றி அவையை யறிந்து ஆராய்ந்து

கொண்டே பேசவேண்டும். தாம் கற்றவற்றையெல்லாம் காட்டிவிட வேண்டுமென்று, எடுத்த பொருட்கு இயைபற்ற பலவற்றையும் விரித்துப்பொழுதுபோக்கல், பெரிதும் இழுக்காகவே முடியும். இங்ஙனம் அதிகமாக விரிக்கப் புகுந்தால் தொடர்ந்து கூறும் இடந்தெரியாது திகைத்துத் தடுமாற நேரும். அப்போது தான் சபையார்களுக்குள் பலவித பேச்சும் சத்தமும் அவமதிப்பும் உண்டாகும். தொடக்கத்தில் 100பேர் கூடியிருந்தால் முடிவில் நாலைந்துபேர்களே மிகப் பொறுமையுடன் இருப்பவராவர். சபையார்கள் அமைதியற்றுப் போதற்குக் காரணம் பிரசங்கியின் குற்றமேயன்றி சபையின் குற்றமன்று. சபையார்க்குப் பிடிமானம் இல்லாத விஷயங்கள் கூட பிரசங்கியின் சொற்சாதுரியத்தால் அங்கீகாரமாகவே உறுதிபடும். இது பல சபைகளில் இன்றுங் கண்கூடாகக் காணலாம். வக்கீல்களின் பேச்சு வல்லபத்தில் ஈடுபட்டு நியாயாதிபதிகள் தாம் முன்கொண்ட கருத்தை மாற்றி வேறுவித தீர்மானஞ்செய்வதையும் யாவருமறிவர். இதுபற்றியன்றோ "விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது, சொல்லுதல் வல்லார்ப் பெறின்" என்றார் செந்நாப்போதாரும். ஆதலால் பிரசங்கிகளாகவரும் ஒவ்வொருவரும் "நாம் இச்சபையில் பேசியதாகப் பேரிருந்தால் போதும்" என்று கருதிச் சபையேறாது தீர்க்காலோசனையுடன் தமது ஆற்றலின் அளவையறிந்தே பிரசங்கிக்க முற்படவேண்டும். பிரசங்கிகளைத் தெரிந்தெடுக்கும் சபையார்களும் இவைகளையெல்லாம் சிந்திக்கவேண்டும். இருவகையாரும் தக்க ஆலோசனையுடன் தமது கடமையைச் செய்வார்களாயின் சபைகட்கும் பிரசங்கிகட்கும் நலந்தரும். சபைகளும் நீடுவாழும்.

தமிழ் மொழியின் தாழ்நிலைக்குக் காரணமும் அதை விருத்தி செய்யும் விதமும்.

மறைமுதற் கிளந்த வாயான் மதிமுகிழ் முடித்த வேணி
இறைவர் தம் பெயரை நாட்டி இலக்கணம் செய்யப் பெற்றே
அறைகடல் வரைப்பிற் பாஷை அனைத்தும்வென் றாரியத்தோ
டுறழ்தரு தமிழ்த் தெய்வத்தை உள்நினைந் தேத்தல் செய்வாம்.

"நம்மை ஒரு ஜாதியார் என்றும், ஒருகட்டுக்கடங்கியவ ரென்றும் யோக்கியர்களென்றும், தேசாபிமானிகளென்றும் காட்டக் கூடியதும், நமது முன்னோர்களின் அருமை பெருமையை நாம் அறியவும், நமது காரியங்களை நமக்குப் பின்னால் வருபவர் அறியவும் ஏதுவாயுள்ளதும், நமது சொந்த பாஷையே." இவ்வுண்மையை ஓர்ந்து, மேற்றிசை யோரும், கீழ்த் திசையாராகிய ஜப்பானியரும், தத்தம் பாஷைகளை எவ்வளவோ கௌரவமாகப் பொன்போற் போற்றி அபிவிருத்தி செய்துவர, நம்மவருட் பெரும்பான் மையோர், தேசாபிமானமும் பாஷாபிமானமும் இல்லாராய்த் தமது தாய்ப் பாஷையாகிய அமிழ்தினுமினிய தமிழ் முது மொழியை அநாதரவு செய்து, "நறுவிய வாயினவேனும் உமிழ்ந்து கடுத்தின்னும் தீய விலங்கு"கள் போன்றும், "திருவினு நல்லாள் மனைக்கிழத்தியேனும் பிறர்மனைக்கே பீடழிந்து நிற்பார்" போன்றும், கேவலம் உத்தியோக பதவி, பொருளீட்டல் முதலியனவே கருதி அந்நிய பாஷைகளாகிய

ஆங்கிலமாதியவே கற்று வருவது காலக்கொடுமையோ? ஞாலக்கொடுமையோ? அறியேம்!

ஆ! ஆ!! தங்கள் கையெழுத்துக்களைக் கூடப் பிழையற எழுதத்தெரியாதார் எத்துணை பேர்கள் இருக்கிறார்கள்! தமிழ்ப் பாஷை தெரியாமலிருப்பது தங்களுக்குப் பெருங் கௌரவமென்றும் எவ்வளவுக்கெவ்வளவு அது தெரியவில்லையோ அவ்வளவுக்கவ்வளவு தங்களுக்கு ஆங்கில பாஷை ஞானம் அதிகமாக உண்டென உலகு நினைக்கும் என்றும் எண்ணும் பேதைமாக்கள் எத்துணை பேர்கள்! தமிழிற் பேசினும் முக்காற்பங்கு இங்கிலீஷும் காற்பங்கு தமிழுமாக மணிப்பிரவாள நடையில் பொழிந்து தீர்த்து, ஹாஸ்ய ரசம் அனுபவிக்கச் செய்வோர் எத்துணைபேர்கள்! "சரித்திரங்களையும் சாஸ்திரங்களையும் தமிழில் மொழிபெயர்க்கலாம் என்றால் சில விஷயங்களை அறிவிக்க ஏற்ற மொழிகள் கண்டுபிடிப்பது கஷ்டமாக இருக்கிறது" என்று சொல்லுவதற்கு "ஹிஸ்ட்ரீஸ்களையும் ஸயன்ஸ்களையும் டமில் லாங்குவேஜில் டிரான்ஸ்லேட் பண்ணலாம்'னா' செல திங்ஸ்களை எக்ஸ்பரஸ் பண்ண டெக்கினிக்கல் டர்ம்ஸ்களை ப(f)யிண்ட் அவுட் 'பண்றது' 'ரொம்ப' டிபிகல்ட்டாக இருக்கு" என ஒரு சாரார் சொல்வர்" என்ற ஓர் புலவர் வாக்குப் பொய்யின்றே: சில வருடங்களுக்கு முன்னர், மதுரை அமெரிக்கன் மிஷன் உயர்தர வித்யாசாலையில் இருந்த பால திராவிட சங்கத்தின் வருஷோத்ஸவ தினத்தன்று மதுரை வாசியாகிய ஓர் பிரபல வக்கில் எழுந்து, "சேர்மேன் அண்ட் கனவான்களே! இங்கிலீஷ் மிக்ஸ் பண்ணாமே இந்த லிட்டில் பெ(f)லோஸ், நே, எங்மேன், அதாவது சிறுவர்கள், என்ன ஸ்பீச் கொடுக்கறா! நம்ப

ரெண்டு வேர்ட்ஸ் கூட கண்டினுவஸாப் பேசறது எம்பிட்டு இம்பாஸிபிளா ருக்கு! வாட் டு யூ திங்? என்னெப்போல் டிபி கல்டி எக்ஸ்பீரியன்ஸ் பண்ணியிருக்கரவா இந்த அஸம்பிளிலே ருப்பாளே. அவாளுக்கு என் வோர்ட்ஸ் ட்ரூ என்று படும். ...." என்று இவ்வாறு பலர் காகோஷம்செய்ய அரைமணி நேரம் பிரசங்க மாரி பெய்த விஷயம் யாமறி வோம். இவராவது தமது அறியாமையையும் சக்திக்குறை வையும் கௌரவமாக ஒப்புக்கொண்டு தமிழை அபிவிருத்தி செய்யத்தவறியதற்காக விசனித்தனர். இன்னுஞ் சிலரோ, தமிழைப்பெரிதும் உபேக்ஷை செய்து வாயில் வந்தபடி கேவ லமாக இழித்துக்கூறி, தமிழ்மட்டும் கற்றவர்களோடு பேசவும் நாணுவர். இப்புண்ணிய புருஷர்களை "ஏன் ஐயா தமி ழினிடத்து இவ்வளவு அருவருப்பு என்று கேட்டால், அவர் கள் "தமிழுலே என்னருக்கு?" என்று வாய்கூசாமற் சொல் வர். "தமிழில் என்ன ஐயா இல்லை?" என்றால் அதற்கு உத்தரம் சொல்லார். சிறிது வற்புறுத்திக்கேட்டாலோ "என்ன இல்லையா? ஒண்ணுமில்லே" என்று நீட்டிமுழக்கி அடித்தொண்டையோ டலறுவர். அதிகமாக வற்புறுத்திக் கேட்க ஆரம்பித்தாலோ "நேக்குவேண்டாம் ஓந்தமிழ் நீயே வச்சுக்கோ" என்று இருந்த இடம்விட்டு எடுப்பார் ஓட்டம். ஆத்திச்சூடி கூடப் படித்திரா அநேகர் தமிழையும் தமிழ்ப் புலவர்களையும் தம் ஊத்தை வாய்திறந்து பழுதுகூற முன் வருவது எவ்வளவு மௌடீகம்?

ஆ! ஆ!! தொன்று தொட்டுச் சீரும் சிறப்பும்பெற்று, அறம், பொருள், இன்பம், வீடு என்று ஆன்றோரால் மேலாகக் கூறப்பட்ட நாற்பொருள்களையும் அடைவதற்கேதுவாய்

உள்ள எண்ணிறந்த நூற்பெருக்கத்தை யுடையதும், கன்னடம், தெலுங்கு, மலையாளம் முதலிய பாஷைகளுக்குப் பெற்றோர் நிலைமையிலிருந்து பேருதவி புரிந்துவரும் பெருமையை யுடையதும், திராவிடதேச முழுதும் ஏகசக்கிராதிபத்தியம் செலுத்திவந்ததுமான நம் தமிழ் மொழி, இக்காலத்தில் க்ஷீண நிலையடைந்து, பெரும்பான்மையாராற் போற்றப் படாது நிற்றற்கு முதற்காரணம், அதனது அருமை பெருமை பழமை முதலியன, அநேகர் அறியாதிருத்தலேயாம். இவற்றைப் பற்றிய முழு விவரமும் இனி வெளியாகும் இரண்டாம் பாகத்திற் காண்க.

தமிழ் தளர் நிலை அடைந்ததேன்?

இப்போது, முற்காலத்தில் செழித்தோங்கி வளங்கள் யாவும் குறையற வாய்ந்து விளங்கிய நம் தமிழ்மொழி, வளர் நிலை குன்றித் தளர்நிலை எய்தியதற்குக் காரணங்கள் யாவென ஆராய்வோம்:—

(1) தமக்குப்பின் வருபவர்களுக்கென்று எவ்வளவோ வருந்திப் பாடுபட்டு, ஊண் உறக்கங்களை ஒழித்துக் காடுகளிலும் மலைகளிலும் குடிசைகளிலுமிருந்து, கடின ஏரைப்பிடித்துக் கற்பாறையில் உழுதல் போல் இருப்பெழுத்தாணிகளைக் கட்டை விரல் நுனியில் ஓலை ஓலையாகச் சாய்த்து எழுதித் தம் உயிரினும் மேலாக நம் முன்னோர்கள் காப்பாற்றிய எண்ணிறந்த சுவடிகள், இருமுறை கடற்கிரையானது யாவரும் அறிந்ததே. இக்காலத்துள்ளனபோல் அக்காலத்தும் அச்சுக்கூடங்களேற்பட்டிருப்பின் ஒவ்வொரு நூலுக்கும் ஆயிரக் கணக்கான பிரதிகள் இருந்திருக்குமே.

(2) தமிழ் ஒழிந்த தேசத்தரசர் பலர் தமிழகத்தை அடிப்படுத்தியது இரண்டாவது காரணமாகும். அதிலும் ஏழரை நாட்டுச் சனியன்போல துலுக்கர் சேனை வந்து விழுந் தடித்து தேசத்தைச் சூறையாடி ஆங்காங்கு இறவாதெஞ் சிய பலநூல்களை அழித்தகன்றதும், அவர்கள் படையெடுப் பால்,

"மறையவர் வேள்விகுன்றி மனுநெறி யனைத்து மாறித்
துறைகளோ ராறு மாறிச் சுருதியு முழக்க மோய்ந்தே

சாதிக ளொன்றோ டொன்றாய்த் தலைதடு மாறியாரும்
ஓதிய நெறியின் நில்லா தொழுக்கமும் மறந்துபோயே

ஒருவரை யொருவர் கைம்மிக் கும்பர்தம் கோயிற் சோம்பி
அரிவையர் கற்பிற் சோம்பி அரண்களும் அழிய ஆங்கே"

நேர்ந்ததும் யாரே அறியார்?

(3) தமிழை ஆதரிப்போர் அருகியதும் அதனால் நேர் ந்த தமிழ்ப்புலவரின் வறுமையுமே மூன்றாவது காரணமா கும். தன் தலைகொடுத்தும் தமிழ்ப்புலவர்களது வறுமை நோய் களைவித்த குமணன் போன்றார் யாங்குளர்?

"மட்டாருந்தென் களந்தைப் படிக்காசன் உரைத்த தமிழ்
வரைந்த ஏட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் மூவுலகும் பரிமளிக்கும்
பரிந்தவ் வேட்டைத்
தொட்டாலும் கைமணக்கும் சொன்னாலும் வாய்மணக்கும்
துய்ய சேற்றில்
நட்டாலும் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே பாட்டின்நறு
நளினந் தானே.—

என்றார் ஒரு புலவர் பெருமான். இத்தகைய சிறப்புவாய்ந்த படிக்காசுப் புலவர் கூட,

"அடகெடுவாய்! பலதொழிலு மிருக்கக் கல்வி
அதிகமென்றே கற்றுவிட்டோம் அறிவில்லாமல்
திடமனமோ கனமாடக் கழைக்கூத் தாடச்
செப்பிடுவித் தைகளாடத் தெரிந்தோ மில்லை
தடமுலைவே சையாகப் பிறந்தோ மில்லை
சனியான தமிழைவிட்டுத் தையலார்தம்
இடமிருந்து தூதுசென்று பிழைத்தோ மில்லை
என்ன ஜன்மம் எடுத்துலகில் இரக்கின்றோமே!"

என்று பரிதபித்து வயிறெரிவராயின், அவர்காலத்தியரது பாஷாபி மானமும் தமிழாதரவும் எத்தன்மையவாயிருக்க வேண்டும்!

(4) ஆதரவு செய்யாவிடினும் சீத்தலைச் சாத்தனார் போன்ற அபிமானிகளேனும் இக்காலத் திருக்கின்றனரா? என்னை?

சீத்தலைச் சாத்தனார் என்பார் கடைச்சங்கக் காலத்தில் இருந்த சிறந்த புலவரும் தமிழபிமானியும் ஆவர். இவரது இயற்பெயர் சாத்தன் என்பதே. சீ நிரம்பிய தலையை உடையோராதலின் சீத்தலைச்சாத்தனார் எனும் பெயர் இவர்க்கு வாய்த்தது. இவர் தமிழை யாரேனும் இழிவாகக்கூறினும் தமிழ்ச் சொற்களையும் பொருள்களையும் பிழைபடக்கூறினும் சிறிதும் பொறாது, "தமிழ்நிந்தனையும் பிழைச்சொற்களும் கேட்கும்படியான பாவம் முன்செய்ய என்தலையில் எழுதியிருந்ததுபோலும்!" என்று தம்தலையிற் குண்டெழுத்தாணி

ஒன்றால் குத்திக்கொள்வது வழக்கம். இவ்வாறு தமிழ் முற்றக் கல்லாதாராலும், துஷ்டர்களாலும் இவர்க்குத் தலைக்குத்து மிகுதியாம். இத்தலைக்குத்துத் திருவள்ளுவரால் தீர்ந்தது என்பர். எவ்வாறெனில், செந்நாப்போதார் தமது குறளை அரங்கேற்றுழி ஒருகுறளைப்பற்றிய ஆக்ஷேபத்திற்குச் சமாதானமும் அதன் பெருமையும் எடுத்துரைக்கப் பல தினங்களாகுமாம். இவ்வாறு 1330 குறளுக்கும் பசுமரத் தாணிபோல் அசைக்கமுடியாத சமாதானங்களைக்கூறி அவற்றின் பெருமையை நிலைநாட்ட எத்துணை நாட்கள் சென்றிருக்கும்! திருக்குறள் முழுதும் "சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய"வாய் எப்பிழையுமின்றி இருந்தமையின் சித்தலைச்சாத்தற்குப் பரமானந்தம் அடையக் காலம் இருந்ததேயன்றிக் குத்திக்கொள்ள ஆவசியகமே இல்லாதிருந்ததென்றும், அவர் ஆநந்த மநுபவித்த அநேக தினங்களுக்குள் சீத்தலை காய்ந்து வற்றிப் பொருக்கு உதிர்ந்து முற்றும் குணப்பட்டதென்றும் மருத்துவன் தாமோதரனார் என்னும் கடைச்சங்கப் புலவரது குறட்சிறப்புக்கவியால் விளங்கும். அக்கவி வருமாறு :—

"சீந்திநீர்க் கண்டம் தெறிசுக்குந் தேனளாய்
மோந்தபின் யார்க்கும் தலைக்குத்தில்—காந்தி
மலைக்குத்தும் மால்யானை! வள்ளுவர் முப்பாலால்
தலைக்குத்துத் தீர்வு சாத்தற்கு.

(இதன்பொருள்:—கோபித்துக்கொண்டு மலையைப் பிளந்தெறிகின்ற மதயானை போன்ற பாண்டியனே! சாதாரணமாக உலகத்தில் யாவர்க்கும், சீந்திநீர்க்கண்டம் சுக்குத் தூள் என்ற மூலிகைகளைத் தேனொடு கலந்து மோந்தபின்

தலைக்குத்து நீங்கக் கேட்டிருக்கிறோம். ஆனால் சித்தலைச் சாத்தனார்க்கு இத்தகைய மூலிகைகள் உபயோகிக்கப்படாமல் திருவள்ளுவரது திருக்குறளாலேயே தலைக்குத்துத் தீர்ந்தது" என்பதே.)

தன் தம்பி தன்மீதுள்ள பகை மிகுதியால் "நந்திக் கலம்பகம்" என்ற ஓர் வசைநூல் இயற்ற, அந்நூற் கேட்டலால் தனக்கு மரணமுண்டாகுமெனத் தெரிந்திருந்தும், அந்நூலின்கண் உள்ள செயுட்களின் சொற்சுவை பொருட்சுவை முதலிய அழகுகள்பற்றி அதனிடத் தபிமானமுற்று அந்நூல் முழுவதையும், சந்தனக் கட்டைகொண்டு அடுக்கிய நிலையிலிருந்தபடியே கேட்டு, அதுமுற்றுமளவிலே நந்திவர்மன் உயிர்துறந் தொழிந்தது முற்காலத்தரசரது தமிழ் அபிமானத்தை இனிது விளக்கும்.

(5) "என்றும் இவ்வுலகில் யாரும் எள்ளிடும் கரும் பொன்றன்னைப், பன்னரும் பைம்பொனுக்கும் பரிசனவேதி போன்று," பிறகு தலையனையும் வித்துவானகச் செய்த கம்பர் போல்வார் ஈங்கியாருளர்?

(6) இராமபாணம் என்ற சின்னஞ்சிறுபூச்சி, கோடானுகோடி நூல்களைத்துளைத்துத் தவிடுபொடியாக்கிப் பாழாக்குவது நாம் கண்கூடாக்கண்ட விஷயமன்றோ? தொட்டாற் சாகும் இவ்விராமபாணமே இவ்வளவு வேலை செய்யுமாயின் மராமரங்களேழிலும் ஒருகால் ஊடுருவிப் பாய்ந்த இராமபாணத்துக்கு மகிமை யென்னே?

இதுபோல் கவலை சிறிதுமின்றிச் சிதலைக்கும் பாச்சைக்கும், இரையாக விடப்பட்டவை எண்ணிறந்தவையன்றோ?

(7) "நெருப்பறியும், நீர் அறியும் நிலமறியும் தமிழின் இயல்" என ஸ்ரீ ஞான சம்பந்தப்பெருமான் போன்ருரது தமிழ்ப் பாசுர மகிலமகளைப்பற்றிச் சிலாகித்துக் கூறப்பட்ட விஷயம் ஒரு விதமாய் பார்க்கின், இக்காலத்தும் முற்றும் உண்மையே யாகும். எங்ஙன மெனில், அரும் பொருள் அனைத்தினும் அரிய தமிழ் ஏடுகள் பல, அவற்றின் அருமை பெருமை அறியும் ஆற்றல் இல்லார் கைவசப்பட்டு, அகஸ் மாத்தாக தீக்கிரையாயும், அறிவிலிகளாகிய அவரது மனைவி மக்களால் அடுப்பெரிக்கப்பட்டும் வருவதால் நெருப்பும், பதி னெட்டாம் பெருக்கன்று பிரதி வருடமும் ஆற்றில் விடப்பட்டு வருவதால் நீரும், மட்கி மண்ணொடு மண்ணாகப்போம்படி விடப்பட்டு வருவதால் நிலமும், தமிழின் இயலை நன்கறியும் அன்றோ? முற்கூறிய பலவிதத்தும் பாழடைந்து இறந்துபட் டொழிந்த ஏடுகளில் தனித்தமிழ் நூல்கள் சிலவேனும் இருந் திருக்க வேண்டுமென அறிஞர் பலர் அபிப்பிராயப்படுகின்ற னர்.

(8) பூர்வஜன்மப் புண்ணிய வசத்தினுல் தமக்குப் பண்டை நூலாவது உரையாவது கிடைத்துவிட்டால், சில வீணர்கள் அதனைப் பலர்க்கும் பயன்படுமாறு வெளிப் படுத்துவதில்லை. தம்மிடத்திருக்கும் இவ்வருமைப் பொருள் பிறரிடமும் இருந்தால் தமக்கும் பிறர்க்கும் வித்தியாசம் ஏதுமில்லையே எனவும் அவ்வாறு இருப்பின் அது தம் பெரு மைக்குக் குறைவென்றும் இவ்வுலோபிகள் மனப்பூர்வமாய் எண்ணி அதனைக் குடத்திலேற்றிய விளக்காக்குகின்றனர். ஈதென்ன மௌடீகம்!

(9) வேறுசில அற்பர்களுக்கு, அவர்கள் வருந்திக் கற்ற கல்வியும், பெற்ற அறிவும், சாதுரியத் திருடர்க்குக் கன்னக்கோல் உதவுவது போல் உதவுகின்றன. இன்னோர் சில பாடல்களைப்பாடி. அவற்றைப் புகையூட்டிய ஏடுகளில் தீட்டிமட்கவைத்துப் பின் வெளிப்படுத்தி, பழைய ஏடுகள் கண்டுபிடித்ததாகப் பெருமை தேடிவருவா ராயினர்.

(10) பின்னும் சில சைவ வைணவ வித்துவான்கள் தாம் பண்டை நூலாராய்ச்சியிற் புக்கு, தத்தம் மதத்திற்கும் கருத்திற்கும் சார்பாக, பிறமத நூல்களைக் கூசாமல் மாற்றியும், தம்மதச் சிறுமையைக் காட்டக்கூடிய பாடல்களை அவற்றினின்று அறவே நீக்கியும், தம்மதப் பெருமையைக் காட்டக்கூடிய பாடல்கள் சில பாடி அவற்றை அதில் நுழைத்தும்! தம் கொள்கைக்கு முரணானவற்றை அதினின்றும் விலக்கியும், திருத்திப் புதுக்கிப் பருக்கி நூல்களை அச்சிடுவாராயினர்.

(11) கற்பன வூழற்றூர் சிலர், பொருள் வருவாய் ஒன்றே கருதி, வியப்பிற்கும் நகைப்பிற்கும் இடந்தரத்தக்கதாய், இக்காலத்து அறிவிலிகள் பாடிய நூல்களைப் பண்டைக் காலப் புலவர் பெருமக்கள் பாடியவை என வெளிபபடுத்திப் பாமர ஜனங்களை நம்பச் செய்வாராயினர். (புகழேந்திப் புலவர் பாடிய தேசிங்கு ராஜன் கதை யாதியவும், திருவள்ளுவர் பாடிய ஞானவெட்டியும் இன்ன பிறவும் இவ்வுண்மையை விளக்கும்). முற்கூறிய பல விஷயங்களும் தமிழ்ப்பெருமைக்கு நாசகாரணமாகுமே யன்றி நன்மை காரணம் ஆக மாட்டா என்பது தெள்ளிதில் உணரத்தக்கது.

(12) அற்ப சந்தோஷிகளிற் சிலர், தமிழ் மொழிகள் யாவும் ஸம்ஸ்கிருதத்தின் திரிபென்று சாதிக்கிறார்கள். வேறு பெருமூடர் ஸம்ஸ்கிருத பதங்கள் எல்லாம் தமிழின் திரிபுகள் என்று பிரசித்திப்படுத்தி அவ்வாறு கூறற்கு, அச்சமின்றி அருவருக்கத்தக்கதும் சுத்த அபத்தமானதுமான காரணங் களைக் கற்பித்துத் தம்போன்ற குருட்டபிமானிகளின் துதி பெற்றுக் காலங்கழிப்பாராயினர். இவ்விரு திறத்த கூப மண்டூகங்களும் நாணித் தலைகவிழ்ந்து வாயடங்கி நிற்குங் காலமே தமிழ்க்கு க்ஷேமகாலமாகும். நிற்க,

(13) பொருள் வருவாய்க்குரிய கல்வி, தமிழ்ப்பாஷை யில் இல்லாமல் தற்காலம் ஆங்கிலத்திலேயே உள்ளன ஆத லின், புலவர் வழித்தோன்றியோரும் நம் நாட்டுச் சிறாரும் தமிழை அறவே மறந்து வயிற்றுக் கொடுமையைத் தணிக்க வும் புகழ் கருதியும் வேறு தொழில்களைப் புரியவும் ஆங்கி லம் கற்க ஆரம்பித்தனர். ஆங்கிலம் தங்கி வளரவும் தமிழ் மங்கித்தளரவும் நேர்ந்ததற்குக் காரணம் இதுவே.

(14) கொடும்போட்டியாற் கூடத் தமிழ் சிறிதுகாலம் வளர்ந்தது. பிள்ளைப் பாண்டியன் என்ற அதிவீரராமபாண் டியன் குட்டுப்பந்தயமும், வில்லிபுத்தூரார் காதறுப்புப் பந் தயமும், ஒட்டக்கூத்தன் வெட்டுப்பந்தயமும் வைத்துப் புல வரை வாதுக்கழைத்து வெற்றி கொண்டனர் என்பது,

"குட்டுதற்கோ பிள்ளைப் பாண்டியன் ஈங்கில்லை
குறும்பியள வாக்காதைக் குடைந்து தோண்டி
எட்டினமட் டறுப்பதற்கோ வில்லி இல்லை
இரண்டொன்று முடிந்ததலை இறங்கப்போட்டு

வெட்டுதற்கோ கவி ஒட்டக்கூத்தன் இல்லை
விளையாட்டாக் கவிகள் தமை விரைந்து பாடித்
தெட்டுதற்கோ அறிவில்லாத் துரைகள் உண்டு
தேசமெங்கும் புலவரெனத் திரியலாமே."

என்ற தனிச்செய்யுளால் அறியலாகும். சாதாரணமாக, பந்தயம் என்று வந்துவிட்டால் யாரும் குட்டவும், காதறுக்கவும் வெட்டவுமே விரும்புவரேயன்றி, குட்டுப்படவும், காதறுபடவும், வெட்டுப்படவும் விரும்பார்கள். ஆதலின் எவ்விதத்திலாவது இவர்களை வென்று புகழ் அடைய முற்றக் கற்று வெளிப்போந்தார் பலர் இருந்தனர் எனத் தெரிய வருகிறது. (இச்சமயம் ஓர் விஷயம் அறிவிக்கவேண்டி வருகிறது. அஃதென்னவெனில், "வெட்டிய தலைகள் உடலில் ஒட்டப் பாடியதால் கூத்தற்கு ஒட்டக் கூத்தன் எனப்பெயர் கிடைத்தது என்று பலர் கருதுகின்றனர். ஒட்டுங்கூத்தன் என்றிருந்தால் அக்காரணம் பொருந்தும். ஒட்டம் என்பதற்குப் பந்தயம் எனப் பொருளாதலின் ஒட்டக்கூத்தன் என்பதற்குப் "பந்தயம் வைக்கும் கூத்தன்" என்ற பொருளே பொருந்தும்." என்பதே.)

(15) நம் நாட்டுப் பழைய சரித்திர ஆராய்ச்சிக்கும் மத வாராய்ச்சிக்கும் இன்றியமையாத பல கிரந்தங்கள் தமிழ் மொழியில் உள்ளதென்றும், இப்பாஷை, கல்வெட்டு சாஸனங்களை யறிந்துஉண்மையைவிளக்கும் பெருங்கருவியாகப் பயன்படத்தக்க மாண்புடைய தென்றும், நீதி, இராஜ விசுவாசம், நாகரிக தர்மம் முதலியன புகட்டும் அரிய நூல்கள் வாய்ந்த தென்றும், இஃதொரு உயர் தனிசெம்மொழி என்றும்,

சாமானியர் மட்டுமேயன்றிச் சர்வகலாசாலைச் சங்கத்தாரும், தமிழ் மணமறியா அந்நிய துரைத்தனத்தாரும், அறிந்து கொள்ளாததே கடைசிக் காரணமாகும்.

சகோதரர்களே! இன்னும் சின்னாட்கட் கெல்லாம் நாகரீக தர்மம் நன்குணர்ந்த கண்ணிய புருஷர்களாக வருபவர்கள் நாமே ஆதலின், பெரியோரினும் நாமே சுயபாஷாபிவிருத்தியை நன்குபாதுகாக்க கடமைபட்டுள்ள வர்க ளென்பதை நன்றாய் உணருங்கள். நமது தாய்மொழியென்னுந் தமிழ் மொழியை ஓரோவழி ஓதுவித்துவந்த அரசாங்கத்தார்கூட சின்னாட்குமுன்புவரை அதனை நடத்திய முறைகள் மிக வெறுக்கத்தக்கதாயிருந்ததென நான் சொல்லாமலே விளங்கும். வங்காளம்முதலிய வடதேசங்களில் தேசாபிமானிகளின் பெருமுயற்சியால், ஆங்கிலந்தவிர ஏனைப் பாடங்கள் யாவும் சுதேச பாஷையிலேயே விடை எழுதலாம் என்று சர்வகலாசாலையார் விதித்திருக்கின்றனர். நாம் மட்டும் இங்கியரல்லரோ? அவர்களிடம் உள்ள சுதேச பாஷாபிமானங்கள் நமக்கேன் இல்லாமற்போகவேண்டும்? நம் தாய்மொழி தாழ்நிலை எய்தியதற்கு, நம்மைக்காட்டிலும் பெரியவர்களெனப் பேர் வைத்துக்கொண்டிருப்போரும், தாம் கற்றுணர்ந்தும் பிறர்க்கு கற்பிக்க ஆற்றலில்லாதாரும் அபிமானம் இல்லாதாருமே உத்தரவாதிகள்.

ஏனெனில், 'எது எக்கேடு கெட்டுப்போனாலும்சரி' எனச் சுயநயம் ஒன்றையே கருதி, உண்டு உறங்கி இன்பம் நுகரும் விலங்குகள் போன்று இவர்கள் நாளைவரைக் காலங் கழித்துவரும் பெரும் பிழையினாலன்றோ "தேசபாஷாபிமான

மின்மை" என்னும் கொடுந் தொத்துவியாதி சிறியோராகிய பின்னோரையும் பலமாய்ப் பீடித்துவிட்டது? இனி "நமக்குப் பின்வருபவர்கள், நம்மைப்பற்றியும் இத்தகைய குறைகள் கூறி நம்மை நிந்தியாவண்ணம் நாம் என்ன செய்யவேண்டியது?" என்பதைப்பற்றிச் சிறிது யோசித்துப்பாருங்கள்! யோசிக்குந்தோறும், அயர்ந்த நிலையில் தற்காலத்திருக்கும் தமிழ் மொழியை உயர்ந்த நிலையை அடையச் செய்வதே நமது கடமையென்று உங்கள் மனதிற் படும். ஆயினும், "சாதாரணப் பேச்சில்கூட பாலவனத்திடைக் காணப்படும் பைம்புற்றரைகள் போன்று, இங்கொன்றும் அங்கொன்றுமாக, வேற்று மொழிகட்கிடையே சிற்சில தமிழ்மொழிகளை (அவைகளும் சுத்தத் தமிழ்கூட இல்லை. பிழைமிக்கத் திரிபுடைச் சொற்களைப்) பிரயோகிக்கும் நாம், செய்யுள் மலிந்த தமிழ் மொழியிற் றேர்ச்சி பெறுவது எங்ஙனம்?" எனச் சிலர் ஐயமுறலாம். அவ்வாறு ஐயப்பாடுறுவோர்க்கு, என்னனம் தமிழை அபிவிருத்தி செய்யலாம் என்பதைப்பற்றிச் சிறிது கூறுவோம்:—

> "கற்றிலனாயினும் கேட்க: அஃதொருவற்கு
> ஒற்கத்தின் ஊற்றாம் துணை."

என்று நாயனார் கூறியிருக்கின்றார் ஆதலின், நாம் நல்லொழுக்கத்துக்கும் தமிழ் அபிவிருத்திக்கும் ஏதுவான யாவும் குறைபறவாய்ந்த சங்கங்களை ஏற்படுத்தி அதனைச்சார்ந்து தேச நன்மைக்கடுத்த நற்காரியங்களையும், மற்றும் விவேக விருத்திக்கின்றியமையாத நானா விஷயங்களையும், கல்வி கேள்விகளிற் றேர்ச்சி பெற்ற வித்துவ சிரேஷ்டர்களின் பிரசங்கங்

கள் மூலமாகக் கேட்டுணர்ந்து, அதன்படி ஒழுகவேண்டும். "எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும் ஆன்ற பெருமை தரும்" என்பது சத்தியம். 3435

(2) முற்கூறிய பிரசங்கங்களில் அதிமுக்கியமானவற்றைக் கற்றோரேயன்றி மற்றோரும் எளிதிற் பொருளுணர்ந்து கொள்ளும் வண்ணம் எளிய நடையில் எழுதுவித்து அச்சியற்றிச் சிறு துண்டுப் பத்திரிகைகள் ரூபமாய் பலர்க்கும் தரவேண்டும்.

(3) சுயபாஷாபிவிர்த்தியின் பொருட்டு ஏற்கனவே ஏற்பட்டுள்ள சங்கங்களின் அங்கத்தவராகியேனும், ஆங்குப் பிரசங்கம் நடக்குந்தோறும் வலியச் சென்றேனும் நமக்குத் தெரிந்ததைப் பிறர்க்குரைக்கவும் பிறர் கூற்றை நாமுணரவும் வேண்டும்.

(4) வயிற்றுப்பிழைப்பின் நிமித்தமும், அரசாட்சி முறையை ஐயமற அறியவும் ஆங்கிலம் அவசியமே எனினும், வீட்டிலும் பிற இடங்களிலும் அனுவசியமாக அப்பாஷையைப் பேசவும் எழுதவும் பழகிய துர்வாடிக்கையை அறவொழித்துக் கூடியமட்டில் சுத்தத் தமிழ் மொழியில் (அதாவது "நன்னு" "ஆத்துக்குப்போறேன்" "இங்க்ரேன்" "ரொம்ப" முதலிய ஆபாசத் திரிபுடைச் சொற்களேதுமின்றிப்)பேசவும் எழுதவும் பழகவேண்டும்.

(5) உபாத்தியாயாது போதனுசக்திக் குறைவும் தமிழ் அபிமானமின்மையும், அதில் அசிரத்தையும், உண்மையிலேயே வெறுக்கத்தக்கனவே எனினும், மாணவர்கள் முன்னி

லும் சிரமப்பட்டும் கற்றோரை அடுத்தும், விஷயங்களை அறிய வேண்டுமேயன்றி, உபாத்தியாயர் குறையை ஓர் காரணமாகக்கொண்டு படிப்பில் அசிரத்தை காட்டக்கூடாது. இலக்கணம் எளிதில் கற்றற்கு இளமையே ஏற்ற பருவம் என்பதை எப்பொழுதும் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

(6) நமக்கு விதிக்கப்பட்டுள்ள பாடங்களின் அருமை பெருமைகள் மேல்வகுப்புகளுக்குப் போகப் போகத்தான் நன்றாய் விளங்கும். ஆதலின், கீழ் வகுப்புப் பாடங்களையும் சமயம் நேர்ந்துழி ஆவலொடு கற்றுணரவேண்டும். உதாரணமாக ஆத்திசூடி, கொன்றைவேந்தன் முதலியவற்றின் பெருமைகளை நாம் அவைபடிக்கும் சிறு வயதில் கண்டுகொண்டோமோ? "நட்போல்வளை" என்பதன் கருத்து அநேக எம். ஏ., மாணவர் கூட இன்றும் அறியார் என்று துணிந்து கூறலாம்.

(7) இலக்கிய வல்லார்க்கு இலக்கணப் பயிற்சி எளிதில் அமைவது இயல்பாதலின், ஒவ்வொருவரும் தமிழில் பிழையின்றி எழுதக் கற்றுத் தேறவும் வாசகப் புஸ்தகங்களிற் சிறந்தனவாய் உள்ளவற்றைப் பொருள் உணர்ந்து கற்கவும் வேண்டும்.

(8) பின்னர், நல்லாசிரியரை அடுத்து நாலடி குறளாதிய பதினெண் கீழ்க்கணக்குள் முக்கியமானவற்றையும், நளவெண்பா, வில்லிபாரதம், நைடதம், கம்பராமாயணம் முதலிய காவியங்களையும், நிகண்டு, நன்னூல் முதலியனவும் கற்கவேண்டும். கற்கவே சிறிது தமிழறிவேனும் உண்டாகும்.

அறிவு உண்டாகவே, சிறிது பாஷாபிமானமும் விரைவினில் உதிக்கும். அபிமானம் உதிக்கவே, நாமே தமிழிற் சிறந்துள எனை அரும் பெரும் நூல்களை உபாத்தியாயர்களின் உதவிகொண்டேனும், நாமாகவேனும் படித்து, மதியூகிகளாவோம் என்பதிற் றடையின்று.

(9) கவி இயற்றப் பழகியோர் புண்டித பாமரர் பலர்க்கும் பயன்படத்தக்க எளிய இனிமை வாய்ந்த செந்தமிழ் நடையில் எழுதவேண்டும்.

(10) செய்யுள் ரூபத்தில் எண்ணிறந்த நூல்கள் தமிழ்ப்பாஷையில் ஏற்கனவே இருக்கின்றன. ஆதலின், வசன நடையில் நாடகக் கதைகளும், நவீன கதைகளும் எழுதவும் எழுதுவிக்கவும் வேண்டும். தொல்லாசிரியரது போன்ற கடின நடையால் கற்றோரே களிப்பெய்துவ ராதலின், மற்றோரும் மகிழ்வெய்த, அப்புத்தகங்கள் "தண்டமிழ் மொழியிற் பெண்டிரு முணரத்தகும் விதம்" எழுதப்பட வேண்டும்.

(11) பிறபாஷைகளிலும் சுய பாஷையிலும் பாண்டித்தியம் வாய்ந்தவர்கள் தமிழில் அருமையாய் உள்ளனவற்றைப் பிறபாஷைகளினும், பிறபாஷையில் அருமையாய் உள்ளனவற்றைத் தமிழ் மொழியிலும் மொழிபெயர்த்து விளக்கவேண்டும். இதுகாறும் மொழிபெயர்க்கப்படாதிருந்த பௌதிக ககோள, கிருஷிக கணித இரசாயன சாஸ்திரங்களை இயன்றவரை இன்னோர் மொழிபெயர்க்க முயன்று தீரவேண்டும். இது செய்ய ஒவ்வொருவரும் பிறபாஷை மொழிகள் கண்டு பிடித்தும், உண்டாக்கியும் வெளிப்படுத்த வேண்டும்.

[உதாரணமாக :— Fountain = நீர்ச்சிவிறி; Physiology = உயிர் நூல். Biology = உடல் நூல்; Psychology = உளநூல்; Philology = மொழி இயல்; Zoology = விலங்கியல்; Almyra = சுவர்ப் பெட்டி; Bureau = நிலைப்பெட்டி × கிடைப்பெட்டி.]

(12) தமிழ்ப் பத்திரிகைகளைப் பல்குவித்தும் அவற்றிற்கு விஷயதானஞ் செய்தும் பொதுப் புத்தகசாலைகள் ஏற்படுத்தியும், பயனுற்றவும் பயனெய்தவும் வேண்டும்.

(13) தக்க வித்துவான்களைக் கொண்டு உரைபெறாத நூல்கட்கு உரை எழுதுவிக்கவேண்டும்.

(14) பண்டை நூலாசிரியர்க்கும் உரையாசிரியர்க்கும் அவர்கள் பிறந்த ஊரிலும் இருந்து பிரசித்திபெற்ற ஊரிலும் ஞாபகச் சின்னங்கள் ஏற்படுத்தவேண்டும்.

(15) தொன்னூல் ஏட்டுப்பிரதிகள் "யாங்குளயாவுள?" எனச் சொல்லுமிடந்தோறும் விசாரித்துப்பெற்று, இவற்றை மஹா வித்வான் மஹாமஹோபாத்யாய ப்ரும்மஸ்ரீ சாமிநாதையரவர்கட்கேனும், தற்காலம் மதுரையில் தமிழ்வளர்ப்பான் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்கேனும் அனுப்ப வேண்டும். ஐயரவர்களும் தமிழ்ச் சங்கத்தாரும் உடல் பொருள் ஆவி மூன்றுந் தந்தும் அவை பெறத் தயாராயிருக்கின்றனர். ஆதலின் அவை இருப்பிடம் அறிவிப்போரும் ஈவோரும் இன்னோரா நன்றியும், விரும்பின், பொருளுதவியும் தவறாமற் பெறுவர்.

(16) சுயபாஷாபிமானம் மிகுதியாக எவ்வளவு இருந்த போதிலும், பிறபாஷாத்துவேஷம் என்பது அணுவளவும் இல்

லாதிருத்தலே மேன்மை. துவேஷ புத்தியால் விளையும் தீங்கும் விபரீதமும் மிக அதிகம் என்பதை என்றும் ஞாபகத்தில் வையுங்கள்.

எனது அன்பார்ந்த சகோதரர்களே! யான் இவ்வளவு தூரம் தமிழின் அருமை, பெருமை, தளர்ச்சி, வளர்ச்சி, பழமை, கிழமை முதலியன எடுத்துக்காட்டியது, அவற்றை அறியாதார் அறியவும், அபிமானம் அற்றார் அபிமானம் உற்றாராகவும், ஆர்வம் உள்ளார் ஆர்வமிக்காராகவும், ஆர்வம் மிக்கார் மன எழுச்சிமேலிட்டு மீட்டும் மீட்டும் தமிழ் வளர்ச்சி செய்யவும் வேண்டியே. இவ்வாறு தமிழை மேம்படுத்துவோர் தம்மைத் தாமே மேம்படுத்திக்கொண்டோராவர். இதனை மறுத்துக்கூற எவராலும் இயலாது. ஆதலின் நாம் இனியேனும் நமது பொறுப்பை நன்குணர்ந்து நம் ஜனன தேசத்திற்கும், பின்னோர்க்கும், தாய்மொழிக்கும் கண்ணியத்தை உண்டாக்கும் புண்ணியத்தைக் கைப்பற்றுவோமாக.

சரீர சுகம்.

நாம் ஒருவரை ஒருவர் சந்தித்துக்கொள்ளும்போது கேட்டுக்கொள்ளும் முதற்கேள்வி "க்ஷேமமா?" என்பதே. எவர்க்கேனும் கடிதம் எழுதும் காலத்தும் நம் க்ஷேமத்தை அவர்களுக்கு அறிவிக்கவும், அவர்கள் க்ஷேமத்தை நாம் அறியவும் விரும்புகிறோமன்றோ? உபசாரத்தின் பொருட்டோ, உண்மைக்கவலையினாலோ, நாம் இவ்வாறு இன்றும் செய்து வருகிறோம். க்ஷேமம் விசாரிப்பது பெரும்பாலும் வழக்கத்

தையும் உபசாரத்தையும் பொறுத்த விஷயமாகப்போய்விட்டது மெய்யே ஆயினும், இவ்விசாரணையால் தேகசௌக்கியம் எவ்வளவு முக்கியமும் அவசியமும் அருமையுமானது என்பது புலப்படும்.

உள்ளபடியே இச்சரீரமானது இருமைப் பயன்களுமாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருள்களையும்பெற்று அனுபவிப்பதற்குக் கடவுளால் அருளப்பட்ட கருவி; ஆதலால் நாம் அதை உபேட்சை செய்யாமல் கருத்தாய்க் காத்து ஏற்றபடி சரியான நெறியில் உபயோகித்து வரவேண்டியது. இவ்வாறு செய்வது நமது கடமைகளில் தலைசிறந்ததொன்றும்.

புகழ், கல்வி, வலிமை, வெற்றி, நன்மக்கள், பொன், நெல், நல்லூழ், நுகர்ச்சி, அறிவு, அழகு, பெருமை, இளமை துணிவு, நோயின்மை, வாழ்நாள் என்ற பதினறுபேற்றினையும் சரீரசுகம் ஒன்றிருந்தால் மட்டுமே அனுபவிக்கமுடியும். நோயாளிக்கு இடம் பொருள் ஏவலாதிய எவ்வளவு இருப்பினும், அவற்றால் உண்டாகும் இன்பத்தை அனுபவிக்க அவனால் ஆகாததலால், அவன் உடையோனாயினும் வறியனே ஆவன். சொத்துச் சுதந்திரம் ஏதும் இல்லாதானாயினும் சுகசரீரம் உடையவன் வயிறார உண்டு நிர்ச் சிந்தனையாக நித்திரைசெய்து வறுமையின் கொடுமை தோன்றாமல் ஆநந்தம் அனுபவித்தலால் அவன் வறியோனாயினும் உடையனேயாவன்.

மேலும், சுகசரீரமுடையவனேதன் சொந்தவேலையைச் செய்யவும்,பிறர்க்கு உதவிபுரியவும் கூடும். நோயால் வருந்

துகிறவனே தானும் சுகமடையாமல், பிறர்க்கும் பயன்படாமற் போவதோடு, தனது உற்றார் பெற்றோர் உடன்பிறந்தோராதிய சுற்றத்தாருக்கும் பெரும் பாரமாகி அவர்களையும் தன்பொருட்டுக் காலநஷ்டத்திற்கும், திரவியச்செலவிற்கும், கடனுக்கும் உள்ளாக்கிப் பலவிதத்திலும் வியாகூலத்தைவிளைவிக்கின்றான்.

அன்றியும், சுகசரீரியே "மெய்த்திருவந் துற்றாலும் வெந்துயர் வந்துற்றாலும் ஒத்திருக்கும் உள்ளத்து உரவோன்." அவனே உலையாமுயற்சியை ஆதரவாகக்கொண்டு எடுத்த காரியத்தைச் சாதித்து முடிக்கவல்லான். நோயாளிக்கோ ஊக்கம் குலைந்து ஏக்கம் மிகும். அவனுக்கு அற்ப தோல்வியும் அதிகமாகத் தோன்றும்.

இம்மட்டோ? தேக ஆரோக்கியமே நன்னடக்கைக்குக் காரணமாக இருக்கிறது: திடசரீரம் உள்ளவனுக்கே தெளிந்த புத்தியுண்டு. ஆதலால் பெருந்தன்மை, தைரியம், சந்துஷ்டி, யோக்கியம் முதலியன சுக சரீரிக்கே உண்டு. தேகவலியில்லானுக்கோ மனவலி யிராதாதலால், அவன் தீராச் சந்தேகியும் சந்துஷ்டியில்லாதவனுமாகி, பொய்குறளை வெளவல் அழுக்காறாதிய அற்பகாரியங்களிற் பிரவேசிப்பான்.

இதுகாறும் கூறியவாற்றால் மானிட ஜன்மத்துக்குரிய கடமைகளைச்செய்யவும்,கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட சிறந்த பொருள்களைக் கிரமமாக உபயோகித்து அனுபவிக்கவும், பிறர்க்குச் சுமையாய் இராமல் சகாயமாய் இருக்கவும் வேண்டுமானல், இயன்றவரை தேகசௌக்கியந் தவறாமல் வாழ வேண்டுமென்பது இனிது விளங்கும்.

நோயற்ற வாழ்விலும் பெரும்பேறு வேறொன்றும் இல்லை; ஆயினும், நிழலின் அருமையை வெயிலில் சென்ற பின்னரே நன்குணர்வோரைப்போன்று, அநேகர், தம் சுகம் குன்றியகாலத்தில் தான், ஆரோக்கியத்தின் அருமையை அறிந்து உணர்கின்றனர்.

சுகவீனமுற்றுத் துன்புறுவதற்கு உண்மைக் காரணம் அறிய ஆற்றலும், ஆவலும் அக்கறையும் இல்லாதார், அது "விதிவச"த்தால் நிகழ்வதென்றும், "கண்கெட்ட பாழான தெய்வத்தின் குரூரச்செய்கை" யென்றும்,எண்ணியும், கூறியும், நொந்தும், திருப்தியடைகின்றனர். இது முற்றிலும் தவறு. தம் முயற்சியுள்ளவர்க்கே தெய்வம் துணைசெய்யும். தமது மதிக்குறைவாலும் சொந்தத் தவறுதல்களாலுமே மனிதர்கள் நோயால் பீடிக்கப்படுகின்றனர்.

சுகாதார விதிகளை மீறி நடப்பதே நோயுறுவதற்கு முக்கிய காரணம் ஆகும். வாலிபத்தில் தங்கள் சுகத்தைப் பேணுமல் அநேகர் துன்மார்க்கர்களாகிப் பலவிதத்திலும் தங்கள் உடம்பைக் கெடுத்துக்கொள்கின்றனர். இவர்களுடைய துற்செய்கைகளால் வரும் தீங்கு தக்ஷணமே புலப்படுவதில்லை. ஆதலால் " முற்பயக்கும் சின்னீர இன்பத்தின் " " பிற்பயக்கும் பீழைபெரிது " என்று உணராத இவர்கள் சிறிதுகாலம் சுகமும் பலமும் உள்ளவர்களாகக் காணப்படினும் அந்தோ! இவர்கள் அறியாமலே இவர்கள் விதைத்த பிணிவித்துக்களும் பலவீனவிதைகளும் வேர்ஊன்றி முளைத்து, கொஞ்ச காலத்திற்குள் வேலைசெய்ய ஆரம்பித்துவிடுகின்றன. இப்பிஞ்சில் பழுத்தவர்கள் 30-வயது ஆகுமுன்னரே, தொண்ணூறு வயது சென்ற கிழவர்கள் போன்று,

"நரையொளி பிறங்கி உடம்பெலாந் திரைந்து
நரம்புகள் தெரிந்திட வறந்து
தெரிதரும் கட்பா வையின்ஒளி மழுங்கி"

அகால வயோதிகத்திற்கும் அகாலமரணத்திற்கும் ஆளாகின்றனர். கூடியவரை நல்லொழுக்கம் உடையோராய் இருந்து தம் சரீரத்தைப் பாலியத்திற் பாதுகாத்துக்கொண்டவர்களோ, வயோதிக பர்வத்திலும் வாலிபர் போன்று சுகமும் பலமும் மிகவாய்ந்தவர்களாய் இருக்கின்றனர். இவ்விரு திறத்தாரையும் நாம் கண்கூடாகக் கண்டிருக்கிறோம்.

சிலர் வியாதிகளைப் பிதிரார்ஜிதமாகவும் மாதிரார்ஜிதமாகவும் (அதாவது பெற்றோர் வழிப்) பெறுவதுமுண்டு. இப்பெற்றோரும் பால்யத்தில் கெட்டழிந்தே வியாதி சம்பாதித்தவர்கள் என்றறிக.

செல்வவான்கள் சோம்பலினாலும் பணக்கொழுப்பினாலும், ஏழைகள் வறுமையினாலும் அதனால் நேரும் முட்டுப்பட்டாலும் கண்ட கண்ட இடங்களில் குடியிருந்தும், தகாத அன்னாகாரங்களைப் புசித்தும் உரியகாலங்களில் நித்திரை செய்யாமலும், எண்ணெய் தேய்த்துக்கொள்ளாமலும், க்ஷௌரம் பண்ணிக்கொள்ளாமலும், பேதிமருந்து வாங்கி மருந்து உட்கொள்ளாமலும், அம்மை குத்திக்கொள்ளாமலும், சரீர சௌக்கியத்திற்கேதுவான மற்ற விதிவிலக்குகளைக் கவனியாமலும் வியாதியில் வீழ்கின்றனர்.

இவற்றைத்தவிர வியாதி அஃதில்லாவிடத்தில் உண்டாவதற்கும் அங்குப்பரவுதற்கும் காரணம் யாதெனில், உத்ஸவாதிகாலங்களில் தொத்து வியாதியினால் பீடிக்கப்பட்ட ஜனங்கள் நாலு இடங்களிலினின்றும் திரள்திரளாக அங்கு வந்து கூடுவதே. நிற்க,

இதுவரை சொல்லிய விஷயங்களால் நமது தேகவலிமை குன்றி அழகொழிந்து மனஉறுதி மாறுவதற்கும் நீங்கா வேதனைக்கும் உள்ளக் கவலைக்கும் அகாலமரணத்திற்கும் காரணமானது வியாதியே என்பது விளங்கும்.

வெள்ளம் வருவதற்கு முன்னர் அணைகோலிவையாமல், அது பெருகுதற்கண் அணைபோடப் பிரயத்தனம் செய்வது அறிவீனமன்றோ? அதுபோலவே, சகலகேட்டிற்குங்காரணமாகிய வியாதி அணுகாதபடி முன்னுக்கு முன்னாலேயே தடுத்துக்கொள்ளாமல், அது வந்தபின் தீர்த்துக்கொள்ள முயல்வது வருத்தத்தைத் தரத்தக்கதும் ஒருவேளை கைகூடாமற் போகக்கூடியதுமேயாகும்.

எல்லாநோய்களையும் அண்டவொட்டாமல் தடுக்க எவராலும் இயலாதெனினும், தேகசௌக்கியத்தைக் காப்பாற்றிக்கொள்வதற்குத் தகுதியான வகையை யாவரும் தெரிந்துகொண்டால் பலவியாதிகளைத் தலையெடுக்கவொட்டாமல் இயன்றவரை தடுக்கலாமன்றோ? இவ்வாறு தடுக்கப் பலவழிகள் உண்டு. அவற்றுள் சிலவருமாறு :—

(1) தரைமட்டத்திற்குத் தாழ்வாய் இராததும், தண்ணீர் ஊறித் தங்காததும், வருஷத்திற்கிரு முறை வெள்ளை

யடிக்கப்பட்டதும், காற்றோட்டத்திற்குப் போதுமான பல கணிகள் பலகொண்டதும், துர்நாற்றமுள்ள குப்பை முதலிய அசுத்தங்களால் சூழப்படாததுமான வீட்டை வசிப்பிடமாகக்கொள்ளல் வேண்டும்.

(2) அந்தந்தத் தேசத்திற்கும் அவ்வக் காலத்திற்கும் ஏற்ற ஜீரணிக்கத்தக்க சுத்த போஜனத்தையும் அழுக்கு இல்லாத தெளிந்த நீரையும் அருந்தவேண்டும்.

(3) அவயவங்களில் அழுக்கேறாதபடி தேய்த்துக் குளித்துத் தோய்த்துலர்ந்த மாசிலா உடையைத் தரிக்கவும், தீண்டத்தகாத மனிதரையும் மிருகங்களையும் பொருள்களையும் தீண்டாமல் இருக்கவும் வேண்டும்.

(4) வியாதிகள் மிகுதியாய்ப் பரவக்கூடிய காலங்களில் அவை அணுகாதபடி வீட்டை வெள்ளையடித்து செங்கல் தரையையும் மண் தரையையும் பசுவின் சாணங்கொண்டு மெழுகவேண்டும்.

(5) பகற் பொழுதும் அந்திப்பொழுதும் தூங்காமல், ஜாமத்துறங்கி வைகறையிற் றுயிலெழ வேண்டும்

(6) ஜீரணக் கருவிகளும் உதிரக்கருவிகளும் சுவாசக் கருவிகளும் தத்தம் வேலையைச் சரிவரச் செய்யுமாறு நாள்தோறும் உடம்பு வேர்த்துக் களைக்க வேலைசெய்யவும், சுத்த வாயு உள்ள இடங்களில் ஓடி விளையாடவும் வேண்டும்.

(7) "சனிபுதன்தனில்எண்ணெய் வெந்நீரில்மூழ்குவார்
சாருமிள வெயில் விரும்பார்
தம்வயது மேலான மங்கையைச் சேரார்
சதாகாலம் வழியில் நடவார்
பனியிலும் காற்றிலும் மெய்வருந்தார்மடைப்
பள்ளியிற் சேவகமிரார்
பழங்கறி யருந்தார் இரண்டடக் காரொன்று
பல்காலமும் விட்டிடார்
கனியொடுகிழங்குகள் மிகுந்தபுசியார்பல
கலந்தன்றி யுணவுசெய்யார்
மனிதரிவர் பேர்சொன்னபேர்க்கு நோய்வருகுமோ ?"
என்பதைச் சிந்தித்து ஒழுகவேண்டும்.

(8) ஆறுமாதத்திற் கொருமுறை வாந்தியாகும்படி யாகவும், நான்குமாதத்திற் கொருதரம்,பேதியாகும்படி யாகவும் மருந்துண்ணவேண்டும்.

தம்மாலியன்ற அளவு முற்கூறியவாறு வியாதிகளைத் தடுத்தும் நோயணுகுமானால் அக்காலத்தும், தாமே தமது அறியாமையாலும் அறிந்தவழியும் அஜாக்கிரதையினாலும், நோய்வலியத்தேடிக்கொண்ட காலத்தும், வியாதியஸ்தர்கள் தமது நோயின் நிலைமையைச் சிறிதும் ஒளியாமல் உடனுக்குடனேயே உள்ளபடி வைத்தியனுக்குக் கூறி அவன் விதிக்கும் பத்தியத்தையும் ஔஷதத்தையும் பக்தி விசுவாசத்துடன் கொண்டு அபத்தியத்தை விலக்கவேண்டும். இங்ஙனமே ஒழுகினால் சுகசரீரியாக வாழலாமென்பது திண்ணம். "நோய்க்கிடங்கொடேல்" என்றமுதுமொழி நோக்கத் தக்கது.

"நோயற்றவாழ்வே குறைவற்றசெல்வம்" என்பதனால் நோயுற்றவர் வாழ்வு நிறைவுற்றதாயினும் குறைவுற்றதே யென்பதும், நோயற்றவாழ்வு வறுமையுற்றதாயினும் அதுவே, குறைவில்லாத பெருஞ்செல்வ வாழ்க்கையாமென்பதும் நன்கு விளங்கும்.

புறங்கூறாமை.

:(o):

"பொய் குறளை வன்சொல் பயனில என்றிந்நான்கும்" வாய்க்குற்றம் என்பர் மேலோர். இவற்றுள் "குறளையே" புறங்கூறலாம். குறளை, கோள்சொல்லுதல், கௌவை ஆகிய இவை புறங்கூறல் என்னும் ஒரு பொருள் குறித்த பல சொற்களாம்.

புறங்கூறலாவது ஒருவரில்லாத காலத்து அவரை இகழ்ந்து உரைத்தல். புறங்கூறுவதால் உண்டாகும் தீங்குகள் அநந்தம். புறங்கூறுபவரை அவரது உறவினரும் விட்டு நீங்குவர். நெருங்கிய சிநேகர்களாக இருப்பவரும் விட்டுப் பிரிவர். எப்படியெனில் புறங்கூறித்திரிவோன், ஒருவன், பிறனுடைய அற்பப்பழியொன்றை, அவனைக் காணுவிடத்து அஞ்சி வெளியிடுவானாயின், அவ்வற்ப சந்தோஷியின்பெரும் பழிகள் பலவற்றை புறங்கூறப்பட்டவன், அவனுக்கு எதிரிலேயே நின்று சிறிதுமஞ்சாமல் அவன் மனம் வருந்தச் சொல்லி அவனை நாணித் தலைகவிழ்ந்து வாயடங்கச் செய்துவிடுவான். அன்றியும் யோக்கியர்கள் அதனைச் செவியுறு

வராயின், அவனுடைய தீக்குணத்திற்காகவும், பிறர்பால் தம்மைப்பற்றியும் பழி தூற்றக்கூடும்என்ற எண்ணத்தினுலும், அவனோடு சேர்ந்து உறவாடுதலை நிறுத்திவிடுவார்கள். "கோளைச் சொல்லின் எவ்வருக்கும் பகை" யன்றோ?

இத்தீக்குணத்தால், கூறுவோர்க்கு மட்டுமேயன்றி பிறர்க்கும் கேடுண்டு. எப்படியெனில் ஒருவனுக்குப் பழிப் புண்டாகும்படி பேசுவதனுல் அவனுடைய பெயர் கெட்டுப் போகிறது. அவன்வருவாய் குன்றி வருந்தும்படியும்ஆகிறது. அன்றியும் அறியாதார் அவனை அவமதிக்கவும் அருவருக் கவும் புறங்கூறல் இடம் தருகிறது. இக்காரியங்களால் நிஷ் காரணமாய் நிரபராதிக்குக்கூட மானக்கேடு உண்டாகிறது.

புறங்கூறலால் நேரும் கொடுமைக்குக் கூனியின் கூற் றே சான்று: தசரதசக்கிரவர்த்தி தனது முக்கியமனைவிமார் மூவருள் மூத்தவளான கோசலைப்பிராட்டியின் குமாரன் ஸ்ரீராமனுக்கு முடிசூட்டச் சித்தமாயிருப்பதைக்கேட்டு அவ னது இளையமனைவி கைகேயியின் வேலைக்காரியான மந் தரை என்னும்பெயருள்ள கூனி, கைகேயியிடம் சென்று இராமன்மேற் சில குற்றங்கள் குறைகள் கற்பித்துக் கூறி அவள் மனத்தைக்கலைத்து ஸ்ரீராமனிடம்பகைமூட்ட அவள், தன்கணவனிடம்சென்று,தான்முன்னொருகால் வாக்கு தத்த மாகப்பெற்ற இரண்டுவரங்களுக்கீடாக இராமனை காட்டுக் கனுப்பி பரதனுக்கு நாடுகொடுக்கவேண்டுமென்று வேண்ட, அதனுல் இராமன் வனவாசஞ் செய்யவேண்டி வந்ததும், தசரதன் புத்திர சோகத்தால் மரித்ததும் அறியாதார் யார்?

புறங்கூறுவோர் கீழ்மக்களே; பலவகை மலர்காய், கனிகள் நிறைந்த சோலையில் காக்கை கசப்பான வேப்பம் பழத்தையே விரும்புதல்போல, இக்கீழ்மக்கள், பலவகை நற்குணங்களும்நிறைந்த ஒருவரிடத்திலுள்ள அற்பக் குற்றத்தையே பாராட்டிப் பலருமறிய பறைசாற்றுவர். 'நகச்சொல்லி நட்பாடல், தேற்றாது பகச்சொல்லிக்கேளிர் பிரிக்கும்," இப்பேதைமாக்கள் "நல்ல பாம்பினுங்கடு நஞ்சுடையவர்களே." இவர்களைக்கண்டால் எத்துணைச் சாமர்த்தியமுடையவர்களும் அதிஜாக்கிரதையாகவே இருக்கவேண்டும். இவ்விஷயத்தை

" முன்னின் ஞெருவன் முகத்தினும் வாயினும்
கன்னின் றுருகக் கலந்துரைத்துப்—பின்னின்
றிழித்துரைக்குஞ் சான்ருேரை அஞ்சியே தேவர்
விழித்திமையா நின்ற நிலை."

என்று "திருமுனைப்பாடியார்" சமத்காரமாய் வற்புறுத்துகிறார். இப்பாட்டின் கருத்து யாதெனில், "ஒருவனைக் கண்டபொழுது மட்டும் முகமலர்ச்சி காட்டி, வாயாலும் (மனங்கலந்து பேசுபவர் போலக்) கல்லுமுருகும் படிக் கனிவாகப் பேசி, அவன் காணுதபொழுது அவனையே புறங்கூறும் அற்பர்களின் தன்மைக் கஞ்சியே தேவர்கள் எப்பொழுதுங் கண்மூடாது விழித்தே நிற்பாராயினர் என்பதாம்.''நிற்க.

போகவிட்டுப் புறங்கூறித்திரிவதற்குப் பிறருடைய செல்வம், புகழ், கல்வி முதலியவற்றைக் காணும்பொழுதுண்டாகும் அழுக்காறே, முக்கிய காரணமாகும். ஆயி

னும் தமக்கென வேறொருதொழில் முயற்சியுமில்லாமல் சோம்பித்திரியும் வம்பர்கள் சிலர், தாம் கெட்ட சுபாவம் உடையவர்களென்று தெரியாமலும், பகைமைக்குக் காரணம் ஏதுமின்றியும், பிறரை நகைக்கச்செய்து, அதனால் தாமும் சந்தோஷமடைய வேண்டுமென்ற கருத்துடனேயே பலருடைய குறைகளை எடுத்துச் சொல்லவதே தொழிலாகக் கொண்டு காலங்கழித்து வருகின்றார். இன்னோரைக் கண்டால் "பயன் ஏதுமின்றிக், கேவலம் உடம்பு துடித்தலைப் பார்க்க விரும்பிப் பிறரைக் கன்னத்தை உடைத்துக் கொல்லுபவனைக்கண்டால் எப்படி அஞ்சவேண்டுமோ அவ்வாறே அஞ்சி அகலப்போதலே" அறிவுடையோர்க்கழகு. இதுபற்றியன்றோ குமரகுருபர சுவாமிகளும்,

"பகையின்று பல்லார் பழி யெடுத் தோதி
நகையொன்றே நன்பயனுக் கொள்வான்— பயமின்று
மெய்விதிர்ப்புக் கான்பான் கொடிறுடைத்துக் கொல்வா
கைவிதிர்த் தஞ்சப்படும்" [ன்போல்

என்றனர்.

மணலிலே முழுகி மறைந்திருக்கிற தவளை சும்மா இராமல் தன் வாயால் ஒலித்துக் குரல்காட்டுதலால், இஃதுள்ள இடத்தைப் பாம்பு அறிந்து அதனைப் பிடித்துக்கொள்ளுதல் பற்றி அழிவடைகிறதுபோல, காணுவிடத்தில், சும்மா இராமல் தன் வாயால் பழிமொழி கூறுகிறவன், பிறர் தனது தீக்குணத்தை அறிந்து வருத்துதலால் துன்பமுற்று அழிவான்.

இதுவரை சொல்லியவற்றினின்றும் "படிறும் பயனிலவும் பட்டிஉரையும் வசையும்" கலந்து தோன்றப்பெற்றதும், அதர்மங்கள் யாவினும் அறக்கொடியதுமானது புறங்கூறல் என்பது தெள்ளிதிற் புலப்படும். பழிபாவத்திற்கிடமான இம்மொழிக் குற்றத்தை விலக்க விரும்பும் ஒவ்வொருவரும் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயங்கள் சிலவுள:—

முதலாவது:— பழிப்பன பகர்தற்குக் காரணமாயுள்ள மனக்குற்றமாகிய அழுக்காற்றை நீக்க இயன்றவரை முயலவேண்டும்.

இரண்டாவது:— புறங் கூறும்பொருட்டுப் பிறர் குற்றத்தை ஆராய்வதை நிறுத்தி, புறங்கூறலாகிய தங்கள் குற்றத்தைச் சிந்திக்கவேண்டும்.

மூன்றாவது:—பிறர் பிறர் சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காக்கவும் நாகாக்கவும் வேண்டும். ஆனால் ஒருவன் செய்யும் குற்றங்கள்யாவும் உண்மையாயிருந்து அக்குற்றங்களை வெளியிடுவதனால் உலகத்திற்கு நன்மை உண்டாவதாய் இருக்குமானால் அவசியம் வெளியிட்டுத் தீரவேண்டியதே. ஆயினும் கூடுமானால் அவனைத் தனித்தழைத்துப் புத்திபுகட்டி நல்வழிப்படுத்துவதே நன்மை.

விடா முயற்சி.

"முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்"—பொய்யாமொழி.

முயற்சி, வினை, தொழில் என்பன ஒருபொருட் சொற்கள். இம்முயற்சியானது உலகத்திலுள்ள எல்லாருக்கும் இன்றியமையாதது. சகல காரியங்களையும் நடத்துவது. தினந்தோறும் புதிய புதிய தோற்றங்களையும் சுகதுக்கங்களையும் கொடுத்து நிற்பது. மானிடர்களில் உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள்- கற்றவர்கள், கல்லாதவர்கள்- பலசாலிகள், பலவீனர்கள் முதல் எல்லாருக்கும் உரியதாகி அவரவர்களை உயர்த்துவது இதுவே.

இது சரீர முயற்சி, மனமுயற்சி யென இருவகைப்படும். இவற்றுள் மன முயற்சியே மிகச் சிறந்ததாகும். சரீர முயற்சிக்கும் மனமுயற்சியின் துணை அவசியமாகும். மன முயற்சிக்கோ சரீர முயற்சியின் துணை அவசியமில்லை. மன முயற்சியினின்றுதான் சரீர முயற்சி தோன்றுமென்று கூறினும் இழுக்காது. பூதபௌதிக ரசாயன நூல்கள், கணிதநூல்கள், வேதாந்த சித்தாந்த நூல்கள் முதலிய சகல சாஸ்திரங்களும் ஒவ்வொருவருடைய மனமுயற்சியின் பயனாகவே வந்தன வென்பதை யாராவது மறுக்க முடியுமா?

யார் யார் எதை எதை அடையவேண்டுமாயினும் தக்க வகையால் விடாது முயலல் வேண்டும். விடாமுயற்சியுடையார்க்கு எதுவும் கைகூடும். "என்னை? உயர் மரக்கொம்பில் உள்ளதேனைத் தானே சென்றடைய வேண்டுமென, ஒரு முடவன் விடாது முயன்றால், அது கைகூடுமா றெங்ஙனம்? இதனால் முயற்சியினாலேயே எதையும் அடையலாம் என்றல் இயையாதன்றோ?" எனின், "அற்றன்று. தக்க வகையால் விடாது முயறல் வேண்டும் என மேலே கூறியதைக் கவனித்தால் இத்தகைய ஆசங்கை நிகழாது" என்க. முயற்சிக்குரிய தக்க வகை யாது? எனிற் கூறுவம்.

"காலமறிந்தாங் கிடமறிந்து செய்வினையின்
மூலமறிந்து வினைவறிந்து—மேலுந்தாம்
சூழ்வன சூழ்ந்து, துணைமை வலிதெரிந்து
ஆள்வினை யாளப் படும்."

என்ற நீதிநூலுடையார் கூற்றை நன்கு சிந்தித்தால் முயலும் வகை யனைத்தும் எளிதிற் காணலாம்.

ஒரு காரியத்தின் நிமித்தம் முயலுமுன்னர், அதைச் செய்து முடித்தற்குரிய காலத்தையும், செய்தற்கேற்ற இடத்தையும், அக்காரியத்திற்குக் காரணத்தையும், செய்யுங்காலும் செய்தபின்னும் வரத்தக்க நன்மை தீமை விளைவுகளையும் ஆராய்ந்துகொண்டு, யோசிக்கற்பாலவனைத்தும் ஓர்ந்து, தனக்குத் துணையாக வருபவைகளையும் சிந்தித்துச் செய்ய வேண்டும் என்பது மேற்கவியின் கருத்தாகும்.

"பொருள், கருவி, காலம், வினை, இடனொ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்"

என்ற தேவர் திருவாக்கும் இதுவேயாம்.

"ஒன்றைச் செயப்புகு முன்னரே, இதைச் செய்தற்கு இப்பொழுது ஏற்ற காலமா?" என்பதை முதற்கண் ஆராய வேண்டும். ஆங்காலமாயின், உடனே செய்யத்தொடங்கலாம். அல்லாக்காலமாயின், ஆங்காலம் வரும்வரை பொறுத்து அடங்கியிருந்து, அது வந்தபின்னரே முயலவேண்டும். இது பற்றியே,

"காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர்".

"கொக்கொக்க கூம்பும் பருவத்து; மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து."

என்றார் பெரியோர். பகலிற் கூகையைக் காக்கை வெல்லும். இரவில் அக்காக்கையை கூகையே வெல்லும்.

கால நலத்தைக் கருதுவதுபோலவே காரியசித்தி பெறு தற்குரிய இடத்தைப்பற்றிக் கவனித்தலும் மிக அவசியமே: "தன்னூர்க்கு யானை அயல் ஊர்க்குப் பூனை" என்பது பழ மொழியன்றோ? நீருள்ளிருக்கும்போது முதலை மலையை யொத்த மதயானையையும் இழுத்து வெல்லும். தன்னிடமா கிய நீரைவிட்டுக் கரையில் வந்துவிட்டால், ஒரு நரிகூட அம் முதலையை வென்றுவிடும். கருடனைக்கண்ட பாம்புகள், அஞ்சி நடுங்குவனவாகும். சிவபிரான் அணிந்திருக்கிற பாம்புகள்

அங்குவந்த கருடனைக்கண்டு புன்னகைகொண்டு 'கருடா சுகமா? என்று வினவினவாம். அதுகேட்ட கருடன் அப் பாம்புகளின் செயலை வியந்து, 'யாருக்கும் இருக்குமிடத்தி லிருந்தால் சுகந்தான்' என்று விடைகொடுத்ததாம். இதனால் ஒவ்வொருவருடைய வலிமையும் எல்லா இடத்திலும் செல்லு மெனக் கருதாது, தங்கள் தங்கட்கு உரிய இடத்தின் அமைதி யைக் கவனித்தே முயல்வது அவசியமாகும்.

நாம் செய்யும் காரியம் இதன்மூலமாக முடியுமென்று அதற்கு ஆதிநிலையை ஆராய்ந்து கொள்வதும், அதைச்செய் யுங்கால் இடையில் சம்பவிக்குங் கஷ்டநஷ்டங்களை யெல்லாம் தெரிந்து, அவற்றிற்குத் தக்க பாதுகாப்போடு செய்வதும், அக்காரியம் நிறைவேறுதலால் உண்டாகும் பயன் இன்னது என்றுந் தெரிந்துகொள்வதும் அவசியம். மிகப்பெரியகாரியத் தைச்செய்து அறச்சிறிய பலனை யடையவேண்டிவரின், வியர்த்தமாம். "மலையைக்கிள்ளி எலியைக்கொள்ளல்" என்ற படி, வீண்படாவாறு முன்னரே கருதிச் செய்துமுடித்தல் வேண்டும். இவ்வாறு ஆராயாமல் அவசரப்பட்டுப் பொறுமை கோப முதலியவற்றால் முதலில் ஒன்றைச்செய்து, பின்பு மனங் கவல்வது, அறிவற்ற செயலேயாம். ஒன்றைச் செய்யு முன்னரே அதைப்பற்றி யோசிக்கவேண்டியவற்றையெல் லாம் நிதானமாக யோசித்துத் தீர்மானித்துப் பிறகே தொடங்கவேண்டும். அங்ஙனம் ஆலோசியாது தொடங்கினால் இடையே வலியற்று இடர்ப்பாடெய்த நேரும்.

"உடைத்தம் வலிஅறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முறிந்தார் பலர்." என்பதும்,

"எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு."

என்பதும் இக்கருத்தை வலியுறுத்துவனவாம்.

தாம் எவ்வளவு வலியராயினும் தம் துணைவர் வலியை யும் அறிந்து செயல் வேண்டும். யாவராயினும் பிறருதவி யின்றி ஜீவிக்கமுடியாது. ஆதலின் நட்புக்கொண்டு உதவு வார்களின் கால நலம் முதலியவற்றையும் நாமே நன்கு தெரிந்துகொள்ள வேண்டுமென்பதாயிற்று.

இங்ஙனமே காலம் இடம் முதலிய அனைத்தையும் முன் னரே தெரிந்து தொடங்குவார்க்கு, முடியாதகாரியம் எதுவு மிராது. இதனாலேயே

"ஞாலங் கருதினும் கைகூடும் காலங்
கருதி யிடத்தாற் செயின்."

என்றார் பெரியார்.

இங்கே கூறிய எல்லாவகையாலும் தெளிந்து தொடங்கியபோதும் அக்காரியம் நிறைவேறாது தவிர்தலும் உண்டு. ஒருமுறை தவறினால் அத்துடன் மனச்சலிப்புறாது பின்னும் பின்னும் அதுவே நினைவாகப் பன்னாள் முயலல் வேண்டும். அவ்வாறு விடாமுயற்சி செய்யின் அக்காரியம் கைகூடுமென்பது ஒருதலையேயாம். உலகத்தில் பகீரதப் பிர யத்நனம் என்று வழங்கும் பழமொழியைப் பார்ப்போம்: ஆகாய கங்கையைப் பூமிக்குக்கொண்டுவரக் கருதி ஒருவன் பன்னாள் முயன்று இறக்க, அவன் மகனும் அவ்வாறே பன் னாள் முயன்று இறக்க, அவன் மகனும் மனந்தளராது

முயன்று அக்கங்கையைப் பூமியிற்கொண்டுவந்து கருமத்தை நிறைவேற்றினான். இவனே பகீரதன். இதனால்தான் "பகீரதப் பிரயத்தனம்" என்று விடாமுயற்சிக்கு இவனையே உலகத்தார் உதாரணங் கூறுவாராயினர். நிற்க,

"முயற்சியால் அடையத்தக்கது எதுவுமில்லை; எல்லாம் விதிப்படியே (ஊழின்படி) நடக்கும்" என்று கூறுவார் பலர். விதியே வலிதென்றும், மதியே வலிதென்றும் பலர் சண்டையிடுவர்:

"ஊழிற் பெருவலி யாவுள? மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்."

"தெய்வத்தா லாகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்."

என்பதையும், எடுத்துக்கூறித் தங்கள்தங்கள் கல்வி யறிவிற் கேற்ப வாதித்து எதிரி வாயை யடக்குவர். 'வெல்லாமல் எவரையும் மருட்டிவிட, வகைவந்த வித்தை' கற்ற இவர்களின் உரை வெற்றுரையேயாம் என்ற உண்மையை, இந்நூலின் இரண்டாம் பாகத்தில் (122-ம் பக்கத்தில்) ஓர் மேற்றிசைப் புலவர் கூறிய "வாழ்விசைப்பா" என்ற விஷயத்தையும் நன்காராய்ந்து அறிக. நிற்க.

இந்த ஊழ் என்பது யாது? என்று ஆராய்வாம் "இருவினைப்பயன் செய்தவனையே சென்றடைதலாகிய நியதியே ஊழ்" என்பர் பரிமேலழகர். இஃது எல்லா நூலாசிரியர்க்கும் ஒப்ப முடிந்ததாம். ஆகவே, விதி அல்லது ஊழ் என்பது, நாம்முன்னர்ச்செய்த கர்ம பலனேயன்றி வேறில்லை.

ஆகவே அந்த ஊழுக்கும் ஆதியாய் நிற்பது நமது தொழிலே யென்று துணியப்படும். இங்ஙனமாக, முயற்சிக்கு வேறு காத விதியை வேறு தனிப்பொருளாகக் கொண்டு வாதித்தல் செல்லாதென்க. அன்றியும் மார்க்கண்டேய முனிவர் தம் முயற்சி வலியால் விதியையும் வென்று என்றும் இறவாத பதவி பெற்றார் எனக் கூறலாலும், மனத்திட்பத்துடன் விடாது முயன்றால் விதியை வெல்லலாம் எனக்கருதி,

"உலையா முயற்சி களைகணா வூழின்
வலிசிந்தும் வன்மையும் உண்டே—உலகறியப்
பான்முளையே தின்று மறலி யுயிர்குடித்த
கான்முளையே சாலுங் கரி. எனவும்,

"ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்."

எனவும், முனிவருந் தேவரும் பணித்தமையானும், முயற்சியானது அவசியம் வேண்டப்படுவதொன்றே யென்பது போதருதல் காண்க.

ஒவ்வொருவருக்கும் தம்முயற்சியால் வருபொருள் சிறிதேயாயினும் அதனாலடையும் மகிழ்ச்சி மிகப் பெரிதாதல் உலகானுபவமாகும். "பிறர் தேடிவைத்த பட்டுமெத்தையில் தங்கக்கட்டிலில் துயில்வதினும் தான் தேடிய தாழம்பாயில் துயிறல்சிறந்தது" என்பது பழமொழியன்றோ?

"முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்", "உத்யோகம் புருஷ லக்ஷணம்" என்பன முதலாய எத்தனையோ முதுமொழிகளால் நம்மவர்கள் முயற்சியையே மிகப்பெரிதாகக்

கருதியவர்கள் என்பதை யறியலாம். முயற்சி யுடையார்க்கே செல்வப்பெருக்கு உளதாமென்பதும், முயற்சியில்லாதார் உபகாரிகளாகாரென்பதும், அவர் உபகரிக்கத் தொடங்கினும் இடைக்கண் முறிந்துபட் டொழியு மென்பதும், பொய்யில் புலவர் கருத்து. இதனை,

"தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு."

"தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்."

என்னும் வேதமொழிகளே வலியுறுத்தா நிற்கும். இங்ஙனம் முயன்று ஈட்டும் பொருளெல்லாம் தக்கவர்கட்கு உபகரித்தற்கே உரியனவாகக் கொள்ளவேண்டுமென்பார்,

"தாளாற்றித் தந்த பொருள்எலாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு."

எனவும் கூறினர். இவற்றால் முயறற் சிறப்பும், முயன்றீட்டும் பொருட்சிறப்பும் அப்பொருளாற் பெறப்படும் பயனின் தன்மையும் இனிது விளங்குவனவாம்.

கண்டீரக் கோப்பெரு நள்ளியைப் புகழத்தொடங்கிய வன்பரணர் என்னும் புலவர்,

"கறங்குமிசையருவிபிறங்கு மலை நள்ளி! நின்
அசைவில் நோன்றாள் நசைவளன் ஏத்தி..."

என்றார். இதில் "அசைவில் நோன்றாள் நசைவளன் ஏத்தி" என்ற சொற்றொடர்களைக் கவனிப்பாம். "தளர்ச்சியில்லாத

வலிய முயற்சியானுயை நச்சப்படும் செல்வத்தை வாழ்த்தி," என்ற பொருள் தோன்றும். இதனால் தளராது ஊக்கத்துடன் முயன்றால் செல்வமுளதாம் என்பதும், அச்செல்வம் ஊருணி நீர்போல யாவராலும் விரும்பிக் கொள்ளத்தக்கபடி பிறர்க்கு உபகரிக்கும் பெற்றிமைவாய்ந்திருத்தல் வேண்டுமென்பதும், அங்ஙனம் வாய்ந்திருந்தால் தான் வாழ்த்தப் பெறுவாமென்பதும் விளங்குதல் காண்க.

ஆங்கிலேயர் ஜப்பானியர் அமெரிக்கர் முதலிய எத்தனையோ நாட்டார்கள் முயற்சியின் பலத்தால் முன்னிலும் பன்மடங்கு மேம்பாடுற்று விளங்குவதை யாவரே அறியார்? இவர்கள் சிலகாலத்துக்கு முன்னர் இருந்த தாழ்ந்தநிலையையும் முயற்சி வலிமை பெருகப்பெருகத் தற்போது இவர்கள் அடைந்திருக்கும் மஹோந்நத நிலையையும் சரித்திர வாயிலாகப் படித்தறிந்தவர்கள் ஒரு நிமிஷங்கூட முயற்சியின்றி வீண்பொழுது போக்கச் சம்மதியாரென்பது துணிபு.

இத்தகைய முயற்சியென்னும் செழும்பயிர்க்குக் களையாகத் தோன்றுவது மடி அல்லது சோம்பலாம். மடிமை குடிமையைக்கெடுத்து மிடிமையைக் கொடுத்து வாழ்நாளையுங் குறைத்துத் தேகநலத்தையும் தொலைப்பதாகும். நம் நாட்டில் எத்தனையோ வாலிபர்கள் யாதொரு முயற்சியுமின்றிச் சோம்பேறிகளாக ஆண்டி வேடமிட்டும் கல்லுளிமங்கராயும் பிச்சையேற்று வயிறுவளர்த்துக் காலங்கழித்துத் தமக்கும் பிறர்க்கும் கேடு புரிவாரா யிருக்கின்றனர். பருத்துக்கொழுத்த தேகவலிமை யுடையராயும் யாதொரு தொழிலுஞ் செய்யாது பிச்சையேற்றுண்கின்றனர். பிச்சை யேற்குங் காலம் ஒழிய, மற்றை நேரமெல்லாம் சூதாட்டம், களியாட்

டாட்டங்களிற் கழிக்கின்றனர். முயற்சியற்ற சோம்பேறி களின் முகத்தில் லக்ஷ்மீகரம் சற்றும் இல்லை. முயற்சியாளர் முகத்திலோ எப்பொழுதும் பேரழகு பொலிந்து தோன்றும்.

"மடியுளான் மாமுகடி யென்ப; மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள்"

என்பதினால் மடிமை மூதேவிக்கு இருப்பிடமென்பதும், முயற்சி ஸ்ரீதேவிக்கு இருப்பிடமென்பதும் அறியலாம்.

"ஆலந்தூர் கிழாஅர் என்ற பண்டைப் புலவரொருவர் தாம் கூறிய ஓர் கவியில் "பூட்கை யில்லோன் யாக்கை போலப்—பெரும்புல்லென்ற........."எனக்குறிப்பிட்டு, முயற்சியில்லாதவன் உடம்பு பொலிவிழந்து வாடியிருத்தலை விளக்கியுள்ளார். இஃதொன்றோ? அவிநய இலக்கணங் கூறும் பண்டை நூலாசிரியர் மடிமைக் குணத்திற்கு இலக்கணங் கூறுமிடத்தே சோம்பேறிகளின் தன்மையை நன்கு புலப்படுத்தியுள்ளார். அது பின்வருமாறு:—

"மடியின் அவிநயம் வகுக்குங் காலை
நொடியொடு பலகொட் டாவிமிக வுடைமையும்
மூரி நிமிர்த்து முனிவொடு புணர்த்தலும்
காரணம் இன்றி ஆழ்ந்துமடிந் திருத்தலும்
பிணியு மின்றிச் சோர்ந்த செலவோடு
அணிதரு புலவர் ஆய்ந்தனர் என்ப"(சிலப்பதிகாரவுரை)

இங்ஙனம் விரல்களை நொடித்தலும், தூங்குமூஞ்சிகளாகிக் கொட்டாவி யிடுதலும், எப்பொழுதும் மன எழுச்சியின்றிச் சோர்வுறுதலும் சோம்பேறிகளுக்கு இலக்க

ணமாகக் கூறியிருத்தல் மிகவும் வியக்கத் தக்கதொன்றே. இங்ஙனம் இழிக்துக்கூறப்படும் சோம்பலாகிய களையை வேருடன் களைந்து ஊக்கமாகிய நீரை வார்த்து முயற்சியாகிய பயிரை வளர்த்தால் பொருள் புகழ்முதலாகிய பலன்களையடையலாம். தற்காலத்தில் நம் நாட்டார் அம்முயற்சியின் பெருமையை நன்கு கவனிக்க வேண்டியவர்களாதலின் இதைப் பற்றி யிங்கே யிவ்வளவு எழுதநேர்ந்தது. அந்நிய நாடு சிலவற்றில் சோம்பேறிகளான பிச்சைக்காரர்களுக்குப் பிச்சையிடக் கூடாதெனவும் அப்படி வருகிற பிச்சைக்காரர்கட்குச் சட்டப்படி தண்டனை யுண்டெனவும் விதியேற்படுத்தியிருக்கின்றனர். இது, ஜனசமூகத்தார் கவனம், முயற்சியிற் செல்லச் செய்வதற்கு ஏற்ற மார்க்கமென்றே தோன்றுகிறதல்லவா? முயற்சி செய்யத் தக்க சக்தி யுடையார் யாரும் முயற்சி செய்தே ஜீவிக்கவேண்டும்.

ஏழைகள் சோம்பேறிகளாகிப் பிச்சை யேற்பதைக் கடிந்து பேசினோம். செல்வர்களிலும் பலர் செல்வச் செருக்கால் சோம்பேறிகளாய் விருதா காலக்ஷேபஞ் செய்கின்றனர். இவர்கள் செல்வத்தை முயற்சி வகையிற்செலுத்துவார்களாயின் நம் நாட்டுக்கு மிகவும் நன்மை யுண்டாகும். அவர்கள் செல்வமும் பெருகும். இவர்கள் இதைக் கவனிப்பதில்லை. விலாப்புடைக்கத் தின்பதும், ஆட்டுச்சண்டை, கோழிச்சண்டை, ஜல்லிக்கட்டு, பக்ஷிகளைச் சுடுதல், முதலான தகாத காரியங்களையே தமக்குத் தொழிலாகக் கொண்டும் வாணாளை வீணாளாக்கி மடிகின்றனர். அந்தோ! இந்த மந்தமதிகளைச் சேர்ந்த மாந்தர்களும் "பேஷ் பேஷ்" என்று இச்சகம் பேசி வருகிறார்களேயன்றி இடித்துக்

கூறுவாரில்லையே. யாரேனும் இடித்துரைக்க வந்தாலும் அவர்களைக் கடிந்துரைக்க வருகின்றனரே. செல்வர்கள் மட்டும் முயற்சியின் பெருமையையும் பலனையும் கவனித்துத் தங்கள் மனதைச் செலுத்த முன்வருவார்களானால் நம் நாட்டுக்கு வறுமையென்பது வறுமைப்பட் டொழியுமே.

ஐயோ! தக்க முயற்சியின்றி சோம்பித் திரிந்து, தம் வாழ்நாளை வீழ்நாளாக்கி வரும் இவ் அவிவேக பூரணர்கள்,

"தேனீயினது தினசரி உழைப்பே
உலையா முயற்சி உளனுக் கியதெனே.
எண்ணித் துணியும் எறும்பினைக் கண்டும்
பின்னே வேண்டுவ இன்னே தேடா
திருக்க யாரால் இயலும்?" என்ற

அறிவு சான்ற ஏழை இடையனையும், அவன் தனது ஆசிரியர்களாகக் கொண்டு பின்பற்றிய சிற்றுயிர்களையும் வழிபட்டேனும் மெய்யறிவும் மேன்மையும் எய்தலாகாதா?

ஆதலால் ஏழைகள் பணக்காரர் யாவரும் அவரவர்க்குத் தக்கவகையில் முயற்சி செய்து பொருளும் புகழும் புண்ணியமு மடைந்து தேசக்ஷேமத்தை யுண்டாக்கும்படி கடவுள் கருணை செய்வராக.

இனி நாம் முன் ஆரம்பத்திற்கூறிய "முயற்சி திருவினையாக்கும்" என்பதன் கருத்தைச் சிறிது நன்காராய்வாம். "திரு" என்றால் "இலக்குமி" ஆதலின், முயற்சியுடையார்க்கு லக்ஷுமி கடாக்ஷமுண்டு என்பது விளங்கும். தனம், தானியம், தைரியம், வீரம், ஜயம் முதலியவற்றிற்கு

அதிதேவதை இவளேயாதலின், முயற்சி யுடையார்க்கே அஷ்ட ஐசுவரியமும் ஸித்திக்கும் என்று தெரிந்து கொள்ளலாம். ஆயினும் நீர்ப் பூக்கள் நீர்க்குத் தக்கபடி உயர்வது போல, மனிதர்கள், தத்தம் முயற்சிக்குத் தக்கபடி பயன் அடைகிறார்கள்.

ஒருவற்கு இடம் பொருள் ஏவல், உடல்வலி, கூறிய மதி, நற்கேள்வி முதலியன இருந்தும், ஊக்கம் ஒன்றில்லையேல், அவனது அரும்பேறுகள் அனைத்தும் அற்பமும் பயன்பெறா. இதுபற்றியன்றோ செந்நாப்புலவர்,

"உடைய ரெனப்படுவ தூக்கம் அஃதில்லார்
உடையர் உடையரோ மற்று." என்றனர்.

தெய்வச் செயலாலும் மானிடக் குற்றத்தாலும் நேரிடும் இடையூறுகளால் காரியத்தாழ்ச்சி உண்டாகும்போது அநேகர் புந்தி மயங்கிச் சிந்தை மாழ்குகின்றனர். மனமுறிந்து இடர்ப்படும் இன்னோர்க்கு அமிர்த சஞ்சீவியாகவும் அற்புதவரமாகவும் நின்று உதவுவது விடாமுயற்சியே.

தெய்வப்புலவர் தமது திருப் "பொதுமறை" யாகிய திருக்குறளில் (1) தொழில் செய்கையில் 'மன எழுச்சி' உண்டாயிருக்கவேண்டும் என உணர்த்தும்" "ஊக்கமுடைமை" (2) "தொழில்களைச் செய்யும்போது சோம்புதலே கூடாது" என உணர்த்தும்" மடியின்மை" (3) "சோம்பல் இல்லாவிடத்தும், மேன்மேலும் முயற்சியிருந்தாலன்றி காரியம் முடியாது" என்பதை உணர்த்தும் " ஆள்வினையுடைமை " (4) "தொழிலில் முயலுவோர் பொருளில்லாக் காரணத்

தினுலாவது, மெய்வருத்தத்தினுலாவது துன்பம்நேரிட்டவிடத்து மனங்கலங்கக் கூடாது" என்பதை உணர்த்தும் "இடுக்கண் அழியாமை" என்னும் நான்கு அதிகாரங்களைக் கொண்டு "விடாமுயற்சி" என்ற இவ்வொரே விஷயத்தை எதிர்மறையினுலும் உடன்பாட்டினுலும் வற்புறுத்திக்கூறியிருக்கும் அழகும் அருமையும் என்னே !

பூர்வம் அமிர்தம் பெறவேண்டி அமரர்கள் பாற்கடலைக் கடைந்த போது, முதலில் தோன்றியது ஆலகால விஷமன்றோ? ஆ ! "முதற்கோணல் முற்றுங்கோணல்" என்று நடுங்கித் தாம் எடுத்த காரியத்தை அவர்கள் கைவிட்டனரா? ஊக்கம் மேலிட்டுச் சோம்பலை ஒழித்துத் தம் துன்பத்திற்கு அஞ்சாது மேன்மேலும் அன்றோ தாம் எடுத்த வேலையை முடிக்கத் தீர்மானித்தார்கள். இரத்தினப்பெருங் குவியல்களையும் வேண்டுவார் வேண்டியாங்கு ஈயும் ஐந்தருக்களையும், சுரபி, சிந்தாமணி முதலியவற்றையும் அடைந்தவுடன் மகிழ்ந்து மயங்கி நின்றார்களா? மூத்தாள் தோன்றியகாலத்தும் முயற்சி கலங்கினரோ ? அமிர்தத்தை அடைந்தீரும் வரை தாம் எடுத்துக் கொண்டகாரியத்தைக் கை சோரவிடவில்லையே. ! "அசாத்தியம்" என்பது அவிவிவேகிகளின் அகராதியில் காணப்படும் சொல்" என்று நெப்போலியன் என்னும் அசகாயசூரன், நிலமறியப் புகன்றதை யாவரும் நினைப்பார்களாக.

"உலையா முயற்சி களைகணு" உறுபயனுற்ற உத்தம ஸ்திரீ புருஷர்களின் வரலாற்றினை நம் பரத கண்டத்துப் பழஞ்சரிதங்களிற் பரக்ககாணலாம். அவ்வனைவரது வரலாற்றையும் ஈங்கெடுத்தறைவது அசாத்தியமாதலின், அவர்

களில் முன்பு கூறப்பட்டவர்களை நீக்கிவேறு சிலரைமட்டும் உதாரணமாக ஈக்கு எடுத்தோதுவாம். அவர்களாவர்:—

(1) அற்ப ஆயுள் வாய்ந்த சத்தியவானை மணந்து அவனது ஆருயிர் கவர வந்த கூற்றுவனையும் வசப்படுத்தித் தன் கணவனைத் திர்க்காயுளும், மாமன் மாமியர் நேத்திரப்பேறும் அரசும் பெறச் செய்த சாவித்திரியும்,

(2) கலியின் சூழ்ச்சியால், "மதியிழந்து மாயக்கவறாடி" அரசிழந்து, தனது கணவன் "தன்னைக் கானகத்தே காரிருளிற் கைவிட்"டகன்ற காலத்தும் குன்றா ஊக்கத்துடன் அவனைத்தேடுவித்து ஓர் தந்திரத்தினுல் அவனைத் தன் தந்தை பால்விருவித்து அவனுக்குற்ற இடுக்கண் நீக்கி நிகரற்ற வாழ்வு பெற்ற தமையந்தியும்,

(3) க்ஷத்திரியராய்ப் பிறந்தும் முயற்சிவலியால் தேவரும் யாவரும் வியப்பப் பிரம ரிஷியான விசுவாமித்திரரும்,

(4) மாற்றாந்தாயின் கொடுஞ் சொற் பொறாது கொடிய கானகம் புக்கு, அங்கு நேர்ந்த எவ்வித சோதனைக்கும் இடம் தாராமல் அருந்தவம் இயற்றி, ஈசுவரானுக்கிரகம் பெற்றுப் பெற்றோரையும் உற்றோரையும், வாழ்வுறச் செய்து "எத்தாரகைக்கும் முனிவர்க்கும் மேற்சென்றிருக்"கும்படியான பெரும் பேறுபெற்ற துருவனுமே.

இக்காலத்தும் நமது சென்னை ராஜதானியிலேயே தோன்றிய ஸ்ரீ த. மாதவராவ், ஸ்ரீ தி. முத்துசாமி ஐயர், ஸ்ரீ அ. சேஷைய சாஸ்திரியார், ஸ்ரீ கு. சேஷாத்திஐயர், ரிஷியூர் ஸ்ரீ வே. ஸ்ரீநிவாஸையர் முதலியோருடைய ஜீவிய சரித்திர

மானது "ஒருவனுக்கு முன்னுக்குவர விருப்பமுண்டாயின், அவன் விடாமுயற்சியோடிருக்கக் கடவன்" என்று பறை யறையுமன்றோ?

இனி, மேற்றிசையோரினும் ஊக்கமும் உலையா முயற்சியுமே மேற்கொண்டு காரியசித்திபெற்ற பலரிற் சிலரை உதாரணங் கூறி இவ்வியாசத்தை நிறுத்துவோம்.

(1) நிர்வாகமற்றவனாயிருந்தும், தான் உத்தேசித்த கப்பல்யாத்திரைக்குத் தனக்கு உதவி செய்யப் பல தேசத்து அரசர்களிடத்தும் பிரபுக்களிடத்தும் பத்து வருடங்களுக்கு அதிகமாக விண்ணப்பம் செய்து வெகு பிரயாசைபட்டுக் கடைசியாக பழங்கப்பல்கள் மூன்றே பெற்றுப் புறப்பட்டுச் செல்கையில்,பலவிதமான இடையூறுகளுக்குள்ளாகிய காலத்தும், அதி மூர்க்கமாய் தன்னையே கொன்று போடக் கப்பலோட்டிகள் துணிந்த காலத்தும், மனமுறிந்து போகாமல், அவர்களுக்கு இதங்கூறி, மேலும் மேலும் சென்று *அமெரிக்காவைக்கண்டுபிடித்த கோலம்பஸையும்,

(2) திக்கித் திக்கிப் பிதற்றும் வாயையும், தாழ்ந்த குரலையும், பல விகார அபிநயங்களையும் இயற்கையிலேயே வாயப்பெற்றும், சிறிதும் மனஞ்சலியாது தினந்தோறும் உற்சாகத்தோடு கொஞ்சம் கொஞ்சமாய் முயன்று, அவ் அவலக்ஷணங்களை அறவே அகற்றிச் "சிறந்த நாவலர்" எனச் சிறப்புப் பெயர் பெற்றோங்கிய கிரேக்க சிரேட்டராகிய டேமாஸ்தனீஸையும்,

---

* இதுவே இப்பொழுது மேலைத்திசையில் உள்ள பலதேசங்களினும் நாகரிகத்திலும் ஐசுவரியத்திலும், வல்லமையிலும் சிறந்து விளங்குவது.

(3) அறுமுறை யுத்தத்தில் தோல்வியடைந்து மனந் தளர்ந்து பகைவர்க்கு அஞ்சிஓடி ஓர் குடிசையி லிருந்தகாலத்தில், அக்குடிசை முகட்டில் வலை செய்ய எண்ணிய சிலம்பி ஒன்று, தனது நூலில் ஓர் முனையை ஓர் உத்திரத்தில் கட்டி, மறுமுனையை மறு உத்திரத்தில் தொடுக்க அந்நூலில் ஊசலாடி. ஆறுமுறை முயன்றும் காரிய சித்திபெறுயல், ஏழாவதுமுறை அதிக வேகத்துடன் ஊசலாடி அந்நூலை உத்திரத்திற் சேர்த்ததைக் கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்து, அறுமுறை அபஜெயப்பட்ட தனது நிலைமையும் அவ்வணமே ஆருக என்று தீர்மானித்து, ஏழாமுறை சண்டைக்குச் சென்று ஜயம் பெற்று ஸ்காட்லண்டின் சுவாதீனத்தை ஸ்தாபித்த ராபர்ட் புரூஸ் மன்னனையும், ஆங்கிலம் கற்று உயர்தரக்கல்வி பெற்றோர் அறியாமற் போகார்கள்.

கடைசியாக நாம் சொல்ல வேண்டுவதிங்கொன்றுண்டு: காரியசித்திபெற விரும்புவோர், "ஒருநாள் சுறுசுறுப்பாய் இருந்து ஒரு நாள் சோம்பலாய் இருப்பதினுலேயும், கொஞ்சகாலம் ஒன்றைத்தொடங்கி பிறகு அதைவிட்டுச் சிலகாலம் வேறென்றிற் பிரவேசிப்பதினுலேயும் பிரயோஜனம் உண்டாகமாட்டாது என்பதை மனத்திலிருத்துவார்களாக. ஒருவன் ஒவ்வளவு மந்தனுக இருந்தபோதிலும் "எறும்பூரக் கல்லுந்தேயும்" என்ற பழமொழிப்படி, மனஞ்சலியாது உற்சாகத்தோடு சிறிது சிறிதாக உழைத்து வருவானேயானுல் எப்படியும் முடிவில் காரியசித்திபெறுவான்- தன்னைப் பலவானென்றும் கெட்டிக்காரனென்றும் நினைத்து, ஓரோர் வேளை மாத்திரம் முயற்சிப்பவன் ஒருபோதும் விருத்தியடையமாட்டான். " இதற்கு ஆமையையும் முயலையும் பற்றியகதையே போதிய திருஷ்டாந்தமாகும்.

முடிவுரை.

"மாமலர் விழிக்கு மறைந்திருப் பினுநன்
மருமணம் உயிர்த்திடும்; அதுபோல்.
தாம்மறை வெய்தி நின்றனர் எனினும்
தமதருளால் எனைப் புரக்கும்,"

எனது முன்னறி, பின்னறி தெய்வங்களின் பரிபூரண ஆசீர்வாதத்தால் இனிது நிறைவேறிய இந்நூலை அதிவிரைவினில் வெளிப்படுத்தவேண்டுமென்று யான் கொண்ட ஆத்திரத்திலும் அவசரத்திலும், சொல்லியே தீரவேண்டிய முக்கிய விஷயங்கள் சிலவற்றை, யான் ஆரம்பத்தில் ஆங்கில மொழியில் எழுதியுள்ள முகவுரையிற் கூற மறந்துவிட்டேன். அவற்றை ஈண்டுக் கூறுவேன்.

1. இப்பொழுது மூன்று பாகங்கள்கொண்டு வெளிவந்திருக்கும் இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்களைப்போல மும்மடங்கு விஷயங்கள் வெளியிடும் நிலைமையில் என்னிடம் இன்றைக்கிருக்கின்றன. இவ்விஷயங்கள் பெரும்பாலும் உபந்யாஸ வியாசங்களும், ஆங்கிலப் புலவரது அரிய செய்யுட்களின் தமிழ் மொழிபெயர்ப்புக் கவிகளும் ஆகும்.

இப்பொழுது வெளிவந்துள்ள மூன்று பாகங்களையும் தமக்கு அனுப்புமாறு 625 பேர்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றனர். ஆதலின் முதற்பதிப்பாக வெளிவந்துள்ள 1000 பிரதிகளும் சில மாதங்களில் செலவாகிவிடும் என்றும், தமிழ் அபிமானிகளின் ஆதரவால் அதி சீக்கிரத்தில் இந்நூலின் இரண்டாம் பதிப்பு மட்டுமேயன்றி என்கையிருப்பில் உள்ள விஷயங்களில் மூன்றில் ஒருபாகமாகிய இரண்டாம் தொகுதியையும் வெளியிடக் கூடுமென்றும் நம்புகிறேன். நிற்க.

2. என்னிடத்தில் அபிமானம் மிக்க சில நல்லோர்கள் எனக்கு இந்நூல்சம்பந்தமாகப்புரிந்த "செய்யாமற்செய்த உதவி"யும் "காலத்தினாற்செய்த நன்றி"யும் என்றும் மறக்கற்பாலன வல்ல: எனக்கு 'உயிர் நூ'லில் முதலில் ஊக்கம் பிறக்கச் செய்தவர் எனது ஆசிரியராக இருந்த ஸ்ரீமத் N. S. ஜம்புநாதையரவர்கள் B. A., L. T., இவர் மதுரைக் காலேஜில் செய்த ஓர் பிரசங்க விஷயத்தைக் கவனித்தும் எனது தமிழ்நூல் அறிவைக்கொண்டும் எழுதப்பட்டது தான்"நற்பவளம்". இவரது சகோதரரது புதல்வனும் எனது மாணவர்களில் ஒருவனுமான சிரஞ்சீவி தியாகராஜன் எழுதிய ஆங்கில வியாசத்தை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டது "தாவரம் பரவும் விதம்".

3. ஆரம்பத்தில் இந்நூலை அச்சிடுமாறு என்னை வற்புறுத்தி,அதனை அச்சிடத் தம்மாலியன்ற பொருளுதவி புரிவதாகவும், புத்தகவேலை முடிந்து,புத்தகங்கள் யாவும் விலையான பிறகு,தமக்குச் சேரவேண்டிய பொருளைத் திருப்பிக்கொடுத்தால் போதுமென்றும் வலியக்கூறி எனக்குப் பொருளீந்தவர்கள் சிலர் உளர். இவர்களில் அசரமாங்குடிக் கமலம்மாள் ரூபாய் 60-ம், திருவண்ணாமலை ஓவர்சியர் ஸ்ரீ M. S. இராமச்சந்திரையர் ரூபாய் 150-ம், திருநெல்வேலிப் பேட்டை சாஹிப் பகதூர்களாகிய உ. சி. ப. செ. இ. சையிது அகமது ராவுத்தரும், பக்கீர் மய்யதீன் ராவுத்தரும் ரூபாய் 25-ம், தம் பெயரை வெளிப்படுத்தவிரும்பாத ஒருவர் ரூபாய் 100-ம் எனக்குத் தந்திருக்கின்றனர். "நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை" என்பதை அறிந்தும் யாதொரு ஆதரவுச் சீட்டுமின்றி எனக்குதவிபுரிந்த இவர்கள் பெருந்தன்மையை

எவ்வாறு புகழ்வேன்? இன்னுரிற் பெரும்பாலார்க்குச் செல்லாகவேண்டிய தொகைகள் கொடுபட்டுவிட்டன.

4. அநேகரை நான் 'தக்கோர்'என் மதித்து, எனது நூலைப்பற்றிய உண்மை அபிப்பிராயம் பெறவிரும்பி, அவர்களுக்கு அந்நூலின் மாதிரிப்பிரதி அனுப்பி யிருந்தேன். அவற்றை முற்றிலும் படித்துப்பார்த்துத் தம் அபிப்பிராயத்தை வெளியிட்ட எனது மெய் நண்பர்களுக்கும், நடுவுநிலைமையில் நின்று அதனை ஆராய்ச்சிசெய்து தம் அபிப்பிராயத்தை வெளியிட்டு என்னையும் என் நூலையும் கௌரவப்படுத்திய பத்திராதிபர்கட்கும் மனப்பூர்வமாக வந்தனமளிக்கிறேன். எனது நண்பர்களும், இந்நூலை எவரிடத்தேனும் கண்டு படித்து மகிழ்ந்த பிறரும் பல பத்திராதிபர்களும் அன்புடன் அனுப்பிய அபிப்பிராய கடிதங்கள் பல இருக்கின்றன. அவற்றிற் பெரும்பான்மைய புஸ்தகம் முற்றிலும் முடிந்த பின்னரே கிடைத்தமையினால் அவற்றை இந்நூலிற் சேர்க்க முடியாமற் போனமைக்கு விசனிக்கிறேன். ஆயினுமவற்றை இனி ஒரு சிறு புத்தக ரூபமாக வெளியிட எண்ணியுள்ளேன். நிற்க.

தம் வீட்டில் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் பெறும்படியான பொருள்கள் களவுபோனதால் நேர்ந்த வருத்தத்தையும் பொருட்படுத்தாது, எனது நூலை ஆதிமுதல் அந்தம் வரை ஒரு எழுத்தேனும் விடாமற் படித்துப் பின்னர் "முகவுரை" எழுதி என்னைக் கனப்படுத்திய மகிபாலன்பட்டி மகாவித்வானும், வடமொழி தென்மொழி வல்லுநரும் ஆகிய ஸ்ரீமாந்-மு. கதிரேசச்செட்டியாரவர்களது அன்பை என்றும் எண்ணிப் பாராட்டுவேன்.

யான் பொருளிழிந்து தவித்தகாலையிற் பொருள் இனமாக உதவியதும், "அரும்பொருட்டிரட்டு" மூலமாக அரும்பொருட்டிரட்ட - அரும்பொருள் அருளியதும், முற்றிலும் படித்து முகவுரையெழுதி என்னையும் எனது நூலையும் கௌரவித்ததும் நகர வணிக குல திலகர்களே. அவர்களது பேருதவிக்கான மாறுதவிசெய்ய ஆற்றல் இல்லாத யான்,

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ உலகு?"

என்பதை நினைந்து மனந்தேறி யிருக்கின்றேன்.

5. எனது அறியாமையினாலும், அஜாக்கிரதையினாலும், மறதியினாலும் இந்நூலிற் பலபிழைகள் காணப்படும். எவ்வகைப்பிழையையும் திருத்திப் படித்துக்கொள்ளுமாறும், அப்பிழைகளையும் இந்நூல் அபிவிருத்திக்கான சீர்திருத்தங்களையும் எனக்கு அறிவிக்குமாறும் இதனைப் படிக்கும் எல்லோரையும் வேண்டுகிறேன்.

6. இவ்வரும்பொருட்டிரட்டைத் தம் கலாசாலைகளில் பாடபுத்தகமாக வைப்பதாய்க்கூறி என்னை ஊக்கிய நானாகலா சாலைத் தலைவர்களுக்கும், தலைக்கு ஒரு பிரதிக்குக் குறையாமல் வாங்குவதாக ஏற்கனவே கைபொப்பமிட்டுள்ள எனது மாணவர்களுக்கும், பிறர்க்கும், நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். தமக்கு அவகாசம் நேர்ந்தபொழுது இப்புத்தக விஷயத்தில் எவ்வகை உதவிபுரிந்தோர்க்கும், என் சௌகரியத்திற்கு ஏற்பவும், தமது விருப்பிற்கிணங்கவும் இந்நூலை அச்சிட்டு வெளிவரச்செய்த மதுரைத்தமிழ்ச்சங்க நிர்வாகர் ஸ்ரீமத் - T. A. சுப்பவேங்கடராமையரவர்களுக்கும், ஷை சங்க முத்திராசாலை மேற்பார்க்கும் ஸ்ரீமத்-M. R. ஸ்ரீநிவாச ஐயரவர்களுக்கும், அதில் வேலைபார்க்கும் ஸ்ரீமத்-M. R. சுப்பிரமணிய ஐயரவர்களுக்கும் நன்றி கூறுகிறேன்.

இங்ஙனம்,

3435 ம. கோபாலகிருஷ்ணன்.